
என்
பெயர்
கமலா
புஷ்பா தங்கதுரை

# என் பெயர் கமலா

புஷ்பா தங்கதுரை

பூம்புகார் பதிப்பகம்
63, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை - 600 108.
தொலைபேசி : 5267543

விலை ரூ. 75/-

பூம்புகார் வெளியீட்டு எண் : 011
முதற் பதிப்பு : மே, 1976
இரண்டாம் பதிப்பு: ஜூன், 2001
உரிமை : ஆசிரியருக்கு

அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.

# பதிப்புரை

"என் பெயர் கமலா" என்ற இவ்வரலாறு தினமணி கதிரில் தொடர்ச்சியாக புஷ்பா தங்கதுரை அவர்களால் எழுதப்பட்டது.

மனித சமுதாயத்தின் கேவலமான தசைப் பசிக்காகப் பலியாகிய ஓர் இளம் அபலைப் பெண்ணின் சோக வரலாறு இந்நூல். நாவலோ, கதையோ அல்ல இது, உண்மைச் சம்பவம்.

எந்தப் பழிபாவத்திற்கும் அஞ்சாத விபசார விடுதி நடத்துபவர்கள், புதிதாகப் பெண்களைக் கடத்திக் கொண்டுவந்து, அவர்களைக் கொடுமையாக அடித்து நொறுக்கி விபசாரத்துக்கு உட்படுத்து வதாகக் கமலா சொல்வது, இந்த நாகரீக உலகத்திலும் நடக்கிறதா என்ற ஐயப்பாட்டைத்தான் நமக்கு எழுப்பும்.

இறுதியில், கமலா ஆண் வர்க்கத்தையே சாடு கிறாள்; சபிக்கிறாள்; கோழைகள் என்று வசைமாரி பொழிகிறாள்.

இவ் வரலாற்றின் இடையிலே ஆண்வர்க்கத்தின் காம வேட்கை காரணமாகத் தங்கள் உயிரையே விட்ட பல அபலைப் பெண்களைச் சந்திக்கிறோம்.

இவ்வரலாற்றுப் புதினத்தைப் பற்றி தினமணி கதிரில் வாசகர்களிடையே பெரிய சர்ச்சையையே கிளம்பிவிட்டது. வெகுபலர் கமலாவின் துயரக் கதை படித்து உள்ளம் கசிந்தார்கள். மிகச் சிலரே "இது காம இச்சையைத் தூண்டும் நூல்; ஒளிவு மறைவு இன்றிக் கமலா இப்படியெல்லாம் கூறலாமா" என்று ஆஷாடா பூதித்தனமாய் ஒப்பாரி வைத்தனர். எனினும், பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் அனுதாப உணர்ச்சியைக் கமலா பெற்றிருக்கிறாள்.

எனவே, வாசகர்களிடையே பெரிய பரபரப்பை உண்டாக்கிய கமலாவின் வரலாற்றை "என் பெயர் கமலா" என்ற நூலாக உங்கள் கரங்களில் தவழ்கிறது.

விபசார விடுதியிலிருந்து தப்பி சென்னை வந்த கமலா மேலும் தன் வரலாற்றைக் கூறுகிறாள். அது "**இப்போது கமலா**" என்ற தலைப்பில் இரண்டாம் பாகமாக எங்கள் பூம்புகார் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

தமிழகம் வரவேற்கும் என்று நம்புகிறோம்.

நவ இந்தியாவை உருவாக்கும் நாம் இம் மாதிரியான கேவலங்கள் இனியும் நடைபெற விடாமல் தடுப்போமாக!

**– பூம்புகார் பதிப்பகத்தார்**

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| | கமலா சொன்ன கதை | 9 |
| 1. | புதிய அனுபவங்கள் | 10 |
| 2. | போன இடத்தில் மாப்பிள்ளை | 18 |
| 3. | பருவத்தின் பரிசுகள் | 24 |
| 4. | மலர்ந்தபோதே மறுவாழ்வு | 34 |
| 5. | சோபாவின் சோகக் கதை | 42 |
| 6. | கிளி பறந்தது | 49 |
| 7. | காதல் என்று செய்த தியாகங்கள் | 56 |
| 8. | புதிய இல்லம் | 64 |
| 9. | விடுதலை வேட்கை | 78 |
| 10. | புனிதத்தால் வந்த வினை | 84 |
| 11. | பயணம் தொடர்ந்தது | 95 |
| 12. | மர்மச் சுவடுகள் | 105 |
| 13. | நரகத்தின் வாசல் | 110 |
| 14. | பாலையில் ஒரு மலர் | 116 |
| 15. | மிருகங்களின் கூடாரம் | 128 |
| 16. | மெல்லிய பேச்சுகள் | 133 |
| 17. | ரகசியத்திற்கு ஓர் இடம் | 139 |
| 18. | நாங்கள் போட்ட திட்டம் | 143 |
| 19. | கொடியவள் நிர்மலா | 152 |
| 20. | பணம் வேண்டுமே | 156 |
| 21. | எத்தனை சுமைகள் | 163 |

பக்கம்


| | | |
|---|---|---|
| 22. | தயாவின் நினைவுகள் | 170 |
| 23. | பலமும் பலவீனமும் | 181 |
| 24. | இரு இளம் மலர்கள் | 186 |
| 25. | ஏமாற்றத்தின் எல்லை | 193 |
| 26. | பல்பீரின் பாசம் | 199 |
| 27. | கீர்த்தியின் வெற்றி | 211 |
| 28. | நிசாவும் நானும் | 218 |
| 29. | சிதைந்த ஓவியம் | 225 |
| 30. | அம்சாவுக்கு ஒரு நாயகன் | 235 |
| 31. | கங்காராம் கம்பெனி | 243 |
| 32. | திட்டத்தின் முடிவு என்ன? | 252 |
| 33. | பிடிபட்ட பறவை | 267 |
| 34. | இதயம் இரும்பாயிற்று | 284 |
| 35. | துன்ப நிகழ்ச்சிகள் | 290 |
| 36. | விடிவே இல்லையா | 306 |
| 37. | பார்க்காத உலகம் | 311 |
| 38. | ஓயாத சிந்தனை | 325 |
| 39. | எத்தனை முயற்சிகள் | 329 |
| 40. | தளராத நெஞ்சம் | 350 |
| 41. | நம்பமுடியாதது நடந்தது | 361 |
| 42. | கலக்கம் தொடர்ந்தது. | 372 |
| 43. | ஒரு வேண்டுகோள் | 379 |

# கமலா சொன்ன கதை!

*சில நாட்களுக்கு முன் ஒரு நாள் இருட்டும் நேரத்தில் தி.நகர் ரங்கநாதன் தெருவில் போய்க் கொண்டிருந்தேன். "நீங்கள்தானே புஷ்பா தங்கதுரை?" என்ற குரல் கேட்டது. திரும்பியபோது ஒரு இளம் பெண் நிழலோரமாக நின்று கொண்டிருந்தாள். அவள் அருகில் ஏழெட்டு வயதில் ஒரு சிறுமி. (அவள் தங்கையாக இருக்க வேண்டும்.)*

*"என்ன வேண்டும்?" என்று கேட்டேன்.*

*அவள் ஏதோ சொல்லத் தயங்கினாள்.*

*ஏதோ தனக்குள் யோசிப்பதுபோல் யோசித்துவிட்டு, "உங்களிடம் கொஞ்ச நேரம் பேசலாமா?" என்றாள்.*

*"என்ன விஷயம்?" என்றேன்.*

*"இப்போ இல்லை. எப்பவாவது உங்களுக்குச் சௌகரியப் பட்ட நேரத்தில் ஒரு நாள் உங்களிடம் பேசலாமா? உங்களிடம் என் கதையைச் சொல்லவேண்டும்" என்றாள்.*

*"என்னை உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்க விரும்பினேன். உடனே அவளை அடுத்த முறை சந்திக்கும் போது கேட்டுக் கொள்ளலாம் என்று எண்ணிச் சும்மா இருந்து விட்டேன்.*

*இந்தப் பெண் விஷயத்தில் எனக்கு ஏனோ அக்கறை ஏற்பட்டது.*

*"என்றைக்காவது போன் செய்து விட்டு வாருங்கள்!" என்று, என் போன் நம்பரைக் கொடுத்தேன்.*

*ஆனால், இரண்டு வாரமாகியும் அந்தப் பெண் வரவும் இல்லை. போன் செய்யவும் இல்லை!*

*அவள் என்னைப் பார்க்க வராதது என் மனத்தைப் பெரிதும் உறுத்தியது. ஒரு பாரமாகக்கூட மனத்தில் நின்றது.*

ஒரு அரிய சந்தர்ப்பத்தை நான் இழந்து விட்டேன் என்று நினைத்தேன். ஒருவேளை அந்தத் தெருப் பக்கம் போனால் அவளை மீண்டும் பார்க்கலாமா என்று நினைத்தேன்; ஒருநாள் போய்ப் பார்த்துவிட்டுக்கூட வந்தேன். பயன் இல்லை.

இந்த நிலையில் சென்ற வாரம் எனது நண்பர் திரு. சங்கரனைச் சந்திக்க நேர்ந்தது. தாம் எடுக்கும் மலையாளப் படத்தைப் பற்றி வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார் அவர். முடிவில், "ஒரு பெண் உங்களைச் சந்தித்துத் தன் கதையைக் கூறவேண்டும் என்று சொல்கிறாள். நானே சில விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நீங்கள் அவசியம் கேட்க வேண்டும்" என்று கூறினார்.

"யார் அவள்? உங்கள் படத்தில் சம்பந்தப்பட்டவளா?" என்று கேட்டேன்.

"அவள் சினிமாவில் நடிப்பவள் அல்ல. எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுடைய சமீபகால வாழ்க்கையே ஒரு கதைபோல எழுதலாம். அவள்கூட உங்களைப் பார்த்திருக்கிறாள். ஒரு நாள் நீங்கள் தெருவில் போய்க் கொண்டிருக்கும்போது எதிர்ப் பக்கத்தில் நானும் அவளும் போய்க் கொண்டிருந்தோம். உங்களை நான் சுட்டிக் காட்டி, 'அதோ போகிறாரே அவர்தான் புஷ்பா தங்கதுரை. வா, உன்னை அறிமுகப்படுத்துகிறேன்' என்று அவளிடம் நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, நீங்கள் ஒரு டாக்சியில் ஏறிப் போய்விட்டீர்கள். அவளுக்கு உங்கள் கதை என்றால் உயிர்" என்றார் சங்கரன்.

பிறகு, எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

"அவளைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று கேட்டேன்.

அவர், மறுநாளே ஏற்பாடு செய்கிறேன் என்றார். அப்படியே செய்தார்.

ஒரு மாடியில் அவளைச் சந்தித்தேன். இளமையாகத் தோன்றினாள். ஸாரியின் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு பிரம்பு நாற்காலியில் மிகச் சின்ன அளவு இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். குரலில் பிள்ளைத்தனம் மாறவில்லை. ஆனால் அவள் கூறிய விஷயங்களில். . .?

அவள் சொல்லச்சொல்ல என் நினைவுகள் எங்கெல் லாமோ பறந்துச் சென்றன. சில நேரங்களில் மனம் உணர்ச்சி வசப்பட்டுத் திணறியது. சில நேரங்களில் துக்கம் நெஞ்சை அடைத்தது. சமயத்தில் ஒரு சிறைச் சாலையிலோ அல்லது சிவப்பு விளக்குப் பகுதியிலோ கதை கேட்கிறேனோ என்று நினைத்தேன்.

கூச்சம் எதுவும் இல்லாமல், மிகச் சரளமாக, மனந் திறந்து கதையைக் கூறிக் கொண்டே சென்றாள் அவள்.

அவள் கதையை முடித்தபோது, திடீரென்று பூமியில் இறக்கப்பட்டது போல் நின்றேன்.

அவள் கூறியது அவளது கதை மட்டுமல்ல; பலரது கதைகளும் அவளோடு பின்னியிருந்தன.

கதையை அவள் ஆறு நாட்களில் பரவலாகக் கூறி முடித்த போது, அந்தக் கதையின் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் காரணமான பெண் எதிரே இருக்கிறாள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

அந்தப் பெண் சொன்ன கதையை அப்படியே அப்பட்டமாக எழுத விரும்புகிறேன்.

**- புஷ்பா தங்கதுரை**

# 1. புதிய அனுபவங்கள்!

**வீட்டை**விட்டு நாங்கள் புறப்பட்டோம். நானும் என் தம்பி ரவியும்தான்! போகிற இடம் தெரியாது. அதைப் பற்றி யோசிக்கவும் இல்லை.

கையில் ஒரு பை எடுத்துக் கொண்டோம். அதில் இரண்டு பாவாடை தாவணிகளையும், சில துணிகளையும் அடைத்துக் கொண்டோம். எழும்பூரில் ரயில் ஏறினோம்.

டிக்கெட் வாங்கவில்லை. வாங்குவதற்குக் காசு கிடையாது. வழியில் டி.டி.ஈ. இறக்கிவிட்டாலும் கவலை இல்லை. எங்கே இறங்குகிறோமோ அதுதான் நாங்கள் போக வேண்டிய ஊர்.

அப்படி ஒரு மன நிலையில் இருந்தோம். எங்கள் குடும்பம் பெரியது. அப்பா பெரிய பதவியில் இருந்தார். திடீரென்று இறந்துவிட்டார். அம்மா மீது முழுப் பொறுப்பு! நாங்கள் மொத்தம் ஆறு ஜீவன்கள். எல்லோரையும் கவனிக்க அம்மாவுக்கு வசதி கிடையாது. அவரவர் சாப்பிட்டால் உண்டு. (ஏதாவது சாப்பிட இருந்தால்...) அவரவர் தங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியதுதான்!

இதில் எங்களுக்கு - எனக்கும் ரவிக்கும் - ரொம்ப மனக் கஷ்டம். வாழ்க்கையே பிடிக்கவில்லை. எதற்கெடுத்தாலும் அம்மா அடித்தாள்! திட்டினாள். நரகமாக இருந்தது. ஒரு தடவை ரவி, மனம் பொறுக்காமல் தைரியமாக வீட்டை விட்டு வெளியே போய் விட்டான். மூன்று மாதம் திரும்பவில்லை. பிறகு ஒரு நாள் திடீரென்று வந்து சேர்ந்தான். அம்மா அவனை ஒரு அறையில் மூன்று நாள் அடைத்துப் போட்டாள். அதுதான் தண்டனை.

இதனால் ரவிக்கு இந்த விஷயத்தில் முன் அனுபவம் உண்டு. ஆகவே, ஒருநாள் என்னிடம் வந்து, “வா, எங்கேயாவது போயிடலாம்!” என்றபோது நான் அவனை ஏறிட்டுப் பார்த்தேன். நான் அம்மாவிடம் அடி வாங்கி அழுது கொண்டிருந்த நேரம். “எங்கே போகலாம்?” என்றேன். “சும்மா, எங்கேயாவது” என்றான்.

நானும் ‘சரி’ என்றேன். அவனுடன் புறப்பட ஒத்துக் கொண்டதை நினைத்தால் இப்போது கூட ஆச்சரியமாக இருக்கிறது.

ரயில் ஏறினோம். ஒரே கூட்டம்! எப்படியோ இரவுப் பொழுதைக் கழித்தோம்.

காலையில் மதுரையை அடைந்தோம். கூட்டத்தோடு கலந்து வெளியே வந்தோம்.

ஊரைப் பார்த்ததும் ஒரே மலைப்பு!

"மதுரைக்கு வந்து விட்டோம். எங்கேடா சாப்பிடப் போகிறோம்?" என்றேன்.

"கவலைப்படாதே அக்கா!" என்றான் ரவி.

தெருவில் நடந்தோம். ஒரு ஓட்டலில் அப்போதுதான் ரிக்கார்ட் பாட்டு ஆரம்பித்தது. ரவி உள்ளே நுழைந்தான். நான் தயங்கினேன்.

கல்லாவில் இருந்த மானேஜரிடம் ரவி ஏதோ பேசினான். பிறகு என்னையும் காட்டினான். நான் மெதுவாக உள்ளே போனேன். மானேஜர் என்னை ஏறிட்டுப் பார்த்தார்.

"பாண்டிச்சேரிக்குப் போறவங்க இப்படித் தவறான ரயில் ஏறி மதுரைக்கு வந்துட்டீங்களே! அவன்தான் சின்னப் பையன்னா, நீ கவனிக்க வேண்டாமா, அம்மா?" என்று கேட்டார்.

ரவி என்ன சொல்லியிருப்பான் என்று தெரிந்துவிட்டது. அவனை விழித்துப் பார்த்தேன். ஒன்றும் தெரியாதவன் போல் விழித்தான்.

மானேஜர் எங்களைச் சாப்பிடச் சொன்னார். அங்கேயே தங்கி, இரவு சென்னை போகும் ரயிலில் ஏறச் சொன்னார்.

அன்றையப் பொழுது மகிழ்ச்சியாகப் போயிற்று.

இரவு மானேஜரிடம் விடைபெற்று ரயிலடிக்கு வந்தோம்.

"ரயில் ஏறலாமா?"

"வேண்டாம்!" என்றான் ரவி.

"எங்கே தங்குவது?"

"யார் வீட்டிலாவது தங்கலாம்!"

"யார் வீட்டில்?"

"பார்க்கலாமே!"

மீண்டும் தெருக்களில் நடந்தோம். ஒரு வீட்டுவாசலில் ஒரு மாமா ஈஸிசேரில் சாய்ந்திருந்தார். அவர் அருகே ரவி போனான்.

"சார், நானும் எங்க அக்காவும் வழி தவறி வந்து விட்டோம். பட்டணத்துக்குப் போகணும். இன்று ராத்திரி இங்கே படுக்கலாமா?" என்றான்.

மாமா கண்ணாடியை உயர்த்திப் பார்த்தார். உள்ளே போய் மாமியைக் கொணர்ந்தார்.

மாமி என்னை ஏற இறங்கப் பார்த்தாள். விசாரித்தாள். வெகு நாழிகை விசாரித்தாள். என்னை நம்பியதாகத் தெரியவில்லை. முடிவில், "இப்படி உள்ளே வந்து படுத்துக்குங்க! காலையிலே எழுந்து போயிடணும்" என்று கண்டிப்பாகக் கூறினாள். உள்ளே நுழைந்தோம்.

அன்றைய ஒரு நாள் அனுபவம் எனக்குப் புதுமையான அனுபவம் அது என் மனத்தில் ஒரு புது எல்லையைக் காட்டிய அனுபவம்! ஏனெனில் காசு இல்லாமலேயே, முன்பின் மனிதர்களை அறியாமலேயே, வாழ்க்கையைச் சமாளிக்கலாம் என்ற ஒரு எண்ணத்தை என்னுள் வளர்த்துவிட்டது! முதலில் சிறிது அச்சமாக இருந்தாலும், மனிதர்களை நேரில் அணுகலாம், அவர்களது இரக்கத்தை எளிதில் சம்பாதிக்கலாம் என்று நினைத்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக தொடர்ந்து இனி ரவி நடத்தப் போகும் எல்லா நாடகங்களுக்கும் என்னை அது தயாராக்கி விட்டது.

மறுநாள் எழுந்தோம். வெளியே நடந்தோம். முதல் நாளின் நிகழ்ச்சிகளை வேறு இடத்தில் நடத்திக் காட்டினோம். உணவு கிடைத்தது. தங்குவதற்கு இடம் கிடைத்தது. இவை தானே எங்களுக்கு வேண்டியவை.

மதுரையில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு திருநெல் வேலிக்குப் போனோம். பிறகு அங்கிருந்து இன்னும் இரண்டு மூன்று ஊர்கள்! பெயர்கள் நினைவில் இல்லை. ரயில் பாதை எங்கெல்லாம் போகிறதோ, அங்கெல்லாம் தாராளமாகப் போனோம்.

இரண்டு வாரம் ஆகியிருக்கும். ஊர் திரும்ப நினைத்தோம். மீண்டும் ரயில் ஏறினோம்.

இரவில் விழுப்புரத்தை அடைந்தோம். எங்கள் வண்டியில் டிக்கெட் பரிசோதகர் ஏறுவது தெரிந்தது. "இங்கே இறங்கி விடுவோம்" என்றான் ரவி. இறங்கினோம்.

ரயில் பாதைகளைத் தாண்டிக் குறுக்கு வழியில் வெளியே வந்தோம். நல்ல பசி!

கடைகளை அடைத்துக் கொண்டிருந்தார்கள். ரவி ஒன்று இரண்டு இடங்களில் போய்க் காசு கேட்டுப்பார்த்தான். கிடைக்கவில்லை.

என்னால் நடக்க முடியவில்லை. பசி கண்ணை மறைத்தது. ஒரு கடை வாசலில் (அது அடைத்திருந்தது) உட்கார்ந்தோம். ரவிக்கும் பசி! ஒரே களைப்பு! "நான் தூங்கட்டுமா?" என்றான் "தூங்கு நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றேன்.

சிறிதுநேரம் தூங்கினான். பிறகு எழுந்திருந்தான். "பசிக்கிறது அக்கா! தூங்க முடியவில்லை. ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா என்று பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான்.

"சரி! போய்விட்டுச் சீக்கிரமா வந்துவிடு" என்றேன்.

போனான். காத்து இருந்தேன். நேரம் ஆயிற்று. அவன் திரும்பவில்லை. கவலையாக இருந்தது. ரோட்டிலே ஆள் குறைந்துவிட்டது. பங்க் கடைகளைக்கூட மூடி விட்டார்கள்.

வெகுநேரம் காத்திருந்தேன். ரவி வரவில்லை. எனக்குப் பதட்டம் எடுத்தது. எப்போதும் அவனோடு இருந்ததில் பயம் இல்லாமல் இருந்தேன். இப்போது ஒரே பயம். எழுந்தேன். அவன் போன திசையிலே நடந்தேன். போய்க்கொண்டே இருந்தேன். எங்கேயும் ரவியைக் காணவில்லை.

மீண்டும் பழைய இடத்திற்கு வர நினைத்தேன். திரும்பி நடந்தேன். அதற்குள் தெரு விளக்குகள் அணைந்துவிட்டன. ஒரே இருட்டு! போகிற திசைகூடத் தெரியவில்லை. வழி மறந்து விட்டது!

அழலாம் போலிருந்தது. ஆனால் அழவில்லை. உள்ளூர ஒரு தைரியம் உண்டு! நடந்துகொண்டே போனேன். திடீரென்று எதுவோ மினுமினுத்தது. உற்றுப் பார்த்தேன். ரயில் பாதை. அதைத் தடம் பிடித்துக் கொண்டு நடந்தேன்.

ரொம்ப தூரம் நடந்தபிறகு ஒரு ஸ்டேஷன் வந்தது. (பெயர் தெரியாது.) அங்கே ஒரு ஓரத்தில் போய் உட்கார்ந்தேன். ஏதாவது ரயில் வருமா என்று காத்துக் கொண்டு இருந்தேன்.

ராத்திரி இரண்டு மணியோ, மூன்று மணியோ! ஒரு ரயில் வந்தது! எனக்கு ஒரே சந்தோஷம்! ஒரு பெட்டியில் ஏறினேன். களைத்துப்போய் அப்படியே தூங்கிவிட்டேன்.

பொழுது விடியும்போது பார்த்தால் ரயில் பாண்டிச்சேரியில் நின்றது. இறங்கினேன். வாசல் பக்கம் வந்தபோது பரிசோதகர், "டிக்கெட்" என்றார். "இல்லை" என்றேன். "போ! போ!" என்றார். வெளியே வந்தேன். எங்கே போவது என்று தெரியவில்லை. மலைப்பாக இருந்தது.

யாரோ ஒருவர் என் பின்னால் வருவது தெரிந்தது. நான் டிக்கெட் இல்லாமல் வெளிவருவதை அவர் கவனித்திருக்க வேண்டும். "ஏம்மா! எங்கே போறே?" என்றார்.

கொஞ்சம் தயங்கினேன். பிறகு, "ஊர் சுற்றிப் பார்க்கப் போகிறேன்" என்றேன்.

அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். "ஊருக்குள்ளே போகாதே! இது ரொம்ப மோசமான ஊரு! வா! உன்னை ஒட்டலுக்கு அழைச்சிட்டுப் போறேன். அங்கே எங்க குடும்பம் இருக்குது" என்றார்.

யோசித்தேன். நம்பிக்கை தோன்றியது. அவர் பின்னால் நடந்தேன். பக்கத்திலேயே ஓட்டல்! ஐந்தாறு அறைகள் இருந்தன. ஒரு பெரிய அறை தனியாக இருந்தது. அதில் ஒரு பெண்ணும் ஆணும் இருந்தார்கள்.

அந்தப் பெண் என்னை விசாரித்தாள்.

நான் எந்த ஊர், ஏன் அங்கே வந்தேன் என்று கேட்டாள். நான் முழுதாகச் சொல்லவில்லை. அரைகுறையாகச் சொன்னேன். "இங்கேயே தங்கி விடு! சந்தோஷமாக இருக்கலாம்" என்றாள்.

அவள் சொன்னது மகிழ்ச்சியாக இருந்தது. அந்தப் பெண் எனக்கு டிபன் வாங்கிக் கொடுத்தாள். மத்தியானம் சாப்பாடு வரவழைத்தாள். அன்பாகப் பேசினாள். அன்பாக நடந்து கொண்டாள்.

இரவு வந்தது. சாப்பிட்டோம். என்னை இன்னொரு அறையில் படுக்கச் சொன்னார்கள். போனேன். அங்கே வேறு

யாரும் இல்லை. நான் மட்டும் தனியாக இருந்தேன். கீழே மெத்தை விரித்திருந்தது.

படுக்கும் சமயத்தில் ஸ்டேஷனில் பார்த்த ஆசாமி வந்தார். அவர்தான் அந்த ஓட்டலுக்குச் சொந்தக்காரர். அவருடைய வீடு பக்கத்தில் இருந்தது.

என்னைப் பார்த்து, “எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா?” என்றார்.

“இருக்கிறது” என்றேன்.

“ராத்திரி நான் இங்கேதான் படுத்துக்கொள்கிறது! பாதி ராத்திரிக்கு வருவேன். கதவைத் தட்டுவேன். அப்போ திற” என்றார்.

தலை ஆட்டினேன். அவர் போனார். பிறகு எதையோ நினைத்துத் திரும்பி வந்தார். என்னை வேடிக்கையாகப் பார்த்தார். மறுபடியும் வெளியே போனார்.

கதவைத் தாளிட்டேன். உள்ளே படுத்தேன். என்னவோ குழப்பமாக இருந்தது. இன்னொரு அறையில் இருந்த பெண்ணைப்பற்றி நினைத்தேன். அவள் ஏன் என்னிடம் இவ்வளவு அன்பு காட்டினாள்? புரியவில்லை. அந்தப் பெண்ணை நினைத்தால் சமயத்தில் வெறுப்பு வந்தது. மத்தியானம் அவளைப் பார்த்தபோது அவள் ரவிக்கை இல்லாமல்இருப்பதை உணர்ந்தேன். சமயத்தில் ஸாரி தோளி லிருந்து விலகித் தள்ளிப்போய் மார்பெல்லாம் தெரிந்தது. பக்கத்தில் ஒரு ஆண்பிள்ளை இருக்கிறானே என்று அவள் கவலைப்படவில்லை. ஒருவேளை அவன் அவளது புருஷனாகக் கூட இருக்கலாம். இருந்தாலும், இப்படியெல்லாம் இருக்கலாமா என்று நினைத்தேன்.

சாயங்காலம் அவள் தனித்து இருந்தபோது என்னைக் கூப்பிட்டாள். “நீ எப்போ பெரியவள் ஆனது?” என்று கேட்டாள். நான் பதில் சொல்லவில்லை. உண்மையில் அப்போது நான் பெரியவள் ஆகியிருக்கவில்லை. ஆள்தான் வளர்த்தியாகத் தெரிந்தேன்.

அவள் சிரித்தாள். என் உடம்பில் பல இடங்களில் மெதுவாக வருடினாள்.

இவையெல்லாம் நினைவுக்கு வந்தன. மனத்தில் ஒரே குழப்பம்!

கண் உறங்கவில்லை. பக்கத்து அறைகளில் அடிக்கடி ஆண் பெண் குரல்களும் கலகலப்புகளும் கேட்டுக் கொண் டிருந்தன. அதனால் மேலும் என் குழப்பம் அதிகரித்தது.

நடுநிசியிருக்கும்! அறைகளில் சப்தம் அடங்கிவிட்டது. வேறு எந்தவித சப்தமும் இல்லை. சிறிது கண் அயர்ந்திருப்பேன்! என் அறையின் கதவு தட்டப்பட்டது! நான் கண் விழித்தேன். சன்னல் வழியே அந்த ஓட்டல் அதிபரின் உருவம் தெரிந்தது.

எழுந்து போனேன். “கதவைத் திற!” என்றார்.

நான் பேசாமல் நின்றேன். திறக்க விரும்பவில்லை.

“திற!” என்றார் மீண்டும்.

“மாட்டேன்” என்றேன்.

“திற!“ என்றார் கடுமையாக.

“மாட்டேன்” என்றேன்.

“திறக்கப் போகிறாயா, இல்லையா?” என்று கத்தினார்.

நான் நடுங்கினேன். எனினும் திறக்க இசையவில்லை.

அதற்குள் கதவு ஆடும் சத்தம் கேட்டது!

ஓட்டல்காரரின் சேட்டைதான் அது! கதவை உடைக் காமல் அதன்மீது தமது உடம்பை அழுத்தி உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார். இடையிடையே பலமாக உலுக்கினார்.

என் நெஞ்சு படபடத்தது. உடம்பு ஆடியது.

கடைசியில் ‘பட்’ என்று சப்தம். மறுகணம் ஒற்றைக் கதவின் கீல் உடைந்துவிட, டான்ஸ் ஆடிக்கொண்டு அவர் உள்ளே விழுந்தார்.

உடன் எழுந்தார். ஒரே வேகத்தோடு என்னை நெருங்கினார். என் பார்வை உறைந்தது. சட்டென்று விளக்கைப் போட்டேன்.

அவர் என் தோளின்மீது கையை வைத்து, அப்படியே அழுத்தினார்.

எனக்கு அது ஒரு அதிர்ச்சி.

ஓட்டல்காரரின் பலம் என் உடலின் வெவ்வேறு பகுதி களில் விழுந்தது திடுக்கிட்டேன். என்ன செய்வதென்று தெரியவில்லை.

இருந்தாலும், எனக்கு ஏற்பட்ட வலி காரணமாக, "ஐயோ!" என்று மெதுவாக இரைந்தேன்.

"கத்தாதே" என்றார் அவர்.

கத்தினால் ஆள் பயப்படுவார் என்று தெரிந்தது.

என் கையை இழுத்துக்கொண்டு ஸ்விட்சை அணைக்க அவர் முயன்றபோது, "ஐயோ! ஐயோ!" என்று கத்தினேன்.

அடுத்த கணம் அதற்குப் பலன் கிடைத்தது. என் வாயை அவர் பொத்த வந்தார். நான் திமிறிக்கொண்டு கத்தினேன்.

எங்கெங்கேயோ கதவுகள் திறக்கப்படும் சப்தங்கள்! ஓட்டல்காரர் என் கையை விட்டார். தடால் என்று வெளியே பாய்ந்தார்.

அதற்குள் ஓட்டலின் வாசற் கதவைத் திறந்து கொண்டு, ஒரு பருத்த அம்மாள் உள்ளே நுழைந்தாள். வெளியே பாய்ந்த ஓட்டல்காரரை, "நில்லுங்க" என்றாள். அவர் நின்று விட்டார்.

"வெளியே காற்றாடப் படுக்கப் போறேன்னு சொல்லிட்டு ஓட்டலுக்குள்ளே வந்து வம்பு பண்ணினீங்களா?" என்றாள் கோபத்தோடு.

ஓட்டல்காரர் தயங்கினார். "குழந்தை புலம்பற சத்தம் கேட்டுச்சு! வந்து பார்த்தேன்!" என்றார்.

"ஓகோ! இங்கே உள்ளாற அவள் புலம்பற சத்தம் உங்க வீடுவரைக்கும் வந்து கேட்டதா?" என்று கத்தினாள்.

பிறகு வசைமாரிகள்! கடைசியில் அவரை மடக்கி வெளியே தள்ளியவாறு, "நீ படுத்துக்கம்மா! என்று என்னிடம் கூறிவிட்டுப் போனாள்.

காலையில் அந்த அம்மாள் என்னை விசாரித்தாள். நடந்தது தெரிந்ததும், "எனக்கு இப்படி ஒரு புருஷன் வாய்ச்சாரே?" என்று கண்ணீர் விட்டாள். பிறகு என்னிடம் இரண்டு ரூபாயைக் கொடுத்து, "இந்த ஊரிலே தங்காதே. உடனே ரயில் ஏறிடு!" என்றாள்.

# 2. போன இடத்தில் மாப்பிள்ளை!

*ரயிலடிக்கு வந்தேன். அன்று ரயில் தாமதமாக வந்தது. பசியோடு ஏறி உட்கார்ந்தேன்.*

*விழுப்புரத்துக்கு வந்தேன். டிபன் வாங்கிச் சாப்பிட்டேன்.*

*காலையில் நடந்த நிகழ்ச்சி என்னைப் பதற வைத்தது. யோசித்தவாறு உட்கார்ந்தேன்.*

*முதன் முதலாக ஒன்று புலனாகியது. என் உடம்புக்கு ஒரு கவர்ச்சி வந்திருக்கிறது. அதனால் அது விரும்பப்படுகிறது.*

*அப்படி நினைக்கும்போது என் வளர்ச்சிமீதே எனக்கு வெறுப்பு வந்தது.*

*சென்னைக்குத் திரும்பி விடலாம் என்று நினைத்தேன்.*

*இரவுவரை காத்திருந்தேன். மீசை வைத்த ஒரு போர்ட்டர் என்னை அடிக்கடி நோட்டம் விட்டான். ஏழு மணிக்கு என்னிடம் வந்து, "எங்கேம்மா போறே?" என்றான்.*

*"எங்கே போனால் உனக்கென்ன?" என்றேன்.*

*என்னை முறைத்துப் பார்த்தான். எனக்கு உள்ளூற பயம். வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன்.*

*அடுத்த தூண் பக்கத்தில் போய் அவன் நின்றான். முறைத்துக் கொண்டே இருந்தான்.*

*சிறிது நேரத்தில் ஒரு ரயில் வந்தது. அது நின்றதும், ஒரே இரைச்சல். "இது மெட்ராஸ் போகிறதா?" என்று யாரிடமோ கேட்டபோது அவர் தலையை ஆட்டினார்.*

*விரைவாகப் போய் ஏறி உட்கார்ந்தேன். பெண்கள் பெட்டியில் கூட்டம். ஒரு ஓரத்தில் பையை வைத்து அதன்மீது உட்கார்ந்தேன்.*

*வண்டி புறப்பட்டது. சாய்ந்து கொண்டேன். சிறிது நேரத்தில் உறங்க ஆரம்பித்தேன்.*

*வெகு நேரம் உறங்கியிருப்பேன்! சப்தம் கேட்டு எழுந்தேன். அநேகர் இறங்குவதற்குத் தயார் செய்துகொண்டிருந் தார்கள்.*

*"மெட்ராஸ் வந்து விட்டதா?" என்றேன்.*

"மெட்ராஸா?" என்று ஒரு குழந்தைக்காரி ஆச்சரியத்தோடு கேட்டாள். "ரயில் திருச்சிக்குப் போவுது..." என்று கூறினான்.

அநேகர் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள்.

சன்னல் ஓரமாக இருந்த ஒரு அம்மாள், "நீ மெட்ராஸுக்குப் போகணுமா?" என்று கேட்டாள்.

எனக்கு அவமானமாக இருந்தது.

"இல்லே..." என்று இழுத்தேன். என் ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

இதற்குள் வண்டி மெதுவாகியது. எழுந்தேன். குழாய்க்குச் சென்று முகத்தைக் கழுவினேன்.

வண்டி நின்றது. ஐந்தாறு பெண்கள் இறங்கினார்கள். நானும் இறங்கினேன்.

இருட்டு விலகவில்லை. சுற்றிவரப் பார்த்தேன். நெடுந்தூரத்திற்குக் கறுப்பாக மரங்கள்தான் தெரிந்தன. என்ன ஊர் இது?

கிராதிக்கு வெளியே வந்தேன். ரயில் போய் விட்டது. சிவ்வென்று நிசப்தம் சூழ்ந்தது. விடிவதற்கு எவ்வளவோ நேரமிருந்தது.

மெல்லிய வெளிச்சத்தில் ஒரு வண்டிப் பாதை தெரிந்தது. நடக்க ஆரம்பித்தேன்.

வெகுதூரம் போயிருப்பேன். தனியாக ஒரு பலகாரக் கடை தெரிந்தது. அடுப்பு ஜுவாலை திகுதிகு என்று எரிந்தது.

கடை வாசலில் நின்று உள்ளே பார்த்தேன்.

"யாரம்மா?" என்று ஒரு குரல்!

புகையேறிக் கறுப்பான சுவரின் பின்னணியில் ஒரு மரப் பெஞ்சின்மேல் ஒரு வயதான அம்மாள் உட்கார்ந்திருந்தாள்.

"இப்படி இந்தப் பக்கம் போகலாமா?" என்றேன்.

"எங்கே?" என்றாள்.

பதில் சொல்லத் தெரியவில்லை.

"எங்கேம்மா?"

"இப்படி ஊர்லே போய் ஏதாவது வேலை செஞ்சு பிழைக்கலாம்னு பார்க்கிறேன்" என்றேன்.

"அந்தப் பக்கம் போகாதே! ஊரும் கிடையாது, ஒரு இழவும் கிடையாது. போன மாசந்தான் அந்தப் பக்கம் ஒரு பெண்ணைக் கெடுத்துட்டுக் கிணத்திலே தூக்கிப் போட்டிருந் தாங்க!" என்றாள்.

திக் என்றது.

"கிராமப் புறத்திலே யாரு வேலை கொடுப்பாங்க?" சொந்த ஊரு போய்ச் சேரு!" என்றாள்.

திரும்பி நடக்க ஆரம்பித்தேன். இப்போது ஒரே பயம். ரயில் நிலையத்திலிருந்து வெகு தூரம் நடந்து வந்திருக்கிறேன். மீண்டும் அங்கே போவதற்கு நேரம் ஆகும். கால் ஓய்ந்து விட்டது. ஒரு வாய்க்கால் பாலத்தின்மீது உட்கார்ந்தேன்.

விடியும்போது ஒரு பார வண்டி வந்தது. "ஏம்பா ஸ்டேஷனுக்குப் போகணும். வண்டியில் ஏறிக்கலாமா?" என்றேன்.

"ஏறிக்க!" என்றான்.

ஏறினேன். சிறிது தூரத்தில் ஒரு குட்டை ஆசாமி வண்டிக்காரனிடம் ஏதோ பேசிவிட்டு வண்டியில் ஏறினான்.

வண்டி சிறிது நேரத்தில் ஒரு வயல் பக்கம் நின்றது.

"இந்தாம்மா!. வண்டி இப்படித் திரும்பப் போவுது! டேசன் போகணும்னா இதோ இவனோட போ!" என்று வண்டிக்காரன் சொன்னான்.

நான் அந்தக் குட்டை ஆசாமியைப் பார்த்தேன்.

"தைரியமாப் போம்மா! பயப்படாதே!" என்றான் வண்டிக் காரன்.

வழிகாட்டிய திருடன்!

வண்டியிலிருந்து குதித்தேன். குட்டை ஆசாமி முன்னே செல்லப் பின்னால் நடந்தேன்.

வரப்புகள் மீது நடந்து போனோம்.

வழியில் ஒரு பெரிய கிணறு. நிறைய ஆழம். அதைச் சுற்றிக்கொண்டு குட்டை ஆசாமி போனான்.

அப்போது காலில் முள் குத்திவிட்டது. சட்டென்று நின்றேன். முள்ளை எடுக்க நினைத்துப் பையைக் கீழேவைத்து விட்டு ஒரு கல்லின்மேல் உட்கார்ந்தேன்.

விருட்டென்று ஒரு சப்தம்! என் பையை எடுத்துக் கொண்டு அந்தக் குட்டை ஆசாமி ஓடினான். திடுக்கிட்டேன். "ஏய்! ஏய்!" என்று கத்தினேன். நெடிதாக வளர்ந்திருந்த பயிர் களுக்கிடையே புகுந்து அவன் மறைந்து விட்டான்.

அழுகை வந்தது. இவ்வளவாவது கிணற்றில் தள்ளாமல் விட்டானே என்று நினைத்தேன். அங்கிருப்பதே தப்பு என்று நினைத்து நொண்டியவாறு நடக்க ஆரம்பித்தேன்.

வெகுதூரம் நடந்த பிறகு ஒரு காரைக் கட்டடம் தெரிந்தது. அதைச் சுற்றிப் பெரிய தோட்டம். முன்புறத்தில் மூங்கில் கதவு.

வேலி ஓரத்தில் ஒரு அம்மாள் கீரை பிடுங்கிக்கொண் டிருந்தாள். நான் வருவதைப் பார்த்தாள். நான் தயங்குவதைப் பார்த்ததும், "ஏம்மா! என்ன வேணும்?" என்றாள்.

"காலிலே முள் குத்திடுத்து!" என்றேன்.

"ஐயோ!" என்று கூறிய அவள், மறுகணம் மூங்கில் கதவைத் திறந்து கொண்டு வந்தாள்.

என்னை உட்கார்த்தி தனது ஹூக்கைக் கழற்றி முள்ளை எடுக்க ஆரம்பித்தாள்.

முள்ளை எடுத்துக்கொண்டே அந்த அம்மாள் விசாரித் தாள். விவரங்களைத் தெரிவித்தேன்.

"இப்படியெல்லாம் தனியாக வரலாமா?" என்று கேட்டாள். உள்ளே அழைத்துப் போனாள்.

சூடாகக் காப்பி கொடுத்தாள். சாப்பிடும்போது என்னையே பார்த்தாள். பிறகு, "நீ நம்ம வீட்டோடேயே தங்கிடறாயாம்மா?" என்று கேட்டாள்.

நான் பதில் சொல்லவில்லை.

"இங்கேயே தங்கிக்கோ! எனக்கு ஒத்தாசையா வேலை கீலை செய். உனக்கு இங்கே எந்தக் குறையும் இருக்காது!" என்றாள்.

எங்கேயாவது வேலை செய்ய வேண்டும் என்று நானும் நினைத்துக் கொண்டிருந்தேன். இது ஒரு சந்தர்ப்பமாகத் தோன்றியது.

அன்று முழுதும் அங்கே இருந்த போதிலும் அவளுக்கு ஒரு பையன் இருப்பது எனக்குத் தெரியாது. மறுநாள் காலை திடுதிப் என்று அவனைப் பார்த்தேன். இருபத்து நான்கு வயசு இருக்கும். சுமாரான அழகு! அம்மாளிடம் கண்ணியமாகப் பேசினான். என்னிடம் மரியாதையாக நடந்தான்.

பிறகு மாடி ஏறி கீற்றுக் கொட்டகைக்குப் போய் விட்டான்.

மூன்று தினங்களுக்குள், அவர்கள் வீட்டு வேலை முழுவதையும் புரிந்து கொண்டேன். எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்தேன்.

அம்மாள் என்னை வேலைக்காரியாக நடத்தவில்லை. மரியாதையாக நடத்தினாள். அருகில் உட்கார வைத்து சோறு போட்டாள். துணிமணிகள் வாங்கித் தந்தாள்.

இரு வாரம் போயிருக்கும். ஒரு நாள் காலை அம்மாள் என்னைத் தாழ்வாரத்தில் உட்கார்த்தி, "உன்னிடம் ஒன்று கேட்கணும்!" என்றாள்.

"என்ன?" என்றேன்.

"நீ என் பையனைப் பார்த்திருக்கிறாய் இல்லையா?"

"ஆமாம்."

"அவனைக் கல்யாணம் செஞ்சுக்கிறயா?"

அவள் கேள்வி என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

என் திருமணத்தைப் பற்றி யாரோ நினைக்கிறார்களே என்பது. இன்னொன்று, இவ்வளவு பெரிய இடத்திலிருந்து கேட்கிறார்களே என்பது!

ஆனால் அனாதை போல் வந்திருக்கும் என்னை ஏன் கேட்கிறார்கள்?

நான் பதில் சொல்ல முடியவில்லை.

"ஏன் கமலா! என்ன சொல்றே!" என்றாள்.

"எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியலை அம்மா! என்னவோ குழப்பமா இருக்கு!" என்றேன்.

"குழப்பமே படாதே!" என்றாள்.

நான் பேசவில்லை. வெகு நேரம் அப்படியே இருந்தேன். பிறகு அம்மாளே என்னைப் பார்த்து "சரி அம்மா, உனக்கு இப்பச் சொல்ல முடியாட்டி, எப்பவாவது சொல்லம்மா!" என்றாள்.

ஒருவாரம் போயிற்று. ஒரு நாள் சாம்பலை அள்ளி வேலிக்கு வெளியே போட்டுவிட்டு வந்தேன். அம்மாளுடைய பையன் மாடிப் படியில் இறங்கிக் கொண்டிருந்தான். பாதிவழி இறங்கியவன் திடீரென்று உடம்பெல்லாம் உதறிக் கொண் டிருந்தான்.

பிறகு ஒரு விசித்திரமான சப்தத்தை எழுப்பிக் கொண்டு படியில் சாய்ந்து விட்டான்.

நான் உள்ளே ஓடி அம்மாவிடம் தெரிவித்தேன். அம்மாள் ஓடி வந்தாள். அவனைத் தூக்கி எடுத்தாள். "நீ போ கமலா! நான் பார்த்துக்கிறேன். நீ போ?" என்றாள் அவரசமாக. அந்த அரைக்கணத்தில் அவள் ஒரு சாவியை எடுத்து அவன் கையில் கொடுப்பது தெரிந்தது.

வீட்டுக்கு வெளியே உட்கார்ந்தேன். சிறிது நேரத்தில் அம்மாள் திரும்பி வந்தாள்.

"பையனுக்கு யாரோ ஏவல் வச்சுட்டாங்க. கமலா! அதான் இப்படி. குறி எல்லாம் போய்க் கேட்டுட்டு வந்துட்டேன்! ஒரு கல்யாணம் பண்ணி வச்சாக் குணமாயிடும்னு எல்லாரும் சொல்லிட்டாங்க. அதாம்மா உன்னைக் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீ மட்டும் சரின்னு சொல்லிட்டியானா, இந்த வீட்டிலே நீ சந்தோஷமா இருக்கலாம்!" என்றான்.

பையனுக்கு காக்காய் வலிப்பு என்று எனக்குத் தெரிந்து விட்டது.

வீட்டில் எனக்கு நடக்கும் உபசார மெல்லாம் என்னைத் திருமணத்திற்கு இணங்க வைப்பதற்காகத்தான்!

நான் பேசவில்லை.

''என்னம்மா, ஒண்ணும் •சொல்லமாட்டேங்கறியே?'' என்றாள் அவள், எரிச்சலோடு!

"எனக்குச் சம்மதமில்லை" என்றேன்.

அந்த அம்மாள் முகம் டக்கென்று மாறியது. வெகு நேரம் அப்படியே உட்கார்ந்து விட்டாள். பிறகு எழுந்திருந்தாள். உள்ளே போனாள்.

சிறிது நேரத்தில் அவள் சாப்பிடும் சத்தம் கேட்டது. இதுவரை நான் இல்லாமல் அவள் சாப்பிட்டதில்லை. எனக்கு திக்கென்றது.

சரி! இனி வேண்டாத்தகாதவள் ஆகிவிட்டோம் என்று நினைத்தேன்.

நான் எழுந்து உள்ளே போனேன்.

"போய் வரட்டுமா?" என்றேன்.

எரிச்சலோடு என்னைப் பார்த்தாள்.

"வர்ரேன்" என்றேன்.

மெள்ள நடந்துவந்து வேலிக் கதவைத் திறந்து வெளியே வந்தேன். எனக்கு ஏனோ அழுகை வந்தது.

## 3. பருவத்தின் பரிசுகள்

இந்தத் தடவை நேராக ரயில் நிலையத்திற்குப் போனேன். அதன் பெயர் நினைவில் இல்லை. நான்கு ஆண்டுகளில் நிறைய இடங்களுக்குப் போயிருக்கிறேன். அநேக ஊர்களின் பெயர் களை மறந்து விடுகிறேன்.

மத்தியானம் ரயில் வந்தது. ஏறினேன். அது எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்பது தெரியாது. இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மனநிலை அப்படி இருக்கிறது.

பெட்டியில் ஏறியபோது உள்ளே கூச்சல் போட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். இரண்டு ஸ்டேஷன்களுக்கு முன் ஒரு இடத்தில் ஒரு இளம்பெண் தன் கைகுழந்தையோடு விழுந்து தற்கொலை பண்ணிக் கொண்டாளாம். குழந்தை மட்டும் தப்பி விட்டதாம்.

கேட்பதற்கு வருத்தமாக இருந்தது. அந்தப் பெண்ணின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதும் எனக்குத் தெரியும். குடும்பநிலை தாறுமாறாக இருந்தால் வாழ்வதை விடமரணத் தைத்தான் மனம் விரும்புகிறது. எனக்குக் கூட இந்த நினைவுகள் வரும். ஆனால் தடுத்துக் கொள்வேன்.

இப்போது சென்னைக்குத் திரும்பாமல் வேறு எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறேன்! அதற்கும் அந்த மனநிலைதான் காரணம்!

இருட்டும் நேரத்தில் ரயில் ஒரு நிலையத்தில் நின்றது. அநேகர் இறங்கினார்கள். பெரிய ஊராகத் தெரிந்தது. - திருச்சிப் பக்கத்தில் ஒரு ஊர் என்று பின்னால் தெரிந்தது - நானும் இறங்கினேன்.

யாரிடமாவது ஏதாவது கேட்டு வாங்கலாமா என்று பார்த்தேன். தைரியம் வரவில்லை. பிளாட்பாரத்தில் நடந்து போனேன். கேட்டில் நின்ற பரிசோதகர் யாரிடமோ பேசுவதற்கு அப்பால் போனார். உடனே வெளியே போகவேண்டும் என்ற துடிப்பு வந்தது. வெளியே வந்தேன்.

எனக்குள் ஒரு சோர்வு வந்தது! பசி அவ்வளவு வாட்டியது. நேராகக் குழாய்க்குப் போனேன். முகத்தைக் கழுவினேன். தண்ணீர் குடித்தேன்.

ஒரு நடுத்தர வயதுக்காரர் அங்கே வந்தார். ஜிப்பாவும் வேட்டியும் தரித்திருந்தார். கையைக் கழுவி விட்டு என்னைப் பார்த்தார்.

"டிக்கெட் இல்லாமல் வந்தாயா?" என்றார்.

நான் வெளியே வந்ததை அவர் கவனித்திருக்கவேண்டும். நான் பதில் சொல்லவில்லை.

"ஆளைப் பார்த்தால் கீழே விழுந்துடுவே போல இருக்கு. பசியா?" என்றார்.

பதில் சொல்லவில்லை.

"வா ஓட்டலுக்கு! ஏன் கூச்சப்படுகிறாய்?" என்றார்.

புறப்பட்டார். எனக்கானால் பசி! அவர் கூப்பிடுவதை நிராகரிக்கவும் முடியவில்லை. பின்னால் போனேன்.

இட்டிலி வாங்கிக் கொடுத்தார். நன்றாகச் சாப்பிட்டேன். பிறகு, என்னைப் பற்றிக் கேட்டார். அரை குறையாகக் கூறினேன்.

"என்னோடு வா! எங்கள் வீட்டில் இரவு தங்கிக்கொள்!" என்றார்.

"வேண்டாம்!" என்றேன்.

"ஏன் பயப்படுகிறாய்? என் சம்சாரம் வீட்டில் இருக்கிறாள். உன்னை கவனித்துக் கொள்வாள்!" என்றார்.

நம்பிக்கையாகத் தெரிந்தது. தவிர, இரவில் நான் எங்கே யாவது தங்க வேண்டும்.

அவருடன் போனேன். நெடுந்தூரம் நடந்தோம். அது பெரிய வீடு. ஆனால் ரொம்பப் பழசு. வெறித்திருந்தது. அரிக்கன் லாந்தர் எரிந்தது. "சீதா!" என்று அழைத்தார். ஒரு அம்மாள் வந்தாள். "இந்தப் பெண்ணை ரயில்வே ஸ்டேஷனில் பார்த்தேன். அவள் சொல்கிற விஷயத்தைக் கேளு!" என்றார்.

அம்மாள் கொஞ்சம் நாகரிகமாகத் தென்பட்டாள். என்னை உட்கார வைத்து விவரங்களைக் கேட்டாள்.

எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் போல் தோன்றியது. அவ்வளவு மிருதுவாகப் பேசினாள். மளமளவென்று சொன்னேன்.

"உங்க அம்மாவுக்குக் கடிதம் எழுதட்டுமா?" என்றாள்.

சங்கடமாக இருந்தது. என்னைச் சோதிக்கிறார்களோ என்று நினைத்தேன்.

"சரி எழுதுங்கள்!" என்றேன்.

இரவில் சாப்பாடு போட்டு என்னை அறையில் படுக்க வைத்தாள்.

மறுநாள், என் வீட்டு முகவரியைக் கேட்டுக் கடிதம் எழுதினாள். "உங்கள் பெண் இங்கே இருக்கிறாள். அழைத்துப் போங்கள்" என்று எழுதினாள்.

ஒரு வாரம் காத்திருந்தோம். எந்தப் பதிலும் வரவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மனக் கஷ்டமும் ஏற்பட்டது. என்னை என் தாயார் புறக்கணித்து விட்டாள் என்று நினைத்தேன்.

"கவலைப்படாதே! கமலா! இந்த வீட்டிலேயே தங்கி விடு. எங்களுக்கு உதவியாக இருக்கும்" என்றாள் சீதா.

ஒரு புகலிடம் கிடைத்தது பற்றி மகிழ்ச்சி. அவர்களது வீட்டு வேலைகளைச் செய்தேன். விரைவில் சமையலும் ஆரம்பித்தேன்.

போகப் போக அவர்களைப் பற்றிய விஷயங்கள் தெரிய வந்தன. சீதாவின் வீட்டுக்காரருக்கு ஒரு கோவில் மடைப் பள்ளியில் வேலை! கோவிலுக்குச் சொந்தமான வீடுதான் அது! மணமாவதற்கு முன் சீதா அவளது கணவர் சாமுவுக்கு தூரத்து உறவு! அவள் படித்தவள்! தினமும் திருச்சிக்குப் போய் ஒரு

அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தாள். நல்ல சம்பளம் வாங்கினாள்.

பதினேழு வருடங்களாக அவர்கள் தம்பதிகளாக வாழ்கிறார்கள். இருந்தும் குழந்தை இல்லை.

சீதா என்னை வேலைக்காரி போல் நடத்தவில்லை. பிரியமாக நடத்தினாள். திருச்சியிலிருந்து எனக்காகப் பழம் வாங்கி வந்தாள். துணிகள் வாங்கி வந்தாள். என்னோடு எப்போதும் பொழுது போக்கினாள்.

இரண்டு மாதம் சென்றது. வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்தது. அதுபோல் மகிழ்ச்சியை அனுபவித்ததில்லை. உடம்பு கூடத் தேறியது. முகத்தில் சதைப்பற்று வந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை சீதா என்னைத் திருச்சிக்கு அழைத்துப் போனாள். மலைக்கோட்டையெல்லாம் சுற்றிக் காட்டினாள். தெரிந்தவர்களிடம் என்னைக் காட்டி தூரத்து உறவு என்று பெருமையோடு சொன்னாள்.

ஒரு இடத்தில், ஒரு வயதான அம்மாள் சீதாவிடம், "இவள் யார்? உன் பெண்ணா?" என்றாள்.

சீதா கொஞ்சம் தயங்கினாள். பிறகு, "உங், உங்" என்று தலையை ஆட்டி, 'ஆமாம்' என்று பொருள் படவும், பொருள் படாதது போலவும் கூறினாள்.

"இவள் ஒரே பெண்தானா?" என்றாள் அந்த அம்மாள்.

"ஆமாம்" என்றாள் சீதா.

வீட்டுக்கு வந்தோம்.

என் கையைப் பிடித்து இழுத்து சுவாமி படத்தின் முன் நிறுத்தி, "கமலா! நீ எங்கள் பெண்!" என்றாள் சீதா. நான் உணர்ச்சிவசப்பட்டேன்.

அன்றிலிருந்து அவர்கள் வீட்டில் என்னைப் பெண் போல நடத்தினார்கள். வெறும் 'கமலா' என்று அழைக்காமல் 'கமலாப் பொண்ணு' என்று அழைத்தார்கள்.

ஒரு மாதம் ஓடி விட்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை இரவு! பின் புறத்தில் தட்டுக்களைக் கழுவிவிட்டு உள்ளே வந்தேன். அரிக்கன் விளக்குக்கு முன்னால் வந்தபோது சீதா என் பாவாடையைப் பார்த்து, "கமலா இதென்ன...?" என்று கேட்டாள். நான் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டேன். சீதா லேசாகச் சிரித்தாள்.

"சரி, கூடத்திலே நிற்காதே! அந்தப் பக்கம் போய் உட்கார்" என்றாள்.

வயதை நிர்ணயித்துத்தான் பெரியவள் என்று சொல் வார்கள் என்று நினைத்தேன். ஆனால் உடற் கூறினால் இந்த எல்லை நிச்சயிக்கப்படுகிறது என்பது அதுவரை தெரியாது.

சீதா எனக்கு வேறு துணிகளைத் தந்தாள். பாலும் பழமும் தந்தாள். அவள் எனக்குச் செய்த செய்கைகள்தான் அதை ஒரு பெரிய நிகழ்ச்சியாக நினைக்க வைத்தன. இரவில் படுத்துக் கொண்ட பிறகு உபதேசித்தாள்: "ஆம்பிளைகளோடு விளையாடாதே! பழகாதே!"

நான் கலவரம் அடைந்தேன்.

கோவிலில் எடுபிடி வேலை செய்ய ராமு என்ற பையன் இருந்தான். கையில் 'மஸில்ஸ்'களுடன் கட்டுமஸ்தாக இருப்பான். அடிக்கடி சாமுவைப் பார்க்க வருவான். அவனுக்கும் சீதா வீட்டு வேலைகளைக் கொடுப்பாள். நான் செய்கிற வேலையைக்கூட பாதியில் பிடுங்கிக் கொள்வான்.

சீதாவும் நானும் அவன் வாயைக் கிண்டுவோம். பேச்சில் நிறையத் திக்கல் இருக்கும். நாங்கள் அதை ரசிப்போம்.

வீட்டில் ஒரு பழக்கத்தை இங்கே சொல்லி விடுகிறேன். தனிமையான வீடு அது. சுற்றிவர வேறு வீடு கிடையாது. அதிகாலையில் சாமு குளித்து விட்டுப் போய் விடுவார். (கோவில் தூரத்தில் இருந்தது.) அதற்குப் பிறகு சீதா ஆபிசுக்குப் புறப்படுவாள். புறப்படும்போது வாசல் கதவைப் பூட்டிச் சாவியைக் கொண்டு போய் விடுவாள். வீட்டின் பத்திரத்திற் காகவும், என் பத்திரத்திற்காகவும் செய்த ஏற்பாடு இது. சாமு எப்போதாவது மத்தியானம் வருவார். அவரிடமும் ஒரு சாவி இருந்தது.

வீட்டுள் அடைபட்டுக் கிடந்ததை நான் பொருட் படுத்தவே இல்லை. எனக்கு அதைப்பற்றி ஒரு நினைவு கூடக் கிடையாது. ஆபிசிலிருந்து சீதா பத்திரிகைகள் கொண்டு வந்திருப்பாள். அவைகளை நான் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருப்பேன்.

கோவிலிலிருந்து சமயங்களில் நைவேத்தியப் பொங்கலை எடுத்துக் கொண்டு ராமு வருவான். கம்பி இடுக்கு வழியாகக் கொடுத்துவிட்டுப் போவான். அவன் கை மஸில்ஸ்களைக்

காண்பிக்கச் சொல்வேன். பெரிதாக்கிக் காண்பிப்பான். அவனைத் தனியாகக் கேலி செய்ய வேண்டும் என்று ஆசை. ஆனால் உள்ளே அழைப்பதற்கு வழி இல்லை. வெகு நாழிகை அவனால் நிற்க முடியாது. கையோடு மாமா வரச் சொன்னார் என்று ஓடுவான். ஒரு நாள் பாத்திரத்தைக் கொடுத்த அவன் என் கையைப் பிடித்து விட்டான். ஒரு கையால் என்னைக் கதவுப் பக்கம் இழுக்கிறபோது, அவனது மறுகை போகிற பக்கத்தைக் கண்டு திடுக்கிட்டேன். மேல் நோக்கி மறைக்க என் கை தானாக ஓடியது. ஆனால் அதையும் தாண்டி அவனது கை அதன் லட்சியத்தை அடைந்த போது வலியால் கத்தினேன். பயந்து போய் ஓடினான்.

ராத்திரி சீதா வந்ததும் சொல்லலாமா என்று நினைத்தேன். என்னைக் கண்டிப்பாளோ என்று பயம்! பேசாமல் இருந்தேன்.

மறுநாள் ராமு வரவில்லை. ஒரு வாரமும் வரவில்லை. 'சொல்லாமல் கொள்ளாமல் நின்று விட்டான்' என்றார் சாமு.

ஒரு மாதத்துக்குப் பிறகு, அவரே அவனது ஊருக்குப் போய் (இரண்டு மைலில் இருந்தது.) அவனை அழைத்து வந்தார். மடைப்பள்ளியில் அவனில்லாமல் காரியம் ஆகாது.

என்னை அவன் பயத்தோடு பார்த்தான். பேச்சு முன் போல் இல்லை.

அவன் என்னிடம் எதையோ எதிர்பார்த்து ஏமாந்து விட்டான் என்று நினைத்தேன். அந்த எதிர்பார்ப்புகள் எவை என்று ஆராய்வதில் எனக்கு ஒரு ஆசை தேன்றியது. என் கையை அவன் இழுத்த காட்சி என் மனதில் தோன்றும் போது, முன்புபோல் பதட்ட உணர்வோ, பயங்கர உணர்வோ தோன்ற வில்லை. இழுத்தால் இழுபடுவதற்கு மனத்தில் ஒரு உணர்ச்சி உண்டாகிக் கொண்டிருந்தது. இது என்னை மீறிய உணர்ச்சி.

இரண்டு நாட்கள் பிரமாத மழை. வீடு எங்கும் ஒழுகல். சாமான்கள் அறை ஒன்றில்தான் ஒழுகல் இல்லை. பகல் எல்லாம் அங்கேதான் படுத்தேன். அதற்கு சன்னல் இல்லாததால் ஒரே இருட்டாக இருக்கும்.

மூன்றாம் நாளும் ஒரே மழை! எங்கும் இருண்டு விட்டது.

வழக்கம்போல் மத்தியானம் சாமான் அறையில் படுத்துக் கொண்டேன். தூங்கி விட்டேன்.

ஒரு மணி நேரம் தூங்கி இருப்பேன். என்மீது ஒரு கை விழுவது உணர்ந்தேன். தூக்கி வாரிப் போட்டது. கண் விழித்ததும் யாரோ என் அருகில் இருப்பது தெரிந்தது. யார் அது?

கத்தலாமா என்று நினைத்தேன். அதற்குள் என் சுவாசத்தில் அடித்த நெடி தடுத்து விட்டது. ராமுவின் உடம்பில் வீசும் மடைப்பள்ளி நெடி அது!

இவன் எப்ப உள்ளே வந்தான் என்று நினைப்பதற்குள் அவன் என் கையைப் பிடித்தான். பிறகு என் அண்மையை நோக்கிச் சரிந்தான்.

மனம் குழம்பியது. வயிற்றை என்னமோ செய்தது. கலவரம் அடைந்தேன். ஆனால் அதே நேரத்தில் திடீர் வெள்ளம் போல் மனத்தில் அந்த எதிர்பார்ப்பு பொங்கியது.

நான் தெளிவதற்கு முன், என் உடம்பு அள்ளப்பட்டு ஒரு அமைப்பில் தாழ்த்தப்படுவதை உணர்ந்தேன்.

பயம் புகுந்தது. என்ன நடக்கிறது என்று நினைக்கு முன், எதுவோ நடக்க ஆரம்பித்து விட்டது.

திடீரென்று எழ முயற்சித்தேன். ஒரு ஆத்திரம் வந்து விட்டது. கோபத்தோடு கையால் தள்ளும்போது அது ராமு இல்லை என்று உணர்ந்தேன். என்னால் நம்பக்கூட முடிய வில்லை. அது சாமுதான்!

"மா....மா! இதென்ன! தள்ளுங்கள்...." என்றேன்.

என் வாயை அவர் மூடினார்.

திமிறி நெளிந்தேன்.

"மாமா! நீங்கள் என்னை அழைக்கும் உறவு முறைக்கும், இப்போது கொள்ளும் உறவு நிலைக்கும்...."

"அதெல்லாம் பேசாம இரு!" என்றார் அவர். அவரது பலமான பிடிப்புகளுக்குள் ஒரு இரைபோல் சிக்கியிருந்தேன்.

மீண்டும் பேச ஆரம்பிப்பதற்குள், 'சூ' என்று சீறினார். கையால் என்னை அழுத்தினார்.

கணங்கள் ஓடின. நான் தொய்ந்து கிடந்தேன். தன்னைத் தளர்த்திக்கொண்டு அவர் எழுந்தார். பிறகு வெளியே போய் விட்டார்.

மனத்தை ஒரு அதிர்ச்சி தாக்கியது. வாழ்க்கையைப் பற்றி அந்நேரத்தில் எனக்கு நிதரிசனமாக உணர்த்தப்பட்ட உண்மைகள் என்னைத் திடுக்கிட வைத்தன.

இரண்டு மூன்று நாள் மாமா என்னைப் பார்ப்பதற்குக் கூச்சப்பட்டார். முன்புபோல் என்னிடம் சரளமாகப் பேசவில்லை.

சீதாவைப் பார்ப்பதற்கே கஷ்டமாக இருந்தது. அவளது அன்புக்குப் பின்னால் எனக்கு இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டதே என்று வருந்தினேன்.

சாமுவைப்பற்றி நினைத்தேன். பல விஷயங்கள் புரிய வந்தன. என் மலர்ச்சிக்குப் பிறகு அவர் பார்வைகள் என் உடல்மீது எத்தனையோ கோடுகளைப் போட்டிருக்கின்றன. கிணற்றடியில் குளிக்கும்போது ஏதாவது காரணத்தை வைத்துக் கொண்டு அவர் வரத் தவறியதில்லை. சீதாவின் முன்னால் பார்க்கும்போது ஒரு பார்வையும், தனியாகப் பார்க்கும்போது ஒரு பார்வையும் அவரிடம் இருப்பதை உணர்ந்தேன். அவை களை அப்போது பொருட்படுத்தவில்லை. இப்போது....

ஒரு வாரத்திற்குப் பின் சாமு மத்தியானம் மீண்டும் வந்தார். என் மறுப்புகளைத் தமது கையால் ஒதுக்கினார். விருப்பங்களைப் பலத்தோடு நிறைவேற்றிக்கொண்டார்.

அன்று முதல் இனி என்ன நேருமோ என்று பயந்தேன். அவரைப் பார்க்கும்போது உடல் பதறியது. சீதாவைப் பார்க்கும் போது வருத்தப்பட்டேன். அந்த வீட்டைவிட்டு ஓடி விடுவோமா என்று தோன்றியது. ஆனால், மனம் கேட்கவில்லை.

மூன்று மாதங்கள் ஓடின.

ஒரு நாள் பகல் மூன்று மணி இருக்கும். வெளிப் பூட்டைத் திறந்துகொண்டு சாமு உள்ளே வந்தார். பிறகு தமது வழக்கமான பாணியில் நடந்துகொண்டார்.

அப்போது வாசல் கதவு திடீரென்று திறக்கப்படும் சப்தம் கேட்டது. சில விநாடிகள் காலடி ஓசைகள் உள்ளே வந்தன.

சாமு தளர்ந்து எழுவதற்குள், அறைப்பக்கம் ஓசை கேட்டது. அவசரமாக எழுந்து வெளியே போனார்.

"எங்கே கமலா?" என்றாள் சீதா. அவர் குழறிக் கொண்டே, "நானுந்தான் தேடினேன்! உள்ளே தூங்குகிறாள்" என்றார்.

"கமலா!" என்றாள் சீதா.

பதறிப்போய் வெளியே வந்தேன். அப்படியும் உடைகளைச் சரி செய்யமுடியவில்லை.

என்னைப் பார்த்தாள். ஒரு கணம் முகம் மாறியது. பிறகு சமாளித்தாள்.

“தூங்கினாயா?”

“ஆமாம்!” என்றேன். தொடர்ந்து, “ஒரே அசதி! ஜுரம் வந்திடும்போல இருந்தது” என்றேன்.

என்னை அழைத்துக்கொண்டு உள்ளே போனாள். என் கையைத் தொட்டபோது அது பதறியது.

“என்ன உடம்பெல்லாம் பதறுது?” என்றாள்.

“ஒன்றுமில்லை” என்றேன்.

பிறகு என்னிடம் மேலே பேசாமல் உள்ளே போய் விட்டாள்.

மறுநாள் காலையில் சீதா, சாமுவிடம், “நான் திருச்சியில் வீடுதேடப் போகிறேன்!” என்றாள்.

“ஏன்?” என்றார் சாமு திடுக்கிட்டு.

“எனக்குச் சௌகரியமாக இருக்கும்! நீங்கள் அங்கிருந்து ரயிலில் தினமும் இங்கே வரலாம்!” என்றாள்.

அவர்களுக்குள் பெரிய சர்ச்சை நடந்தது. கடைசிவரை சீதா விட்டுக்கொடுக்கவே இல்லை.

ஒரு மாதத்திற்குள் வீடு பார்த்தாகிவிட்டது. நாங்கள் திருச்சிக்குப் போனோம்.

இதற்கிடையில் சாமுவின் விருப்பங்களை நான் எதிர்த்துக் கொண்டிருந்தேன். அவருக்கு இடம் கொடுக்கவில்லை. ‘ஓ’ என்று இரைந்து பயமுறுத்தினேன். இதனால் அவருக்கு என்மீது ஒரு வெறுப்புத் தோன்றியது. என்னைப் பார்த்து சிடுசிடு என்றார். சமயங்களில் திட்டவும் ஆரம்பித்தார்.

திருச்சிக்குப் போன பிறகு அவரது கோபதாபங்கள் அதிக மாயின. மத்தியான வேளைகளில் வீட்டுக்கு அவர் வர முடியாமல் போய் விட்டது. அதனால் இரவுகளில் சீதாவுக்குத் தெரியாமல் என்னை அணுக ஆரம்பித்தார். அதற்கு நான் இசையவில்லை என்றால் ‘கொன்று விடுவேன்’ என்றார்.

சில சமயங்களில் அந்த வார்த்தைகளில் நான் பயந்து விடுவதுண்டு. வாழ்க்கையில் கிடைத்த ஓரளவு நிம்மதியை நான் வீணாக்கிக்கொள்ள விரும்பவில்லை. எனவே சில சமயம் அவரது ஆக்கிரமிப்புக்கு உட்படுவதும் உண்டு.

எனினும் எனது எதிர்ப்புகளைக் கண்டு என்னை எந்த விதத்திலும் துன்புறுத்த வேண்டும் என்று நினைத்தார். வீட்டில் சரியாகப் பெருக்கவில்லை என்றால் கடிவார். வெந்நீரில் சரியான சூடு இல்லை என்றால் என்னை அடிக்கவும் முற்பட்டார்.

ஒருநாள் வாசல் முன்பக்கத் தோட்டத்தில் ஆடு புகுந்து மேய்ந்து விட்டது. கதவைத் திறந்து வைத்ததால் ஏற்பட்ட கோளாறு இது! சாமு என்னை அடித்தார். பலமான அடி! அழுதுகொண்டு உள்ளே போனேன். சீதா என்னை ஏறிட்டுப் பார்த்தாள். "ஏன் அழுகிறாய்?" என்று கேட்கவில்லை. எனக்கு எந்தவிதச் சமாதானமும் சொல்லவும் இல்லை.

நான் திடுக்கிட்டேன். சீதா என் இப்படி மாறினாள் என்று நினைத்தேன். என் மனத்தின் வேதனை அதிகமாகியது.

ஒருநாள் இரவு திடீரென்று கண் விழித்தேன். பேச்சுக் குரல் கேட்டது. சீதாவின் குரல் அது!

"அநியாயத்தை நிறுத்தினா நிறுத்துங்க. இல்லாட்டி ஏதாவது செஞ்சுடுவேன்!" என்றாள்.

"எந்த அநியாயமும் நான் செய்யலே!" என்றார் சாமு.

"சொல்லாதீங்க, நாக்கு அழுகிடும்! நான் கவனிக்கலைன்னு நினைச்சுடாதீங்க! எல்லாத்தையும் நோட் பண்ணிக்கிட்டு சண்டை செய்யாமே இருக்கேன். அன்னிக்கு ரூம்லே அந்தப் பெண்ணோட இருந்தது தெரியும். தெரியாதுன்னு நினைக் காதீங்க! உங்களை மத்தியான வேளையிலே வீட்டுக்கு வரக் கூடாதுன்னுதான் நான் ஊரை விட்டுத் திருச்சிக்கு வரணும்னு சொன்னேன். இங்கே வந்தீங்க. இங்கேயும் ஆரம்பிச்சுட்டீங்க!"

ராத்திரி வெகுநேரம் சண்டை நடந்தது. சீதா நொறுக்கித் தள்ளினாள். சாமு தணிந்து போனார். இருந்தாலும் குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

காலையில் எழுந்தபோது என் கண் கலங்கியிருந்தது. சரியான தூக்கம் இல்லை. முகத்தைக் கழுவிக்கொண்டு சமையலறைக்குள் போனேன். நெருப்பு பற்றவைக்கும் போது,

“எனக்கு சமையல் எதுவும் வேண்டாம்” என்றாள் சீதா. திரும்பிப் பார்ப்பதற்குள் போய்விட்டாள்.

ஒன்பது மணி வரை யாரும் சாப்பிடவில்லை. எல்லோரும் மௌனமாக இருந்தார்கள்.

உள்ளே போய் பழைய சோற்றை ஒரு தட்டில் எடுத்துக் கொண்டுபோய், சீதாவின் முன் வைத்தேன்.

“எனக்கு வேண்டாம்” என்றாள் அவள்.

“இல்லை, சாப்பிடுங்கள்!” என்றேன்.

“நீ சாப்பிடு!” என்றாள் கோபமாக. பிறகு அவசரமாகப் புடவையைக் கட்டிக்கொண்டு, ஆபீசுக்குப் புறப்பட்டாள்.

வாசலைத் தாண்டியிருக்க மாட்டாள். சாமு உடனே தாவி வந்து என் கையைப் பிடித்தார். சண்டை காரணமாக அவர் அன்றைக்கு வேலைக்குப் போகவில்லை.

என்னை இழுத்து ஒரு அறைக்குப் போக முனைந்த போது, அவரது வேட்கை புரிந்தது. திமிறினேன். முதுகில் ஒரு அடி அடித்தார். ‘டேய்’ என்றேன். நான் அவரைப் பார்த்து, “ஏதாவது வம்பு பண்ணினால் கத்துவேன்” என்றேன்.

அவருக்கு கோபம் வந்தது. கன்னத்தில் ஓங்கி ஒரு அடி அடித்தார். பிறகு என்னை அணைக்க முயன்றார்.

“பாவி” என்று கத்தினேன். என் கூச்சலைக் கேட்டு அவர் பயந்தார். வெடுக்கென்ற கையைக் கடித்தேன். என் கையை அவர் விட்டுவிட்டார்.

விர்ரென்று வாசல் பக்கமாகவே ஓடினேன். கதவைத் திறந்துகொண்டு தெருவில் கலந்து விட்டேன்.

எப்போது சீதாவுக்கு எல்லாம் புரிந்து விட்டதோ இனி அங்கே தங்கிப் பிரயோசனம் என்ன?

அந்த வாழ்வு அதோடு முடிந்தது. அதை நினைக்க நினைக்க கஷ்டமாக இருந்தது. சாமு முறைதவறி நடக்காதிருந் தால் தொடர்ந்து அங்கே தங்கியிருப்பேன்.

## 4. மலர்ந்தபோதே மறுவாழ்வு

நேரே நடந்து திருச்சி சந்திப்புக்குப் போனேன். வெகு நாழிகை காத்திருந்து கடைசியில் ஒரு வண்டியில் ஏறினேன். மாலையில் நான் போய்ச் சேர்ந்த இடம் ஈரோடு.

எந்த ரயில்கள் எங்கே போகின்றன, எந்தப் பாதையில் சென்னை இருக்கிறது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அவ்வளவு உலக அனுபவமும் எனக்கு இருக்கவில்லை.

ஈரோடு பிளாட்பாரத்தில் ஒரு குடும்பம் ரயிலுக்காகக் காத்திருந்தது. அவர்களிடம் உணவு கேட்டு வாங்கிச் சாப்பிட்டேன். இரவு அங்கேயே தங்கிவிட்டேன்.

மறுநாள் மற்றொரு வண்டியைப் பிடித்தேன். அது மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. பகலெல்லாம் நான் பட்டினி. யாரிடமும் எதுவும் வாங்கிக் கொள்ளவில்லை. இரவு வந்தது. எனக்குப் பயமாக இருந்தது. ஏனெனில் நான் போகிற வண்டி நமது பக்கங்களை விட்டு, வேறு தேசத்திற்கு ஓடுவது போலிருந்தது.

இதற்குமேல் இந்த வண்டியில் பயணம் தொடரக்கூடாது என்று நினைத்தேன். அடுத்த பெரிய ஸ்டேஷன் வந்ததும், சட்டென்று இறங்கி விட்டேன். அப்போது இரவு மணி ஒன்பது இருக்கும்.

ஸ்டேஷனின் பெயர் தெரிந்தது. (கர்நாடகத்தில் ஒரு நகரம். பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை.) பிளாட் பாரத்தில் ஒரு பக்கமாய்ப்போய் உட்கார்ந்தேன். என்ன செய்வ தென்று தெரியவில்லை. பசியானால் வயிற்றைக் கிண்டியது.

ஒரு போலீஸ்காரர் அந்தப் பக்கம் வந்தார். என்னைப் பார்த்ததும் “எழுந்திரு” என்றார். எழுந்தேன். பெயரென்ன, ஊரென்ன என்று விசாரித்தார். பொய்யாகச் சில விவரங்களைச் சொன்னேன்.

ஸ்டேஷனில் ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றார். யாருக்கோ போன் செய்தார். “ஸார் அந்தப் பெண் கிடைத்து விட்டது. இங்கே ஸ்டேஷனில் பிடித்து வைத்திருக்கிறேன்” என்றார்.

எனக்குக் கலவரமாக இருந்தது. எங்கேயோ மாட்டிக் கொண்டோமே என்று நினைத்தேன். “தாகமா இருக்கு! தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன்” என்று தந்திரமாகச் சொன்னேன். “அதெல்லாம் எங்கேயும் போகக் கூடாது!” என்று ஓங்கி ஒரு போடு போட்டார். நடுங்கி விட்டேன்.

பிறகு ஒரு டைரியை எடுத்து எழுத ஆரம்பித்தார். அப்போது நான் நைஸாக நகர்ந்து, கதவுப் பக்கம் வந்தேன். பிறகு விருட்டென்று வெளியே ஓடினேன்.

அவர் கவனித்து விட்டார். சட்டென்று எழுந்து கூச்சல் போட்டுக்கொண்டு என்னைத் துரத்த ஆரம்பித்தார்.. நான் நல்ல ஓட்டம் ஓடினேன். தலைதெறிக்க ஓடினேன். பலர் என்னைத் துரத்தினார்கள். கடைசியில் எனக்கே இளைத்து விட்டது. போலீஸ்காரர் ஓடி வந்து என்னைப் பிடித்து விட்டார். கூட்டம் கூடி விட்டது.

எல்லோரையும் அவர் விரட்டினார். பிறகு என் கையை அழுத்தி முரட்டுத்தனமாக இழுத்தார். அறையில் கொண்டு போய் உட்கார்த்தினார். என்னைக் கண்டபடி திட்டினார்! அதட்டினார். “ஜெயிலுக்குக் கொண்டுபோய் விடுவேன்” என்று மிரட்டினார்.

கால் மணி நேரம் சென்றது. நடுத்தர வயதுள்ள இருவர் பரபரப்போடு அங்கே வந்தார்கள்! “எங்கேப்பா கான்ஸ்டபிள்! எங்கே அந்தப் பெண்?” என்றார் ஒருவர்.

“மேஜைக்கு அடியில் உட்கார்ந்திருக்கு” என்று என்னைப் போலீஸ்காரர் காட்டினார்.

நடுத்தர ஆசாமிகள் என்னைக் பார்த்தார்கள். அவர்கள் கண்ணியமுள்ளவர்கள். என்னைப் பார்த்ததும் முகத்தைச் சுருக்கினார்கள். “இந்தப் பொண்ணு இல்லேப்பா” என்றார் ஒருவர். போலீஸ்காரருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

“இல்லையா?” என்றார்.

“இல்லை” என்று கூறிய அவர்கள், உடனே போய் விட்டார்கள்.

பிறகு அங்கே என்னைச் சுற்றி உள்ளவர்கள் பேசுவதிலிருந்து எனக்கு விஷயம் தெரிய வந்தது. வந்திருந்தவர்களில் ஒருவரது பெண் காணாமல் போய்விட்டாள். அவளைப் பற்றிப்போலீசில் புகார் கொடுத்திருந்தார். இந்தப் போலீஸ்காரர் நான் தான் அந்தப் பெண் என்று என்னைப் பிடித்து விட்டார்.

எல்லோரும் போன பிறகு அந்த போலீஸ்காரர் மேலும் என்னை விசாரித்தார். ஏதாவது விபரீதம் நடக்கக் கூடாது என்று நினைத்து நான் உண்மையைக் கூறினேன்.

அவர் வயதானவர். மீசையெல்லாம் நரைத்து விட்டது. உண்மை தெரிந்ததும் என்னிடம் மிரட்டல் இல்லாமல் பேசினார். "நீ வயசுப் பெண் அம்மா! இங்கே தனியா இருந்தா யானால் பசங்கள் சும்மா விட்டுவைக்க மாட்டாங்க! உன்னைச் சரியான இடத்திலே கொண்டு போய்ச் சேர்க்கிறேன்" என்றார்.

பிறகு அவரது வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு என்னை அழைத்துப் போனார். வெளியே சந்தடி இல்லை. ஒரே இருட்டு. நடத்திக் கொண்டே வெகுதூரம் போனார்.

கடைசியில் பெரிய 'வீடுபோல் ஒரு கட்டடம் தெரிந்தது. காம்பவுண்ட் மாதிரி ஒரு சுவரும் இருந்தது. போலீஸ்காரர் அதன் கதவைத் தட்டினார்.

சிறிது நேரத்தில் கதவு திறந்தது. ஒரு வேலைக்காரி உள்ளே தென்பட்டாள். "அம்மாவைப் பார்க்கணும்" என்றார் போலீஸ்காரர்.

"எல்லாரும் தூங்கி விட்டாங்களே!" என்றாள் வேலைக்காரி.

"ஒரு பெண்ணை அழைச்சிட்டு வந்திருக்கிறேன்" என்றார் போலீஸ்காரர்.

வேலைக்காரி எங்களை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள். இன்னொரு பெரிய கதவை அவள் தட்டினாள்.

பக் பக் பக் என்று என் மனம் அடித்தது. விசித்திர சப்தங்களை எழுப்பிக்கொண்ட ஒரு பருத்த அம்மாள் கதவைத் திறந்தாள். தூக்கக் கலக்கத்தோடு எங்களைப் பார்த்தாள். போலீஸ்காரர் விஷயத்தைச் சொன்னதும், "வாம்மா, வா!" என்றாள். கதவின் வழியாக ஒரு நீண்ட அந்தகாரத்துக்குள் நான் நுழைந்தேன்.

"நாளைக் காலையிலே வந்து பெரிய அம்மாவைப் பாரு!" என்று சொன்ன அந்தப் பருமன் டக் கென்று கதவை மூடினாள். எனக்கு மனம் திக்கென்றது.

இருட்டுக்குள் அந்தப் பருமன் என்னை அழைத்துப் போன போது, "சாப்பிட்டாயா?" என்றாள்.

எனக்கு நல்ல பசி! இருந்தாலும், ஆயிற்று!" என்றேன்.

உள்ளே போகப் போக எனக்குப் பயம் எடுத்தது. என்னை எங்கே கொண்டு போகிறாள்? என்ன செய்யப் போகிறாள்?

நடுக்கத்தோடு, "எங்கே போகிறோம்?" என்று கேட்டேன்.

பருமன் பதில் சொல்லவில்லை. எதிரே தென்பட்ட ஒரு அறை முன்னால் சடக்கென்று நின்றாள். இடுப்பிலிருந்து ஒரு சாவிக் கொத்தை எடுத்து ஒவ்வொன்றாகப் போட்டுப் பார்த்து ஒரு பெரிய பூட்டைத் திறந்தாள்.

அறையுள் அடைக்கப் போகிறாள் என்று தெரிந்தது, அடி வயிற்றைப் பற்றியது. "என்னை விடுங்கோ, விடுங்கோ!" என்று கத்தினேன். பருமன் என் கையை இழுத்துப் பிடித்தாள்.

"பயப்படாதேம்மா! உள்ளே எல்லோரும் இருக்கிறார்கள் பார்" என்று சொல்லி, சிறிது அழுத்தத்தோடு என்னை இழுத்தாள்.

உள்ளே பார்த்தேன். லேசான விடி விளக்கு முன்னால் எல்லாம் தெரிந்தது. பத்துப் பதினைந்து பேர் அங்கே படுத்திருந்தார்கள். பார்த்தால் பெண்களைப் போலத் தெரிந்தார்கள். போர்வையைப் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

என்னை ஒரு ஓரத்திற்கு பருமன் அழைத்துப் போனாள். பாய் பெட்ஷீட் தலைகாணி கொடுத்துப் படுக்கச் சொன்னாள். வரும் அழுகையை அடக்கி கொண்டு படுத்தேன்.

மணி ஒவ்வொன்றாக அடித்தது. பயத்தில் உடம்பு தூக்கி வாரிப் போட்டது. முகத்தைத் தலைகாணியில் புதைத்துக் கொண்டேன்.

இரவு இரண்டு மணிக்கு ஒரு சப்தம் கேட்டது. தலையைத் தூக்கிப் பார்த்தேன். அடுத்த வரிசையில் ஒர பெண் புலம்பிக் கொண்டிருந்தாள். "நான் கேட்க மாட்டேன்! நான் கேட்க மாட்டேன்" என்று அலறினாள். யாரும் பொருட்படுத்தவில்லை. தூங்கிக் கொண்டே இருந்தார்கள்.

மனக் கலக்கத்தில் தூக்கம் வரவில்லை! இது என்ன இடம்?

மணி ஐந்து அடித்தது.

"எழுந்திருங்க! எழுந்திருங்க!" என்ற சப்தம். எல்லோரையும் யாரோ எழுப்பிக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து பெண்கள் சடசடவென்று எழுந்தார்கள். கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடினார்கள்.

நானும் எழுந்தேன். மனசில் ஒரே திகில்! ஒன்று இரண்டு பெண்கள் என் அருகே வந்து என்னைப் பார்த்து, அடையாளம் தெரியாமல் விழித்தார்கள்.

அவர்களுடன் சேர்ந்து போவதுதான் சரி என்று தோன்றியது. நானும் புறப்பட்டேன். இன்னும் விடியவில்லை.

எல்லோரும் பல் தேய்த்தார்கள். முகம் கழுவினார்கள். சிலர் குளிக்க ஆரம்பித்தார்கள்.

பல் தேய்த்து விட்டு ஒதுங்கி நின்றேன். பொழுது விடிய ஆரம்பித்தது. ஒவ்வொருவரது முகமும் சரியாகத் தெரிய ஆரம்பித்தன.

அப்போது திடீரென்று என் பார்வையில் யாரோ ஓடுவது தெரிந்தது. அது ஒரு பெண்! கூட்டத்திலிருந்து விலகிய அவள் விர்ரென்று காம்பவுண்டை நோக்கி ஓடினாள்! அங்கே ஒரு பெரிய மரம் வளர்ந்திருந்தது. அதன் பக்கத்தில் ஒரு நாற்காலி வைக்கப்பட்டிருந்தது. அதில் அவள் எம்பி ஏறி காம்பவுண்ட் சுவரின் மேல்பகுதிக்குப் போய் விட்டாள்.

மறுபக்கம் அவள் குதிக்க எத்தனிக்கிறாள் என்பது தெரிந்தது. ஆனால் அவள் ஏன் அப்படித் தயங்குகிறாள்?

அதற்குள் இன்னொரு சத்தம்! "சோபா ஓடறா பாரு! சோபா ஓடறா பாரு!"

கத்தியவள் பருமன்! அவளது கூச்சலைத் தொடர்ந்து ஒரு முரட்டு வேலைக்காரி, "ஏய் சோபா! ஓடாதே! ஓடாதே! அகப்பட்டேன்னா தோலையே உரிச்சிடுவேன்!'' என்று கத்தியவாறு, சுவரை நோக்கி ஓடினாள்.

அவள் ஓடுவதற்கும் சோபா மறு பக்கத்தில் குதிப்பதற்கும் சரியாக இருந்தது.

குதித்து விட்டாள் என்று தெரிந்ததும், வேலைக்காரி திரும்பினாள். விர்ரென்று வெளியே நோக்கி ஓடினாள்.

அதற்குள், அங்கே இருந்த பெண்கள் இடையே கசமுச என்று பேச்சு எழுந்தது. கோபத்துடன் பருமன் அவர்களை நோக்கித் திரும்பினாள்.

"போங்கள். எல்லோரும் உள்ளே போங்கள்!" என்று சீறினாள்.

எல்லோரும் கட்டடத்திற்குள் புகுந்தார்கள். நானும் நடுங்கியவாறு உள்ளே போனேன்.

எல்லோரும் ஒரு பெரிய அறையில் உட்கார்ந்தார்கள். அந்த முரட்டு வேலைக்காரியின் குரல் காரசாரமாகக் கேட்டது.

தொடர்ந்து அவள் யாரையோ பலமாக அடிக்கும் சப்தமும் கேட்டது.

இன்னும் சில நிமிடத்தில் அந்த முரட்டு வேலைக்காரி, சோபாவின் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே வந்தாள். எங்கள் முன்னால் அந்தப் பெண்ணை நிறுத்தி ஒரு பிரம்பால் அவள் முதுகை விளாறி விட்டாள். பிறகு முதுகில் கை கொடுத்து முன்னால் ஒரு தள்ளுத் தள்ளினாள்.

தடக் கென்ற பலத்த சத்தத்துடன் என் அருகில் வந்து விழுந்தாள் சோபா! முனகியவாறு அவள் எழுந்தபோது, நான் அவளைப் பார்த்தேன்.

அப்படியே உறைந்து விட்டேன்.

சோபாவின் முதுகில் ஒரே ரத்தம். முகவாயில் ஒரு கீறல்! பின் புறத்துப் பாவாடை ரணத்தோடு ஒட்டிவிட்டது. அவை களைக் கண்டுதான் உறைந்து விட்டேன்.

இப்படி அடித்திருக்கிறார்களே என்று திடுக்கிட்டேன் இது என்ன இடம்?

சிறிது நேரத்தில் சோபா வலியுடன் எழுந்து பிரார்த்தனை யில் கலந்து கொண்டாள்.

நான் அன்று பிரார்த்தனை செய்தேன். “கடவுளே, எல்லோருக்கும் ஏன் இந்தத் துன்பம் கொடுக்கிறாய்?”

பிரார்த்தனை முடிந்த பின் சோபாவைப் பிடித்துக் கொண்டேன். முதலில் அவநம்பிக்கையோடு என்னைப் பார்த்தாள். பிறகு புன்னகை புரிந்தாள்.

எங்களைப் பார்த்து மற்றப் பெண்கள் ஒதுங்கிப் போனார்கள். நான் சோபாவின் கையைத் தாங்கி ஓரமாகக் கொண்டு போனேன். என் தாவணியின் முனைகளால் அவளது ரணங்களைத் துடைத்தேன்.

துடைக்கும்போது, ‘‘இது என்ன இடம்?’’ என்று மெதுவாகக் கேட்டேன்.

“புதிதாக வந்திருக்கிறாயா?” என்றாள்.

“ஆமாம்!” என்றேன்.

“உன் பெயர்?”

“கமலா.”

"என்ன குற்றம் செய்தாய்?"

"எதுவும் செய்யவில்லையே!"

தனியார் நன்கொடையில் நடக்கும் பெண்கள் இல்லம் அது என்று கூறினாள் சோபா. எனக்கு எதுவும் புரியவில்லை.

நாங்கள் இருவரும் ஒரு அறைக்குள் போனோம். அங்கே பல பெண்கள் தரையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந் தார்கள்.

கதவு அருகில் ஒரு அம்மாள் நின்றுகொண்டு, ஒவ்வொருவர் பெயராக அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு பெண்ணாகச் சென்று அலுமினியக் குவளையில் பால் வாங்கிச் சாப்பிட்டார்கள். என் பெயர் அழைக்கப் படவில்லை.

ஒன்பது மணி இருக்கும். மானேஜர் கூப்பிடுகிறார் என்று சொல்லி ஒரு வேலைக்காரி என்னை அழைத்துப் போனாள். மானேஜர் ஒரு பெண்மணி.

என்னை அன்போடு விசாரித்தாள். அவளுக்குத் தமிழ் சரியாகத் தெரியவில்லை. கன்னடமும் தமிழும் கலந்து பேசினாள். எனக்கு அது புரியவில்லை. எப்படியோ இருவரும் தடுமாறிப் பேசினோம். நான் விவரங்களைத் தெரிவித்தேன். அங்கே இருக்க விருப்பமில்லை என்றும், உடனே ஊருக்குப் போகவேண்டும் என்றும் கூறினேன். சொல்லும்போது அழுகை வந்தது. 'ஓ'வென்று அழுதேன்.

அவள் என்னைச் சமாதானப் படுத்தினாள். "உன்னைப் பற்றி நன்றாக விசாரித்த பிறகுதான் ஊருக்கு அனுப்புவோம்" என்று சொன்னாள்.

மீண்டும் அறைக்கு வந்தேன். என்னைச் சாப்பிட அழைத்தார்கள். போனேன்.

சாப்பிடும்போது பலரிடம் பேச முயன்றேன். அவர்கள் கன்னடம்தான் பேசினார்கள். தமிழ் தெரியவில்லை. தெரிந்த வர்கள் சிலரே இருந்தார்கள்.

எனக்குக் கஷ்டமாக இருந்தது. எப்படியாவது ஊருக்குப் போய்விடமாட்டோமா என்று நினைத்தேன்.

இரண்டு நாட்கள் நான் தொடர்ந்து அழுவதைப் பார்த்து மானேஜர் கூப்பிட்டு அனுப்பினாள். என் வீட்டு முகவரியை

வாங்கி வைத்துக்கொண்டு, தாயாருக்குக் கடிதம் எழுதுவதாகக் கூறினாள்.

ஒரு வாரம் சென்றது. ஊரிலிருந்து பதில் வரவில்லை. எனக்கு அழுகை அதிகமாகியது. ஆனால் மானேஜர் என்னை அழைத்து ஆறுதல் கூறினாள். சென்னையில் தெரிந்தவர்களுக்கு எழுதி என் குடும்பத்தைப்பற்றி விசாரிப்பதாகக் கூறினாள். எனக்குச் சிறிது அமைதி ஏற்பட்டது.

அதற்குள் அந்த இல்லத்தை ஒருவாறாகப் புரிந்து கொண்டேன். ஒருவிதத்தில் அது ஒரு சிறைதான். இங்கே கெட்ட நடத்தையில் ஈடுபட்டவர்களும் இருந்தார்கள். கொலை, திருட்டு, போன்ற மற்ற குற்றங்களுக்காகத் தள்ளப் பட்டவர்களும் இருந்தார்கள். எல்லோருக்கும் சோறு போட்டு, படிப்பும் தொழிலும் சொல்லிக் கொடுத்தார்கள்.

உள்ளே கண்டிப்பு அதிகம். மானேஜர்தான் அன்பாக இருந்தாளே ஒழிய, அவர்களுக்கு கீழே உள்ளவர்கள் கொடுமை யாக நடந்தார்கள். சிறு தவறு செய்தாலும் அடித்தார்கள். மற்றவரோடு சிறிது பேசினால் கூடச் சண்டைக்கு வந்தார்கள். சன்னல் பக்கம் யாராவது எட்டிப் பார்த்தால் முதுகை நொறுக்கினார்கள். காலையிலிருந்து ராத்திரிவரை பிரார்த்தனை, படிப்பு, வேலை..... வேலை. சிறிது நேரமும் ஓய்வு கிடையாது.

சோபாவிடம் நான் நன்றாகப் பழகினேன். ஒரு வாரமாக அவளுக்கு ஜுரம். தனி அறையில் படுக்க வைத்திருந்தார்கள். மேலே ரணங்கள் ஆறாமல் இருந்தன.

ஒவ்வொரு புதன்கிழமையும் டாக்டர் வருவது வழக்கம். ஆனால் சோபாவை அவரிடம் காட்டவில்லை. உள்ளே அவளைத் தனி அறையில் வைத்திருந்தார்கள். வேலைக்காரி அவளை அடித்துப் புண்ணாக்கியதை டாக்டர் பார்க்க நேர்ந்தால் வம்பாகப் போய்விடும் என்று கருதித்தான் சோபாவை அவரிடம் காட்டவில்லை.

## 5. சோபாவின் சோகக்கதை

இரவில்தான் நான் சோபாவைச் சந்திப்பேன். உறங்கு வதற்காக நாங்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தோம். ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி அறைகள்! எனக்கும் சோபா

வுக்கும் ஒரே அறை! அங்கே பத்துப் பேர் படுத்திருந்தோம். இரவு பதினொரு மணி வரை வார்டனின் கண்காணிப்பு இருக்கும். யாரும் பேசிக்கொள்ள முடியாது.

பதினொன்றுக்குப் பிறகு சோபா என் அருகில் நெருங்கி வருவாள். என் காதுக்குள் கையைக் குவித்து மெதுவாகப் பேசுவாள். நானும் அதேபோல் பேசுவேன். வெளியே சத்தமே கேட்காது. வார்டன் வருவது தெரிந்தால் பிரிந்து விடுவோம்.

இப்படிப் பேசியதில்தான் சோபாவின் கதை தெரிய வந்தது.

அவள் கர்நாடக எல்லைப் பகுதியைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண். நல்ல குடும்பம். உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். படிப்பைச் சரியாகத் தொடர முடியவில்லை. காரணம், அருகில் ஒரு நகரத்திலுள்ள அவளது அக்காள் வீட்டுக்கு அடிக்கடி அவள் போக வேண்டி வந்தது. அக்காள் தனலட்சுமி ஆஸ்துமா வியாதிக்காரி. அடிக்கடி படுத்துவிடுவாள். அவளது கணவர் சித்தலிங்கம் ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்தார். தனலட்சுமி படுத்துவிடும் போதெல்லாம் சோபாவை உதவிக்காக அழைத்துப் போவார். ஒன்று இரண்டு மாதங்கள் வரை சோபா அங்கே தங்க வேண்டியிருக்கும்.

இப்படி ஒரு சமயம் தங்கும்போதுதான் சித்தலிங்கத்தின் வீட்டில் பல நிகழ்ச்சிகள் நடந்தன.

சித்தலிங்கம் எப்போதாவது சோபாவைச் சினிமாவுக்கு அழைத்துப் போவது வழக்கம். இந்தத் தடவை வந்திருந்தபோது சோபாவைச் சினிமாவுக்கு அழைத்தார். அவளுக்குத் தயக்கமாக இருந்தது. காரணம் ஒன்பது மாதங்களுக்கு முன் அவள் பெரியவளாகி இருந்தாள். இதை தனலட்சுமியிடம் ரகசியமாகக் கூறியபோது அவள் சிரித்தாள். “அவர் உனக்கு யார்? அவரோட போனா ஒண்ணும் தப்பில்லை. சும்மா போ!” என்றாள்.

சினிமாவில் உட்கார்ந்தபோது, சித்தலிங்கம் அவள்மீது பல தடவைகள் சாய்ந்தார். படத்தில் உணர்ச்சியான கட்டங்கள் வந்தபோது அவளது கைகளை அழுத்தினார்.

இரண்டு, மூன்று முறை இப்படி சினிமா போய் வந்தபிறகு, சோபாவுக்கு ஒருவாறு சித்தலிங்கத்தின் ஜாடைகள் புரிய ஆரம்பித்தன. அதைப்பற்றி பயம் ஏற்பட்டது. இருந்தாலும் அக்காள் கொடுக்கும் தைரியத்தில் அவள் எதற்கும் கவலைப்

படவில்லை. அவளைப் பொறுத்தவரை ஒரு குழந்தைத்தனம் அவளை விட்டு நீங்கவில்லை.

ஒருநாள் இரவு அக்காள் ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தூக்க மருந்தைக் கொடுத்து மார்பைத் தடவிவிட்ட பிறகுதான் அவள் தூங்க ஆரம்பித்தாள். அவள் விடும் இழுப்பு மூச்சு அறையில் பயங்கரமாக ஒலித்தது. "வா! இங்கே படுக்க வேண்டாம். நமக்கு இந்த வியாதி வந்துவிடும். அடுத்த அறையில் படுக்கலாம்!" என்று சோபாவைப் பார்த்துக் கூறினார் சித்தலிங்கம். இருவரும் அடுத்த அறைக்குப் போனார்கள்.

அங்கே அவர்கள் படுத்த சில கணத்தில் சித்தலிங்கம் அவளருகில் நெருங்கி வந்தார். "தூங்கிட்டியா?" என்று கூறி முகத்தைத் தடவினார். பிறகு சிரிப்பு வரும்படி சினிமாப் பகுதிகள் பலவற்றை விவரித்துச் சொன்னார். ஒரு ஜோக்கைக் கேட்டு அவள் குலுங்கச் சிரித்தபோது அவர் உடனே அவளை அணைத்துவிட்டார். பிறகு அதே நிலையில் இருந்து கொண்டு இன்னும் தொடர்ந்து சிரிக்கப் பேசினார்.

சிரிப்பிலேயே அவளது கற்பு கரைந்து விட்டது.

மறுநாளும் இதே நிகழ்ச்சி நடந்தது.

உலகம் அறியாத தன்மையால் அவளுக்கு அவர் செய்கை யில் எந்தவிதத் தவறும் தெரியவில்லை. சித்தலிங்கத்துடன் மறு அறைக்குப் போவதும், அங்கு அவருடன் இரவைக் கழிப்பதும் அவளுக்கு வேடிக்கையாகவே இருந்தது.

இரண்டு வாரங்களில் அக்காள் குணம் அடைந்தபிறகு, சோபா ஊர் திரும்பினாள்.

இரண்டாவது மாதத்தில் அவளுக்கு உடம்பில் சில மாறுதல்கள் தோன்றின. மயக்கமும் வாந்தியும் வந்தன. அத்தை யிடமும் அப்பாவிடமும் அதைச் சொல்லப் பயமாக இருந்தது. (அவளுக்கு அம்மா கிடையாது.) சித்தலிங்கத்திற்குக் கடிதம் எழுதினாள்.

சித்தலிங்கம் உடனே வந்தார். மனைவிக்கு உடம்பு சரியில்லை என்று பொய் சொல்லி சோபாவை அழைத்துப் போனார். அங்கே சோபாவுக்குப் பல மருந்துகளை வாங்கிக் கொடுத்தார். பத்தாம் நாள் அவளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது.

மீண்டும் சொந்த ஊருக்குச் சோபாவைத் திருப்பி அனுப்பினார்.

ஆறு மாதங்கள் சென்றன. தனலட்சுமிக்கு மீண்டும் வியாதி அதிகமாகியது. சித்தலிங்கம் சோபாவை அழைத்துப் போனார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு ஊருக்குத் திரும்பிய சோபா மீண்டும் தன் உடல் நிலை மாறுவதை உணர்ந்தாள். உடனே சித்தலிங்கத்திற்குக் கடிதம் எழுதினாள்.

சித்தலிங்கம் அவளை அழைத்துப் போனார். ஆனால் இந்தத் தடவை அவரது மருந்துகள் ஒன்றும் பலிக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

இதற்கிடையே சோபாவின் தந்தை திடீரென்று நோயில் விழுந்தார். சோபாவின் உதவி தேவை என்று தந்தி வந்தது. சித்தலிங்கத்திற்கு வேறு வழி தோன்றவில்லை. பின்னால் வந்து, ஏதாவது செய்வதாகக் கூறி சோநபாவை அனுப்பினார்.

ஊருக்கு வந்த இரண்டாவது வாரத்தில் சோபாவின் உடல் நிலை அவளது தந்தைக்குத் தெரிய வந்தது. சோபாவை மிரட்டி விசாரித்தார். அவள் பதிலே சொல்லவில்லை. எதுவும் புரியாத தந்தை, தந்தி அடித்து சித்தலிங்கத்தை வரவழைத்தார்.

சித்தலிங்கம் வந்ததும், தனது மாமனார் கூறுவதை ஏதோ புதிதாகக் கேட்பவர் போல் கேட்டுக் கொண்டார். பிறகு, அவரும் சோபாவை மிரட்டி விசாரித்தார்.

அவர் விசாரிப்பது கண்டு சோபா திடுக்கிட்டாள். எனினும் குற்றத்தை ஒத்துக் கொள்ளாமல் இருக்கும் அவரது பரிதாப நிலையைக் கண்டு இரங்கி, அவளும் உண்மையைக் கூறாமல் நின்றாள்.

இந்த அதிர்ச்சியில் தந்தை அடுத்த நாள் இறந்தார். அத்தையும் தனது மகன் வீட்டுக்குப் போய் விட்டாள்.

கடைசியில் சோபாவை அழைத்துச் செல்லும் பொறுப்பு சித்தலிங்கத்திற்கு ஏற்பட்டது.

ஊருக்கு அழைத்து வந்த மறுதினத்திலிருந்து சோபாவை அக்காள் தனலட்சுமியும் துன்புறுத்த ஆரம்பித்தாள். "யாருடி அவன், சொல்லு!" என்று கேட்டு அடிக்கவும் ஆரம்பித்தாள். அப்போதெல்லாம் சித்தலிங்கம் அதை பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தார். அதைக் கவனிக்கும் போது சோபாவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

சித்தலிங்கம்தான் இதற்குக் காரணம் என்று கூறி விடலாமா என்று நினைத்தாள். அப்படிச் சொல்லிவிட்டால், அந்த உண்மை அக்காவால் தாங்க முடியாது. தன் வாழ்வை முடித்துக் கொண்டுவிடுவாள். இதற்குப் பயந்து பேசாமல் இருந்தாள்.

ஒரு நாள்! அக்காள் பின்புறம் போயிருந்த போது சோபா சித்தலிங்கத்திடம் நேராகப் போனாள். "உங்களுக்கோ உண்மை தெரியும். நீங்களும் அக்காளுடன் சேர்ந்து என்னை மிரட்டுவது கஷ்டமாக இருக்கிறது. நான் நினைத்தால் உங்களைக் காட்டிக் கொடுக்க முடியும். அதை நான் செய்யவில்லை!" என்றாள்.

"என்னடி மிரட்டரே? நீ என்ன என்னைக் காட்டிக் கொடுக்கிறது?" என்றார் சித்தலிங்கம்.

சோபா திடுக்கிட்டாள். ''நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?" என்றாள் கடுமையாக.

"ஆமாண்டி! நீ என்னோடு வந்தே! இன்னும் எத்தனை பேர்கிட்ட போனயோ? நானா எல்லாத்துக்கும் பொறுப்பு?" என்றார்.

சோபா திடுக்கிட்டாள். மனம் எரிமலையாகக் கொதித்தது. ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

ஒரு கடிதம் எழுதினாள். "அக்கா! எனது இந்த நிலைக்கு உன் கணவர் சித்தலிங்கம் தான் காரணம்! உனக்கு துரோகம் இழைத்ததற்கு நான் வருந்துகிறேன். என்னை மன்னித்து விடு! நான் வருகிறேன்" என்று எழுதி வைத்தாள். பிறகு, நள்ளிரவில் தாழ்ப்பாளைத் திறந்து கொண்டு வீட்டை விட்டு வெளி யேறினாள்.

வெளியேறிய பிறகு எங்கே போவது? சோபா யோசித்தாள். எதுவும் புரியவில்லை. நேராகப் பஸ் நிலையத் திற்குப் போனாள். அங்கே பலர் படுத்து உறங்கிக் கொண்டிருந் தார்கள். அவர்களோடு அவளும் சேர்ந்து உறங்கினாள்.

காலை ஐந்து மணிக்குப் பஸ் ஏறி அத்தையின் ஊருக்குப் போனாள். "அத்தை! அக்காவின் வீட்டில் என்னால் இருக்க முடியவில்லை. இங்கே வந்துவிட்டேன்" என்றாள்.

அத்தை எதுவும் சொல்லவில்லை. ஆனால் சோபாவிடம் நடந்து கொண்ட விதம் விசித்திரமாக இருந்தது. காப்பியை

டக்கென்று வைத்து, "குடி" என்பாள். சோற்றை அவளது தட்டில் அநாயாசமாகத் தூக்கிப் போடுவாள்.

அத்தை வீட்டுக்கு வந்த மூன்றாவது தினத்தில் சோபா வுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. அதன் பிறகு அத்தையின் போக்கு மேலும் மோசமாகியது. சோபா உடம்பு தேறும் வரை ஒரு மாதம் பேசாமல் இருந்தாள். பிறகு முணுமுணுக்க ஆரம்பித்தாள்.

"சரி! இங்கிருப்பது அத்தைக்குப் பிடிக்கவில்லை. முன்பு அப்பாவை அண்டி வந்து, எங்கள் வீட்டில் அவள் சாப்பிட்டதை எல்லாம் மறந்து விட்டாள்" என்று சோபா நினைத்தாள்.

அத்தையின் மகன் சந்தரின் நினைவு திடீரென்று வந்தது.

சந்தர் அவளை விட இரண்டு வயது பெரியவன். ஊருக்கு வந்தால் சோபாவை ஆசையோடு பார்ப்பான்.

அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவனுக்கு நினைவு உண்டு. ஆனால் சோபா அவனைச் சரியாகப் பார்க்க மாட்டாள். அவளது தந்தைக்கும் அந்த சம்பந்தத்தின் மீது விருப்பம் கிடையாது.

இப்போது சந்தர் கர்நாடக நகர் ஒன்றில் வேலைபார்த்து வந்தான். அவனது முகவரி அவளுக்குத் தெரியும் நேராக அவனிடம் போய் முறையிடுவது என்று தீர்மானித்தாள்.

மறுநாள் புறப்பட்டு அந்த நகருக்குச் சென்றாள். சந்தரின் அறையை அடைந்தாள். இரவு எட்டு மணிக்கு அவன் திரும்புவான் என்று கூறினார்கள். வாசலிலேயே உட்கார்ந்தாள்.

எட்டு மணிக்குச் சந்தர் திரும்பினான். அவளைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டான். தனக்கு நேர்ந்ததைச் சோபா அவனிடம் விவரித்தாள். அவன்தான் இனிக் காப்பாற்ற வேண்டும் என்று கூறினாள்.

சந்தர் அவளை ஏளனமாகப் பார்த்தான். "நான் விரும்பிய போது உன் அப்பா உன்னைக் கொடுக்கத் தயாராக இல்லை. நீயும் சம்மதிக்கவில்லை. இப்போது ஒரு குறை வந்து விட்டதால் ஓடி வந்திருக்கிறாய்! குறையோடு நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? பணம் தருகிறேன். உன் அக்காள் வீட்டுக்குப் போ!" என்று கூறி, உள்ளே போய் ரூபாயை எடுத்து வந்தான்.

அதை அவள் வாங்கிக் கொள்ளவில்லை. ஒரே ஆத்திரம்! பேசாமல் கிளம்பினாள். நேராகப் பஸ் நிலையத்திற்குச் சென்றாள்.

அங்கு ஒரு ஆள் வந்து அவளிடம் பேச்சுக் கொடுத்தான். இரவில் தன் வீட்டில் தங்கலாம் என்று அழைத்தான். உடன் படவில்லை. அவனைப் போகச் சொல்லி விட்டு அங்கேயே படுத்தாள்.

வெகு நேரம் உறங்கியிருப்பாள். உடம்பை யாரோ புரட்டுவது கண்டு விழித்தாள். விழிக்க முடியவில்லை. யாரோ அதற்குள் கண்களைக் கட்டினார்கள். கூச்சல் போட நினைத்தாள். அதுவும் முடியவில்லை. அவள் வாயில் அதற்குள் துணியை அடைத்தார்கள். பிறகு அவளை அலாக்காகத் தூக்கி வெளியே கொண்டு போனார்கள்.

திமிறிப் பார்த்தாள் முடியவில்லை. காலையும் கையையும் அழுத்திப் பிடித்திருந்தார்கள். "பேசாமல் இரு. கொன்னுப் புடுவேன்" என்று கூறி, மூவர் அவளைச் சுமந்து சென்றார்கள்.

பத்து நிமிடம் நடந்த அவர்கள் ஒரு கட்டடத்திற்குள் நுழைவது தெரிந்தது. அங்கே கீழே அவளைப் படுக்கப் போட்டார்கள். அவளது கைகளை மேல் புறமாகத் தூக்கிக் கட்டினார்கள். ஒரே புழுதி! ஒரே நெடி!

இதற்குள் மூன்று பேரும் முதலில் யார் என்பதற்குத் தர்க்கம் நடத்தினார்கள். கடைசியில் ஒருவன் வந்தான். சோபாவின் சோளியைக் கிழித்தான். மற்ற இருவர் அவளது கால்களைப் பிடித்துக் கொண்டார்கள். அடுத்த கணத்தில் புயல் போன்ற வெறி அவர்கள் மூவரையும் ஆட்கொண்டது. யார் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் கண்மூடித்தனமாக நடந்தார்கள்.

வெகுநாழிகைக்குப் பின் அவள் உடல் கலைந்து கிடந்தது. எல்லாப் பகுதிகளிலும் வலி விண்விண் என்று தெறித்தது. பல பகுதிகளில் பற்கள் ஏற்படுத்திய காயங்களிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. போகும் போது அவர்கள் அவளது வாய்த் துணியையும், கைத் துணியையும் அவிழ்த்து விட்டுப் போனார்கள். இருந்தும் அவளால் எழுந்திருக்க முடியவில்லை. உடம்பில் அவ்வளவு வலி!

பொழுது புலர்ந்தது. வெளிச்சத்தில் அது ஒரு பாழான வீடு என்று தெரிந்தது. இரண்டு பேர் அந்தப் பக்கம் வந்தவர்கள், யதேச்சையாக அவளைப் பார்த்தார்கள். பிறகு மற்றவர்களை அழைத்து வந்தார்கள். போலீஸ் வந்தது. அவள் ஆஸ்பத்திரிக்கு

எடுத்துச் செல்லப் பட்டாள். அங்கே ஒரு வாரம் இருந்தபிறகு, அவளை விசாரித்தார்கள். பிறகு அவள் இந்த இல்லத்திற்கு வந்து சேர்ந்தாள்.

இல்லத்திற்கு வந்து ஆறு மாதம் ஆகியது. உறவுக்காரர் பலருக்கு அவள் எழுதியும் அவர்கள் பதில் போடவில்லை. அது அவளுக்கு வருத்தத்தை அளித்தது. மானேஜரிடம் போய் முறையிட்டாள். மானேஜர் அந்த வட்டாரத்தில் உள்ள முக்கிய மானவர்கள் சிலருக்கு எழுதி உறவினர்களை நேரில் போய் விசாரிக்க ஏற்பாடு செய்தாள். எந்த உறவுக்காரரும் அவளை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கவில்லை.

சோபாவுக்கு இது பெரிய அதிர்ச்சி! இவ்வளவு குறுகிய காலத்திற்குள் வாழ்க்கை இருண்டு விட்டதே என்று எண்ணினாள். இந்த இல்லம் அவளுக்கு ஒரு சிறையாகச் தோன்றியது. இதன் கண்டிப்புகள் பிடிக்கவே இல்லை. இவர்கள் கொடுக்கும் சாப்பாடு, தரும் உடைகள் எதுவுமே பிடிக்கவில்லை. தவிர, காலையிலிருந்து மாலை வரை உழைக்கவேண்டும். ஓய்வே இல்லை.

இதனால் எப்படியும் இதைவிட்டு ஓடவேண்டும் என்று ஒரு ஆர்வம் எழுந்தது. அது நாளாகஆகப் பெரிதாகி வளர்ந்தது.

அதன் பலன்தான் அவள் தப்பி ஓட யத்தனித்த முயற்சி!

ஆனால் அகப்பட்டு விட்டாள். அதற்கான தண்டனை யையும் பெற்று விட்டாள்.

## 6. கிளி பறந்தது!

சோபாவின் முழுக் கதையும் கேட்க இருநாள் ஆகியது. என் மனத்தை அது மிகவும் பாதித்தது. என்னைவிட அவளது கஷ்டம்தான் அதிகம் என்று எண்ணினேன்.

அவளைப் போல என்னையும் என் வீட்டார் புறக்கணித்து விடுவார்களோ என்று பயந்தேன்.

இந்தப் பயம் நாளுக்குநாள் அதிகமாகியது. அடிக்கடி மானேஜரிடம் ஊரிலிருந்து எந்தத் தகவலும் வரவில்லையா என்று கேட்டு வந்தேன். இல்லை என்று அவள் கூறி வந்தாள்.

இதற்குள் இல்லம் முழுவதையும் நான் சிறிது சிறிதாக அறிந்து கொண்டேன். எந்தவிதத் தப்புக்கும் போகாமல் ஒழுங்காக இருந்து விடுவதுதான் முறை என்று நினைத்தேன். அப்போதுதான் இங்கிருந்து எளிதில் வெளியே போக முடியும் என்று எண்ணினேன்.

ஒருநாள் அக்கம்மா என்ற பெண் என்னிடம் வந்தாள். அவளைக் கண்டால் எல்லோருக்கும் பயம். வாட்டசாட்டமாக இருப்பாள். யாருக்கும் பயப்பட மாட்டாள். கெட்ட வார்த்தைகள் நிறைய உபயோகிப்பாள்.

அவள் எல்லோரையும் ஏதாவது ஒரு விதத்தில் பாதித்துக் கொண்டிருந்தாள். வெளியிலிருந்து யாராவது பெரிய மனிதர் வந்து எங்களுக்கு பிஸ்கட்களையோ அல்லது தின்பண்டங் களையோ வழங்கிப் போனால் அந்தப் பொருள்களில் ஒரு பங்கை நாங்கள் அக்கம்மாவுக்குக் கொடுக்க வேண்டும். இல்லா விட்டால் அவ்வளவுதான். எங்களுக்கு எந்த விதத்திலாவது சங்கடங்கள் உண்டாகும்.

அவள் ஒரு கொலை செய்துவிட்டு இந்த இடத்திற்கு வந்திருக்கிறாள். கொலையுண்டவர் அவளது கணவன். குளித்துக் கொண்டிருக்கும்போது அவரைப் பின்புறமாக வந்து குத்திக் கொன்றுவிட்டாள். மற்றவர்கள் அதை என்னிடம் சொன்னபோது நான் நம்பவில்லை. ஆனால் சீக்கிரத்தில் நம்ப வேண்டி வந்தது. அவளைப்போல ஆறு கொலையாளிகள் (பெண்கள்) இங்கே இருந்தார்கள். "நான் என் புருஷனையே. கொலை செஞ்சவ! உன்னையும் செஞ்சிடுவேன்!" என்று பல பெண்களை அவள் நேரில் மிரட்டுவதை நான் கேட்டிருக்கிறேன்.

இந்த அக்கம்மா ஒருநாள் என்னிடம் வந்தாள். அரை குறையாகத் தமிழ் பேசினாள், "நீ வந்ததிலிருந்து கவனிச்சிக்கிட்டு வரேன், கமலா! நீ ரொம்ப நல்ல பொண்ணு!" என்றாள். பிறகு என்னைப் பற்றி விசாரித்தாள். ஒன்று இரண்டு வார்த்தைகளில் நான் பதில் சொன்னேன். கடைசியில், "உனக்கு இங்கே கொடுக்கிற சோறு போதுமா?" என்று கேட்டாள்.

"போதுமே!" என்றேன்.

"எங்கே போறும்? பாதியாக இளைத்துவிட்டாயே!" என்றாள்.

"கவலை!" என்றேன்.

"கவலை இல்லாமல் இருக்கலாம். ஒரு வழி சொல்கிறேன். உனக்கு நல்ல உடம்பு இருக்கிறது. அழகு இருக்கிறது. இரண்டும் இருக்கும்போது சாப்பாட்டுக்குக் கஷ்டப்படவே வேண்டாம். ராஜபோகமாகச் சாப்பிடலாம், நான் சொல்வதைக் கேட்கிறாயா?" என்றாள்.

"என்ன?" என்றேன்.

"தினம் ராத்திரி என்கூட வெளியிலே வா, போய்விட்டு வரலாம்."

"இந்த ஹோமை விட்டா?"

"ஆமாம்!"

"எப்படி முடியும்?"

"அதெல்லாம் முடியும் போகலாம்?"

"எங்கே?"

"ஒரு வீட்டுக்குப் போகலாம். அங்கே குஷாலாக இருந்து விட்டு காலையில் வரலாம்!"

"குஷாலாக என்றால்...."

"பெரிய மனுஷன் வீடு. அவரோடு நீ ராத்திரி இருந்தால் அவர் உனக்குப் பணம் தருவார். இந்த ஹோமுக்குள் உனக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும்."

டக்கென்று அவள் சொல்வது புரிந்து விட்டது. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. கலக்கமடைந்தேன். இதற்கு இங்கே உள்ளவர்கள்....

"இங்கே உள்ளவர்களுக்கு அந்தப் பெரிய மனிதர் பணம் கொடுக்கிறார்."

நான் திடுக்கிட்டேன். இப்படிக்கூட இங்கே நடக்கிறதா என்று கலங்கினேன். எனக்கு இதில் விருப்பமில்லை என்று தெரிவித்தேன். அக்கம்மா வற்புறுத்தினாள். நான் பிடிவாதமாக இருந்தேன். முடிவில் அவள், "என்னம்மா, நான் சொல்கிறேன். நீ என்னவோ மாட்டேங்கறயே! நான் யாரு தெரியுமில்லே?" என்றாள் கோபத்தோடு.

"யாரா இருந்தால் என்ன?" என்றேன்.

"அவ்வளவு துணிஞ்சிட்டியா? உன்னை ஒரு கை பார்க்கிறேன்" என்று கருவிக் கொண்டே போனாள் அவள்.

சோபாவைத் தனி அறையில் போட்டிருந்தார்கள். அவள் ரணங்கள் மெதுவாக ஆறிவிட்டன. எனினும் அவளால் சரியாகப் படுக்க முடியவில்லை.

அவளுக்கு வேண்டியவைகளை நான் கவனித்து கொண்டிருந்தேன்.

ஒருநாள் இரவு ஒரு பிளேட்டில் சோறும் குழம்பும் வைத்துக் கொண்டு அவள் அறைக்குப் போனேன். சோபா கண்மூடி இருந்தாள். அவளைத் தூக்கி எடுத்து மார்பில் சாய்த்துக் கொண்டேன்.

சாப்பிடும்போது அவள் கண்களில் நீர் வந்தது. திடீரென்று விக்கினாள்.

"ஏன்?" என்றேன்.

"எனக்கு அம்மா ஒருத்தி இருந்து அவள் மடியில் படுத்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது" என்றாள்.

அவளைச் சமாதானப் படுத்தினேன். மெதுவாகச் சாப்பிட வைத்தேன். அவள் உடல் நிலையைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. மெலிந்து விட்டாள்.

சில தினங்களில் அவள் உடம்பு இன்னும் மோசமாகியது! முடிவில் நேராகப் படுக்க முடியவில்லை. அவளது முதுகின் கீழ் என் காலை வைத்து நெம்பிக் கொடுத்தால்தான் தூங்க முடிந்தது.

அப்படியும் யாரும் கவனிக்கவில்லை. அவள் நிலைமை இன்னும் மோசமாக, அவள் பிதற்ற ஆரம்பித்த பிறகே, கண்காணிப்பவர்களுக்கும் வேலைக்காரிக்கும் கவலை வந்தது. ஆரம்பத்திலேயே ஆஸ்பத்திரியில் சேர்க்காமல் போனோமே என்று கவலைப் பட்டார்கள்.

மெள்ள மானேஜரிடம் போய் விஷயத்தைக் கூறினார்கள்.

மானேஜர் ஓடிவந்து பார்த்தாள். பார்த்ததும் திடுக்கிட்டாள். இவ்வளவு மெலிந்திருப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. மற்ற பணியாளர்களைக் கடிந்து பேசினாள். பிறகு அவளே சோபாவின் அருகில் உட்கார்ந்து, "என்ன செய்கிறது அம்மா உனக்கு?" என்று அன்புடன் கேட்டாள்.

"மேடம்! என்னை எங்க வீட்டிலே கொண்டுபோய் விட்டுடுங்க! மேடம்!" என்று சோபா அழுதாள்.

மானேஜர் கலங்கினாள்.

"உனக்கு வீடு ஏதம்மா? உன்னை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டேங்கறாங்களே!" என்றாள்.

"என் அத்தையை அழைச்சிக்கிட்டு வாங்க! நான் அவளோட போயிடறேன்" என்றாள் சோபா.

"சரி, கவனிக்கிறேன்" என்றாள் மானேஜர்.

மானேஜர், டாக்டரை அழைத்து வந்து சோபாவைக் காண்பித்தாள்.

அவர் இஞ்செக்ஷன் கொடுத்து மருந்துகளையும் கொடுத்து விட்டுச் சென்றார்.

அடுத்த நாள் காலை மானேஜர் செய்த ஏற்பாட்டின்படி சோபாவின் அத்தை நேரில் அழைத்து வரப்பட்டாள். சோபா அவளது கையைப் பிடித்துக்கொண்டு, "என்னை அழைச்சிட்டு போ, அத்தை! உங்க வீட்டிலே நான் வேலைக்காரியா இருக்கிறேன். இங்கு இருக்க எனக்குப் பிடிக்கவேயில்லை" என்று அழுதாள்.

அத்தைக்கும் கண்ணீர் வந்தது.

"ஆகட்டும், ஆகட்டும்" என்று தலை அசைத்தாள். ஆனால் அவளை மானேஜர் தனியாக அழைத்துக் கேட்ட போது, "நான் எப்படியம்மா அழைத்துப் போவேன்? என் மகன் சம்மதிக்க மாட்டான். ஒரு கெட்டுப் போன பெண்ணை வைத்துக்கொள்ள ஊர் சம்மதிக்காது" என்றாள். பிறகு சோபாவிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் அத்தை போய் விட்டாள்.

அன்று மத்தியானம் சோபா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டாள். "குணமானதும் அத்தை அழைச்சுட்டுப் போறேன்னு சொல்லிட்டாங்க!" என்று மானேஜர் அவளிடம் ஒரு பொய்யைக் கூறினாள். சோபாவும் அதை நம்பி ஒரு தைரியத்துடன் போனாள்.

ஒரு மாதம் ஆகியது. அவள் தேறி வருகிறாள் என்று செய்தி வந்தது. அவளைப் பார்க்காமல் எனக்குப் பொழுது போகவில்லை. எப்போது வருவாள் என்று காத்திருந்தேன்.

ஒருநாள் திடுதிப்பென்று அவளை அழைத்து வந்தார்கள். அவள் உடலில் எந்த வியாதியும் இல்லை என்றும், மனத்தில் தான் வியாதி என்றும் கூறினார்கள்.

அவள் உடம்பு தேறி இருந்தது. ஆனால் முகம் எல்லாம் வெளிறியிருந்தது.

"தேறி இருக்கிறேன் என்கிறார்கள். ஆனால் என் உடம்புக்குள் இன்னும் என்னவோ நடக்கிறது" என்றாள்.

இன்னொரு நேரத்தில், "இந்தத் தடவை அத்தை வந்தால் எப்படியும் அவளோடு ஓடி விடுவேன்!" என்றாள். அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

வந்த மூன்றாவது நாள் ராத்திரி திடீரென்று அவள் பலமாக இறுமினாள். தூக்கி என் மார்பில் படுக்க வைத்தபோது 'ஹாம்' என்ற இரைச்சலோடு மூச்சுத் திணறினாள். கையையும் காலையும் பலமாக உதறினாள். நிலைமை எல்லை மீறுவது போல் இருந்தது. "தண்ணீர்" என்று அவள் அலறியதும், எழுந்து வென்னீருக்காக ஓடினேன்.

சமையலறைக்குள் யாரும் போக முடியாது. போகும் வழியை அடைத்திருப்பார்கள். ஆகவே கதவைத் தட்டினேன். சமையல்காரி எழுந்திருக்கவில்லை. பலமாகத் தட்டினேன்.

விளக்கைப் போட்டுக் கொண்டு பருமன் கதவைத் திறந்தாள். அவளைத் தொடர்ந்து வேலைக்காரியும் வந்தாள். ''என்ன வேண்டும்?'' என்று எரிச்சலோடு கேட்டார்கள். விவரத்தைச் சொல்லித் தண்ணீர் வேண்டும் என்றேன்.

"உங்களுக்கெல்லாம் வேலை கிடையாது. நீ போ! தண்ணி நாங்க கொடுத்துக்கிறோம்!" என்று சொல்லி உள்ளே வந்தார்கள். வேலைக்காரி வெறுப்போடு சோபாவைத் தூக்கினாள். "சீ, கம்னு இரு!" என்று கூறியவாறு, அவளை 'ஸிக் ரூமுக்குள்' கொண்டு போனாள்.

மறுநாள் காலையில் பிரார்த்தனைக் கூடத்திற்கு சோபா வரவில்லை. அவள் உடம்பு எப்படி இருக்குமோ என்று கவலைப் பட்டேன்.

பிரார்த்தனை என்றால் ஒரு மணி நேரத்திற்கு நாங்கள் பாடவேண்டும். வாய் வலிக்கும். சுரத்து இல்லாமல் பாடுவோம். சமயங்களில் எங்களைக் கண்காணித்துவந்தவளுக்கு வேலை ஏதாவது இருந்தால் மேலும் அரை மணி நேரம் பாட வைத்து விடுவாள். பிரார்த்தனை அறையில் எங்களை அடைத்து வைத்திருப்பது, அவளைப் பொறுத்த வரையில் ஒரு நிச்சயமான கண்காணிப்பாக இருந்தது.

அன்று அரை மணி நேரம் பாடி இருப்போம். அவள் இடையில் வந்து தனது பருத்த கைகளைத் தூக்கினாள். நிறுத்தினோம்.

"பெண்களே! இன்று காலை சோபா இறந்து விட்டாள். அவள் ஆத்மா சாந்தி அடைய உருக்கத்தோடு பாடுங்கள்!" என்றாள்.

உஸ்ஸென்று அமைதி சூழ்ந்தது. யாரோ விம்மும் சப்தம் கேட்டது. நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். அப்படியே கல்லாக உட்கார்ந்தோம்.

பிரார்த்தனை துவக்கப்பட்டது. பாடுவதற்கு ஓடவில்லை கண்களில் நீர் வந்தது.

பிரார்த்தனை முடிந்த பிறகு வழக்கமான பால் கொடுத் தார்கள். நான் பருகவில்லை. தூரத்தில் கொட்டினேன். பரபர வென்று 'ஸிக் ரூமை' நோக்கி ஓடினேன்.

'போகாதே' என்று பலர் கத்தினார்கள். பொருட்படுத்த வில்லை. தடுப்பவரைத் தாண்டிக் கொண்டு ஓடினேன்.

"நில்லு!" என்று ஒரு இரைச்சல்! ஸிக் ரூமுக்கு இருபதடி தூரத்தில் நின்றேன். என் முன்னால் கோபமான பார்வையோடு கண்காணிப்பவள் நின்றாள்.

அரைக்கணத்தில் என் பார்வை வராந்தாவை நோக்கிச் சென்றது. வராந்தாவின் கல்தளத்தில் ஆர்ச்சுக்குக் கீழே வெள்ளைத் துணி போர்த்தி ஒரு உடலை வைத்திருந்தார்கள். அது சோபாவின் உடல்தான்.

கத்துவதற்கு வாய் வந்தது. கண்காணிப்பவள் என்ற பெயரிலிருந்த காளிக்குப் பயந்து நிறுத்தினேன். வராந்தாவுக்குக் கீழே ஒரு கூலி ஆளும், அவனது கை வண்டியும் நின்றது. கூலி ஆள் மேலும் கீழுமாக உடம்பைப் பார்த்து விட்டு, "சரிம்மா!" என்றான். வேலைக்காரியும் அவனுமாகத் தூக்கி வண்டியில் வைத்தார்கள். சோபாவின் வலது கைதான் வெளியே தெரிந்தது. முகம் தெரியவில்லை.

கூலிக்காரன் உடலை வண்டியோடு கட்டினான். அதைப் பார்க்கும்போது மூச்சு நின்றது.

வண்டி புறப்பட்டது. நேரான தோட்டப் பாதையில் சென்றது. கேட்டுக்கு வெளியே போய் திருப்பத்தில் மறைந்து விட்டது.

"போ!" என்று பருமன் அதட்டிய பிறகுதான் நடந்தேன். மனசுக்குள், "அம்மா வேலைக்காரி! உன்னிடமிருந்துதான் விடுதலை பெற வேண்டும் என்று நினைத்தாள். விடுதலை கிடைத்துவிட்டது" என்று நினைத்தேன்.

சோபாவின் உடலை ஆஸ்பத்திரிக் கிடங்கில் வைத் திருந்து விட்டு, உறவினர்கள் யாரும் கேட்கவில்லை என்றால் புதைத்து விடுவார்கள் என்று சொன்னார்கள்.

அன்று எதுவும் சாப்பிடவில்லை. சோபாவின் கடைசி வேண்டுகோளை (தண்ணீர் கேட்டது) நிறைவேற்றவில்லையே என்று அழுதேன். இரவில் போலீசார் ஒரு விபசார விடுதியைச் சோதனையிட்டு, எட்டு விபசாரிகளைப் பிடித்துக்கொண்டு வந்து அங்கே வைத்திருந்தார்கள். அந்தப் பெண்கள் ரௌடி களைப் போல் கெட்ட வார்த்தையில் திட்டிக்கொண்டு ராத்திரி யெல்லாம் குடித்தவர்களைப்போல் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பயங்கர இரவு, அவர்களது கூச்சல், மரணத்தைப் பற்றிய பீதி, எனது அனாதை நிலை, எல்லாமாகச் சேர்ந்து என்னை வெகுவாக ஆட்டி வைத்தன. நான் உறங்கினேன்.

## 7. காதல் என்று செய்த தியாகங்கள்

**ப**ல வாரங்கள் வரை சோபாவின் மரணம் என்னை வாட்டியது. அந்த ஹோம் நரகமாகத் தோன்றியது. இதை விட்டு எப்படியும் வெளியேற வேண்டும் என்று நினைத்தேன். மானேஜரிடம் அடிக்கடி போய் சென்னையிலிருந்து ஏதாவது செய்தி வந்ததா என்று கேட்டேன். ஒவ்வொரு தடவையும் அவள், "இல்லை" என்று சொல்லும் போது மனம் ஒடிந்தேன்.

சுவையில்லாமல் ஓடிய நாட்களில் எனக்குச் சில நன்மை களும் ஏற்பட்டன. கன்னடம் பேசுவதற்கு வந்து விட்டது. தையல் வேலையும் நன்றாகக் கற்றுக்கொண்டேன். நூற்றுக்கணக்கில் ஊதுவத்தி செய்வதில் தேர்ச்சி பெற்றேன்.

மொழி தெரிந்து விட்டதால் அந்த இல்லத்தில் உள்ள பல தரப்பட்ட பெண்களுடன் சரளமாகப் பழகினேன். அவர் களது விருப்பு வெறுப்புகளைத் தெரிந்து கொண்டேன். இல்லத்தில் வந்திருந்த பெண்களில் நிறையப் பேர் கீழ்த் தரக் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். அவர்களிடம் நாம் சாதாரண மாக எதிர்பார்க்கும் குணங்களைக்கூட எதிர்பார்க்க முடியாது.

இதனால் இல்லத்தை நடத்துகிறவர்களுக்குச் சங்கடங்கள் அதிகமாக இருந்தன. அதிக உற்சாகம் அவர்களிடம் இல்லை.

உயர்தரக் குடும்பங்களிலிருந்தும் பலர் அங்கே வந்திருந் தார்கள். குறிப்பாக, துர்க்காவதி என்ற பெண்ணைச் சொல்ல வேண்டும். அவளது குடும்பத்தார் பெரிய பணக்காரர்கள். பங்களாவும் பல கார்களும் அவர்களிடம் இருந்தன.

துர்க்காவதி செல்லமாக வளர்ந்தவள். படிப்பில் கவனம் இல்லை சினிமாவில் அதிக நாட்டம் இருந்தது. அடிக்கடி சிநேகிதியின் வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு இரவு எட்டு ஒன்பதுக்குத்தான் வீடு திரும்புவாள்.

ஒருநாள் அந்தப் பெண் வழக்கமாக உபயோகிக்கும் கார் ஒரு ஒதுக்குப்புறமான சாலையில் நிற்பதை அவளது தந்தை பார்க்க நேர்ந்தது. இறங்கிப் பார்த்தபோது கார் டிரைவருடன் துர்க்காவதி தவறான உறவு முறையில் இருந்தது தெரிந்தது. வீட்டுக்கு அழைத்துப்போய் அவளைக் கண்டித்தார். பிறகு அவளைப்பற்றி விசாரிக்க மேலும் பல திடுக்கிடும் செய்திகள் தெரிய வந்தன. பல பேருடன் தொடர்பு வைத்துக் கொண் டிருந்தாள். சிநேகிதிகளின் சகோதரர் பலருடனும், சில இடங்களில் அவர்களது தந்தைகளுடனும் கூட அவள் உறவு வைத்திருந்தாள்.

அதிர்ச்சியான இந்தச் செய்திகள் தெரிய வந்ததும் துர்க்காவை வீட்டுக்குள் அடைத்துப் போட்டார். பலரைக் கொண்டு அவளுக்குப் புத்திமதி சொல்லச் சொன்னார்.

துர்க்கா திருந்துகிறவள்போல் காணப்பட்டாள். இதனால் அவள்மீது இருந்த கண்காணிப்பைச் சிறிது தளர்த்தினார்கள். ஆனால் அதை பயன் படுத்திக்கொண்டு மீண்டும் அவள் அதே பழைய செய்கையில் இறங்கினாள்.

துர்க்காவதியின் தந்தை அவளை மனோதத்துவ நிபுணரிடம் காட்டினார். அது ஒரு மன வியாதி என்று கண்டு பிடிக்கப் பட்டது. வேறு வழி தெரியாமல் அவர் இந்த இல்லத்தில் அவளைச் சேர்த்துவிட்டார்.

பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்ததால் துர்க்காவதிக்குப் பல சலுகைகள் கிடைத்தன. சாப்பிடுவதற்குத் தின்பண்டங்கள் வெளியிலிருந்து வந்தன. வேலைக்காரி முதல் எல்லோரும் அவளிடம் அன்பாகப் பழகினார்கள்.

அவளைப் பார்த்தால், இவளா இவ்வளவு வேலை செய்வாள் என்று தோன்றும். அவ்வளவு அழகாகப் பேசுவாள்; பழகுவாள்.

அக்கம்மாவின் பார்வை இந்தப் பெண்மீது விழுந்தது. துர்க்காவதியும் அதைத்தான் விரும்பினாள். அதனால், இரவுகளில் அவள் வெளியே போக ஆரம்பித்தாள்.

இந்த விஷயம் பல மாதங்கள் வரை வெளியே தெரிய வில்லை. பிறகு திடீரென்று ஒருநாள் தெரியவந்தது.

வயதுக்கு வந்த பெண்கள் யாவருக்கும் இல்லத்தில் பீரியட்ஸ் ரிஜிஸ்டர் ஒன்று வைத்திருப்பார்கள். அதில் ஒவ்வொரு பெண்ணின் மாதவிலக்குத் தேதிகளைக் குறித்து வைப்பார்கள். இந்த ரிஜிஸ்டரை மானேஜர் சமயங்களில் பார்வை இடுவாள்.

ஒருமுறை பார்வை இடும்போது துர்க்காவதிக்கு இரண்டு மாதங்களாகத் தேதிக் குறிப்புகள் சரியில்லை என்று தெரிந்தது. உடன் விசாரணைகள் ஆரம்பமாயின.

சரியில்லாமல் 'ஸிக் ரூமில்' துர்க்காவதி படுத்திருந்தாள் என்றும், அப்போது அவளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது என்றும் தெரிந்தது.

மானேஜர் எங்களை அழைத்து விசாரித்தாள். சிலரை மிரட்டினாள்; சிலரைத் தட்டிக்கொடுத்துக் கேட்டாள்.

என் முறை வந்தபோது தயங்கினேன். மானேஜர் அன்பாக விசாரித்தாள். அவள்மீது எனக்கு ஒரு மரியாதை உண்டு. அதனால் தைரியமாக அக்கம்மாவைப் பற்றியும், அவள் என்னை அழைத்துப் பேசியதைப் பற்றியும் கூறினேன். மானேஜர் அதிர்ச்சி அடைந்தாள். உடனே அக்கம்மாவை அழைத்து மிரட்டத் தொடங்கினாள்.

அதைத் தொடர்ந்து ஒரு வாரம் ஒரே பரபரப்பு இருந்தது. அதன் பிறகு என்ன நடந்தது என்று தெரியாது.

ஒரு மாதத்திற்குப்பின் வேலைக்காரியும் வாட்ச்மேனும் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். (கண்காணிப்பவள் மீது குற்றம் இல்லை என்று தெரிய வந்தது.) இரவுகளில் காவல் அதிகமாக்கப்பட்டது. பன்னிரண்டு மணிக்கு டார்ச் அடித்து எங்களை எண்ணினார்கள்.

இதில் அக்கம்மாவுக்கு எந்தவிதத் தண்டனையும் கிடைக்காதது ஆச்சரியமாக இருந்தது. பயமாகவும் இருந்தது.

நாட்கள் சென்றன. எனது குடும்பத்திலிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை. இதனால் குடும்பத்தின்மீது ஒருவெறுப்பு! போகப் போக, 'இவ்வளவுதான் நம் வாழ்வு' என்ற நிலைமைக்கு வந்துவிட்டேன். இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் இங்கேதான் இருக்கவேண்டும் என்ற நினைவு என்னை அடிக்கடி துன்புறுத்தியது.

சோபாவுக்குப் பிறகு தர்சனா என்று பெண்ணுடன் பரிச்சயம் ஏற்பட்டது. அவள் ஒரு கன்னடப் பெண்.... பதினாறு வயது இருக்கும். யாரிடமும் பேசமாட்டாள்... ஒதுங்கி இருப்பாள். நல்ல அழகு.

மற்றப் பெண்கள் அவளிடம் அதிகம் நெருக்க மாட்டார்கள். நான் அப்படிச் செய்தில்லை. அவளைக் கனிவோடு பார்த்தேன், பேசினேன். அவளுக்குத் தமிழ் தெரியாது. கன்னடத்தில் பேசுவாள். பேச்சும் அழகாக இருக்கும்.

பழகிய பிறகு அவளது கதையைக் கேட்டேன். பல நாட்கள் தயக்கத்திற்குப் பிறகு கூறினாள்.

தர்சனா மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். தாய், தந்தை இருவரும் வேலை பார்த்தார்கள். வீட்டில் கண்டிப்பான விதிகள் உண்டு. பெற்றோரும் அதற்கு உட்பட்டு நடப்பார்கள்.

எஸ்.எஸ்எல்.ஸி. வரை தர்சனாவுக்கு வெளி உலகம் தெரியாது... வெளி ஆட்களிடம் அதிகம் பழகியது கிடையாது. எதிலும் விருப்பமும் கிடையாது. சினிமாவுக்குச் சில தடவை போயிருக்கிறாள். அதுவும் பக்திப் படங்களுக்குத்தான்.

தர்சனா வயதுக்கு வந்த நாள் ஒரு அதிர்ச்சியான நாள். அவளுடைய தாய் அதைப்பற்றி அவளிடம் சொன்னது இல்லை. சொல்வது அசிங்கம் என்று நினைத்திருந்தாள். தர்சனாவின் சிநேகிதிகளும் சொல்லவில்லை. இதனால் இயற்கையில் ஏற்படும் ஒரு உடல் மாறுதல் அவளுக்குப் பெரிய அதிர்ச்சியைத் தந்தது.

அது மட்டுமல்ல; விஷயத்தை அவள் பதறிக்கொண்டு அம்மாவிடம் சொன்னபோது, அம்மா வெறுப்போடு அவளைப் பார்த்தாள். "போ! போய், அப்படி தூர உட்கார்" என்றாள் அருவையுடன். இரவில் அப்பா அதைக் கேட்டபிறகு, வெகு

நேரம் யோசனையில் இருந்தார். பிறகு எழுந்து அவளை வெறுப்போடு பார்த்து விட்டுப் போனார்.

இரவு அவளைத் தனித்து வைத்திருந்தார்கள். தனித்துச் சாப்பாடு போட்டார்கள். பிறகு அம்மாவும், அப்பாவும் வெகு நேரம் அவளைப்பற்றி சந்தேகமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவை யாவும் தர்சனாவுக்கு அதிர்ச்சியைத் தந்தன. தனது பெற்றோர்களுக்குப் பிடிக்காத ஏதோ ஒன்று தன்னிடம் எற்பட்டு விட்டதாக நினைத்தாள். ஒரு குற்றம் செய்த பெண்ணைப்போல் அது மனத்தை உறுத்தியது. தான் பருவம் அடைந்தது தவறு என்று நினைத்தாள்.

இந்தச் சமயத்தில் அவள் எஸ்.எஸ்.எல்.ஸி. முடித்து விட்டாள். டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போக ஆரம்பித்தாள். அங்கே ராதிகா என்ற புது சிநேகிதி கிடைத்தாள். அவளிடம் முதன்முதலில் பருவ மாறுதல்களுக்கு விளக்கம் கேட்க முடிந்தது. ராதிகா சிரித்துக் கொண்டே சொன்ன விவரங்கள் தர்சனாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தன. இயற்கையில் மிகச்சாதாரணமாக நிகழக்கூடியதைப் பற்றி இதுவரை அறிந்ததில்லையே என்று ஆச்சரியப்பட்டாள். அது தவிர, அந்தப் புதிய விளக்கங்களிலும் அவளுக்கு ஒரு ருசி விழுந்தது. ஒரு புதுமையான மாறுதல்களுக்குத் தன் உடல் இப்போது தயாராகிவிட்டது என்று நினைத்தாள்.

அதுவரை அவள் கடைப்பிடித்து வந்த கட்டுப்பாட்டின் காரணமாகச் சில வித நினைவுகள் அவள் மனத்தில் தோன்றவே இல்லை. இப்போது அவை ஒரு வேகத்துடன் அவள் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டன.

இன்ஸ்ட்யூட்டின் ஷார்ட்ஹாண்ட் இன்ஸ்ட்ரக்டரான விக்ரம் முப்பத்தைந்து வயது இளைஞர். பார்ப்பதற்கு நன்றாக இருப்பார். தமாஷாகப் பேசுவார். இளம் பெண்களைப் பேச்சி லேயே கவர்ந்து விடுவார். அப்படிக் கவர்ச்சி அடைந்த பெண் களுடன் பிக்னிக் போவார். சமயங்களில் சினிமாவுக்குப் போவார்.

வெளி உலகில் தர்சனா பழகும் முதல் ஆண் அவர். அவரது நெருக்கத்தில் தர்சனா தன் மனத்தின் புது விழைவுகளுக் கான இதத்தைக் கண்டாள். அவரது பேச்சு அவளை வசீகரித்தது. அவரது சிரிப்பு, பார்வை எல்லாம் அவள் மனத்தைக் கவர்ந்தன.

ஒருமுறை நான்கு பெண்களை விக்ரம் பிக்னிக்குக்கு அழைத்திருந்தார். ஆனால் பஸ் நிலையத்திற்கு தர்சனா வந்த போது, அவள் ஒருத்தி மட்டும் வந்திருப்பது தெரிந்தது. "மற்ற மூவரும் வரவில்லை" என்றார் விக்ரம். இருவரும் பஸ் ஏறி ஒரு புராதனக் கோவில் இருக்கும் ஊருக்குப் போனார்கள். கோயிலில் பூஜை கிடையாது. ஒன்று இரண்டு டூரிஸ்ட்டுகளைத் தவிர ஆள் கிடையாது. அதன் பிரகாரங்களில் போகும்போதும், இருட்டு மயமான உட்பகுதிகளில் போகும்போதும் விக்ரம் அவளிடம் தொட்டுத் தொட்டுப் பழகினார். ஒரு தூண் மறைவில் அவளுக்கு முதல் முத்தம் கொடுத்தார். பிறகு மாலை பஸ் வரும்வரை இரண்டு மணி நேரம் தங்குவதற்காக ஓட்டலில் அறை எடுத்தார். உள்ளே சென்று அவளைக் கட்டிலில் உட்கார்த்திக் கைகளைப் பிடித்துக்கொண்டு, "இன்று நடப்பதை எவருக்கும் சொல்ல மாட்டேன் என்று சொல்லு" என்று சத்தியம் வாங்கினார். பிறகு, ''உன்மீது எனக்குக் காதல்!'' என்று சொல்லி அவளை அணைத்துக்கொண்டு கட்டிலில் ஆழ்ந்தார்.

ஓட்டலை விட்டு வெளிவந்தபோது தர்சனாவுக்கு எல்லாம் இனிமையாக இருந்தது. மனத்தில் அதுபோன்ற ஒரு இனிமையை அனுபவித்ததே இல்லை என்று எண்ணினாள். அவள் வாழ்க்கைக்கு விக்ரம் இன்றியமையாதவராகத் தோன்றினார். அவளுக்காக விக்ரமும், விக்ரமுக்காக அவளும் பிறந்திருப்பதாக நினைத்தாள்.

விக்ரம் ஏற்கெனவே மணமாகி நான்கு குழந்தைகள் உள்ளவர். அதை அறிந்தும் அவள் கவலைப்படவில்லை. வாழ்க்கையில் இனி அவர்தான் கணவர் என்று எண்ணினாள்.

அவளை நன்கு புரிந்து கொண்ட விக்ரம், சொற்ப சம்பளத்தில் அவர் படும் கஷ்டங்களை எல்லாம் கூறுவார். அதைக் கேட்கும்போது தர்சனா கண்ணீர் விடுவாள். என்னால் இயன்ற உதவியைச் செய்வேன் என்பாள்.

தர்சனாவின் ரகசிய வளர்ச்சி வீட்டில் யாருக்கும் தெரியாது. தாய்தந்தை இருவரும் வேலைக்குப் போய் விடுவதால் பகல் நேரத்தில் தர்சனா என்ன செய்கிறாள் என்பது தெரியாது. அவள் ஒழுங்காக இருந்து வருகிறாள். என்று நினைத்தார்கள்.

ஆனால் வீட்டில் பணம் அடிக்கடி காணாமல் போக ஆரம்பித்த பிறகுதான் விழிக்க ஆரம்பித்தார்கள். முதலில் வேலைக்காரிமீது சந்தேகப்பட்டார்கள். பிறகு கல்லூரியில்

படிக்கும் பிள்ளைமீது சந்தேகப்பட்டார்கள். கடைசியில் யாரையும் சந்தேகிக்க முடியாமல் பணத்தை லாக்கரில் பூட்டி வைத்தார்கள்.

பணத்தைத் திருடி வந்தது தர்சனாதான். விக்ரமுக்குப் பணம் கொடுத்து உதவுவதற்காகத் திருடி வந்தாள். காதலுக்காக எந்தத் தியாகமும் செய்யலாம் என்று நினைத்தாள். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு பெற்றோர் பணத்தை லாக்கரில் பூட்டி விட்டதால், அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. யோசித்ததால் வழி தோன்றியது. கையில் இருக்கும் மோதிரத்தை அடகு வைப்பது என்று தீர்மானித்தாள். மார்வாடிக் கடையில் வைத்து விக்ரமுக்குப் பணம் கொடுத்தாள்.

மோதிரம் இல்லாதது வீட்டுக்குத் தெரிய வந்தது. அப்பா விசாரித்தார். தர்சனா உண்மையைக் கூறவில்லை. ஆனால் மார்வாடிக் கடை அருகில் அவளை யாரோ பார்த்ததாகத் தெரிவிக்கவே அப்பா போய் கடையில் விசாரித்து வந்தார். தர்சனா பணம் வாங்கினாள் என்பது தெரியவந்தது. அவளை மிரட்டிக் கேட்டதில் ஒத்துக்கொண்டாள். இன்ஸ்டிட்யூட் பெண்களுடன் பிக்னிக் போனதில் செலவழிந்துவிட்டது என்று சொன்னாள்.

தர்சனாவைக் கண்டித்துப் புத்தி கூறினார்கள். ஆனால் சீக்கிரமே அவளது வளையல் காணாமல் போய் விட்டது. மீண்டும் அதே நிகழ்ச்சிகள் நடந்தன. அதற்கு அடுத்தாற்போல வெள்ளி டம்ளர், தங்கத் தோடு, ஒவ்வொன்றாகக் காணாமல் போயிற்று. ஒவ்வொரு தடவையும் பழைய நாடகமே நடந்தது. சாமான்களை அடகு வைத்து அதில் கிடைக்கும் பணத்தில் பாதியை பிக்னிக், சினிமா இவைகளுக்குச் செலவழித்து (அப்படிச் செய்தது விக்ரமைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான்), மீதியை விக்ரமின் செலவுகளுக்குக் கொடுத்து வந்தாள்.

தந்தை அவளை அடித்து விசாரித்தபோது, “பிக்னிக்குக்குச் செலவழித்தேன்” என்று சொன்னாளே தவிர, விக்ரமுக்குப் பணம் கொடுத்து உதவியதைக் கூறவில்லை.

கடைசியில் பெற்றோர் தர்சனாவின் இன்ஸ்டிட்யூட் படிப்பை நிறுத்தினார்கள். வீட்டிலேயே இருக்க வைத்தார்கள். எனினும் தர்சனா மீண்டும் இருமுறை வீட்டுப் பொருள்களைக் களவாட நேர்ந்தது. அவளை எப்படி மிரட்டியும் பயன் ஏற்படவில்லை.

அவள் தந்தை ஒரு முடிவுக்கு வந்தார். அவளை இந்த இல்லத்தில் தள்ளிவிடுவது என்று நினைத்தார். விண்ணப்பம் செய்தார். தர்சனாவின் குற்றங்களை நிரூபித்தார். இல்லத்திற்குள் அவளைத் தள்ளிவிட்டு அவளுக்கான மாதாந்தரச் செலவுத் தொகைகளை ஒழுங்காகக் கட்டி வருகிறார்.

தர்சனாவிடமிருந்து கதை எல்லாம் கேட்டு முடித்தபிறகு இப்படியும் ஒரு பெண் இருக்கிறாளா என்று நினைத்தேன்.

அவள் என்னை எச்சரித்தாள். "கமலா! இதை யாரிடமும் சொல்லாதே! இதுவரை எத்தனையோ விசாரணைகள் நடந்து விட்டன! யாரிடமும் என் காதலைப் பற்றி நான் சொல்ல வில்லை. இவ்வளவு பழகியதால் உன்னிடம் சொன்னேன். சொல்வதற்கு முன் அவரிடம் அனுமதி கேட்டேன்."

"அவரா?" என்று கேட்டேன்.

"ஆமாம்! அவரிடம் மானசீகமாகப் பேசினேன். உன்னிடம் மட்டும் சொல்லி விடுகிறேன் என்று கேட்டுக்கொண்டேன். அனுமதி தந்தார்."

எனக்குச் சிரிப்பாக வந்தது. அதை வெளிக்காட்டவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு அவளிடம் மெதுவாக அவள் நம்பிக்கையைப் பற்றிப் பேசினேன். அவளைத் தவிர மற்றும் பல பெண்களிடம் விக்ரம் உடல் உறவு வைத்திருக்க வேண்டும் என்றும், அவளை ஏமாற்றிப் பணம் பறித்து விட்டார் என்றும் கூறினேன். அவள் சீறினாள். "என் விக்ரம் அப்படிப்பட்டவரல்ல! ஒருத்தி மீதுதான் அவருக்குக் காதல்! எனக்காக இப்போது ஏங்கிக் கொண்டிருப்பார். நான் தினந்தோறும் ஒவ்வொரு நிமிடமும் அவரது சுகத்திற்காக பிரார்த்தனை செய்கிறேன். நாங்கள் இந்த ஜன்மத்தில் இல்லாவிட்டால் அடுத்த ஜன்மத்தி லாவது சந்திப்போம்" என்றாள் அவள்.

அவளிடம் வாதாடிப் பிரயோசனம் இல்லை என்று தீர்மானித்தேன். இல்லத்திற்கு அடிக்கடி மனோதத்துவ நிபுணர் (பெண்மணி) வருவார். புதிதாக வரும் ஒவ்வொரு பெண் ணிடமும் பேசி ரிப்போர்ட் எடுப்பாள். ஆனால் அந்த அம்மாள் தர்சனாவை எத்தனை தடவை சந்தித்தாலும் சலிப்படைவ தில்லை. மணிக் கணக்கில் அவளுடன் பேசுவாள். விக்ரமின் பெயரைக் குறிப்பிடாமல் அவளது காதலை மட்டும் அந்த நிபுணரிடம் தர்சனா சொல்லி விட்டாள். காதலர் யார் என்று

மட்டும் வெளிப்படுத்தவில்லை என்றும், அதற்கான அனுமதியை விக்ரம் கொடுக்கவில்லை என்றும் என்னிடம் கூறினாள்.

# 8. புதிய இல்லம்

அக்கம்மாவுடன் சண்டை போட்டுக் கொண்டேன் என்று சொன்னேன் அல்லவா? அந்த விரோதம் சீக்கிரத்திலேயே வெடித்தது. அதன் பின்னணியைக் கூறுகிறேன்.

இல்லத்திலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் எங்களை வெளியே அழைத்துப் போவார்கள். இல்லத்திற்கு விஜயம் செய்த ஒரு வெள்ளைக்காரி சொன்னதன் பேரில்தான் இப்படி வெளியே கொண்டு போனார்கள்.

சில வாரங்களில் கோவிலுக்குப் போவோம். சில வாரங் களில் பார்க்குக்குப் போவோம்.

அணிவகுத்து நடந்து போகும்போது நாங்கள் யாரையும் ஏறிட்டுப் பார்க்கக் கூடாது. எந்தப் பக்கமும் திரும்பக் கூடாது.

எல்லோரும் இந்த விதிகளுக்குக் கீழ்ப்படிவோம். ஆனால் இதில் விதிவிலக்குகளும் உண்டு! அவர்களில் சரசுவதி ஒருத்தி! இவளுக்குக் கன்னடமும் தமிழும் தெரியும். தாய் தந்தையர் இறந்து விட்டதால் பதினைந்தாவது வயதில் இல்லத்தில் கொண்டு விடப்பட்டவள். படிப்பு அறவே கிடையாது.

இவளுக்கும் ராமய்யா என்ற வாலிபனுக்கும் சிநேகிதம் ஏற்பட்டது. எப்படி ஏற்பட்டது என்று தெரியாது. அதற்கு ஒரேஒரு வழிதான் உண்டு. சனிக்கிழமைகளில் நாங்கள் வெளியே போவோம் என்பது ரௌடிப் பையன்களுக்குத் தெரியும். எங்கள் காம்பவுண்டுக்கு வெளியே பழியாகக் காத்துக் கிடப்பார்கள். நாங்கள் போகும்போது முறைத்துப் பார்ப்பார்கள். எங்களில் எடுப்பாகத் தெரிகிறவர்களைப் பார்த்துக் கிண்டல் செய்வார்கள். காது கேட்கும்படி மோசமான வார்த்தைகளைப் பேசுவார்கள்.

இதைத் தவிர, பள்ளி மாணவர்களும் இந்தக் கிண்டலில் இறங்குவார்கள். எங்களை எங்கேயாவது பார்த்து விட்டால் போதும்; ஒரே கூச்சல்! கலாட்டா! “வாடி மீனா! வாடி சாந்தா!” என்று கண்டபடி கூப்பிடுவார்கள். நாங்கள் யாவரும் மாஜி விபசாரிகள் என்று அவர்கள் நினைத்தார்கள். இதனால் அவர்கள் கூப்பாடுகளில் ஒரே வெறி!

இந்த விஷயங்களில் எங்களில் சிலரைப் பற்றியும் கூற வேண்டும். வெளியே புறப்படுவதென்றால் இந்தச் சிலர் வெகு நேரம் டிரஸ் செய்வார்கள். இல்லத்தில் நாங்கள் செய்யும் உழைப்புகளுக்குச் சிறிது பாக்கெட் மணி கிடைப்பதால் அதைக் கொண்டு பவுடர், ஸ்னோ, கண் மை முதலியவை வாங்கி விடுவார்கள். (வாட்ச்மேன் மூலமாக. அவனுக்குக் கமிஷன்!) இவைகளை வைத்துக் கொண்டு வெகு நேரம் அழகு செய்து கொள்வார்கள்.

வெளியே நடக்கும்போது இந்தச் சிலரின் பார்வை இளம் ஆண்களின்மீது விழும். ஆண்களிடமிருந்து ஒரு தயக்கமான அல்லது விருப்பமான பார்வையைப் பெறுவதில் இவர்களுக்குத் திருப்தி. வெளியே போய் வந்த பிறகு இவர்கள் குறிப்பிட்ட இளம் கடைக்காரரோ அதில் இருந்த சேல்ஸ் மேனோ, குறிப்பிட்ட வாசலில் நின்ற வாலிபனோ தங்களைப் பார்த்தார்கள் என்று பெருமையுடன் பேசிக் கொள்வார்கள்.

இன்னும் சிலர் (இரவு விடுதிகளிலிருந்து பிடிக்கப்பட்டு உள்ளே வந்திருப்பவர்கள்) எந்தவித நியாயமான ஒழுங்கு முறைக்கும் உட்பட மாட்டார்கள். தெருவில் போகும் போது மேல் துணியை விலக்கி மார்பு தெரியும்படி போவார்கள். சிலர் தங்கள் ஸாரிகளை இறக்கிக் கட்டி உள் பாவாடையைக் கவர்ச்சியாகக் காட்டுவார்கள். சிலர் உடம்பை அசைத்து, ஸெக்ஸியாக நடப்பார்கள். கண்காணிப்பவளோ, வேலைக் காரியோ, டீச்சர்களோ, எல்லோரையும் எப்போதும் கவனித்துக் கொண்டிருக்க முடியாது.

ஆனால் இப்படிச் செய்பவர்கள் மிகச் சிலர்தான் என்று கூறி விடுகிறேன். ஆனால் அவர்களால் தான் குழப்பமே ஏற்படுகிறது.

சரசுவதியின் கதைக்கு வருகிறேன். வெளியே போகும் போது கண்காணிப்பவள் அவளைச் சிறிய ஏவல் வேலைகளுக்கு அனுப்புவாள். வேர்க்கடலை, அல்லது பட்டாணிக் கடலை வாங்கி வர அவளைத்தான் தேர்ந்தெடுப்பாள். ஏனெனில், ஆரம்பத்தில் சரசுவதி மிக ஒழுங்காக நடந்து கொண்டவள்.

சரசுவதி எப்படி ஒரு குறிப்பிட்ட பையனைத் தேர்ந்தெடுத் தாள். அவனை எப்படித் தொடர்ச்சியாகப் பார்த்து வந்து சிநேகிதம் ஆனாள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர்

களிடையே ஆச்சரியமான ஒரு கடிதப் போக்குவரத்து நடக்க ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் அந்தப் பையன் (ராமய்யா) சரியாக மாலை நான்கு மணிக்கு ஹோம் பாத்ரூமுக்கு அப்பால் காம்பவுண்டுக்கு வெளியே நின்றுகொண்டு (காம்பவுண்டு உயரம் அதிகம். உள்ளே பார்க்க முடியாது) ஒரு கல்லில் ஒரு ரூபா நோட்டைக் கட்டி உள்ளே தூக்கிப் போடுவான். அதே நேரத்தில் அந்த இடத்தில் நிற்கும் சரசுவதி அதை எடுத்துக் கொண்டுவிட்டு, அதற்கு அடையாளமாக அதே கல்லைக் காம்பவுண்டுக்கு வெளியே தூக்கி எறிவாள்.

இப்படி ரூபாய் நோட்டில் ஆரம்பித்த தொடர்பு கடிதப் போக்குவரத்துவரை வந்து விட்டது.

இதில் அதிசயம் என்னவென்றால் சரசுவதிக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ராமய்யா அவளுக்குத் தமிழில் கடிதம் எழுதினான். இல்லத்தில் சிலருக்குத்தான் தமிழ் தெரியும். அவர்களில் ஒருத்தி பாலா என்ற சிறிய பெண். பத்து வயது. அனாதை என்பதற்காக இல்லத்தில் சேர்க்கப்பட்டவள். பெரிய பெண்களிடம் காட்டக்கூடாது என்று நினைத்து சரசுவதி பாலாவிடம் கடிதங்களைக் காட்டிப் படித்து வந்தாள். பாலா மூலமாகப் பதிலும் எழுதி வந்தாள்.

ஒரு முறை பாலாவுக்கு உடம்பு சரியில்லாமல் ஸிக் ரூமுக்குப் போய்விட்டாள். அதனால் ராமய்யாவின் கடிதத்தை எடுத்துக் கொண்டு சரசுவதி என்னிடம் வந்தாள். ராமய்யா அவளது உறவுக்காரன் என்று சொல்லி மழுப்பி என்னைப் படிக்க வைத்தாள். மிக அருவருப்பான மொழியில் அது எழுதப்பட்டிருந்தது. நல்ல வேளை, என்னைக் கொண்டு பதில் எழுதச் சொல்லவில்லை.

இந்தப் பல நாள் குற்றம் ஒரு நாள் அம்பலத்திற்கு வந்தது. ஒரு நாள் மாலையில் காம்பவுண்டுக்குள் கல் விழுவதையும், அதை சரசுவதி எடுத்து வைத்துக் கொள்வதையும் புதிய வேலைக்காரி பார்த்துவிட்டாள். அவள் கண்காணிப்பவளுக்குச் சொல்ல, அவள் எழுந்துபோய் சரசுவதியைப் பிடித்து வந்து சோதனை செய்தாள். விஷயம் வெளியாகியது. எவ்வளவு அடித்துக் கேட்டும் சரசுவதி முழு உண்மையே கூறவில்லை. இதனால் அவள் ஒவ்வொருத்தியாகத் தனித்தனியாக அழைத்துக் கேட்டாள்.

அக்கம்மாளைக் கேட்டபோது, அவள் ஒரு பொய் யைச் சொன்னாள். சரசுவதிக்கும் வெளியே உள்ள ராமய்யா வுக்கும் காதல் கடிதங்கள் போய் வருகின்றன என்றும், தமிழில் அந்தக் கடிதங்களை எழுதி உதவுகிறவள் கமலாதான் என்றும் கூறி விட்டாள். உடனே கண்காணிப்பவள் என்னை அழைத்துக் கேட்டாள். நான் மறுத்தேன். பருமன் மணியைத் தட்டிப் புதிய வேலைக்காரியை அழைத்தாள். என்னைச் செம்மையாக அடித்து, தனி அறையில் போடும்படி கூறினாள். வேலைக்காரி என் தலையை இறுகப் பற்றினாள். "எனக்கு எதுவும் தெரியாது!" என்று அழுகையுடன் கத்தினேன். வேலைக்காரி விடவில்லை. ஒரு பிரம்பை எடுத்து வந்து என்னை வீற ஆரம்பித்தாள்.

முதுகில் சரமாரியாக அடிகள் விழுந்தன. அதன் காந்தல்கள் தலைவரை ஏறியது. பார்வை இருட்டாகியதும் நான் சுருண்டு விழுந்தேன்.

அடிப்பதை அவள் நிறுத்தினாள். என்னைத் தூக்கி நிறுத்தி கர கரவென்று இழுத்துத் 'தனி' அறைக்குக் கொண்டு போனாள்.

'தனி' அறையைக் கண்டு எல்லாப் பெண்களும் பயப்படு வார்கள். சின்ன அறை அது. இரவு பகல் அங்கேதான் இருக்க வேண்டும். குறிப்பிட்ட நேரங்களில் தான் பாத்ரூமுக்கு அழைத்துப் போவார்கள். மாலையில் டிபன் கொடுக்க மாட்டார்கள். உள்ளே இருப்பது மிகவும் கஷ்டம்.

அழுதுகொண்டே இருந்தேன். மானேஜர் ஒரு வார லீவில் போயிருந்தாள். அவள் இருந்தால் அவளிடம் சொல்லி இதிலிருந்து விடுதலை பெற்றிருப்பேன். அவளுக்கு என் மீது நம்பிக்கையும் மதிப்பும் உண்டு.

நான்கு நாட்கள் இருந்தேன். அதற்குள் பாலா மூலம்தான் சரசுவதி கடிதம் எழுதினாள் என்ற விஷயம் வெளி வந்து விட்டது. என்னை வெளியே விட்டுவிட்டார்கள்.

வெளிவந்த என்னை, மாலையில் அக்கம்மா பார்த்தாள். "எப்படியம்மா! உடம்பு எப்படி இருந்தது?" என்று ஏளனத்துடன் கேட்டாள்.

"சீ போ! உனக்கு இனிமேலும் பயப்படுவேன் என்று நினைக்காதே!" என்றேன்.

"என்ன? இன்னும் முறைப்போடு பேசறியா?" என்று சீறினாள் அவள்.

“அப்படித்தான் பேசுவேன். என்ன செய்வே நீ?” என் மீது வேண்டுமென்றே பழியைப் போட்டாய். உன் கெட்ட குணம் எனக்குத் தெரியும். உன்னை எச்சரிக்கிறேன். இதற்கு மேல் என்னிடம் வந்தால் விடமாட்டேன்!”

“என்ன செய்வியாம்?”

“செய்யறதைச் செய்து காட்டுகிறேன்” என்றேன்.

அக்கம்மாவிடம் முறைத்து விட்டேனே ஒழியத் தினம் பொழுது விடிந்தால் ஏதாவது அவள் தீங்கு செய்வாளோ என்று பயப்படுவேன். இரவில் என்னைக் கொன்றுவிடுவாளோ என்று பயப்படுவேன். தனியாக எங்கேயாவது போகப் பயப்படுவேன்.

ஆனால் ஒரு மாதத்தில் இந்தப் பயம் தீருவதற்கு ஒரு வழி ஏற்பட்டது. என்னை வேறு நகரில் உள்ள (பெயரைச் சொல்ல விரும்பவில்லை) இதுபோன்ற இன்னொரு இல்லத்துக்கு மாற்றி விட்டார்கள்.

என்னை மட்டுமல்ல; என்னைப்போல் ஒன்பது பேரையும் மாற்றினார்கள். இட நெருக்கடிதான் இதற்குக் காரணம். இல்லத்திற்குத் தினமும் புதியவர்கள் வந்துகொண்டே யிருந்ததால் இந்த நெருக்கடி!

எங்களை ரயிலில் கொண்டு போனார்கள். சாதாரண உடையில் இரண்டு போலீஸ்காரர்களும், இரு டீச்சர்களும் காவலாக வந்தார்கள். இரண்டு பெஞ்சுகளில் நெருக்கி உட்கார்ந்தோம். எங்களில் மூன்று பேருக்கு ரயில் பிரயாணம் செய்வது அதுதான் முதல் தடவை.

பிரயாணம் மகிழ்ச்சியாக இருந்தது. பிளாட்பாரங்களில் சுதந்திரமாக உலாவும் பெண்களைப் பார்க்கும்போது ஏக்கமாக இருந்தது. தலைவிதி இப்படி இருக்கிறதே என்று நினைத்தோம். டீச்சர்கள் ஒருவர் மாறி ஒருவர் கீழே இறங்கிச் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். எங்களுக்கு ஒரு காபியைக்கூடக் கண்ணில் காட்ட வில்லை.

பத்துப் பேரில் புனிதம் ஒருத்தி. அவளுக்கும் எனக்கும் அதிகப் பழக்கம் கிடையாது. அவளுக்கு பெஞ்சு ஓரமாக ஸீட் கிடைத்திருந்தது. வண்டி போகும்போது அடிக்கடி என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் அர்த்தம் விளங்கவில்லை.

ஒரு ஸ்டேஷனில் வேர்க்கடலை விற்றார்கள். டீச்சரின் முறைப்பையும் பொருட்படுத்தாமல் புனிதம் எட்டணாவுக்குக் கடலை வாங்கினாள். எங்களுக்கு பகிர்ந்து கொடுத்தாள். மீண்டும் உட்காரும்போது என்னருகில் உட்கார்ந்தாள். பிறகு மெதுவாக என் காதுப் பக்கம் முகத்தை நீட்டி, "கமலா! ஏன் என்னை அடிக்கடி பார்க்கிறாய்?" என்றாள்.

தூக்கி வாரிப்போட்டது. "நீதான் என்னை அடிக்கடி பார்க்கிறாய்!" என்றேன்.

அவள் சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பிறகு, "கமலா! ஒன்று சொல்கிறேன்! யாரிடமும் சொல்ல மாட்டாயே?" என்றாள்.

"மாட்டேன்!"

"நான் தப்பித்து ஓட நினைக்கிறேன். எனக்கு உதவ வேண்டும்!" என்றாள்.

ஒரே அதிர்ச்சி எனக்கு! இவ்வளவு தைரியம் இவளுக்கு எப்படி வந்தது என்று நினைத்தேன். அவள் திருட்டுக் குற்றத்துக்காக இல்லத்திற்கு வந்தவள். உள்ளே இருக்கும்போது ஒழுங்காக இருந்தாள்.

நான் பேசாமல் இருப்பதைப் பார்த்து, "என்ன சொல்கிறாய்?" என்றாள் மீண்டும்.

அவள் பார்வையில் தெரிந்த குழைவும் ஏக்கமும் என்னைக் கவர்ந்தன.

"நீ தப்பிப் போக நான் எப்படி உதவ முடியும்?" என்றேன்.

"ஒரு பெரிய ஸ்டேஷன் வந்தால் கடலை வாங்கு! எல்லோர் கவனமும் சன்னல் பக்கம் திரும்பும். நான் ஓடி விடுவேன்!" என்றாள்.

நான் தலையை அசைத்தேன். ஆனால் உள்ளூற எனக்கு அப்படிச் செய்ய முடியும் என்று தோன்றவில்லை.

ஒவ்வொரு ஸ்டேஷன் வரும்போதும் மனம் திக்திக் என்று அடித்தது. ஒவ்வொரு முறை டீச்சர் திரும்பிப் பார்க்கும் போதும் உடல் நடுங்கியது. 'இந்தப் புனிதம் ஏன் என்னை இப்படி ஒரு இக்கட்டுக்குள்ளாக்குகிறாள்?" என்று நினைத்தேன்.

ஒரு பெரிய நிலையம் வந்தது. விற்பவர்களில் இரைச்சல் காதைக் குடைந்தது. கடலைக்காரன் குறுக்கும் நெடுக்குமாகப்

போனான். மனம் தத்தளித்தது. நான் அவனைக் கூப்பிடவில்லை. அதற்குத் தைரியம் இல்லை.

புனிதம் என்னை லேசாக இடித்தாள். நான் பேசாமல் இருந்து விட்டேன்.

வண்டி புறப்பட்டது. அரை மணியில் ஒரு சந்திப்பு வந்தது. நாங்கள் அங்கே மாறவேண்டும். கீழே இறங்கினோம்.

பிளாட்பாரத்தில் கூட்டம். யாரோ மந்திரி வந்திருந்தார். ஒரே கைதட்டல், மாலைகள்.

கூட்டத்திற்கு இடையே புகுந்து போனோம். அடுத்த பிளாட்பாரத்தில் வண்டி நின்றது. போய் ஒவ்வொரு பெட்டியாக இடம் தேடினோம். ஒரே கூட்டம்.

கடைசியில் ஒரு பெட்டியில் ஏறும்போது எங்களை எண்ணிப் பார்த்த டீச்சர் பதறிக்கொண்டு, "எங்கே புனிதம்?" என்று கத்தினாள். "எங்கே? எங்கே?" என்று மற்றவர்களும் கத்தினார்கள். ஒரு போலீஸ்காரர் உடனே கூட்டத்தை நோக்கிப் பறந்தார். இன்னொரு போலீஸ்காரர், "ஏறு, ஏறு!" என்று எங்களை மிரட்டி வண்டியில் ஏற்றினார். டீச்சரைப் பார்த்து, "கவனிச்சுக்குங்க! இன்னும் யாராவது ஓடிப்போயிடப் போறாங்க!" என்று சொல்லிவிட்டுக் கீழேஇறங்கிக் கூட்டத்தை நோக்கி ஓடினார்.

டீச்சர்கள் எங்களைத் திட்டினார்கள். தங்களுக்குள் பதட்டத்தோடு பேசினார்கள். எங்களை அடிக்கடி முறைத்துக் கொண்ட சன்னல் வழியே எட்டி எட்டிப் பார்த்தார்கள்.

நேரம் ஓடியது. என்ன நடக்கப் போகிறதோ என்று நடுக்கத்துடன் உட்கார்ந்திருந்தோம்.

முதல் மணி அடித்தது. இரண்டாவது மணி அடித்தது. வண்டி நகர்ந்தது. போலீஸ்காரரில் ஒருவர் வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்து ஏறினார்.

புனிதத்தைக் காணவில்லை என்றும், அந்த விஷயத்தை இரண்டாவது போலீஸ்காரர் ரிப்போர்ட் பண்ணிவிட்டு அடுத்த வண்டியில் வருவார் என்றும் கூறினார். பிறகு கோபாவேசமாக எங்களைப் பார்த்து, "திருட்டுக் கழுதைகளா ஊர் போகிறவரை யாராவது எழுந்தீர்களோ, கழுத்தை நெறித்து விடுவேன்" என்று உறுமினார். பாத்ரூமுக்குப் போக எழுந்த ஒரு பெண்ணை ஆத்திரம்தீர முதுகில் அடித்து உட்கார வைத்தாள் ஒரு டீச்சர்.

புனிதம் இல்லாமல் புதிய நகரத்திற்குப் போனோம். நாங்கள் வரும் செய்தி முன்னாலேயே போய்விட்டதால் எங்களை ஸ்டேஷனில் வரவேற்கப் புதிய இல்லத்திலிருந்து சிலர் வந்திருந்தார்கள். எங்களை வானில் ஏற்றி மிகப் பத்திரமாக புதிய இல்லத்திற்கு கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

புனிதம் தப்பி ஓடியதில் எனக்கு மகிழ்ச்சி! எனினும் அதனால் எங்களுக்கு என்ன தீங்கு ஏற்படுமோ என்று பயந்தேன்.

புதிய இல்லத்தில் நாங்கள் இறங்கியதும் அதன் மானேஜர் எங்களை வரிசையாக நிறுத்தினாள். ஒவ்வொருத்தர் பெயரையும் சொல்லி, "நீதானா? நீதானா?" என்று கேட்டாள். பிறகு எங்கள் ஒவ்வொருவரையும் பிடித்துப் பிடித்து இல்லத்திற்குள் தள்ளினாள். நாங்கள் ஆகாயம் வழியாகப் பறந்து போய் விடுவோமோ என்று பயம்.

என்னுடைய புது இல்லத்து வாழ்க்கை தொடங்கியது.

மானேஜரின் பெயர் சுமித்ரா. நாற்பத்திரண்டு வயது. திருமணம் ஆகாதவள். எப்போதும் கடுகடுவென்று இருப்பாள். துளி சிரிப்பு வராது. அடிக்கடி எரிந்து விழுவாள். அவளது வீடு இல்லத்திற்கு அடுத்தாற்போல் இருந்ததால், வேளைகெட்ட வேளையில் வந்து கழுத்தை அறுப்பாள்.

முதல் நாள் இல்லத்தைப் பார்த்ததும், சுரீர் என்றது. அசுத்தமான கட்டடம்! பாத்ரூமுக்குள் போய் வருவது ஒரு நரகம். படுக்கும் இடங்கள் குண்டும் குழியுமாக இருந்தன. விரிப்புகளும் பாய்களும் அழுக்குடன் நாற்றம் அடிக்கும்.

சமையல் படுமோசம். உப்போ உறைப்போ இருக்காது. இரவில் தடிமனான சப்பாத்தி கொடுத்தார்கள். கடிக்க முடியாது. தொட்டுக் கொள்ள ருசியே இல்லாத ஒரு சப்ஜி!

சமையல்காரி ஒரு வியாதிக்காரி போல் தோன்றினாள். கை விரல்களில் வெள்ளை வெள்ளையாய்ப் புள்ளிகள்! முகத்திலும் வியாதிக்களை. சாப்பிடும்போது அவளை நினைத்தால் குமட்டும்.

இல்லத்தில் இருந்த பெண்களையும் எனக்குப் பிடிக்க வில்லை. ரௌடிகள் போல் பலர் இருந்தார்கள். முதல்நாள் என்னிடம் இவர்கள் வந்து என்கதையைக் கேட்டார்கள். நான் உண்மையைச் சொன்னபோது, அதை நம்பாமல், "தெரியும்டி, புதுசா வருகிற பேரெல்லாம் உன்னைப்போல் தான் பதிவிரதைன்னு சொல்றாங்க!" என்று ஏளனம் செய்தார்கள்.

அந்த இல்லத்தில் கட்டுப்பாடுகள் அதிகம் என்று ஒரு வாரத்தில் தெரிந்தது. காலையிலிருந்து மாலைவரை ஓயாமல் வேலை! சிறிதுகூட அவகாசம் இல்லை. தலையணை உறைகள், சட்டைகள், காட்டன் துணிகள், எம்பிராய்டரி வேலைகள் என்று ஒன்று மாற்றி ஒன்றாக வேலைகள் இருந்தன. இல்லத்துக்கு இவ்வளவு துணி எங்கிருந்து சப்ளை ஆகிறது என்று ஆச்சரியப் பட்டேன். பின்னால்தான் அதன் ரகசியம் தெரிந்தது. (அதைப் பின்னர் விவரிக்கிறேன்.)

நான் போய்ச் சேர்ந்த இரண்டாம் நாள் இந்து என்று ஒரு வடஇந்தியப் பெண் என்னிடம் அன்பாகப் பேசிவிட்டுப் போனாள். சிவப்பாகவும் அழகாகவும் இருந்தாள். முதலில் அவளை எங்களைச் சேர்ந்தவள் என்று நினைக்கவில்லை. ஏதாவது பொறுப்பில் இருப்பாள் என்று நினைத்தேன். பிறகு தான் எங்களில் ஒருத்தி என்று தெரிந்தது.

அவளுக்குத் தனிச் சலுகைகள் இருந்தன. காலை பிரார்த்தனையில் எங்களுடன் கலந்து கொள்ள மாட்டாள். தனியாகக் கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்வாள். பகலில் எங்களைப் போல் கடுமையான வேலைகளைச் செய்ய மாட்டாள். அதற்குப் பதிலாக ஆங்கிலமும், எம்பிராய்டரியும் பலருக்குக் கற்றுக் கொடுப்பாள். கையில் ஒரு டிரான்ஸிஸ்டரை வைத்துக் கொண்டு அடிக்கடி கேட்டுக் கொண்டிருப்பாள்.

அவள் என்ன குற்றம் செய்து இங்கே வந்தாள் என்று அறிய ஆவலாக இருந்தது. பலரிடம் பேசியும் அது தெரிய வில்லை. அவளிடம் கேட்பதற்கும் தயக்கமாக இருந்தது. இல்லத் திற்குப் போன இரண்டாவது வாரத்தில் அருணா என்ற பெண் விடுதலை ஆனாள். அவள் ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்தவள். இல்லத்தில் ஐந்து வருட காலம் இருந்து விட்டாள். நல்ல ஒழுக்கமும் குணமும் உள்ளவள் என்று மற்ற பெண்கள் சொன்னார்கள்.

சொன்னால் ஆச்சரியமாக இருக்கும். ஸ்வீட் சாப்பிட வேண்டும் என்பதற்காக கற்பை இழந்தவள். அதை இழந்த போது, அதன் முழு விளைவும் அவளுக்குத் தெரியாது. சாதாரணப் பள்ளி மாணவி அவள். தந்தை ஒரு ஜவுளிக் கடை குமஸ்தா! வீட்டில் அவளைச் சேர்த்து எட்டு பேர். ஒழுங்காகச் சாப்பாடு கிடையாது. காப்பி கிடையாது. மூன்று வேளையும் சோறு கிடைத்தால் அதிசயம்!

அவள் வீட்டார் அவளைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார்கள். பழைய பாவாடையும் தாவணியும் அணிந்து கொண்டு பள்ளிக்குப் போவாள். மற்றப் பெண்கள் சாப்பிடுவதையும், உடுத்திக்கொள்வதையும் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பொறாமையாக இருக்கும். தன் வீட்டில் எதுவும் கிடைப்பதில்லை என்று வருத்தப்படுவாள்.

பள்ளியில் பிரகாசம் என்ற பையன் படித்தான். அவனது தந்தை ஒரு மிட்டாய்க்கடை வைத்திருந்தார். பள்ளியில் பணக்கார மாணவிகள் அவனிடம் காலையில் பணத்தைக் கொடுத்து இடைவேளை நேரத்தில் இனிப்புகளை வாங்கி வரும்படி சொல்வார்கள். அவன் வாங்கி வருவான். நல்ல நெய் மணத்துடன் கூடிய விதவிதமான இனிப்புகள் அந்த மாணவிகள் சாப்பிடுவார்கள்.

ஒரு நாள் மற்ற மாணவிகள் இனிப்புகள் சாப்பிடுவதை வெளியே வராந்தாவில் நின்று கொண்டு அருணா கவனித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த பிரகாசம் அவளை அணுகி, "ஸ்வீட் வேணுமா?" என்றான். "என்னிடம் காசு கிடையாது" என்றாள் அவள். "பரவாயில்லை. நான் தருகிறேன்" என்று சொல்லிப் பெட்டியிலிருந்து ஒரு ஜாங்கிரியை எடுத்துக் கொடுத்தான்.

நீண்ட காலத்திற்குப் பிறகு அருணா முதன் முதலாக அந்த இனிப்பைச் சாப்பிட்டாள். சாப்பிடும் போது ஒரே மகிழ்ச்சி! வாழ்க்கையில் கிடைக்க முடியாதது கிடைத்து விட்டது என்று நினைத்தாள். இன்பம் பிடிபடவில்லை.

மறுநாளும் அவன் இனிப்பு கொண்டு வந்து கொடுத்தான். பல நாட்கள் அது தொடர்ந்தது. இருவருக்கும் பரிச்சயம் அதிகமாகியது. பிரகாசம், ஒரு நாள் அவளிடம் "எனக்கு என்ன தரப்போகிறாய்?" என்று கேட்டான். அதில் ஆரம்பித்த உரையாடலில் அவனுடன் அவள் மாலையில் தனியாகப் போக இசைந்தாள்.

முதல் நாள் பேசியவாறு நடந்தார்கள். அவளுக்கு உலகம் தெரியாது. அவனுக்கு ஓரளவு தெரியும். ஆனாலும் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பலவிதத்தில் பயம். பல வாரங்கள் இப்படிப் போன பிறகு அவனது பயம் தீர்ந்து விட்டது. ஒரு நாள் தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளும்

வேகத்துடன் அவளை இழுத்தான். அவன் தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போதுகூட அவளுக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது. சொல்லப் போனால் அவள் அந்த நேரத்திலும் ஒரு இனிப்பு சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்தன. அதன் விளைவு களும் விரைவில் தோன்றின. அவளது வாந்திகளைக் கண்டு தாயார் சந்தேகப் பட்டாள். வயிற்றின் வளர்ச்சியைக் கண்ட அருணா கலங்கி விட்டாள். அது மேலும் மேலும் கூடி வருவதைக் கண்டு பயந்து தாயாரிடம் அதற்குப் பரிகாரம் கேட்டபோது தாயார் கல்லாக உட்கார்ந்து விட்டாள். வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். அம்மா பண்ணிய பிரலாபம் அருணாவைத் திடுக்கிட வைத்தது. முதல் தடவை யாகத் தனக்கு நேர்ந்த விபரீதங்களை உணர ஆரம்பித்தாள்.

அவளது படிப்பு நிறுத்தப்பட்டது. உடம்பு சரி இல்லை என்று சொல்லி அவளை வீட்டு அறையில் பூட்டி வைத்தார்கள். அருணா நிறை மாதம் ஆனபின் ஒரு குழந்தையைப் பெற்றாள். அதை இரவுக்கு இரவு அவளே கொன்றுவிட்டு குப்பைத் தொட்டியில் போட்டு விட்டாள்.

காலையில் குழந்தையைப் பற்றிய செய்தி பரவி போலீசார் வந்து ஒவ்வொரு வீட்டிலும் விசாரணை செய்து கொலை செய்தவள் அருணாதான் என்று கண்டு பிடித்தார்கள். அவளைக் கைது செய்து ஜூவனைல் கோர்ட்டில் விசாரணை செய்து தண்டனை அளித்தார்கள். பின் இந்த இல்லத்துக்கு அனுப்பி விட்டார்கள்.

இல்லத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் கழித்து விட்டாள். ஆறு மாதங்கள் முன்பே அவள் விடுதலை ஆக வேண்டியவள். அதிகாரிகள் அவளது வீட்டுடன் தொடர்பு கொண்ட போது அருணாவை உடனே ஏற்றுக்கொள்ள வழி இல்லை என்றும், இன்னும் ஆறு மாத காலம் கழித்து ஏற்றுக் கொள்வதாகவும் தாயார் கூறிவிட்டாள். இரக்கத்தின் பேரில் ஆறு மாதம் அதிகமாக இல்லத்தில் வைத்திருந்தார்கள். ஆறு மாதம் முடிந்து விட்டது. நான் போன இரண்டாவது வாரம் அவள் விடுதலை அடைவதாக இருந்தது.

முந்திய நாள் இரவு அருணா எங்களிடம் விடை பெற்றாள். இனி அவளுக்கு நல்ல வாழ்வு கிடைக்கும் என்று நம்பிக்கையோடு கூறினாள்.

மறுநாள் அவளை வழி அனுப்புவதற்காக நாங்கள் தயார் ஆனோம். எங்களுக்கு அது ஒரு சிறிய விழாபோல நடக்கும். வழக்கமான வேலைகளை அன்று செய்ய மாட்டோம். காலை பத்து மணிக்கு அருணாவின் தாயார் வருவதாக இருந்தது. ஆனால் பன்னிரண்டு மணி வரை வரவில்லை. பகல் உணவு சாப்பிட்டு வந்து மீண்டும் தயாராக இருந்தோம். அதற்குப் பிறகும் தாயார் வரவில்லை.

இரண்டு மணிக்குப் பிறகு அருணா அழ ஆரம்பித்தாள். பலர் அவளுக்குச் சமாதானம் சொன்னார்கள். சுமித்ரா மானேஜர் வெல்ஃபேர் அதிகாரியிடம் பேசினார். அந்த அதிகாரி அருணாவைத் தாமே அழைத்துப் போய் வீட்டில் சேர்ப்பதாக உறுதிமொழி கூறினார்.

மறுநாள் அதிகாரியுடன் அவள் புறப்பட்டு போய் விட்டாள்.

மானேஜர் சுமித்ராவைப் பற்றிச் சில விஷயங்கள் சொல்ல வேண்டும். ஒரு மாதத்தில் அவளைப் பற்றி மேலும் பல விவரங்கள் தெரிய வந்தன. அவளுக்கு ஊனமுள்ள சகோதரன் ஒருவனும் ஐந்து சகோதரிகளும் இருந்தார்கள். அவர்களை வாழ்க்கையில் முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அவள் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தாள்.

ஒவ்வொரு வாரமும் எங்களுக்கு மதபோதனை செய்ய வந்த ஒரு பெரியவருக்கும், அவளுக்கும் தொடர்பு உண்டு என்று இல்லத்தில் பேசிக் கொண்டார்கள். எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. அபவாதமாகக் கூட இருக்கலாம். ஆனால் இருவரும் சேர்ந்து வெகுநேரம் பேசுவது மட்டும் உண்மை.

சுமித்ராவிடம் ஒரு பழக்கம் இருந்தது. இல்லத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணையும் அழைத்து அவளது கதையைக் கேட்பாள். இதில் விரும்பத்தகாத பகுதிகளை மிகவும் விவர மாகக் கேட்பாள். கேள்விகள் கேட்டு அதிகம் விளக்கச் சொல்லு வாள். முதலில் இந்த வதந்தியை நான் நம்பவில்லை. ஆனால் என்னிடமே அவள் அப்படிக் கேட்ட பிறகுதான் நம்பினேன்.

சுமித்ராவால் இல்லத்து வாழ்க்கை பெரிதும் பாதிக்கப் பட்டது. கண்காணிப்பவளும் சமையல்காரியுடன் சேர்ந்து கொண்டு இல்லத்திலுள்ள மளிகைப் பொருள்களில் பெரும்

பகுதியை வீட்டுக்கு அனுப்பிவிடுவாள். இதனால் எங்களுக்குக் குறைவான உணவும், ருசி இல்லாத பதார்த்தங்களும்தான் கிடைத்தன.

அதோடு நிற்கவில்லை. இல்லத்தில் நாங்கள் தயாரிக்கும் பல பொருள்களை அவள் தனது சொந்த வியாபாரம்போல் வெளியில் மலிவான விலைக்கு விற்று வந்தாள். நிறையத் துணி களை வாங்கி எங்களிடம் கொடுத்துத் தலைகாணி உறை, பை, சொக்காய் போன்றவைகளைத் தைக்கச் சொல்லி, அவற்றை வெளியே பலருக்கு விற்பனை செய்து கொண்டு வந்தாள்.

அருணா இல்லத்தை விட்டுப் போய் விட்டாள் என்று கூறி இருந்தேன். ஆனால் ஒரு மாதத்தில் அவள் திரும்பி விட்டாள். எங்களுக்கு அதிசயமாக இருந்தது. அவள் கூறிய காரணம் இதுதான்:

இல்லத்தில் அவள் இருந்த ஐந்து வருடங்களுக்குள் அவளது குடும்பத்தில் பல மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன. அவளது அண்ணனுக்குப் பெரிய வேலை கிடைத்தது. அதனால் அவர்கள் குடும்பம் முன்னேற ஆரம்பித்தது. அண்ணனுக்கும் அக்காவுக்கும் நல்ல இடங்களில் திருமணம் நடந்தன. அப்படி நடந்தபோது அருணா என்ற பெண்ணே அவர்கள் குடும்பத்தில் கிடையாதது போல் பேசி சம்பந்தத்தை முடித்திருந்தார்கள். அதனால் அருணா இல்லத்திலிருந்து வீட்டுக்கு வரப் போகிறாள் என்று தெரிந்த போது, அவளது பெற்றோர்கள் அதை விரும்பவில்லை. இல்லத்தில் அவள் இருப்பதே சரி என்று நினைத்தார்கள்.

அதனால் அருணா வீட்டுக்குத் திரும்பியதும் முதல் அதிர்ச்சி அடைந்தவள் அவள் அண்ணி. அவளைப் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொண்ட பிறகு அண்ணி அவளை உதாசீனமாக நடத்தினாள். அண்ணனும் அதற்கு உடந்தையாக இருந்தான். அருணாவிடம் ஒரு வார்த்தை அவன் பேசவில்லை.

இதைத்தவிர ஒரு பிரார்த்தனை நிறைவேற்றுவதற்கு, குடும்பத்தோடு அக்கா வருவதாக இருந்தாள். அக்காவின் புருஷன் அருணாவைப் பார்த்து, இவள் யார் என்று கேட்டு விட்டால் மானம் போய்விடும் என்று பெற்றோர்கள் அஞ்சினார்கள். இதற்கு என்ன செய்வது என்று புரியாமல் இருந்தார்கள்.

இவை தவிர அருணாவின் தங்கை ஒருத்தி கல்லூரியில் முதலாவதாகத் தேறிப் பல பரிசுகளைப் பெற்றிருந்தாள். மிகுந்த அறிவுள்ள பெண்ணாகப் பல பெரிய வட்டாரங்களில் அவள் பழக நேர்ந்தபோது, ஒரு பணக்கார வாலிபனோடு பரிச்சயம் ஏற்பட்டு அது காதலாகி விட்டது. 'பெண்ணின் குடும்பம் அவ்வளவு உயர்ந்ததாயில்லையே' என்று முதலில் கூறிய வாலிபனது பெற்றோர்கள், பின்னர் அவர்களது திருமணத்துக்கு இசைந்து விட்டார்கள். வருகிற இரண்டாவது மாதத்தில் அவர்களது திருமணம் நிறைவேறி, அதன் பின் வாலிபன் தன் மனைவியோடு அமெரிக்கா போவதாக இருந்தான்.

இந்த நிலையில் வீட்டுக்கு அருணா திரும்பியதை அவளது தங்கையும் விரும்பவில்லை. "ஏற்கெனவே என் காதலரின் பெற்றோர்கள் நம் குடும்பத்தைப் பற்றித் தயக்கம் காட்டி இருக்கிறார்கள். அருணாவைப் பற்றிய செய்தி தெரிந்தால் அதிர்ச்சி அடைந்து திருமணத்தைக்கூட நிறுத்தி விட்டாலும் விடுவார்கள். இதற்கு என்ன செய்வது?" என்று பெற்றோரிடம் போய் அவள் முறையிட்டாள்.

இவ்விதம் எல்லாம் உருவான சூழ்நிலையில் யாவரும் அவளை ஏதோ வேண்டாதவள் வீட்டுக்கு வந்ததுபோல நினைத்தார்கள்.

அருணா வெளியே போனால், அக்கம் பக்கத்தார் அவளை யார் என்று கேட்பார்கள் என்று சொல்லி, அவளை வெளியே விடாமல் வீட்டுக்குள்ளேயே வைத்திருந்தார்கள்.

இவைகளை எல்லாம் கவனித்த அருணாவுக்கு, 'சீ' என்று ஆகிவிட்டது. அவளை ஒருவரும் "சாப்பிட்டாயா?" என்று கேட்கவில்லை. அன்போடு ஒரு வார்த்தை பேசவில்லை. அவளது தாய்கூட அவளை உதாசீனம் செய்வதைப் பார்த்ததும் மனம் விண்டு விட்டது. தனது சொந்தக் குடும்பத்திலேயே தான் ஒரு அந்நியவளாகி விட்டதை உணர்ந்தாள்.

தவிர, ஒரு நாள் அவளது தங்கை அவளிடம் வந்து, "அக்கா! நீ இங்கே இருப்பதால் எனது எதிர்காலமே உடைந்து விடும்போல் இருக்கிறது. உன்னை ஒன்று கேட்டுக் கொள் கிறேன். இரண்டு மாதம் எங்கேயாவது தலைமறைவாக இருந்து விட்டு வா! அதற்குள் திருமணமாகி அமெரிக்காவுக்குப் போய்

விடுவேன். அம்மா இதை உன்னிடம் சொல்ல முடியாமல் தயங்கு கிறாள். இப்போதுதான் நம் குடும்பம் முன்னேறிக் கொண்டு வருகிறது. திரும்பவும் எங்களை யெல்லாம் கஷ்டங்களில் தள்ளி விடாதே!" என்றாள்.

அருணாவுக்குத் தன் கால்களே நழுவுவது போலிருந்தது. திடீரென்று அவள் யாருக்கும் சொந்தமில்லாதவளாக ஆகி விட்டதை நினைத்தாள். இனி வேறு வழியில்லை. இல்லத்துக்குத் திரும்ப வேண்டியதுதான் என்று நினைத்தாள் ஒருநாள் காலையில் திரும்பிவிட்டாள்.

# 9. விடுதலை வேட்கை

**நா**ன் புது இல்லத்தில் சேர்ந்த இரண்டாவது மாதத்தில் பாஞ்சாலி என்பவளுக்கு திருமணம் நடந்தது. இல்ல அதிகாரிகள் அதை எளிமையாக நடத்தி வைத்தார்கள். பல பெண்களுக்கு இப்படித் திருமணம் நடத்தி வைப்பது இங்கே வழக்கம். பெரும்பாலும் வெளியிலுள்ள சமூக நல நிறுவனங் களுடன் தொடர்பு கொண்டு இதை நடத்தி வைப்பார்கள். வாழ்க்கையில் தவறிய பெண்களுக்கோ, அனாதைப் பெண் களுக்கோதான் அப்படித் திருமணம் செய்து வைப்பார்கள். அவர்களில் பலர் கணவன்மார்களுடன் அடிக்கடி இல்லத்துக்கு வந்த அதிகாரிகளுடன் பேசி விட்டுப் போவார்கள். அவர் களைப் பொறுத்தவரையில் இந்த இல்லம் நன்மையைத்தான் செய்திருக்கிறது.

பாஞ்சாலியின் திருமணம் காலையில் நடந்தது. மாப்பிள்ளை ஒரு சினிமா தியேட்டரில் டிக்கெட் பரிசோதகர். இல்லத்துக்கு அவர் இருநூறு ரூபாய் பணம் கொடுத்தார். (இப்படிப் பணம் கொடுக்கவேண்டும் என்று ஒரு ஏற்பாடு.) பதிவுத் திருமணம் முடிந்த பிறகு அவர்கள் இல்லத்துக்கு வந்து மாலை மாற்றினார்கள். நாங்கள் பாடினோம். பிறகு எல்லோ ருக்கும் பாயசத்துடன் விருந்து நடந்தது. முடிவில் தம்பதியர் எங்களிடம் விடைபெற்றுப் போய் விட்டார்கள். எங்களது அறைகளுக்கு வந்தோம். அரைமணி நேரம் ஓய்வு எடுத்திருக்க மாட்டோம். ஒவ்வொருத்தருக்கும் வயிற்றைக் குடைந்தது. பிறகு விறுவிறுவென்று கலக்கியது. ஒவ்வொருவராகப் பாத்ரூமுக்கு

ஓடினார்கள். சில நிமிடங்களுக்குள் எல்லோருக்குமே அந்த அவஸ்தை வந்துவிட்டது. பாத்ரூம்களின் வாசலில் பெரிய 'க்யூ'. சிலர் பொறுக்க முடியாமல் வெளியிலேயே அசுத்தப்படுத்தி னார்கள். சிலருக்குத் தன்னடக்கம் இன்றித் துணிகள் எல்லாம் பாழாகியது. பலர் குய்யோ முறையோ என்று கத்தினார்கள்.

எங்கள் கூச்சலைக் கேட்டுக் கண்காணிப்பவள் ஓடி வந்தாள். அவளைப் பார்த்ததும் திட்டப் போகிறாளே என்று நினைத்தோம். ஆனால் அவளும் அவசர அவசரமாக மூன்று பாத்ரூம் கதவுகளைத் தட்டிவிட்டு, பிறகு விருட்டென்று வேறு பக்கம் ஓடுவதைக் கண்டு நாங்கள் சிரித்தோம். அவளையும் அந்த நோய் பிடித்து விட்டது.

இரண்டு மணி நேரத்தில் எங்களை ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். மருந்துகள் கொடுக்கப்பட்டன. மறுநாள் மத்தியானம் டிஸ்சார்ஜ் செய்யப் பட்டோம். எங்களில் ஒரு எண்ணிக்கை குறைந்து விட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து ஒருத்தி தப்பி ஓடி விட்டாள்.

பின்னர் நடந்த விசாரணையில் எங்களுக்கு ஏற்பட்ட வியாதிக்குக் காரணம் கலப்பட எண்ணெய்தான் என்று கண்டு பிடிக்கப்பட்டது. கடைக்காரர்மீது நடவடிக்கை எடுக்க முயன்றார்கள். கடைக்காரர் அந்த எண்ணெயை சப்ளை செய்ய வில்லை என்று வாதாடினார். உண்மையில் இந்தக் கலப்படம் சுமித்ராவின் காரியமாக இருக்கும் என்று பேசப் பட்டது. சுத்தமான எண்ணெயைத் தன் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வேறு எண்ணெயை இல்லத்துக்கு அனுப்பி விட்டாள் என்று கூறினார்கள். எப்படியோ, மேலே நடவடிக்கை எதுவும் இல்லாமல் விஷயம் முடிந்து விட்டது.

இல்லத்தில் கழித்த சில மாத வாழ்க்கையில் என்னிடம் பல நினைவுகள் தோன்ற ஆரம்பித்தன. ரயிலில் வரும் போது புனிதம் தப்பிப் போனதிலிருந்து மனம் தவிக்கத் தொடங்கியது. இப்போது ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு பெண் தப்பி ஓடி விட்டதைப் பார்த்ததும் இருப்புக் கொள்ள வில்லை. நானும் இங்கிருந்து ஓடிவிட்டால் என்ன என்று நினைத்தேன்.

புதிய இல்லத்துக்கு வந்ததிலிருந்து வீட்டுக்கு மூன்று முறை கடிதம் எழுதினேன். என்னை அழைத்துப் போக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். பதிலே வரவில்லை. இதனால்

என் குடும்பத்தின்மீது வெறுப்பு ஏற்பட்டது. இல்லத்தை விட்டு விடுதலையானால்கூட என் குடும்பத்தார் என்னை ஏற்றுக் கொள்வார்களோ என்ற பயம் இருந்தது. அருணாவைப் போல் எல்லோருமாகச் சேர்ந்து விரட்டி விட்டால் என்ன செய்வது?

வெளியே தப்பித்துப் போவதில் இன்னொரு பயமும் இருந்தது. போலீசாருக்குத் தகவல் பறந்து வீட்டில் வந்து அவர்கள் நம்மைப் பிடித்துவிடுவார்கள். அவ்விதம் பிடிபட்ட பெண்கள் இருவர் இல்லத்தில் இருக்கிறார்கள். எனவே இதுவும் ஒரு தடையாகத் தோன்றியது.

நான் எப்போதுதான் இனி விடுதலை அடைவேன்? எத்தனை நாள்தான் இங்கே அடைபட்டுக் கிடப்பேன்? நிரந்தர மாக இங்கே இருக்க வேண்டுமோ என்ற பயம் என்னை உலுக்கி எடுத்தது. தவிர, என்னையும் யாருக்காவது திருமணம் செய்து கொடுத்து விடுவார்களோ என்ற பயமும் இருந்தது. இந்தக் காரணங்களால் நான் எப்படியும் தப்பி ஓடவேண்டும் என்ற எண்ணம் என்னிடம் ஓங்கி எழுந்தது. அதற்கான வாய்ப்பை எதிர்பார்க்க ஆரம்பித்தேன்.

அந்தத் தீர்மானத்திற்குப் பிறகு என்னிடம் பரபரப்பு வந்தது.

ஆனால் எப்படித் தப்பிப்பது?

யோசனை செய்து செய்து மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தேன்.

திருமணமாகிப் போன பாஞ்சாலி இரண்டு மாதத்தில் அழுது கொண்டே இல்லத்துக்குத் திரும்பினாள். அவளைத் திருமணம் செய்து கொண்ட சினிமாச் சிப்பந்தி அவளை மோசம் செய்து விட்டான் என்றும், ஒரு பணக்கார கிழவரிடம் அவளை விற்றுவிட்டான் என்றும், கிழவர் வீட்டிலிருந்து தப்பி ஓடி வந்துவிட்டதாகவும் கூறினாள்.

விஷயம் போலீசுக்குத் தெரிவிக்கப்பட்டது. சினிமாச் சிப்பந்தியை அவர்கள் தேடினார்கள். சிப்பந்தி ஏற்கெனவே ஊரைவிட்டு ஓடிவிட்டான்.

ஒருவாரம் வரை பாஞ்சாலி வருத்தமாக இருந்தாள். பிறகு பழைய நிலைக்கு வந்துவிட்டாள்.

"பணக்காரர் வீட்டிலிருந்து தப்பினாயே! இங்கே ஏன் வந்தாய்? வேறு எங்கேயாவது போய்ப் பிழைத்துக் கொள்வது தானே?" என்றேன்.

"எங்கே போவேன்? எந்த நிமிடத்திலும் என்னைப் பணக்கார வீட்டார் திரும்பவும் பிடித்து விடுவார்களோ என்று பயந்தேன். பாதுகாப்பான இடம் இந்த இல்லம்தான் என்று வந்து விட்டேன்" என்றாள்.

பல நாட்களாகத் தப்புவதற்கான வழிகளை யோசித்ததில் ஒரு வழிதான் சரியாகத் தோன்றியது. 'உடம்பு சரியில்லை' என்று கூறினால் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவார்கள். துணைக்கு வேலைக் காரியும் மானிட்டரும் வருவார்கள். மானிட்டர் என்பவள் எங்களைப்போல் இந்த இல்லத்தில் வாழ்ந்து, வளர்ந்து, இங்கேயே வேலைக்கு வந்திருப்பவள்தான். ஆஸ்பத்திரிக்குப் போகும்போது பொதுவாகக் கண்காணிப்பு அதிகம் கிடையாது என்று தெரியும். நோயாளிப் பெண்கள் பலருடன் துணைக்குப் போயிருக்கிறேன். ஆஸ்பத்திரியில் நிறையத் திருப்பங்களும், இருட்டான வராந்தாக்களும் இருந்தன. நிறையக் கார் ஷெட்டுகளும் இருந்தன. காலை வேளைகளில் நல்ல கூட்டமும் வரும். இந்தச் சூழ்நிலையில் யாராவது நினைத்தால் எளிதில் தப்பித்து விடலாம்.

இதில் ஒரு கஷ்டம் இருந்தது. மானிட்டர்களில் நல்லவள் சாரதா. என்மீது நம்பிக்கையும் உண்டு. அவளோடு ஆஸ்பத்திரிக் குப் போனால் என் திட்டத்திற்கு உதவியாக இருக்கும். ஆனால் நான் போகும் தினத்தில் அவள் வருவாளா? வேறு யாராவது வந்துவிட்டால்?

தவிர ஆஸ்பத்திரிக்குப் போவதற்குத் தகுதியான வியாதியைச் சொல்ல வேண்டும். என்ன வியாதியைச் சொல்வது? அப்படிப் பொய் சொன்னாலும் டாக்டர் சோதிக்கும்போது கண்டு பிடித்து விட்டால்?

தப்பி ஓடுவதற்கு எத்தனையோ தடைகளிருந்தன. அவைகளை மீறி வெளியே போவது அவ்வளவு எளிதல்ல?

இருந்தாலும் மனம் எதையும் ஒரு தடங்கலாக ஏற்க மறுத்தது. அப்படி ஒரு விடுதலை ஆசை வந்து விட்டது. ஒரு வெள்ளிக் கிழமையைத் தேர்ந்தெடுத்தேன். தாங்க முடியாத பல்வலி என்று சொல்லவேண்டும் என்று நினைத்தேன். வியாழக்

கிழமை அன்றே கன்னத்தைக் கையால் பொத்திக்கொண்டு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என்று நினைத்தேன்.

திங்களும் செவ்வாயும் சென்றன. ஒரே உதறல். மாட்டிக் கொண்டால் என்ன செய்வது என்று நினைத்தேன்.

புதன்கிழமை முழுதும் இந்தத் தவிப்புதான்! யாராவது என்னைக் கூர்ந்து கவனித்தால் என் மாற்றத்தைக் கண்டு பிடித்து விடுவார்கள்.

அன்று மாலை ஐந்து மணி இருக்கும். இந்து என்னைத் தேடி வந்தாள்.

அவள் ஒரு வடஇந்தியப் பெண் என்றும், பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றும், ஏற்கெனவே கூறியிருந்தேன். எழுதப் படிக்கத் தெரியாத பெண்களுக்கு அவள் கடிதம் எழுதி உதவுவதைப் பார்த்திருக்கிறேன். இல்லத்துக்குப் புதிதாக வரும் பெண் யாரானாலும் ஒரு மாதம் வரை அழாமல் இருக்க மாட்டாள். எந்தக் கல் நெஞ்சுக்காரியும் இதன் நான்கு பெரிய சுவர்களையும், உள்ளே இரும்புக் கதவுகளுடன் தெரியும் அறைகளையும் முதல் தடவையாகப் பார்த்தால் அழுது விடுவாள். நெஞ்சு அழுத்தத்துடன் தன் கலக்கத்தை வெளிக் காட்டாமல் சொந்த வீட்டுக்குள் நுழைவதுபோல் சுவாதீனமாக வந்த ஒரு இருபத்தைந்து வயதுப் பெண் உள்ளே வந்ததும், இதன் அறைகளையும் எங்களையும் பார்த்துவிட்டு, இரண்டு தரம் கண்களைக் கொட்டிவிட்டு, குபுக் என்று அழுததை நான் பார்த்திருக்கிறேன். அப்படி முதலாக அழுபவர்களைச் சமாதானப்படுத்துபவள் இந்துதான். அழுபவரின் கண்களைத் துடைத்து, தன் தோள்மீது சாய்த்துக்கொண்டு, “அழாதேம்மா! அழாதே! நாங்கள் எல்லோரும் இருக்கிறோம், உன்னைக் கவனிக்க! கவலைப்படாதே!” என்று சொல்லித் தட்டிக் கொடுப்பாள். விடாமல் ஒருவாரம் வரை, அவளைப் போய் பார்த்துத் தைரியம் சொல்லுவாள். இந்துவின் அழகு, படிப்பு, பண்பு இவை மூன்றும் புதுப் பெண்ணைக் கவர்ந்துவிடும். தனது துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள இப்படி ஒரு பெண் இருக்கிறாள் என்று தெரிந்ததும், சிறிது சிறிதாகத் தன் கவலைகளை மறக்க ஆரம்பிப்பாள். இந்த இல்லத்துக்கு இந்து ஒரு பெரிய கருணை தெய்வம்!

இந்த இந்து அன்று மாலை என்னைத் தேடி வந்ததும், மகிழ்ச்சியுடன் எழுந்து நின்றேன். "கமலா! நாளை நான் சில நாட்கள் வீட்டுக்குப் போகிறேன். இந்தத் தடவை நீ என்னோடு வரவேண்டும்" என்றாள்.

எனக்குத் திக்கென்றது. "நானா? எப்படி வருவேன், இந்து? என்னை விடுவார்களா?" என்றேன்.

"ஏன் விடமாட்டார்கள்? நன்னடத்தையுள்ள பெண் என்று பெயர் பெற்று விட்டாய். உனக்கு அனுமதி ஈஸியாகக் கிடைக்கும்.... நானே மானேஜரிடம் பேசுகிறேன். கவலைப் படாதே!" என்றாள்.

"சரி" என்றேன்.

குறிப்பிட்ட காலம் இல்லத்திற்குள் இருந்து விட்டால் எங்களுக்கு வெளியே போய்த் தங்கிவிட்டு வருவதற்கு அனுமதி கிடைக்கும். இதைப் பயன்படுத்திக்கொண்டு பல பெண்கள் தங்கள் குடும்பங்களுடன் சில நாட்கள் தங்கிவிட்டு வருவார்கள். ஆனால் பாதிப் பெண்களுக்கு இந்த வசதி கிடைப்ப தில்லை. காரணம், பெற்றோர்கள் அவர்களை அழைத்துப் போக வருவதில்லை. பலரது தந்தையர் வெகு தூரத்தில் இருப்பார்கள். பலர் பணவசதி இல்லாமல் இருப்பார்கள். பலருக்கு உறவுக் காரர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். இப்படி சூழ்நிலை உள்ளவர்கள் யாவரும் இல்லத்துக்குள்ளேயே இருப்பார்கள்.

இப்படி அதிருஷ்டம் இல்லாதவர்களை ஒவ்வொரு முறையும் ஒருவர் வீதம் வீட்டுக்கு அழைத்துப் போவாள் இந்து. அவளது சொந்தச் செல்வாக்கிலும் முயற்சியிலும்தான் இவ்விதம் செய்வாள். அவளுக்கு இதில் ஒரு திருப்தி!

நான் 'சரி' என்று அவளிடம் சொன்னபிறகு மனம் உதைக்க ஆரம்பித்தது. "நாளை என் திட்டம் பாழாகி விடுமே!" என்று நினைத்தேன். ஆனால் மறுகணம் 'இது ஒரு நல்ல சந்தர்ப்பம்! இந்துவின் வீட்டிலிருந்து தப்பித்து ஓடிவிடலாம்!" என்று இன்னொரு எண்ணமும் பளிச்சென்று எழுந்தது.

இந்த எண்ணம் இரவு முழுவதும் வலுப்பட்டது. மறுநாள் இந்துவுடன் போவதை ஆவலுடன் எதிர்பார்த் திருந்தேன்.

# 10. புனிதத்தால் வந்த வினை

**கா**லையில் இந்துவை அழைத்துப் போக அவளது மாமா வந்திருந்தார். இந்து என்னை அறிமுகப்படுத்தினாள். வெளியே போவதற்கான சடங்குகளை முடித்துவிட்டு இருவரும் புறப்பட்டோம்.

கேட்டைவிட்டு வெளியேறியதும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அது ஒரு கனவுபோல் இருந்தது. ஒரு தனியார் காரில் அதுவரை சென்றது இல்லை. இப்போது அதில் சௌகரியமாக உட்கார்ந்து போனபோது மனம் முட்டியது. கண்ணில் வந்த நீரை அவர்கள் அறியாமல் துடைத்தேன். இந்துவின் மாமா நிறைய இனிப்பு களையும் காரங்களையும் கொண்டு வந்திருந்தார். சுதந்திரமாக வேண்டுகிற அளவுக்குச் சாப்பிட்டேன்.

வீட்டில் அவளது வயதான தாய் தந்தையர் எங்களை வரவேற்றார்கள். அவர்களிடம் மிக அன்புடன் அழகாக இந்து பேசினாள். பிறகு ஒரு மணி நேரத்திற்குள் எழுந்து, "வா, கமலா!" என்று அழைத்துப் போய் வாசலில் உள்ள காரில் ஏறினாள். அவளே ஓட்ட ஆரம்பித்ததும், "எங்கே?" என்றேன்.

"சொல்கிறேன்" என்றாள் அவள்.

நெடுந்தூரம் போன பின் ஒரு கட்டடத்தின் முன்னால் காரை நிறுத்தினாள். அது ஒரு ஜைனர் கோவில். உள்ளே என்னை அழைத்துப் போனாள். தொழுதுவிட்டு வெளியே வந்தோம். காரில் ஏறியதும், "நான் என்ன குற்றம் செய்தேன், தெரியுமா?" என்றாள்.

"தெரியாது!" என்றேன்.

"கொலை!" என்றாள்.

"யாரை?"

"எனது உயிருக்கு உயிரான சிநேகிதியை!"

"ஏன்?" என்றேன்.

"லால் என்ற இளைஞனை நேசித்தேன். என் சிநேகிதி பிரதிமாவை அவருக்கு அறிமுகம் செய்தேன். இருவரும் என்னை வஞ்சித்துவிட்டுக் காதலிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆத்திரத்தில் பிரதிமாவைக் கொன்றுவிட்டேன்!"

"உனக்கு எப்படி மனம் துணிந்தது?"

"வேண்டுமென்று கொல்லவில்லை. ஒரு தீபாவளி இரவு பிரதிமா என் வீட்டுக்கு வந்தாள். எங்களுக்குள் வார்த்தை தடித்தது. ஆத்திரத்தில் பழக் கத்தியை எடுத்து அவள் வயிற்றில் குத்தி விட்டேன். மூன்றாவது நாளில் இறந்து விட்டாள். இப்போது நினைத்தால் அது எவ்வளவு பெரிய தப்பு என்று தெரிகிறது. லால் லக்னோவுக்குப் போய் வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். நான் என் சிநேகிதியை இழந்ததுதான் மிச்சம்!" என்றாள்.

மேலும் தொடர்ந்து, "இதில் ஒரு விஷயம். பிரதிமா தவறு செய்யவில்லை. லால்தான் அவளிடம் நெருங்கி தன்னைக் காதலனாக ஏற்றுக் கொள்ளும்படி கூறி இருக்கிறான். இது எனக்குத் தெரியாது. பின்னால் தெரிய வந்ததும் வருத்தப் பட்டேன்!" என்றாள்.

பின்னர் பிராயச்சித்தத்திற்காக அவள் செய்த செய்கை களையும் விவரித்தாள். பிரதிமாவின் பெற்றோரைச் சந்தித்து அவர்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டாள். அந்தப் பெற்றோர்கள் அவளைப் பார்க்கக்கூட விரும்பவில்லை. எனினும் அவளே வலுவில் பல தடவை சென்று பார்த்தாள். மனப்பூர்வமாக வருந்துகிறாள் என்பதை அறிந்து அவர்கள் அவளை மன்னித்து விட்டனர். விசித்திரம் என்னவென்றால், பிரதிமாவின் தாயார் இந்துவை "மகளே!" என்று அழைக்கிறார்.

நேராக நாங்கள் பிரதிமாவின் வீட்டுக்குப் போனோம். பிரதிமாவின் தாயார் இந்துவை அணைத்து வரவேற்றது மகிழ்ச்சியாக இருந்தது.

இரவு அந்த வீட்டில் தங்குவதாக எற்பாடு. நான் யோசித்தேன். இதுதான் தக்க சமயம். ஓடிவிட வேண்டும் என்று நினைத்தேன்.

ஒன்பது மணிக்குச் சாப்பிட்டபிறகு இந்து, அந்த அம்மாவிடம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள். நான் மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தேன். படிகளில் இறங்கித் தோட்டத்தில் காலை வைத்தேன். திரும்பி ஒரு தரம் பார்த்துவிட்டு நடக்க ஆரம்பித்தேன்.

பத்தடி தூரம் போனதும் பகீர் என்றது. தோட்டத்து பெஞ்சின்மீது பிரதிமாவின் தந்தை உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்த வேகத்தில் இலைச்சருகை மிதித்து விடவே, “பேடீ” என்று அவர் கையை நீட்டினார். பயந்துபோய், வேறு வழியில்லாமல் அவர் அருகே போனேன். நான் நிற்கும் திசையை விட்டு விட்டு வேறு பக்கம் கையைத் துழாவினார். அப்போதுதான் அவருக்கு பார்வை கிடையாது என்று தெரிந்தது. உடனே நுனிக் காலால் நடந்து காம்பவுண்டைத் தாண்டி வெளியே வந்தேன்.

மேலே நடக்கும்போது மனம் உறுத்தியது. இந்துவுக்குத் துரோகம் செய்கிறோம் என்று நினைத்தேன். அவளைப் போன்ற நல்லவளைப் பார்ப்பது அரிது. அவள் உதவியினால் இல்லத்தில் உள்ள எல்லாப் பெண்களும் ஆறுதல் பெறுகிறார்கள். நான் இப்படித் துரோகம் செய்து ஓடிவிட்டால், இனி மற்றப் பெண்களை இந்துவுடன் அனுப்ப மாட்டார்கள்.

நடக்க நடக்க மனத்தில் போராட்டம் எழுந்து சிறிது நேரத்திற்குப் பின் நடக்க முடியவில்லை. மனச்சாட்சி அவ்வளவு உறுத்தியது. வீட்டை நோக்கித் திரும்பினேன். விரைவாக நடந்தேன். தோட்டத்துக்குள் நுழைந்து, பெஞ்சின்மீது இருந்த கிழவரின் கையைப் பற்றிக்கொண்டேன். அவரை உள்ளே அழைத்துக்கொண்டு போனேன். பெரிய நிம்மதி ஏற்பட்டது.

மறுநாள் இல்லத்துக்குத் திரும்பினோம். காரில் இந்துவைப் பார்க்கும்போதெல்லாம் வெட்கமாக இருந்தது. அவளை ஏமாற்ற நினைத்ததற்கு வருந்தினேன்.

இல்லம் வந்த அடுத்த நாளே பல்வலி என்று ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கினேன். வெளியே ஒருநாள் சுதந்திரத்தை அனுபவித்த பிறகு இனிமேல் உள்ளே இருக்க முடியாது என்று உணர்ந்து கொண்டேன்.

அடுத்த நாள் காலை என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக ஏற்பாடு நடந்தது. மானிட்டர் சாரதா என்னுடன் புறப் பட்டாள். அது எனக்கு மகிழ்ச்சி.

ஆனால் கூடவே இன்னொரு தடங்கலும் எழுந்தது.

பாத்திமா என்ற ஆறு வயதுச் சிறுமி! ரயில் பிளாட் பாரத்தில் பெற்றோரை விட்டுப் பிரிந்தவள்! இங்கே வந்து இரண்டு வருடம் ஆகிவிட்டது. அவளைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருக்கும். அடிக்கடி அவளை விசாரித்துப் பேசுவேன்.

இந்த பாத்திமா என்னோடு ஆஸ்பத்திரிக்கு வருவேன் என்றாள். சங்கடமாக இருந்தது. போகும்போது கூப்பிடுகிறேன் என்றேன்! ஆனால் கூப்பிடவில்லை. நானும் சாரதாவும் கேட் பக்கம் போனபோது, "கமலா அக்கா." என்று கூவிக்கொண்டு அவள் ஓடிவந்தாள். என்ன செய்வதென்று தெரியவில்லை. பேசாமல் அவளையும் சேர்த்துக் கொண்டேன்.

ஆஸ்பத்திரியில் பெரிய 'க்யூ'வில் நின்றோம். சாரதா ஒரு பெஞ்சின்மீது உட்கார்ந்தாள். பாத்திமா என் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாள். அவளைப் பார்த்து இரக்கப் பட்டாலும், இப்போது எரிச்சலாக இருந்தது.

"பாத்திமா, போய் பெஞ்சில் உட்காரு! உனக்கு மிட்டாய் வாங்கித் தருகிறேன்'' என்றேன். தயக்கத்தோடு போய் உட்கார்ந்தாள்.

டாக்டர் அறையுள் 'க்யூ' நுழையும்போது ஒரு திருப்பம். அந்த இடத்தில் மெதுவாக நழுவினேன். படபடக்கும் இதயத் துடன் ஒரு கார் ஷெட்டுக்குள் நுழைந்தேன். சிறிது நேரம் நின்றேன். பிறகு ஒரு நாட்டுப்புறக் கும்பல் வெளியே போவதைப் பார்த்தேன். அவர்களுடன் கலந்து கொண்டு வெளியே வந்தேன்.

சரசர வென்று நடந்தேன். பின்னால் பாக்கக்கூடப் பயம்! உதறலோடு நடந்தேன். ஓடுவதற்கும் பயம்.

ரொம்ப தூரம் போனபிறகுதான் மூச்சே சரியாக வந்தது. தப்பி விட்டோம் என்று நினைத்தேன். படபடப்புடன் ஒரு கடைக்கு அருகே போய் நின்று, அங்குள்ள ஆசாமியிடம் "ஸ்டேஷன் எங்கே?" என்றேன். அவன் கேலியாகச் சிரித்தான். தூக்கி வாரிப்போட்டது. எதுவும் தெரியாமல் விழித்தேன். "இதோ நேரே உன் கண்முன்னால் இருக்கம்மா!" என்றான். திரும்பிப் பார்த்தேன். 'அப்பா' என்றது மனம். நேர் எதிரே ரயில் நிலையம் இருந்தது. என் பதட்டத்தில் அதைக் கவனிக்க வில்லை.

உள்ளே போனேன். ஒரு எதிர்பாராத அதிர்ஷ்டம்! ரயில் ஒன்று புறப்படத் தயாராக இருந்தது. ஓடினேன். யாராவது பார்க்கிறார்களோ என்று ஒரே பயம். பெண்கள் பெட்டியைத் தேடினேன். நேராக லாவட்டரிக்குள் சென்றேன். கதவைத் தாளிட்டு உள்ளே நின்று கொண்டேன். ரயில் புறப்பட்டு ஒரு ஸ்டேஷன் தாண்டிய பிறகுதான் வெளியே வந்தேன். பார்ப்பவர்கள் சந்தேகப்படாமல் இருப்பதற்காக பாவடை

தாவணிப் பகுதிகளை ஈரமாக்கிக் கொண்டேன். பெஞ்சில் உட்காருவதற்குக் கூடப் பயம்! இரண்டு தடுப்பைத் தாண்டி மூன்றாவது தடுப்பில் ஒரு ஏழைக் குடும்பம் உட்கார்ந்திருந்தது. அவர்களோடு சேர்ந்து உட்கார்ந்தேன்.

என் தவிப்பு அடங்க வெகு நேரமாயிற்று. முதலில் பாத்திமாவை நினைத்தேன். கண்ணில் நீர் வந்தது. ஒரு அனாதைப் பெண்ணை ஏமாற்றி விட்டேன். அவளுக்கு என்மீது சகோதரப் பாசம் இருந்தது. அப்படிப்பட்டவளைப் புறக் கணித்து விட்டுப் போகிறேன். இந்த இல்லத்திலேயே அவள் பதினெட்டு வயதுவரை வளரவேண்டும். பிறகு தன் வாழ்க்கை யைத் தானே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அதை நினைக்கும்போது அவள் மீது இரக்கமும் பரிவும் வந்தது. முகத்தை மறைத்துக் கொண்டு சிறிது அழுதேன்.

மானிட்டர் சாரதாவுக்கும் நான் தீமை செய்கிறேன். அவள் என்மீது நம்பிக்கை வைத்தவள். அதை உடைத்து எறிகிறேன். விஷயம் தெரிந்த பிறகு இல்லத்தில் அவளை என்ன பாடுபடுத்துவார்களோ!

பல ஸ்டேஷன்கள் வந்து போயின. ரயில் எங்கே போகிறது என்று கேட்க ஆசை! ஆனால் கேட்பதற்குப் பயம்! நல்ல வேளை; பரிசோதகர் யாரும் வரவில்லை. இருந்தாலும் ஸ்டேஷன் வரும்பொழுதெல்லாம் வெளியே எட்டிப் பார்த்தேன்.

பல மணி நேரம் வண்டி ஓடியது. அதற்குள் களைத்து விட்டேன். காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை.

ஒரு பெரிய நிலையம் வந்தது. வண்டியில உள்ள எல்லோருமே இறங்கினார்கள். நானும் இறங்கினேன். கூட்டத் தோடு மெதுவாகக் கலந்தேன்! எனக்கு ஒரே பிரமிப்பு! இனி எங்கே போவது? டிக்கெட் இல்லாததால் வெளியே போக வில்லை. பிளாட்பாரத்தில் ரயிலுக்காகக் காத்திருக்கும் கும்பலோடு சேர நினைத்தேன். ஒரு ஓரத்தை நோக்கி மெதுவாக நடந்தேன்.

சரசரவென்று பின்னால் ஒரு சத்தம். என் தோளில் இறுக்கமாக இரு கை விழுந்தது. 'ஐயோ!' என்று மனம் அலற, நடுக்கத்துடன் திரும்பினேன். "எங்கேடீ போகிறாய்?" என்று பெண்ணின் குரல். ஒரு கணத்தில் பார்வை கூடச் சரியாகத்

தெரியவில்லை. அவள் சிரிப்பதைப் பார்த்ததும்தான் தெளிவு பெற்றேன்.

கண்ணை நன்றாக விழித்துப் பார்த்ததும் அவள் யாரென்று தெரிந்தது. அழகான ஆரஞ்சு ஸாரி கட்டியிருந்த அவள் புனிதம்தான்! பல மாதங்களுக்கு முன் ரயில் பிரயா ணத்தின் போது தப்பி ஓடியவள்!

"புனிதமா? அப்பா! ஒரே பயம்! யாராவது போலீஸ் காரரோ என்று பயந்தேன்!" என்றேன்.

"நீயும் தப்பி விட்டாயா?" என்றாள்.

"ஆமாம்!" என்றேன்.

"பலே" என்றாள் அவள். "இனிமே என்ன செய்யப் போகிறாய்?"

"அதுதான் தெரியவில்லை! எங்கேயாவது ஒரு வீட்டில் வேலை கிடைத்தால் செய்துகொண்டு நிம்மதியாக வாழ விரும்புகிறேன்!"

"ஏன்? வீட்டுக்குப் போக இஷ்டமில்லையா?" என்றாள்.

"போய் பிரயோசனம் என்ன? போட்ட கடிதங்களுக்கு அவர்கள் பதில் போடவில்லை. தவிர அங்கே போனாலும் போலீஸார் என்னைப் பிடிக்க வந்துவிடுவார்கள். இதற்குள் அவர்களுக்குச் செய்தி போயிருக்கும்!" என்றேன்.

"இங்கே நின்றால்கூட ஆபத்துதான்! இப்படி வா!" என்றாள்.

பிளாட்பார எல்லையை நோக்கிப் போனோம். வழியில் போர்ட்டர்களில் ஒன்று இரண்டு பேர் அவளைக் குசலம் விசாரித்தார்கள். அவள் ஒரு தைரியத்துடன் எல்லோரிடமும் பேசினாள்.

தூரத்தில் போய் கிராதிக் கம்பி வழியே வெளியே வந்தோம். அவள் எப்படித் தப்பி ஓடினாள் என்னும் விவரங் களைச் சொல்லிக் கொண்டே வந்தாள்.

"நான் இப்போ வேலையா இருக்கேன். வயிற்றுக்கு வேணுங்கிறது கிடைக்குது. நிம்மதியா இருக்கிறேன். நீயும் இஷ்டப்பட்டால் இந்த ஊரிலேயே இருந்துடலாம்" என்றாள்.

"இஷ்டந்தான்" என்றேன்.

என்னை ஒரு ஓட்டலுக்கு அழைத்துப் போனாள். நிறைய டிபன் வாங்கிக் கொடுத்தாள். பிறகு அங்கிருந்து புறப்பட்டு சினிமாத் தியேட்டர்கள் நிறைய இருக்கும் ஒரு பகுதிக்கு அழைத்துப் போனாள். நான் சமயங்களில் பதறுவதைப் பார்த்து, ‘பயப்படாதே! இல்லத்தில் இருக்கிற பயம் வெளியே வந்த பிறகுமா?" என்றாள்.

வெகு நாழிகை அங்கே நின்று கொண்டிருந்தோம். புனிதம் சுற்றிவரப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு சட்டென்று என்னை விட்டுவிட்டு, எட்டத்தில் போய்க் கொண் டிருக்கும் இரண்டு பேரிடம் போய்ப் பேசினாள். அவர்கள் அவளுக்குத் தெரிந்தவர்கள்போல் தோன்றியது. பிறகு, அந்த இருவரும் என்னை நோக்கி வந்தார்கள்.

“வா, கமலா! நாம்ப போகலாம்!" என்றாள் புனிதம் வந்தவர்கள் இரண்டு ஆட்டோக்களைப் பிடித்தார்கள். “நீ அவரோட அதிலே ஏறிக்கோ!" என்று சொன்ன புனிதம் இரண்டாவது மனிதரோடு மற்றொரு ஆட்டோவில் ஏறிக் கொண்டாள். எனக்கு மனம் திக் என்றது. வெளிக்காட்டவில்லை.

ஆட்டோக்கள் புறப்பட்டன. சாலைகளைக் கடந்து கூட்டமில்லாத பகுதிகள் வழியே ஓடின. ஒவ்வொரு நிமிடமும் எனக்கு ரத்தம் தலைக்கேறியது. ‘எங்கே போகிறோம்? இந்த மனிதர்கள் யார்?’

என்னோடு வரும் ஆளைப் பார்த்தேன். நாற்பது வயது இருக்கும். மீசை வைத்திருந்தான். பாதி பட்டணமும் பாதி நாட்டுப்புறமாகவும் தெரிந்தது. தைரியமாக அவனிடம் “எங்கே போகிறோம்?" என்றேன்.

“தெரியாதா?" என்று என்னைப் பார்த்துக் கேட்டான்.

“தெரியாது" என்றேன்.

அதற்குள் வண்டிகள் ஒரு கடை முன் நின்றன. அது பிராந்திக்கடை! என்னை இறங்கச் சொன்னதும் திடுக்கிட்டேன்.

சிவப்பு நிறத் திரவத்தை ஒரு கிளாஸில் ஊற்றி என்னிடம் கொடுத்தார்கள். அதன் நெடி மோசமாக இருந்தது. “வேண்டாம்" என்றேன். வற்புறுத்தினார்கள். மறுத்தேன்.

“பரவாயில்லை. பழக்கி வைக்கலாம். ஒரு பாட்டில் பீர் கொடு" என்றான் மீசைக்காரன்.

புனிதம் என் அருகே வந்தாள்.

நான் கோபத்துடன், அவள் காதில், "இதெல்லாம் என்ன?" என்று கேட்டேன்.

"அவங்க வேண்டியவங்கதான்! அதிகம் பேசாதே! சொல்ற படி நடந்துக்க!" என்றாள்.

அவள் கூறியது பக் என்றது. மீண்டும் மாட்டிக்கொள் வோமோ என்று நினைத்தேன். பேசாமல் வாயை மூடிக் கொண்டேன்.

ஆட்டோக்கள் மீண்டும் புறப்பட்டன. ஒரு ஓட்டல் முன்னால் நின்றன. ஆண்கள் இருவரும் கவுண்ட்டரில் பேசி, கையெழுத்துப் போட்டு, இரண்டு சாவிகளை வாங்கி வந்தார்கள். வெள்ளை யூனிபாரத்து சர்வர்கள் எங்களை முறைத்துப் பார்த்தார்கள்.

இரு ஜோடிகளும் தனித்தனி அறைக்குள் நுழைந்தோம். எனக்கு அழுகை வந்தது. உடம்பின் ஒவ்வொரு பகுதியும் ஆட்டம் எடுத்தது. தவறான இடத்தில் மாட்டிக்கொண்டோம் என்று நினைத்தேன்.

தயங்கிக் கொண்டிருந்த என்னை மீசைக்காரன் அப்படியே, தூக்கி கட்டில்மீது இறுத்தினான். பதறிக்கொண்டு, "என்னைத் தொடாதீர்கள்" என்றேன்.

''பயப்படாதே கண்ணு!'' என்று சொல்லி அருகில் உட்கார்ந்தான். நான் நகர்வதற்குள் என் ஜாக்கெட்டைத் திறந்து விட்டான். சரசர வென்று கைகள் என் உடம்புக்குள் நுழைந்த போது துள்ளி அப்பால் போனேன். பிராந்தி நெடியுடன் என் அருகில் வந்தான். மீண்டும் அப்பால் போனேன்.

அவனுக்குக் கோபம் வந்தது. என் கையைப் பிடித்து முறுக்கினான். "ஏ பொண்ணு! சொன்னபடி கேட்கல்லே, கொன்னுடுவேன்" என்றான்.

'ஆஆ' என்று வலியால் கத்தினேன். கையைத் தளர்த்தினான்.

பிறகு பாட்டிலைத் திறந்து பீரை ஊற்றி என்னிடம் கொடுத்து, "குடி" என்றான். தயங்கினேன். கையை ஓங்கி மிரட்டினான். கொஞ்சம் குடித்தேன். வயிற்றைக் குமட்டியது. வாந்தி எடுத்தேன்.

பிறகு எழுந்து வந்தான். என் கையை இறுகப் பற்றினான். நடுங்கி அழுது கொண்டே, "என்னை விட்டு விடுங்க! எதுவும் செய்யாதீங்க!" என்று கெஞ்சினான்.

"பேசாம இரு" என்று இரைந்தான். மறுகணம் அருகே வந்து தாவணியை உறுவினான். பிறகு என்னைக் குழந்தை போல் தூக்கி எடுத்து ஒருவித வெறியுடன் அறை முழுதும் டான்ஸ் ஆடினான்.

முடிவில் என்னைக் கட்டிலில் தொப்பென்று போட்டுத் தானும் கட்டிலில் குதித்தான். இடுப்புச் சதையை கையால் அழுத்திப் பிடித்தான். 'ஆஆ' என்று அலறினேன். இரவு பத்து மணிவரை 'ஆஆ' என்று அலறியதற்குக் கணக்கு வழக்கு கிடையாது. முடிவில் அவன் விடுவித்துக் கொண்டு போனபோது நான் பாதி உயிர் ஆகிவிட்டேன். முன்பு திருச்சியில் பலவந்தப் படுத்தப் பட்டதற்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசம்! ஒரு ஆணின் மூர்க்கத்தனத்தை இப்போது முதல் தடவையாக உணர நேர்ந்தது.

பத்து மணிக்குச் சோர்ந்துபோய்ப் படுத்த மீசைக்காரன் அரைமணி அப்படியே கிடந்தான். பிறகு என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு எழுந்தான். சட்டையை மாட்டிக்கொண்டு, "களைச்சுப் போயிட்டேன்னு பார்த்தியா? இன்னொரு ரவுண்டு ரம் போட்டுட்டு வர்றேன் பாரு!" என்று சொல்லி என் வயிற்றில் பலமாகக் கிள்ளி விட்டு, வெளியே போனான். பூட்டை எடுத்து வெளிப்பக்கம் பூட்டி விட்டுப் போனான்.

சிறிது நேரம் கண்ணீர் உகுத்தேன். மெதுவாக எழுந்தேன். தரையில் தாறுமாறாகக் கிடந்த பாவாடை தாவணிகளை எடுத்தேன். என்னால் நிற்க முடியவில்லை. உடம்பு தள்ளாடியது.

அந்தப் பாவி எப்போது வருவானோ என்று காத்திருந்தேன். அவனது இரண்டாவது ரவுண்டை எப்படித் தவிர்ப்பது என்று சிந்தித்தேன்.

ஒரு மணிநேரம் சென்றது. எனக்குப் பாதித் தூக்கம்! லா லா லா என்று கோரமாக ஒரு பாட்டைப் பாடிக் கொண்டு, செருப்பை சறுக் சறுக்கென்று தேய்த்துக் கொண்டு, அவன் வரும் சப்தம் கேட்டது. கதவைத் தட தடவென்று தட்டினான்.

“கழுதை! கதவைத் திற!” என்று கத்தினான். நடுங்கிக் கொண்டே, “உங்கக் கிட்டே தான் சாவி இருக்கு!” என்றேன்.

“எங்கிட்டயா இருக்கு?” என்று கூறிவிட்டு மௌன மானான். “சனியன். சனியன்” என்று பல தடவை சொல்லிக் கொண்டு, கடைசியில் பூட்டைத் திறந்தான். உள்ளே வந்தான். ஒரே நெடி! நன்றாகக் குடித்திருந்தான்.

“இப்படி வாடி” என்று கத்தினான். போகவில்லை. இருட்டில் துழாவினான். சுவிட்ச் இருக்கும் இடம் தெரிய வில்லை. சுற்றிச் சுற்றித் தள்ளாடினான். “வாடி!” என்று பல முறை அழைத்தான். பிறகு கட்டில் மீது ஏறி, “வரமாட்டாயா?” என்று சொல்லிக்கொண்டே படுத்தான்.

அறையின் மூலை ஓரத்தில் நடுங்கிக் கொண்டிருந்தேன். அவனுக்குப் பிடிபடாமல் கட்டிலின்மீது பல தடவை ஏறி இறங்கிச் சுற்றி வந்ததில் கால் ரொம்ப வலித்தது. இனிமேல் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது என்று தோன்றியது. படுக்கையை விட்டு அவன் எழுந்தால் ஆபத்து என்று நினைத்தேன். அந்த இருட்டில் சத்தமிடாமல் விம்மிக்கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். எதற்காக அப்படிப் படுத்திருக்கிறான் என்று வெகு நேரம் தெரியவில்லை. அசையாமல் இருந்தான். என்னை ஏமாற்றுகிறானோ என்று நினைத்தேன்.

பிறகு அவன் குறட்டை விட ஆரம்பித்ததும்தான், ‘அப்பாடா! என்று நிம்மதி! நன்றாகக் குடித்துவிட்டு வந்து விட்டான். போதையில் மெய்மறந்து உறங்குகிறான்.

வெளியே ஓடலாமா என்று யோசித்தேன். எங்கேயாவது? அதுவும் இரவு வேளையில்! வேறு யாரிடமாவது சிக்கி விட்டால்....?

கதவோரம் தரையில் படுத்தேன், ஒரே குளிர். உடம்பு நடுக்கமெடுத்தது. கட்டிலில் உள்ள போர்வையை எடுக்கக் கூடப் பயம்! உறங்க முயன்றேன்.

பல கெட்ட கனவுகளுக்கு இடையே அரைத் தூக்கமாகத் தூங்கினேன். காலை விடியுமுன், கண் விழித்தேன். கட்டிலில் அவன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். நன்றாக விடியும் மட்டும் காத்திருந்தேன்.

விடிந்ததும், அவனைப் போய்ப் பார்த்தேன். ஒரே தூக்கம்! போதை தெளியவில்லை. எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. கீழே தரையில் அவனது மணி பர்ஸ் திறந்துகொண்டு குப்புறக் கிடந்தது. அதை எடுத்தேன். இருபத்திரண்டு ரூபாயும் சில்லறையும் இருந்தது. "திண்டாடட்டும்!" என்று நினைத்துக் கொண்டு ரூபாய் நோட்டுக்களை எடுத்து மடியில் செருகினேன். வெளி நோக்கி நடந்தேன்.

கதவைத் திறந்தபோது ஒரு நினைவு! இரவு நடந்த காரியத் திற்கும் கூலியாக நான் இருபத்திரண்டு ரூபாய் எடுத்துக் கொண்டேன் என்று தோன்றியது. 'சீ' என்று ரூபாய் நோட்டுக் களை வெளியே எடுத்தேன். "நான் எடுத்துக் கொள்ளக்கூடாது. அவனுக்கும் உபயோகப்படக் கூடாது'' என்று நினைத்து நோட்டுக்களைச் சுக்குநூறாகக் கிழித்து அறையில் விசிறினேன்.

வெளியே வந்தேன். கதவை இழுத்து மூடினேன்.

புனிதம் இருக்கும் அறையைப் பார்த்தேன். யாரும் இன்னும் எழுந்திருக்கவில்லை.

சுவாதீனமாக நடந்து முகப்பு அறையைத் தாண்டினேன். வாசல் வரும் வரை ஒரே தவிப்பு!

சூரியன் சுள்ளென்று உறைக்கும்வரை நடந்தேன். இனிமேல் பயமில்லை என்று தைரியம் வந்தபிறகு ஒரு மரநிழலில் ஒதுங்கினேன்.

உடம்பில் ஏதோ ஊர்ந்து சென்றது. தலையிலிருந்து கால் வரை ஊர்ந்தது. கண் ஜிவுஜிவுத்தது. உடம்பு கனத்தது. ஒரு குளிர்ஜுரம் என்மீது அவசரமாக இறங்கிக் கொண்டிருந்தது.

கை, கால்கள் வெடவெடத்தன. எங்கேயாவது படுக்க வேண்டும் என்று நினைத்தேன். அருகில் இருந்த ஒரு வீட்டுக்குப் போனேன். 'அம்மா' என்று கூப்பிட்டேன். பிறகு நிற்க முடியாமல் படிகளில் சாய்ந்தேன்.

யாரோ ஒரு பெண்மணி வந்து, "யார்?" என்று கேட்டது என் காதில் கடைசியாக விழுந்தது. பிறகு நினைவு இல்லை.

கண்ணை விழித்தபோது படுக்கையில் இருந்தேன். ஒரு வீட்டின் அறை என்று தெரிந்தது. அருகே அந்தப் பெண்மணி இருந்தாள். அவளைப் பார்த்ததும் நன்றி தெரிவித்தேன். டாக்டரை அழைத்து வந்து ஊசி போட்டதாகக் கூறினாள். நான் யார், எப்படி அங்கே வந்தேன் என்று கேட்டாள்.

யாவையும் மறைத்துக் கூறினேன். அன்று அங்கே படுப்ப தற்கு அனுமதி தந்தாள். ரொட்டியும் பாலும் தந்தாள். நிம்மதி யாக அந்தத் தினத்தை அங்கே கழித்தேன். இரவில் ஜுரம் விறுவிறுவென்று தணிந்து விட்டது.

மறுநாள் அந்தப் பெண்மணியும் அவள் கணவரும் ஒரு ஐந்து ரூபாயை என்னிடம் கொடுத்து வழி அனுப்பினார்கள். ரயில் நிலையத்திற்குப் போகிறேன் என்று அவர்களிடம் சொன்னாலும், அங்கே போகவில்லை. புனிதம் அங்கே இருப்பாள் என்று பயம்!

## 11. பயணம் தொடர்ந்தது

பல தெருக்களைத் தாண்டி நடந்ததும் யார் வீட்டிலாவது வேலை கேட்டால் என்ன என்று நினைத்தேன். ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கினேன். யாரும் வேலை இல்லை என்றார்கள்.

கடைசியாக ஒரு வீட்டில் ஏறி இறங்கியதும், ஒரு வயதான வேலைக்காரி என்னைத் தொடர்ந்து வந்தாள். 'வேலை தானே வேணும்! என்னோடு வர்றியா?" என்றாள். போனேன்.

குறுகலான சந்துகளைக் கடந்து ஒரு வீட்டு வாசலில் நின்று கொண்டு, "சேட், ஏ, சேட்!" என்று கத்தினாள். தொள தொள என்ற பைஜாமாவுடன் ஒருவர் வெளியே வந்தார். தலைமுடியும் மீசையும் நரைத்திருந்தன. வேலைக்காரி விஷயத்தைக் கூறினாள். "ஓ! வாங்கித் தர்ரேம்மா! வாம்மா, இங்கே!" என்றார். உள்ளே அழைத்துப் போனார்.

அவர் மனைவி வந்தாள். அவர்கள் வடஇந்தியர்கள். இந்தியில் பேசினார்கள். அந்த அம்மாள் என்னைப் பார்த்து, "சாப்பாடு போட்டுப் பத்து ரூபாய் தருவேன்!" என்று கூலி பேசினாள். "எது தந்தாலும் போதும்!" என்றேன்.

மூன்று நாட்கள் வேலை செய்தேன். அவ்வளவு கஷ்ட மாகத் தெரியவில்லை. என்னை விசாரித்து என் கதையைச் சொல்லச் சொன்னார்கள். அதைக் கேட்டபிறகு அவர்கள் வருத்தப்பட்டார்கள். ஆறுதல் சொன்னார்கள். இரண்டு பழைய ஸாரிகளைக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொன்னார்கள்.

நான்காம் நாள் காலையில், அந்தப் பெண்மணி என்னிடம் வந்து, 'கமலா! எங்க அக்கா பம்பாயிலே இருக்காங்க!

அவங்களுக்கு நல்ல வேலைக்காரியே கிடைக்க மாட்டேங் கறாங்க! இந்தப் பக்கத்து வேலைக்காரி வேணுங்கிறாங்க! நீ போறியா!" என்றாள்.

எனக்கு ஒரே சந்தோஷம். பம்பாய் என்றதும் மகிழ்ச்சி! கண்காணாத இடத்தில் ஒரு வீட்டில் நிம்மதியாக வேலை செய்துகொண்டு வாழ்வது எனக்கு ரொம்பவும் பிடித்தது. சம்மதம் தெரிவித்தேன்.

"இன்னும் இரண்டு நாளில் போகலாம்! ரெடியா இரு!" என்றாள்.

ஏழாம் நாள் புறப்பட்டோம். என்னை அழைத்துக் கொண்டு அந்த பைஜாமாக்காரர் புறப்பட்டார். ரயில் ஏறி இரண்டாம் நாள் பம்பாய் போய்ச் சேர்ந்தோம்.

தெருக்களும், சாலைகளும், ஜனங்களும் - அதிசயமாகத் தெரிந்தன. பஸ்ஸில் பிரயாணம் செய்து பல மாடி உள்ள ஒரு கட்டிடத்துக்கு வந்தோம். நான்கு மாடிகள் ஏறி அவர்களது போர்ஷனை அடைந்தோம். என்னையும் பைஜாமாக்காரரையும் பார்த்ததும் அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. இந்தியில் என்னை வரவேற்றார்கள். பேசினார்கள். எனக்கு ஒரு வார்த்தைகூடப் புரியவில்லை. விழித்தேன்.

எல்லோரும் நல்லவர்களாகத் தெரிந்தார்கள். பம்பாய்க் காரிக்கு ஒரு பதினாறு வயது மகனும் இரண்டு பெண்களும் இருந்தார்கள். எல்லோரும் நல்ல அழகாக இருந்தார்கள். எதற்கெடுத்தாலும் நான் விழிப்பது கண்டு அவர்களுக்கு ஒரே சிரிப்பு!

பைஜாமாக்காரர் எனக்குத் தைரியம் சொல்லிவிட்டு மறுநாள் இரவு ஊருக்குப் புறப்பட்டார். பம்பாய்க்காரி எனக்கு வீட்டு வேலைகளைச் சொல்லித் தந்தாள். அவளும் என்னிடம் அன்பாக நடந்தாள். இரவில் எல்லோருமே ஒரே அறையில் படுத்தோம்.

பம்பாய்க்காரியின் கணவர் வயதானவர். அவருக்கு அவள் இரண்டாவது தாரமாக இருக்கவேண்டும்! பகல் எல்லாம் வெளியே போய்விட்டு இரவு திரும்பி வருவார். சிடுசிடு என்று பேசுவார்.

ஒருநாள் வீட்டுக்காரியும் குழந்தைகளும் வெளியே போயிருந்தபோது, அவர் திடீரென்று வீட்டுக்குத் திரும்பினார்.

என் அருகே வந்து என்னவோ கேட்டார் எனக்குப் புரியவில்லை. பிறகு சைகையில் பேசினார். அதுவும் புரியவில்லை. பிறகு வெளியே போய் மற்றொரு வயதானவரை அழைத்து வந்தார். அவர் கன்னடக்காரர். எனக்குக் கன்னடம் தெரியுமா என்றார்! தெரியும் என்றேன். “நீ பெரியவளாகி விட்டாயா?” என்று கேட்டார்.

திடுக்கிட்டேன்.

இரண்டு தடவை கேட்ட பின், “ஆமாம்” என்றேன்.

“எவ்வளவு நாளாச்சு?”

சொன்னேன்.

புதியவர் அதன்பின் போய்விட்டார். நான் கலவரத்துடன் நிற்கும்போது வீட்டுக்காரர் உள்ளே போய் ஒரு படுக்கையை விரித்துப் படுத்தார்.

என்னைப் பயம் கவ்வியது.

அன்று ஏதாவது நடக்குமோ என்று நினைத்தேன். எதுவும் நடக்கவில்லை. மனம் சமாதானம் அடைந்தது.

இருந்தும் அவர் ஏன் அப்படிக் கேட்டார் என்று யோசித்துக் குழம்பினேன். புரியவில்லை. இரண்டு மூன்று நாட்கள் என்னிடம் எப்படிப் பேசுகிறார், நடந்து கொள்கிறார் என்று கவனித்தேன். எந்த மாறுதலும் இல்லை. அதன்பின் இது வீண் கலக்கம் என்று விட்டு விட்டேன்.

அந்த வீட்டுப் பையன் பெயர் தீபக். நன்றாகப் பாடுவான்.

என்னைப் பார்க்கும் போதெல்லாம் சைகை காட்டி, சாப்பிட்டு விட்டேனா என்று கேட்பான். எது வாங்கி வந்தாலும் எனக்குக் கொடுத்துவிட்டுச் சாப்பிடுவான்.

மேலே சமையலறையில் தெருவை நோக்கி ஒரு சன்னல் உண்டு. அவன் பள்ளிக்கூடம் போகும்போது சன்னல் வழியாகப் பார்ப்பான். எனக்குக் கையை அசைத்து விட்டுப் போவான்.

ஒரு நாள் வேலை காரணமாகச் சன்னல் பக்கம் போகவில்லை. சிறிது நேரத்தில் அவன் மேலே வந்தான். குழாயடியில் பாத்திரம் கழுவிக்கொண்டிருந்த என் தோளில் தட்டி இந்தியில் ஏதோ கேட்டான். எனக்குப் புரிந்து விட்டது. எழுந்து சமையலறை சன்னல் பக்கம் போய்க் கையைக் காட்டினேன். திருப்தியுடன் போனான்.

சில நாட்கள் அவனைக் கவனித்ததில் என்மீது அவனுக்கு ஓர் ஆர்வம் இருப்பது தெரிந்தது. அதைப்பற்றி யோசிக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. அவனைப் பார்ப்பதில் எனக்கு அலாதி இன்பம் ஏற்பட்டது. எதையாவது காரணம் காட்டி அவன் முன்னால் குறுக்கும் நெடுக்கும் போனேன். (போர்ஷனில் இரண்டு அறைகள்தான்) அவன் ரகசியமாகக் கவனிக்கிறான் என்பதை அறிந்ததில் எனக்கு மகிழ்ச்சி! நானும் அவனை அப்படிக் கவனிக்கிறேன் என்பதையும் புரிய வைத்தேன்.

ஒரு நாள் மாடியில் தண்ணீர் குழாய் ரிப்பேர் ஆகி விட்டது. கீழே இறங்கிப் போய்த் தண்ணீர் எடுத்து வந்தோம். மாடிப்படிகள் எப்போதும் வெறிச்சென்றும் இருட்டாகவும் இருக்கும். ஒரே நாற்றமும் அடிக்கும். நான்காவது தடவை நான் ஏறும்போது ஒரே அயர்ச்சியாக இருந்தது. படியில் நின்ற போது தீபக் தடதடவென்று இறங்கி வந்தான். என் தளர்ச்சியைப் பார்த்ததும் கண் கலங்கிவிட்டான். வாளியைக் கீழே இறக்கி வைத்துவிட்டு எதிர்பார்க்காதபோது சட்டென்று என்னை அணைத்து முத்தமிட்டான். அதிர்ச்சியில் நான் அவனை விலக்க நேர்ந்தபோது இந்தியில் என்னவோ பரிவோடு பேசினான். பிறகு வாளியை அவனே தூக்கி மாடிக்குக் கொண்டு போனான்.

படிக்கட்டில் நடந்த நிகழ்ச்சியை மேலே முதல் படியி லிருந்து அவனது தங்கை கவனித்திருக்கிறாள். போர்ஷனுக்குள் போனதும், அவள் சட சடவென்று என்னிடம் பேசியபோது புரிந்து விட்டது. ஒரே பயத்தில் உறைந்து போனேன்.

தீபக் விடவில்லை. பதிலுக்கு, "நீ அந்த மாணவனோடு பேசினாய்! இந்த மாணவனுடைய வீட்டுக்குப் போனாய்! எனக்குத் தெரியும். அதையும் நான் அம்மாவிடம் சொல்லி விடுவேன்!'' என்று மிரட்டினான். அப்படித்தான் நான் ஊகித்துக் கொண்டேன். அது தப்பாகக் கூட இருக்கலாம். வீட்டுக்கார அம்மா உள்ளே வந்தபோது இரண்டு பேரும் கப்சிப் ஆகிவிட்டார்கள். எனக்குப் பெரிய நிம்மதி.

அன்றிலிருந்து அந்தத் தங்கை என்னிடம் சரியாகப் பேசுவது கிடையாது. என் காரியங்களை உன்னிப்பாகக் கவனித்தாள். நான் தீபக்கைப் பார்ப்பதை நிறுத்தி விட்டேன். நான் பம்பாய் போய்ச் சேர்ந்த நான்காவது வாரத்தில் டில்லியி லிருந்து ஒரு பெண்மணி வந்து சேர்ந்தாள். நாற்பது வயதிருக்கும்.

பருமனாக இருந்தாள். ஒரு கைக் குழந்தையோடு வந்தாள். வீட்டில் அவளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

என்னை அவளுக்கு அறிமுகப் படுத்தியபோது, அருகே வந்து அதிசயப் பொருளைப் பார்ப்பதுபோல் சுற்றி வந்து பார்த்தாள்.

அன்று இரவில் சாப்பாடு ஆன பிறகு பிள்ளைகள் எல்லோரையும் கீழே அனுப்பிவைத்தார்கள். பிறகு வீட்டுக்கார தம்பதியும் டில்லி அம்மாளும் ரொம்ப நாழிகை பேசினார்கள். வீட்டுக்காரர் வாய் திறந்து அதிகமாகப் பேசுவதை இப்போது தான் பார்த்தேன். பண விஷயமாக அவர்களுக்குள் தகராறு நடக்கிறது என்று ஊகித்துக் கொண்டேன்.

மறுநாள் காலையில் வீட்டுக்காரியும், டில்லி அம்மாளும் என்னிடம் வந்து சைகையில் பேசினார்கள். டில்லியில் அந்த அம்மாளுக்கு வேலைக்காரி வேண்டும் என்றும், நான் அவளுடன் போகவேண்டும் என்றும் வீட்டுக்காரி தெரிவித்தாள். எனக்கு அது அதிசயமாகத் தெரிந்தாலும் பாதித் தயக்கத்துடன் ‘சரி’ என்றேன். டில்லிக்காரி நிறையப் பணம் தருவாள் என்றும், நான் அங்கே வசதியாக வாழலாம் என்றும் வீட்டுக்காரி என்னிடம் விவரமாக விளக்கினாள். சரி, வாழ்க்கையில் இன்னொரு ஊரைப் பார்த்தாற்போல இருக்கும் என்று நான் நினைத்தேன்.

அன்று மாலையில் டில்லிக்காரி என்னை அழைத்துக் கொண்டு வெளியே போனாள். துணிக்கடைக்குச் சென்று எனக்கு இரண்டு ஸாரிகளை வாங்கினாள். அவளுக்கும் துணிகளை வாங்கிக் கொண்டாள். பிறகு பழைய துணிக்கடை களுக்குச் சென்று என் அளவுக்கு வேண்டிய சல்வார் கமீஸ் வாங்கினாள். அங்கிருந்து ஒரு சினிமாவுக்கு என்னை அழைத்துச் சென்றாள். அவளுக்குத் தாராள மனம் இருக்கிறது என்று நினைத்து சந்தோஷப் பட்டேன்.

வீட்டுக்குத் திரும்பும்போது நடந்து வந்ததால் மணி பதினொன்று ஆகிவிட்டது. மாடிப் படிகளில் விளக்குக் கிடையாது. தடவிக் கொண்டு ஏறும்போது சில சத்தங்கள் கேட்டன. திடுக்கிட்டுப் பார்த்தால் இருட்டுக்குள் சில காட்சிகள் தெரிய வந்தன. படிகளின் ஒவ்வொரு திருப்பத்திலும் யாராவது ஆணும் பெண்ணும் அணைத்துக் கொண்டு கிடந்தார்கள். நாங்கள் வருவதைப் பார்த்து அவசரமாக விடுபட்டு

எழுந்தவர்கள் உண்டு. சிலர் அதைப் பற்றிக் கவலைப்படாமல் அதே நிலையில் கிடந்தார்கள். நாம்தான் அவர்களை மிதிக்காமல் அவசரமாகப் போக வேண்டும்.

இவர்கள் யாவரும் கணவன் மனைவி என்று நினைத்தேன். போர்ஷனுக்குள் தனி இடம் கிடைக்காததால் மாடிப் படித் திருப்பங்களைத் தங்கள் படுக்கை அறைகளாக்கிக் கொண்டிருந் தார்கள்.

ஆனால் இரண்டு திருப்பங்களில் சிறு வயதுக்காரர்கள் இருப்பது தெரிந்தது. நாங்கள் போகும்போது சட்டென்று போர்வையால் தங்களை மறைத்துக் கொண்டார்கள். மூன்றாவது மாடித் திருப்பத்தில் இருந்தவள் அந்தப் போர்ஷனில் உள்ள மணமாகாத இளம்பெண் என்று எனக்குத் தெரியும். இரவு தூக்கம் வரவில்லை. நான் பார்த்த காட்சிகள் மனத்தை உறுத்தின. அந்தக் கட்டிடத்தின் நிலவரங்கள் யாவும் கீழ்த்தரமாகத் தெரிந்தன. இந்த இடத்தை விட்டுப் போவதுகூட நல்லது என்று தோன்றியது.

காலையில் குளித்த பிறகு, மொபைல் இஸ்திரிக்காரன் கீழே இருந்து கத்தினான். ஊருக்குப் போகப் போவதால் டில்லிக்காரி என் துணிகளை இஸ்திரி போடச் சொன்னாள். கீழே இறங்கிப் போனேன்.

பத்து நிமிடத்தில் இஸ்திரி வேலை முடிந்து விட்டது. திரும்பும் போது தீபக் என்னை நோக்கி வந்தான். அவசரமாகக் கையைக் காட்டி இரண்டு கட்டிடங்களுக்கு இடையே உள்ள சந்துக்கு அழைத்துப் போனான். அங்கே என் கையில் அவன் பத்து ரூபாய் நோட்டை திணித்தபோது திடுக்கிட்டேன். மேலே நான் யோசிப்பதற்குள் படபடப்புடன் அவசரமாகப் பேசினான். அதில் ஒரு கவலை தொனித்தது. என்னவோ சொல்லி என்னைக் கலவரப் படுத்தினான். அவன் கண்களில் நீர்கூடத் துளிர்த் திருந்தது.

அவன் சைகைகளிலிருந்து ஒன்று புரிந்து கொள்ள முடிந்தது. என்னை எங்கேயாவது போகச் சொல்கிறான். அதை அவசரமாகவும் செய்யச் சொல்கிறான். அதற்காகத்தான் பணமும் கொடுக்கிறான்.

எதற்காக அப்படிச் சொல்கிறான் என்று புரியவில்லை. தவிர, அவன் சொன்னதை நான் சரியாகப் புரிந்து கொண்டேனா

என்பதும் சந்தேகம். ஆனால் நான் சும்மா சிரித்து விட்டுத் திரும்பும் போது, அவன் என் கையை இழுத்து, அடுத்த தெருவுக்குள் கொண்டு போக முனைந்தான்.

நான் யோசித்தேன். அவனிடம் தவறான எண்ணம் எதுவும் இல்லை என்று புரிந்து கொண்டேன். எங்கே அழைத்துப் போகிறான் பார்க்கலாம் என்று தொடர்ந்தேன். இரண்டு தெருக்களைத் தாண்டினான். ஒரு கடையில் போய் என்னவோ விசாரித்தான். கடைக்காரன் என்னவோ பதில் சொன்னான்.

மேலும் இரண்டு இடங்களில் அவன் விசாரிக்கும் போது எனக்கு விஷயம் புரிந்தது. தமிழ் தெரியும் ஒருவரை அவன் தேடிக் கொண்டிருந்தான். அவர் மூலமாக என்னிடம் பேச விரும்பினான்.

அவனது அவசரத்திற்கு ஒரு மார்வாடி கிடைத்தார். அவர் தமிழ் நாட்டில் இருந்திருக்க வேண்டும். அரைகுறையாகத் தமிழ் பேசினார்.

"அரே உன்னெ ஊர் விட்டுப் போச் சொல்றான்" என்றார் அவர், தீபக் கூறியதை மொழிப்பெயர்த்து.

"ஏன்?" என்றேன்.

இப்போது தீபக்கே யோசனையில் இருந்தான். பிறகு நிதானித்துக் கொண்டு, "இங்கே இருந்தால் ஆபத்து!" என்றான்.

"என்ன ஆபத்து?" என்று கேட்டேன்.

அவன் உடனே பதில் சொல்லவில்லை. மார்வாடியை உற்றுப் பார்த்தான். "என்ன ஆபத்து!" என்று மார்வாடியே அவனிடம் மீண்டும் கேட்டார்.

தீபக் பேசவில்லை. மார்வாடியிடம் அதைச் சொல் வதற்குத் தயங்கினான் என்று தெரிந்தது.

ஒரு கணம் யோசித்து விட்டு, டில்லிக்குப் போனால் நிறைய ஆபத்து உண்டு. அதனால் போகாதே!" என்றான் மீண்டும்.

"அப்படியானால், அம்மாவிடம் 'நான் இங்கேயே இருந்து விடுகிறேன்' என்று சொல்லிவிடவா?" என்றேன்.

அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை.

"கமலா! நீ இங்கிருப்பது கூடச் சரியில்லை. உடனே எங்கேயாவது போய் விடு!" என்றான்.

எனக்குச் சிரிப்பாக வந்தது. மார்வாடியும் சிரித்தார்.

“சும்மா ஆபத்து, ஆபத்து, என்கிறாயே! என்ன ஆபத்து?” என்று நானும் கேட்டேன். மார்வாடியும் அடித்துக் கேட்டார். தீபக் பதில் சொல்லவில்லை. அவன் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னான்.

பிறகு எதுவும் சரிப்படாமல் போகவே நான் புறப்பட்டேன். இரண்டு தடவை என்னைத் தடுக்க முயன்ற அவன் முடிவில் வேறு வழியில்லாமல் என்னைப் பின் தொடர்ந்தான்.

தீபக் யோசித்தவாறு நடந்தான். இடையிடையே என்னைத் திரும்பிப் பார்த்தான். என் மொழி அவனுக்குத் தெரியவில்லையே என்று தோன்றியது.

என் மனத்தில் அப்போது நான் நினைத்ததைச் சொல் கிறேன். என்னை அவன் காதலிக்கிறான் என்று நினைத்தேன். நான் டில்லிக்குப் போவதை அவன் விரும்பவில்லை. இங்கே இருப்பதைத்தான் விரும்புகிறான். அவனது காதலை மேலும் உறுதியாக்கி என்னை மணம் செய்து கொள்ள விரும்புகிறான். என்னுடன் தனியாகப் பேசுவதற்கோ, தனியாக இருப்பதற்கோ அந்த வீட்டில் வசதி இல்லை. ஆகவே என்னை வெளியே எங்கேயாவது இருக்கச் சொல்கிறான்.

அப்படி அவன் என்னை வெளியே போகச் சொல்வதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. நான் டில்லிக்குப் போவது என்று இரு குடும்பத்தாரும் பேசி முடிவு செய்து விட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் நான் திடீரென்று போகவில்லை என்றால் அது சரியாக இராது, நான் எங்கேயாவது போய் விட்டால் எனது டில்லிப் பயணம் எப்படியும் உடனே தடைப்படும். இந்தக் காரணத்திற்காகத்தான் என்னை எங்கேயாவது போகச் சொல்கிறான்.

இதையெல்லாம் நினைத்த போது மிகவும் சந்தோஷப் பட்டேன். என்னை அக்கறையோடும் அன்போடும் ஒருவர் கவனிக்கிறார் என்று மகிழ்ச்சி அடைந்தேன். கடந்த காலத் துக்ககரமான வாழ்க்கைக்கு இடையில் அது இனிமையான பகுதியாகத் தோன்றிது.

வீட்டு முனைக்கு வந்தபோதுகூட அவன் என் கையைப் பிடித்துப் பரிவுடன் ஏதோ சொன்னான். ‘நான் உன்னிடம்

பேசவும் முடியவில்லை. நான் உன் பயணத்தைத் தடுக்கும் காரணத்தை பிறர் மூலம் சொல்ல முடியவில்லை!' என்று அவன் கூறுவது போல் இருந்தது. அந்த அளவுக்குச் சைகைகள் செய்தான்.

நாங்கள் வீட்டை அணுகும்போது எதிரே தீபக்கின் தாயார் ஓடி வந்து கொண்டிருந்தாள். "எங்கே போய் விட்டாய்?" என்பது போல் அவசரத்திலும் கோபத்திலும் கேட்டாள். பிறகு தீபக்கைப் பார்த்துப் படபடவென்று ஏதோ பொரிந்தாள். என்னை மாடிக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

மேலே போனபிறகு, வீட்டுக்காரரும் டில்லிக்காரியும் பேச ஆரம்பித்தார்கள். ஆச்சரியமாக, வீட்டுக்காரர் அங்கே உட்கார்ந் திருந்தார். அவர் கையில் டில்லி அம்மாள் தொள்ளாயிரம் ரூபாய் கொடுத்தாள். வீட்டுக்காரர் அதை எண்ணி விட்டு, காணாது என்பதுபோல் முகத்தைச் சுளித்தார். டில்லிக்காரி மளமள வென்று நிறையப் பேசிவிட்டு, ஒரு இருபத்தைந்து ரூபாயை மேலே வைத்தாள். பிறகு எழுந்து விட்டாள்.

மாலையில் நாங்கள் புறப்பட்டோம். வீட்டுக்காரி வருத்தத் துடன் எனக்கு விடைக் கொடுத்தாள். தீபக் கீழே தெரு வரை வந்தான். கண் கலக்கத்தோடு அவன் நின்றது என்னை என்னவோ செய்தது. கையை அசைத்து விடை கொடுத்தான். எனக்குக் கண்ணீரும் புன்னகையும் சேர்ந்து வந்தன.

ரயிலில் ஒரே கூட்டம். இருந்தாலும் டில்லிக்காரி பெரிய வாயாடியாக இருந்தாள். குழந்தையைப் படுக்கவிட்டு என்னையும் உட்காரச் சொல்லி ஒரு பெஞ்சு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டாள். யாராவது இடம் கொடுக்கச் சொன்னால் சண்டை போட ஆரம்பித்தாள்.

ரயில் புறப்பட்டது. எனக்கு அழுகை வந்தது. தலையைக் குனிந்து குமுறி அழுதேன். எத்தனையோ துக்கங்கள்!

டில்லிக்காரி என்னைச் சமாதானப் படுத்தினாள். ஒரு தாயாரைப்போல் முதுகில் தட்டிக் கொடுத்தாள். எனக்கு இதமாக இருந்தது.

அவள் எவ்வளவு நல்லவள் என்று நினைத்தேன். எந்தச் சந்திப்பு வந்தாலும், "என்ன வேண்டும்? என்ன வேண்டும்?"என்று கேட்டு என்னைத் துளைத்து எடுத்தாள். இரவுபோய் பொழுது விடிந்தது. ரயில் வண்டியில் சண்டை போட்டவர்கள்

எல்லோரும் சுமுகமாகி விட்டோம். டில்லிக்காரி உபசரிப்பில் குறை வைக்கவே இல்லை. மத்தியானம் அவள் சற்றுக் கண்ணயர்ந்து தூங்கினாள். நான் எதிர்வரிசையில் சன்னல் பக்கம் போய் உட்கார்ந்தேன். ஒரு மணி நேரம் வரை தூங்கியவள் திடீரென்று கண்விழித்தாள். பதிவான இடத்தில் என்னைக் காணவில்லை. எதிர் வரிசையில் நான் உட்கார்ந் திருப்பதுகூடக் கண்ணில்படவில்லை. லபோ லபோ என்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தாள். பர பரப்புடன் எழுந்து அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போய்ப் பார்த்தாள். நான் சிரித்துக் கொண்டே, "இதோ இருக்கிறேன்" என்றேன். பெருமூச்சுவிட்டு, ஆஸ்வாசப் பட்டு, என்னை அரைச் சந்தேகமாகப் பார்த்துவிட்டு இடத்தில் உட்கார்ந்தாள்.

அந்தச் சம்பவம் எனக்குச் சிறிதுநேரம் சிரிப்பு மூட்டியது. ஆனால் பிறகு யோசித்ததில் நான் காணாமல் போனால் இவள் ஏன் குதிக்கவேண்டும் என்று தோன்றியது. சந்தேகத்தோடு, அவள் என்னைப் பார்த்ததும் விசித்திரமாக இருந்தது.

கடைசியாக ஒரு சந்திப்பில் ஒரு தமிழ்த் தம்பதியார் ஏறினார்கள். அவர்களுக்கு ஒரு மூன்று வயதுக் குழந்தை. அவர் களுடன் நான் சகஜமாகப் பேசினேன். குழந்தையிடமும் விளையாட ஆரம்பித்தேன்.

அடுத்த சந்திப்பில் அவர்கள் ஏதோ வாங்குவதற்கு முனையும் நேரத்தில், டில்லிக்காரி என் தொடையை விறுவிறு என்று பிறாண்டினாள். திடுக்கிட்டு நான் பார்த்தபோது அவள் அந்தத் தம்பதியாரைக் காட்டி, அவர்களிடம் எதுவும் பேசக் கூடாது என்று ஜாடை செய்தாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்கு மேல் அவர் களிடம் பேச முயற்சிக்கவில்லை. ஆனால் அந்த ஆண் மட்டும், என்னிடம், நான் எங்கிருந்து வருகிறேன்? எங்கே போகிறேன்? என்று கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தார். பம்பாயில் வேலை செய்த நான் டில்லியில் ஒரு குடும்பத்தில் வேலை செய்யப் போகிறேன் என்றும், என்னை அழைத்துப் போவதற்குத் துணையாக டில்லிக்காரி வருகிறாள் என்றும் கூறினேன்.

பிறகு ஒருதடவை டில்லிக்காரி எழுந்து லாவட்டரிக்குப் போனாள். என்னையும் கூடவே அழைத்தாள் என்னை வெளியே இருக்கச் சொல்லி விட்டு அவள் உள்ளே போனாள்.

சிறிது நேரம் வரை அவள் வராமல் போகவே, மீண்டும் நான் என் இடத்திற்கு வந்து உட்கார்ந்தேன்.

தமிழர் உடனே என்னிடம் பேச ஆரம்பித்தார். "டில்லியில் எந்த வீட்டுக்கு அம்மா போகிறாய்?" என்றார்.

விழித்தேன். "அந்த அம்மாள் வீட்டுக்குத்தான் போகிறேன்" என்றேன், சமாளித்துக்கொண்டு.

"அவளை உனக்கு ரொம்ப நாள் பழக்கமா?" என்று கேட்டார் அவர்.

"இல்லை. இப்போதுதான் தெரியும். பம்பாயில் ஒரு வீட்டில் இருந்தேன். அவர்களுக்கு இவர் உறவு" என்றேன். ஏன் இதெல்லாம் கேட்கிறார் என்று நினைத்தேன்.

அவர், 'ஏம் பொண்ணு, அந்த அம்மாவைப் பார்த்தா எனக்கு என்னவோ சரியாத் தோணலை. இந்தக் காலத்திலே என்னென்னல்லாமோ நடக்குது. ஜாக்கிரதையா இருந்துக் கம்மா!" என்றார்.

இதற்குள் டில்லிக்காரி லாவட்டரியிலிருந்து வந்தாள். "நான் அங்கே இருக்கச் சொன்னேனே, இங்கே ஏன் வந்தாய்?" என்று கேட்டாள். அவளது கோபம் எனக்குத் தெரிந்தது. பேசாமல் விழித்தேன்.

ஆனால் என் மனத்தில் உள்ளூற ஒரு கலக்கம் ஏற்பட ஆரம்பித்தது.

டில்லியை நோக்கிப் போகப்போக இந்தக் கலக்கம் அதிகரித்தது. தவறான இடத்தில் மாட்டிக் கொள்கிறேனோ என்று நினைத்தேன்.

## 12. மர்மச் சுவடுகள்

**த**வறான இடம் என்று சொல்கிறேனே தவிர, அது எது என்பதை என்னால் அப்போது கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. சாதாரணக் குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தவள் நான். எனது கற்பனைகள் யாவும் எனக்குள்ள அறிவின் வட்டத் திற்குள்ளேதான் சுழல முடியும். என் சிறு வாழ்க்கைக்குள் ஏற்பட்ட ஒன்று, இரண்டு அனுபவங்கள் எனக்கு அதிர்ச்சி களைத் தந்திருந்தாலும் அவைகளுக்கு அப்பால் எத்தனையோ வித நரகங்கள் இருக்க முடியும் என்பதை நான் உணர்ந்தவளல்ல.

நான் மட்டுமல்ல; இதோ நான் கூறுவதைப் படித்துக் கொண் டிருக்கும் உங்களில் பெரும்பான்மையோர் - குறிப்பாகப் பெண்கள் - நீங்கள் புத்தகப் படிப்பு எவ்வளவு படித்திருந்தாலும் சரி, நம்மைச் சுற்றிவர இருக்கும் சமுதாயத்தில் எவ்வளவு பெரிய நரகங்கள் இருக்கின்றன என்பதை இப்போது, இந்தக் கணத்தில் கூட உணர்ந்திருக்க மாட்டீர்கள். அப்படிப்பட்ட பலருக்கு என் வாழ்க்கை ஒரு வெளிச்சமாக இருக்கட்டும்! யோசித்ததில் அந்த டில்லிக்காரி ஒரு கொடுமையான எஜமானியாகத்தான் இருக்க முடியும் என்று நினைத்தேன். என்னை அடிப்பாள். நிறைய வேலை வாங்குவாள். 'பரவாயில்லை. அளவுக்கு மீறிவிட்டால் அவளது வீட்டிலிருந்து தப்பி ஓடிவிடலாம்' என்று நினைத்தேன்.

டில்லி வந்தது. ஆரவாரங்களுக்கு இடையே இறங்கி னோம். அவசரத்தில் எனது கர்சீப்பைப் பெட்டியில் உள்ள பெஞ்சியில் விட்டுவிட்டு இறங்கி விட்டேன். அதைச் சுட்டிக் காட்டிய டில்லிக்காரி என்னைக் கோபத்தோடு கடிந்து கொண்டாள். எனக்கு அது சுருக் என்றது. அதுவரை பரிவோடு என்னிடம் பேசி வந்தவளுக்கு இப்படியும் கோபம் வருமா என்று நினைத்தேன்.

வெளியில் வரும்போது டாக்சிக்காரர்கள், ஆட்டோக் காரர்கள் பலரும் டில்லிக்காரியைக் குசலம் விசாரித்தார்கள். அவர்களில் சிலர் என்னை ஓரக்கண்ணால் உற்றுப் பார்த்தார்கள். அவர்களிடம் டில்லிக்காரி இந்தியில் சரளமாகப் பேசிக்கொண்டு கடைசியில் ஒரு ஆட்டோவில் ஏறினாள். இவ்வளவுபேர் அவளுக்கு மரியாதை கொடுப்பதைப் பார்த்ததும் அவள் ஒரு பெரிய புள்ளி என்று எனக்குத் தோன்றியது. இவள்மீது சந்தேகம் கொள்வது தவறு என்றுகூட நினைத்தேன்.

ஆட்டோவில் பிரயாணம் செய்து ஒரு நீளமான தெருவை அணுகினோம். அதன் அகலம் அதிகமல்ல. கசகசவென்று ஜன நடமாட்டம். ஒரே கடைகளாகத் தெரிந்தன.

அந்தத் தெருவில் திரும்பி ஒரு கட்டடத்தின் முன்னால் போய் ஆட்டோ நின்றது. இறங்கினோம். அருகில் ஒரு சின்னச் சந்துக்குள் நடந்து ஒரு வீட்டை அடைந்தோம்.

ஒரு நடுத்தர வயது மனிதரும், சில குழந்தைகளும் எங்களை வரவேற்றார்கள். டில்லிக்காரி இந்தியில் நிறைய பேசிக் கொண்டே சோபாவில் உட்கார்ந்தாள். என்னையும் உட்காரச் சொன்னாள்.

சாயங்காலத்திற்குள் எனக்கு அந்த வீட்டில் அதிகம் வேலை இல்லை என்று தெரிந்தது. ஏற்கெனவே ஒரு வேலைக்காரி அங்கே இருந்தாள். ஆகவே எனக்குச் செய்வதற்கு எந்த வித வேலையும் இல்லை. நானே சில வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்தேன். உலர்ந்த துணிகளை மடித்து வைத்தேன். குழந்தை அழும்போது விளையாட்டுக் காண்பித்தேன். நேரம் போவதுகூடக் கஷ்டமாயிருந்தது.

இரவில் சமையலறைப் பக்கம் போனபோது, அங்கே ஒரு சமையல்காரியும் இருக்கிறாள் என்று தெரிந்தது. நிறைய அடுக்கடுக்காகச் சப்பாத்திகளைத் தயார் செய்து கொண் டிருந்தாள். இந்தச் சின்னக் குடும்பத்திற்கு இத்தனை அதிகமாகத் தயார் செய்கிறாளே என்று நினைத்தேன்.

இரவு சாப்பிட உட்கார்ந்தோம். வீட்டுக்காரி எனக்கு உபசாரத்தோடு பரிமாறினாள். "நிறையச் சாப்பிடு! நல்ல புஷ்டியாக வேண்டும்!" என்று சைகை காட்டினாள்.

அவள் கை கழுவப் போனபோது, அவளது கணவர் என்னிடம் என்னவோ கேட்டார். புரியவில்லை. நான் விழித்துக் கொண்டிருக்கும்போது, அவள் திரும்பி வந்தாள். கணவரைக் கோபத்துடன் பார்த்தாள். படபடவென்று என்னவோ பொரிந்து தள்ளினாள். அவர் பதில் பேசாமல் சடேரென்று எழுந்து அப்பால் போனார்.

இரவு நிம்மதியாகப் படுத்தேன். டில்லிக்காரியைப் பற்றி அனாவசியமாகக் கலவரப்பட்டோமே என்று நினைத்தேன். பத்து மணிக்கு மேல் மாடியில் ஆட்கள் நடமாடும் சப்தம் கேட்டது. யாரோ ஒருத்தி பாடும் சப்தமும் கேட்டது. இவை என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். புரிய வில்லை. வெகு நேரம்வரை அந்தச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன.

மறுநாள்!

முந்திய தினம் போலவே யாவும் நடந்தன. எந்த மாறு தலும் இல்லை. எனக்கு வேலைகளும் அதிகம் இல்லை. சில்லறை வேலைகள்தான் வீட்டுக்காரி என்னிடம் ஒப்படைத்தாள்.

அன்று இரவு எட்டு மணிக்கு வீட்டுக்காரி என்னிடம் வந்தாள். சல்வார், கமீசுகளை எடுத்து வந்து என்னை அணியச் சொன்னாள். அணிந்தேன். அவளே எனக்குப் பவுடர் பூசி

விட்டாள். தலையை வட இந்தியப் பாணியில் வாரினாள். காது, கழுத்து, கைகளில் பலவித இமிடேஷன் அணிகளை அணிவித்தாள்.

முடிவில் நிலைக்கண்ணாடியில் நான் பார்த்தபோது திகைத்து விட்டேன். யாரோ ஒரு ராஜபுத்திரப் பெண்ணைப் போல் ஜொலித்தேன். என் அழகை எண்ணி நானே வியந்து கொண்டேன். எனினும் உள்ளூற, 'இதெல்லாம் எதற்கு?' என்ற கேள்வி அடிக்கடி எழுந்து கொண்டிருந்தது.

ஒன்பது மணிக்கு என்னை அழைத்துக்கொண்டு வீட்டுக்காரி வெளியில் இறங்கினாள். மூன்று ஆட்டோக்கள் தயாராயிருந்தன.

ஒன்றில் எறினோம். நாங்கள் உட்கார்ந்த பிறகு மாடியிலிருந்து பெண்கள் சிலர் இறங்கி வருவது தெரிந்தது. அவர்கள் பல்வேறு விதங்களில் டிரஸ் செய்திருந்தார்கள். ஒருத்தி ஒரு தபலாவையும், மற்றொருத்தி ஒரு ஆர்மோனியத்தையும் தூக்கி வந்தனர். இது ஒரு நாடகக் குழு என்று நான் நினைத்தேன்.

வண்டிகள் புறப்பட்டன. பத்து நிமிடம் பிரயாணம் செய்து ஒரு பழைய வீட்டின் முன்னால் நின்றன. இறங்கினோம்.

எல்லோரும் வீட்டுக்குள் பல கதவுகளைத் திறந்து கொண்டு சென்றோம். ஒவ்வொன்றையும் ஜாக்கிரதையாக மூடி விட்டுப் பின்னாலேயே வந்தாள் வீட்டுக்காரி!

கடைசியில் ஒரு ஹால் பளிச்சென்று தெரிந்தது. விளக்குகள் மயம்! சேண்டலியர் விளக்கு கண்ணைப் பறித்தது. அழகான வேலைப்பாடுள்ள பெரிய கம்பளம் கீழே விரித்துக் கிடந்தது. இன்னும் கண்ணாடி ஜாடிகளும், கோப்பைகளும், அலங்காரப் பொருள்களும் நிறைந்த அந்த இடம் ஒரு பழங்கால அரண்மனைபோல் தெரிந்தது.

என்னைத் தன் பக்கத்தில் இருத்திக் கொண்டாள் வீட்டுக்காரி! மற்றப் பெண்கள் சதங்கை கட்டிக்கொள்ள ஆரம்பித்தார்கள். ஒருத்தி தபலாவிலும் இன்னும் ஒருத்தி ஆர்மோனியத்திலும் உட்கார்ந்து கொண்டார்கள்.

வீட்டுக்காரி என் பக்கம் திரும்பினாள். ஒரு பெட்டியிலிருந்து பல டப்பாக்களை எடுத்து வெளியே வைத்தாள். அவைகளைத் திறந்து வைத்து, பீடா தயாரிப்பது எப்படி என்று சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

சிறிது நேரத்தில் ஹாலின் கதவுகளைத் திறந்துகொண்டு பத்து, இருபது ஆண்கள் உள்ளே வந்தார்கள். பெரும்பாலும் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள். கம் என்று வாசனை வீச ஒரே சிரிப்பு மயமாக உள்ளே வந்தார்கள்.

வீட்டுக்காரி அவர்களை உபசரித்து உட்கார வைத்தாள்.

உடனே பாட்டு ஆரம்பித்தது. இருபது வயதுப் பெண் இருவர் இந்திப் பாட்டுப்பாட ஆரம்பித்தார்கள். தபலாவும், ஆர்மோனியமும் அவர்களோடு சேர்ந்து கொண்டன. இரண்டு பெண்கள் நடனம் ஆட ஆரம்பித்தார்கள்.

எல்லோரையும் நான் ரசனையோடு பார்த்தேன். இது ஒரு நாடகக் குழு என்று நினைத்தேன். இவர்களிடம் நானும் பயிற்சி பெற்றால் படிப்படியாக வளர்ந்து ஒரு நட்சத்திரம் ஆகி விடலாம் என்று நினைத்தேன்.

"அச்சா! சபாஷ்" என்று சொல்லிக்கொண்டு ஆண்கள் ரசித்தார்கள். அவர்களுக்குக் கோப்பைகளில் வர்ணமான திரவங் களை ஊற்றி, ஒரு பெண் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

நடனம் ஒரு மணி நேரம் நடந்தது. அதை ரசித்துக் கொண்டே ஆண்கள் பலவித சிற்றுண்டிகளைச் சாப்பிட் டார்கள். முடிவில் அவர்களுக்குப் பீடா கொடுக்கும்படி என்னை அனுப்பினாள் வீட்டுக்காரி!

எழுந்தேன். சட்டென்று சங்கீதம் நின்றது. எல்லோரும் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். நான் தயங்குவதைப் பார்த்து, "போ!" என்று சைகை காட்டினாள் வீட்டுக்காரி. மேலே நடக்கும் போது, என் நடைக்கு ஏற்ப தபலா மெல்லிதாக ஒலித்தது. ஒரு கணம் நான் ஒரு சினிமாக் கதாநாயகி ஆகிவிட்டது போல் உணர்ந்தேன்.

ஒவ்வொரிடமும் ஒரு பீடா கொடுத்தேன். (கொடுக்கும் போது தபலா ஒரு முத்தாய்ப்புச் சத்தம் கொடுத்தது.) சிலர் அதை வாங்கும்போது கொஞ்சலாக என்னவோ பேசினார்கள். சிலர் பீடாவை வாங்கிக் கொள்ளாமல் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். ஒருவர் என் கையைத் திடீரென்று வருட ஆரம்பித்ததும் திடுக்கிட்டேன். பதட்டத்தோடு விலகி மேலே சென்றேன்.

இன்னும் சிலரும் என் கையை வருடினார்கள். இது அவர்களது பழக்கங்களில் ஒன்றாக இருக்கும் என்று நினைத்தேன். எனினும் மனம் என்னவோ கலக்கம் அடைந்தது.

என் கலவரத்தைக் கண்ட வீட்டுக்காரி அருகே வந்து சமாதானம் சொன்னனாள். தைரியப் படுத்தினாள்.

என்னுடன் வந்த பெண்கள் எல்லோரும் இளம் பெண்கள், ஒருத்தியைத் தவிர! அந்த ஒருத்தி ஆர்மோனியம் வாசிப்பவள். அவளுக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். வயசு தெரிந்தாலும் லட்சணமாக இருந்தாள். அவளும் என்னிடம் வந்து தட்டிக் கொடுத்துச் சமாதானம் செய்தாள்.

சிறிது நேரத்தில் வீட்டுக்காரி என் கையைப் பிடித்துத் தனியாக ஒரு திரைக்குள் அழைத்துப் போனாள். அங்கே ஒரு நாற்காலியில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். நாற்பத்தைந்து வயதிருக்கும். நாட்டியத்தை ரசித்தவர்களில் அவரும் ஒருவர்.

அவரது முன்னால் என்னை நிறுத்தி வீட்டுக்காரி பேசினாள். "அச்சா! அச்சா!" என்று சொல்லிக்கொண்டே அந்த மனிதர் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் பதட்டத்தோடு நின்று கொண்டிருந்தேன்.

பிறகு இருவரும் பேசிக் கொண்டே இருந்தார்கள். பேச்சின் தொனியில் இருந்து பேரம் பேசுகிறார்கள் என்று தெரிந்தது. ஒரு வழியாக பேச்சு முடிந்தது. அந்த மனிதர் எழுந்து என் கைகளைப் பிடித்து என்னவோ சொன்னார். பிறகு முதுகைத் தட்டி என்னை வீட்டுக்காரியோடு அனுப்பி வைத்தார்.

இரவு ஒரு மணிக்கு வீடு திரும்பினோம். வண்டியில் ஏறிய யாரும் எதுவும் பேசவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படி ஒரு கலை நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர்கள் ஏன் கலகல வென்று பேசாமல் இருக்கிறார்கள் என்று நினைத்தேன்.

## 13. நரகத்தின் வாசல்

**கா**லையில் எழுந்தேன். ஒன்பது மணிக்கு மேல் ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு வீட்டுக்காரி என்னிடம் வந்தாள். அந்தப் பெண் கன்னடத்தில் பேசினாள். எனக்கு நன்றாகப் புரிந்தது. மகிழ்ச்சியோடு அவளிடம் பேசினேன். என்னைப் பற்றிய விவரங்களையெல்லாம் அவள் கேட்டாள்.

பிறகு என்னைத் தனியாக அழைத்துப் போய் ஒரு இடத்தில் உட்கார்த்தினாள். என் காதோடு காதாக "நீ பெரியவளாகி விட்டாயா?" என்று கேட்டாள். "ஆமாம்!" என்றேன்.

"எத்தனை நாள் ஆயிற்று?"

"ஒரு வருஷம் மேல் ஆகிவிட்டது."

பிறகு அவள் 'எனக்கு உடல் உறவு ஏற்கெனவே நிகழ்ந்து விட்டதா' என்று கேட்டாள்.

எனக்கு மீண்டும் அதிர்ச்சி!

என்னிடம் கன்னடப் பெண் அந்தக் கேள்வியை ஏன் கேட்கிறாள் என்று தெரியவில்லை. நான் பதில் சொல்லவில்லை. அவள் மீண்டும் அதே கேள்வியை கேட்டாள்.

"ஏன் கேட்கிறீர்கள்?" என்றேன்.

"தெரிய வேண்டும்!" என்றாள்.

எனக்குத் தன்மானம் பெரிதாகத் தோன்றியது. ஆகவே, "எதுவும் நடக்கவில்லை" என்றேன்.

''அச்சா'' என்று சொல்லிக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள். அவளைக் கைப்பிடித்து நிறுத்தினேன். ஆவலோடு, "இது என்ன இடம்?" என்று கேட்டேன்.

அவள் பதில் சொல்லாமல் கண்ணை மட்டும் ஜாடை காட்டிப் பின்னால் பார்க்கச் சொன்னாள். பார்த்தேன். டில்லிக் காரி தீவிரத்துடன், எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வையில் கண்காணிப்பும் கண்டிப்பும் இருந்தது. அது பயத்தை அளித்தது.

அன்று மாலைக்குள் எனக்கு உள்ளூரக் கலக்கங்கள் ஏற்பட்டன. இது என்ன இடம், இங்கே என்ன நடக்கிறது என்ற நினைவுகள் என்னை வாட்டத் தொடங்கின. எப்படி யோசித்துப் பார்த்தும் எதுவும் பிடிபடவில்லை.

இரவு எட்டு மணிக்கு டில்லிக்காரி என்னை அழைத்தாள். முந்திய தினம்போல டிரஸ் அணிவித்தாள். உடனே வெளியே அழைத்துப் போனாள்.

ஆட்டோவில் ஏறிப் பிரயாணம் செய்தோம். ஒரு வீட்டின் முன்னால் போய் இறங்கினோம். வீடு இருட்டாக இருந்தது. அதன் படிகளில் ஏறி மாடிக்குப் போனோம்.

அங்கே ஒரு அறையில் உட்கார்ந்தோம். வேறு யாரும் அதில் தென்படவில்லை. நானும் டில்லிக்காரியும்தான்.

என்னை ஏனோ திடீர் என்று பயம் கவ்வியது. என்னிடமிருந்த கொஞ்ச நஞ்ச திடமும் கரைந்து விடவே, விக்கி அழ ஆரம்பித்தேன்.

டில்லிக்காரி கோபத்தோடு பார்த்தாள். "அழாதே!" என்று மிரட்டினாள். நான் சிரமப்பட்டு அழுகையை அடக்கினேன்.

ஐந்து நிமிடம் சென்றது. கதவைத் திறந்துகொண்டு ஒருவர் வந்தார். அவர் யார் என்று உடனே தெரிந்தது. முந்திய தினம் என் முதுகைத் தட்டிக்கொடுத்த அந்தப் பெரியவர்தான்.

அவரும் டில்லிக்காரியும் சிறிது நேரம் பேசினார்கள். பிறகு டில்லிக்காரி எழுந்து புறப்பட்டாள்; நானும் எழுந்தேன். அந்தப் பெரியவர் என் கையைப் பிடித்துக் கொண்டார்.

நான் திமிறினேன். கத்திக் கொண்டு அவர் கையிலிருந்து விடுபட்டேன். டில்லிக்காரியைப் பார்த்து ஓடினேன்.

டில்லிக்காரி என்னைப் பிடித்துக் கொண்டாள். பெரியவரை நோக்கி ஒரு தள்ளுத் தள்ளினாள். அவர் என்னைப் பிடித்துக் கொண்டார். என்னென்னவோ கொஞ்சிக் கொண்டு என்னை இழுத்து அணைத்துக் கொண்டார். அதே நேரத்தில் டில்லிக்காரி கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு போனாள்.

என் அழுகையைப் பொருட்படுத்தாமல் பெரியவர் என்னை இழுத்துக் கொண்டு உள்ளே போனார். அந்த அறை பிரமாதமாக இருந்தது. அதன் மெத்தையில் என்னை இறுத்தி சமாதானப் படுத்தினார். நான் அழுகையை நிறுத்த வெகு நேரம் ஆயிற்று. பிறகு அவர் திடீரென்று பலாத்காரம் செய்யத் தொடங்கினார்.

அதை எதிர்த்தேன். ஆனால் அவரது பலத்திற்கு முன் நான் வெறும் துரும்பு என்று விரைவில் தெரிந்தது. தவிர நான் எதிர்க்க எதிர்க்க, அவருக்குக் கூடுதலான வெறி ஏற்படுவதை உணர்ந்தேன். அதனால் பயந்து இருக்கும் நிலைமையை உணர்ந்து சாதுவாக இருக்க வேண்டி வந்தது.

பதினைந்து நிமிடங்களுக்கு பிறகு ஆஸ்வாசப்பட்ட பெரியவர் திடீரென்று, என் கையைப் பிடித்தார். கோபத்தில் படபடவென்று என்னவோ கேட்டார். அவரது ஆத்திரத்தைப்

பார்த்துப் பயந்து போனேன். "இந்தி நை மாலும்! நை மாலும்!" என்று அழுதேன். அவர் கோபம் தீராதவராய் ஒரு தலைகாணி யையும், படுக்கையையும் எடுத்துத் தூரப்போட்டார். என்னை அங்கே படுக்கும்படி கர்ஜித்தார்.

இரவு படுத்ததும், யோசித்தேன். அவர் ஏன் அப்படிச் செய்தார் என்று தெரியவில்லை. பாஞ்சாலியைப் போல் என்னை இந்தப் பெரியவருக்கு டில்லிக்காரி விற்று விட்டாளோ என்று நினைத்தேன். ஒரே திகிலாக இருந்தது.

சரி, இங்கிருந்து தப்பி ஓட வேண்டியதுதான்! அதற்கு வழி பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

நடு நிசியிருக்கும். எழுந்து மெதுவாகக் கதவுப் பக்கம் போனேன். தாழ்ப்பாளைத் திறந்து கதவை இழுத்தேன். திறக்க வில்லை. சிறிது நேரம் முயன்று பார்த்தேன். அப்படியும் திறக்க வில்லை. அது பூட்டப்பட்டிருப்பது தெரிந்தது. பேசாமல் வந்து படுத்தேன்.

காலையில் பெரியவர் நேரங்கழித்தே விழித்தார். சன்னல் அருகே நின்றுகொண்டிருக்கும் என்னைக் கோபத்தோடு பார்த்தார். திட்டிக்கொண்டே தலைகாணி அடியில் இருந்து சாவியை எடுத்து வந்து கதவைத் திறந்தார். "வா" என்று கடிந்து கூறினார்.

நான் அடுத்த அறைக்குப் போனபோது திடுக்கிட்டேன். அங்கே டில்லிக்காரி ஏற்கெனவே வந்து மௌனமாக உட்கார்ந் திருந்தாள். நான் அவளை முறைத்துப் பார்த்தேன். அவளும் என்னை முறைத்துப் பார்த்தாள்.

இதற்குள் பெரியவர் வெளியே வந்தார். டில்லிக்காரியைப் பார்த்ததும் 'ஓ'வென்று கூச்சல் போட்டார். அந்த அம்மாளைப் பேச விடவில்லை.

அவர் பொரிந்து தள்ளிய பிறகு அம்மாள் தணிந்து பேசினாள். என்னவோ சமாதானம் சொன்னாள். பிறகு என்னைப் பார்த்துச் சத்தம் போட்டாள்.

நான் பயப்படவில்லை. தமிழில் அவளைக் கண்டபடி திட்டினேன். "உன்னைப் போலீசில் காட்டிக் கொடுப்பேன். பாதகி!" என்று சொல்லி, கதவைத் திறந்து வெளியே ஓடினேன்.

ஒரு பலமான கை என்னைப் பற்றியது. வெளியே நின்று கொண்டிருந்த ஒரு ஆண் பிள்ளையின் கை அது. என் பின்னால் டில்லிக்காரி ஓடி வந்தாள். பளீர் என்று கன்னத்தில் ஓங்கி ஒரு அடி கொடுத்தாள். காலால் பலமுறை உதைத்தாள். வலியில் சுருண்டேன். அந்த ஆண்பிள்ளை சட்டென்று ஒரு துணியை என் வாயில் திணித்தான். பிறகு பளீர் என்று என் முதுகில் இரண்டு அறையும் கொடுத்தான்.

சரியான அறை அது! வலி பொறுக்க முடியவில்லை. வீறிட்டு வருகிற அலறலை வெளிப்படுத்த முடியாததால் (வாயில் துணி இறுக்கமாக அடைத்திருந்தது) வலி மேலும் கூடியது.

வாசலில் ஒரு டாக்ஸி நின்றது. என்னை நெட்டித் தள்ளிக் கொண்டு போய் அதில் ஏற்றினார்கள். என் இரு புறமும் அந்த அம்மாவும் புதிய ஆளும் உட்கார்ந்து கொண்டார்கள்.

கார் புறப்பட்டதும் என் தலையை அந்த ஆண் கீழே அழுத்தினான். வீடு வரும்வரை நிமிர்த்த விடவில்லை.

வீடு வந்ததும் காரை வாசல் முன்னால் சரியாக நிறுத்தி என்னை இறக்கினார்கள். ஒரே நெட்டலில் என்னை உள்ளே தள்ளிக்கொண்டு வந்தார்கள். கதவை அடைத்ததும் டில்லிக்காரி ஒரே வசைமாரி பொழிந்தாள். மாடியிலிருந்து கன்னடத்துப் பெண்ணை அழைத்து வந்தாள். அவளிடம் நடந்ததைக் கூறினாள். அவள் என் அருகில் வந்தாள்.

பதட்டத்தோடு நிற்கும் என்னைப் பார்த்து, "பயப்படா தேம்மா! நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லு!" என்றாள்.

அவளிடம் நான் அழுதுகொண்டே, "என்னை அநியாய மாய் அடிக்கிறாள். திட்டுகிறாள். நான் என்ன பாவம் செய்தேன்? என்னை விட்டுவிடச் சொல்லுங்கள். நான் போய்விடுகிறேன்!" என்று கதறினேன்.

நான் கூறுவதைக் கேட்ட டில்லிக்காரி என்ன பேசுகிறேன் என்று கன்னடக்காரியிடம் கேட்டாள். கன்னடக்காரி விவரம் தெரிவித்தாள்.

அதைக் கேட்டதும் அவள், "இதற்காகவா உன்னைப் பம்பாயில் இருந்து பணம் கொடுத்து வாங்கி வந்தேன்?" என்றாள். (கன்னடக்காரி என்னிடம் மொழி பெயர்த்துக் கூறினாள்.)

"என்னையா! ஏன் விலைக்கு வாங்கினீர்கள்!" என்றேன். கன்னடப் பெண் சிரித்தாள். எனக்குத் திகைப்பாக இருந்தது.

*பிறகு அந்தப் பெண் என்னைப் பார்த்து, "ஏம்மா! உனக்கு உடல் உறவு நடந்திருக்கிறதா என்று கேட்டேனே, நீ என்ன பதில் சொன்னாய்?" என்றாள்.*

*"இல்லை என்று சொன்னேன்!" என்றேன்.*

*"அப்படி நீ சொன்னது பொய்!"*

*"எப்படித் தெரியும்?"*

*"நீ ஒரு பெரிய மனிதர் வீட்டுக்குப் போனாயே, அவர் கண்டு பிடித்து விட்டார்!"*

*"எப்படிக் கண்டு பிடித்தார்?"*

*கன்னடப் பெண் விவரித்தாள். அதன் முழு விவரங்களைக் கேட்கவே கூச்சமாக இருந்தது. காதுகளைப் பொத்திக் கொண்டேன்.*

*அந்தப் பெரியவர் ஒரு பணக்காரர். தகாத வழியில் சொந்த வாழ்க்கையை நடத்துபவர். அவருக்குச் சில குரூர ஆசைகள்! பருவம் அடையும் இளம் சிறுசுகளை முதன் முதலாகக் கன்னி கழிக்க விரும்புபவர். அதில் அந்த சிறுசுகளுக்கு ஏற்படும் வேதனைகளைக் கண்டு கொடூர இன்பம் காண்பவர். வாழ்க்கையில் அவரது வியாபாரத்தைத் தவிர, ஒரே பொழுது போக்கு அதுதான்.*

*"அவரிடமிருந்து வீட்டுக்காரி ஐந்நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு உன்னை அனுப்பியிருந்தாள். அவரை ஏமாற்றி விட்டாள் என்று வீட்டுக்காரியின்மீது அவருக்குக் கோபம். அதனால்தான் இந்த ரகளை?"*

*எனக்கு மூளை குழம்பியது. என்னை வைத்து இந்த வீட்டுக்காரி பணம் சம்பாதிக்கிறாள் என்று நினைத்தேன். அப்படியானால் என்ன இடம்? இங்கே நான் ஏன் மாட்டிக் கொண்டேன்?*

*பரபரப்புடன் அந்தப் பெண்ணைப் பார்த்து "இது என்ன இடம்? இங்கே என்ன செய்கிறார்கள்?" என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு கேட்டேன்.*

*அதற்குள் வீட்டுக்காரி அந்தப் பெண்ணைப் பார்த்து ஏதோ கடுமையாகச் சொல்லவே அவள் உடனே எழுந்து போய் விட்டாள்.*

பிறகு வீட்டுக்காரி என்னிடம் நேராக வந்து, "ஜாக்கிரதை!" என்பது போல எச்சரிக்கை செய்தாள்.

யோசித்தேன். கையும் காலும் உதறல் எடுத்தேன். உதடுகள் கிடுகிடுவென்று நடுங்க என் கதியை நினைத்து வெதும்ப ஆரம்பித்தேன்.

# 14. பாலையில் ஒரு மலர்

தப்பித்துச் செல்லும் வழியை நினைத்தபோதுதான் அந்த அறைக்குச் சன்னல் கிடையாது என்று தெரிய வந்தது. மேலே உயரத்தில் இரண்டு வென்டிலேட்டர்கள் மட்டும் இருந்தன. அறையில் முக்கால் வாசிப்போதும் மின்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தவிர, வாசல் கதவு எப்போதும் அடைபட்டுக் கிடந்தது. மத்தியான வேளை முழுவதும் வீட்டுக்காரி கதவுக்கு அருகில் கட்டிலைப் போட்டுக் கொண்டு அரைத் தூக்கத்தி லேயே படுத்திருந்தாள். அவளைத் தாண்டி வெளியே ஓடுவது மிகக் கடினம்.

அன்று என்ன நடக்குமோ என்ற பயத்துடன் பகல் பொழுதை ஓட்டினேன். மாலை நேரம் வந்தது. வீட்டுக்காரி வந்தாள். சல்வார் சமீசுகளை அணியச் சொன்னாள். நான் மாட்டேன் என்றேன். என்னை விழித்துப் பார்த்துக் கொண்டு ஒரு உலுக்கு உலுக்கினாள். பிறகு கரகரவென்று இழுத்து உள்ளே சாமான் அறைக்குள் கொண்டு போனாள். அதன் கதவை சாத்திக் கொண்டு சுவரில் தொங்கிய சவுக்கை எடுத்துக் கொண்டாள். பளீர் என்று விளாறினாள். சவுக்கின் நுனி என் கையில் தீயாகச் சுற்றியது.

எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஏற்கனவே ஹோமில் அடி வாங்கிப் பழக்கப்பட்டவள். இந்த அடியைப் பொருட்படுத்தாமல் வீட்டுக்காரி மீது தாவிக் குதித்தேன். சவுக்கைப் பிடித்திருக்கும் அவளது கையைப் பிடித்தேன். அதில் வாயை வைத்துப் பலமாகக் கடித்தேன். 'ஆ!ஆ!' என்று அவள் கதற, நானும் வேண்டுமென்றே கூச்சல் போட்டேன். எப்படி யாவது தப்பித்து விட வேண்டும் என்று நினைத்தேன்.

அடுத்த நிமிடத்தில் கதவு தடதடவென்று தட்டப்படும் சப்தம் கேட்டது. வீட்டுக்காரி ஒரு கையால் அதைத் திறக்கப் போனாள். அந்தக் கையையும் பிடித்துப் பலமாகக் கடித்தேன்.

ரத்தம் கூட வந்தது. 'ஆ' என்று பயங்கரமாக அவள் கதறினாள். அறைக் கதவை இப்போது பலர் பலமாகத் தட்டினார்கள்.

நான் கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே பாய்ந்தேன். அங்கே இரண்டு பெண்களும், ஒரு ஆணும் நின்று கொண்டிருந் தார்கள். (முந்திய நாள் என் வாயில் துணியை அடைத்த ஆண்) "ஐயோ!" என்று உரக்கக் கத்திக் கொண்டு அவர்களது பிடியில் அகப்படாமல் வாசல் கதவை நோக்கி ஓடினேன். அதன் மூலம் வெளி மனிதர்கள் கவனத்தைக் கவர விரும்பினேன்.

என் கத்தலில் யாராவது வெளி ஆள் வருவார்களா என்று பார்த்தேன். வரவில்லை. அந்த ஆண் என் கையைப் பிடித்துத் திருகியதுதான் மிச்சம். டில்லிக்காரி வந்து என்னைக் கீழே தள்ளி மிதித்தாள்.

நானும் விடவில்லை. 'ஓ ஓ' என்று ஊரே அதிரும்படி கத்தினேன். அப்போது என் தலையை யாரோ இறுக்கமாகப் பிடித்தார்கள். மற்றொருவர் ஒரு துணியை வாய்க்குள் திணித்தார். என் கத்தல் கப்பென்று அடங்கியது.

அப்படியே என்னைத் தூக்கி உள்ளே கொண்டு போனார்கள். கதவை இழுத்துச் சாத்தினார்கள். கைகளைப் பின்னால் கட்டினார்கள். பிறகு ஒருவர் மாறி ஒருவராக முதுகிலும் கன்னத்திலும் வயிற்றிலும் பின்புறத்திலும் அடித்தார்கள்.

என் உடம்பு துவண்டது. கண் அடிக்கடி மங்கியது. வெள்ளமாக ஒரு வலி என் மூளைக்குள் பாய்ந்தது.

இத்தனை வேதனைகளுக்கு இடையில் எனக்கு ஒரு வெறி பிறந்தது. இவர்களுக்கு எப்படியும் பணியக்கூடாது என்று நினைத்தேன். என்னுடைய தீர்மானத்தை முகத்தில் காட்டினேன். வாங்கும் ஒவ்வொரு அடிக்கும் முகத்தில் ஒரு கடுமையைக் காட்டினேன். சிறிதுகூட வலியைக் காட்டவில்லை. கடைசியில் என்னையும் மீறிக் கண்கள் அடைத்துக் கொள்ளவே சுருண்டு விழுந்தேன்.

மெதுவாகக் கண்ணைத் திறந்த போது, ஒரு புது அறையில் இருந்தேன். ஹால் என்று கூடச் சொல்லலாம். சுற்றிவரப் பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். பத்துப் பன்னிரண்டு பேர் இருக்கும் அவர்களில் சிலரை ஏற்கனவே நாட்டியக் குழுவில் பார்த்திருக்கிறேன்.

கண்ணில் பெருகிவரும் நீருடன் எழுந்திருக்க முயன்ற போது, யாரோ என் தலையைத் தடவிக் கொடுப்பது தெரிந்தது. மேலே நிமிர்ந்து பார்த்தேன். பளபள என்ற முகத்துடன் ஒரு பெண் என்னைக் கவிழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் வசீகரமாக இருந்தது. கூந்தல் அடர்வாகக் கன்னங்கள் இரண்டிலும் விழுந்திருந்தது. சித்திரத்தைப் பார்ப்பது போல் அவ்வளவு அழகாக இருந்தாள். அப்படி அழகான ஒருத்தியைப் பார்ப்பதே அதிசயமாக இருந்தது. ஒன்று இரண்டு கணங்கள் தான் இருக்கும். என் நிலையைக்கூட மறந்து விட்டேன். அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

புன்னகையோடு அவள் என் காதருகில் குனிந்தாள். ''பேசாமல் இரு! வீணாகச் சண்டை போடாதே!''என்று தெலுங்கில் பேசினாள். ஹோமில் இருந்த காலத்தில் தெலுங்குப் பெண்களுடன் பழகியதால், தெலுங்கைப் புரிந்து கொள்ளும் பரிச்சயம் ஏற்பட்டிருந்தது. புரிந்து கொண்டேன்.

பிறகு அவள் தலை நிமிர்ந்து வெறும் விழிகளை மட்டும் சுழல விட்டு, மீண்டும் சட்டென்று என் காதருகில் குனிந்து, "நீ எதுவும் என்னிடம் கேட்காதே! நான் சொல்வதை மட்டும் கேட்டு நட! நான் உன் சிநேகிதி!" என்றாள். பிறகு முகத்தை நிமிர்த்திக் கொண்டாள்.

அவளது கண்ணில் தெரியும் ஒளியைப் பார்த்ததும் அவள் உண்மையானவள் என்று தோன்றியது. துயரத்துடன் இருந்த எனக்கு அவள் பேச்சு இதமாக இருந்தது. ஹோமிலிருந்த இந்து நினைவு எனக்கு அப்போது தோன்றியது.

சிறிது நேரம் சென்றது. அந்த அழகி என்னைப் பார்த்து சற்று உரத்த குரலில், "எழுந்திரு!" என்றாள்.

எழுந்திருக்க முயன்றேன். முதுகும் இடுப்பும் ஒரேயடியாக வலித்தன. அவள் என் கையைப் பிடித்துத் தூக்கினாள்.

''ஆஆஆ'' என்றேன். அவள் என்னைத் தாங்கிக் கொண்டாள்.

"என் பெயர் தயா! உன் சிநேகிதி! நான் சொல்கிறபடி செய்! வேறெதுவும் பேசாதே!" என்றாள் காதோரமாக.

என்னை ஒரு ஓரமாக அழைத்துப் போய், 'இதை உடுத்திக் கொள்!' என்று சல்வார் கமீசுகளைக் கொடுத்தாள். அந்தத்

துணிகளைப் பார்த்ததும் எனக்கு முந்திய நாள் நினைவு வந்தது. அழுகையுடன் அவளைப் பார்த்தேன்.

"அழாதேம்மா! நான் சொல்றபடி செய்!"

இதற்குள் கீழே இருந்து, ''தயா, தயா!'' என்று டில்லிக்காரியின் குரல் கேட்டது. பதிலாக தயா நீண்ட வாக்கியமாக ஏதோ பேசினாள்.

பிறகு என்னைப் பார்த்து, "சீக்கிரம்! டிரஸ் செய்துகொள்! உன் பேர் என்னம்மா?" என்றாள்.

"கமலா!"

"தமிழ்ப் பெண்ணா?"

"ஆமாம்!"

"சீக்கிரம் ரெடியாகு!"

"எதற்கு? எங்கேயாவது அழைத்துப் போவார்களா?"

"போகமாட்டார்கள்! இன்றைக்கு இங்கேயேதான் இருக்க வேண்டும்!"

"இங்கே இருப்பதற்கு ஏன் டிரஸ்?"

தயா சிரித்தாள்.

"உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள்!" என்றாள்.

"யார்?"

"ஆண்கள்!"

"எதற்கு?"

"எதற்கா?"

"அவள் என்னைக் கூர்ந்து கவனித்தாள். பிறகு இரக்கத் தோடு, "கமலா! ஒரு தப்பிதமான இடத்தில் மாட்டிக் கொண் டிருக்கிறாய்! எதையும் கேட்காதே! நீயாகப் புரிந்து கொள்!" என்றாள்.

நான் பதறினேன்.

"அப்படியானால் நேற்று மாதிரி நடக்குமா?" என்றேன், நடுங்கிக் கொண்டு.

''ஊஹூம்! நீ வெளியில் போக வேண்டியதில்லை. இங்கேயே..." என்று இழுத்தாள்.

அதைப் புரிந்து கொண்டதும் எனக்கு அழுகை குபீர் என்று வந்தது. நான் விம்முவதைப் பார்த்ததும் அவள் என்னை அணைத்துக் கொண்டாள்.

எவ்வளவோ சமாதானம் சொன்னாள். இருந்தும் நான் அழுகையை நிறுத்தவில்லை.

இதற்குள், “தயா!” என்று மீண்டும் டில்லிக்காரியின் குரல் இடிமுழக்கம்போல் கேட்டது. அதற்கு தயா ஏதோ பதில் சொல்லிவிட்டு, “சீக்கிரம் சீக்கிரம்!” என்று என்னை அவசரப் படுத்தினாள். நான் நிலைமையை உணர்ந்து உடைகளை அணிய ஆரம்பித்தேன்.

என் கூந்தலைத் தயா சரி செய்தாள். அப்போது நான் அவளிடம், “தயா என் உடம்பு அணுஅணுவாக வலிக்கிறது. நான் உடனே படுக்க வேண்டும்! வேறு எதற்கும் என் உடல் இன்று பயன் படாது! அவ்வளவு வலி இருக்கிறது!” என்றேன்.

“ஐயோ அவள் (டில்லிக்காரி) விடமாட்டாள்! ஒரு ராத்திரி நீ சும்மா இருந்தாயானால் அவளது வரும்படி போய் விடும் என்று அலறுவாள்!” என்றாள்.

“அலறட்டும்! நான் இருக்கும் நிலை தெரியாதா? கண் மூக்குத் தெரியாமல் அடித்தாள், பாவி! உடம்பெல்லாம் காந்துகிறது. இந்த வேதனையில் ராத்திரிக் கூத்தும் வேறேயா?” என்றேன்.

அவள் அனுதாபத்துடன் என்னைப் பார்த்தாள். அதற்குள் படிகளில் சப்தம் கேட்டது. டில்லிக்காரி உள்ளே வந்தாள்.

“இன்னுமா ரெடியில்லை?” என்று தயாவைப் பார்த்துக் கத்தினாள். பிறகு டக் டக் என்று எல்லா விளக்குகளையும் போட்டாள்.

ஹால் பிரகாசமாகியது! ஒரு பெண் அவசர அவசரமாக ஆர்மோனியத்தின் உறையைக் கழற்றினாள். மற்றொருத்தி தபலாவின் உறையைக் கழற்றினாள். தாளத்துடன் பாட்டு ஆரம்பித்தது.

இரண்டு பேர் பாடினார்கள். யாரும் ஆடவில்லை. பாட்டு நடந்து கொண்டிருக்கும்போது இருட்டி விட்டது. ஆண்கள் ஒவ்வொருவராக உள்ளே வர ஆரம்பித்தார்கள்.

அவர்கள் எல்லோரும் அந்தப் பெண்களுக்குப் பரிச்சயம் ஆனவர்கள். ஒருவருக்கொருவர் விசாரிப்பதிலிருந்து தெரிந்தது.

சிலர் ஒன்றிரண்டு புதிய நபர்களையும் அழைத்து வந்திருந் தார்கள். அவர்கள் எங்களைப் பார்க்கக் கூச்சப்பட்டார்கள்.

அவர்களது வெட்கத்தைப் போக்குவதற்கு ஒரு பெண் அவர்களிடையே போய் உட்கார்ந்தாள். தமாஷாகப் பேச ஆரம்பித்தாள்.

அந்த ஹாலை நீங்கள் கற்பனை செய்து பார்க்க வேண்டும். கீழே தரையை மூடி விரிப்பு விரித்திருந்தது. மேலே இரண்டு ஆபரண விளக்குகள் தொங்கின. சுவரில் அழகான டிசைனில் பிராக்கெட் விளக்குகள் அவற்றின் கீழே கவர்ச்சியான பெண்களின் படங்கள். மூலை ஓரங்களில் சோம்பலான புகையைக் கிளப்பும் ஊதுவத்தி ஸ்டாண்டுகள்.

ஹாலுக்கு நான்கு சன்னல்கள் இருந்தன. அவற்றில் மூன்று வாசற்புரத்தை நோக்கி இருந்தன. அவற்றைச் சிக்கென்று அடைத்து இரும்புப் பட்டை வைத்து அடித்திருந்தார்கள். அந்தச் சன்னல்களை மறைத்துக் கொண்டு பூப்போட்ட கர்ட்டன்கள் தொங்கின.

ஒரே ஒரு சன்னல் திறந்திருந்தது. அதன் வழியாக அடுத்த அறை தெரிந்தது. அந்த அறைக்குள் என்ன இருக்கும் என்று தெரிந்தது. அந்த சன்னலையும் ஒரு கார்ட்டன் மூடிக் கொண்டிருந்தது.

கீழ்ப் பகுதியிலிருந்து ஒரு மாடிப்படி மேலே உள்ள ஹாலுக்கு இடது ஓரத்தில் வந்து சேர்ந்திருந்தது. அதற்கு அருகிலேயே இன்னொரு மாடிப்படி இரண்டாவது மாடிக்குப் போய்க் கொண்டிருந்தது.

ஹாலின் ஓரத்தில் எச்சில் துப்புவதற்குப் பெரிய பாத்தி ரத்தை வைத்திருந்தார்கள். அதைப் பார்க்கும் போது வயிற்றைக் குமட்டியது.

சரித்திரப் படங்களில் அந்தப்புரச் சேடிகள் விதவிதமான ஆடைகளுடன் கீழே அமர்ந்திருப்பார்களே, அதே போலத்தான் வட்டமாக நாங்கள் உட்கார்ந்திருந்தோம். ஒவ்வொருவரது மேக்-அப்பும் பிரமாதமாக இருந்தது.

நான் சோர்ந்து போயிருந்தேன். மண்டி போட்டுக் கைகளைக் கீழே அழுத்தி உட்கார்ந்திருந்தேன். உடம்பில் வலி பிராணன் போயிற்று. தவிர சல்வார் கமீசுகள் எனக்குப் புதியவை. ஆகையால் அவை என் தொடைகளையும், மார்பு களையும் நெருக்கித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தன. பல்லைக் கடித்துக்கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். பிறகு ஒரு அடி பின்னால் நகர்ந்து சுவரில் சாய்ந்து கொண்டேன்.

இடையில் டில்லிக்காரி என்னை ஒரு தடவை பார்த்தாள். பக்கத்திலிருக்கும் பெண்ணிடம் ஏதோ சொன்னாள். அவள் எழுந்து என்னை நோக்கி வருவதைப் பார்த்ததும் பயமாக இருந்தது. என் அருகில் உட்கார்ந்து அவள் என்னவோ சொன்னாள். புரியவில்லை. பிறகு அவளே ஒரு சீப்பு எடுத்து வந்து என் தலையை லேசாக வாரி முன் முடிகளை நெற்றியில் விழும்படிச் செய்தாள். இந்த மேக்-அப்பிற்குத்தான் டில்லிக்காரி அவளை என்னிடம் அனுப்பியிருக்கிறாள்.

எல்லோருக்கும் டீ வரவழைக்கப்பட்டது. என் முன்பாக ஒரு கிளாஸை வைத்தார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. சிறிது உறிஞ்சி விட்டு அப்படியே வைத்து விட்டேன்.

பிறகு பாட்டு நடக்கும்போது எனக்கு நினைவு பாதிதான் இருந்தது. ஒரு அசாத்தியமான தூக்கம் என்னை இழுத்துக் கொண்டிருந்தது. அவ்வப்போது கஷ்டப்பட்டுக் கண்ணைத் திறந்து கொண்டிருந்தேன்.

ஒவ்வொரு தடவையும் திறக்கும்போதும் அங்கே ஏதோ நடப்பதை உணர்ந்தேன். கூடி இருந்தவர்களில் ஒரு பெண்ணையும் ஒரு ஆணையும் காணவில்லை. ஒவ்வொருவராக மறைந்து கொண்டிருந்தார்கள். எங்கே மறைந்திருப்பார்கள் என்று ஊகித்தேன்.

இன்னொரு விஷயத்தையும் அறிந்தேன். ஒரு முரட்டு சர்தார்ஜி என்னைக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் கவனிப்பதை டில்லிக்காரியும் ஜாடையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எங்கேயோ வந்து இப்படி அகப்பட்டோமே என்று நினைத்தேன். முந்திய இரவு போல் இன்றும் பயங்கரங்கள் நடக்கும் என்று தோன்றியது. அதிலிருந்து தப்பிவிட முடியாது என்று நினைத்தேன்.

கடைசியாகக் கண்ணைத் திறந்தபோது தயாவை ஒரு இளம் சர்தார்ஜி அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குப் போவதைப் பார்த்தேன். தயா சிரித்துக் கொண்டே போனாள். எனக்கு எரிச்சல் வந்தது. அவளைப் பற்றி அதுவரை நினைத்த நல்ல நினைவுகள் சட்டென்று பறந்து விட்டன. அவளைப் பற்றி சந்தேகம்கூட எழுந்தது.

“சிநேகிதி என்று சொன்னாளே! அது பொய்! என்னை ஏமாற்றிப் படுகுழியில் தள்ளப் பார்க்கிறாள். நான் முரண்டு பிடிக்கக் கூடாது என்பதற்காக என்னைச் சமாதானம் செய்யப் பார்க்கிறாள்” என்று ஆத்திரப்பட்டேன்.

சிறிது நேரம் சென்றது. முரட்டு சர்தார் எழுந்தார். என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து தோள்மீது கையைப் போட்டார். நான் சடக்கென்று அதைத் தள்ளினேன். “கமலா!” என்று கத்தினாள் டில்லிக்காரி. ஹால் அதிர்ந்தது. எல்லோரும் என்னைப் பார்த்தார்கள்.

ஒரு கணத்தில் மீண்டும் ரகளையை ஆரம்பிக்கலாமா என்று நினைத்தேன். மறுகணம் அது இங்கே நடக்காது என்று தோன்றியது. சர்தார் கொஞ்சிக் கொண்டே மீண்டும் மேலே கையை வைத்தார். என் உடல் பதறியது.

அந்தக் கணத்தில் அடுத்த அறையிலிருந்து திடீரென்று தயா வெளியே வந்தாள். நேராக அவள் என் பக்கம் நோக்கி வந்தாள். “சர்தார்ஜி!” என்று அழைத்து அந்தச் சீக்கியருக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்தாள். அவரது கையை எடுத்துத் தன் தோள்மீது போட்டுக் கொண்டாள். சரசரவென்று சிரிப்பும், கேலியும் கொந்தளிக்க, அவரிடம் பேச ஆரம்பித்தாள். சர்தாரும் ‘ஹாஹா’ என்று கர்ஜனையோடு சிரித்தார்.

இதற்குள் அந்த இளம் சீக்கிய வாலிபன் (தயாவுடன் அடுத்த அறைக்குள் போனவன்) திரும்பி வந்தான். என்னை ஒருகணம் உற்றுப் பார்த்தான். பிறகு என் அருகில் சுவாதீனமாக வந்து உட்கார்ந்தான். என்னிடம் மெல்லப் பேசினான். நான் வெறுப்புடன் அவனை முறைத்தேன். அவன் பயந்து போய்த் திரும்பினான்.

அப்போது, “கமலா!” என்று மெதுவான குரல் கேட்டது. தயா பேசினாள். “அவனை முறைக்காதே! ஏற்றுக்கொள்!” என்று தெலுங்கில் மிக மெதுவாகக் கூறிவிட்டு, உடன் தனது சுபாவமான குரலில் முரட்டுச் சர்தாருடன் பேச ஆரம்பித்தாள்.

எனக்கு அவள்மீது வெறுப்புத்தான் வந்தது. "ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்! என் இப்படிப் புத்திமதி சொல்கிறாள்? என்னையும் கெட்டுப்போகச் சொல்கிறாள். முடியாது! நான் எல்லோரையும் முறைக்கத்தான் போகிறேன். என்னை நெருங்க விரும்புகிறவர்களுக்கு நான் நெருப்பாக இருக்கப் போகிறேன்" என்று தீர்மானித்தேன்.

அந்த இளைஞன் மீண்டும் என்னிடம் பேச முயன்றான். நான் மறுபடியும் முறைத்தேன்.

"கமலா!" என்று மீண்டும் குரல் கேட்டது. தயா பேசினாள்.

"அவனை ஏற்றுக்கொள்! உன் நன்மைக்குத்தான்!" என்று தெலுங்கில் மெதுவாக, ஆனால் அவசரமாகக் கூறினாள்.

அவள் சொல்படி கேட்கவா, வேண்டாமா என்று நினைக்கும்போது, தயாவின் தெலுங்குக் குரலைக் கேட்டுவிட்ட டில்லிக்காரி சட்டென்று எழுந்து வந்தாள்.

தயாவைப் பார்த்து கோபமாக என்னவோ கேட்டாள்.

சர்தாரின் அணைப்பை விட்டு தயா சட்டென்று எழுந்தாள். பலத்த குரலில் என்னையும் இளைஞனையும் காட்டி என்னவோ பேசினாள். பிறகு என்னைப் பார்த்துக் கோபமாக தெலுங்கில், "அந்த இளைஞனுடன் போ என்றேனே! ஏன் போகாமல் இருக்கிறாய்?" என்று இரைந்தாள்.

நான் அவளைப் பார்த்து விழித்தேன். "எழுந்திரு! போ!" என்று தெலுங்கில் கூறிவிட்டு என் கைகளைப் பிடித்து எழுப்பினாள். "போ!" என்று உள் அறையைக் காட்டினாள்.

தயா வஞ்சிக்கிறாள் என்று புரிந்துவிட்டது. ஒரு பெண்ணை துர்வழியில் ஈடுபடச் சொல்கிறாள். அதுவும் பலவீனமான நிலையில்! எவ்வளவு மோசமானவள் என்று நினைத்தேன். எனினும் வேறு வழி எனக்குத் தெரியவில்லை. டில்லிக்காரி கோபமாக விழித்துக் கொண்டிருந்தாள். தயங்கி நின்றால் முதுகில் வைத்து விடுவாள் என்று நினைத்தேன்.

'கடவுளே!' என்று நொந்து கொண்டு உள் அறைக்குப் போனேன். என் பின்னால் அந்தச் சர்தார் இளைஞன் தொடர்ந்து வந்தான்.

"சர்தார்ஜி!" என்று தயா அழைத்தாள். "பைஸா தீஜியே!" என்று கத்தினாள். சர்தார் இளைஞன் நின்றான். பர்ஸை

எடுத்தான், ஐம்பத்தைந்து ரூபாயை எண்ணிக் கொடுத்தான். தயா திருப்தி அடையவில்லை. மேலும் கேட்டாள். என்னைப் பார்த்து இந்தியில் என்னவோ வர்ணித்தாள். முடிவில் அவன் பத்து ரூபாய் அதிகம் சொடுத்தான். “சரி, “சரி நீங்கள் போகலாம்” என்றாள் தயா. “அடிப் பாவி!” என்று சபித்துக்கொண்டே உள்ளே போனேன்.

அறையின் உள்ளே போனதும் ஐந்து கதவுகள் தென் பட்டன. சாதாரண ஜாதிக்காய் கதவுகள். ஒன்றைத் திறக்க முயன்றேன். உள்ளே தாழிடப்பட்டிருந்தது. இரண்டாவதை முயன்றேன். அதுவும் பூட்டியிருந்தது. “கோன்?” என்று ஒரு பெண்ணின் குரல் வேறு கோபமாகக் கேட்டது.

ஒவ்வொரு கதவாக நான் இழுத்துக்கொண்டிருந்தபோது, டில்லிக்காரி அவசரமாக வந்தாள். அந்த வாலிபனிடம் என்னவோ பேசினாள். இன்னொரு நாற்பது ரூபாய் வாங்கிக் கொண்டு அடுத்தாற்போல் உள்ளே மற்றொரு அறைக்கு அழைத்துப் போனாள்.

அது ஜாதிக்காய்ப் பலகை அறை அல்ல. நல்ல அறை. ஆனால் சிறியது. உள்ளே ஒரு கட்டில்! சுவரில் கண்ணாடி! மேலே மின் விசிறி! பக்கத்து வீட்டு மாடிகளைப் பார்த்தவாறு ஒரு சன்னல்! கீழே தரை ஓரத்தில் தண்ணீர் நிரம்பிய ஒரு தகர ‘டப்’ (குழந்தையைக் குளிப்பாட்டும் அளவில் உள்ளது).

உள்ளே இருவரும் போனோம் டில்லிக்காரி என்னிடம் என்னவோ சொன்னாள். எச்சரிக்கை போல இருந்தது.

கதவைத் தாழ்ப்பாள் போட்டேன். சில கணங்கள் அப்படியே நின்றேன். கண் இருட்டியது. ஒரு விம்மல் வந்தது. எப்படித்தான் அந்த அழுகை வந்ததோ தெரியாது. துணியை வாயில் அடைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதேன்.

சர்தார் வாலிபன் கலங்கிப் போனான். என்னவோ சமாதானம் சொன்னான்.

வெகு நேரத்திற்குப் பிறகு அழுகை குறைந்தது. வாலிபன் என் அருகில் வந்தான். சைகையோடு பேசினான்.

“நான் உன்னைத் தொடமாட்டேன்! இது சத்தியம்! பயப் படாதே! நான் கீழே படுத்துக் கொள்கிறேன். நீ மெத்தையில் படுத்துக்கொள்!”

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் சொன்னதை நம்ப முடியவில்லை. அவன் செய்வது நயவஞ்சகமோ என்று நினைத்தேன்.

மெத்தையில் உட்காருவதற்கு என்னை வற்புறுத்தினான். நான் பயப்பட்டேன். உட்கார்ந்தால் அப்படியே என்னை உடனே தள்ளிப் பலாத்காரம் செய்வானோ என்று நினைத்தேன்.

கட்டிலிலிருந்து அவன் ஒரு விரிப்பை எடுத்து உதறினான். கீழே விரித்தான். அது ஒரே நாற்றம் எடுத்தது. எத்தனை பாவங்கள் அதில் சேர்ந்திருக்கின்றனவோ? இருந்தாலும் வேறு வழியில்லை வெறும் தரை ரொம்பக் குளிர்ந்தது.

விரிப்பில் அருவறுப்புடன் உட்கார்ந்தேன். முதுகில் உள்ள சவுக்கடிக் கறைகளை அந்த வாலிபன் பார்த்துவிட்டான். துள்ளிக் கொண்டு வந்து அனுதாபமாக ஏதோ சொன்னான். பிறகு லேசாக விரலால் முதுகைத் தடவினான்.

நான் திரும்பிப் பார்த்துச் சீறினேன். அவன் திடுக்கிட்டுக் கட்டில் மீது ஏறி உட்கார்ந்தான். நடிக்கிறானோ என்று நினைத்தேன்.

சிறிது நேரத்தில் நான் மெதுவாகக் கீழே சாய்ந்தேன். விழித்தவாறு படுத்திருந்தேன்.

கண்ணை மூடவே இல்லை. மூடினால் என்ன நடக்குமோ என்று பயம்!

வெகு நாழிகை அப்படி இருந்தேன். நடுநிசி ஆகியிருக்கும். மற்ற அறைகளில்கூட வெளிச்சம் அணைந்து விட்டது. எங்கள் அறை விளக்கு மட்டும் அணையவில்லை.

எழுந்திருந்தேன். அந்த வாலிபனைப் பார்த்தேன். அவனும் விழித்திருந்தான். அவன் மீது இரக்கமாக இருந்தது. "ஏன் இப்படி சாதுவாக இருக்கிறான்?" என்று நினைத்தேன். மனசில் அப்போது ஒரு பயமும் வந்தது. "பொழுது விடிந்த பிறகு அவன் டில்லிக்காரியிடம் போய் என்னைப் பற்றிக் குறை சொன்னால், அவள் மீண்டும் என்னை அடிப்பாளோ" என்று நினைத்தேன்.

அந்தப் பயம் வளர்ந்துகொண்டு போகவே, அவனருகில் உட்கார்ந்தேன். "என்னை அணைத்துக் கொள்ள வேண்டுமா?" என்று சைகையில் கேட்டேன்.

பாம்பை மிதித்தவன் போல் எழுந்தான். என் உடம்பை இரண்டு விரல்களால் தொட்டு 'சத்தியமாக மாட்டேன்' என்பது போல் தலையை அசைத்தான். பிறகு மெதுவாகப் பேசினான். நான் ஓரளவு அதை ஊகித்தேன்.

"தயா என்னை உன்னிடம் அனுப்பினாள். உன்னைத் தொடக் கூடாது என்று அவள் உத்தரவு!"

தயாவா இப்படிச் சொன்னாள்? அவள் உத்தரவின் பேரிலா அவன் இப்படிப் பெட்டிப் பாம்புபோல் இருக்கிறான்? எனக்கு ஒரே ஆச்சரியம்!

கூடவே ஒரு சந்தேகம். இந்த வாலிபன் சொன்னதை நான் சரியாகப் புரிந்துகொண்டேனா என்று! இவ்வளவு பணத்தையும் கொட்டிக் கொடுத்துவிட்டு எப்படி இவன் சும்மா இருக்கிறான். என்று நினைத்தேன்.

யோசிக்கும்போது அது தயாவின் வேலையாகத்தான் இருக்கும் என்று தோன்றியது. தயா உண்மையில் இவ்வளவு இரக்கம் உள்ளவளா? என்மீது அவளுக்கு ஏன் கருணை பிறந்திருக்கிறது.

வாலிபன் மெத்தைமீது மீண்டும் சாய்ந்தான். எனக்குத் தைரியம் பிறந்தது. எழுந்து போய் விளக்கைப் பயமில்லாமல் அணைத்தேன். கீழே விரிப்பில் படுத்துக் கொண்டேன். முதுகும் சந்துகளும் வலித்தன. மூன்று விஷயங்கள் என் மனத்தை அன்று இரவு அரித்து எடுத்தன.

முதலாவது, நான் இல்லத்தை விட்டுத் தப்பியது! அது பெரிய தவறு என்று நினைத்தேன். அப்படிச் செய்தது எவ்வளவு சிறுபிள்ளைத்தனம்!

இரண்டாவது அந்தப் பம்பாய்ப் பையன் என்னை டில்லிக்குப் போக வேண்டாம் என்று சொன்னது! எங்கேயாவது ஓடிவிடச் சொன்னான். அவனுக்கு விஷயம் தெரிந்திருக்க வேண்டும். என்னைக் காப்பாற்ற நினைத்திருக்கிறான். அவனுக்கு என்மீது எவ்வளவு அன்பு! அவன் பேச்சை நான் கேட்க வில்லை. அது ஒரு தவறு.

மூன்றாவது, ரயிலில் அந்தத் தமிழர் எச்சரித்தது! அவர் சொல்லைக் கேட்டு நான் தப்பி ஓடியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது ஒரு தவறு!

பொழுது விடிந்தது. வாலிபன் விடை பெற்று வெளியே இறங்கினான். நானும் அவனுடன் இறங்கினேன்.

## 15. மிருகங்களின் கூடாரம்

**எ**ங்களைத் தவிரக் காலையில் யாரும் எழுந்திருந்ததாகத் தெரியவில்லை. வாலிபனுக்காகக் கதவைத்திறந்து விட்ட டில்லிக்காரி தூக்கக் கலக்கத்துடன் என்னைப் பார்த்து மீண்டும் படுக்கச் சொன்னாள். படுத்துக் கொண்டேன்.

காலை பத்து மணி வரைகூட யாரும் எழுந்திருக்கவில்லை. பிறகுதான் ஒவ்வொருவராக எழுந்தார்கள்.

பதினொரு மணி இருக்கும். நான் தயாவைப் பார்க்க நினைத்தேன். உடனே மாடிப்படியில் ஏறினேன்.

''கமலா'' என்று கடுமையான குரல் கேட்டது. திரும்பினேன். "அங்கே போகாதே! இங்கேயே இரு!" என்று புரியும்படி கர்ஜித்தாள் டில்லிக்காரி.

பிறகு அவள் என் அருகே வந்தாள்.

குளித்துவிட்டேனா என்று கேட்டாள். ஆயிற்று என்றேன். என் கையைப் பிடித்து அழைத்துப் போனாள். முந்தைய தினத்தில் ஒரு அறையில் போட்டு அடித்தாளே, அதனுள் என்னைக் கொண்டு போனாள். உள்ளே விட்டுக் கதவைச் சாத்தினாள். பூட்டி விட்டுப் போய்விட்டாள்.

உள்ளே நல்ல இருட்டு. எங்கும் தட்டு முட்டுச் சாமான்கள்! கரப்பான், பாச்சைகளின் நெடி! அழுகையுடன் கீழே உட்கார்ந்தேன்.

மூளை எரிவது போலிருந்தது. அவ்வளவு தூக்கம்! மூச்சுக் கூட சில சமயங்களில் அடைத்தது. இந்த அறையில் இப்படியே இறந்துவிட மாட்டோமா என்று நினைத்தேன்.

பன்னிரண்டு மணி இருக்கும். ஒரு தட்டில் சப்பாத்தி, அரிசிச் சோறு, சப்ஜி, தயிர் ஆகியவைகளுடன் சமையல்காரி உள்ளே வந்தாள். தட்டை வைத்துவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு போனாள்.

என் மனத்தில் ஒரு வைராக்கியம் எழுந்தது. சாப்பிடக் கூடாது என்று நினைத்தேன். அப்படியே தட்டை ஒதுக்கி வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டேன்.

எப்படித் தப்பிப்பது என்று யோசனை செய்தேன். பெரிய வெண்டிலேட்டர் மட்டும் இருந்தது. அது வழியாகத் தப்ப முடியாது. கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடினாலும் பிடிபட்டு விடுவேன். எப்படித்தான் ஓடுவது?

யோசனை செய்ததில் ஒருவாறு தூங்கிவிட்டேன். மணி மூன்றோ நாலோ இருக்கும். சத்தம் கேட்டுக் கண் விழித்தேன். சமையல்காரி கையில் டீயுடன் என் முன்னால் நின்று கொண் டிருந்தாள். என் அருகில் சாப்பாட்டுத் தட்டு அப்படியே இருப்தைப் பார்த்ததும் ஆதங்கத்துடன் என்னவோ கேட்டாள். பிறகு டீயை என் முன் நீட்டினாள் அதைக் கோபத்தில் அப்படியே வாங்கித் தூர எறிந்தேன். கண்ணாடி தூள்தூளாகச் சிதறியது. வீறிட்டுக்கொண்ட சமையல்காரி வெளியே ஓடினாள்.

அடுத்த கணங்களில் காலடி ஓசைகள் கேட்டன. டில்லிக் காரி ஓடி வந்தாள். அவளுடன் அந்த முரட்டு ஆசாமியும் ஓடி வந்தான்.

அறையை அவர்கள் நோட்டம் விட்டார்கள். கணப் பொழுதில் நடந்தது என்னவென்று ஊகித்து விட்டார்கள். முரட்டு ஆசாமி என் கைகளைப் பின்னால் திருகினான்.

இதற்குள் டில்லிக்காரி 'டிக்கா' என்று அந்த ஆசாமியை அழைத்து ஏதோ கட்டளை இட்டாள். பிறகு அறைக் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டுபோய் விட்டாள்.

டிக்கா என் கையை விடுத்து திடீர் என்று ஸாரியைப் பற்றினான். அரை நொடியில் அது உருவி விட்டது. நான் வெறும் பாவாடையுடன் சுற்றி வர ஓடினேன். கிடைத்த சாமான் களை அவன் மீது தூக்கி எறிந்தேன்.

அவன் விடவில்லை. தாவி ஓடிவந்தான். இரண்டு எட்டில் என்னைப் பிடித்துக் கொண்டான். பிறகு அருவறுப்பான சில காரியங்களில் இறங்க முனைந்தான்.

நான் முகத்தை மூடிக்கொண்டு அழுதேன். "இனி சாப்பிடு கிறேன். சொன்னபடி கேட்கிறேன்" என்று கத்தினேன்.

என் பரிதாபமான குரல் அடுத்த அறையினுள் கேட்டிருக்க வேண்டும். சிறிது நேரத்தில் கதவு தடாலென்று திறந்தது. ஆவலோடு பார்த்தேன். டிக்கா சடாரென்று தன் மானத்தை மறைத்துக் கொண்டான்.

கோபத்துடன் உள்ளே வந்தார் டில்லிக்காரியின் கணவர். நான் ஓடி அவர் காலில் விழுந்தேன். ''இனி ஒழுங்காக இருக்கிறேன்" என்று கதறினேன்.

அவர் என்னை எழுப்பி நிறுத்தினார். ஸாரியை எடுத்துக் கொடுத்தார். உடனே டிக்காவைப் பார்த்துக் கோபமாகப் பேசினார்.

டிக்கா பதில் சொல்வதற்குள் டில்லிக்காரி படபடவென்று வந்தாள். டிக்காவின் கட்சிக்கு பரிந்து கொண்டு பேசினாள்.

சிறிது நேரம் தர்க்கங்கள் நடந்தன. பிறகு டில்லிக்காரி ஆத்திரத்துடன் என் கையைப் பற்றினாள். தரதர என்று இழுத்து படிகளில் ஏறினாள். மாடியில் கொண்டு போய் ஒரு தள்ளு தள்ளினாள். அங்கே வட்டமாக உட்கார்ந்து கொண் டிருந்த பெண்களிடையே தம் என்று விழுந்தேன். இரைச்சலாக ஏதோ கத்தி விட்டு அவள் கீழே இறங்கிப் போனாள். கண்ணீருடன் எழுந்து திரும்பியபோது பக்கத்திலிருந்த ஒரு பெண் அலட்சியமாக முகத்தைத் திருப்பினாள்.

தயாவைப் பார்க்க நினைத்துச் சுற்றிவரத் தேடினேன். காணவில்லை.

இதற்குள் எனக்கு ஏற்கெனவே பரிச்சயமான கன்னடப் பெண் எழுந்து வந்தாள். என்னை ஓரமாக அழைத்துப் போனாள். அலமாரியைத் திறந்து சல்வார், கமீசுகளை எடுத்து அணிய வைத்தாள். இடையிடையில் மற்ற பெண்களை ஓரமாகக் கவனித்து விட்டு, "கமலா! இங்கே ரகளை பண்ணாதே! எதுவும் நடக்காது! பேசாமல் இரு" என்றாள்.

டிரஸ் அணிந்து கொண்டு உட்கார்ந்தேன். பசி வயிற்றைக் கிள்ளியது. அதைப் பொருட்படுத்தாது இருந்தேன். உடம்பு ஏதோ பீதியில் தன்னால் ஆடியது.

பாட்டு ஆரம்பித்தது. ஆண்கள் வந்தார்கள். பலரின் பார்வை என் மீதுதான் பதிந்தது.

இருட்டிச் சிறிதுநேரம் ஆகி இருக்கும். டில்லிக்காரி மேலே வந்தாள். "கமலா!" என்று அழைத்தாள். நடுக்கத்துடன் எழுந்து போனேன். என்னைக் கையைப் பிடித்து அடுத்த அறைக்கு அழைத்துப் போனாள். உட்கார வைத்து இடுப்பி லிருந்து ஒரு பொட்டலத்தை உருவினாள். மெதுவாக அதைப் பிரித்து என்னைச் சாப்பிடச் சொன்னாள்.

அவளைப் பார்த்தேன். அவள் கண்களில் ஒரு பாசம் இருந்தது. அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். "சாப்பிடம்மா!" என்று என்னைச் சாப்பிட வைத்தாள்.

சாப்பிட்ட பிறகு வெளியே போய் உட்கார்ந்தேன். சிறிது நேரத்தில் அங்கே இருந்த ஆண்களில் ஒருவர். என்னை சைகை காட்டினார். எழுந்து அவர் அருகில் போனேன்.

அந்த ஆளின் பக்கத்தில் உட்கார்ந்தேன். அவர்மீது சுருட்டு நெடி வீசியது. கழுகைப்போல் என்னைப் பார்த்தார். என் தோளின்மீது கையைச் சுற்றினார். அவர் சட்டையிலிருந்து ஒரு வியர்வை நெடி 'கப்' என்று அடித்தது.

டில்லிக்காரி அவரிடம் பேசினாள். அவர் எழுந்து போய் அவளிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தார். பிறகு என்னை 'வா' என்று சைகை காட்டினார்.

பலி ஆடுபோல் போனேன். அதைத் தவிர வேறு வழியில்லை. அந்தக் கணத்தில் வீட்டையும், என் தாய், சகோதரிகளையும் நினைத்தேன். அழுகை வந்தது.

அவர் என் தோள்மீது கையைப் போட்டுக் கொண்டு வந்தார். போகும்போது 'கமலா' என்றாள் டில்லிக்காரி. நின்றேன். கையிலிருந்து காகித உறையிலிருந்து பளபளக்கும் ஸ்ட்ரிப் ஒன்றை எடுத்தாள். அதிலிருந்து ஒரு மாத்திரையைக் கிழித்து எடுத்து என் கையில் கொடுத்தாள்.

அது என்ன மாத்திரை என்று யோசித்தேன். அதற்குள் அவளே ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தாள். மாத்திரையை விழுங்கித் தண்ணீர் குடித்தேன். பிறகு அந்த ஆளுடன் உள் அறைக்குப் போனேன்.

ஒரு ஜாதிக்காய்க் கதவு திறந்திருந்தது. உள்ளே நுழைந் தேன். மனம் அப்படியே துவண்டது. ஒரு கட்டிலில் அழுக்கான மெத்தையும் தலைகாணியும் இருந்தன. தலைகாணியில் கறை! சுற்றிவரப் பலகையால் ஆன சுவர்கள்! அவை மீது சாக்பீசால் எழுதப்பட்ட நிறையத் தேதிகள்?

இந்த அறையிலும் தரை ஓரமாக ஒரு தகர டப் இருந்தது. அது முழுவதிலும் தண்ணீர் நிரம்பியிருந்தது.

வந்தவர் கதவை மூடினர். அந்தக் கணத்தில் எனக்குப் பெரிய ஆத்திரம் எழுந்தது. அவரது கையைப் பிடித்துக் கடிக்க

லாமா என்று நினைத்தேன். அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. அப்படிச் செய்துவிட்டு, அடியும் உதையும் வாங்கிக் கொள்வதுதான் மிச்சம்! அல்லது டிக்காவின் அருவறுப்பான செய்கைகளை நேரில் பார்த்துச் சகித்துக் கொள்ள வேண்டி இருக்கும்.

சட்டென்று விளக்கை அணைக்கப் போனேன். வேண்டாம் என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் விடவில்லை. டப் என்று அணைத்தேன்.

அருகில் ஒரு சன்னல்! அது பக்கத்து வீட்டு மாடிகளை நோக்கித் திறந்து இருந்தது. அதன் வழியாக வெளிப் புறத்தின் வெளிச்சம் உள்ளே வந்து, இருட்டைக் கலைத்துக் கொண் டிருந்தது.

அதனால் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடிய வெளிச்சம் உள்ளே இருந்தது. அது அருவறுப்பாக இருந்தது. மெத்தையில் என்னை அவர் உட்காரச் சொன்னார். என் முன்னால் ஆடை களைக் களையத் தொடங்கினார்.

கண்களை மூடினேன். நானாக ஏற்படுத்திய அந்தச் செயற்கை இருட்டுக்குள் மூழ்கிவிட நினைத்தேன். கண்ணைத் திறக்கவேயில்லை.

சிறிது நேரத்தில் ஒரு கை என் மீது பட்டது. நான் மெத்தையில் சாய்க்கப்பட்டேன். எந்தவித எதிர்ப்பும் நான் செய்யவில்லை. கண்களை மட்டும் மூடியே இருந்தேன்.

அவர் முனகிக் கொண்டே என் உடலைப் பல விதங்களில் புரட்டிக் கொண்டிருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக என் உடல் வெறுமை ஆகிக்கொண்டு வருவதை உணர்ந்தேன். பிறகு திடீரென்று அவர் விளக்கைப் போட்டார். நான் துள்ளி எழுந்தேன். விளக்கை அணைக்க ஓடினேன். 'அணைக்காதே' என்று இரைந்து என் கையைப் பிடித்து இழுத்தார். அவரது கண்டிப்பைப் பார்த்ததும் வெல வெலத்தேன். விருட்டென்று ஒரு மூலைக்கு ஓடி என் முன்புறத்தை யெல்லாம் அதை நோக்கித் திருப்பினேன். சில கணங்கள் அவர் சும்மா நின்றார். பிறகு சட்டென்று பாய்ந்து வந்து என்னைப் பிடித்து அவரது கையுள் சாய்த்துக் கொண்டார். அப்படியே என்னை இழுத்து வந்து கட்டிலில் கிடக்க வைத்தார்.

கத்தலாமா என்று நினைத்தேன். அதற்குப் பலன் கிடைக்காது என்று மனம் சொல்லியது. இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டேன்.

பல கணங்கள் ஓடின. அவர் என் உடலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார் என்று புரிந்தது.

பிறகு என் முகத்தின்மீது அவரது நிழல் விழுவதை உணர்ந்தேன். அந்த நிழல் எனது கன்னித் தன்மையிலும் படர்ந்து அதைப் பொசுக்கிக் கறையாக்கிக் கொண்டிருந்தது. மேலும் மேலும் கண்களை இறுகி மூடினேன். என் உடல் எனக்குச் சொந்தமில்லாததுபோல் ஒரு பாவனையை ஏற்படுத்திக் கொண்டு, ஒரு மன அந்தகாரத்தில் அழுந்தி அழுந்தி எனது நினைவின் மூலம் எங்கேயோ தொலைதூரத்திற்குப் பறந்து போய்விட்டேன். என்னால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

ஐந்து நிமிடங்களில் அந்த நிழல் என்னை விட்டு அகன்றது. கண்ணைத் திறந்து பார்த்தால் மாசுபடுத்தப்பட்ட எனது உடம்பு கட்டிலில் குழம்பிக் கிடந்தது. கண்ணிலிருந்து நீர் வழிந்தது. தலையைச் சாய்த்து அழுதேன்.

பிறகு சட்டென்று எழுந்தேன். கையில் இரண்டு ரூபாய் நோட்டுக்களை எடுத்து அந்த ஆசாமி என்னிடம் நீட்டிக் கொண்டிருந்தார்.

எனக்குக் கோபம் வந்தது. "போ வெளியே" என்று கடுமையாகச் சொன்னேன். நோட்டுக்களைக் கீழே போட்டு விட்டு வெளியே பரபரப்புடன் அவர் ஓடினார்.

## 16. மெல்லிய பேச்சுக்கள்

கதவைச் சாத்திக் கொண்டு மெத்தையில் உட்கார்ந்தேன். கண்ணீர் பீறி வந்தது. விம்மலை அடக்கிக் கொண்டு மெதுவாக அழுதேன்.

அடுத்த நிமிடத்தில் கதவு திறந்தது. ஏறிட்டுப் பார்த்த போது கன்னடப் பெண் உள்ளே வந்தாள். என்னைப் பரிதாப மாகப் பார்த்தாள். "என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"உனக்குத் தெரியாதா?" என்று சீறினேன்.

அவள் முகம் நிதானமாகியது.

"தெரியும். அதற்கு இப்போது அழுது பிரயோசனமில்லை. அப்படி அழுவதாக இருந்தால் தினமும் அழவேண்டியிருக்கும். யாருக்கு என்ன லாபம்? இப்போது நடந்ததற்கு அழுவதைவிட, இவர்களிடம் அகப்படும்படி ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொண்டாயே, அதை நினைத்து அழு!" என்றாள்.

அமரிக்கையாக அழுத்தத்தோடு அவள் சொன்ன வார்த்தை என்னைத் திடுக்கிட வைத்தது. அவள் படித்தவளாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டேன்.

அடுத்த கணம் நான் வெறும் உடம்பாக இருப்பது நினைவுக்கு வந்தது. சட்டென்று எழுந்து துணிகளை உடுக்கப் போனேன்.

டிரஸ் அணிந்து கொண்டேன். "உங்கள் பெயர் என்ன?" என்றேன் கன்னடக்காரியிடம்.

"கீர்த்தி!" என்றாள்.

"எப்படி இங்கே வந்தீர்கள்?" என்றேன்.

"அது ஒரு கதை! அதை இப்போது சொல்வதற்கு நேரம் கிடையாது. அதிகம் என்னிடம் பேசாதே! சிந்து கேட்டுவிடப் போகிறாள்.

"யார் அந்த சிந்து?"

"நம்மை ஆட்டிப் படைக்கும் எஜமானி!" என்றாள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள், "கீர்த்தி! ஓ கீர்த்தி!" என்று குரல் கேட்டது. டில்லிக்காரி கத்திக் கொண்டிருந்தாள்.

அவளுக்குப் பதில் சொன்ன கீர்த்தி, பிறகு என்னைப் பார்த்து, "கமலா! சீக்கிரம் புறப்படு!" என்று அவசரப் படுத்தினாள்.

"எங்கே!"

"ஹாலுக்கு வா!"

"எதற்கு?"

"மீண்டும் நம் பிஸினஸை ஆரம்பிக்க வேண்டும்!"

"மீண்டுமா?" திடுக்கிட்டுக் கேட்டேன்.

"ஆமாம்!" என்றாள். இதோடு முடிந்து விட்டது என்று நினைத்தாயா? சிந்துவுக்கு இருபத்தைந்து ரூபாய்தானே சம்பாதித்துக் கொடுத்திருக்கிறாய்! அதோடு விடுவாளா?

இன்னும் எத்தனை தடவை இந்தக் கதவைச் சாத்த வேண்டுமோ?" என்று கூறிவிட்டு, அவசரமாக என்னை வெளியே இழுத்தாள்.

அப்போது கீழே இரண்டு ரூபாய் கிடப்பது அவள் கண்ணில் பட்டது. அதைப் பொறுக்கி எடுத்தாள்.

"ஏது இது?" என்றாள்.

"அந்த ஆசாமி கொடுத்தான். எனக்கு அதை எடுத்துக் கொள்ள விருப்பமில்லை" என்றேன்.

"பைத்தியக்காரி! இந்தப் பணம் உனக்கு எவ்வளவு தேவைப்படப் போகிறது என்று பின்னால்தான் தெரியும். ஒவ்வொருவரிடமும் பக்ஷீஸ் கேள்! நிறையக் கேள்! உறிஞ்சி எடு! பின்னால் இது நமக்கு ரொம்ப உதவும்! இந்தப் பணத்தை எங்கே வைத்துக் கொள்ளப் போகிறாய்? பர்ஸ் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"இல்லை!"

"இதை யாருக்கும் தெரியாத இடத்தில் வைக்கவேண்டும். இடுப்பிலே வைக்காதே! எங்களுக்கு ஆளுக்கு ஒரு மறைவிடம் வைத்திருக்கிறோம். உனக்கும் ஒரு இடம் கண்டுபிடித்துச் சொல்கிறேன். ஒரு பர்சும் வாங்கித் தருகிறேன். வைத்துக்கொள்! அதுவரை இந்தப் பணம் என்னிடம் இருக்கட்டும்! இரண்டு ரூபாய்! நினைவு வைத்துக்கொள்!" என்று கூறினாள்.

அப்போது இரண்டாம்தரம் சிந்துவின் (டில்லிக்காரி) குரல் கேட்கவே, என்னை அவசரமாக இழுத்தாள்.

குழம்பியவாறு போய் ஹால் வட்டத்தில் உட்கார்ந்தேன். மனம் பலவிதத்தில் கலங்கியது. இந்தக் கீர்த்தியும் சிந்துவின் கையாளாக இருப்பாளோ! என்னை இங்கே உள்ள சூழ்நிலைக்குப் பக்குவப்படுத்துவதற்காக இப்படி நாடகம் நடிக்கிறாளோ என்று நினைத்தேன்.

நான் குழம்பி இருப்பதைக் கீர்த்தி பார்த்திருக்க வேண்டும். தண்ணீர் குடிக்கும் பாவனையில் என் பக்கத்தின் வழியாகப் போனாள். போகும்போது, "சிரித்துக் கொண்டிரு! இல்லாவிட்டால், இன்னும் தண்டனை கிடைக்கும்!" என்று மெதுவாகக் கூறிக்கொண்டே போனாள்.

சிரிக்க முயன்றேன். முடியவில்லை. ஆனால் முகத்தைக் குழப்பமில்லாமல் நிர்மலமாக்கிக் கொண்டேன். நிமிர்ந்து சுற்றி வரப் பார்த்தேன்.

என் எதிரே ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். நேபாலிப் பெண். அவளுடன் ஒரு 'குரு' சட்டை போட்ட வாலிபன் உட்கார்ந்திருந்தான். நேபாலியின் கழுத்தை அணைத்துக் கொண்டு ஒரு கையால் சிகரெட் ஊதிக் கொண்டிருந்தான். நான் நிமிர்ந்தபோது என்னைப் பார்த்தான். நான் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

இரண்டொரு நிமிடம் கழித்துத் திரும்பியபோது, அவன் மீண்டும் என்னைப் பார்ப்பது தெரிந்தது. இன்னொரு விஷயமும் தெரிந்தது. அவன் என்னைப் பார்ப்பதை நேபாலிப் பெண் கவனிப்பதும் தெரிந்தது.

சில நிமிடங்கள் சென்ற பிறகு என்மீது ஒரு கை விழுந்தது. திடுக்கிட்டுப் பார்த்தால் அந்த வாலிபன் என் அருகே நின்று கொண்டிருந்தான். திகைத்தேன். நேபாலிப் பெண்ணைப் பார்த்தேன். அவள் அலட்சியமாக வேறு பக்கம் திரும்பி யிருந்தாள்.

என் தோளை மறுபடி அவன் தொட்டு அழைக்கவும் எழுந்திருந்தேன். அதற்குள் ஒரு பெண் ஓடிவந்து வாலிபனிடம் பேசினாள். அவன் பர்ஸைத் திறந்து இருபத்தைந்து ரூபாய் எடுத்துக் கொடுத்தான். "கமலா, நீ போகலாம்!" என்று அந்தப் பெண் என்னிடத்தில் இந்தியில் கூறினாள்.

நான் அவனை அழைத்துக் கொண்டு போனேன். சுற்றி வர அப்போது பார்த்ததில் கீர்த்தியைக் காணவில்லை.

உள்ளே போனதும் எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட் டிருப்பது தெரிந்தது. வெளியிலேயே நின்றேன். அதற்குள் அந்த வாலிபன் சிகரெட்டைக் கீழே போட்டு மிதித்து விட்டு, என்னை அணைத்தான். நான் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தேன்.

"என்னை விடுங்கள்! விடுங்கள்!" என்று தமிழிலேயே சொன்னேன்.

"மத்றாஸா?" என்று கேட்டவாறு, ஒரு தென்னிந்திய நட்சத்திரத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டே என்னைத் தழுவினான். நான் பலத்தை உபயோகித்து அவனிடமிருந்து விடுபட்டேன்.

ஐந்து அறைகளிலிருந்தும் பேச்சுக் குரல்களும் கொஞ்சல் களும் கேட்டுக் கொண்டிருந்தன. ஒரு அறையில் "ஹஹ் ஹா!" என்று பெண் சிரிக்கும் சப்தமும், அதைத் தொடர்ந்து ஓட்டம் பிடி சப்தமும் கேட்டன. எனக்கு எரிச்சலாக இருந்தது.

அப்போது, "கமலா கமலா!" என்று யாரோ மெதுவாக இரையும் சப்தம் கேட்டது. அது யார் குரல் என்று தெரிய வில்லை. கீர்த்தியாக இருக்குமோ என்று எண்ணினேன். எங்கிருந்து பேசுகிறாள் என்பது தெரியவில்லை. பாத்ரூம் பக்கத்திலிருந்துதான் குரல் வருவது கேட்டது. இரண்டு தடவைக்குமேல் அந்தக் குரலும் கேட்கவில்லை.

சில கணங்களில் டக்கென்று ஒரு கதவு திறந்தது. ஒரு பெண்ணும் ஆணும் வெளியே வந்தார்கள். நான் அதற்குள் நுழைந்தேன். வாலிபன் என்னைப் பின் தொடர்ந்தான். உள்ளே போனதும் எனது தயக்கங்கள் அதிகரித்து விட்டன. திடீரென்று வாலிபன் பக்கம் திரும்பி, "ஸார்! என்னை விடுங்கள்! தயவு செய்து விட்டுவிடுங்கள்!" என்று கெஞ்சினேன். எனக்கு அப்படிச் செய்யத்தான் தோன்றியது. அந்தத் தொழிலில் இறங்க மனம் சம்மதிக்கவில்லை.

அந்த 'குரு' சட்டை வாலிபன் நான் சொல்லியதைப் பொருட்படுத்தவில்லை. புரிந்து கொண்டதாகவும் தெரிய வில்லை. என்னவோ பதில் சொன்னான். எனக்கும் அது புரியவில்லை.

என்னை மெத்தையில் இறுத்தி, பல நிமிடங்கள் பேசினான். காதல் மொழிகளாக இருக்க வேண்டும். பிறகு, அவனே சென்று விளக்கை அணைத்துவிட்டு வந்தான்.

முந்திய மனிதனைப்போல் இவன் இல்லை. கடைசிவரை கண்ணியத்தை கடைப்பிடித்தான்.

எனினும், இரண்டாவது முறை அன்று நான் என்னை இழந்த பிறகு, என்மீது ஒரே வெறுப்பு ஏற்பட்டது. எனக்கு வந்த துக்கத்திலும் தீராத களைப்பிலும் எழுந்திருக்க முடியாமல் அப்படியே மெத்தையிலேயே படுத்தேன்.

சிறிது நேரம் சென்றிருக்கும். "கமலா" என்ற குரல் கேட்டது. திடுக்கிட்டு விழித்தேன். "இங்கேதான் இருக்கிறேன்" என்று அந்தக் குரல் மீண்டும் கேட்டது.

அடுத்த அறையிலிருந்து வந்த சப்தம் அது. இடையே உள்ள தடுப்புப் பலகையில் நிறைய இடுக்குகள் இருந்தன. அதன் வழியே அது கேட்டது.

"கீர்த்திதானே?" என்றேன்.

"ஆமாம்."

"அறைக்குள்ளே வருவதற்கு முன்புகூடக் கூப்பிட்டது நீதானா?"

"இல்லையே, நான் கூப்பிடவில்லையே!"

"பின்னே யார் கூப்பிட்டார்கள்? பாத்ரூமிலிருந்து குரல் கேட்டதே!"

"பாத்ரூமா? அது தயாவாக இருக்கும்!"

"தயாவா? அவளை ஏன் காணவில்லை?"

"அவளைச் சிந்து இரண்டாவது மாடிக்கு அனுப்பி விட்டாள்."

"ஏன்?"

"ஏதாவது காரணம் இருக்கும். சிந்துவுக்கு அவள்மீது சந்தேகம் ஏற்பட்டிருக்கும். தண்டனைக்காக இரண்டாவது மாடிக்கு அனுப்பி இருப்பாள்."

"தண்டனையா? இரண்டாவது மாடியில் என்ன செய்வார்கள்?"

"எல்லாம் இதே தொழில்தான். அங்கே போனவர்கள் அந்த மாடியை விட்டு இறங்க முடியாது. அறைக்குள்ளேயே தான் அடைஞ்சு கிடக்கணும். தவிர அங்கே இருக்கும் இந்திப் பெண்கள் சுத்த ரவுடிகள். ரொம்ப மோசமாக நடப்பார்கள். அங்கே போகிறதென்றால் எல்லோருக்கும் பயம்!"

"ஆமாம், இதை விட்டு நாம் தப்ப முடியாதா?"

"ஹூம். முடியாது! அப்படி முடிந்தால், நான்தான் முதலாவதாகப் போயிருப்பேன்."

"ஏன் முடியாது?"

"இந்த வீட்டுக்கு அவ்வளவு பாதுகாப்பு இருக்கிறது!"

"எல்லோரும் சேர்ந்து கலாட்டா செய்தால்....?"

"பைத்தியம்! எல்லோரும் உன்னுடன் சேரமாட்டார்கள். பாதிப் பேருக்கு இதைவிட்டுப் போகப் பிடிக்காது. அவர்களிடம் ஏதாவது பேசி வைக்காதே! உன்னைச் சிந்துவிடம் காட்டிக் கொடுத்து விடுவார்கள். ஒருத்தியிடம் நன்றாகப் பழகியபின்னரே அவளிடம் அந்தரங்கமாகப் பேசு!"

இதற்குள் ஹாலிலிருந்து சிந்துவின் குரல் கேட்டது. யாருக்கோ உத்தரவு வழங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கேட்ட கீர்த்தி, "சீக்கிரம், சீக்கிரம்! நாழியாகிவிட்டது. ஆளைக் கிளப்பி விட்டு நீயும் வெளியில் போ" என்றாள். நான் பரபரப்பு அடைந்தேன். "கீர்த்தி, நாம் மீண்டும் எப்போது சந்திக்கப் போகிறோம்?" என்றேன்.

"இப்படிச் சந்தித்தால்தான் உண்டு. நாங்கள் முதல் மாடியில் இருக்கிறோம். அடிக்கடி சந்தித்துக் கொள்ள முடியும். நீ புதுசு! உன்னைக் கீழேயே அடைத்துப் போட்டிருக்கிறார்கள். நீ அவர்களுக்குப் பணிந்து போகிற வரை உன்னை மாடிக்கு விடமாட்டார்கள்" என்றாள். பிறகு அவள் மௌனமானாள்.

எங்களது இந்த உரையாடல் முழுதும் மிக மெல்லிசான குரலில் நடந்தது. நல்ல வேளை! என்னுடன் இருந்த வாலிபன் எனக்கு எந்த விதத் தொந்தரவும் கொடுக்கவில்லை.

நான் வாலிபனைப் பார்த்தேன். அவன் அதற்குள் தூங்கி இருந்தான். அவனை எழுப்பினேன். எழுந்து, உடைகளை மாட்டிக் கொண்டான். பிறகு மணிபர்ஸை எடுத்து, ஒரு ஐந்து ரூபாய் நோட்டை என் முன்னே நீட்டினான்.

ஒரு கணம் தயங்கினாலும், கீர்த்தி சொன்ன அறிவுரை நினைவுக்கு வந்தது. பணத்தை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டேன்.

## 17. ரகசியத்திற்கு ஓர் இடம்

**வெ**ளியே போய் ஹாலுக்குள் நுழைந்தேன். கலைந்திருக்கும் கூந்தலைச் சரி செய்துகொண்டு கீழே உட்கார்ந்த போது, என்னைப் பின்னாலிருந்து யாரோ உலுக்குவது தெரிந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அந்த நேபாளிப் பெண் கோபத்தோடு நின்று கொண்டிருந்தாள். படபடவென்று என்னவோ பேசினாள். வரும் ஆத்திரத்தில் என்னை அடித்து

விடுவாள் போல் இருந்தது. என் கையைப் பிடித்து முறுக்கினாள். பலமாகக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தாள்.

மொழி தெரியாததால் எனக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் அவளுக்கு ஏதோ தீங்கு செய்து விட்டேன் என்பதை மட்டும் புரிந்து கொண்டேன். என்னது என்று தெரியவில்லை. அவள் நல்ல பருமனாகவும் தைரியசாலியாகவும் இருந்தாள். வயது முப்பதுக்கு மேல் இருக்கும்.

நான் அவளைக் கையால் கும்பிட்டு, "என்னை எதுவும் செய்யாதே! எனக்கு ஒரு பாபமும் தெரியாது!" என்று தமிழில் சொன்னேன். அவள் விடவில்லை. தரதரவென்று என்னை இழுத்து என் சோளியில் பல இடங்களில் கை வைத்து எதையோ தேடினாள். பிறகு இடுப்பைச் சுற்றித் தேடினாள். கடைசியில் நான் மடித்து வைத்திருந்த பகுதியைக் கண்டுபிடித்து அதைப் பிரித்து அந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டாள். அதை எடுத்த கணத்தில் அவள் முகத்தில் பெரிய வெற்றியும் திருப்தியும் ஏற்பட்டன. சட்டென்று ஓய்ந்துவிட்டு முணுமுணுத்துக் கொண்டே தன் இடத்திற்குப் போனாள். இவ்வளவாவது விட்டாளே என்று நிம்மதி அடைந்தேன். இருந்தாலும் அந்த நிகழ்ச்சி எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

அப்போது திடீரென்று வேறு ஒரு நிகழ்ச்சி நடந்தது. உட்கார்ந்திருந்த கூட்டத்திலிருந்து ஒரு பெண் விருட்டென்று எழுந்தாள் சிறிது கறுப்பாகவும் ஆனால் எடுப்பாகவும் இருந்த அந்தப் பெண் நேராக நோபாலியை நோக்கிப் போனாள். கண்கள் ஜிவுஜிவுக்க இந்தியில் பொரிந்து தள்ளினாள். கடைசியாக ஒற்றை விரலை உயர்த்தி ஒரு எச்சரிக்கை விடுத்தாள்.

நேபாலி விடவில்லை. வாக்கு வாதம் செய்தாள். ஆனால் அவளது வாதத்தை அந்தப் பெண் மேலே போகவே விடவில்லை. குறுக்கே பேசிப் பேசித் தர்க்கம் செய்தாள். முடிவில் நேபாலியிடமிருந்து ஐந்து ரூபாயைப் பிடுங்கினாள். அதை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தாள். "இந்தாம்மா வைத்துக் கொள்! கொடுக்காதே! இனிமே ஏதாவது வம்புக்கு வந்தால் என்னிடம் சொல்லு! பயப்படாதே! என்று தெலுங்கில் சீறினாள்.

அவளுக்கு மறு மொழியாக உடைந்த தெலுங்கில் ஏதோ சொன்னேன். அவள் உடனே என்னை இடைமறித்து "நீ தமிழ்ப் பெண்தானே. என்கிட்டே தமிழிலேயே பேசு! நான் தெலுங்குக்

காரி. ஆனாலும் வேலூரில் ரொம்ப நாள் இருந்தேன். நல்லாத் தமிழ் தெரியும். என் பெயர் ரேணுகா!" என்றாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு 'நேபாலி ஏன் அப்படிச் செய்தாள்' என்று கேட்டேன்.

"அவளது கஸ்டமரை நீ தள்ளிக் கொண்டு போய் விட்டாயாம்! அதுக்குத்தான் ஆர்ப்பாட்டம் பண்ணறா! முகத்திலே லட்சணம் இருந்தா இவளுக்குக் கஸ்டமர் தானா வருவான். இவ சப்பை மூஞ்சிக்கு எவன் வருவான்!" என்றாள்.

இதற்குள் சிந்து (டில்லிக்காரி) மேலே வந்தாள். அங்கே என்ன சத்தம் என்று விசாரித்தாள். ரேணுகா அவளிடம் விவரித்தாள். சிந்து நேபாலி பக்கம் திரும்பி எச்சரிக்கை விடுத்தாள்.

எனக்கு ரேணுகாவிடம் பேச ஆர்வம். ஆனால் சிந்து உட்கார்ந்திருந்தாள். பேச முடியவில்லை.

இரவில் வந்த இன்னும் மூன்று ஆண்களோடு அன்றையப் பொழுது போயிற்று.

காலை பதினொரு மணிக்கு நான் குளித்த பிறகு என்னை மீண்டும் அறையில் அடைத்தார்கள். எனக்கு அந்தக் கணத்தில் ஆத்திரம் பேசாமல் இருந்தேன். தவிர அடிக்கடி உறக்கம் வந்ததால் நன்றாகப் படுத்து உறங்கினேன்.

அப்படியும் ஒரு மணிக்கெல்லாம் கண் விழிப்பு வந்து விட்டது. பொழுது போவதே கஷ்டமாக இருந்தது. நான் விழித்து இருக்கிறேன் என்று சிந்துவுக்கு எப்படித் தெரிந்ததோ, தெரியாது. இரண்டு மூன்று பத்திரிகைகளைக் கொண்டு வந்து போட்டாள். அதில் தமிழ்ப் பத்திரிகையும் இருந்தது ஆச்சரிய மாக இருந்தது.

மாலையில் மாடியில் எல்லோரும் ஒன்று கூடினோம். கீர்த்தியிடம் பேசுவதற்கு நான் ஆவலாக இருந்தேன். ஆனால் அவளைக் காணவில்லை. ரேணுகா அங்கே தென்பட்டாள். அவள் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். எதையோ தீவிரமாக யோசிப்பதுபோல் இருந்தாள். அதனால் அவளிடமும் பேச முடியவில்லை.

ஆறு மணிக்கு மேல் ஆண்கள் ஒவ்வொருவராக வந்தார்கள். பிறகு ஜோடி ஜோடியாக அறைகளில் மறைந் தார்கள்.

வருபவர்களில் பலர் வழக்கமாக வருகிறவர்கள் என்றும், அவர்கள் குறிப்பிட்ட பெண்களையே அழைத்துக் கொள்கிறார்கள் என்றும் புரிந்து கொண்டேன்.

10 மணிக்கு வந்த ஒரு இந்திக்காரர் என்னை அழைத்துப் போனார். அறைக்குள் இன்று போனபோது என் மனம் சிறிது ஆர்ப்பரித்தாலும், நான் அதைச் சமாதானம் செய்து கொண்டேன்.

உள்ளே இருந்தபோது பக்கத்து அறைகளிலிருந்து யாராவது பேசமாட்டார்களா என்று நினைத்தேன். இரண்டு பக்க அறைகளிலும் இந்திப் பெண்கள்தான் இருந்தார்கள்.

பதினைந்து நிமிடத்திற்குப் பிறகு வெளியே வந்த போது, என்னை லேசாக யாரோ தொட்டார்கள். திரும்பினால் ரேணுகா நின்று கொண்டிருந்தாள்.

'உனக்காக எவ்வளவு நாழிகை காத்துக் கொண்டிருக்கிறேன். இந்த மாதிரி வயதான ஆசாமிகளைச் சட்டுப்புட்டென்று வெளியே அனுப்பு! ரொம்ப நேரம் உள்ளே இராதே! இப்போ நேராக பாத்ரூமுக்குப் போ! அங்கே தயா உனக்காகக் காத்திருக்கிறாள்" என்றாள்.

பரபரப்புடன் நடந்து பின்பக்கத்தில் உள்ள பாத்ரூமுக்குப் போனேன். யாரையும் காணவில்லை. லாவட்டரியில் இரண்டு அறைகள் இருந்தன. ஒன்று அடைத்துக் கிடந்தது.

நான் போனதும் அந்த அறை டபக்கென்று திறந்தது. கீர்த்தி வெளியே வந்தாள். "கமலா எவ்வளவு நாழிகை ஆக்குகிறாய்! உனக்காக இவ்வளவு நேரமும் தயா காத்திருந்தாள்!" என்றாள்.

"இப்போ அவள் எங்கே?"

"மாடிக்குப் போய் விட்டாள்."

அப்போது என் பார்வை வலது புறம் சென்றது. அங்கே ஒரு கர்ட்டனுக்குப் பின்னால் பழசான மர ஏணி இருப்பதைப் பார்த்தேன். கூர்ந்து கவனித்தால்தான் தெரியும்.

"நான் மாடிக்குப் போய் பார்க்கட்டுமா? என்றேன்.

"ஐயோ அங்கே போகாதே! சிந்துவுக்குத் தெரிந்தால் தகராறு" என்றாள்.

எனக்கு வருத்தமாக இருந்தது.

"பரவாயில்லை கமலா! இன்னொரு நாள் அவளைப் பார்க்கலாம். அவளைப் பார்க்கக்கூடிய ஒரே இடம் இந்த இடந்தான்! அது மட்டுமல்ல! நாம் எல்லோருமே, மற்றவர் களுக்குத் தெரியாமல் ரகசியமாகப் பேசக்கூடிய இடம் இந்த இடந்தான். குறிப்பிட்ட நேரங்களில் நாம் இங்கே வர வேண்டும். அவசர அவசரமாகப் பேசிவிட்டுப் போய்விட வேண்டும். ஆனால் நீ கீழ்ப் போர்ஷனில் இருக்கும் வரை இங்கே வர முடியாது! எப்போது எல்லோரையும் போல உன்னை மாடியில் இருக்க விடுகிறார்களோ அப்போது இந்த இடத்திற்கு வரலாம்!" என்றாள்.

பிறகு வருகிற ஒவ்வொரு ஆசாமியிடமும் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும், அவர்களை எப்படி சீக்கிரம் பைசல் செய்து அனுப்ப வேண்டும் என்றும், என் உடம்பை எவ்விதங்களில் கெட்ட நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் கூறினாள்.

இதற்குள் சற்று அப்பால் கதவுப் பக்கம் நிழலாடவே, கீர்த்தி சட்டென்று ஒரு லாவட்டரி அறைக்குள் புகுந்து மறைந்து போனாள்.

"நீ அடுத்த அறைக்குப் போ!" என்று அவளது குரல் கேட்டது.

## 18. நாங்கள் போட்ட திட்டம்

**நா**ன் அப்படிச் செய்வதற்குள் ஒரு பெண் கைக் குழந்தையுடன் என்னை நோக்கி வருவது தெரிந்தது. அவளுக்கு முப்பது வயது இருக்கும். என்னைப் பார்த்து ஏதோ கேட்டாள். நான் விழித்துவிட்டு லாவட்டரி அறையைக் காட்டி சைகை காட்டினேன். "உள்ளே போய் வா!" என்று கூறினாள்.

போனேன். வேண்டுமென்றே குழாயைத் திறந்து விட்டு பாவனை செய்தேன். பிறகு கதவைத் திறந்து ஈரக் கால்களுடன் வெளியே வந்தேன்.

அந்தப் பெண் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் 'வா' என்று அழைத்துப் போனாள். ஹாலையும் தாண்டி மற்றொரு அறைக்கு அழைத்துப் போனாள். நான் அதுவரை போயிராத அறை அது! வாசல் திரையை விலக்கி

உள்ளே போனதும், அங்கே தெரிந்த காட்சியைப் பார்த்துத் திடுக்கிட்டேன்.

அங்கே ஐந்து ஆண்கள் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு சர்தார்ஜிகள், ஒரு மிலிடரிக்காரர், இரண்டு இதரர்கள். அவர் களில் இரண்டு பேர் மடிகளில் இரண்டு பெண்கள் தலை வைத்துப் படுத்திருந்தார்கள். ஒரு ஆண் பிள்ளை ஒரு பெண்ணின் மடிமீது தலைவைத்துப் படுத்திருந்தார். மற்றொருவர் ஒரு பெண்ணின் உடலை வளைத்துத் தமது பின்னால் திண்டாக வைத்திருந்தார். ஒரு சரித்திர கால அந்தப்புரம்போல் அது தெரிந்தது. இந்தக் காலத்தில்கூட இப்படி இருப்பார்களா என்று திடுக்கிட்டேன். துணை யாரும் இல்லாமல் ஒரு ஆள் எஞ்சி இருந்தார்.

அவர்கள் முன்னால் கண்ணாடிக் குவளைகளில் பீர் வைக்கப் பட்டிருந்தது. தட்டுகளில் கொரிப்பதற்குப் பலகாரம் இருந்தது. ஐந்து பேரும், ஒரு பெண்ணும் சிகரெட் ஊதித் தள்ளிக் கொண்டிருந்தார்கள். உள்ளே ஒரே புகை சூழ்ந்திருந்தது.

என்னைப் பார்த்து அந்தக் கைக் குழந்தைக்காரி, நீயும்' அவர்களோடு சேர்ந்து கொள்!' என்று ஜாடை காட்டினாள். துணையில்லாமல் மிஞ்சியிருந்த சர்தார்ஜி - அவன் ஒரு வாலிபன் - ஆர்வமுடன் எழுந்து என்னை வரவேற்றான். என்னை அணைத்துக் கொண்டு அந்த வட்டத்தில் உட்கார்ந்தான். என்னிடம் நிறையப் பேசினான். எல்லாம் காதல் மொழிகள் என்பது தெரிந்தது. என்னால் எதுவும் பேச முடிய வில்லை. மொழி தெரியாதது எனக்கு நல்லதாகக்கூடத் தோன்றியது.

என்னைக் குடிக்கச் சொன்னான் அந்த வாலிபன். நான் மறுத்தேன். அவன் பெயர் பல்பீர் என்று சொல்லி என்னை அந்தப் பெயரைக் கொண்டு அழைக்கச் சொன்னான். நான் அதுவும் செய்யவில்லை.

அவர்கள் இந்த நிலையில் இருந்தாவாறு பேசிக் கொண்டும் எங்களிடம் பலவித சேட்டைகளைச் செய்து கொண்டும் ஒரு மணி நேரத்திற்குமேல் பொழுது போக்கி னார்கள். பிறகு கும்பலாக எழுந்து வெளியே புறப்பட்டபோது பல்பீர் என் முகத்தைப் பிடித்துக் கனிவான வார்த்தைகளைச் சொல்லி, கையில் ஐந்து ரூபாய் நோட்டை வைத்தான். நான் அதை எடுத்து மடியில் முடிந்து கொண்டேன்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அன்று இரவு நான் ஜாதிக்காய் அறைக்கு மூன்று முறை போய் வரவேண்டி வந்தது.

ஒரு மாதம் வரை இதே யந்திரகதியில் என் வாழ்க்கை ஓடியது. மெள்ள மெள்ள இதற்கு அனுசரித்துப் போகும் நிலைக்கு மனம் வந்துவிட்டது. எதிர்ப்பதனால் எந்தவித பலனும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

நான் அந்தத் தொழிலுக்குப் புதிதாக இருந்ததால் எனக்கு மவுசு இருந்தது. வருகிறவர்களில் பலர் என்னையே தேர்ந் தெடுத்தார்கள். இதனால் பல பெண்களுக்கு என்னிடம் பொறாமை இருந்தது.

போகப் போக நான் அந்த வீட்டைப் பற்றிப் பல விஷயங் களைப் புரிந்து கொண்டேன்.

அங்கே மொத்தம் நான்கு குடித்தனங்கள் இருந்தன. ஒவ்வொரு குடித்தனத்திலும் கணவன் மனைவி குழந்தைகள் எல்லாம் உண்டு. குழந்தைகள் பள்ளிகளில் படித்து வந்தார்கள். ஒரு பெண் கல்லூரியில் கூடப் படித்து வந்தாள்.

குடித்தனங்களில் இருக்கும் நான்கு கணவன்மார்களும் உதவாக்கரைகள். சோம்பேறிகள். சாப்பிட்டுக் கொண்டும் தூங்கிக் கொண்டும் பொழுதைக் கழித்தார்கள். தங்கள் மனைவிகள் ஏவிவிடும் வெளி வேலைகளை மட்டும் செய்து வந்தார்கள்.

இந்த நான்கு குடித்தனங்களும் சுமார் 42 பெண்களை அந்த வீட்டில் அடைத்து வைத்திருந்தார்கள். இதில் தாமாகக் கெட்டுப் போய் இந்தத் தொழிலை மேற் கொண்டவர்கள் பலர் உண்டு. மீதி எல்லோரும் அங்கங்கே கடத்தப்பட்டுக் கொண்டு வரப் பட்டவர்கள். அல்லது விலைக்கு வாங்கப்பட்டவர்கள்.

நான் ஐந்நூறு ரூபாய்க்கு விற்கப்பட்டேன் என்றும், அங்கிருந்து டில்லிக்குத் தொள்ளாயிரத்து இருபத்தைந்து ரூபாய்க்கு விற்கப்பட்டேன் என்றும் புரிந்து கொண்டேன். தவிர, என்னைப்போல் ஏமாந்த பெண்களையோ, அல்லது தாமாக வலிய வரும் பெண்களையோ அங்கங்கே தேடிப் பிடித்து, அவர்களை இதுபோன்ற இடங்களுக்கு விற்பவர்கள் நிறையப் பேர் நாட்டின் வெவ்வேறு நகரங்களில் இருக்கிறார்கள் என்பதையும், இதன்மூலமாக அவர்கள் உழைப்பில்லாமல் சம்பாதிக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

இந்த வீட்டில் இருக்கும் நான்கு குடும்பங்களில் ஏதாவது ஒன்றிற்கு நாங்கள் சொந்தமானவர்கள். அவர்கள் பணம் கொடுத்து எங்களை வாங்கி வந்திருக்கிறார்கள். எங்கள் மூலம் தொழில் நடத்தி அதன் மூலம் கிடைக்கிற வருவாயில் தங்கள் குடித்தனங்களை நடத்தி வருகிறார்கள். ஒரு விசேஷம் என்னவென்றால், இந்தக் குடித்தனங்களில் உள்ள நான்கு மனைவிமார்களும் கெட்ட வழியில் இறங்கிச் சம்பாதிப்பவர்கள் அல்ல. எங்களை அந்த வழியில் இறக்கி விட்டுவிட்டு அவர்கள் அதற்கு அப்பால் இருந்தார்கள்.

நான் அங்கே போய்ச் சேர்ந்த இரண்டாவது வாரத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு ஆட்டோ ரிக்ஷாக்காரர் இரண்டு இளம் பெண்களைப் பிடித்துவந்து கீழே உள்ள அறையில் விட்டார். இவர்கள் இருவரும் இரட்டையர்கள். டில்லியில் இரவு வேளையில் எங்கேயோ அவசரமாகப் போவதற்காக ஆட்டோவில் ஏறியவர்கள். அவர்களை ஏமாற்றி இங்கே கொண்டு வந்து விட்டார் ஆட்டோக்காரர்.

அந்தப் பெண்களுக்கு இடம் ஒழித்துக் கொடுப்பதற்காக என்னைக் காலி செய்து மாடிக்குக் கொண்டு வந்தார்கள். நான் படிப்படியாகத் திருந்திவிட்டேன் என்றும், அறை வாசம் இனித் தேவையில்லை என்றும் நினைத்திருந்தார்கள்.

இந்த இனம் பெண்களுக்குப் பதினைந்து வயது இருக்கும். வந்த மூன்று தினங்களும் இடைவிடாது அழுதார்கள். ஆட்டோக்காரர் அவர்களைப் பலவிதத்தில் துன்புறுத்தி இந்தத் தொழிலில் ஈடுபடும்படி செய்தார். பலவந்தங்களுக்குப் பிறகு அவர்கள் வேறு வழியில்லாமல் இதில் இறங்கி விட்டார்கள்.

அந்தப் பெண்களைப் பார்க்க வேண்டுமென்று நான் பல தடவைகள் விரும்பினேன். முடியவில்லை.

மாடியில் வந்த பிறகு எனக்கு ஒரு சுதந்திரம் கிடைத்தது. நினைத்தபோது பாத்ரூமுக்குப் போகும் சுதந்திரந்தான் அது.

அந்தச் சுதந்திரம் உண்மையில் ஒரு பெரிய சுதந்திரம். இங்கே உள்ள பெண்கள் யாவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளக் கூடாது. தப்பித் தவறி பேசினாலும் நாங்கள் எதற்கோ திட்டம் போடுகிறோம் என்று வீட்டுக்காரிகள் நினைத்து விடுவார்கள். ஆகவே நாங்கள் எப்போதும் மௌன மாகவே இருப்போம். இந்த நிலையில் எங்கேயாவது மனம் விட்டுச் சிறிது

பேசமாட்டோமா என்று நாங்கள் ஏங்கிக் கொண்டிருப்போம். அப்படிப் பேசுவதற்கு ஒரே ஒரு வசதியான இடம் பாத்ரூம்தான்.

ஆனால் இதிலும் சங்கடங்கள் இருந்தன எங்களைக் கண்காணிக்க எங்களிலேயே பலர் இருந்தார்கள். இங்கேயே பல வருடங்களுக்கு மேல் வாழ்ந்து இரக்க உணர்ச்சிகளில் மரத்துப் போனவர்கள். இந்தத் தொழிலை அவர்கள் இப்போது மனப் பூர்வமாக விரும்பி ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எங்களை அடிக்கடி உளவு பார்ப்பார்கள். நாங்கள் பேசுகிறோம் என்று தெரிந்தால் 'திதி' யிடம் (டில்லிக் காரியை அவர்கள் அப்படித்தான் அழைத்தார்கள்) போய்ச் சொல்லி விடுவார்கள். இதனால் நாங்கள் மிகவும் கவனமாக இருந்து வந்தோம்.

பல்பீரைப் பற்றி இங்கே சொல்ல வேண்டும். இருபத் தெட்டு வயது இளைஞன் அவன். பஞ்சாபிலிருந்து அடிக்கடி டில்லிக்கு வரும் லாரி ஒன்றை ஓட்டுபவன் அவன். லாரிக்குச் சொந்தக்காரனும் அவன்தான். ஏற்கெனவே மணமானவன். ஆனால் குழந்தை கிடையாது.

ஒரு மாதத்திற்குள் அவன் மூன்று தடவை என்னை நாடி வந்து விட்டான். என்மீது அவனுக்கு அதிகக் கவர்ச்சி தோன்றி இருந்தது. நான் இந்தி பேசத் தெரியாமல் குழைந்தது அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. என்னை அடிக்கடி சீண்டிவிட்டு, நான் பேசத் தெரியாது விழிப்பதை மிகவும் ரசனையோடு பார்ப்பான்.

இரண்டாவது தடவை அவன் வந்தபோது, எனக்காக இரண்டு ஜோடி பட்டை வளையல் வாங்கி வந்திருந்தான். ஆசையுடன் அவனே பூட்டி விட்டான்.

மூன்றாவது தடவை வந்தபோது, அவனுக்குப் பிடிக்காத ஒரு சம்பவம் நடந்தது. நான் அப்போது வேறு ஒருவருடன் ஜாதிக்காய் அறைக்குள்ளே இருந்தேன். இது அவனுக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்தது. எனக்காகப் பொறுமையுடன் காத்திருந்தான்.

நான் வெளியே வந்து அவனை நோக்கிப் புன்னகையோடு போனபோது வழக்கம்போல் அவன் சிரிக்கவில்லை. மௌன மாக உட்கார்ந்திருந்தான். பிறகு எதுவும் பேசாமல் என்னை அழைத்துப் போனான்.

அறைக்குள் போனதும் அவன் வருத்தப்படுவது தெரிந்தது. என்னிடம் நிறையப் பேசினான். குறிப்பிட்ட நாட்களில் வேறு யாருடனும் நான் போகக்கூடாது என்று சைகைகள் மூலம் அறிவித்தான்.

பல்பீரும் அவன் நண்பர்களும் ஆளுக்கு ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு அடிக்கடி ஜமா சேர்ந்து பொழுதைப் பீர் குடித்தவாறு போக்குவார்கள். அது எனக்கு ஒரு வசதியான சந்தர்ப்பமாகத் தோன்றியது. பாத்ரூமில் பேசுவதை விட, அங்கே கீர்த்தியோ ரேணுகாவோ வந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் என்னைத் தவிர அங்கே வருபவர்கள் யாவரும் இந்திக்காரிகள்.

ஒரு நாள் இந்திகாரிக்கு உடம்பு சரியில்லை. ஜுரமாக இருந்ததால் படுத்து விட்டாள். ஆகவே ஜமாவுக்கு ஒரு ஆள் குறைந்தது. ஒரு துணை வேண்டும் என்று அவர்கள் தேடிய போது, "நான் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, ஹாலுக்குப் புறப்பட்டேன். ஆண்கள் கை தட்டினார்கள்.

கீர்த்தியிடம் பேசி வெகுநாள் ஆகிவிட்டது. சந்தர்ப்பம் அதிகம் கிடைக்கவில்லை. ஆகவே அவள் கிடைத்தால் அவளை இந்த ஜமாவில் சேர்க்க வேண்டும் என்று நினைத்தேன்.

நல்லவேளை! நான் நினைத்தபடியே அங்கே கீர்த்தி உட்கார்ந்திருந்தாள். "கீர்த்தி! ஜமாவுக்கு வருகிறாயா?" என்றேன்.

"என்னைக் கூப்பிட்டார்களா? என்னை அவர்கள் விரும்ப மாட்டார்களே! நான் அவர்கள் சேட்டைகளுக்கும் கேலிப் பேச்சுகளுக்கும் இடம் கொடுப்பதில்லை! தவிர, எனக்கு இந்த சர்தார்ஜிகளைக் கண்டாலே பிடிக்காது" என்றாள்.

நான் உடனே, "அங்கே இந்திப் பெண்கள் எல்லாரும் சேர்ந்து நிறையப் பேசுகிறார்கள். நீ வந்தால் நாமும் பேச முடியும். ரொம்ப நேரம் பேசவேண்டும் என்றால் அதுதான் ஒரே வழி!" என்றேன்.

கீர்த்தி எழுந்தாள். அவளுக்கு அந்தத் திட்டம் பிடித் திருந்தது. என்னுடன் உள்ளே வந்தாள்.

அறையில் நான் பல்பீரின் அருகில் போய் அவனது பின் புறத்தில் படுத்துக்கொண்டேன். (அவன் உட்கார்ந்திருந்தான்) பக்கத்திலிருந்த மற்றொரு சர்தார்ஜியின் பின் புறத்தில் கீர்த்தி

என்னைப் போலவே படுத்துக் கொண்டாள். பேசுவதற்கு அது சரியான சந்தர்ப்பம்.

ஆனால் ஆரம்பத்தில் இரண்டு மூன்று தடவை கைக் குழந்தைக்காரி உள்ளே வந்துவிட்டுப் போனாள். அவளுக்குக் கீர்த்தியின் மீது ஒரு கண்! அதற்காகவே கீர்த்தி வெகுநேரம் என்னிடம் பேசவில்லை. ஜமாப் பேச்சுக்களில் தாராளமாகக் கலந்து கொண்டாள். பிறகு மெதுவாக அதிலிருந்து விலகி என்னிடம் பேச ஆரம்பித்தாள்.

"கமலா! எப்படி இருக்கிறாய்?"

"மகிழ்ச்சியாகவே இல்லை. எப்போது தப்பிக்க முடியும் என்று பார்க்கிறேன்."

"ஒரு விஷயம் தெரியுமா?"

"என்ன?"

"தயா தப்பித்து ஓடத் திட்டம் போட்டிருக்கிறாள்!"

"அவள் மட்டுமா?"

"ஆமாம்! அவள் போனால் நாம் எல்லோரும் போவதற்கு வழி செய்வாள்!"

"என்ன செய்வாள்!"

"போலீசுக்குத் தகவல் கொடுத்து இந்த வீட்டை 'ரெய்ட்' பண்ணச் சொல்வாள்! நாம் எல்லோரும் விடுதலை ஆவோம்!"

எனக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது.

"தயா மீது எனக்கு ஆரம்பத்தில் சந்தேகம்! வெறுப்புக் கூட உண்டு."

"அது தப்பு கமலா! அவள் நல்லவள்! உனக்காக ஒரு தியாகம் செய்தாள்; தெரியுமா?"

"என்ன தியாகம்?"

"முதல் நாள் நீ உடம்பில் வலியுடன் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாயே, நினைவு இருக்கிறதா?"

"இருக்கிறது!"

"அப்போது உன்னிடம் சர்தார் இளைஞனை அனுப்பினாள் அல்லவா?"

"ஆமாம்!"

"உண்மையில் அந்த வாலிபன் அவளுடைய கஸ்டமர். அவளை வேண்டும் என்றே உன்னிடம் அனுப்பியிருக்கிறாள். அனுப்பியதோடு மட்டுமல்ல; அவனிடம் உன்னைத் தொடக் கூடாது என்று உத்தரவும் இட்டிருக்கிறாள்!"

"உத்தரவா?"

"ஆமாம்! அந்த சிங் அவளிடம் மயங்கிக் கிடப்பவன். அதனால் அவள் சொல்படி எல்லாம் கேட்பான். தவிர அதற்காக அவனுக்குப் பணமும் கொடுத்து உதவினாள்!"

"எதற்கு?"

"உன்னுடன் ஒரு இரவு முழுவதும் தங்க வேண்டுமானால் அவன் நூறு ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டும். அவனிடம் ஏது அவ்வளவு பணம்? எனவே தயா தன் சொந்தப் பணத்தி லிருந்து அந்தத் தொகையை அவனுக்குக் கொடுத்தாள். அப்படிச் செய்வதன்மூலம் முதல் நாள் இரவில் வேறு யாரும் உன்னை அணுகாதபடி செய்து விட்டாள்."

கீர்த்தி சொன்னது என்னைத் திடுக்கிட வைத்தது. மனம் கரைந்து அழுகையும் வந்தது.

"தயாவா இப்படிச் செய்தாள்?" என்றேன்.

"ஆமாம்! உனக்கு அவளைப்பற்றித் தெரியாது. அவள் ரொம்ப நல்லவள்!"

எங்கேயோ ஒரு கண்காணாத தூரத்தில் எனக்கு உதவி புரிய இப்படி ஒரு நல்லவள் இருக்கிறாளே என்று நினைத்தேன். இங்கே நடக்கும் தொழில் நடுவே ஒரு நல்ல இதயத்தைக் காண்பது ஒரு பெரிய அதிசயமாகத் தோன்றியது.

"நான் தயாவைப் பார்க்கவேண்டுமே!" என்றேன்.

"பாத்ரூமில் பார்த்தால் உண்டு. இப்போது இரண்டாம் மாடியில் அடைபட்டுக் கிடக்கிறாள்!" என்றாள்.

"அதனால் என்ன? கீழே இறங்கி வர முடியாதா!"

''முடியும். ஆனால் வரக்கூடாது! ஏதாவது தவறு பண்ணினால் பெல்ட்டால் அடித்து ரணப்படுத்துவார்கள். தண்டனைக்காகச் சிலரை அங்கேதான் அனுப்புவார்கள்."

"தயா என்ன தவறு செய்தாள்?"

"என்ன தவறு என்று வீட்டுக்காரிகள் சொல்ல மாட்டார்கள். இங்கே நாம் ஒருவருக்கொருவர் சிறிது அதிக மாகப் பேசிவிட்டால் அவர்களுக்குச் சந்தேகம் வந்து விடும். அதுவும் தமிழ், தெலுங்கு, கன்னடத்தில் பேசிவிட்டால் ரொம்பச் சந்தேகப்படுவார்கள். தயா உனக்கு அன்றைய தினம் உதவி செய்ததை யாராவது புரிந்து கொண்டிருப்பர்கள்."

"யார் புரிந்து கொண்டிருப்பார்கள்?"

"இங்கே இருக்கும் பெண்களில் சிலரைத் தவிர மீதி எல்லாருமே பொல்லாதவர்கள். நம்மை அவர்கள் உளவு பார்ப் பார்கள். நாங்கள் அவர்களை வார்டர்கள் என்று அழைப்போம். அவர்களின் முன்னால் நாம் எதுவும் பேசக்கூடாது!" இந்தச் சமயத்தில் கைக்குழந்தைக்காரி உள்ளே வந்தாள். சட்டென்று கீர்த்தி முகத்தைத் திருப்பிக் கொண்டு சர்தாருடன் பேச ஆரம்பித்தாள். குழந்தைக்காரி குறிப்பாக அவளைக் கவனித்து விட்டுத் திரும்பிப் போனாள்.

"இவள் ஏன் உன்னை மட்டும் கவனிக்கிறாள்?" என்றேன்.

"காரணம் இருக்கிறது. ஒரு இந்திப் பெண் மேல் மாடியில் இருக்கிறாள். அவள் நம்மைப்போலத் தப்பித்துப் போக விரும்புபவள். அவளிடம் ஒரு தடவை அதற்கான உபாயங் களைப் பற்றி மெய்மறந்து பேசிவிட்டேன். பக்கத்தில் இன்னொரு இந்திக்காரி அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள் என்று தெரியாது. அவள் போய் வத்தி வைத்துவிட்டாள். அவ்வளவுதான். அந்தப் பெண்ணை மாடியில் பூட்டி விட்டார்கள். என்னை இங்கே கண்காணிப்பில் வைத்திருக் கிறார்கள்.

"சரி, கீர்த்தி! நாம் இங்கிருந்து தப்பிப் போக முடியுமா?"
"முடியும்." ஆனால் அதைச் சரிவர யோசித்து நிறைவேற்ற வேண்டும். நாம் சாதுவானவர்கள் என்று அவர்கள் நம்பும்படி பண்ண வேண்டும். அதன் பிறகுதான் நம் திட்டத்தை நிறை வேற்ற வேண்டும்.

அதன் பிறகு கீர்த்தி தன் கதையைக் கூறினாள். அவள் மைசூரைச் சேர்ந்தவள். வீட்டில் தந்தையும், தாயும் எப்போதும் சண்டை போடுவார்கள். சரியான சாப்பாடு கிடையாது. ஒரு சீட்டுக் கம்பெனியில் கீர்த்தியை வேலைக்கு விட்டார்கள். மூன்று மாதம் வேலை பார்த்தாள். யாரோ பெங்களூரில் பெரிய வேலை

வாங்கித் தருகிறேன் என்று சொன்னார்கள். புறப்பட்டுப் போனாள். அகப்பட்டுக் கொண்டாள். பம்பாய்க்கு விற்கப்பட்டு டில்லிக்கு விற்கப்பட்டாள்.

என்னைப் போலவே அவளும் விற்கப்பட்டதைக் கேட்டு ஆச்சரியப்பட்டேன். முடிவில் கீர்த்தி, "கமலா! இந்த ஜமா ஒரு நல்ல இடம்! இங்கே நாம் சந்திப்பது நல்லது. ஆனால் அடிக்கடி இது நடக்க வேண்டும். இவர்களிடம் அவ்வளவுக்குப் பணம் ஏது?" என்றாள்.

"ஏன்? இதற்கு எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும்?"

"ஆளுக்கு நாற்பது ஐம்பது ரூபாய் ஓடிவிடும். ஆனால் வீட்டுக்காரிகளுக்கு இதில்தான் அதிக லாபம். நாம் சம்பாதித்துக் கொடுக்கும் பணத்தை விட, மதுவும், திண்பண்டங்களும் சப்ளை பண்ணுவதில் வீட்டுக்காரிக்கு அதிக லாபம் கிடைத்து விடுகிறது. ஒவ்வொரு பண்டத்தையும் இரட்டை விலையில் விற்பார்கள். நமது கம்பெனி மட்டும் இவர்களுக்கு இலவசம்!" என்றாள்.

## 19. கொடியவள் நிர்மலா

**அ**தன்பிறகு பல வாரங்கள் ஜமா கூடவில்லை. என்னால் கீர்த்தியைப் பார்த்துப் பேசவும் முடியவில்லை. எங்கேயாவது பார்த்தால் இரண்டொரு வார்த்தைதான் பேச முடிந்தது. "பேசாதே!" என்று கீர்த்தி ஜாடை காட்டி விடுவாள். இவ்வளவுக்கும், இரவில் நாங்கள் சுமார் முப்பது பேர் ஒரே ஹாலில்தான் படுப்போம். நாங்கள், தென்னிந்தியர்கள் சேராத படி வார்டர்கள் இடையில் படுத்துக் கொள்வார்கள். இந்தியில் பேசினால் 'விளையாட்டான' பேச்சுகளை மட்டும் அனுமதிப் பார்கள். மற்ற மொழிகளில் பேச அறவே சம்மதிக்க மாட்டார்கள்.

ஒரு நாள் மாலை. மாடி ஹாலில் எங்கள் பாட்டு ஆரம்பித்தது. நாங்கள் வட்டமடித்து உட்கார்ந்திருந்தோம்.

இருட்டும் நேரத்தில், ஒரு இளைஞன் வந்து என் அருகில் உட்கார்ந்தான். வழக்கமான முறையில் இனிய மொழிகளைப் பேச ஆரம்பித்தான். நானும் என் வழக்கப்படி மௌனமாக இருந்தேன். அப்போது என் கையை யாரோ நெருடினார்கள். திரும்பிப் பார்த்தேன். எனக்கு அடுத்ததாக ஒரு இந்திப் பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் பெயர் சுமன்.

"என்ன?" என்பதுபோல் முகத்தைச் சாடை செய்தேன். அவள் என் காதுப் பக்கம் குனிந்து, இந்தியில் பேசி, தொடர்ந்து சாடைகளும் காட்டினாள். "இவரை என்னிடம் கொடுத்து விடு" என்று கூறுவதைப் புரிந்து கொண்டேன்.

பொதுவாக அந்தப் பெண்ணை பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பரிதாபம் ஏற்படும். அவள் மாநிறம். முகம் எடுப்பாக இல்லை. ரொம்ப ஒல்லியாக இருந்தாள். மேக்-அப் போட்டால் கூடச் சுமாராகத்தான் இருப்பாள்.

அவள் அன்று பேசியது எனக்கு இரக்கத்தை வரவழைத்தது. ஆனால் அந்த வாலிபனிடம் பேசி இணங்க வைக்கும் அளவுக்கு எனக்கு இந்தி தெரியாது. நான் பண்ணிய சாடைகளை அவன் புரிந்து கொண்டாலும், அதற்கு இணங்கவுமில்லை. அவனுக்கு அவளைப் பிடிக்கவுமில்லை.

ஆகவே நாங்கள் இருவரும் அறைக்குப் போய் இருந்து விட்டுத் திரும்பினோம். வாலிபன் விடைபெற்றுப் போய் விட்டான். நான் மீண்டும் வட்டத்தில் உட்கார்ந்தேன்.

திரும்பிப் பார்த்தபோது சுமன் இன்னும் அப்படியே உட்கார்ந்திருந்தாள். முகத்தைக் குனிந்து கொண்டு வருத்தத் தோடு இருந்தாள். அந்தச் சோகம் என்னை உலுக்கியது. அவளிடம் இதமாகப் பேசலாம் என்றால் மொழி தெரியவில்லை.

சிறிது நேரம் சென்றது. திடீரென்று பல்பீர் அங்கு வந்து சேர்ந்தான். என் அருகில் உட்கார்ந்தான். பேச ஆரம்பித்தான்.

மீண்டும் என் கையில் நெரடல் ஏற்பட்டது. திரும்பிப் பார்த்தேன். சுமன் தன் பார்வையால் என்னிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள். எனக்கு இரக்கம் ஏற்பட்டது.

அவளை ஏற்றுக் கொள்ளும்படி பல்பீரிடம் சாடை காட்டினேன். அவன் முகத்தைச் சுளித்தான். என் கையைப் பிடித்து இழுத்து அறையை நோக்கிப் புறப்பட்டான்.

உள்ளே போனதும் அவன் கொண்டு வந்திருந்த பையிலிருந்து திண்பண்டங்களையும் மூன்று சில்க் கர்சீப்பு களையும் என்னிடம் கொடுத்தான்.

இங்கே என் இந்தி அறிவைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். மூன்று மாதங்கள் ஓடி விட்டதாலும். இந்தி ஒன்றையே எப்போதும் கேட்டுக்கொண்டிருந்ததாலும் அந்த

மொழி சிறிதுசிறிதாக எனக்குப் பிடிபட்டுக் கொண்டிருந்தது. நானும் முயற்சி செய்து தப்பும் தவறுமாகச் சில இந்தி வாக்கியங் களைப் பேச ஆரம்பித்தேன்.

ஆகவே, அன்று பல்பீர் பேசியதை ஒருவாறு புரிந்து கொண்டேன். அவன் என் இரு கைகளையும் பற்றிக் கொண்டு, "கமலா! நான் இப்படி அடிக்கடி வந்து கூலியைக் கொடுத்து விட்டுப் போகும் இருதயமற்ற மனிதனாக என்னை நினையாதே! நான் உன்னை ஒரு போகப் பொருளாக நினைக்க வில்லை. எனக்கு உன்மீது காதல் இருக்கிறது. அது உண்மை! என்னை மற்றவரைப் போல் நினையாதே!" என்றான்.

நான் பேசாமல் புன்னகை புரிந்தேன்.

அவன் மேலும் நெருங்கி என் முகத்தை நிமிர்த்தி, "உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா?" என்றாள்.

தலையை அசைத்தேன்.

"நீ என்னைக் காதலிப்பாயா?" என்றான்.

எனக்குச் சிரிப்பாக வந்தது. பலமாகச் சிரித்தேன். ஆனால் அந்தச் சிரிப்பு அவனுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டு நிறுத்தினேன்.

"கமலா! சிறிது நேரத்திற்கு முன் நீ என்னிடம் ஒன்று சொன்னாய்! இங்கேயுள்ள இன்னொரு பெண்ணை ஏற்றுக் கொள்ளச் சொன்னாய்! என்னை நன்கு புரிந்து கொண் டிருந்தால் அப்படிச் சொல்லி இருக்க மாட்டாய்! நான் உன் ஒருத்தியைத்தான் காதலிக்கிறேன். உனக்காகத்தான் இங்கே வருகிறேன். என்னை நம்பு! என்றான்.

நாங்கள் வெளிவந்தபோது, ஹாலில் 'ஓ' வென்று கூச்சலும் ஓட்டம் பிடிக்கும் சப்தங்களும் கேட்டுக் கொண் டிருந்தன. திடுக்கிட்டவாறு ஹாலில் நுழைந்தோம். அங்கே நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு அம்மாள் கண்ணாடி அணிந்து ஸ்டைலாகக் கொண்டை போட்டவள் கையில் ஒரு பெல்ட்டை வைத்துக்கொண்டு அந்த இந்திப் பெண் சுமனை ஓங்கி அடித்துக் கொண்டிருந்தாள். அவள் உடம்பை நெளித்து, 'ஆ ஆ' என்று கத்திக்கொண்டு அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தாள். மற்றப் பெண்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்களே ஒழிய யாரும் அவளது உதவிக்குப் போகவில்லை.

*பல்பீருக்கு மனம் கலங்கியது. "நிறுத்துங்கள், அடிக்கா தீர்கள்!" என்று கத்திக்கொண்டு குறுக்கே போனான். கண்ணாடிக் காரி ஓங்கிய பெல்ட்டுடன் அவனிடம் சீறினாள்.*

*"நீ யாரையா கேட்கிறது? தூரப் போ!" என்று கத்தினாள்.*

*"அந்தப் பெண்ணை இப்படி அடிக்காதே அம்மா!" என்றான் பல்பீர்.*

*"இந்தாப்பா! இந்த வீட்டு விஷயத்தில் குறுக்கிடாதே. நாளைக்கு நீ இங்கே வரமுடியாது. மரியாதையாகப் போய் விடு" என்றாள்.*

*பல்பீர் தலை குனிந்தவாறு போய்விட்டான்.*

*நான் வட்டத்தில் உட்கார்ந்தேன். சுமன் தூரத்தில் விசித்துக் கொண்டிருந்தாள். அவளது ஸ்கர்ட் கிழிந்திருந்தது. கண்ணாடிக்காரி அதற்குமேல் அடிக்காமல் போய் விட்டாள்.*

*வட்டத்தில் கீர்த்தி உட்கார்ந்திருந்தாள். அவள் எனக்கு ஜாடை காட்டிவிட்டு, பாத்ரூம் பக்கம் போனாள். நான் சிறிது நேரம் கழித்து எழுந்து போனேன்.*

*பாத்ரூம் போனதும், "கீர்த்தி, வந்து விட்டேன்" என்றேன். "சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெதுவாகப் பேசு" என்றாள் அவள் உள்ளிருந்து.*

*"இதெல்லாம் என்ன கூத்து!" என்றேன்.*

*"அந்தக் கண்ணாடிக்காரி பெயர் நிர்மலா! உண்மையில் அவள் வேறு மதத்தைச் சேர்ந்தவள். இந்துப் பெயரை வைத்திருக்கிறாள். அவள் இருபத்தைந்து பெண்களை இங்கே வைத்திருக்கிறாள். அவர்கள் குறைந்தது தினம் எட்டுத் தடவை யாவது சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். அதற்குக் குறைந்து போனால் அந்த பெண்ணுக்குத் திறமையில்லை என்று சொல்லி அடிப்பாள். சுமனுக்கு இரண்டு வாடிக்கைகூட சில நாட்களில் கிடைப்பதில்லை. அதனால் அடிபடுகிறாள்" என்றாள்.*

*அந்தச் செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது. "இப்படி யெல்லாம் கணக்குப் பார்த்துக்கூட அடிப்பார்களா?" என்றேன்.*

*ஆமாம்! அவளை வாங்குவதற்காகப் போட்ட பணத்தை, வீட்டுக்காரி எடுக்க வேண்டாமா? இதில் நம் வீட்டுக்காரி சிந்து கொஞ்சம் நல்லவள். வரும்படி குறைந்தாலும் பொருட்படுத்த மாட்டாள். ஆனால், இந்த நிர்மலா ஒரு மகாபாவி! குறிப்பிட்ட*

தொகை சம்பாதிக்கவில்லையானால் பெல்ட்டால் அடிப்பாள். பட்டினி போடுவாள்!"

எனக்குக் கேட்கக் கஷ்டமாக இருந்தது. கீர்த்தி தொடர்ந்தாள்.

"நிர்மலா ஆடம்பர வாழ்க்கை வாழ்கிறாள். கார் வைத்திருக்கிறாள். அவளது இரண்டு குழந்தைகளை ஹாஸ்டலில் விட்டு வைத்திருக்கிறாள். இங்கே ஹாய்யாகப் பொழுதைப் போக்கிக்கொண்டு, மற்றவர்கள் மூலமாகச் சம்பாதிக்கிறாள்!" என்றாள்.

## 20. பணம் வேண்டுமே!

கடைசியில் கீர்த்தி, "கமலா! நான் இங்கே அழைத்ததன் காரணம் வேறு! ஒரு முக்கியமான விஷயம்!" என்றாள்.

"என்ன?" என்றேன்.

"தயாவும் நாங்களும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். அதற்குப் பணம் தேவைப்டுகிறது."

"என்ன திட்டம்?"

"வாடிக்கையாளர் ஒருவரின் மூலமாகப் போலீசுக்குச் செய்தி அனுப்ப நினைத்திருக்கிறோம். இதைத் தயாவே முன் நின்று செய்யப் போகிறாள்."

"ஆகா! நல்ல திட்டம்!" என்று துள்ளினேன்.

"பொறு! அவசரப்படாதே! எத்தனையோ சங்கடங்கள் அதில் இருக்கின்றன. எந்த ஆண்பிள்ளையும் அப்படி உதவி செய்ய முன்வர மாட்டார்கள் தெரியுமா?"

"ஏன்?"

"இங்கே வருகிறவர் எல்லாரையும் வீட்டுக்காரிகள் உடனே வாடிக்கையாளராக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். முதலில் தெரிந்தவர் யாராவது அறிமுகப்படுத்த வேண்டும். பிறகு அந்த ஆள்மீது வீட்டுக்காரிக்கு நம்பிக்கை வரவேண்டும். அப்போதுதான் அவளை வீட்டுக்காரி ஏற்றுக்கொள்வாள். ஆகவே பதிவாகப் பழகியவர்கள்தான் பொதுவாக இங்கே வருவார்கள். அவர்கள் நம்மிடம் இதமாகப் பேசுவார்களே ஒழிய, உதவி செய்ய மாட்டார்கள். அவர்கள் மூலமாகச் சில சமயம்

வீட்டுக்காரிகள் நம்மை உளவு பார்ப்பதும் உண்டு. ஆதலால் அவர்களிடம் கூட நாம் ஜாக்கிரதையாகப் பழக வேண்டும்!" என்றாள். எனக்குப் பகீர் என்றது. பல்பீரின்மீது ஒரு கணம் நினைவு சென்றது.

கீர்த்தி தொடர்ந்தாள்:

"அப்படி யாராவது நமக்கு ஏதாவது உதவி செய்வது தெரிந்தால், அவனைப் பிடித்து கொலைகூடச் செய்து விடுவார்கள். அப்படிப்பட்ட ரௌடிகள் பலர் இந்த ஜி.பி. ரோடில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நம் வீட்டுக்காரிகள் மாமூலும் கொடுத்து வருகிறார்கள்" என்றாள்.

"அப்படியானால் தயா என்ன செய்யப் போகிறாள்?"

"ஒரு பான்வாலா அவளிடம் வருவதுண்டு. அவன் ஆந்திரக்காரன். இருபது வருடம் டில்லியில் இருந்து சொந்த ஊரை மறந்தவன். அவனிடம் அவள் நல்ல பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாள். போலீசில் சொல்வதற்கு அவன் ஒத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அதற்கு கூலியாக முன்னூறு ரூபாய் பணம் கேட்கிறான். இந்தப் பணத்தைத்தான் நாங்கள் சேகரிக்க விரும்புகிறோம். ஒவ்வொருவரும் வாரம் ஒரு ரூபாயாவது கொடுக்க வேண்டும். நான் தான் கலெக்ட் செய்கிறேன்" என்றாள்.

"ஒரு ரூபாய் ரொம்பக் குறைவு, ஐந்து ரூபாய் கொடுக்கலாம்" என்றேன்.

"நீயும் நானும் கொடுக்கலாம். நமக்கு டிபன் செலவு கிடையாது. நம் வீட்டுக்காரி அதைக் கொடுத்துவிடுகிறாள். ஆனால் மாடியிலுள்ள பெண்களுக்கு அப்படி இல்லை. அவர் களது டிபன் செலவுகளுக்கு அவர்களேதான் பணம் கொடுக்க வேண்டும். வீட்டுக்காரிகள் கொடுக்க மாட்டார்கள். தவிர துணி, மணி, மருந்து என்று எத்தனையோ செலவுகள் உண்டு. அதனால் அவர்கள் வாங்கும் பக்ஷீஸ் இந்தச் செலவுகளுக்கே சரியாகப் போய்விடும். வாரம் ஐந்து ரூபாய் கொடுக்க முடியாது" என்றாள்.

பிறகு அவள், சரி! நாழிகையாகிவிட்டது" என்றாள்.

நான் அவசரமாக அங்கே சாக்கு மெத்தைகள் வைத்திருந்த பகுதிக்குப் போனேன். அவைகளின் நடுவே என் மணிப்பர்ஸை வைத்திருந்தேன். பழைய துணியை அதன் மீது சுற்றி

வைத்திருந்ததால் பார்க்கிறவர்களுக்கு அது பர்ஸ் என்று தெரியாது. (இந்த உபாயங்களைக் கீர்த்திதான் சொல்லிக் கொடுத்திருந்தாள்.) அந்தப் பர்ஸை எடுத்து ஐந்து ரூபாயைக் கீர்த்தியிடம் கொடுத்தேன்.

மீண்டும் கூட்டத்தில் வந்து உட்கார்ந்தபோது சுமன் இன்னும் அழுது கொண்டிருந்தாள். அவளைச் சமாதானப் படுத்த எனக்குப் போதிய தைரியம் இல்லை. என் கருத்துக்கள் யாவற்றையும் வெளிப்படுத்த போதிய இந்தி அறிவும் இல்லை. ஆனால் அவளுக்கு எப்படியும் உதவ வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

வாரங்கள் நகர்ந்தபோது என் மனதில் விடுதலை ஆசை ஓங்கி எழுந்தது. தயாவிடம் சீக்கிரம் முந்நூறு ரூபாய் சேர வேண்டும் என்று நினைத்தேன். அந்தப் பான்வாலா அதை வாங்கிக் கொள்வான். போலீசில் போய்ச் சொல்லுவான். போலீஸ்காரர்கள் கையில் துப்பாக்கியோடு இங்கே வருவார்கள். எல்லாரையும் பிடித்துக்கொண்டு ஸ்டேஷனுக்குப் போவார்கள். வீட்டுக்காரிகளை உதை உதையென்று உதைத்து ஜெயிலுக்குள் தள்ளுவார்கள். எங்களுக்கு விடுதலை அளிப்பார்கள்.

இதே கனவுகளைத்தான் மிக ரசனையுடன் ஒவ்வொரு நாளும் கண்டு கொண்டிருந்தேன்.

ஆனால் ஒவ்வொரு வாரமும், "என்ன தொகை சேர்ந்திருக் கிறது?" என்று நான் கேட்டபோது "பதினெட்டு ரூபாய்தான் சேர்ந்திருக்கிறது. இருபத்து நாலுதான் சேர்ந்திருக்கிறது" என்று குறைவான தொகைகளைக் கீர்த்தி கூறும்போது எனக்கு ஒரே வேதனைதான் ஏற்பட்டது. ஒன்பது தென்னிந்தியப் பெண்களிட மிருந்தும் இரண்டு வடஇந்தியப் பெண்களிடமிருந்துந்தான் அவர்கள் பணம் வசூலித்தார்கள். அவர்கள்தான் விடுதலைக்கு விருப்பம் உள்ளவர்கள். மற்றவர்களை அணுகுவதற்கு அவர் களுக்கு ஒரே பயம்.

பணம் அதிகம் பிரியாததற்கு மற்றொரு காரணமும் இருந்தது. சில பெண்களால் வாரம் ஒரு ரூபாய் கொடுக்க முடியவில்லை. "அடுத்த வாரம் தருகிறேன்" என்று கடன் சொன்னார்கள். அடுத்த வாரமும் கொடுக்க முடியவில்லை. எல்லாருக்கும் ஏதோ ஒரு விதத்தில் செலவுகள் இருந்து கொண்டே இருந்தன.

செலவுகளில் பெரும்பாலும் மருந்துச் செலவு என்று அறிந்து கொண்டேன். நான் புதிதாகப் போனதால் முதலில் எனக்கு இது தெரியவில்லை. இங்குள்ள பெண்கள் யாவரும் தங்கள் தேகங்களைத் துர்வியாதியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள நிறைய மருந்துகளைச் சாப்பிடுகிறார்கள். அலமாரியில் வெவ்வேறு பாட்டில்களை நிறைய அடுக்கி வைத்திருந்தார்கள். சிலரைப் பார்த்தால், சாப்பாட்டுக்கு பதில் மருந்துகளே சாப்பிடு கிறார்களோ என்று தோன்றும். வீட்டுக்காரிகள் இலவசமாக அளிப்பது கருத்தடை மாத்திரை ஒன்றுதான்.

இவை தவிர, பவுடர், ஸ்னோ, செண்ட், சோப்பு போன்றவைகளுக்குப் பெண்கள் தாங்களேதான் செலவழித்துக் கொள்ள வேண்டும்.

இதனால் ஒவ்வொரு பெண்ணுக்கும் வரவைவிடச் செலவுதான் அதிகம். வாரம் ஒரு ரூபாய்கூடக் கொடுக்க முடிய வில்லை. வசூல் பணமும் மெதுவாகத்தான் வளர்ந்து கொண் டிருந்தது.

இரண்டு மாதங்கள் வரை பல்பீர் வரவில்லை. அவன் மீது எனக்குச் சந்தேகங்கள் தோன்றியிருந்தன. உளவாளியாக இருப்பானோ என்று நினைத்தேன். அவனிடம் கவனமாக நடந்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன்.

இரண்டு மாதத்திற்கு பிறகு ஓர் இரவு அவன் மீண்டும் வந்தான். எட்டு மணிக்கு அவன் வந்தபோது ஆச்சரியமாக இருந்தது. "மன்னித்துக் கொள், மன்னித்துக் கொள்!" என்று சொல்லியவாறு என்னை அழைத்துப் போனான்.

நான் அவனிடம் எதுவும் பேசவில்லை. புன்னகையையும் சிரிப்பையும்கூட அளவோடு நிறுத்திக் கொண்டேன். அவனால் அதைத் தாங்க முடியவில்லை. நான் கோபித்துக் கொண்டு இருக்கிறேன் என்று நினைத்தான்.

"கமலா! கோபித்துக் கொள்ளாதே! வராததற்குக் காரணம் இருக்கிறது. நிர்மலா அந்தப் பெண்ணை பெல்ட்டால் அடித்த போது அன்றைக்கு நான் தடுத்தது நினைவு இருக்கிறதா? அதனால் அவளுக்கு ஒரே கோபம்! உன் வீட்டுக்காரி சிந்துவிடம் சொல்லி என்னை வரக்கூடாது என்று சொல்லி விட்டாள். எனக்கு வருத்தம். ஒவ்வொரு வாரமும் இங்கே வந்து போவேன். ஆனால் வாசலில் தர்வான் என்னை உள்ளே அனுமதிக்க

மறுப்பான். இன்றுதான் சிந்துவிடம் கெஞ்சி கேட்டுக் கொண்டு உள்ளே வந்தேன்" என்றான்.

பிறகு அறையை விட்டு நாங்கள் புறப்படும் போது ஐந்து ரூபாயை என்னிடம் நீட்டினான். நான் "வேண்டாம்" என்றேன்.

"ஏன்?" என்றான் வருத்தத்துடன், "இவ்வளவுதானா?" என்று ஒரு வார்த்தையோடு நிறுத்திக் கொண்டேன்.

அவன் பெரிய வேதனை அடைந்தான்.

"கமலா! உனக்கு அதிகம் வேண்டுமா?" என்றான்.

நான் பதில் சொல்லவில்லை.

இன்னொரு ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தான். அதையும் வேண்டாம் என்றேன். அவனிடம் சாகசம் செய்து இருபது ரூபாயாவது வாங்கவேண்டும், அதைப் பொதுப் பணத்தில் சேர்க்க வேண்டும் என்று நினைத்தேன்.

இரண்டு ஐந்து ரூபாயையும் நான் கட்டிலில் போட்டதும் அவன் கண்கள் கலங்கிவிட்டன. "கமலா!" என்று என் கையைப் பிடித்தான்.

"கமலா! இங்கே ஒவ்வொரு தடவையும் வருவதற்கு முன் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் தெரியுமா? உனக்குத் தெரியாது. நான் சொல்வதைக் கேள். நான் ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். இது போன்ற இடங்களுக்கே வர மாட்டேன்! நான் சொல்லப் போவதை நீ நம்புவாயோ மாட்டாயோ! என் மனைவி சொல்லித்தான் இங்கே வந்திருக்கிறேன்" என்றான்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

ஆமாம்! அவள் சொல்லித்தான் வந்தேன். எனக்கும் அவளுக்கும் மணமாகி இரண்டு வருடங்கள் ஆகின்றன. அவள் அழகானவள். நல்ல குணமுள்ளவள். அவளை நான் நேசிக்கிறேன். அவளும் என்னை நேசிக்கிறாள். ஆனால் எங்கள் நேசம் உள்ளப் பிணைப்பில் நின்றுவிட்டதே ஒழிய உடல் பிணைப்பு வரை செல்லவில்லை. அவளுக்கு ஒரு அலர்ஜி. எத்தனையோ டாக்டர்களிடம் காண்பித்து விட்டேன்! மருந்துகள் எவ்வளவோ வாங்கிக் கொடுத்து விட்டேன். பலன் இல்லை. பலர் அதை மனநோய் என்கிறார்கள். உடல் உறவு என்று நெருங்கினால் அவளது உடல் முழுதும் தீபோல் ஒருவித எரிச்சல் பரவுகிறது. தீ என்றால் அசல் தீ! கண்கள் பொங்கு கின்றன. நாக்கு வறள்கிறது.

மூச்சுத் திணறுகிறது. உயிர் போவது போல் தத்தளிக்கிறாள். எனது நெருக்கத்தை விரும்பாமல் தூரத் தள்ளிவிட்டு, மூர்ச்சை அடைந்துவிடுகிறாள். எழுந்திருக்க அரை மணி நேரம் ஆகிறது. பிறகு பித்துப் பிடித்ததுபோல் வெகுநேரம் உட்கார்ந்து விடுகிறாள்.

''எத்தனையோ டாக்டரிடம் காண்பித்தும் இதற்கு விமோசனம் கிடைக்கவில்லை. அந்த நேரத்திற்கு அவள் அப்படி இருக்கிறாளே ஒழிய மற்றப்படி எப்போதும் சரியாகவே இருக்கிறாள். எந்தவித எரிச்சலும் கிடையாது. வேதனையும் கிடையாது. சொல்லப் போனால் இரவில் அப்படியெல்லாம் நடந்து கொண்டேனே என்று வருத்தப்படுகிறாள். 'இனிமேல் சரியாக இருக்கிறேன்' என்று சொல்லுவாள். சொல்லுவாளே ஒழிய அவளால் முடியாது. அது ஒரு அலர்ஜி!

"இதுபோல் ஒரு வருடம் ஓடிவிட்டது. இருந்தாலும் இணைபிரியாத தம்பதியராகவே இருந்து வந்தோம்!"

''என் மனைவி ஒருநாள் என்னை அழைத்து, 'நீங்கள் டில்லிக்குப் போய் வருகிறீர்கள். அங்கே உள்ள விடுதிக்குப் போய் வாருங்கள்' என்றாள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. விளையாட்டுக்குச் சொல்கிறாள் என்று நினைத்தேன். அல்லது சோதனை செய்கிறாள் என்று தோன்றியது.

"இரண்டும் இல்லை! அவள் உண்மையாகவே அவ்விதம் சொல்லியிருக்கிறாள். காரணம் சிறிது சிறிதாகத் தெரிந்தது. எங்கள் தெருவில் என்னைப்போல் சொந்த லாரி வைத்திருப் பவர்கள் பலர். அவர்களில் பலர் மோசமான வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதை என் மனைவி அறிந்திருக்கிறாள். "இவ்வள வுக்கும் வீட்டில் அவர்களுக்கு எந்தக் குறையும் கிடையாதாம்! இருந்தும் விடுதிக்குப் போகிறார்கள்'' என்று அவர்களது மனைவிகள் வருத்தப்படுவார்கள்.

''இந்தச் செய்திதான் என் மனைவியை நினைக்க வைத்திருக்கிறது. நான் நல்லவன் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் இயற்கையாக கிடைக்க வேண்டியது எனக்குக் கிடைக்க வில்லை என்பதை அவள் உணர்ந்திருக்கிறாள். அதற்கு அவள் தான் காரணம் என்பதையும் புரிந்து கொண்டிருக்கிறாள். அவளால் அளிக்க முடியாததை யார் வழியிலாவது நான் அடைந்து தீரவேண்டும் என்று நினைத்தாள். அப்படிச்

செய்வதன் மூலம்தான் என்னை அவள் தன்னுடன் நிறுத்தி வைத்துக் கொள்ள முடியும் என்று நினைத்தாள்.

“முதலில் நான் ஆமோதிக்கவில்லை. பின்னால் இதற்கு இணங்கிவிட வேண்டி வந்தது. நான் இங்கே வந்து சேர்ந்திருக் கிறேன்.

“கமலா! உன்மீது எனக்கு ஒரு பாசம் ஏற்பட்டு விட்டது. டில்லிக்கு வந்தால் உன்னைத்தவிர யாரையும் நினைப்பது இல்லை. ஒவ்வொரு தடவையும் இங்கே வரவேண்டுமானால் ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் எடுத்து வரவேண்டியிருக்கிறது. எனக்கு ஒரு ட்ரிப்புக்குக் கிடைக்கும் நூறு ரூபாய் வரும்படியில் ஐம்பது ரூபாய் செலவழிப்பது மிகவும் கஷ்டம். இருந்தும் செலவழிக்கிறேன். உன் மனம் கோணாமல் இருக்கவேண்டும் என்பதைத்தான் விரும்புகிறேன். இந்தப் பணத்தை நீ நிராகரித்தால் நான் மிகவும் வருத்தப்படுவேன். இதற்குமேல் என் கையிலும் பணம் இல்லை. இதை எடுத்துக் கொண்டு எனக்கு நிம்மதியைக் கொடு கமலா” என்றான்.

அவன் சொல்லியது உண்மையா என்று தெரியாது. அந்த நேரத்தில் உண்மைபோல் பட்டது.

பத்து ரூபாயை எடுத்துக் கொண்டேன்.

வட்டத்தில் மீண்டும் போய் உட்கார்ந்தபோது, பல்பீர் சொன்னதை யோசித்தேன். வாழ்க்கையில் இப்படிக்கூட தம்பதிகள் இருப்பார்களா என்று நினைத்தேன். அல்லது அவன் சொன்னது எல்லாம் பொய்யாக இருக்குமோ? கீர்த்தி சொல்லிய படி இவர்கள் நம்மைச் சோதனை செய்வதற்காக இப்படி எல்லாம் கதை சொல்கிறார்களோ?

சிறிது நேரத்தில் ஒரு ஆசாமி வந்தான். அவனுடன் அறைக்குப் போனேன். இரண்டு ரூபாய் பக்ஷீஸ் கொடுத்தான். “பூ! இவ்வளவுதானா?” என்று தூக்கி எறிந்தேன். அவன் இன்னொரு ரூபாயை எடுத்துக் கொடுத்தான். அதை எடுத்த போது ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றுக் கீழே விழுந்ததை அவன் கவனிக்கவில்லை.

அவசரமாக அவன் போனபோது அந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் கொடுக்கலாமா என்று நினைத் தேன். ஆனால் மறுகணம் அது தேவையில்லை. இப்படிப்பட்ட இடங்களுக்கு வருகிறவர்கள் நஷ்டம் அடைவதில் ஒன்றும் தப்பு

இல்லை. நஷ்டம் அடைய வேண்டியதுதான் என்று நினைத்தேன். அந்த ரூபாயைத் தயாவிடம் கொடுத்தால் முந்நூறு ரூபாய் சீக்கிரம் சேர்ந்து நாம் விரைவில் விடுதலை அடைவோம் என்று நினைத்தேன். ஆகவே பணத்தை எடுத்து முடிந்து கொண்டேன்.

அன்று முதல் எனக்கு இன்னொரு ஆசை தோன்றி விட்டது. வருகிற வாடிக்கையாளரிடமிருந்து அவர் அறியாமல் நான் பணத்தை எடுத்துக்கொள்ள விரும்பினேன். எனக்கு இருந்த விடுதலை ஆசையில் அது ஒரு தப்பிதமாகத் தோன்ற வில்லை.

இதற்காகச் சில முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டேன். பொதுவாக வாடிக்கையாளர்கள் தங்கள் சட்டை பாண்டுகளை அருகில் உள்ள ஆணியில் மாட்டுவார்கள். நான் அறைக்குள் போனால் கட்டிலைச் சமீபமாக இழுத்து வைப்பேன். அதனால் படுத்திருக்கும் நான் தொங்கும் துணி களைக் கையை நீட்டித் தொட முடியும். வாடிக்கையாளரின் கவனக் குறைவைப் பயன்படுத்திக் கொண்டு பைகளிலிருந்து நோட்டை எடுத்துத் தரையில் போட்டு விடுவேன். கட்டிலின் நிழல் அதை மறைத்திருக்கும். இது எனக்குச் சுலபமாக இருந்தது. போகப் போக ஒரு கலையாகவும் கைவந்து விட்டது.

இந்தக் கையாடல்களில் ஒரு ரூபாய் நோட்டுகள்தான் அதிகம் கிடைத்தன. ஒரு சமயம் ஒரு நூறுரூபாய் நோட்டு கிடைத்தது. ஆனால் வாடிக்கைக்காரர் நூறு ரூபாய் இல்லை என்று தெரிந்தால் உள்ளே வந்து ரகளை பண்ணுவார் என்று நினைத்தேன். அதனால் பயந்து அவரைத் தொடர்ந்து ஓடிப் போய், "உங்கள் பணம் கீழே கிடந்தது" என்று சொல்லிக் கொடுத்து விட்டேன்.

## 21. எத்தனை சுமைகள்!

என்னிடம் விரைவில் அறுபது ரூபாய் சேர்ந்தது. அதைத் தயாவிடம் சேர்ப்பித்து அவளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அதற்குள் வேறு சோதனை ஏற்பட்டுவிட்டது.

ஒருநாள் வட்டத்தில் சுமனைச் சந்திக்க நேர்ந்தது. அவளைப் பார்க்கும்போது ஒன்று இரண்டு என்று பணம் கொடுப்பது வழக்கம். அவளது டிபன் செலவுகளுக்கு அவளே

செலவழித்துக் கொள்ள வேண்டும். ஆனால் அடிக்கடி கையில் பணம் இல்லாமல் பட்டினி கிடப்பாள். ஆகவே நாங்கள் யாராவது பணம் கொடுத்து உதவுவோம். அன்று பணத்தை வாங்கிக் கொண்டதும் நன்றியுடன் அவள் என்னைப் பார்த்தாள்.

"சகோதரி! உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். வேற்று மொழிக்காரிகளான நீங்கள் எனக்கு உதவி செய்கிறீர்கள். மிக்க நன்றி!" என்று கூறிவிட்டு, மெதுவான குரலில், "ரேணுகா பாத்ரூம் பக்கம் போயிருக்கிறாள். முடிந்தால் வரச் சொன்னாள்!" என்றாள்.

உடனே எழுந்து போனால் சந்தேகம் வந்துவிடும் என்பதற்காக, சிறிது நேரம் பொழுதைப் போக்கினேன்.

அதற்குள் ஒரு இந்திப்பெண் அடுத்த அறைக்குப் போய் விட்டு வந்தாள். அவளுக்குப் பின்னால் அந்தக் கைக் குழந்தைக்காரி வெளியே வந்தாள். நேராக சுமனிடம் சென்று, "நீ கமலாவுடன் என்ன பேசினாய்?" என்றாள். சுமன் பதில் சொல்லத் தயங்கவே, குழந்தைக்காரி என் பக்கம் திரும்பினாள்.

"என்னிடம் அவள் இரண்டு ரூபாய் கடன் கேட்டாள். கொடுத்தேன்!" என்றேன் நான்.

சுமன் பயத்துடன் ரூபாயை எடுத்துக் காண்பித்தாள். குழந்தைக்காரி முறைத்துப் பார்த்துவிட்டுப் போய் விட்டாள்.

இந்தக் கண்காணிப்பில் நான் எழுந்து போவதற்குத் தயங்கினேன். பேசாமல் அப்படியே உட்கார்ந்து விட்டேன்.

அரைமணி நேரம் சென்றிருக்கும். ஒரு வாடிக்கைக் காரருடன் நான் எழுந்து போகவேண்டி வந்தது. அறைக்குள் நுழையும்போது ஒரு குமுறலான சப்தம் கேட்டது. பாத்ரூம் பக்கம் திரும்பினேன். அங்கே நிழலாக இருந்த ஒரு உருவம் என்னை வா என்று கையைக் காட்டி அழைத்துக் கொண் டிருந்தது. இவ்வளவு நாழிகை ரேணுகா இங்கே இருக்க முடியாதே என்று ஆச்சரியத்துடன் போனேன்.

அது ரேணுகாதான்! வயிற்றைப் பிடித்துக்கொண்டு வாந்தி எடுத்துக்கொண்டிருந்தாள். முகமும், வாயும் ஒரே அடியாகக் கோணிக் கொண்டிருந்தன.

"ரேணு! என்றேன். அவளிடம் பேசப் பயமாக இருந்தது. பின்னால் அடிக்கடி திரும்பிப் பார்த்தேன்.

ரேணு தலையைத் தூக்கினாள். சிறிது நேரம் வரை பேச முடியவில்லை. குமட்டல் அப்படிச் சுழற்றியது. பிறகு மெதுவாக, "கமலா! நான் உண்டாயிருக்கிறேன்" என்றாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"உண்மையா?" என்றேன்.

"ஆமாம்! நான் சந்தேகப்பட்டேன். இப்போது நிச்சயமாகி விட்டது" என்றாள்.

"இனி என்ன செய்ய, ரேணு?" என்றேன்.

அவள் ஆசுவாசப்பட்டாள்.

"ஏதாவது செய்யவேண்டும் கமலா! இல்லாவிட்டால் சும்மா விடமாட்டார்கள். என் சம்பாத்தியம் நின்றுவிட்டால் இவர்கள் சோறுகூடப் போட மாட்டார்கள். அதற்குப் பதிலாகக் கொடுமைப்படுத்துவார்கள். இங்கே ஒரு இந்திக்காரிக்கு இப்படித்தான் குழந்தை பிறந்தது. அதை நடு ராத்திரியில் அவள் கையாலேயே தூரத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவரச் சொன்னார்கள். அவள் அப்படிச் செய்கிறாளா என்று கவனிக்க இரண்டு ஆட்களையே கூடவே அனுப்பினார்கள். அவ்வளவு இரக்கமற்றவர்கள் இவர்கள்!" என்றாள் அவள்.

பிறகு வாயையும் முகத்தையும் கழுவிக்கொண்டு என் தோளைப் பிடித்தவாறு தள்ளாடிக்கொண்டே அறைக்குள் வந்தாள். அங்கே இருந்த ஆசாமியிடம் சிறிது நேரம் சும்மா யிருக்கும்படி சொல்லிவிட்டுப் படுக்கையில் சிறிது சாய்ந்தாள்.

"இப்போ வேறு வழி என்ன இருக்கிறது?" என்றேன்.

"வழியா இல்லை? டாக்டரை அழைக்க வேண்டியதுதான். ஆனால் அதற்கு நான்தான் பணம் செலவழிக்க வேண்டும்."

"எவ்வளவு?"

"நூறு ரூபாய்."

நூறு ரூபாய் என்று சொன்னதும் திடுக்கிட்டேன்.

"இவ்வளவு பணத்திற்கு எங்கே போவது?" என்றேன்.

"அதுதான் எனக்குத் தெரியவில்லை" என்றாள் அவள்.

ரேணுவின் கையில் பணம் கிடையாது. வரும் பணத்தை எல்லாம் செலவழிப்பவள் அவள். ஊதாரி என்றுகூட அவளைச் சொல்லலாம். எப்போதும் புதுத்துணி வாங்குவதில் அவளுக்கு

ஆர்வம். (இந்தத் துணிகளை நாங்கள் இருக்கும் இடம் தேடி வந்து கொடுக்க வியாபாரிகள் இருந்தார்கள். துணிகளை மட்டுமல்ல! எங்களுக்குத் தேவையான எல்லாப் பொருள் களையுமே கொண்டுவந்து கொடுத்தார்கள்.)

ரேணுவின் நிலை பரிதாபமாக இருந்தது. யோசித்தேன். நான் சேர்த்து வைத்திருக்கும் அறுபது ரூபாய் நினைவுக்கு வந்தது.

"ரேணு! நான் அறுபது ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன். அதை தயாவிடம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். இப்போது உன்னிடம் தந்து விடுகிறேன்" என்றேன்.

அவள் மகிழ்ச்சியோடு என்னைப் பார்த்தாள். கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி சொன்னாள். இரண்டு மாதத்தில் பணத்தைத் திருப்பித் தந்து விடுவதாகக் கூறினாள். "அதெல்லாம் தேவையில்லை" என்றேன் நான்.

நேராகப் பாத்ரூம் பக்கம் போனேன். மெத்தைகள் அடுக்கி வைத்திருக்கும் பகுதிக்குச் சென்றேன்.

உள்ளே கைவிட்டு மணிபர்ஸைத் தேடினேன். பக்கென்றது. மெத்தைகளை நெம்பிப் பார்த்தேன். இரண்டு மெத்தைகளைக் கீழே தள்ளிப் பார்த்தேன். பிரயோசனமில்லை! பர்ஸ் அபேசாகி விட்டது.

நான் அடைந்த துக்கத்துக்கு அளவு கிடையாது. சூன்யம் பிடித்தது போல் நின்றேன். இந்த வீட்டில் இப்படிக் கேவல ஜந்துக்கள் இருக்கிறார்களே என்று நினைத்தேன். திருடிப் பிழைப்பவர்கள்!

ஒரு நிழல் அப்போது தட்டுப்பட்டது. குழந்தைக்காரி அங்கே வந்தாள்.

"என்ன பண்ணுகிறாய்?" என்றாள்.

"மெத்தை சரிந்து விட்டது. எடுத்து வைக்கிறேன்" என்றேன்.

பரபரவென்று மெத்தைகளை எடுத்து வைத்தேன். அறைக்குள் சென்றேன்.

அதற்குள் ரேணு போய்விட்டாள். குழந்தைக்காரியை அவள் பார்த்திருக்க வேண்டும்.

வந்த ஆசாமியைப் பதினைந்து நிமிடத்தில் அனுப்பி னேன். பிறகு வட்டத்திற்குப் போனேன். ரேணு அங்கே உட்கார்ந்

திருந்தாள். விஷயத்தைச் சொன்னேன். அவளுக்கு வருத்தமாக இருந்தது. இரவெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை.

மறுநாள் கல்பனாவைச் சந்திக்க நேர்ந்தது. விஷயத்தைச் சொன்னேன். அவளும் திடுக்கிட்டாள். “இனிமேல் பர்ஸை அங்கே வைக்காதே! என்னிடம் கொடுத்துவை!” என்று உபதேசம் செய்தாள்.

ரேணுவின் நிலையைப் பற்றி இருவரும் யோசித்தோம். அவளுக்கு உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தோம்.

அப்போது கல்பனா ரேணுவைப் பற்றிச் சில விஷயங்களைக் கூறினாள். கேட்பதற்கு விசித்திரமாக இருந்தது.

வீட்டுக்காரி சிந்துவின் கணவருக்கு ரேணுமீது ஒரே ஆர்வம்! அதைப் புரிந்து கொண்ட ரேணு அதற்குத் தகுந்தாற் போல் நடந்து கொண்டாள்! இது விரைவில் வீட்டுக்காரிக்குத் தெரிந்துவிட்டது. அன்றிலிருந்து அவளுக்கும் ரேணுவுக்கும் லடாய். மாடிக்கு அவளை அனுப்பி விட்டு, “இனி நீ கீழே இறங்கவே கூடாது'' என்று கட்டளை இட்டுவிட்டாள்.

“ரேணுவை ரொம்ப நல்லவள் என்று சொல்ல மாட்டேன். அவளுக்கு உடல் உறவுகளில் இச்சை உண்டு. இந்தத் தொழிலை விரும்புகிறாளோ என்றுகூடச் சந்தேகப்படுவேன். அதனால்தான் இப்படிச் சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறாள். இருந்தாலும், துன்பம் வந்திருக்கும்போது நாம்தான் உதவி செய்ய வேண்டும். தயாவிடம் இதைப் பற்றிப் பேசுகிறேன்” என்றாள் கல்பனா.

இரு தினங்களுக்குப் பிறகு தயாவுடன் அவள் பேசினாள். இருவரும் ஒரு முடிவு எடுத்தார்கள். பொதுப் பணத்தில் அதுவரை நூற்றிப் பன்னிரண்டு ரூபாய் சேர்ந்திருந்தது. அதிலிருந்து நூறு ரூபாயை அப்படியே அவளுக்குக் கொடுத்து விடுவது என்று தீர்மானித்தார்கள். நாங்களும் உடன்பட்டோம்.

குறிப்பிட்ட நாள் காலையில் ரேணுவை டாக்டரிடம் அழைத்துப் போனார்கள். (இதற்கெல்லாம் எங்களுக்கு ஒரு ஸ்பெஷல் டாக்டர்!) அவளுடன் இரண்டு ஆண்கள் பாது காப்புக்காகப் போனார்கள். சில மணி நேரங்களில் சிகிச்சை முடித்து அவளை வீட்டில் கொண்டு விட்டார்கள்.

ஒரு வாரம் ரேணு படுக்கையில் இருந்தாள். அந்த நாட்களில் நாங்கள் அவளுக்கு வேண்டிய தேவைகளைக் கவனித்தோம். பழங்களும் டானிக்குகளும் வாங்கிக் கொடுத்தோம்.

நாங்கள் இருந்த வீடு ஜி. பி. ரோடில் இருந்தது. வீட்டு நம்பரை மறந்து விட்டேன். வீட்டின் கீழ்ப்பகுதியில் ஒரு டீக்கடை உண்டு. இடது புறத்தில் ஒரு சைக்கிள் கடையும், வலது புறத்தில் ஒரு எலெக்டிரிகள் சாமான் கடையும் இருந்தன.

பல பிரபல கடைகளும் நிறுவனங்களும்கூட அதே தெருவில் இருந்தன. இந்தக் கடைகளில் தினம் லட்சக்கணக்கில் கூட வியாபாரம் நடப்பது உண்டு.

கீழே கடைகள் இருந்தனவே தவிர மாடியிலோ பின்புறத்திலோ குடித்தனப் பகுதிகள் இருந்தன. இந்தப் பகுதிகளில் பெரும்பாலும் இந்தத் தொழில்தான் நடந்து வந்தது.

இந்தத் தெருவில் நிறைய ரௌடிகள் இருப்பார்கள். வீட்டுக்காரர்களிடம் அவர்கள் மாமூல் வாங்கிக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இங்கு நடத்தப்படும் இந்தத் தொழிலுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாதபடி பார்த்து வருவார்கள்.

ஒரு விசித்திரம் என்னவெனில் இந்த ரௌடிகளையும் முறித்துக் கொண்டு சில பெரிய ரௌடிகள் உள்ளே வந்துவிடுவார்கள். அவர்களைக் கண்டால் வீட்டுக்காரிகளுக்கே பயம்.

அந்தப் பெரிய ரௌடி யாராவது இந்த வீட்டுக்கு வந்தால் உள்ளே நடக்கும் காட்சியைப் பார்க்க வேண்டும். சினிமாக்களில்தான் அந்தக் காட்சியைப் பார்க்கலாம்.

வீடே நடுங்கிக் கொண்டிருக்கும்! ஒரே கப்சிப்! மேலே மாடிக்கு வரும் இந்த ரௌடிகள் பாட்டுக் கேட்க உட்காருவார்கள். பெண்களை விறைத்துப் பார்ப்பார்கள். யாரையேனும் கூப்பிடுவார்கள். பொதுவாக எந்தப் பெண்ணுமே இணங்க மாட்டாள். உடனே அவர்கள் வீட்டுக்காரிகளை அழைப் பார்கள்.

வீட்டுக்காரிகள் வந்து தயக்கத்துடன் பேசுவார்கள். “அவர்களுக்கு இஷ்டமில்லேப்பா! அதெல்லாம் விட்டுடு!” என்பார்கள். ரௌடிகள் ஆர்ப்பாட்டம் பண்ணிவிட்டுப் போய் விடுவார்கள்.

இந்த ரௌடிகளில் ஒருத்தனை ஒரு நாள் சந்திக்க நேர்ந்தது. மாடியில் இரவு ஏழு மணிக்குத் திடுதிப்பென்று வந்து நின்றுவிட்டான். ஒரே சாராய நெடி!

அதே நேரத்தில், மாடியிலுள்ள வீட்டுக்காரியும் இல்லை; கீழே உள்ள சிந்துவும் இல்லை.

(சிந்து எங்கே போயிருந்தாள் தெரியுமா? கோவிலுக்கு! ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அவள் கோவிலுக்குப் போய்விடுவாள். ஏழைகள் தருமத்திற்காகச் சில்லறைகளைத் தன் மடியில் முடிந்துகொண்டு, பக்தி சிரத்தையுடன் அவள் போகும் ஜோரைப் பார்த்தால் எனக்குச் சிரிப்பு வரும்.)

வந்தவன் சிறிது நேரம் பாட்டைக் கேட்டான். பிறகு சுமனைப் பார்த்து வாவென்று அழைத்தான். அவள் போக வில்லை.

அவன் கோபத்தில் எழுந்தான். அவளைப் போய்த் தரதர என்று இழுத்தான். அவள் அலறினாள்.

நான் சட்டென்று எழுந்தேன். எனக்கு அந்தத் தைரியம் எப்படி வந்ததோ தெரியவில்லை. ஓடிப்போய் சுமனின் கைகளை விடுத்தேன்.

“ஏய்! திமிர்க்காரி! உன்னை என்ன செய்வேன் பார்” என்று என்னை நோக்கித் திரும்பினான் அவன்.

‘‘என் பக்கம் வராதே! வந்தால் தகுந்த மரியாதை கிடைக்கும்!” என்றேன் நான், உடைந்த இந்தியில்.

“நீ யாரு அப்படிப் பேச!” என்று சொல்லிக் கொண்டு என் அருகே வந்தான். என் கையைப் பிடித்தான்.

நான் பயப்படவில்லை. என் கையை விடுவித்தேன். கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தேன். பிறகு விறுவிறு என்று அடுத்த அறைக்கு ஓடினேன்.

“ஏய் பிசாசே! நாயே!” என்று கத்தினான் அவன்.

நான் திரும்பிப் பார்த்து, “மரியாதையாகப் போ! இல்லா விட்டால்...” என்று என் காலைக் காண்பித்தேன்.

அதற்குள் கீழே இருந்து ஆண்கள் பலர் வந்து விட்டார்கள். அந்த ரௌடியிடம் அவர்கள் நல்ல வார்த்தை சொல்ல ஆரம்பித்தார்கள். மெதுவாகக் கையைப் பிடித்துக் கீழே இழுத்துப் போய் விட்டுவிட்டு வந்தார்கள்.

பெண்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு பாராட்டினார்கள். சிறிது நேரத்தில் சிந்து வந்தாள். "ஏன் கமலா அவனோடு சண்டைக்குப் போனாய்? பேசாமல் இருந்தால் அவனே போய்விடுவான்" என்றாள்.

"இல்லேம்மா! ரொம்ப மிரட்டினான்" என்றேன்.

"நீ சொல்றது சரி கமலா! உன் நல்ல காலம்! உன்னை விட்டு விட்டான். கத்தியைக் காட்டியே தனக்கு இஷ்டப்பட்ட பெண்ணைத் தேர்ந்தெடுப்பான். பணம் கேட்டால், 'பணமா வேணும்?' என்று கத்தியைக் காட்டிவிட்டு ஓடி விடுவான். இவர்களை உள்ளே விடக்கூடாது என்று பார்த்தால் எப்படியோ வந்து விடுகிறார்கள்" என்றாள் அவள்.

ரௌடியை அடித்துவிட்டேனே தவிர எனக்குக் கவலை இருந்தது. அவன் கலாட்டா செய்யாமல் எப்படிச் சும்மா போனான் என்பது புதிராக இருந்தது. ஆனால் அந்தச் சம்பவத்திலிருந்து ஒரு நன்மை ஏற்பட்டது. நான் ஒரு தைரியசாலி என்று எல்லோரும் நினைத்தார்கள்.

## 22. தயாவின் நினைவுகள்

இரண்டு வாரங்கள் போயிருக்கும். ஒரு நாள் மாலை நான்கு மணி. பாத்ரூமுக்குப் போனபோது ஒரு குரல் கேட்டது. திரும்பினேன். ஆச்சரியம்! அங்கு தயா நின்று கொண்டு இருந்தாள்.

பல மாதங்களாக அவளைச் சந்திக்கவில்லை. அவளைப் பார்க்க எவ்வளவு ஆவலோடு இருந்தேன்?

உணர்ச்சி வசப்பட்டுத் தடுமாறித் தாவிப் போய் அவளைக் கட்டிக் கொண்டேன்.

நெடிதான உருவம்! எடுப்பான உடம்பு! சிலை போல அழகு. காணக் காண எனக்குப் பரவசமாகியது. "தயா! தயா!" என்று புலம்பியவாறு அவளை அணைத்துக் கொண்டேன்.

லேசான புன்னகையுடன் அவள் என்னை வருடி விட்டாள். பிறகு, "உன் கஷ்டத்தையெல்லாம் கேள்விப்பட்டேன் கமலா! கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொள்! எல்லோரும் சீக்கிரம் விடுதலை பெறுவோம்!" என்றாள்.

எனக்குக் கண்ணீர் வந்தததது. "தயா! உனக்கு என் நன்றி! எனக்காகப் பணம் கொடுத்து உதவி செய்து, நான் இங்கே கழித்த முதல் இரவை துன்பமற்றதாகச் செய்தாய்! உன்னை நான் மறக்கவே முடியாது!" என்றேன்.

என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவளைப் பார்த்த போது திடுக்கிட்டேன். தயா மிகவும் இளைத்திருந்தாள்.

"தயா! இதென்ன! நீ இவ்வளவு இளைத்திருக்கிறாய்?" என்றேன்.

"எனக்கும் கவலை இல்லையா, கமலா! நாம் இங்கே கஷ்டப் படுகிறோம்! நமக்காக நம் வீடுகளில் பலர் கவலைப் படுகிறார்களே! பெண்ணைக் காணோம் என்று வேதனைப் படுவார்களே! அவர்களை நினைக்காமல் இருக்க முடியுமா?" என்றாள்.

பிறகு ஏதோ சொல்ல நினைத்தவள், சட்டென்று நிறுத்தி னாள். கண்களை மூடினாள். பொங்கி வரும் துயரத்தை அழுத்துவது போல் தோன்றினாள். ஆனால் மறுகணம் அவளையும் அது மீறிவிடவே, திடீரென்று ஒரு தரம் விம்மினாள். பிறகு தாரை தாரையாக கண்ணீர் வடிக்க ஆரம்பித்தாள்.

"தயா! தயா! அழாதே!" என்று அவள் கண்களைத் துடைத்தேன்.

அவள் கண்ணீர் ஓயவில்லை.

நான் இரக்கத்துடன், "தயா நீ எனக்குச் சமாதானம் சொல்பவள்! என்னைவிடத் தைரியம் உள்ள நீ இப்படி அழலாமா?" என்றேன்.

"அழக்கூடாதுதான் கமலா! அழுதால் என்னைவிடச் சிறியவளாகிய உனக்கு தைரியம் போய்விடும்! இருந்தாலும் அவர் நினைவு வந்துவிட்டது. அவருக்குத் தாமாகத் தண்ணீர் எடுத்துக் கொள்ளக்கூடத் தெரியாது. நான் இல்லாமல் எவ்வளவு சிரமப்படுகிறாரோ! வேதனைப்படுகிறாரோ! அதை நினைத்தவுடன் அழுகை வந்தது!" என்றாள்.

"யார் அவர்? உன் அப்பாவா?"

"இல்லை! என் கணவர்!"

"உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்றேன் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்!"

"அப்படியானால் தாலி எங்கே?"

"கணவர் கட்டிய தாலியை கழுத்தில் கட்டிக்கொண்டு நான் இங்கே வேறு ஆட்களை ஏற்றுக் கொள்ள முடியுமா? அதைக் கழற்றி என் பர்ஸுக்குள் வைத்து விட்டேன்.

தினம் ஒரு தடவை அதைக் கண்ணில் ஒத்திக் கொள்கிறேன். அதுதான் நான் என் கணவருக்குச் செய்யும் மானசீகமான பூஜை! என்றைக்கு எனக்கு விடுதலை கிடைக்கிறதோ, அன்று இந்தத் தாலியை எடுத்துக் கொண்டு அவர் முன்னால் போவேன். "என் மனத்தால் யாரையும் தொடவில்லை அத்தான்! என் ஆத்மா சுத்தமானது! உங்கள் கையால் தாலியைத் திரும்பவும் கட்டுங்கள் என்பேன்!" என்றாள்.

உணர்ச்சி வசப்பட்டு அவள் பேசியது என் நெஞ்சைத் தொட்டது.

"தயா! நீ சொல்வது நடக்கத்தான் போகிறது! இது சத்தியம்!" என்று கையைப் பிடித்துக் கொண்டு கூறினேன்.

சிறிது ஆசுவாசப்பட்ட அவள், "எனக்கு இப்போது ஒரு சின்ன விடுதலை கிடைத்திருக்கிறது கமலா" என்றாள்.

"என்ன விடுதலை?" என்றேன்.

"இரண்டாவது மாடியிலிருந்து நாளை முதல் மாடிக்கு வரப் போகிறேன். என்னுடைய தண்டனைக் காலம் முடிந்தது" என்றாள்.

"அப்படியா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். பிறகு, "உனக்கு ஏன் தண்டனை கொடுத்தார்கள், தயா?" என்றேன்.

"எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை உனக்கு உதவி செய்தேன் என்பதற்காக இருக்கலாம். அல்லது இங்கே இன்னொரு பழக்கம் உண்டு. இரண்டாவது மாடிக்காரி பணக்காரி! அவளிடமிருந்து சிந்து பணம் வாங்கியிருப்பாள். அதற்கு ஈடாகவோ அல்லது அதைச் சம்பாதித்துக் கொடுப்பதற்காகவோ இப்படி என்னை மேலே அனுப்பியிருக்கலாம். இங்கே நாம் எல்லாம் ஜடப் பொருள்கள்! வியாபாரப் பொருள்கள்!" என்றாள்.

மறுநாள் தயா கீழே வந்துவிட்டாள். மாலையில் வட்டத்தில் கலந்து கொண்டாள். எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அன்று இரவு பாட்டுக் கச்சேரி பலமாக இருந்தது.

வெளியாட்கள் வந்து தபேலா, ஆர்மோனியம் வாசித்தார்கள். புது ஆட்கள் பலர் வந்தார்கள். கச்சேரியின்போது காசுகளையும் நோட்டுகளையும் துணியில் வீசினார்கள்.

ஒன்பது மணிக்கு மேல் பலர் குடிப்பதில் இறங்கினார்கள். வீட்டுக்காரிகளான சிந்துவும், நிர்மலாவும் நன்றாகக் குடிப் பார்கள். ஆனால் இலவசமாகக் கிடைத்தால்தான் குடிப்பார்கள்.

அன்று குடிப்பவர்களை மேலும் குடிக்கும்படி இந்த வீட்டுக்காரிகள் ஊக்கிக் கொண்டே இருந்தார்கள். ஆறு ரூபாய் வீதம் பாட்டில் பாட்டிலாக பீர் விநியோகம் ஆகிக்கொண் டிருந்தது. சோக்ராப் பையன் மாடிக்கும் கீழுக்குமாக ஓடிக் கொண்டே இருந்தான்.

பதினொரு மணிக்குப் பார்த்தால் ஐம்பத்திரண்டு காலி பாட்டில்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன! ஒரே நெடி! சிகரெட் புகை! கலாட்டா, பேச்சு, சிரிப்பு!

சிந்துவுக்கு ஒரே போதை! நாக்குக் குழறினாள். ஒரு புஷ் கோட்டு ஆசாமி என்னிடம் ஒரு டம்ளர் பீரை நீட்டியபோது "கமலா! குடி! குடி!" என்றாள்.

"வேண்டாம்" என்று சொன்னேன். ஆனால் அவள் எழுந்து வந்தாள். "குடி!" என்று சொல்லி வற்புறுத்தி விட்டு, என் காதோரமாக, "விடாதே கமலா! அவன்கிட்ட இன்னும் இரண்டு பாட்டில்கள் வேணுமின்னு சொல்லு!" என்றாள்.

எனக்குக் கஷ்டமாக இருந்தது. சிந்து விடவில்லை. டம்ளரை எடுத்து என் வாயில் வைத்து வற்புறுத்தினாள். கடைசிச் சொட்டு வரை விடவில்லை. குடித்தேன். எனக்குக் குமட்டியது.

"சேத்ஜி! கமலா! நன்றாகக் குடிப்பாள்! இன்னும் இரண்டு பாட்டில் வரவழையுங்கள். உங்கள் பெயரைச் சொல்லிக் குடிப்பாள்!" என்றான்.

புஷ்கோட் ஒரேயடியாகச் சிரித்தார். "இரண்டு பாட்டில் என்ன? நாலு வாங்கி வரச் சொல்கிறேன். "அரே கங்கா ராம்! நாலு பாட்டில் கொண்டு வா!" என்று கத்தினார்.

என் வயிறு குமட்டியது. விருட்டென்று எழுந்து பாத் ரூமுக்குப் போனேன். வாந்தி எடுத்தேன்.

அன்று எல்லோரையுமே குடிக்கும்படி வற்புறுத்தினார்கள். எங்களில் ஐந்தாறு பெண்கள் குடியில் விருப்பம் உள்ளவர்கள். குடித்து விட்டுத் தாறுமாறாக உளறினார்கள். பாடினார்கள். உடம்பை நெளித்து ஆடினார்கள்.

ஆர்ப்பாட்டத்தின் ஊடே புஷ்கோட் என்னை அழைத்துக் கொண்டு கிளம்பினார். எனக்கு எரிச்சலாக இருந்தது. வேதனையுடன் பின் தொடர்ந்தேன்.

அறைக்குள் போனதும் தூக்கமும் களைப்பும் வந்தது. படுத்துத் தூங்கலாம் என்று நினைத்தேன். “பாவிகள்! இவர்களிடமிருந்து விமோசனம் கிடைக்கவில்லையே?'' என்று சபித்தேன்.

நான் முணுமுணுப்பதைப் பார்த்துப் புஷ்கோட் ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து என்னிடம் நீட்டினார். அன்றைக்கு அவர் ஒரே குஷியில் இருந்தார்.

பணத்தை நான் வாங்கிக் கொண்டேன். ஆனால் அவருக்கு எப்படியும் டிமிக்கிக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன்.

“சேத்ஜி! இன்னும் குடிக்கலாமே! ஒரே ஒரு பாட்டில்!” என்றேன்.

“ஐயோ வேண்டாம், இதுவே ஓவர்!” என்றார்.

நான் விடவில்லை. ஹாலுக்குப் போனேன். ஒரு டம்ளரில் பீர் ஊற்றினேன். ஒரு சின்னக் குழு அங்கே விஸ்கி குடித்துக் கொண்டிருந்தது. அவர்களிடம் போய்ப் புன்னகையைக் காட்டிக் கொஞ்சம் விஸ்கி வாங்கி டம்ளரில் ஊற்றினேன்.

சேத்ஜியிடம் கொடுத்தேன். வற்புறுத்திக் குடிக்க வைத்தேன்.

குடித்தபின் அவர் அழைப்பு விடுத்தார். “சாப்பிட்டுவிட்டு வருகிறேன் சேத்ஜி!” என்றேன். வெளியே போய் ஐந்து நிமிடம் நின்றுவிட்டுத் திரும்பி வந்தேன். “இன்னும் சாப்பாடு ரெடியாகவில்லை. பத்து நிமிடம் ஆகும்” என்றேன்.

இரண்டாம் தடவை ஓடி மீண்டும் டம்ளரில் பீர் கொண்டு வந்தேன். மீண்டும் வற்புறுத்திக் குடிக்க வைத்தேன். அடுத்த ஐந்து நிமிடத்தில் ஆள் அவுட்! கையை விரித்துக் கண்ணை மூடிவிட்டார்.

எனக்கு ஒரே நிம்மதி!

கீழே துணியை விரித்துச் சிறிது நேரம் படுத்துக் கொண்டேன். தூங்கலாம் என்று நினைவு! ஆனால் காலடி ஓசை கேட்டது. எழுந்து கதவைத் திறந்து பார்த்தேன். தயாவை அழைத்துக் கொண்டு ஒருவன் வந்து கொண்டிருந்தான். அடுத்த அறைக்குள் போவதற்குள் அவளுக்கு ஜாடை காட்டினேன். அவள் உடனே என் அருகில் வந்தாள்.

"விஸ்கி கொடுத்து ஆளை குளோஸ் பண்ணு!" என்றேன்.

"ஆமாம்!" எனக்கும் நிம்மதி. கஷ்டமாக இருக்கிறது. ரெஸ்ட் வேண்டும்" என்றாள் அவள்.

நான் நடித்த நாடகத்தை அடுத்த அறையில் தயா நடித்தாள். அவளுக்காக நானே ஓடிப் போய் பீர், விஸ்கி கலவை களைக் கொண்டு வந்து கொடுத்தேன். அந்த மனுஷன் கொஞ்சம் திடசாலி. நான்காவது டம்ளருக்குப் பிறகுதான் உறங்கினான்.

தயா அறைக் கதவை அடைத்து விட்டு என் அறைக்கு வந்தாள். உள்ளே கதவைத் தாழ் இட்டோம். கீழே உட்கார்ந்தோம்.

தயா மௌனமாக இருந்தாள். முகத்தில் தீவிரமும் கவலையும் தெரிந்தன. முதல் தடவையாகப் பார்த்ததிலிருந்து இப்போது எவ்வளவோ மாறி இருந்தாள். அவளை உள்ளூர ஏதோ வாட்டிக் கொண்டிருந்தது என்று நினைத்தேன்.

"தயா! நீ ரொம்ப மாறிவிட்டாய்" என்றேன்.

"இருக்கலாம் கமலா!" என்றாள் அவள். "மேல் மாடியில் இருப்பது ஒரு நரகம். அங்கே எனக்குச் சிநேகிதிகளே கிடையாது! அந்தப் பெண்கள் எல்லோரும் சரியான விலை மாதர்கள். மானம், மரியாதை, கண்ணியம் எதுவும் கிடையாது" என்றாள்.

பிறகு அவளிடம் அவர்கள் நடந்து கொண்ட விதங்களைக் கூறினாள். இன்பத்தை நாடித் தங்களுக்குள் அவர்கள் நடத்திக் கொள்ளும் கேளிக்கைகளையும் கூறினாள். அதைக் கேட்டபோது பேரதிர்ச்சி அடைந்தேன்.

"கமலா! காலம் செல்லச் செல்ல வாழ்க்கையின் அதல பாதாளங்கள் தெரிந்து கொண்டே போகின்றன. இங்கே வந்த பிறகு இந்த வாழ்க்கை கேவலமாகத் தோன்றியது. ஆனால், இந்தக் கேவலத்துக்குள்ளும் கேவலங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து கொண்டேன். ஒவ்வொருவர் மனங்களில் எப்படிப்பட்ட விபரீத ஆசைகள் மண்டிக் கிடக்கின்றன!" என்றாள்.

சிறிது நேரம் அவள் மௌனமாக இருந்தாள். பிறகு ஆரம்பித்தாள்.

"இரண்டு நாளாக ஒரு கவலை! உன்னிடம் சொல்ல வில்லை. இன்று என் திருமணம் நடந்து மூன்றாவது ஆண்டு தினம். முதல் ஆண்டு தினத்தை அவருடன் கொண்டாடினேன். அது இப்போது நினைவுக்கு வருகிறது. எவ்வளவோ தடுத்துப் பார்த்தும் துக்கம்தான் அதிகரிக்கிறது!" என்றாள்.

"நீ எப்படி இங்கே அகப்பட்டாய்?" என்றேன்.

"நானும் ஏமாந்தேன்!"

"எப்படி?"

"நானும் என் கணவரும் விஜயவாடாவில் வாழ்ந்தோம். காதலித்து நாங்கள் மணந்து கொண்டவர்கள். எங்கள் கல்யாணத்திற்கு என் வீட்டார் சம்மதிக்கவில்லை. சொந்தத்தில் ஒரு பணக்கார வரனை எனக்குத் தீர்மானித்திருந்தார்கள். நான் விடாப்பிடியாக இவரைத்தான் மணம் செய்து கொள்வேன் என்று சொன்னேன். வீட்டில் இதனால் சண்டை!

கடைசியில் எங்கள் திருமணம் நடந்தது. என் தந்தையும் தாயாரும் வரவில்லை. மாமன்மார்கள்தான் நடத்தி வைத் தார்கள்.

நான் அவருடன் விஜயவாடாவுக்குக் குடித்தனம் வந்தேன். அவருக்கு ஒரு புகையிலை ஏற்றுமதி நிறுவனத்தில் வேலை. சொற்பச் சம்பளந்தான். கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் வாழ்ந்தோம்.

எங்கள் திருமணம் நடந்து முதல் ஆண்டு விழா வந்தது. என் பெற்றோர்களுக்கு நான் உருக்கமாகக் கடிதம் எழுதினேன். நடந்ததை மன்னித்து என்னை ஆசீர்வதிக்க வருவார்கள் என்று எதிர்பார்த்தேன்.

அவர்கள் வரவில்லை. என் அப்பா கேலி செய்யும் சுபாவம் உள்ளவர். ஒரு லாரி சர்வீஸ் வழியாக அரிசி, பருப்பு முதலியவற்றை அனுப்பி வைத்து, ஒரு கடிதத்தில் மொட்டை யாக, "நாங்கள் வந்தால் உனக்கு உபயோகப்பட மாட்டோம் இவைகள் தான் உனக்கு அதிக உபயோகப்படும்" என்று குத்தலாக எழுதியிருந்தார்.

நான் அவைகளைத் திருப்ப வேண்டாம் என்று அபிப் பிராயப்பட்டேன். ஆனால் என் கணவர் அவைகளைத் திருப்பி அனுப்பி விட்டார்.

நண்பர்களுடன் நாங்கள் ஆண்டு விழாவைக் கொண் டாடினோம்.

வந்தவர்களில் சீதாராம் என்பவன் ஒருவன். அவனது பதினாலு வயதுத் தங்கை ரோஜா என்பவளுடன் அவன் வந்திருந்தான். என் கணவரை பஸ் நிலையத்தில் சந்தித்து எப்படியோ அவருடன் பழக்கத்தை ஏற்படுத்தி கொண்டு இருந்தான்.

ஆண்டு விழாவுக்குப் பிறகு ஒரு மாதம் போயிருக்கும். ஒரு நாள் காலையில் வந்து, "பக்கத்து ஊரில் ரோஜா அவளது அம்மாவைப் பார்த்து விட்டு வரவேண்டும். துணை போவதற்கு ஆள் இல்லை. உங்கள் மிஸ்ஸைக் கொஞ்சம் அவளுடன் அனுப்ப முடியுமா? அடுத்த பஸ்ஸில் இரண்டு பேரும் திரும்பி விடலாம்" என்று சொன்னான்.

என் கணவர் ஒத்துக் கொண்டார். காலையில் போய்விட்டு மத்தியானம் திரும்பிவிடலாம் என்று எண்ணினோம். பஸ்ஸில் என்னையும் ரோஜாவையும் ஏற்றி அனுப்பினார்.

பஸ் அந்த ஊர் போவதற்கு முன் ஒரு சிறிய ஊரில் நின்றது.

அந்த இடத்தில் ரோஜா இறங்கினாள்.

"ஏன் இறங்குகிறாய்?" என்று கேட்டேன். "இங்கே தான் வீடு இருக்கிறது" என்றாள்.

இறங்கினோம். பஸ் புறப்பட்டது.

சுற்றிவரப் பார்த்தேன். ஒரே நிர்மானுஷ்யமாக இருந்தது. யாரும் தென்படவில்லை. தூரத்தில் சில வீடுகள் தெரிந்தன. எனக்குச் சந்தேகம் வந்தது.

"வா அக்கா!" என்று சொல்லிக் கொண்டே ரோஜா நடந்தாள். நானும் நடந்தேன்.

பத்தடி தூரம் போனதும், "ரோஜா! எங்கே போகிறாய்?" என்றேன்.

"இதோ, இந்தப் பக்கம்தான்" என்றாள்.

அவள் காட்டிய இடத்தில் ஒரு கச்சா சாலை திரும்பிக் கொண்டிருந்தது. அங்கே நான் பார்ப்பதற்கும், அந்தத் திருப்பத்தி லிருந்து ஒரு பிரைவேட் கார் வருவதற்கும் சரியாக இருந்தது.

காரைப் பார்த்ததும், "அதோ எங்க மாமா வரார்!" என்று குதித்தாள் ரோஜா.

அந்தக் கார் எங்கள் பக்கத்தில் வந்து நின்றது. டிரைவர் ஒருவரும் பின்புறத்தில் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் கண்ணியமானவர்கள்போல் தோன்றினார்கள். ரோஜா அவர்களிடம் குதித்துக்கொண்டு போனாள். அவர்கள் மகிழ்ச்சியுடன் அவளை வரவேற்றார்கள். "உனக்காகத்தான் அவசரமாக வந்து கொண்டிருந்தோம். ஆனால் கொஞ்சம் லேட்டாகி விட்டது" என்றார்கள்.

பிறகு அவளையும் என்னையும் பின் சீட்டில் ஏற்றிக் கொண்டார்கள்.

கார் புறப்பட்டது. சிறிது தூரம் போனதும் என் மனம் உதைத்தது. அந்த மனிதர்களைத் திரும்பத் திரும்பப் பார்த்தேன்.

அதற்குள் கார் ஒரு புதர்பக்கம் திரும்பியது. அது ஒரு சாலை அல்ல என்று தெரிந்ததும், "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்குள் காரின் வேகம் குறைந்து விட்டதால் கதவைத் திறந்து வெளியே இறங்க முயன்றேன்.

சட்டென்று ஒரு ஆண் என் கையைப் பிடித்தான். உடனே "ஐயோ!" என்று கத்தினேன். அதற்குள் ரோஜா இடம் மாறி விட்டாள். மற்றொருவன் காரின் மறுபுறத்தில் இறங்கி என் பக்கக் கதவைத் திறந்து உள்ளே ஏறினான். சட்டென்று என் வாய்க்குள் துணியை அடைத்தான்.

நான் ரோஜாவைப் பார்த்தேன். அவள் ஒன்றும் தெரியாதது போல் காரின் முன் சீட்டில் போய் உட்கார்ந்தாள்.

ஆத்திரத்தில் என் கையால் அவளை ஒரு தட்டுத் தட்டினேன். ஒரு குரூரச் சிரிப்புடன் அவள் தலை குனிந்து கொண்டாள். அவளது வயசுக்கு அது பொருந்தாததாக இருந்தது.

மறுகணம் என்னைப் பின்சீட்டில் அழுத்திப் படுக்க வைத்தார்கள். டிரைவரும் சேர்ந்து என்னை திமிறாமல் பிடித்துக் கொள்ள, ஒரு டம்ளரில் நீர் ஊற்றி அதில் ஏதோ ஒரு மாத்திரையைக் கரைத்து என் வாயருகே கொண்டு வந்தார்கள். என் வாயிலிருந்த துணியை ஒருவன் சட்டென்று எடுக்க, அதே கணத்தில் ஒருவன் ஒரு மரக்கட்டையை என் வாயில் திணித்து வைத்தான்.

என்னால் கத்த முடியவில்லை.

அதே நிலையில் டம்ளரில் உள்ள நீரை ஒரு புனல் மூலம் என் வாயில் விழச் செய்தார்கள்.

நான் கொப்பளிக்க முயன்றேன். தொண்டையில் நீரை நிறுத்த முயன்றேன். அதுவும் முடியவில்லை. நீரை விழுங்க வேண்டி வந்தது.

நீர் முழுதும் வயிற்றுக்குள் சென்றது. சிறிது நேரத்தில் கண் இருண்டது. நினைவு தப்பியது.

அன்று முழுதும் நான் நினைவில் இல்லை. எங்கு இருந்தேன் என்றும் தெரியவில்லை.

மறுநாள் நினைவு வந்தபோது எல்லாம் கலக்கமாக இருந்தது. ஒரு பிரைவேட் காரில் நான் பிரயாணம் செய்து கொண்டிருப்பது மட்டும் தெரிந்தது.

போகும் வழியில் இரண்டு இடங்களில் தங்கினோம் என்று நினைக்கிறேன். இரண்டு நாட்கள் தொடர்ந்து பிராயாணம் செய்தோம் என்றும் நினைக்கிறேன். எனக்கு மீண்டும் மீண்டும் மயக்க மருந்து கொடுத்துக் கொண்டிருந்த தால் என் அறிவு மழுங்கியே இருந்தது.

கடைசியில் டில்லி வந்ததும் எங்கள் பிரயாணம் நின்று விட்டது. இந்த வீட்டில் என்னை விட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

இங்கே என்னை இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்றிருக் கிறார்கள். என் அழகுதான் எனக்குச் சத்துருவாகி விட்டது. என் அழகுக்கு அதிக விலை கிடைக்கும் என்று நினைத்து என்னைக் கண்ணி வைத்துப் பிடித்திருக்கிறார்கள். சீதாராம் என்ற அந்த அயோக்கியனும் அந்த மோசக்காரப் பெண் ரோஜாவும் வேண்டுமென்றே எங்களுடன் பழகி, நல்லவர்கள் போல் ஒரு பாவனையை ஏற்படச் செய்து, நயவஞ்சகமாக என்னைக் கடத்தி வந்து விட்டார்கள்.

இங்கே வந்த பிறகு என் கதை எல்லோரது கதையையும் போலாகி விட்டது. ஆனால் இவர்கள் விருப்பங்களுக்கு நான் பல நாட்கள் இசையவில்லை. அதற்காக சரியான அடியும் உதையும் வாங்கினேன். என் கையில் சூடு வேறு போட்டார்கள். கடைசியில் நானும் இந்த வாழ்க்கைக்குப் பலியாக வேண்டி வந்தது.

ரொம்ப நாள்வரை அழுது கொண்டு இருந்தேன். என் கணவரை நினைத்து மிகவும் வருத்தப் பட்டேன்.

நான் படித்தவள். ஆகவே விரைவில் தெளிய ஆரம் பித்தேன். அழுவதை விட இங்கிருந்து தப்பித்துச் செல்ல வழி வகுப்பதுதான் நான் செய்ய வேண்டியது என்று நினைத்தேன். இந்த வீட்டை ஆராய ஆரம்பித்தேன்.

இங்கே உள்ள பெண்களில் பாதிப் பேர் என்னைப் போலவே பிடிபட்டு வந்தவர்கள்.

இந்த நாகரிக யுகத்தில், ஒரு சுதந்திர நாட்டின் தலைநகரில் இப்படி ஒரு அடிமை வாழ்வு நடக்கிறதே என்றும், இதைத் தடுக்க யாரும் நடவடிக்கை எடுக்கவில்லையே என்றும் வருத்தப் பட்டேன்.

இந்த வீட்டிலிருந்து நான் விடுதலை அடைய வேண்டும்; மற்றவர்களுக்கும் விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று உறுதி பூண்டிருக்கிறேன். அதற்கான வழிகளைத் தேடி வருகிறேன், கமலா!" - என்று சொல்லி முடித்தாள் தயா.

பிறகு தயா என் கதையைக் கேட்டாள். சொன்னேன். என் பழைய சினேகிதி சோபாவின் கதையைக் கேட்கும் போது அவளுக்கு நெஞ்சை அடைத்தது. ஜுவனைல் கோர்ட், ரெஸ்க்யூ ஹோம் போன்றவற்றை அவள் கேள்விப்பட்டதே இல்லை. ஹோமில் பெண்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைக் கேட்டு மிகவும் வேதனைப்பட்டாள்.

எங்கள் பேச்சு நடக்கும்போது இடையிடையே தயா கதவைத் திறந்து அடிக்கடி வெளியே பார்த்துக் கொண் டிருந்தாள்.

விஷயம் என்ன என்று கேட்டேன். தயா பதில் சொன்னாள். "எல்லோரும் குடி போதையில் இருந்தபோது, கீர்த்தி அடிக்கடி எனக்கு ஜாடை காட்டினாள். அவள் என்ன சொல்கிறாள் என்பது புரியவில்லை. இருந்தாலும் அவளையே கவனித்துக் கொண்டிருந்தேன்.

"பெண்கள் எழுந்து ஆடியபோது கீர்த்தி அவர்கள் பின்னால் மெதுவாக நழுவி மாடிப் படியின் ஓரத்தில் போய் நின்றாள். அடுத்த தடவை நான் பார்த்தபோது அவளை அங்கே காணவில்லை.

"அவள் கீழே போயிருக்க வேண்டும்! முடிந்தால் தப்பிக்க முயற்சி செய்திருக்க வேண்டும்! அவள் மீண்டும் வந்து விட்டாளா என்று பார்க்கத்தான் அடிக்கடி எழுந்து வெளியே பார்க்கிறேன்" என்றாள்.

நாங்கள் பேசி ஓய்வதற்குள் ஒரு மணி ஆகி இருக்கும். அப்போது அடுத்த அறை ஆசாமி முனகும் சப்தம் கேட்டது. நாங்கள் திடுக்கிட்டோம்.

அவன் எழுந்து விட்டான். எழுந்தவன் அறைக்குள் தயாவைக் காணாமல் அவளைக் கூப்பிட ஆரம்பித்தான்.

"அடப் பாவி! எழுந்து விட்டானே!" என்று தயா ஓடினாள். போகும் போது "கமலா! கீர்த்தியைக் கவனி!" என்றாள்.

## 23. பலமும் பலவீனமும்

அவள் போய் அடுத்த அறைக் கதவைச் சாத்திக்கொண்ட பிறகு, நான் இரண்டு முறை வெளியே எட்டிப் பார்த்தேன். கீர்த்தியைக் காணவில்லை.

மூன்றாவது தடவை ஹால் வரை போனேன். நிசப்தமாக இருந்தது. தலைமாடு கால்மாடாகப் பெண்கள் படுத்துக் கிடந்தார்கள். ஒரு மூலையில் சிந்துவும் இன்னொரு மூலையில் நிர்மலாவும் கிடந்தார்கள். குழந்தைக்காரி கைகளை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தாள்.

அறைக்குத் திரும்பினேன். உள்ளே ஆசாமி குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். அடுத்த அறையில் தயா தனது ஆசாமியிடம் எதற்கோ கோபித்துக் கொண்டிருந்தாள். இரண்டு பேருக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது.

நான் நிலையில்லாமல் தவித்தேன். கீர்த்தி ஒரு வேளை தப்பித்துப் போயிருப்பாளோ என்று நினைத்தேன். எனக்கே பரபரப்பு ஏற்பட்டது. இரவுக்குள் அந்த விஷயத்தை நிச்சயப் படுத்திக் கொண்டால்தான் தூக்கம் வரும் என்று தோன்றியது.

எனவே மீண்டும் ஹாலுக்குப் போனேன். தூங்கும் பெண் களிடையே நுனிக்காலை மட்டும் பதிந்து நடந்து ஹாலைக் கடந்தேன்.

திரும்பிப் பார்த்துக் கொண்டே போனபோது, ஒரு பீர் பாட்டிலைக் கால் தள்ளிவிட்டது. அது மாடிப் படிகளில் உருண்டு டங்டங் என்ற ஓசையோடு ஓடியது. என் வயிறு நெஞ்சுக்குள் ஏறிவிட்டது. நாக்கைக் கடித்துக் கொண்டு கீழே சட்டென்று படுத்துக் கண்ணை மூடி விட்டேன்.

சிறிது நேரம் வரை கண்ணைத் திறக்கவில்லை. பிறகு யாரும் சத்தம் கேட்டு எழுந்திருக்கவில்லை என்று தெரிந்து விட்டது. மனத்தில் பெரிய நிம்மதி ஏற்பட்டது.

கண்ணைத் திறந்து பார்த்தேன். எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். மெள்ள எழுந்தேன்; மாடிப் படிப் பக்கம் போனேன். நுனிக் காலில் மெதுவாக இறங்க ஆரம்பித்தேன்.

இருட்டில் மீண்டும் பாட்டில்மீது கால் வைத்து விடக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு படியிலும் கவனமாகக் காலை வைத்தேன்.

மனம் திக்திக்கென்று அடித்தது கீழே போகப் போக ஒரே நிசப்தம்! யாரும் விழித்திருப்பதாகத் தெரியவில்லை. கடைசியில் இறங்கித் தரையில் காலை வைத்தேன். சுற்றி வரக் கவனமாகப் பார்த்தேன். இடது புறத்தில் இரண்டு குறட்டைகள் கேட்டுக் கொண்டிருந்தன. இருவரும் வேலைக்காரர்கள் என்று எனக்குத் தெரிந்தது. அவர்களும் குடித்திருக்க வேண்டும்.

ஓசையில்லாமல் நடந்தேன். மேலே வெண்டிலேட்டர் வழியாக வெளிச்சம் உள்ளே லேசாக விழுந்திருந்தது.

அந்த அறையைத் தாண்டிய பிறகு அப்படியே சில்லிட்டு நின்றேன்.

எனக்கு ஐந்தடி முன்னால் அந்த வீட்டின் வாசல் கதவு தெரிந்தது.

மார்பு படபடத்தது. அதைப் பார்த்துக் கொண்டே நின்றேன். அதற்கு இரண்டு தாழ்ப்பாள்கள் உண்டு. அவைகளைத் திறந்தால் வெளியில் போய் விடலாம். விடுதலை.

அந்தக் குளிரான இரவிலும் வியர்வை வழிந்தது. கதவைத் திறந்து வெளியே ஓடி விடலாம் என்று நினைத்தேன். அந்த நினைப்போ என் மூச்சை அடைத்தது. கிடுகிடு என்று கையும் காலும் ஆடின.

ஆனால் என் நினைப்பின் அடியில் ஒரு பயமும் குறு குறுத்துக் கொண்டிருந்தது. கூண்டைத் திறந்து வைத்த பிறகும் பறவை ஒரு பிரமையில் ஓடாமல் இருப்பது போல் எனக்கும் ஒரு திக்பிரமை!

அப்படியே பத்து நிமிடம் நின்றேன். எதுவும் செய்ய வில்லை. சிறிது சிறிதாக என் கோழைத்தனத்தை நானே முறியடித்துக் கொண்டிருந்தேன். இருப்பினும் என் சஞ்சலம் நீங்கவில்லை.

என்னை நானே முன்னே தள்ளிக்கொண்டு ஒவ்வொரு அடியாக முன்னால் போனேன். என் மன நிலையை விளக்குவது கடினம். என் உள் போராட்டத்தின் குடைச்சலில் நானே வீல் என்று கத்தி விடுவேனோ என்று நினைத்தேன்.

கதவை அடைத்தேன். என் மூச்சின் இரைச்சல் வெளியே கேட்டது. இருந்தும் மனதில் தைரியத்தைத் தூண்டி விட்டுக் கொண்டேன்.

கடைசியில் கதவைத் தொட்டேன், மெதுவாக விரல் களைப் பரப்பி அதன் தாழ்ப்பாள் இருக்கும் இடங்களைத் தேடினேன்.

ஒரு தாழ்ப்பாளை நெம்பினேன். அது திறந்தது. அடுத்ததில் கை வைத்தேன். திடீரென்று ஒரு நினைவு. தயாவையும் தேடினேன். அழைத்தால் என்ன?

யோசிக்கக்கூட இல்லை. விரைவாகப் படிகளில் ஏறினேன். ஒரே பரபரப்பு.

மேலே நான்காவது படிக்கட்டில் பீர் பாட்டில் இருப்பது மறந்து விட்டது. அதன்மீது காலை வைத்தேன். அது உருண்டது. நானும் வழுக்கினேன். டங்டங் என்ற பெருத்த ஓசையோடு அடுத்த நாலுபடிகளில் அது குதித்து ஓடியது.

நான் இரண்டு படிகளில் வழுக்கினேன். கை மூட்டு களிலும் முதுகிலும் சிராய்ப்பு!

மனம் திக்கென்று அடித்தது. அப்படியே படியில் பேசாமல் உட்கார்ந்தேன். மூச்சைக்கூட அடக்கிக் கொண்டேன்.

நல்லவேளை! யாரும் எழுந்திருக்கவில்லை. இனியும் தாமதிக்கக் கூடாது என்று எழுந்தேன். படிகளில் ஏறி ஹாலைக் கடந்து அறையின் பக்கம் போனேன்.

தயாவின் அறையைத் தட்டினேன். சத்தமில்லை. 'தயா, தயா' என்று மெதுவாக இரைந்தேன். 'ஹூம்' என்று அவள் குரல் கேட்டது. தூக்கமா முனகலா என்று தெரியவில்லை.

"தயா! அவசரம்! நான் தப்பித்துப் போகிறேன். நீயும் வா!" என்று சற்று உயர்த்திக் கூறினேன். (தெலுங்கில்)

"ஏய்! யாரு இங்கே! தொந்தரவு பண்ணாமல் போக மாட்டே?" என்று இந்தியில் கத்தினான் உள்ளே இருந்த ஆசாமி.

நடுங்கி விட்டேன். அவன் குரல் ஹால்வரைக்கும் இடியாகக் கேட்டது. யாராவது எழுந்து விடுவார்களோ என்று மீண்டும் பயம்! சிறிது நேரம் திகைத்து நின்றேன்.

"தயா! நான் வருகிறேன். தப்பித்துப் போகிறேன்" என்று மீண்டும் கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

ஹாலைக் கடந்தேன். பீர் பாட்டிலை நினைவு வைத்துக் கொண்டேன். படிகளில் இறங்கினேன்.

கீழே தரையை அடைந்தேன். சில கணங்கள் தாமதித்தேன். பிறகு மனம் திக் திக் என்று அடித்துக் கொள்ள வாசல் கதவை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தேன்.

மூன்றாவது அடி!

என் தோளில் ஒரு கை விழுந்தது. 'ஆ!' என்னை அறியாமல் கூவிவிட்டேன்.

என் வாய் பொத்தப்பட்டது.

என்னைப் பிடித்தவர் என் முன்னால் வந்தார். முதலில் வேலைக்காரன்தான் என்று நினைத்தேன். அப்புறம் பார்த்தால் சிந்துவின் கணவர் அவர்.

''வா'' என்று இழுத்தார் பயந்து விட்டேன். இன்று தொலைந்தேன். வீட்டுக்காரியிடம் சொல்லிச் செம்மையாக உதை வாங்கித் தரபோகிறார் என்று நினைத்தேன்.

அறைக்கு இழுத்துப் போனார்.

"எங்கே புறப்பட்டாய்?" என்றார்.

"மாடியில் ஒரே பீர் நெடி! என்னால் தூங்க முடிய வில்லை. கீழே வந்தேன்" என்றேன்.

"அப்படியானால் வாசற்கதவுப் பக்கம் ஏன் போனாய்?" என்றார்.

"போகவில்லையே! என்னவோ சத்தம் கேட்டது. பார்த்தேன்" என்றேன்.

உடனே அவர் என்னை அணைத்தார். "மரியாதையாய் நான் சொல்வதைக் கேட்டுவிடு. இல்லாவிட்டால் நாளை இல்லாததும் பொல்லாததும் சொல்லி சிந்துவிடம் பிடித்துக் கொடுப்பேன்" என்றார்.

அவர் சொன்னதை ஒத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. என்னைப் படுக்கைக்கு அழைத்துப் போனார். இரவு அவருடன் அங்கே தங்கவேண்டி வந்தது.

சிந்துவின் கணவருக்கும் எங்கள் மீதுள்ள சபலத்தைப் பற்றி ஏற்கெனவே கூறி இருந்தேன். சிந்து இவரை அடக்கி வைத்திருந்தாள். மாடிப் பக்கம் அவரை அண்டவிட மாட்டாள். தப்பித் தவறி யாராவது பெண் கீழே வந்தால் கூட அவர் பக்கம் அவளைப் போகவிடாமல் கண்காணிப்பாள்.

அன்று துரதிர்ஷ்டம்! சிந்துவின் கணவரிடம் நான் வசமாக அகப்பட்டுக் கொண்டேன்.

படியில் ஏறும்போது பீர் பாட்டில் இரண்டாவது தடவையாக உருண்டதே அப்போதுதான் அவர் தூக்கம் கலைந்து எழுந்திருக்கிறார். அவரிடம் பிறகு விசாரித்ததில் இது தெரிய வந்தது.

காலையிலும் அவர் என்னை விடுவதாயில்லை. பகல் நான்கு மணிக்குத்தான் நான் மாடிக்குப் போக வேண்டும் என்றும், அதுவரை அந்த அறையிலேயே தங்கவேண்டும் என்றும், கூறிவிட்டார். அறைப்பக்கம் யாராவது வந்தால் நான் உடனே கட்டிலுக்குக் கீழே போய்விட வேண்டும் என்றும் கூறினார்.

'கஷ்டமே!' என்று நினைத்து இருக்க வேண்டி வந்தது. இரண்டே இரண்டு தடவை மட்டும் சில நிமிடங்களுக்கு அவர் வெளியே போய் வந்தார். மற்ற நேரமெல்லாம் கதவை அடைத்து விட்டு என்னோடு கழித்தார்.

மாலை மூன்று மணிக்கு சிந்து வெளியே பால் வாங்கப் போன போது, அந்த அறையிலிருந்து என்னைத் தப்பிப் போக அவர் அனுமதித்தார்.

மேலே போனதும் என் கண்களில் முதலில் பட்டவள் கீர்த்திதான். ஆச்சரியத்துடன், "நீ தப்பித்துப் போகவில்லையா!" என்றேன்.

"இல்லை. அந்த வீட்டுக்காரி புருஷன் கீழே இருந்தார். மரியாதையாக மாடிக்கு வந்துவிட்டேன். ஆனால் ஹாலில் தூங்காமல் அறையில் தூங்கினேன். அதனால் தான் உங்களுக்கு நான் அகப்படவில்லை" என்றாள்.

பிறகு எனக்கு நடந்ததை முழுதுமாக விவரித்தேன்.

அவள் வருத்தப்பட்டாள். ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இருவரும் இழந்துவிட்டோம் என்று நினைத்தோம்.

தயாவிடம் இதைச் சொன்னபோது, அவளுக்கு ஒரே வருத்தம்! இரவில் நான் கூப்பிட்ட வேளையில் அவள் தன்னை யறியாமல் உறங்கிவிட்டாள் என்றும், விழித்திருந்தால் எப்படியும் ஒருவராவது தப்பித்திருக்கலாம் என்றும் கூறினாள். இனி இது போன்ற சந்தர்ப்பங்களைத் தவறவிடக்கூடா தென்றாள்.

## 24. இரு இளம் மலர்கள்

**கீ**ழ்ப்பகுதி அறையில் இரட்டைப் பெண்கள் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள் என்று ஏற்கெனவே கூறியிருந்தேன். மூன்று மாதங்களில் அவர்கள் அங்கிருந்து அகற்றப் பட்டார்கள். எங்கே போனார்கள் என்று தெரியாது.

அந்தக் கீழ்ப்பகுதி அறைக்கு இரண்டு புதுப்பெண்கள் கொண்டு வரப்பட்டார்கள். இருவரும் உயர்நிலைப்பள்ளியில் படிப்பவர்கள். ஒருத்தி கான்வெண்ட் மாணவி.

இவர்கள் இருவரும் தந்திரமாகப் பிடிக்கப்பட்டார்கள் என்றும், டில்லியில் இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து ஆகாரமும் தண்ணீரும் உட்கொள்ளாமல் அப்படியே சத்தியாக்கிரகம் செய்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டேன். இந்தப் பெண்களை சிந்துதான் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வீதம் வாங்கியிருந்தாள்.

பகலில் அவர்கள் இருவரும் படுகிற அடிகளும் எழுப்புகிற அழுகைக் குரல்களும் மாடிவரை கேட்டுக் கொண் டிருந்தன. எங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அதுவரை யாரும் அவ்வளவு அடிகள் வாங்கினதில்லை.

அந்தப் பெண்கள் இருவரையும் பார்க்கவேண்டும் போல் இருந்தது. ஆனால் முடியவில்லை.

ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்களில் ஒருத்தியைப் பிரித்து மேல் மாடிக்குக் கொண்டு போய்விட்டார்கள். வாங்கிய அடிகளைப் பொறுக்க முடியாமல் தானாகவே அவள் இந்தத் தொழிலுக்கு இசைந்து விட்டாள்.

மற்றொரு பெண் மேலும் இரண்டு நாட்கள் அடி வாங்கிக் கொண்டிருந்தாள். மூன்றாம் நாள் திடீரென்று கீழ்ப் பகுதி நிசப்தமாகிவிட்டது. எந்த சத்தமும் கேட்கவில்லை.

என்ன நடந்திருக்கும் என்று அறிய ஆவலாக இருந்தேன். அவளும் இணங்கி இருப்பாள் என்று நினைத்தேன்.

நான்காம் நாள் மாலை எனக்கு சிந்துவிடமிருந்து அழைப்பு வந்தது. சால்வார் கமீசு போட்டு என்னைத் தயாரா யிருக்கும்படி கூறினாள். தயாரானேன்.

இரவு ஒன்பது மணி இருக்கும். என்னை அழைத்துப் போனார்கள். கீழே மூன்று ஆட்டோக்கள் தயாராயிருந்தன. தபலா, ஆர்மோனியங்களுடன் பெண்கள் ஏறினார்கள். நான், சிந்து, இன்னொரு பெண் மூவரும் ஒரு ஆட்டோவில் ஏறினோம். ஆட்டோ புறப்பட்டது.

போகிற வழியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே போனேன். தப்பித்து ஓடினால் ஜி. பி. ரோடில் எந்தப் பக்கம் ஓடலாம் என்பதை யோசித்துக் கொண்டே போனேன்.

இவ்வளவு காலம் உள்ளே அடைபட்டுக் கிடந்த பிறகு இப்போது வீதிகளில் சுயேச்சையாக நடந்து போகும் ஆண் களையும் பெண்களையும் பார்க்கும்போது ஆச்சரியமாக இருந்தது. ஒரு கனவு உலகம் போல் இருந்தது.

கடைசியாக வீட்டை அடைந்தோம். என்னை முதன் முதலில் அழைத்துப் போனார்களே அதே வீடுதான் அது. உள்ளே போனதும் எனக்கு விஷயம் புரிந்துவிட்டது.

அந்த வீட்டுக்காருக்குப் புதுப் பெண்ணை முதல் தடவை யாக அர்ப்பணிக்கப் போகிறார்கள்.

எல்லோரும் உள்ளே போய் உட்கார்ந்திருந்தோம். அடுத்த அறையில் புதுப் பெண்ணுக்குக் கடைசி மேக்-அப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

மெதுவாக எட்டிப் பார்த்தேன். என்னைப் பார்த்ததும் சிந்து உள்ளே அழைத்தாள்.

"கமலா! இந்தப் பெண் இன்னும் முரண்டு பிடிக்கிறாள்." நீ உன் பாஷையில் பேசு. இவள் தெற்கத்திப் பெண்தான் என்றாள்.

முதல் தடவையாக அந்தப் பெண்ணைப் பார்த்தேன். மனம் கலங்கியது.

மிகவும் சின்னப் பெண் அவள். பதினைந்து வயது இருக்கும். முகத்தில் ஒரு பிஞ்சு இளமை தெரிந்தது. அழுது அழுது முகம் வீங்கி இருந்தது. கழுத்தின் ஓரத்திலும் கைகளிலும் சவுக்கடிப்பட்ட தடயங்கள் தெரிந்தன. திருதிருவென்று விழித்துக்கொண்டு பயப்பிராந்தியுடன் இருந்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். மேக்-அப்பை முடித்துவிட்டு மற்றவர்கள் போய் விட்டார்கள். பாட்டு ஆரம்பித்ததும் அவளை அழைத்து வரும்படி என்னிடம் கூறி விட்டு சிந்துவும் வெளியே போனாள்.

நான் அந்தப் பெண்ணின் முகத்தை நிமிர்த்தினேன். அவள் பார்வையே நடுங்கியது.

"உன் பேர் என்னம்மா?" என்று கன்னடத்தில் கேட்டேன். திடுக்கிட்டு அவள் பார்த்தாள். என் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"நீங்கள் கன்னடக்காரியா, நிஜந்தானா" என்று கேட்டாள்.

"நான் தென்னாட்டுக்காரி!" என்றேன்.

"உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் பேசுகிற பேச்சு எனக்குத் தெரியவில்லை. என்னை அநியாய மாய்ப் பிடித்து இங்கே கொண்டுவந்து விட்டார்கள். இது என்ன இடம்?" என்றாள்.

மளமளவென்று அவள் அழுவதைப் பார்த்ததும் எனக்குத் துக்கம் பொங்கியது.

"அழாதேம்மா! உன் பெயர் என்ன சொல்லு! என்றேன்.

"இந்திராணி"

"இந்திராணி! நான் உன் சிநேகிதி. நானும் இங்கே பலவந்த மாகக் கொண்டு வரப்பட்டவள். நான் சொல்வதைக் கேள். இவர்கள் சொல்வதற்கெல்லாம் இணங்கி விடு! வீணாக எதிர்க் காதே. அதனால் பிரயோசனமில்லை. அநாவசியமாக அடி படுவாய்!" என்றேன்.

அவள் என்னை சந்தேகத்தோடு பார்த்தாள்.

"சந்தேகப்படாதே! நான் உன் சிநேகிதி. உன்னைப் போலவே தப்பி ஓட நினைப்பவள். என்னை நம்பு!" என்றேன்.

அதற்குள் பாட்டு ஆரம்பித்து விட்டது "கமலா! கமலா! இந்திராவை அழைத்து வா!" என்று சிந்துவின் கூச்சல்கள் எழுந்தன.

"ம் கிளம்பு என்றேன்."

அவள் என் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

"அழாதே! பிரயோசனமில்லை. அவர்கள் சொல்கிறபடி நட. நமக்கு விடிவு காலம் ஒரு நாள் வரும்" என்றேன்.

சிந்து உள்ளே எட்டிப் பார்த்தாள். நான் பரபரவென்று இந்திராணியின் கண்களைத் துடைத்துவிட்டு அவளை அழைத்துப் போனேன்.

ஆரம்பத்தில் எனக்கு நடந்தது போலவே இந்திராணிக்கும் அன்று இரவு நடந்தது. ஆனால் ஒரு வித்தியாசம். அடிகள் வாங்கிய பிறகு அன்று நான் என் எதிர்ப்புகளை விட்டு விட வேண்டி வந்தது. ஆனால் இந்திராணி கடைசி வரை எதிர்ப்பை விடவில்லை. எத்தனை அடிகள் பட்டாலும் அவள் இணங் காமல் போகவே அவளுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது.

முடிவில் அந்த மயக்க நிலையிலேயே அன்று இரவு அவள் உடல் முதன்முதலாக அசுத்தம் செய்யப்பட்டது.

காலையில் அவளை வீட்டுக்குக் கொண்டு வந்தபோது அவள் வேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள். உடம்பில் சில இடங்களில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. ரத்தம் நிற்காமல் போய், அவள் வேதனையும் அதிகரிக்கவே டாக்டர் அழைத்து வரப்பட்டார். இன்ஜெக்ஷனும் மேல் மருந்துகளும் கொடுக்கப் பட்டன. அவளை அப்படியே கீழ் அறையில் படுக்க வைத் தார்கள்.

முதல் தடவையாகப் பலாத்காரத்தில் கன்னித் தன்மையை இழந்ததினால் ஏற்பட்ட விளைவுகள் அவை என்று தெரிய வந்தது.

இரண்டு வாரங்கள் வரை இந்திராணியை நான் பார்க்க முடியவில்லை. கீழ்ப்பகுதியிலே அவள் இருந்தாள். மூன்றாம்

வாரத்தில் அவளை இரண்டாவது மாடிக்குக் கொண்டு போனார்கள். பலத்த எதிர்ப்புகளைத் தெரிவிக்கும் பெண்களுக்கு அதுதான் டிரெயினிங் பள்ளிக்கூடம்.

மாடிக்கு அவள் வந்த நான்கு தினங்கள் வரை என்னால் அவளைப் பார்க்க முடியவில்லை. ஐந்தாவது தினம் எதேச்சை யாக பாத்ரூமுக்குப் போனபோது மாடியிலிருந்து இறங்கி அவள் அங்கே வந்திருப்பதைப் பார்த்தேன்.

என்னைக் கண்டதும் அவள் புன்னகைகூடப் புரிய வில்லை.

அவளிடம் ஏதோ தயக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேன்.

அவள் உடம்பு நன்றாக இளைத்திருந்தது. இடது தாடை யில் காதுக்குக் கீழ்ப்பகுதியில் ஒரு பிளாஸ்திரி போட்டிருந்தாள்.

"இந்திராணி, பயப்படாதே! நானும் உன்னைச் சேர்ந்தவள் தான்" என்றேன்.

அவள் கோபத்துடன் முகத்தைத் திருப்பினாள். "சீ! நீங்கள் மனுஷ ஜன்மங்களா! பாவிகள்! சண்டாளிகள்! நீ ஒரு கன்னடப் பெண்ணா? உன் மொழி பேசும் ஒரு சகோதரிக்குத் துரோகம் செய்கிறாய்! நீ கெட்டதும் அல்லாமல் என்னையும் கெடும்படி புத்திமதி கூறுகிறாய்" என்றாள்.

நான் வாயடைத்து நின்றேன். ஆரம்பத்தில் நான் தயா மீது சந்தேகப்பட்டதுபோல் இவளும் என்மீது சந்தேகப் படுகிறாள் என்று நினைத்தேன்.

இந்திராணி என்னைச் சிறிதுகூடப் பொருட் படுத்தாமல் விருட்டென்று போய்விட்டாள். எனக்கு அவள்மீது இரக்கம் தான் வந்தது. போகப் போகத் தெளிவு பெறுவாள் என்று நம்பினேன்.

இந்த வீட்டுக்குள் நான் வந்து ஒரு வருடமாகி விட்து. ஒரு டிசம்பர் மாதத்தில் இங்கே வந்தேன். இப்போது மறு டிசம்பர் வந்துவிட்டது.

மாதங்களையோ தேதிகளையோ பார்த்துக் கொள்ள எங்களுக்குக் காலண்டர் எதுவும் கிடையாது. ஆனால் இந்த வீட்டுக்கு முதல் வாரத்தில் வரும் கூட்டத்தைப் பார்த்ததும் மாதம் பிறந்து விட்டது என்று எங்களுக்குத் தெரியும். சிலர்

குறிப்பிட்ட தேதிகளில் கரெக்டாக வருவார்கள். சிலர் குறிப் பிட்ட கிழமைகளில் வருவார்கள். இந்த வாடிக்கைக்காரர்களே எங்கள் காலண்டர்களாக விளங்கினார்கள்.

இவ்வளவு நாள் இங்கே தங்கியதில் எனக்கு இந்தி நன்றாக வந்துவிட்டது. இதனால் நிறைய நன்மைகள் ஏற்பட்டன. என்னுடைய சில அனாவசியப் பீதிகள் குறைந்துவிட்டன. தவிர எல்லோரிடமும் எதையாவது பேசி, மனக் கஷ்டங்களைப் பெரிதும் மறக்க முடிந்தது.

இதில் முக்கியமாக சிநேகிதி ஆனவள் அந்த நேபாலிப் பெண். ஆரம்பத்தில் அவள் என்னுடன் சண்டைக்கு வந்ததை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். அந்தப் பெண் பெயர் கபுலி. என்னுடன் அவள் போகப் போக நன்கு பழகினாள். அவள் வாழ்க்கையைக் கேட்டதும்தான் அவள் என்னுடன் சண்டை போட்டதுகூட ஒரு விதத்தில் நியாயமாகத் தோன்றியது.

நேபாலில் ஒரு கிராமத்தில் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள் கபுலி. அப்பா இறந்து விட்டார். கணவன் ராணுவத்தில் சேர்ந்தபின் ஆறு மாதம் அவளோடு தொடர்வு வைத்துக் கொண்டிருந்தான். பிறகு அவனைப் பற்றிய எந்தச் செய்தியையும் காணோம்.

தாயாருடன் வாழ்ந்த கபுலி தன் ஏழு தங்கைகளுடனும், ஒரு தம்பியுடனும் கஷ்டங்களுக்கு இடையே வாழ்ந்து வந்தாள். வீட்டில் அநேக நாட்களுக்கு எதுவும் சாப்பிட இருக்காது. வயது வந்தவர்கள் எல்லோரும் முழுப் பட்டினி கிடந்து, சிறியவர்களை அரைப் பட்டினியில் வைத்திருப்பார்கள். அதுதான் அவர்களால் செய்ய முடிந்தது.

திடீரென்று தம்பி ஒரு நாள் இறந்துவிட்டான். நல்ல அறிவுள்ளவனாகவும், சாமர்த்தியசாலியாகவும் இருந்தவன் அவன். போதிய போஷாக்கு இன்மையால் அவன் இறந்ததை உணர்ந்ததும் கபுலிக்கு ஒரே அதிர்ச்சி!

இந்த நிலையில் தான் வாழ்க்கையில் சில தீர்மானங்களை அவள் எடுக்கவேண்டி வந்தது. கிராமத்து அதிகாரி வெவ்வேறு வழிகளில் அவளை நெருங்கிக் கொண்டிருந்தார். அதை அவள் நன்றாக உணர்ந்தாள். துக்க மயமாகவே சென்று கொண் டிருக்கும் வாழ்க்கையில் தனது பட்டினிகளின் ஊடே அந்தச் சிறுசிறு இன்பங்களை ஏற்றுக்கொள்ளவும் சமயங்களில் அவள்

மனம் இடம் கொடுத்தது. உள்ளத்திற்கு அவை சில இதங்களைக் கொடுத்ததும் அன்றி அவை மூலம் சில பொருள் லாபங்களும் ஏற்படத் தொடங்கின. கிராம அதிகாரியிடமிருந்து அடிக்கடி கோதுமை கடன் வாங்கினாள். அதை அவர் திருப்பிக் கேட்கவும் இல்லை. போகப்போக இந்தக் கடன்களை மாமூலாகவே கேட்கத் தொடங்கினாள். கடைசியில் எல்லாம் பகிரங்கமாகவே போய் விட்டதை உணர்ந்தாள்.

அவள் தன் உடல் பலவீனங்களுக்கும் குடும்ப பலவீனங் களுக்கும் அடிமையாகி விட்டதை உணர்ந்த கிராம அதிகாரி அவளுக்குக் கொடுக்கும் பொருள்களைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் அந்நிய இடங்களைத் தேட ஆரம்பித்து விட்டார்.

அந்தச் சின்ன கிராமத்தில் கபுலிக்கு வேறு அந்நியர் களைத் தேட வழியில்லை. எல்லோரும் சிரமப்படுகிறவர்கள். ஆகவே தன் உடம்பிற்கு ஒரு கூலி கிடைக்குமானால் அது அதிக பட்சமாக இருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். இந்திய நகரங்களைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். குறிப்பாக டில்லியைப் பற்றி, அங்கு வேலை பார்த்து வரும் நேபாலி ஆண்கள் கதை கதையாகச் சொல்லி இருக்கிறார்கள். தைரியமாக டில்லிக்குக் கிளம்பிவிட்டாள்.

இரண்டு வருடங்களில் கைமாறி இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். இங்கிருந்து கொண்டு எவ்வளவோ கஷ்டங்களுக் கிடையே தனது குடும்பத்திற்கு எழுபது ரூபாய் அனுப்பி வருகிறாள். இங்கு வந்து இரண்டு வருடங்களாகின்றன. ஒவ்வொரு வருடமும் நேபாலுக்குப் போய் ஒரு மாதம் தங்கி விட்டு வருவாள். போன வருடம் போனபோது தனது அடுத்த தங்கையை அழைத்து வந்தாள். இந்த வருடம் போனபோது தனது மூன்றாவது தங்கையை அழைத்து வந்துவிட்டாள். அந்தப் பெண் இன்னும் பெரியவள் ஆகவில்லை.

துக்க மயமான அவள் வாழ்க்கையைக் கேட்ட பிறகு எனக்கு அவள்மீது இரக்கம் ஏற்பட்டது. நாங்கள் நல்ல சிநேகிதிகளாக மாறிவிட்டோம். நான் பலாத்காரமாக இங்கே வைக்கப்பட்டிருப்பது அவளுக்கு வருத்தமாக இருந்தது. ஒருவர்க் கொருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டோம்.

# 25. ஏமாற்றத்தின் எல்லை

நாங்கள் தப்பிச் செல்வதற்காகப் பணம் சேர்த்து வந்தோம் என்று கூறி இருந்தேன்.

எத்தனையோ இடையூறுகளுக்கு இடையே 240 ரூபாய் சேர்த்து விட்டோம். அறுபது ரூபாய்தான் பாக்கி என்று தெரிந்ததும் எங்களுக்குள் ஒரு அவசரம் எழுந்தது. ஒரு வாரத்திற்குள் அந்தப் பணத்தைச் சேர்த்துவிட நினைத்தோம்.

இதற்காக எங்களில் பலர் (சொந்தச் செலவில் டிபன் சாப்பிட வேண்டியவர்கள்) டிபன் சாப்பிடாமல் ஒருவாரம் இருந்தார்கள். நானும் சிலரும் டீ போன்ற எல்லா இதர செலவு களையும் ஒரு வாரம் நிறுத்தி விட்டோம். நாங்கள் விரும்பிய படியே எட்டு நாட்களில் முந்நூறு ரூபாய் சேர்ந்து விட்டது.

அதன் பிறகு அந்த ஆந்திரக்காரனுக்காகக் காத்திருந் தோம். பணம் கையில் வந்த பிறகு அவனைக் காணவில்லை. ஒரு வாரம் இரண்டு வாரம் என்று நாள் ஓடி விட்டது. எங்களுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை.

கடைசியில் வேதனையுடன் இருக்கும்போது, அவன் ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு வந்தாள். சோதனையாக அந்த நேரத்தில் தயா வேறு யாருடனோ ஒரு அறைக்குள் போயிருந் தாள். இதை அறிந்த கீர்த்தியும் நானும் ஆந்திரக்காரனைச் சிறிது நேரம் காக்க வைக்க விரும்பினோம். ஆனால் ஹாலில் எல்லோரும் உட்கார்ந்திருக்கும்போது எங்களால் முடியவில்லை.

சிறிது நேரத்தில் அவன் ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு அறையுள் போய்விட்டான். எங்கள் கோஷ்டியைச் சேராத ஒரு இந்திப் பெண் அவள்.

எனக்கு அப்போது படபடவென்று ஒரு அவசரம் வந்தது. அவனும் இந்திப் பெண்ணும் போகும்போது சட்டென்று குறுக்கே போய் அரைத் தெலுங்கும் அரைக் கன்னடமுமாக, "இன்னும் சிறிது நேரத்தில் தயா வந்து விடுவாள் பொறுங்கள்!" என்றேன்.

என் பேச்சில் என்னவோ விஷமத்தைக் கண்ட அந்த இந்திப் பெண், "என்ன பேசுகிறாய்?" என்று அதட்டிக் கேட்கவே ஒதுங்கி விட்டேன்.

அன்று ஒரு சந்தர்ப்பம் போய்விட்டது என்று நினைத்தோம். நாங்கள் எதிர்பார்த்தது போலவே தயா சிறிது நேரத்தில் வெளியே வந்தாள். அவளிடம் போய் விஷயத்தைத் தெரி வித்தேன்.

அவளுக்கும் ஒரே வருத்தம். சிறிது யோசித்தாள். பிறகு, "இந்த அறையிலேயே இருக்கிறேன். அவன் வந்ததும் என்னிடம் அனுப்பு" என்றாள். அடுத்த அறைக்குள் போய் விட்டாள்.

ஆந்திரக்காரன் வெளிவரும்வரை காத்திருந்தேன். வெளியே வந்ததும் அவனிடம் போய் அடுத்த அறைக்குப் போகும்படி மெதுவாகச் சொன்னேன்.

அவன் அந்த அறைக்குள் போகும்போது, பாத்ரூமுக்குப் போய்த் திரும்பிய அந்த இந்திப் பெண் அவன் செய்கையை ஆச்சரியத்துடன் கவனித்துக்கொண்டு போனாள். அறைக்குள் போனதும் அவனிடம் தயா முந்நூறு ரூபாய் தயாராக இருப்பதாகவும் அதை வாங்கிக் கொண்டு அவன் உதவி செய்ய வேண்டும் என்று கூறினாள்.

"சரி! பணத்தைக் கொடு" என்றான் அவன். தயா அந்தப் பணத்தை ஒரு துணிப் பையில் முடிந்து தனது உள்பாவாடையோடு இறுக்கி வைத்திருந்தாள். பல மாதங்களாகப் பணத்தைப் பாதுகாக்க இந்த முறையைத்தான் கையாண்டாள். இப்போது அந்தப் பையை எடுத்துப் பார்த்தபோது வியர்வையில் நனைந்து நனைந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகள் இரண்டாகப் பிளந்திருந்தன. சில இடங்களில் அவை நமத்துப் போய் மக்கியும் போயிருந்தன.

இது தயாவைத் திடுக்கிட வைத்தது. மனம் கலங்கி அழுகைகூட வந்தது.

அதைப் பார்த்த ஆந்திரக்காரன், "பரவாயில்லையம்மா! இது போதும். நான் போய்ப் போலீசில் சொல்லி விடுகிறேன்" என்றான்.

"நான் மிகவும் கடமைப்பட்டிருப்பேன். நான் விடுதலையானால் திரும்பவும் டில்லிக்கு என் கணவனோடு வந்து உனக்கு நிறைய பணம் தருவேன்" என்றாள் அவள்.

ஆந்திரக்காரன் பணத்தை முடிந்து கொண்டு வெளியே வந்தான்.

அவன் வெளியே வருவதற்குள், அந்த இந்திப் பெண்ணின் மூலமாகச் செய்தி ஹாலில் உள்ள கைக் குழந்தைக்காரிக்குப் போய் விட்டது. அவள் தடதடவென்று அறையை நோக்கி வருவதற்கும் ஆந்திரக்காரன் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

"ஜி! இரண்டாவது தடவை உள்ளே ஏன் போனாய்?" என்று அவனிடம் கோபத்துடன் அவள் கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

உடனே அவள் தயாவைப் பார்த்து, "இரண்டாவது தடவை பணம் வாங்காமல் ஏன் அவளை உள்ளே அனுமதித் தாய்?" என்றாள்.

தயா விழித்தாள்.

ஆந்திரக்காரனிடம் திரும்பி, ''ம்! உடனே பணத்தை வையுங்கள்" என்றாள் கோபத்துடன்.

அவன் ஒரு கணம் தயங்கினான். பிறகு பையுள் கை விட்டான். மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொடுத்து அவளிடமிருந்து ஐந்து ரூபாயைப் பெற்றுக் கொண் டான். பிறகு, ''பயப்படாதே! என்பதுபோல் தயாவிடம் பார்வையால் உணர்த்திவிட்டு வெளியே போய் விட்டான்.

எங்களுக்கு நிம்மதி! ஒரே மகிழ்ச்சியும் கூட!

போலீஸ் வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தோம். ஒவ்வொரு கணமும் ஒரே எதிர்பார்ப்போடு நேரத்தைக் கழித்தோம். ஒவ்வொரு நாளும் போவது யுகமாக இருந்தது. "இன்று போலீஸ் வரும்! நாளை வரும்" என்று சொல்லியே நாட்களை ஓட்டினோம். வாசலில் ஏதாவது கார் சத்தம் கேட்டால்கூட, "போலீஸ் வான் வந்துவிட்டது என்று நினைத்து மகிழ்ச்சி அடைந்தோம்.

இரண்டு வாரம் மூச்சுப் பேச்சில்லை. பிறகு ஒரு நாள் காலை பதினொரு மணிக்கு ஒரு கார் சத்தம் வாசலில் கேட்டது! ஒரு பெரிய வாகனத்தின் சத்தந்தான் அது! அதைத் தொடர்ந்து பூட்ஸ் ஒலிகளும் கேட்டன. நாங்கள் பரபரப்பு அடைந்தோம்.

நாங்கள் பரபரப்பும் மகிழ்ச்சியும் அடைந்தோம். ஒருவருக் கொருவர் கண்களால் பேசிக் கொண்டோம்.

கீழே வாசற்படியில் கனத்த குரல்கள் கேட்டன. ஆங்கில வாக்கியங்களைச் சரளமாக அவர்கள் பேசினார்கள். வேலைக்காரன் மேலே ஓடி வந்தான்.

மாடி வீட்டுக்காரியான நிர்மலாவின் அறைக்குள் அவன் நுழைந்ததும் எங்கள் பரபரப்பு மேலும் கூடியது. விரித்த கண்களோடு உட்கார்ந்திருந்தோம்.

சில கணங்கள் ஓடின. அறையிலிருந்து வேலைக்காரன் வெளியே வந்தான். அவன் பின்னால் நிர்மலாவின் கணவர் அவசரமாக வந்தார். இருவரும் படிகளில் இறங்கிக் கீழே போனார்கள்.

வாசற்படியில் மேலும் உரையாடல்கள் நடந்தன. பிறகு எல்லோரும் மாடிப்படி ஏறி வரும் சப்தம் கேட்டது.

முதலில் நிர்மலாவின் கணவர் வந்தார். அதன் பின் நல்ல டீக்கான டிரஸ் அணிந்து ஐந்து இளைஞர்கள், இரண்டு பெண்கள், இரண்டு நடுத்தர வயதினர்கள் வந்தார்கள்.

எல்லோரும் மாடி ஏறியதும், ஹாலையும் எங்களையும் பிரமிப்போடு பார்த்தார்கள். நிர்மலாவின் கணவர் அவர்களைத் தமது அறைக்குள் அழைத்துப் போனார்.

எங்கள் மனம் சோர்ந்து விட்டது. ஒரே ஏமாற்றம். இவர்கள் யார், எதற்கு வந்திருக்கிறார்கள் என்று நினைத்தோம்.

ஒருவேளை சி. ஐ. டி.க்காளாக இருக்குமோ? அந்த நினைப்பில் சிறிது நம்பிக்கை அடைந்தோம்.

பதினைந்து நிமிடங்களுக்கு மேலாகியது. அறையைவிட்டு நிர்மலா வெளியே வந்து ஒரு இந்திப் பெண்ணை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

கால் மணி நேரத்தில் அந்தப் பெண் திரும்பினாள். அதன் பிறகு இன்னொரு இந்திப் பெண்ணை அழைத்துப் போனார்கள்.

இதைப் போல ஐந்து பேர்கள் அடுத்தடுத்து உள்ளே போய் வந்தார்கள்.

இதெல்லாம் என்ன என்று நினைத்துக் கொண்டிருந்தோம்.

பிறகு மெள்ள மெள்ள விஷயம் தெரிய வந்தது.

ஒரு வட இந்தியப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் சமூக இயல் ஆராய்ச்சி நடத்து

வதற்காகப் புள்ளி விவரங்களைச் சேகரிக்க அங்கு வந்திருந் தார்கள்.

பெண்களின் வயது, தாய் தந்தை விவரம், குடும்ப வருவாய், அவள் மதம், படிப்பு, மொழி, உலக விவகாரங்களைப் பற்றி அவளது கருத்துக்கள், சமூகத்தைப் பற்றிய நினைப்புகள், அவளது சுருக்கமான கதை முதலிய எல்லா விவரங்களையும் அவர்கள் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். உள்ளே அழைக்கப் படும் பெண்கள் யாவருமே இந்திக்காரிகள்! தவிர அவர்கள் யாவரும் தாங்களாகவே இந்தத் தொழிலுக்கு வந்தவர்கள்.

எத்தகைய ஏமாற்றம்! நாங்கள் மனம் ஒடிந்து போனோம். அன்று உண்மையில் எங்கள் பலரது கண்கள் கலங்கி விட்டன.

அன்று மட்டுமல்ல; பல நாட்கள் போலீசை எதிர் பார்த்துப் பார்த்துச் சிறிது சிறிதாக ஏமாந்து கொண்டிருந்தோம்.

போலீஸ் வராததற்கு எத்தனையோ காரணங்களை எங்களுக்குள் கூறிக்கொண்டாலும், எங்கள் மனத்துக்குள் நாங்கள் ஏமாறுகிறோம் என்ற உணர்ச்சி தலை தூக்கிவிட்டது.

உண்மையில் நாங்கள் ஏமாந்தவர்கள்! ஏனெனில் போலீஸ் வரவேயில்லை.

அந்த ஆந்திரக்காரனும் வீட்டுப்பக்கம் தலை காட்டவே இல்லை. எங்களை அவன் வஞ்சித்து விட்டான் என்பதை அறிய வெகு நாட்கள் ஆயின! அறிந்ததும் மனத்துள் இடிந்து விட்டோம்.

எங்கள் எல்லோரையும் விடத் துக்கத்தில் ஆழ்ந்தவள் தயாதான்! அவள் பேசும்போது நெஞ்சு அடிக்கடி அடைத்தது. முகத்தில் சோகம் பொங்கியது.

ஒரு முயற்சியில் ஏமாந்து விட்டோம். வேறு முயற்சி செய்வோம் என்று திட்டம்போட ஆரம்பித்தோம். எல்லோரும் குடித்து கும்மாளம் போட்ட அந்த இரவில் நான் தப்பித்துப் போயிருக்கவேண்டும் என்றும், மாடிப்படியில் மீண்டும் ஏறி மேலே வந்தது தவறு என்றும் தயா கூறினாள். இனி அதுபோல் நிகழ்ச்சி நடந்தால் அதை உடனே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், மற்றவர்களை எதிர்பார்க்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டாள். யாவரும் சம்மதித்தோம்.

அந்தக் கும்மாள இரவுகள் அடிக்கடி வந்து விடுவதில்லை. ஒரு சமயம் இரண்டு வாரங்களுக்குள் அடுத்தடுத்து நடந்து விடும். சமயங்களில் இரண்டு மாதமானாலும் நடப்பதில்லை.

வருகிற வாடிக்கைக்காரர்களின் மனம், அவர்கள் பண நிலை, வீட்டுக்காரிகள் தூண்டல்கள் இவை மூன்றையும் பொறுத்து உருவாவதுதான் அந்தக் கும்மாள இரவுகள்.

இந்திராணியை நான் பலதடவை சந்தித்தேன். அவளை மேல் மாடியில் ஒரு வாரமும், இரண்டாவது மாடியில் ஒரு வாரமுமாகத் தள்ளிக்கொண்டிருந்தார்கள். அதன் காரணம் புரியவில்லை.

முதல் பல சந்திப்புகளில் அவள் முன்போல் என்னிடம் கோபமாக இருந்தாள். நான் எதிரே வந்தால்கூட ஏறிட்டுப் பார்ப்பதில்லை, புன்னகை புரிந்தால்கூட முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவளது வேதனை மயமான முதல் அனுபவத்திற்கு நான் துணையாக இருந்தேன் என்று அவளுக்குக் கோபம்! என்னை எதிரியாகவே கருதினாள்.

ஒரு மாதத்திற்குள் இந்திராணியின் உடம்பு ரொம்பவும் இளைத்துவிட்டது. அவளுக்கென்று வீட்டுக்காரி டானிக்கும் முட்டையும் வாங்கிக் கொடுத்தாள். அப்படியும் உடல் தேற வில்லை. ஒரு நாள் ஜுரம் வந்து விட்டது. காய்ச்சல் விறுவிறு என்று ஏறி இரவில் பிதற்றத் தொடங்கிவிட்டாள்.

அன்று இரவு கீர்த்தி அவள் படுக்கை அருகில் உட்கார்ந்து கொண்டாள். மேலே நாங்கள் உபயோகிக்கும் காற்றோட்ட மில்லாத மோசமான அறைக்குள் இந்திராணி படுத்திருந்தாள். கீர்த்தி வீட்டுக்காரி சிந்துவிடம் பேசி இந்திராணியைக் கீழ்ப் பகுதியில் உள்ள அறைக்குக் கொண்டு போக அனுமதி வாங்கினாள். அந்தப் பெண்ணைத் தோளில் சுமந்து கொண்டு கீழே போனாள்.

நான்கு நாட்கள் அவள் அருகிலேயே கீர்த்தி இருந்து உதவி புரிய சிந்து அனுமதித்தாள். இந்திராணி இறந்து போனால் தனது முதலீட்டுக்கு நஷ்டம் வந்து விடும் என்று பயப்பட்டாள். அதனால் கீர்த்தியின் தினசரி வருவாய் போனாலும் பரவா யில்லை என்று நினைத்து அவளை இந்திராணிக்குச் சேவை செய்யும்படி அனுமதி கொடுத்தாள்.

இந்திராணியின் ஜுரம் குறைந்து வந்தது. ஆறாவது நாளில் சரியாகி விட்டாள். சிந்து கோவிலுக்குப் போய் உண்டியில் பிரார்த்தனை செலுத்தி விட்டு வந்தாள்.

ஒரு வாரம் படுக்கை அருகில் கீர்த்தி இருந்து சிகிச்சை செய்தது இந்திராணிக்கு ஆறுதலைக் கொடுத்தது. கீர்த்தியின் மீது நம்பிக்கையும் எற்பட்டது.

தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் கீர்த்தி இங்கே நடப்பவை, நடந்தவை யாவற்றையும் அந்தப் பெண்ணிடம் விவரித்து விட்டாள்.

## 26. பல்பீரின் பாசம்

இரண்டு வாரம் சென்றபின் இந்திராணி மாடிக்குத் திரும்பி வந்தபோது முற்றிலும் மாறி இருந்தாள். என்னைப் பார்த்ததும் என் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"கமலா! என்னை மன்னித்துவிடு! உன்னைத் தவறுதலாக நினைத்து விட்டேன். நான் இனிமேல் உங்களில் ஒருத்தி. இங்கிருந்து எப்படியாவது தப்பித்துப்போக எனக்கு வழி செய்யுங்கள்" என்றாள்.

அடுத்த சந்திப்பில் அவள் பிடிபட்ட விதத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

கான்வென்டில் படித்துக் கொண்டிருந்த பெண் அவள். சாதாரணக் குடும்பம் என்று சொன்னதாக நினைவு. ஒரு நாள் மத்தியானம் இரண்டு மணி இருக்கும். வீட்டு வாசலில் உட்கார்ந்து பாடப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது தெரு நடுவில் ஒரு கறுப்புநிறக் கார் வந்து நின்றது. அதன் பின்கதவு திறந்ததும் ஒரு பள்ளிப் பெண் பின் சீட்டில் தென்பட்டாள். அவள் இந்திராணியைப் பார்த்து, "வா" எனக் கையை அசைத்தாள். அவளது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதாகக்கூட இந்திராணிக்குத் தோன்றியது. எழுந்து போனாள்.

பின் சீட்டில் அந்தப் பெண்ணைத் தவிர ஒரு ஆணும், முன் பக்கத்தில் ஒரு ஆணும் உட்கார்ந்திருந்தார்கள்.

அந்தப் பெண் ஸ்கூல் யூனிபாரத்தில் இருந்தாள். இந்திராணியைப் பார்த்து, "ஹாய்" என்று கையைக் காட்டிப்

புன்னகை புரிந்தாள். எங்கேயோ பள்ளியில் அவளைப் பார்த் திருப்பதாக இந்திராணிக்குத் தோன்றியது. "ஹாய்" என்று அவளும் சொன்னாள்.

"ஸ்கூல் மிஸ் கூப்பிட்டாங்க! ஏறிக்க! சீக்கிரம் போய்ட்டு வந்துடலாம்" என்றாள் அந்தப் பெண்.

"எந்த மிஸ்?" என்று கேட்ட இந்திராணிக்கு, ஒரு சந்தேகம் வந்தது. ஆனால் அவ்வளவு சுவாதீனத்துடன் அழைக்கும் ஒரு பெண்ணின்மீது அவநம்பிக்கை கொள்வதற்குத் தைரியம் தோன்றவில்லை.

காரின் பாதி திறந்த பின்கதவின் இடைவெளிக்குப் போனாள். அதே நேரத்தில் முன் சீட்டில் இருந்த ஆண் கீழே இறங்கி வந்தான். இந்திராணி பின் சீட்டுக் கதவின் உட் பக்கம் போனவுடன் சட்டென்று அவன் அந்தக் கதவைத் தன் உடம்பினால் பலமாக இடித்துவிட, அது இந்திராணியை வேகமாகத் தட்டி உள்ளே சீட்டுக்குள் விழச் செய்தது. அந்தக் கணத்தில் பின் சீட்டுக்குள்ளிருந்த ஆசாமி அவள் கையைப் பிடித்து உள்ளே பலமாக இழுத்துக் கீழே இடைவெளியில் அவளைத் தள்ளினான்.

கார் விர்ரென்று புறப்பட்டது.

இந்திராணி அந்த அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்குள் அவள் வாயில் துணியை அடைத்தார்கள். கைகளைக் கட்டி னார்கள். நகரத்துக்கு வெளியே கார் போனதும் அதை நிறுத்தி வைத்து, அவள் வாயில் மாத்திரைகளைப் போட்டு விழுங்க வைத்தார்கள்.

பிறகு ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்தது மட்டும் லேசாக நினைவுக்கு தெரிந்தது. அவளை ஒரு நோயாளி என்று மற்ற பிரயாணிகளிடம் தெரிவித்து, அவளைப் படுக்க வைத்தே டில்லிக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

கதையை முடித்த இந்திராணி, "காரில் உட்கார்ந்து கொண்டு என்னை ஜாடை காட்டி அழைத்த பெண் யார் தெரியுமா?" என்று கேட்டாள்.

"யார்?" என்றேன்.

"மேல் மாடியில் இருக்கிறாளே, அந்தக் குண்டுப் பெண் தான் அவள்!" என்றாள்.

எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"அந்தப் பெண்ணா துரோகம் செய்தாள்?" என்றேன்.

"ஆத்திரப்படாதே கமலா! அவள் வேண்டுமென்றே செய்யவில்லை. அவளை அப்படிச் செய்யத் தூண்டி இருக்கிறார்கள். பயமுறுத்தியிருக்கிறார்கள்?" என்றாள் இந்திராணி.

"அவள் யார்? அவளை எங்கிருந்து அழைத்து வந்தார்கள்?" என்றேன்.

"அதை நானே இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. நாங்கள் பேசுவதற்குச் சரியான சந்தர்ப்பமே கிடைக்கவில்லை" என்றாள்.

"நீ கார்ப் பக்கம் போகும்போது யாரும் கவனிக்கவில்லையா?" என்றேன்.

"அந்த நேரத்தில் தெருவில் யாருமே தென்படவில்லை. என் வீட்டார் கூட அதைக் கவனித்திருக்க மாட்டார்கள். அல்லது யாராவது நான் காரில் ஏறுவதைக்கூடப் பார்த்திருக் கலாம். ஆனால் அது கடத்தல் சம்பவம் என்று யாரும் உணர்ந் திருக்க மாட்டார்கள்!" என்றாள்.

பல்பீரைப் பற்றி கூறி இருந்தேன். அவன் என் மீது தொடர்ந்து ஈடுபாடு கொண்டிருந்தான். சில வாரங்களில் அவனுக்கு வர முடியாமல் போவது உண்டு. ஆனால் அடுத்த தடவை வரும்போது என்னிடம் உருகிப் போய்ப் பேசுவான்.

எனக்கு இந்தி பேசவும் புரிந்து கொள்ளவும் தெரிந்த பிறகு அவனுக்கு என்மீது ஏற்பட்டிருந்த பற்றுதலையும், அன்பையும் தெரிந்து கொண்டேன். அது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இந்த வீட்டுக்கு வந்தால் என்னைச் சொந்த மனைவியை நடத்துவது போல் மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடத்துவான். மனம் கோண விடமாட்டான். என் விருப்பத்தை அறிந்து கொள்ள மிகவும் பாடுபடுவான்.

உண்மையில் அவன் வீட்டில் இருந்தபோது சிறிது அளவாவது மனத்தில் இதத்தைக் கண்டேன் என்றால் அது பல்பீரின் நடத்தையால்தான்!

ஒவ்வொரு தடவை வரும்போதும் பல்பீர் தன் குடும்பத்தைப் பற்றி அதிகம் பேசுவான். முக்கியமாக அவன் மனைவி ரூப்லேகாவைப் பற்றி நிறையக் கூறுவான்.

ஆரம்பத்தில் அவைகளில் எனக்குச் சிரத்தை இல்லை. ஆனால் போகப் போக எனக்கே அதில் பிடிப்புப் பிறந்தது. ரூப்லேகா என்னை விசாரித்து அனுப்புவாள். அது எனக்கு விசித்திரமாக இருக்கும். இப்படிக் கூட ஒரு மனைவி இருப்பாளா என்று நினைப்பேன். ஆனால் சிறுகச் சிறுக அவ்ளது நல்ல குணங்களைப் பல்பீர் மூலம் அறிய நேர்ந்ததும், பார்த்திராத அந்தப் பெண்மணிமேல் எனக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் தோன்றின.

பின்னர் ரூப்லேகாவுக்கும் எனக்கும் ஒரு விசித்திரமான நட்பு வளர்ந்தது. ஒருவருக்கொருவர் குசலம் விசாரிக்க ஆரம்பித்தோம். அவள் தனது போட்டோவை எனக்கு அனுப்பி வைத்தாள். பண்டிகை நாட்களில் தித்திப்புகளைத் தயார் செய்து அனுப்பினாள். நான் இந்த வீட்டுக்குக் கொண்டு வரப்பட்ட விதத்தையும், இங்கே எனக்கு ஏற்படும் கஷ்டங்களையும் பல்பீர் மூலமாகக் கேள்விப்பட்டு எனக்கு ஆறுதல் சொல்லி அனுப்பினாள்.

ஒரு முறை என் போட்டோவை அவள் கேட்டு அனுப்பினாள். என்னிடம் போட்டோ கிடையாது. ஆகவே பல்பீர் சிந்துவிடம் கேட்டு ஒரு போட்டோப் பிடிப்பவரை அழைத்து வருவதாகக் கூறினான். ஆனால் சிந்து இதற்கு மறுத்து விட்டாள்.

பல்பீரின் குடும்ப விஷயங்கள் அத்தனையும் எனக்குத் தெரிந்துவிட்டதால் அவன் வரும்போது நானே மட மட வென்று "அக்கா எப்படி இருக்கிறாள்? ஊரிலிருந்து அக்காவுக்குக் கடிதம் வந்ததா? சரண்பீர் (ரூப்லேகாவின் தந்தை) சௌக்கியந்தானா?" என்று எல்லாம் கேட்பேன். அவனுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

எனது நரக மயமான வாழ்க்கையில் இந்த விதத்தில் சிறிது ஆறுதலும் இதமும் கொண்டிருந்தேன். இதற்காகப் பல்பீர் தம்பதியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்பீர் திடீரென்று ஒரு மாதமாக வரவில்லை. எனக்கு அது வியப்பாகவும் வேதனையாகவும் இருந்தது. ஒரு வேளை முன்பு போல் சிந்துவும் நிர்மலாவும் அவனைத் தடைசெய்து விட்டார்களோ என்று நினைத்தேன்.

ஒரு சனிக்கிழமை மாலை! அன்று எனக்கு லேசாக ஜுரம் இருந்தது. அதை எல்லாம் இங்கே பொருட்படுத்தக் கூடாது!

ஆறுமணி இருக்கும்! மேக்அப் போட்டுக் கொண்டு ஹாலில் உட்கார்ந்திருந்தேன். "கமலா" என்று குரல் கேட்டுத் திரும்பினேன். பல்பீர் என் முன்னால் சிரித்தான். ஆள்பாதியாக உடைந்திருந்தான்.

அறைக்குள் போனதும் அவன் கண்ணீர் விட்டான்.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

வெகுநேரம் வரை பதில் சொல்லவில்லை. அவனது ஜிப்பாவுக்குள் நெஞ்சு விம்முவது தெரிந்தது. ஒரு ஆண் அவ்வளவு தேம்பினதைப் பார்த்ததில்லை.

கடைசியில், "என் மனைவி இறந்து விட்டாள்" என்றான். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நெற்றியில் கைவைத்து உட்கார்ந்தேன். கண்களில் மளமள வென்று நீர் வந்தது. யாரோ சொந்தக்காரரை இழந்தது போல் துக்கம் பொங்கியது. வெகு நேரம் பேசவில்லை.

"எப்படி இறந்தாள்?" என்று கேட்டேன்.

"ஒரு நாள் தண்ணீர் கொண்டு வரும்போது கீழே விழுந்தாள். இரண்டு நாள் படுக்கையில் இருந்தாள். மூன்றாம் நாள் நினைவு போய் விட்டது. அதற்கு மறுநாள் இறந்து விட்டாள்" என்றான்.

அவளுக்கு உள்ளூற இருதய நோயோ அல்லது வேறு நோயோ இருந்திருக்க வேண்டும் என்றும், அதனால்தான் அவள் முழுவாழ்வு வாழவில்லை என்றும், நோயைத் தன்னிடம் கூடச் சொல்லாமல் மனத்திலேயே அழுத்தி மறைத்திருக்க வேண்டும் என்றும் அவன் கூறினான்.

அன்று இரவு முழுவதும் பல்பீர் எனக்காக நூற்றைம்பது ரூபாய் செலவழித்துக் கொண்டு அங்கே தங்கினான். இருவரும் கண் விழித்து உட்கார்ந்திருந்து ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொண்டோம்.

இந்திப் பெண்களில் ஒருத்திக்கு ஜுரம் வந்தது. அவளைக் கீழ்ப் பகுதியில் உள்ள அறையில் படுக்க வைத்தார்கள். அந்தப் பெண்ணுக்கு கீர்த்தி உதவி செய்யப் போனாள்.

எங்களுக்கு அது பிடிக்கவில்லை. ஏனெனில் அந்தப் பெண் எங்கள் குழுவைச் சேராதவள். இந்தத் தொழிலில் விரும்பி இருப்பவள். இப்படிப்பட்டவர்களுக்கு இங்கே நிறையச்

சலுகைகள் உண்டு. அவர்கள் விருப்பப்படி வெளியே போய் வருவார்கள். சினிமாவுக்குக் கூடப் போவார்கள். அதற்கெல்லாம் அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு.

இந்தப் பெண்களை எல்லாம் வீட்டுக்காரி கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று நாங்கள் கருதுவோம் வீட்டுக்காரிகளைப் போல் இவர்களில் பலர் கல்நெஞ்சுக்காரிகளாக இருப்பார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் எங்களை மிரட்டவோ, சமயங்களில் அடிக்கவோ தயங்க மாட்டார்கள்.

இங்கே இவர்களுக்குப் பணிவிடைகள் செய்வதும் எங்கள் கடமைகளில் ஒன்று! "கமலா! ஹேர்பின்னை எடு! கமலா! இந்தத் தட்டை வேலைக்காரி கிட்டே கொடு!" என்று பல விதமாக எங்களை ஏவுவார்கள். தலைவிதியே என்று அந்த வேலைகளைச் செய்வோம்.

இத்தகைய கும்பலைச் சேர்ந்தவளுக்குக் கீர்த்தி ஏன் சேவை செய்கிறாள் என்று நினைத்திருந்தோம்!

நான்கு நாட்களில் அந்த இந்திப் பெண்ணுக்கு உடம்பு சரியாகியது. கீர்த்தி மேலே வந்தாள். அவளிடம் விஷயத்தைக் கேட்டோம்.

"இதன் மூலம் தப்புவதற்கு வழி பார்த்தேன்" என்றாள் கீர்த்தி!

"எப்படி முடியும், கீர்த்தி?" என்றேன் நான்.

"வழி இருக்கிறது கமலா! இந்திராணிக்கு உதவி செய்வ தற்காகக் கீழே போயிருந்தேனே! அப்போது எனக்கு ஒரு வழி புலனாகியது. நாங்கள் இருக்கும் அறையை இரவில் பூட்டு கிறார்கள். சென்ற தடவை இதைப் பார்த்தபோது எனக்கு ஒரு யோசனை தோன்றியது. உள்ளே இருக்கும் ஸ்குரூ ஆணிகளைக் கழட்டி விட்டால் கதவின் தாழ்ப்பாள் தானாகக் கழன்று விடும். கதவைத் திறந்து விடலாம். வாசல் கதவையும் அடைந்து விடலாம். ஆனால் அந்த ஸ்குரூ ஆணிகளைக் கழற்றுவது எப்படி? அதுக்கு ஸ்குரூ டிரைவர் இருந்தால்தான் முடியும். வேறு விதத்தில் கழற்ற முடியாது! அதற்கான யோசனை செய்து ஒரு திட்டம் வகுத்தேன்" என்றாள்.

"என்ன திட்டம்?"

"முதலில் ஒரு ஸ்குரூ டிரைவர் பெற வேண்டும்!"

"எங்கே கிடைக்கும்?"

"அதைத்தான் யோசித்தேன். அதைப் பெறுவதற்கு வழியில்லை. ஆகவே ஒரு சட்டுவம் இருந்தால் வேலையைச் சுலபமாக முடித்து விட முடியும் என்று தோன்றியது. இதற்காக சமையல் அறையிலிருந்து அதைத் திருட நினைத்தேன்."

"முடிந்ததா?"

"இந்தத் தடவை கீழே போனபோது அந்தக் காரியத்தைத் தான் செய்து முடித்தேன். வேலைக்காரி பாத்திரங்களையும் கரண்டிகளையும் பாத்ரூம் அருகில் தேய்ப்பதற்குப் போட்டிருந் தாள். பாத்ரூம் போவதுபோல் சென்று சட்டுவத்தை எடுத்து வந்து அறையின் சாமான் பெட்டியின் இடுக்கில் செருகி வைத்திருக்கிறேன். இந்தத் தடவை கீழே இருந்தபோது இதைத் தான் செய்ய முடிந்தது. அடுத்த தடவை நான் வேலையில் இறங்கி விடுவேன்" என்றாள்.

பிறகு, அந்த ஸ்குரூ ஆணிகள் நன்றாக இறுகிப் போயிருப் பதால் மேலே இருந்து ஒரு சின்னப் புட்டியில் ஹேர் ஆயிலைக் கீழே கொண்டு போய் ஆறு ஆணிகள் மீதும் ஊற்றி இருப்ப தாகக் கூறினாள்.

இவ்வளவு காரியங்களையும் அவள் செய்தாள் என்று கேள்விப்பட்ட போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. "கீர்த்தி! இங்கிருந்து யாராவது, எப்படியாவது விடுதலை அடைந்தால் போதும். மற்றவர்களுக்கு விடுதலை வாங்கித் தந்து விடலம்!" என்றேன்.

ஒரு நாள் காலை பதினொரு மணிக்கு மாடியில் சலசலப்பு ஏற்பட்டது. எங்களில் பலர் எழுந்து விட்டோம். நன்றாக டிரஸ் செய்து மேக்-அப்பெல்லாம் போட்டு சுமனை அங்கே நிறுத்தி இருந்தார்கள். பரபரப்போடு எங்களை எழுப்பி அடுத்த அறைக்குப் போகச் சொன்னார்கள்.

அரை மணி நேரத்தில் வீட்டுக்காரிகள் புடைசூழ இரண்டு வயதான பஞ்சாபியர்கள் உள்ளே வந்தார்கள். சுமனின் அருகில் அவர்களை வீட்டுக்காரிகள் அழைத்துச் சென்றார்கள்.

ஏதோ மாட்டைப் பார்ப்பது போல் வந்தவர்கள் சுமனை முன்னும் பின்னும் பார்த்தார்கள். கண்களை இடுக்கிக் கொண்டும் அவள் கைகளைத் தங்கள் கைகளால் தூக்கிக் கொண்டும் பார்த்தார்கள்.

பிறகு ஹாலில் கால்மணி நேரம் உரையாடல்கள் நடக்கும் சப்தம் கேட்டது. சிறிது நேரத்தில் அந்த சப்தங்களும் அடங்கி விட்டன.

நாங்கள் இருந்த அறைக் கதவு திறக்கப்பட்டது. சுமன் கலங்கிய கண்களுடன் உள்ளே வந்தாள். அவளைத் தொடர்ந்து வீட்டுக்காரியும் வந்தாள்.

சுமனுக்கு ஏதோ துக்கம் நிகழப் போகிறது என்பதை உணர்ந்து விட்டோம். அது என்ன என்பது அப்போது எங்களுக்குத் தெரியவில்லை.

"போயிட்டு வருகிறேன் கலமா" என்றாள். பரபரவென்று அலமாரியிலிருந்து துணிகளை எடுத்துக் கொண்டாள்.

மற்ற பெண்களிடமும் அவசரமாக விடை பெற்றுக் கொண்டாள்.

அதற்குள் வீட்டுக்காரி, "ம், சீக்கிரம்" என்று கத்தினாள். உருண்டு விழும் கண்ணீருடன் சுமன் புறப்பட்டாள்.

ஒரு வாரத்திற்குப் பிறகுதான் அவளுக்கு என்ன நிகழ்ந்தது என்று தெரிந்தது.

வந்திருந்த பஞ்சாபியப் பெரியவரிடம் அவளை விற்று விட்டார்கள். எங்கேயோ ஒரு கிராமத்திற்கு அவள் அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கே அவள் தக்க பாதுகாப்புகளுடன் அடிமை வாழ்வு வாழ வேண்டும்! இதை அறிந்தபோது நாங்கள் திடுக்கிட்டோம். அந்தக் கிராமத்திலிருந்து அவள் தப்ப முடியாது என்றும், கிராமவாசிகள் எல்லாருமே இவ்விதம் அடிமைப் பெண்களை ஆசைக் கிழத்திகளாவும், வேலைக்காரி களாகவும் வைத்திருக்கிறார்கள் என்றும், அதனால் ஒருவரை ஒருவர் வெளியே காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்றும் அறிந்தோம்.

இப்படிப் பல கிராமங்கள் பஞ்சாபில் இருக்கின்றனவாம்.

ஆக, ஒரு துரதிருஷ்டமுள்ள பெண்ணுக்குத் துக்கமய மான ஒரு அத்தியாம் முடிந்துபோய், அதைவிடத் துக்ககரமான இரண்டாவது அத்தியாயம் ஆரம்பித்து விட்டது. கடைசிநாள் விடை பெற்றுச் சென்றபோது நான் பார்த்த சுமனது சோக மயமான முகம் இன்று நினைத்தாலும் என் மனத்தில் நின்று என்னைக் கலங்க வைக்கிறது.

சில குறிப்பிட்ட நாட்களில் சிந்து இரவில் எங்கள் எல்லாருடனும் சேர்ந்து சாப்பிடுவாள். (இதில் சிந்துவுக்குச் சொந்தமான பெண்கள்தான் கலந்து கொள்வார்கள்.) சிந்துவின் கணவனும், குழந்தைகளும் இந்தப் பந்தியில் உட்காருவார்கள். சப்பாத்தி, மசாலா, சோறு, தயிர் யாவும் மளமளவென்று வந்து கொண்டிருக்கும். சிரிப்புக்கும் கிண்டலுக்குமிடையே நாங்கள் சாப்பிடுவோம். அந்தச் சில கணங்களில் நாங்கள் அந்த வீட்டில் அடிமைப்பட்டுக் கிடக்கிறோமா என்று சந்தேகங்கூடத் தோன்றும்.

இந்தப் பந்திச் சாப்பாட்டில் கைக் குழந்தைக்காரி மட்டும் கடை நபராக உட்காருவாள். ஒதுங்கியே உட்காருவாள். மற்றவர் எவ்வளவோ சிரித்துப் பேசினாலும் அவள் அதிகம் சிரிக்க மாட்டாள். வீட்டுக்காரி சிந்து கலகலவென்று பேசி விட்டு, இடையே எப்போதாவது ஒருமுறை குழந்தைக்காரியை ஒரு ஜாடையாகப் பார்ப்பாள். அவளுக்குக் குழந்தைக்காரிமீது சந்தேகம்!

ஒரு திங்கட்கிழமை இரவு இந்த பந்திச் சாப்பாடு நடந்த போது, சிந்து விஸ்கியும், பீரும் வாங்கி வந்தாள். அவளுக்கு பீர் என்றால் உயிர்! முடிந்த போதெல்லாம் குடிப்பாள்! அவள் கணவனுக்கு விஸ்கி! ஆனால் அவருக்கு மட்டும் அளவாகக் கொடுத்துவிட்டு, “மீதி நாளைக்கு” என்று சொல்லி விடுவாள். கணவனுக்குப் போதை அதிகமானால் போதும்! தாறுமாறாகப் பேசி வீடு முழுவதிலும் லூட்டி அடிப்பான்.

அன்று கேலிப் பேச்சுக்களுடன் எங்கள் சாப்பாடு ஆரம்பித்தது. வேண்டுகிறவர்களுக்கு அசைவ உணவு வெளியிலிருந்து வரவழைக்கப்பட்டது. நான் எப்போதும் சாதத்தோடு நிறுத்திக் கொள்வேன். சமயங்களில் தோசையும் வடையும் வெளியிலிருந்து வரவழைத்துச் சாப்பிடுவேன். கைக்குழந்தைக்காரியை இங்கே செல்லமாக ‘டாலி’ என்று அழைப்பார்கள். இந்த டாலியைப் பற்றி நான் சில விஷயங்கள் கேள்விப்பட்டிருந்தேன். அவளுக்கும் சிந்துவின் கணவனுக்கும் ஒருவிதக் காதல் நிலவுவதாகப் பலர் கூறி இருந்தார்கள். இது எங்களிடையே அடிக்கடி அடிபட்ட விஷயம். டாலி இருக்கும்போது எங்களில் யாராவது வீட்டுக்காரரின் (சிந்துவின் கணவன்) பெயரை ஏதாவது ஒரு காரணத்திற்காக பலமாக உச்சரித்து அப்போது டாலியின் முகம் சிவந்து போவதை வேடிக்கையாகப்

பார்ப்பார்கள். இதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, நேரில் பார்த்ததில்லை.

அன்று பந்திச் சாப்பாட்டின்போது டாலியை வேவு பார்க்க நினைத்தேன். எனவே சாப்பிடும்போது அடிக்கடி அவள் என்ன செய்கிறாள் என்று கூர்ந்து கவனித்துக் கொண் டிருந்தேன்.

வெகு நேரம்வரை டாலி தலை நிமிராமல் சாப்பிட்டாள். பிறகு தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று நாசூக்காகக் கவனிப்பது தெரிந்தது. தண்ணீர் குடிக்கும் பாவனையில் அப்படிச் செய்தாள். பிறகு சட்டென்று சிந்துவின் கணவனை ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்தாள்.

சாப்பாடு முடியுமுன் இவ்விதம் இரண்டு முறை அவள் சிந்துவின் கணவனைப் பார்ப்பதையும், அவனும் இவளைப் பார்ப்பதையும் கவனித்துக் கொண்டேன்.

பிறகு சாப்பாடு முடியும் தறுவாயில் சிந்துவின் கணவன் இடது கையைக் கீழே தரைப்பக்கமாக அசைத்து ஏதோ ஜாடை செய்வதையும் கவனித்துக் கொண்டேன்.

அன்று சிந்துவின் கணவன் ரொம்ப ஜாலியாகப் பேசி தம் மனைவிக்குப் பீரை அடிக்கடி ஊற்றிக் கொடுத்தான். நேரம் ஆக ஆக சிந்து வாய் குழற ஆரம்பித்தாள்.

சாப்பாடு முடிந்தது. பீடாவைப் போட்டுக் கொள்ளும் போது சிந்து போதையில் அதிகமாக உளற ஆரம்பித்தாள். பிறகு எங்களைப் பார்த்ததும், "போங்கோ! போங்கோ!" என்று சொல்லிவிட்டு, கட்டிலை அலாக்காகத் தூக்கிக் கொண்டு அடுத்த அறைக்குத் தள்ளாடி நடந்தாள். நாங்கள் படி ஏறி மாடிக்கு வந்தோம்.

அன்று இரவு எங்கள் குழுவினருக்கு ரெஸ்ட். அபூர்வ மாகச் சில சமயங்களில் கிடைக்கக்கூடிய அரிய பொருள் அது. மாடியில் படுத்தோம். நிச்சிந்தையாக உடம்பைக் கீழே படர விட்டுத் தூங்கினோம். உடம்பு வலி எல்லாம் பறந்து போவது போல் இருந்தது.

விடியற்காலை நாலு மணி இருக்கும். எங்களுக்கு சரியான தூக்கம். எங்கள் ஒவ்வொருத்தியையும் யாரோ எழுப்புவது தெரிந்தது. கண்ணை விழித்தால் வீட்டுக்காரி சிந்து.

ஒவ்வொருவரையும் அவள் எழுப்பி, 'டாலி எங்கே? டாலி எங்கே?' என்று கேட்டவாறு மேலே போய்க் கொண்டே இருந்தாள்.

தூக்க அழுத்தத்தில் நாங்கள் மீண்டும் படுத்தபோது, கீழே இருந்து ஒரே கூப்பாடு கேட்டது.

அந்த இரைச்சலின் கொடூரம் தாங்காமல் கண்விழித்து விட்டோம். இரைச்சலுடன், சாமான்கள் சிதறும் சப்தங்களும் கேட்டன.

கூப்பாட்டிலிருந்து சிறிது சிறிதாக விஷயம் புரிய ஆரம்பித்தது. சாப்பிட்டுவிட்டு நாங்கள் மாடிக்கு வந்தபோது டாலி எங்களுடன் வரவில்லை. மெதுவாக டிமிக்கிக் கொடுத்துக் கீழேயே தங்கி விட்டாள். இரவில் சிந்துவின் கணவனுடன் அவன் அறையில் தங்கி இருக்கிறாள்.

வீட்டுக்காரிக்கு இரவு சுமார் நான்கு மணிக்குப் போதை தெளிந்திருக்கிறது. தூக்கத்திலிருந்து எதேச்சையாக விழித்து விட்டாள். ஏற்கெனவே அவளுக்கு டாலியைப் பற்றிச் சந்தேகம். ஆகவே நடந்ததை எல்லாம் நினைத்துப் பார்த்துக் கட்டிலிலிருந்து துள்ளிக் குதித்துக் கணவனது அறைக்குப் போய்க் கதவைத் தட்டி இருக்கிறாள். கணவன் திறந்த பிறகு உடனே போய்ப் பார்த்திருக்கிறாள். டாலியைக் காணவில்லை!

இருந்தாலும் அவள் சந்தேகம் விட்டுவிடவில்லை. மேலே மாடிக்கு வந்து டாலி இருக்கிறாளா என்று கவனிக்க வந்திருக்கிறாள். எங்களை எழுப்பிப் பார்த்ததில் டாலி இங்கே தூங்கவில்லை என்று தெரிந்துவிட்டது. பரபரப்புடன் கீழே போய்க் கணவனின் அறைக்குச் சென்று அவனது கட்டிலுக்கு அடியில் டாலி இருப்பதைக் கண்டு விட்டாள். அதனால்தான் அந்தக் கூப்பாடு, இரைச்சல் எல்லாம்!

சத்தங்கள் அமிழ வெகு நாழிகை ஆகின. அதன்பின் நாங்கள் எங்கள் தூக்கத்தைத் தொடர்ந்தோம்.

பதினொரு மணிக்கு நாங்கள் எழுந்த சில நிமிடங்களுக்கு எல்லாம் சிந்து மேலே வந்தாள். டீ குடித்துக் கொண்டிருக்கும் டாலியைப் பார்த்தாள்.

"இந்தா, டாலி! உன்னை ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி வந்தேன். அந்த ரூபாய் முழுவதையும் நீ சம்பாதித்துக் கொடுத்து

விட்டாய்! இனிமேல் நீ இங்கே இருக்க வேண்டாம். போய்விடு" என்றாள்.

டாலி மௌனமாக இருந்தாள்.

"சும்மாப் பேசாமல் இருந்து பிரயோசனமில்லை. உனக்கும் உன் குழந்தைக்கும் இனிமேல் இங்கே சோறு போட முடியாது. நீ போய் விடு" என்றாள்.

அதற்கும் டாலி பதில் பேசவில்லை.

"ஐந்நூறு ரூபாய் தந்துடறேன். இனிமே நீ இந்த வீட்டிலே இருக்க வேண்டாம். எங்கேயாவது போய்ப் பிழைத்துக்கொள்!" என்றாள்.

அதற்கும் பதில் இல்லாமல் போகவே, அன்றைக்கு சாயந் திரத்திற்குள் அவள் போக வேண்டும் என்று இரைந்து விட்டு சிந்து கீழே போய்விட்டாள்.

அன்று மாலையில் டாலி போகவில்லை. மறுநாளும் போகவில்லை. பிறகு அவள் சிந்துவின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகவும், தனக்குப் போவதற்குப் புகலிடம் இல்லை என்று கூறியதாகவும், இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் மாடியிலிருந்து கீழே இறங்குவதில்லை என்று உறுதிமொழி கூறியதாகவும் தெரிய வந்தது.

ஒரு இடைவெளிக்குப் பிறகு பல்பீர் மீண்டும் வந்தான். அவன் முகத்திலுள்ள சோகம் இன்னும் மாறவில்லை. என்னுடன் அறைக்கு வந்ததும், "கமலா! அடிக்கடி இனிமேல் இங்கே வரவேண்டி இருக்கும். வீட்டில் எனக்கு நிம்மதி இல்லை. உன்னைப் பார்த்துப் பேசினால் ஆறுதலாக இருக்கிறது. என்னை இரண்டாம் கலியாணம் செய்து கொள்ளும்படி என் உறவினர்கள் வற்புறுத்துகிறார்கள். எனக்கு அது பிடிக்கவில்லை. என் மனைவியை விட்டால் உன்மீதுதான் அன்பு! இதை விட்டால் வேறு யார் மீதும் எனக்கு அன்பு கிடையாது" என்றான்.

பிறகு வழக்கம்போல அவன் என்னை மனப்பூர்வமாக காதலிப்பதாகவும், நான் இந்த வீட்டில் இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை என்றும் கூறினான்.

நான் அவனைக் கூர்ந்து பார்த்தேன்.

“என்னை இந்த வீட்டிலிருந்து அழைத்துப் போக முடியுமா? என்றேன்.

“நீ சம்மதித்தால் முடியும்” என்றான்.

“சம்மதிக்கிறேன்” என்றேன்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மகிழ்ச்சியில் என் கைகளைப் பிடித்து உலுக்கினான். “அப்படியானால் என்னை நீ லவ் பண்ணுகிறாய்! இல்லையா கமலா, இல்லையா?” என்று குதித்தான். நான் பதிலே சொல்லவில்லை. பிறகு என்னை விடுதலை செய்ய வழி செய்வதாகக் கூறிவிட்டு அவன் போனான்.

எந்த விதத்திலாவது எனக்கு விடுதலை கிடைத்தால் போதும் என்று நினைத்தேன்.

## 27. கீர்த்தியின் வெற்றி

விரைவில் கீர்த்திக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம் வந்தது. பீகாரைச் சேர்ந்த ஒரு இந்திப் பெண் அமைதியானவள். யாரிடமும் அதிகம் பழக மாட்டாள்.

அவளுக்குத் திடீரென்று ஜுரம் வந்தது. கீழே உள்ள அறைக்கு அவளைக் கொண்டு போய்ப் படுக்க வைத்தார்கள்.

கீர்த்தியை அழைத்து அவளைக் கவனிக்கும்படி கூறினார்கள்.

கீர்த்திக்கு ஒரே மகிழ்ச்சி! எங்களுக்கு டாடா சொல்லி விட்டுக் கீழே போனாள். என் காதருகில் வந்து, “கமலா! நான் தப்பித்துப் போனால் போலீசுக்குச் சொல்லி எல்லாருக்கும் விடுதலை கிடைக்கும்படி செய்வேன். பயப்படாதீர்கள்!” என்றாள்.

அவள் போன பிறகு இரவில் நாங்கள் அவளுக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தோம்.

முதலாவது இரவு போய்விட்டது. எதுவும் நடக்கவில்லை என்று மறுநாள் கேள்விப்பட்டோம்.

மறுநாளும் நிலைமை அப்படியே இருந்தது. வேறு எதுவும் நிகழவில்லை.

பிறகு நடந்தவைகளைக் கூறினேன்.

இரண்டு இரவுகளிலும் கீர்த்தி ஒரே தவிப்பில் இருந்திருக் கிறாள். இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படியும் தப்பிவிட வேண்டும்

என்று ஆசை! எனவே தூக்கம் அவளை ஒரே அடியாக அழுத்தி னால் கூடச் சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டு இரவு இரண்டு மணிவரை விழித்து இருந்திருக்கிறாள்.

சாமான்களின் இடையே முன் தடவை ஜாக்கிரதையாக மறைத்து வைத்திருந்த சட்டுவத்தை எடுத்துக் கதவுத் தாழ்ப்பாளின் ஸ்குரூ ஆணிகளை முதல் இரவில் கழற்ற முயன்றிருக்கிறாள். (கதவு வெளியிலிருந்து பூட்டப்பட்டிருந்தது.) முடியவில்லை. ஆணிகள் உறுதியாக மரச்சட்டத்தில் இறுகி இருந்தன. ஆகவே அவைகளுக்குச் சொட்டுச் சொட்டாக எண்ணெய் போட்டிருக்கிறாள்.

மறுநாள் இரவும் முயற்சி செய்திருக்கிறாள். ஆணிகள் இளகவில்லை. அவளுக்குக் கோபம் கோபமாக வந்திருக்கிறது. சற்று பலமாகச் சட்டத்தைத் திருப்பவே, வெளியே யாரோ எழும் சப்தம் கேட்டு உடனே படுக்கையில் படுத்து விட்டாள்.

மூன்றாம் நாள் இரவு மூன்று மணி இருக்கும். கீர்த்தி சட்டுவத்தை எடுத்து ஆணிகளைத் திருகி இருக்கிறாள். ஆச்சரியம்! எண்ணெயில் ஊறிய அவை இளகித் திரும்பி விட்டன.

கீர்த்திக்குச் சந்தோஷம். ஒவ்வொன்றாகத் திருகி ஆணி களைப் பெயர்த்து இருக்கிறாள். இதற்கு வெகு நேரம் ஆகி விட்டது. கடைசி ஆணியை எடுத்ததும் கதவின் தாழ்ப்பாள் கையோடு வந்து விட்டது!

தாழ்ப்பாளை உருவிய பிறகு அதைக் கீர்த்தி கவனமாகக் கீழே வைத்தாள். பிறகு நிமிர்ந்தபோது பின்னால் ஏதோ சத்தம் கேட்பதை உணர்ந்தாள். பயத்துடன் திரும்பினாள். ஒரு கணத்தில் அவள் இருதயம் நின்று விட்டது. அவள் அருகில் ஒரு கரிய உருவம் நின்றது.

அது அந்த நோயாளி இந்திப் பெண்தான். அவள் பெயர் நிசா. கீர்த்தி செய்ததை எல்லாம் அவள் கவனித்திருக்க வேண்டும்.

கீர்த்தி ஒரு கணம் உறைந்து போனாள். பிறகு நிலைமையை உணர்ந்து சட்டென்று நிசாவின் காலில் விழுந்தாள்.

நிசா பேசவில்லை.

கீர்த்திக்கு அழுகையாக வந்தது.

"நிசா என்னைக் காட்டிக் கொடுக்காதே. என்னால் இனி அடி வாங்கித் தாங்க முடியாது. நான் செய்தது தவறு. இனி இப்படிச் செய்ய மாட்டேன்" என்றாள்.

நிசா அவளை இழுத்துக் கட்டிலில் கொண்டு போய் உட்கார்த்தினாள். பிறகு, "நீ ஏன் இவ்வளவு பயப்படுகிறாய்?" என்று விசாரித்தாள்.

"பயப்படாமல் என்ன செய்வேன்?" என்றாள் கீர்த்தி.

"உன்னை நான் வெளியில் காட்டிக் கொடுக்க மாட்டேன். நீ போகலாம்" என்றாள் நிசா.

கீர்த்தி திடுக்கிட்டாள்.

"எங்கே போவது, நிசா?"

"எங்கே போகலாம் என்று நினைத்தாயோ அங்கே!"

கீர்த்தி திக்பிரமை அடைந்தாள். நிசா சொல்வது உண்மையா, பொய்யா, என்று தெரியவில்லை!

"இல்லை நிசா! நான் போகவில்லை! இங்கேயே தங்கிவிடு கிறேன்" என்றாள்.

"இல்லை கீர்த்தி, நீ போகலாம். பயப்படாதே! எனக்கு இரக்கம் உண்டு. நான் இந்தத் தொழிலுக்குப் பரம்பரையாக வந்தவள். இங்கே சுதந்திரமாக இருக்கிறேன். ஆனால் பலாத்கார மாக உன்னையும் மற்றவர்களையும் இங்கே அடைத்து வைத்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. என்னால் வேறு ஏதாவது செய்ய முடியாவிட்டாலும் நீ தப்பித்துப் போகிறதை யாவது தடுக்காமல் இருக்க விரும்புகிறேன். புறப்படு கீர்த்தி! நீ எனக்கு இரண்டு நாட்கள் உதவி செய்ததற்கு நன்றி!"

அப்படியும் கீர்த்தி அவள் சொல்வதை நம்பவில்லை. பல தடவை நிசா வற்புறுத்திய பிறகு கீர்த்தி இணங்கினாள்.

நிசா அத்துடன் நிற்கவில்லை. தன்னிடமிருந்த பத்து ரூபாயையும் கீர்த்தியிடம் கொடுத்து, "மகிழ்ச்சியுடன் போய் வா!" என்று அனுப்பினாள்.

புறப்படும்போது கீர்த்தி நிசாவிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தாள்.

அவள் தப்பித்துப் போகும் சமாசாரத்தை என்னிடமோ, தயாவிடமோ ரகசியமாகக் கூறிவிடவேண்டும் என்றும்,

வெளியில் போனபிறகு எங்கள் விடுதலைக்கு நிச்சயம் அவள் உதவி செய்வாள் என்றும் கூறச் சொன்னாள். நிசா இணங்கினாள்.

பிறகு கீர்த்தி நிசாவிடம் நன்றி தெரிவித்துவிட்டுப் புறப் பட்டாள். கதவை மெதுவாகத் திறந்து வெளியே வந்தாள். வீட்டின் முகப்புக்கு அவள் போவது தெரிந்தது. அதன் பிறகு நிசாவால் அவளைப் பார்க்க முடியவில்லை. இருட்டில் மறைந்து விட்டாள்.

பின்னர் தனது அறைக் கதவைச் சாத்திவிட்டு நிசா படுத்து விட்டாள். மறுநாள் காலை எட்டு மணிக்கு எழுந்து கீர்த்தியைக் காணவில்லை என்றும் தாழ்ப்பாள் திறந்திருக்கிறது என்றும் வீட்டுக்காரிக்குத் தெரிவித்தாள். அவ்வளவுதான், வீடு முழுவதும் அல்லோலப்பட்டது.

மேலேயும் கீழேயுமாக வீட்டுக்காரி பல தடவை நடந்தாள். நிர்மலா, டாலி, வேலைக்காரர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு வீடு முழுதும் தேடினாள்.

மேல் மாடியில் ஒரு குளிக்கும் அறை மேலே கூரை யில்லாமல் இருக்கும். அதன் வழியாகச் சுவர் ஏறி மறுபுறம் இறங்கி விட்டாளோ என்று பார்த்தார்கள். அப்படி இறங்கு வதற்கு வசதியில்லை என்று தெரிந்தது. மேலே இருந்து கீழே குதித்தாலும் யாரும் உயிரோடு தப்ப முடியாது. அவ்வளவு உயரம்!

போவதற்கு எப்படியும் வழியில்லை என்று தெரிந்த பிறகு எல்லாரும் மீண்டும் கீழே வந்தார்கள். சிந்து தனது வேலைக் காரர்களை வெளியே அனுப்பி, அவளிடமிருந்து மாமூல் வாங்கும் ரௌடிகளை வரவழைத்தாள். அவர்களிடம் விஷயத்தைச் சொல்லி எல்லா இடத்திலும் தேடச் சொன்னாள். “இன்னிக்கு ராத்திரிக்குள் பிடித்து வருகிறோம்” என்று அவர்கள் மார் தட்டிக்கொண்டு வெளியே போனார்கள்.

இந்தச் சமயத்தில்தான் எங்களுக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது. நாங்கள் இருந்த வீட்டுக்குக் கீழே டீக்கடை வைத்திருந்த ஆளும் சரி, பக்கத்தில் வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருந்த பான் வாலாவும் சரி, யாவரும் இந்த வீட்டுக்காரியிடமிருந்து மாமூல் வாங்கிக் கொள்ளும் ரௌடிகள். இதைத் தவிரப் பக்கத்துச் சைக்கிள் ஷாப்பில் வேலை செய்பவன், எதிர் வரிசையில் கட்டில் போட்டு வேலை எதுவும் இல்லாமல்

எப்போதும் அதில் படுத்திருப்பவன் ஆகிய பலரும் இந்த வீட்டுக் காரிடமிருந்து மாமூல் வாங்குபவர்கள். சிலருக்கு மாதச் சம்பளமே கொடுத்து வந்தார்கள். பெண்களை வெளியே தப்பி விடாமல் பாதுகாப்பது இவர்கள் வேலை. தவிர, வேறு அந்நிய ஆட்கள், சந்தேகப் பேர்வழிகள் யாராவது வீட்டுக்குள் நுழைகி றார்களா என்று வேவு பார்ப்பதும் இவர்கள் வேலை. போலீஸ் வருகிறதா என்பதைக் கவனிப்பதும் இவர்கள் தொழில்! ஆகவே நாங்கள் எல்லா விதத்திலும் மிகக் கவனமாகப் பாதுகாக்கப் படுகிறோம் என்பதை அன்று உணர்ந்து கொண்டோம்.

அன்று கீர்த்தியை வீடு முழுவதும் தேடியதற்குக் காரணம் கூறுகிறேன். பொதுவாக வீட்டுக்காரி சிந்து இரவில் வாசல் கதவை அடைத்துத் தாழ்ப்பாள் போட்டு விட்டு, கதவை ஒட்டிக் குறுக்காகக் கட்டில் போட்டுக் கொண்டு படுத்து விடுவாள். (என்றைக்காவது குடி போதையில் வேறு எங்கேயாவது படுத்துக் கொண்டால்தான் உண்டு.) யாரும் அவளை அறியாமல் கதவைத் திறந்து வெளியே போய்விட முடியாது.

கீர்த்தி தப்பித்த இரவிலும் அவள் கதவருகே குறுக்காகக் கட்டில் போட்டுப் படுத்திருக்கிறாள். எனவே, அவளைத் தாண்டி கீர்த்தி போயிருக்க முடியாது. அவள் தப்பித்துப் போவதானால் அவளுக்கு ஒரேஒரு வழிதான் இருக்கிறது.

நடு இரவுக்குப் பிறகு அவள் வாசல் அறையிலேயே ஒளிந் திருக்க வேண்டும். காலை நான்கு மணிவரை அங்கேயே இருந்திருக்க வேண்டும். நான்கு மணிக்குப் பிறகு சிந்து தன் கட்டிலைத் தள்ளிப் போட்டுப் படுத்துக் கொள்வாள். இதற்குக் காரணம் உண்டு. வாடிக்கைக்காரர்களில் அநேகர் இரவு முழுவதும் இந்த வீட்டு அறைகளில் தங்கி இருப்பார்கள். அவர்களில் பலர் பொழுது விடியுமுன்பே வீட்டைவிட்டுப் போக விருப்பப்படுவார்கள். காலை நான்கு மணியிலிருந்து ஒன்று, இரண்டு என்று ஆட்கள் வெளியே போக ஆரம்பிப் பார்கள். அவர்களில் முதல் ஆள்தான் சிந்துவை எழுப்பி அப்பால் படுக்க வைப்பான். அதன் பிறகு போகும் ஆட்களைச் சிந்து தூக்கக் கலக்கத்துடன் பார்ப்பதோடு சரி! அநேகரைச் சரியாகப் பார்க்கவும் மாட்டாள். அவளது இந்த வழக்கத்தை தனக்கு அனுசரணையாக்கிக் கொண்டு, கீர்த்தி தப்பித்து வெளியே போயிருக்க வேண்டும்.

இன்னொன்றும் இங்கே சொல்ல வேண்டும். கீர்த்தி தப்பித்து விட்டாள் என்று அன்று நடந்த கலாட்டா மூலம் அறிந்து கொண்டோமே தவிர, உள்ளே அவளுக்கும் நிசாவுக்கும் நடந்த பேச்சுக்கள் யாவும் இரண்டு தினங்களுக்குப் பிறகுதான் எங்களுக்குத் தெரிய வந்தன. உடம்பு தேறி மாடிக்கு வந்த நிசா முதலில் என்னைச் சந்தித்தாள். நடந்ததை ரகசியமாகக் கூறினாள். அவள் சொன்னதை நான் நம்பவில்லை. அவள் மூலமாக வீட்டுக்காரி எங்களை உளவு பார்க்கிறாள் என்று நினைத்தோம். நிசா எத்தனையோ தடவை வற்புறுத்தியும் நாங்கள் நம்பவில்லை. தவிர, நிசாவிடம் நாங்கள் அதிகம் பேச்சுக் கொடுப்பதையும் நிறுத்தி விட்டோம். இது அவளுக்கே வருத்தமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் பல நாட்களுக்குப் பிறகு நிசா எங்களிடம் நடந்து கொண்ட முறையிலிருந்து அவள் மீது எங்களுக்குச் சிறிது சிறிதாக நம்பிக்கை விழ ஆரம்பித்தது. பிறகுதான் நாங்கள் பழக ஆரம்பித்தோம்.

இரண்டு தினங்களில் கீர்த்தியை எங்கெங்கோ தேடியும் யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. எங்களுக்கு ஒரே திருப்தி.

அந்த மகிழ்ச்சி எங்களை புயல்போல் தாக்கியது. ஒரே சந்தோஷத்தில் திளைத்தோம். எங்கள் விடுதலை வந்து விட்டது என்று நிச்சயமாக நினைத்தோம். போலீஸ் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம்.

ஒரு வாரம் ஆகியது. சிந்து எங்களை அடிக்கடி மிரட்டிக் கொண்டிருந்தாள். நாங்கள் திட்டம் போட்டுத்தான் கீர்த்தி தப்பியிருக்கிறாள் என்று எங்கள்மீது குற்றம் சாட்டினாள். எங்கே பார்த்தாலும் சிடுசிடு என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

நிசாவிடம் போய், "நீ ஏன் அவளைக் கவனிக்கவில்லை? ஏன் அசந்து தூங்கினாய்?" என்று கடுகடுத்தாள். நிசா எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

ஒவ்வொரு நாளும் நாங்கள் காலையிலேயே (ஒன்பது மணி) எழுந்து போலீசுக்காகக் காத்திருந்தோம். எந்தச் சிறு சத்தம் கேட்டாலும், "இதோ வந்து விட்டார்கள்" என்று துள்ளினோம். யாராவது கதவைத் தட்டினால்கூட எங்கள் மனங்கள் குதித்தன.

எனினும், போலீஸ் வரவில்லை.

ஒவ்வொரு நாளும் அவர்கள் வராததற்கு நாங்களே பல காரணங்களைக் கற்பித்துக் கொண்டோம். நாட்கள் செல்லச் செல்ல எங்களால் புதுக் காரணங்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அந்த நிலை வந்த பிறகு எங்கள் மனங்களில் சிறிது சிறிதாக ஏமாற்றம் தலைகாட்ட ஆரம்பித்தது.

அது ஏமாற்றந்தான். ஏனெனில் எந்தவித உதவியும் எங்களுக்கு அதன் பின் வரவில்லை.

அது இரண்டாவது பேரிடி எங்களுக்கு.

கீர்த்தி எங்களுக்குத் துரோகம் செய்பவள் அல்ல. விடுதலைக்காக எங்கள் எல்லாரையும்விட வேட்கை கொண்டவள் அவள்தான். எங்கள்மீது அவள் தனிப்பட்ட சினேக பாவம் வைத்திருப்பவள். அப்படிப்பட்டவள் எங்களை ஏமாற்றி விட்டாளா?

இருக்காது என்று நினைத்தோம். போலீசிடம் போய்ச் சொல்ல முடியாத அளவுக்கு அவளுக்குச் சில இடையூறுகள் ஏற்பட்டிருக்கலாம். அன்றோ மறுநாளோ அவள் வேறு ரௌடிகளிடம் அகப்பட்டிருக்கலாம். அவளை அவர்கள் வேறு புது வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கலாம். அல்லது பஞ்சாபிலுள்ள ஏதாவது கிராமவாசிக்கு அவளை விற்றிருக்கலாம்.

இந்த இரண்டும் இல்லாவிட்டால் டில்லியில் இருந்தால் ஆபத்து என்று மைசூரை நோக்கி ஓடியிருக்கலாம். அங்கே போன பிறகு அவளால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருந்திருக்கலாம்.

அதற்குக் காரணங்களும் உண்டு. இந்த வீடுகளில் அகப்பட்டு விட்டால், பெண்களுக்கு ஏற்படக்கூடிய பீதியை எழுத்தில் எழுத முடியாது. அது ஒரு மன நோயாகக்கூட மாறி விடும். எதைக் கண்டாலும் அவர்கள் பயப்படுவார்கள். யாரைக் கண்டாலும் நடுங்குவார்கள். அத்தகைய மிக பலவீனமான நிலைக்கு வெகு சீக்கிரம் வந்து விடுவார்கள்.

அப்படிப்பட்ட பெண்கள் வெளியில் வந்தால் உதவி வேண்டிக் கத்தக்கூட மாட்டார்கள். அப்படி ஒரு உள் தைரியத்தை இழந்திருப்பார்கள். சந்தர்ப்பங்கள் கிடைத்தும் செயலற்று, தப்பிப் போவதற்கு எந்த முயற்சியும் செய்யாமல், அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்ட சில பெண்கள் எங்களிடையே இருக்கிறார்கள்.

## 29. நிசாவும் நானும்

ஒருநாள் பல்பீர் மீண்டும் வந்தான். என்னை இந்த வீட்டைவிட்டு அழைத்துச் செல்ல வேண்டும் என்று மீண்டும் பேச்சை எடுத்தான். எந்த விதத்திலாவது வெளியே போனால் சரி என்றிருந்த நான் அவனிடம், "பல்பீர்! நான் வரத் தயார்; என்னை அழைத்துப் போக நீங்கள்தான் ஏற்பாடு செய்யாமல் இருக்கிறீர்கள்" என்று கூறினேன்.

"அப்படியா? நாளையே வந்து சிந்துவிடம் நான் பேசுகிறேன்!" என்றான்.

"என்ன பேசுவீர்கள்?" என்று கேட்டேன்.

"நாளை பாரேன்!" என்றான் அவன்!

மறுநாள் மாலை மணி நான்கு இருக்கும். சிந்து மேலே ஹாலுக்கு வந்து எங்களை எண்ணிக் கணக்குப் பார்த்தாள். மீண்டும் கீழே புறப்பட்ட போது, படியில் அவளை பல்பீர் சந்தித்தான்.

"உங்களிடம் ஒரு விஷயம்" என்றான் அவன். அவன் பேச்சு எங்கள் காதுக்குக் கேட்டது.

"என்ன விஷயம்!" என்றாள் சிந்து.

"கம்லாவைப் பற்றி" என்றான் பல்பீர்.

"கம்லாவைப் பற்றி என்ன?" என்றாள் சிந்து.

"நான் அவளை அழைத்துப் போக விரும்புகிறேன்" என்றான் பல்பீர்.

"அழைத்துப் போய்?" என்றாள் அவள்.

"என்னோடு வைத்துக்கொள்ளப் போகிறேன். அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றான் பல்பீர்.

"ஏய் சர்தார்! ரொம்ப தூரம் போய் விட்டாயே! உனக்கென்ன பைத்தியமா?" என்றாள் சிந்து.

"பைத்தியமில்லை. உங்கள் அனுமதி கேட்டுத்தான் அவளை அழைத்துப் போக விரும்புகிறேன். அவளுக்காக தொகையைக் கூடக் கொடுத்து விடுகிறேன்."

"எவ்வளவு கொடுப்பாய்?"

"ஆயிரம் கொடுக்கிறேன். அந்தத் தொகைக்குத் தானே நீங்கள் அவளை வாங்கி வந்தீர்கள்?"

சிந்துவின் இடியான சிரிப்பு மாடி வரை கேட்டது.

"சர்தார்ஜி! நீ நல்ல ஆசாமி போ! உன்னிடம் விற்பதற்காகவா அவளை வாங்கி வந்தேன்? எனக்குத் தொழில் நடக்கணும். சம்பாதிக்கணும்" என்றாள் சிந்து.

"அதற்கு வேறு ஒரு பெண்ணைப் புதிதாக வாங்கிக் கொள்ளலாமே! ஒரு பெண் என்ன, இரண்டு பெண் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். நான் கம்லாவுக்காக இரண்டாயிரம் கூடத் தரத் தயார்!"

"ஓ சர்தார்! இரண்டாயிரம் இல்லை. இரண்டு லட்சம் தந்தாலும் கம்லாவை விடமாட்டேன். அவள் எனக்குக் கிடைத்திருக்கிற தங்கம். அவள் வந்ததிலிருந்து எனக்கு வியாபாரம் கொழிக்கிறது!" என்றாள் சிந்து.

பல்பீர் அவளை வற்புறுத்திப் பல தடவை கெஞ்சிக் கேட்டான். மூவாயிரம் வரை கூடப் பணம் கொடுக்கிறேன் என்று ஆசை காட்டினான். சிந்து மசியவில்லை. தீர்மானமாக முடியாது என்று சொல்லிவிட்டாள்.

பிறகு பல்பீர் என் அறைக்கு வந்த போது வருத்தமாக இருந்தான். இந்த வீட்டை விட்டு எப்படியும் என்னை அழைத்துப் போகலாம் என்று நம்பி இருந்தான். பணத்தை அள்ளி வைத்தால் சிந்து இணங்கி விடுவாள் என்று நினைத்தான். ஆனால் இப்போது ஆசை யெல்லாம் நிராசை ஆகி விட்டது. இரவில் என்னுடன் வெகு நேரம் வருத்தத்தோடு அவன் பேசினான். இப்போது ஏமாற்றம் அடைந்தாலும், பின்னர் மீண்டும் என்னை விடுவிக்க முயற்சிகள் எடுக்கப் போவதாகக் கூறினான்.

மறுநாள் மாலை சிந்து என்னைத் தேடி வந்தாள்.

"கம்லா! அந்த சர்தார் என்ன சொன்னான்? ஆசை காட்டுகிறானா?" என்று கேட்டாள்.

"நான் அதற்கு இடம் கொடுப்பேனா தீதி! அவனாக ஏதோ உளறுகிறான்" என்று சிரித்துக்கொண்டே கூறினேன்.

"ஏமாந்து விடாதே! இவன்களெல்லாம் அயோக்கியப் பசங்கள். உன்னை விற்று துபாய்க்குக் கப்பல் ஏற்றி அனுப்பித்து

விடுவான். இவர்களை நம்பாதே! இனிப்பாகப் பேசி உன் காரியத்தை முடித்துக் கொள்! அதுக்கு மேலே போகாதே. ஆசை வார்த்தை பேசினாலும் மயங்காதே. இவனாவது, உன்னை வெளியே கொண்டுபோய்த் திருமணம் பண்ணிக்கிறதாவது! இவர்கள் ஜாதியிலே விடுவார்களா? எல்லாம் பொய்!" என்றாள்.

அந்த நேரத்தில் சிந்து சொல்வது எனக்குப் பிடிக்க வில்லை. என்றாலும் இரவில் அதைப்பற்றி சிறிது சிறிதாக யோசனை வந்தது. ஒரு வேளை அவள் சொல்வதுகூட உண்மை யாக இருக்குமோ என்று நினைத்தேன். ஆண்களின் வார்த்தை களைக் கேட்டு ஏமாந்து இந்த நரகத்துக்கு வந்தாயிற்று. இன்னமும் கேட்டு அயல் நாட்டில் அகப்பட்டுத் திண்டாடப் போகிறோம் என்று நினைத்தேன்.

கீர்த்தி எங்களைவிட்டுப் போனபிறகு ஆரம்பத்தில் எங்களுக்கு மகிழ்ச்சி இருந்தாலும் போகப் போக எங்களை அது பாதிக்க ஆரம்பித்தது. யாரோ சொந்தக்காரரை இழந்தது போல் ஒரு வெறுமை எங்களிடம் தோன்றியது. கீர்த்தி இல்லாததால் தயாவுக்கு அழுகை கூட வந்தது. அவள் தப்பித்திருக்கக் கூடாது. எங்களுடன் ஆயுள் வரை இங்கேயே இருந்திருக்க வேண்டும் என்று சுயநலமாகக் கூட நாங்கள் நினைக்க ஆரம்பித்தோம்.

எங்களுக்கு அவளால் விடுதலை கிடைக்கும் என்ற நினைவு நாளுக்கு நாள் தேய்ந்து வந்தது. அவளே வேறு எங்கே யாவது அகப்பட்டுக் கொண்டு விட்டாளோ என்ற கவலைதான் எங்களை அரிக்க ஆரம்பித்தது.

இந்திராணியை அவ்வப்போது பார்த்து வந்தேன். பாத்ரூமில் சந்திக்கும்போதெல்லாம் "கமலா, நமக்கு எப்போது விடுதலை கிடைக்கும்?" என்று கேட்பாள். "இங்கே இருக்க முடிய வில்லையே!" என்று அழுகையோடு கூறிக் கொண்டிருந்தாள்.

இந்த வீட்டிற்கு அவள் புதிதாக வந்திருந்ததாலும், மிக இளமையாக இருந்ததாலும், அவளுக்கு நிறைய வாடிக்கைக் காரர்கள் வந்து கொண்டே இருந்தார்கள். இது அவளை மிகவும் பாதித்தது. சில சமயங்களில் விரக்தியாக அலுத்துக் கொள்ளும் அவள், "தற்கொலை பண்ணிக் கொள்ளலாம்னு தோன்றுகிறது கமலா! அதுக்குக்கூட இங்கே வழியில்லையே!" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். வாழ்க்கையின் நரகங்கள் ஒரு பலாத்காரத் தோடு அவள்மீது திணிக்கப்பட்டிருந்ததால் வெகுவாகக் கலங்கிப் போயிருந்தாள். பேசுவதற்குக்கூடப் பயப்பட்டாள்.

இந்திராணியுடன் வந்த இன்னொரு பெண்ணைச் சந்திக்க வேண்டும் என்று வெகு நாட்கள் காத்திருந்தேன். அவள் இரண்டாவது மாடியில் இருந்ததால் எளிதில் சந்திக்க முடிய வில்லை. ஒரு நாள் பாத்ரூமில் அவளை எதேச்சையாகக் சந்தித்தேன்.

அந்தப் பெண் ஒரு கிறிஸ்துவப் பெண். ஆனால் அவளை லட்சுமி என்று அங்கே அழைக்கிறார்கள்.

"லட்சுமி! நீ ஏன் இந்திராணியைக் கடத்திவர உடந்தையாக இருந்தாய்?" என்றேன்.

"நானா உடந்தையாக இருந்தேன்! அந்தக் கிராதகர்கள் என்னை அப்படி நடந்து கொள்ள வைத்தார்கள். நான் அப்படிச் செய்தால் என்னை விடுதலை செய்வதாகக் கூறினார்கள். அதை நம்பினேன். மோசம் போனேன். ஆனால் இன்னொன்றும் சொல்ல வேண்டும். நான் நம்பாமல் இருந்தாலும் என்னை அவர்கள் விட்டிருக்க மாட்டார்கள். கத்தியால் மிரட்டி எப்படியும் அந்தக் காரியத்தைச் செய்யச் சொல்லி இருப்பார்கள். ஆரம்பத்திலிருந்தே என்னை அவர்கள் மிரட்டி வந்தார்கள்" என்றாள்.

"சரி, நீ எப்படி அவர்களிடம் அகப்பட்டாய்?" என்று கேட்டேன்.

"என்னை இந்த விஷயத்திற்காக ஏமாற்றியது ஒரு டீச்சர். அவள் பேச்சை நம்பித்தான் ஏமாந்தேன். என்னை இந்த இக்கட்டில் அவள் தான் மாட்டி வைத்தாள்" என்றாள்.

அப்போது சில இந்திப் பெண்கள் அங்கே வந்து விட்ட தால் அதற்கு மேல் அவளிடம் பேசவில்லை. அதன்பின் அவளை அதிகம் சந்திக்கவும் முடியவில்லை. அதனால் அவளைப் பற்றிய விவரங்களையும் நிறைய என்னால் சேகரிக்க முடியவில்லை.

அவள் நன்றாக ஆங்கிலம் பேசுவாள். (இந்திராணியும் பேசுவாள்) அவள் இந்த வீட்டிலிருந்து விடுதலை அடைய வேண்டும் என்று விரும்பினாளே ஒழிய, இந்திராணியைப் போல் அதில் விடாப்பிடியான தீவிரத்தைக் காட்டியதாகத் தெரிய வில்லை. எங்கேயாவது நாங்கள் சந்தித்தால், புன்னகை புரிந்து கொள்வோமே தவிர அதிகம் பேசியதில்லை.

கீர்த்தி தப்பித்துப் போனதிலிருந்து நிசாமீது எனக்கு ஒரு மரியாதை ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் அவளைத் தவறாக

நினைத்தோமே என்று வருத்தப்பட்டேன். அவள் ஒரு அமரிக்கையான பெண். யாரிடமும் அதிகம் பேச மாட்டாள். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பாள். எப்போதும் இந்திப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படித்துக் கொண்டு இருப்பாள். சரியோ தப்பிதமோ ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவாள். அதில் அவளது தன்னம்பிக்கை தெரியும்.

இந்தத் தொழிலுக்குத் தானாக விருப்பப்பட்டு வந்திருப்ப தால் அவளுக்குக் கண்காணிப்பு எதுவும் கிடையாது. இஷ்டப்படி வருவாள். இஷ்டப்படி போவாள். மாடியில் உள்ள இரண்டு ஜன்னல்களிலிருந்து தெருவைப் பார்க்கும் உரிமை இவளுக்கு உண்டு. இவளைப் போன்ற மற்றப் பெண்களுக்கும் (தாமாக விரும்பி இங்கே இருப்பவர்கள்) இந்த உரிமை உண்டு. மற்றப் பெண்கள் மாலை வேளைகளில் ஆட்களைக் கவர்வதற்காக ஜன்னல் அருகே உட்கார்ந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நிசா மட்டும் அப்படி உட்கார மாட்டாள். எப்போதாவது ஜன்னல் வழியாக அவள் பார்த்தால், தெருவில் போகும் ஏதாவது வியாபாரியைப் பார்ப்பதற்காக மட்டும் இருக்கும்.

அப்படி யாரையாவது பார்த்து விட்டு, "ஓ, பழக்காரா!" என்று அழைத்து விட்டு, விறுவிறு என்று கீழே இறங்கி வாசல் கதவைத் திறந்து வெளியே போய்ப் பழத்தை வாங்கி வருவாள். அவள் அப்படிச் செய்வது எங்களுக்குப் பொறாமையாக இருக்கும்.

இது தவிர, ஹாலில் நாங்கள் உட்கார்ந்திருக்கும் போது வாடிக்கைக்காரர்கள் அழைத்தால் நாங்கள் உடனே அவர் பக்கம் போய் விடுவோம். ஆனால் நிசா போக மாட்டாள். அநேகரிடம் இஷ்டமில்லை என்று கையை ஆட்டி விடுவாள். அவள் விருப்பப்பட்டால்தான் அறைக்குள் போக இணங்கு வாள். அவளது இந்தக் குணம் எங்களுக்கு விசித்திரமாகத் தோன்றும். வீட்டுக்காரி இவளுக்கு மட்டும் இடம் கொடுக் கிறாளே என்று தோன்றும். தவிர அநேக நாட்கள் அவள் இந்த வீட்டிலேயே தங்கமாட்டாள். எங்கே போகிறாள் என்பதும் தெரியாது. அபூர்வமாகத்தான் பேசுவாள். அதுவும் இந்திப் பெண்களிடம் பேசுவாளே ஒழிய எங்களிடம் பேச மாட்டாள்.

இவ்வளவு பின்னணிகளைக் கொண்ட நிசாவை நாங்கள் கர்வக்காரி என்றும், சுயநலக்காரி என்றும் நினைத்ததில் ஆச்சரிய

மில்லை. அதனால்தான் கீர்த்திக்கு அவள் உதவினாள் என்பதை எங்களால் முதலில் நம்பவே முடியவில்லை. ஆனால் போகப் போக அவள் நல்லவள் என்பதை உணர்ந்துகொண்ட நான் அவளை அடிக்கடி பார்த்துப் புன்னகை புரிய ஆரம்பித்தேன்.

அவளை எப்படியாவது சந்தித்துப் பேசவேண்டும். மனசார நன்றி சொல்ல வேண்டும் என்று பல தடவை நினைத்தேன். தவிர எங்களிடம் அவளுக்கு இரக்கம் இருந்தால், என்னை இங்கிருந்து தப்புவிக்க அவளையே ஒரு வழி கேட்க வேண்டும் என்றுகூட நினைத்தேன்.

ஆனால் ஆச்சரியம்! அவளைச் சந்தித்துப்பேச போதிய சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. அவளைக் கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருந்தது. கண்டுபிடித்தாலும் அவளிடம் பேசு வதற்குப் போதுமான வசதி கிடைக்கவில்லை. எப்போதும் அவளைச் சுற்றிப் பல இந்திப் பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

ஒரு நாள் நிசா அபூர்வமாக மாடி அறையில் இருந்தாள். தெருவில் போகும் வளையல்காரனை நிறுத்திவிட்டு, கீழே போய் வளையல் வாங்கி வந்தாள். அப்போது மத்தியானம் மூன்று மணி இருக்கும். மேலே ஹால் காலியாக இருந்தது. நான் என் மேக்-அப்பை நடுவில் நிறுத்திவிட்டு ஹாலில் போய் நின்றேன். நிசாவின் வருகைக்காகக் காத்திருந்தேன். வளையலோடு நிசா வந்தாள். புன்னகையோடு 'ஹாய்' என்றேன். நிசாவும் 'ஹாய்' என்றாள். பிறகு ஆர்வத்தோடு வளையல்களை என்னிடம் காட்டினாள்.

"ரொம்ப நன்றாயிருக்கிறது" என்றேன் நான்.

அந்தத் தொடாந்து சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்தோம்.

பிறகு நான், "நிசா! ஆரம்பத்தில் உன்னைத் தவறாக நினைத்திருந்தேன். இவ்வளவு நல்லவளாக இருப்பாய் என்று தெரியாது. பொதுவாக நாங்கள் இங்குள்ள இந்திப் பெண்களைச் சிநேகிதிகளாகக் கருதுவதில்லை. ஆனால் நீ மட்டும் அதற்கு விதிவிலக்கு. உன்னிடம் நிறையப் பேச வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்றேன்.

நிசா மகிழ்ச்சி ததும்ப என்னைப் பார்த்தாள். "நானும் உன்னிடம் பேச விரும்புகிறேன், கம்லா! இதோ ஒரு நிமிஷம்

இரு! இந்த வளையலை உள்ளே வைத்துவிட்டு வந்து விடுகிறேன்" என்றாள்.

அவள் போனதுதான் தாமதம்! டாலி எங்கிருந்தோ என் முன்னால் வந்து நின்றாள்.

"கம்லா! அவளோடு உனக்கு என்ன பேச்சு?" என்று கோபமாகக் கேட்டாள்.

"அந்தப் பெண் உங்களைச் சேர்ந்தவள் தானே! அவளோடு கூடப் பேசக் கூடாதா என்ன" என்றேன் நான்.

"அவள் யாரைச் சேர்ந்தவளாய் இருந்தால் என்ன? நீ யாரிடமும் பேசக்கூடாது" என்றாள் அவள்.

"நானாக வலியப் பேசவில்லை. அவள் வளையல் வாங்கி யிருந்தாள். என்னிடம் காண்பித்தாள். அதைப் பற்றி இரண்டு வார்த்தை பேசினோம்" என்றேன் நான்.

இந்தப் பேச்சின் சத்தம் நிசாவுக்குக் கேட்டிருக்க வேண்டும். அவள் விடுவிடென்று வெளியே வந்தாள்.

"டாலி" என்றாள் கோபமாக. டாலி அவளைத் திரும்பிப் பார்த்தாள்

"ஏன் அவளை மிரட்டுகிறாய்?" என்றாள் நிசா கடுமையாக.

"அவள் ஏன் உன்னிடம் பேச்சுக் கொடுத்தாள்? அதற்காகத்தான் கடிந்தேன்" என்றாள் டாலி.

"அவள் பேச்சுக் கொடுக்கவில்லை. நான்தான் பேச்சுக் கொடுத்தேன். அதற்கு அவள் பதில் சொன்னாள்" என்றாள் நிசா.

"யாரிடமும் அவள் பேசக் கூடாது என்பது சிந்துவின் உத்தரவு" என்றாள் டாலி.

"யாரிடமும் என்று சொல்லாதே. என்னிடம் அவள் பேசலாம். மற்ற இந்திக்காரிகளிடம் பேசலாம். நீ அதைக் கண்டிக்கக் கூடாது" என்றாள் நிசா, அழுத்தமாக.

டாலி ஒரு கணம் பேசவில்லை. முணுமுணுப்பாக "சிந்துவின் உத்தரவு! அதை நான் நிறைவேற்றுகிறேன்" என்று குனிந்தவாறு கூறிக்கொண்டே புறப்பட்டாள்.

நிசா அவளை விடவில்லை. "இதோ பார் டாலி! இங்கே வந்தபோது நீ பட்ட அவஸ்தையை மறந்து விடாதே. மற்றவர்களைப் போய் வீணாகக் கொடுமைப்படுத்தாதே! நீ

வாழ்ந்த வாழ்க்கையும், குழந்தையைப் பெற்றுக்கொண்ட விதமும் எனக்குத் தெரியும். நீ எனக்கு உபதேசம் செய்யாதே. ஏதாவது பேசினாயானால் சிந்துவிடம் உன்னைப் பற்றி ரிப்போர்ட் போய் விடும். ஜாக்கிரதை!" என்றாள்.

டாலி டோஸ் வாங்கியதைக் கேட்டு என் மனம் உண்மையில் குளிர்ந்தது.

நிசா என்னை அழைத்துக்கொண்டு அடுத்த அறைக்குப் போனாள். "உன்னிடம் கொஞ்சம் பேசவேண்டும், கம்லா!" என்று பேச ஆரம்பித்தாள்.

## 29. சிதைந்த ஓவியம்

நிசா என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்க ஆவலோடு இருந்தேன்.

ஒரு ஜாதிக்காய் அறைக்குள் நுழைந்தோம். மணி மூன்று ஆகியிருந்ததால் இந்த அறைக்கு இன்னும் கிராக்கி ஏற்படவில்லை.

முதலில் மெத்தையில் உட்கார்ந்த நிசா அதன் நெடி பிடிக்காமல் கீழே உட்கார்ந்தாள்.

''கமலா! ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் (தெற்கத்திப் பெண்கள்) என்னைத் தவறாக நினைக் கிறீர்கள். அது சரியில்லை என்று சொல்லவே உன்னைக் கூப்பிட்டேன். நான் பல சந்தர்ப்பங்களில் நெருங்கிப் பார்த்தும், உங்களில் பலர் முகம் கொடுத்துக் கூடப் பேசவில்லை. எனக்கு வருத்தமாக இருக்கிறது. கீர்த்திக்கு நான் உதவி செய்தேன் என்று தெரிந்தும்கூட என்னிடம் பேச பயப்படுகிறீர்கள்" என்றாள்.

நான் உடனே அதை மறுத்தேன். "உன்னிடம் பேச விரும்புகிறேன், நிசா! ஆனால் பொதுவாக எங்களுக்கு இங்குள்ள இந்திக்காரிகளைக் கண்டு பயம். என்ன பேசினால் என்ன தப்பு நேருமோ என்று பயப்படுகிறோம். தவிர, டாலியும் எங்களைப் பேச அனுமதிப்பதில்லை. எங்களை மிகவும் கண்காணிக்கிறாள். கீர்த்திக்கு நீ உதவி செய்ததை மறக்கவே மாட்டேன். நீ கேட்டுக் கொண்டபடியே இந்த விஷயத்தை யாரிடமும் நாங்கள் சொல்ல மாட்டோம். எங்களுக்குள்ளேயே பாதுகாப்போம். இது சத்தியம்" என்று அவளது கையைப் பிடித்துச் சொன்னேன்.

நிசா ஆரம்பித்தாள்:

"ஒரு பெண்ணைக் கடத்தி வந்து பலாத்காரப்படுத்தி இந்தத் தொழிலில் ஈடுபடச் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. அது என் மனசை அரிக்கிறது. என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரு பெண் இங்கே அடிபடும் போது நான் வேதனைப்படுகிறேன். என் காதுகளை இறுகப் பொத்திக் கொள் கிறேன். நீ அடிபட்டபோது நான் வெளியில் போய்விட்டேன். என்னால் அதைத் தாங்க முடியவில்லை. என் சுபாவம் அப்படி" என்றாள்.

மேலும் அவள் தொடர்ந்தாள்.

"ஆனால், மற்றவர் அடிபடுவதை மனப்பிரீதியுடன் பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். ஒரு பெண் சட்டென்று இணங்கி விடுவதை அவர்கள் விரும்பவில்லை. அடிபட்டுக் கனிவதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். நல்ல வேளை! நீ சிந்துவிடம் அகப்பட்டாய். நிர்மலாவிடம் அகப்பட்டால் உன் கதி மிகவும் மோசமாகியிருக்கும். நிர்மலாவுக்குப் பெண்களை அடிப்பதில் ரொம்ப ஆசை! அவள் கணவன் அதற்கும் ஒரு படி மேல்! பெண்கள் அடிபட்டுத் துடிப்பதை அவன் ரசிப்பவன். ரசிப்பதற்காகவே அடிப்பவன். பணியாதவர்கள் கிடைத்து விட்டால் அவனுக்கு ஒரே குஷி! என்றாள்.

பிறகு மேல் மாடிக்காரி தனி ரகம் என்றும், அங்கே பெண் ராஜ்யம்தான் நடக்கிறது என்றும் கூறினாள். பெண்களை அவள் பணிய வைக்கும் விதம் வேறு என்று கூறினாள். "மூன்று நாள் பட்டினி போடுவாள். பிறகு மூன்று நாள் சோறு போடுவாள். பிறகு மீண்டும் மூன்று நாள் பட்டினி போடுவாள். இப்படி இரண்டு தடவை செய்வாள். பசியின் கொடுமையை இரண்டு முறை அனுபவித்த ஒரு பெண் அது எவ்வளவு பெரிய நரக வேதனை என்பதைப் புரிந்து கொண்டு விடுவாள். மூன்றாம் தடவை பட்டினி கிடப்பதைச் சிறிதும் விரும்ப மாட்டாள். தன் மனத்தை அவள் தானாகத் தளர்த்தி இந்தத் தொழிலுக்கு தயாராகி விடுவாள்." என்றாள்.

"பிறகு இந்தத் தொழிலுக்கு நான் இஷ்டப்பட்டு வந்திருப் பதால் என்னைக் கேவலமாக நினைப்பீர்கள். இப்படிப் பட்ட தொழிலில் இறங்குவேன் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை! என் பரம்பரை அப்படிப்பட்டது அல்ல!

எப்படியோ இது நேர்ந்துவிட்டது. வருத்தப்படுகிறேன். என் அம்மாவை நினைத்தால் சோறு சாப்பிட முடியாது. அப்படியே உட்கார்ந்து விடுவேன். அவள் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ஆனால் அவளைப் போய் பார்க்க என்னால் முடியாது" என்றாள்.

"ஏன், நிசா! உனக்கு எல்லாவிதச் சுதந்திரமும் இருக்கிறதே! போய்ப் பார்த்துவிட்டு வருவதுதானே?" என்றேன்.

"பார்க்கக் கூடாது! குடும்பம் அப்படிச் சின்னாபின்னமாகி விட்டது! ஒரு சின்ன நிகழ்ச்சியால் எல்லாமே மாறி விட்டது" என்று கூறி அந்த நிகழ்ச்சியைக் கூறினாள்.

நான் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவள். பெற்றோருடனும் ஒரே தம்பியுடனும் கிராமத்தில் வாழ்ந்து வந்தேன்.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது பெரியவளாகி விட்டதால் என் படிப்பை நிறுத்திவிட்டார்கள். அதன் பிறகு ஐந்து வருடங்கள் வீட்டில் இருந்தேன். திருமண முயற்சிகள் சரியாக அமையவில்லை.

எனக்கும் எங்கள் கிராமத்தில் உள்ள பிரியதேவ் என்ற பையனுக்கும் காதல் ஏற்பட்டது. தோட்டங்களில் சந்தித்தோம். அவன் எங்களைவிட உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பையன். என்னிடம் ரொம்பக் கண்ணியமாக நடந்து கொண்டான். மணந்தால் என்னைத்தான் மணப்பேன் என்று சபதம் செய்தான்.

எங்களுக்கு அடிக்கடி சந்திக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இதில் எங்கள் உறவுகள் பல தடவை வரம்புமீறிப் போய்விட்டன. இளமையின் வேகத்தில் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. நல்ல வேளை, என் உடம்புக்கு எதுவும் நேரவில்லை.

ஒருநாள் அவனிடம் திருமணத்தை பற்றி வற்புறுத்தி னேன். அவனும் விரைவில் முடிப்பதாகக் கூறினான். வீட்டில் போய் என்ன சொன்னானோ தெரியாது. அவனது அப்பா கோபாவேசமாக எங்கள் வீடு தேடி வந்து விட்டார்.

நாங்கள் அவர் குடும்பத்தை ஏமாற்றுகிறோம் என்றும், வசதியுள்ள பையனைத் திருமணம் செய்துகொள்ளும் ஆசையுடன் நாடகம் நடத்துகிறோம் என்றும் கூச்சல் போட்டார். இந்தத் திருமணம் எப்படியும் நடக்காது என்று கத்திவிட்டுச் சென்றார்.

என் தந்தையும் தாயும் பயந்து போனார்கள். நடந்தது. என்ன என்றுகூட அவர்களுக்குத் தெரியாது. இருப்பினும் ஒருவாறு புரிந்துகொண்ட பிறகு, எங்கள் பெண்ணா காதல் செய்தாள் என்பதுபோல் பாதி அவநம்பிக்கையில் என்னைப் பார்த்தார்கள்.

நான் விடுவிடென்று பின்புறம் போனேன். தோட்டப் பாதை வழியாகத்தான் அந்தப் பெரியவர் தன் வீட்டுக்குப் போக வேண்டும். அவர் அங்கு வரும்வரை காத்திருந்தேன். வந்ததும் அவர் காலில் விழுந்து பாதங்களைப் பற்றிக் கொண்டேன்.

கிராமத்திலுள்ள பெண்களில் என்மீது அவருக்குக் கொஞ்சம் பிரியம் உண்டு. "நிசாக் கண்ணு! எழுந்திரும்மா!" என்றார்.

"மாமா! என் உடம்பை ஒன்று உங்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள். அல்லது இந்தக் கிணற்றுக்குள் போட்டுவிட்டுப் போங்கள்" என்றேன்.

அவர் ஆச்சரியத்தோடும் பயத்தோடும் என்னைப் பார்த்தார்.

"உங்கள் பிள்ளையை என்னை ஏற்க வைத்தால் இந்த உடல் மாசு இல்லாத உடல்! மற்றவர்களுக்கு என்று சொன்னால் இது மாசுபடுத்தப்பட்ட உடல்! என்று என் உடம்பைச் சுட்டிக் காட்டினேன்.

அவர் புரிந்து கொண்டு விட்டார்.

''நிசாக் கண்ணு! அவன் உன்னை மாசு படுத்தி விட்டானா?" என்றார். பிறகு என் பதிலுக்குக் காத்திராமல் கோபத்துடன் வீட்டை நோக்கி நடந்தார்.

மறுநாள் காலையில் அந்தப் பெரியவர் மிகச் சாந்தமான முகத்துடன் என் வீட்டுக்கு வந்தார். என் தந்தையைப் பார்த்து, "இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கிறேன்'' என்றார். என் பெற்றோர்களுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

ஆனால் ஒரே ஒரு நிபந்தனை போட்டார். "எனக்கு ஒரே ஒரு பெண் இருப்பது உங்களுக்குத் தெரியும். பிரியதேவுக்கு உங்கள் வீட்டில் பெண் எடுத்துவிட்டேன் என்று தெரிந்தால், என் உறவினர்களோ மற்றவர்களோ என் பெண்ணுக்குப் பிள்ளை கொடுக்கமாட்டார்கள். ஆகவே உங்கள் பெண்ணை நான்

எடுத்துக் கொள்கிறேன். அதுபோல என் பெண்ணை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி என் தம்பியை வரனாகக் கேட்டார்.

அப்பாவுக்குத் தயக்கம் இருந்தது. படிப்பு அதிகம் இல்லாத தம் பிள்ளைக்கு அந்த உயர்குலத்துப் பெண்ணை ஏற்றுக்கொள்ள அவர் விரும்பவில்லை. இருப்பினும் வேறு வழியில்லாமல் ஒத்துக் கொண்டார்.

திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமண நாள் குறிக்கப் பட்டது. கிராமமே திருமணங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

திருமணத்திற்கு முந்திய நாள்! ந்ான் வீட்டுக்கு விலக்காகி விட்டேன். திருமண நாளை ஏதோ அவசரத்தில் வைத்ததால் இதைப் பற்றி யோசிக்கவில்லை.

இப்போது இருக்கும் அறிவு மட்டும் அப்போது இருந்தால் ஏதாவது மாத்திரை சாப்பிட்டு எனக்கு நேர்ந்ததைத் தள்ளிப் போட்டிருக்கலாம். அந்த விஷயம் எங்களுக்குத் தெரியாது.

விஷயம் அறிவிக்கப்பட்டதும் பெரியவர்கள் கூடி யோசித் தார்கள். என் தம்பியின் திருமணத்தை நடத்துவது என்றும் என் திருமணத்தைத் தள்ளி வைப்பது என்றும் முடிவு செய்தார்கள்.

அதன்படி என் தம்பிக்குத் திருமணம் நடந்தது.

பிறகு இரண்டு மாதங்களில் வேளைகள் சரியில்லை. ஆதலால் மூன்றாவது மாதம் திருமணத்தை நடத்தலாம் என்று தீர்மானித்திருந்தார்கள். அவர்கள் குடும்பத்தில் யாரோ ஒரு பெண்மணி நிறை கர்ப்பிணியாக இருந்ததால், அவள் குழந்தை பெற்றெடுக்க வேண்டி திருமணத்தை மேலும் ஒரு மாதம் தள்ளி வைத்தார்கள்.

முகூர்த்தத் தேதியை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

திருமண நாள் குறிக்கப்பட்டு அதுவும் விரைவில் நெருங்கிக் கொண்டிருதது.

அதற்குள் எங்கள் குடும்பத்தில் சில நிகழ்ச்சிகள் நடந்து விட்டன.

நிசா தொடர்ந்தாள்: "என் தம்பி ஒழுங்காகப் படித்த வனல்ல. அவனது நடவடிக்கையும் சரியாயில்லை. குடியிலும்

சீட்டாட்டத்திலும் வேறு தீயவழிகளிலும் பொழுதைக் கழிப்பவன். இது எங்களுக்கு வெகு நாள் தெரியாது.

அவனுக்கும் அவன் மனைவிக்கும் விரைவில் தகராறுகள் ஏற்பட்டன. மூன்று மாதங்களுக்குள் அவை உச்ச நிலையை அடைந்தன. என் தம்பியை உதறிவிட்டு அந்தப் பெண் தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

இவை எல்லாம் நடப்பதற்கும், என் திருமண நாள் நெருங்குவதற்கும் சரியாக இருந்தது.

ஒருநாள் திடீரென்று செய்தி வந்தது. பிரியதேவ் என்னை மணக்க விரும்பவில்லை என்று சொல்லி அனுப்பினார்கள். அதனால் திருமணத்தை நிறுத்தலாம் என்றும் கூறினார்கள். எனக்குப் பெரிய அதிர்ச்சி! என் தந்தை உடனே பிரியதேவ் வீட்டுக்குப் போனார்.

தனது தங்கையின் வாழ்வு சரி இல்லாததற்குக் காரணம் என் தம்பிதான் என்றும், அவள் வாழ்வு சீரானால்தான் பிரியதேவ் என்னை மணக்க முடியும் என்றும் என் தந்தையிடம் தெரிவித்தான்.

என் தந்தை பிரியதேவின் தந்தையிடம் எவ்வளவோ வாதாடினார். பிரயோசனமில்லை.

பிறகு நாங்கள் என் தம்பிக்குப் புத்திமதிகள் சொன்னோம். அவன் கேட்கவில்லை. பதிலுக்கு ஊரைவிட்டு ஓடிப் பக்கத்து நகரத்தில் தங்கி விட்டான். அவனை ஒழுங்காக்குவதற்கு நாங்கள் எடுத்த முயற்சிகள் வீணாயின.

நான் பிரியதேவைச் சந்திக்க விரும்பினேன். வெகுநாள் அவன் என் கண்ணில் படவில்லை. மிகவும் சிரமப்பட்டுத் தேடி ஒருநாள் அவனைத் தனியாகச் சந்தித்தேன்.

"நமது காதல் புனிதமானது. அதை மறந்து விடாதீர்கள். நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிடாதீர்கள். உங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட துக்கத்திற்காக நாங்களும் வருந்துகிறோம். எங்களால் இயன்றதைச் செய்து விட்டோம். இனியும் செய்வோம். எப்படியும் என் தம்பி நல்ல வழிக்கு வருவான் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆகையால் நமது திருமணத்தை நிறுத்த வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டேன்.

பிரியதேவ் இணங்கவில்லை. "பழிக்குப் பழி" என்று கூறினான். "ஒரு ஒப்பந்தம் எப்போது உடைந்துவிட்டதோ மறு ஒப்பந்தமும் உடைக்கப்பட வேண்டியதுதான்" என்றான்.

நான் விடவில்லை. நாங்கள் அனுபவித்த தனிமைகளைப் பற்றிக் கூறி அந்தச் சமயங்களில் அவன் வரம்பு மீறினதையும் நினைவுபடுத்தினேன். என் உடலைக் களங்கப் படுத்திக் கொண்டதற்குக் காரணம் அவன் அளித்த வாக்குறுதிகள்தான் என்றேன். நடந்த தவறுகளைச் சரி செய்ய அவன் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினேன். காலைப் பிடித்துக் கெஞ்சினேன்.

அவன் இணங்கவில்லை. இன்னும் பழிக்குப் பழி என்ற நிலையிலேயே பேசினான். என்மீது சிறிதுகூட இரக்கம் காண்பிக்கவில்லை.

எனக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. "டேய் பிரியதேவ்! என்னை வஞ்சம் செய்கிறாய்! நான் இதற்குப் பயப்பட மாட்டேன். உன் முன்னால் வாழ்ந்தே கட்டுவேன்" என்று கத்தினேன்.

பிறகு வீட்டுக்கு வந்து வெகு நேரம் அழுதேன்.

விரைவில் எங்கள் திருமணம் உடைந்த செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. ஊரார் அதை ரசித்தார்கள். பிறகு நான் 'எச்சில் பட்ட பழம்' என்ற செய்தியும் அவர்களிடையே பரவிவிட்டது. இதைப் பரப்பியவன் பிரியதேவாக இருக்க வேண்டும். அவ்வளவு தூரத்திற்கு அவன் வஞ்சம் தலைவிரித் தாடியது.

அந்தச் செய்தியும் பரவிவிடவே, எனது திருமண முயற்சிகள் பயன் இல்லாமல் போயின. யாரும் என்னை மணக்க முன் வரவில்லை.

இந்தச் சமயத்தில் என் அப்பா திடீரென்று ஒருநாள் இறந்தார். அவருக்கு அடிக்கடி மாரடைப்பு வரும். அதன் காரணமாகத்தான் இறந்தார். ஆனால் அவர் துக்கம் தாளாது தற்கொலை செய்து கொண்டார் என்று ஊரில் கதை கட்டி விட்டார்கள்.

இந்தத் துக்கங்கள் என் தாயாரைப் பாதித்தன. அவளுக்கு விரைவில் சித்தப்பிரமை வந்துவிட்டது. தனக்குத் தானே பேசவும் சிரிக்கவும் தலைப்பட்டாள்.

எனக்கு ஒரு தாய் மாமன் இருந்தார். அவர் எங்களை அழைத்துப் போனார். அங்கே போன பிறகு என் தாய்க்கு மன நோய் அதிகமாகியது. அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

மாமனுக்குப் பெரிய குடும்பம்! மருமகள்கள், பேத்திகள் எல்லாரும் உண்டு. அவர்கள் என்னை விரும்பத் தகாதவள் போல் நடத்தினார்கள். என்னைப்பற்றிய விஷயம் அவர்களுக்குத் தெரியும்.

இதனால் அங்கே இருக்க முடியாமல் நான் தவித்தேன். என் கதியை நினைக்க நினைக்க ஆத்திரம் ஒரேயடியாக எழுந்தது.

நேராக ஒருநாள் கிராமத்திற்குப் போனேன். பிரியதேவைப் பார்த்தேன். என் நிலையை முழுவதும் விளக்கி அழுதேன்.

அவன் எனக்குச் செவி கொடுக்கவில்லை. இரண்டு பேருக்கும் வாக்குவாதம் எழுந்தது. அதில் அவன், "விலை மாதே" என்று என்னைத் திட்டினான்.

அந்த வார்த்தை என்னைப் பொறிகலங்க வைத்தது. என் நிலையை மறந்தேன். ஓங்கி அவன் கன்னத்தில் அறைந்தேன். "என்னை அப்படியா சொன்னாய்? நீதான் என்னை அந்தக் கதிக்கு ஆளாக்கினாய்! நான் இதுவரை அப்படி வாழ்ந்ததில்லை. இனி வாழ்ந்தே காண்பிக்கிறேன்" என்று சீறினேன்.

ஒரு ஆத்திரம் என்னை அப்படிச் சபதம் செய்ய வைத்தது. சரியா, தவறா என்று தெரியாது.

என் சபதத்தை அப்படி நிறைவேற்றிக் காட்டினேன். ஊரிலேயே இழி வாழ்க்கை நடத்தும் பெண்களோடு சேர்ந்து கொண்டேன்.

நான் அந்த வாழ்வில் இறங்கியது தெரிந்ததும், ஊரின் பேச்சு மாறியது. நல்ல குடும்பத்துப் பெண் ஒருத்தி இந்த கதிக்கு வந்துவிட்டாளே என்று ஊரார் வருத்தப்பட்டார்கள். இதற் கெல்லாம் காரணம் பிரியதேவும் அவனது தந்தையும்தான் என்று கூறினார்கள். அவர்களை மறைவாகவும் நேராகவும் திட்ட ஆரம்பித்தார்கள். வெகு சீக்கிரம் அவர்கள் குடும்பத் தையே ஒருவிதமாக ஒதுக்க ஆரம்பித்தார்கள்.

அந்தக் குடும்பம் கலகலத்து விட்டது. முக்கியமாகப் பிரியதேவின் தந்தைக்கு ஒரே வருத்தம்.

ஒருநாள் அதிகாலையில் நான் இருக்கும் வீட்டின் கதவைத் தட்டினார்கள். திறந்தால் அந்தப் பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

கண்களில் கண்ணீர் மல்க அவர் என்னைப் பார்த்தார்.

“வாங்க, பெரியவரே! காலையிலே வந்திருக்கிறீர்களே! எல்லோரும் ராத்திரியல்லவா வரணும்!” என்றேன்.

அந்த வார்த்தை சுரீர் என்று அவரைத் தாக்கியது. அவரால் நிற்க முடியவில்லை. “நிசா!” என்று தழதழத்த குரலில் அலறினார்.

நான் நகரவில்லை. அவர் வாசல் நிலையைப் பிடித்துக் கொண்டார்.

“நிசா! என்னை மன்னிச்சுடு! எனக்காக நீ இப்படி வாழ வேண்டாம். உனக்கு வேணுங்கிற பணத்தை மாதா மாதம் தருகிறேன். இந்த வாழ்க்கையை நீ விட்டு விடு” என்று வேண்டினார்.

என் மனம் அப்போது கொடூரமாக இருந்தது. அவரை நான் ஏளனம் செய்தேன். வந்த வழியே அவரைத் திருப்பி அனுப்பினேன்.

பின்னர் பிரியதேவுக்கே இருதய நோய் வந்ததாகவும், அதனால் அதிகம் நடமாட முடியாமல் கஷ்டப்படுவதாகவும் கேள்விப்பட்டேன்.

என் மனம் அதில் சந்தோஷப்பட்டது.

என் கண் முன்னால் அவர்கள் குடும்பம் அழிந்து கொண்டிருப்பதைப் பார்த்த பிறகுதான் நான் கிரமத்தை விட்டே கிளம்பினேன்.

மாமன் வீட்டுக்குப் போக இனி முகம் ஏது? இதே தொழில் செய்து பிழைப்பதற்காக நகரத்தை நோக்கி வந்து விட்டேன்.

இப்போது இவ்வளவு நாட்கள் கடந்தபிறகு நடந்ததை யெல்லாம் நினைத்து வருந்துகிறேன். நான் ஏன் அவ்வளவு வெறியோடு இருந்தேன் என்று வருந்துகிறேன். இனி அதை நினைத்துப் பிரயோசனம் என்ன?

இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து எனக்கு எல்லாத் தேவை களும் கிடைக்கின்றன. எனினும் மனம் அரிக்கிறது. எதையோ

நழுவ விட்டுவிட்டோம் என்று அடிக்கடி உள்ளம் வேதனைப் படுகிறது.

நிசா சொல்லி முடித்த பிறகு நான் ஒரு வேதனையில் மூழ்கியிருந்தேன். எனக்குச் சில இடங்களில் கண்ணீர்கூடக் கசிந்தன.

எனக்கு ஒரு விதத்தில் துன்பம், இவளுக்கு வேறு விதத்தில் துன்பம் என்று நினைத்தேன்.

பிறகு அவள் சில குறிப்பிட்ட சம்பவங்களை மட்டும் விவரித்துக் கூறினாள். அப்போது அறைக் கதவை யாரோ தட்டினார்கள். திறந்து பார்த்தால் சின்னக் கறுக்கான மீசை யுடனும் தார்ப் பாய்ச்சிய தூய வெள்ளை வேட்டியுடனும் காதில் கடுக்கனுடனும் ஒரு மார்வாரி நின்று கொண்ருந்தார். மேலே வெள்ளைச்சட்டை பளபளத்தது. குப்பென்று ஸெண்டின் நெடி வீசியது.

நிசா அவரைப் பார்த்ததும் "சேட்ஜி" என்று துள்ளினாள். "ஆ, ஆ, ஆ! நிசா! எங்கே ஒளிந்து கொண்டாய்? நான் தேடுகிறேனே!" என்றார்.

"இங்கே என் சிநேகிதியுடன் பேசிக் கொண்டிருக்கிறேன் சேத்! பம்பாயிலிருந்து எப்போது வந்தீர்கள்?" என்றாள்.

"ஒரு வாரமாச்சு! இந்தப் பக்கம் வரமுடியவில்லை. வா போகலாம்; அவசர வேலை இருக்கு!" என்றார்.

நிசா என்னைப் பார்த்து, "வரேன் கம்லா! அப்புறம் சந்திக்கலாம்" என்று சொல்லிவிட்டு, விரைவாக ஹாலுக்கு அடுத்தாற்போல் உள்ள அறைக்கு ஓடினாள்.

அந்த சேத்ஜி ஒவ்வொரு நிமிடமும் அவசரப்படுத்த, அவளும், "இதோ ஆச்சு! இதோ ஆச்சு!" என்று கத்தினாள். பிறகு பதினைந்து நிமிடத்தில் ஒரு நவநாகரிகக் குடும்பத்துப் பெண்ணைப்போல் தன்னை அலங்கரித்துக் கொண்டு, பையில் அழகான லெதர் பையுடன் ஒயிலாக சேத்ஜியுடன் அவள் புறப்பட்டாள்.

அவர்கள் கீழே இறங்கிய சில கணங்களில் ஒரு கார் புறப்படும் சப்தம் கேட்டது.

அன்று இரவு அவள் திரும்பவில்லை. மறுநாள் காலையிலும் திரும்பவில்லை. அதற்கு மறுநாளும் திரும்ப

வில்லை. எப்படியும் அவளை விரைவில் சந்திக்க வேண்டும் என்று ஆவலாக இருந்தேன்.

## 30. அம்சாவுக்கு ஒரு நாயகன்

அதற்கு இடையில் வேறு ஒரு நிகழ்ச்சி நடந்தது. விடுதலை வேண்டித் துடிக்கும் பதிமூன்று பெண்களில் யசோ என்ற பெண்ணும் ஒருத்தி. அவள் ஒரு ஊமை. ஆனால் அழகா யிருப்பாள்.

ஜாடை காட்டித்தான் விஷயத்தைத் தெரியப்படுத்துவாள். எப்போதாவது சிரிப்பாள். அல்லது கண்ணீர் விடுவாள். அவள் திடீரென்று ஒருநாள் காலை பதினொரு மணிக்கு விசித்திரமான சத்தங்களை எழுப்பிக்கொண்டு வயிற்றைப் பிசைந்தவாறு தரையில் புரண்டு துடித்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணின் பெயர் யசோ. அவள் ஒரு மராட்டியப் பெண். அவளுக்குக் கன்னடத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

ஊமையாதலால் அவளைப் பற்றி நாங்கள் அதிகம் தெரிந்து கொள்ள முடியவில்லை.

வயிற்றைப் பிசைந்தவாறு அவள் தரையில் புரண்டு கொண்டிருந்தாள். அமானுஷ்யமாகவும் கோரமாகவும் கூச்சல் களை எழுப்பிக் கொண்டிருந்தாள். வீட்டுக்காரி நிர்மலா உடனே எல்லா சன்னல்களையும் மூடிவிட்டாள்.

தரையில் யசோ ஒரு அடிபட்ட பிராணி போல் துள்ளித் துள்ளி விழுந்து கொண்டிருந்தாள். கண்கள் இரண்டும் செருகிக் கொண்டிருந்தன. முகம் வலியில் கோணிக் கொண்டிருந்தது. வாயிலிருந்து கறுப்பான உமிழ் நீர் வழிந்து கொண்டிருந்தது.

"யசோ?, என்ன?" என்று நிர்மலா அவளைக் கண்டித்துக் கேட்டாள்.

யசோவிடமிருந்து எந்த சைகையும் வெளிப்படவில்லை. மேலும் உமிழ் நீராகக் கக்கிக் கொண்டிருந்தாள்.

நிர்மலா பல தடவை கேட்டும் அவள் எந்தச் சைகையும் செய்யவில்லை.

நிர்மலாவுக்குக் கோபம்! வேலைக்காரியை அழைத்தாள். யசோவை நிலையாகப் பிடித்துக் கொள்ளச் சொன்னாள். பிறகு அவள் முகத்திலும், முதுகிலும் பட்படட்டென்று அடித்தாள்.

யசோவின் அழுகை அதிகமாகியது. நிர்மலா களைத்துப் போய் வியர்வையுடன் அப்பால் போனாள்.

பிறகு டாக்டரை அழைத்து வருமாறு வேலைக்காரியிடம் கூறினாள்.

கூடியிருந்த எங்களை அப்பால் போகுமாறு உத்தரவு இட்டாள்.

பத்து நிமிடத்தில் டாக்டர் வந்தார். யசோவைச் சோதனை செய்தார். விஷப் பொருளைச் சாப்பிட்டிருப்பதாகக் கூறினார். மாற்று மருந்து அனுப்புகிறேன் என்று வேலைக்காரியை அழைத்துப் போனார்.

மாற்று மருந்தை உட்கொண்டு பிறகு யசோ நிறைய வாந்தி எடுத்தாள். கறுப்புக் கறுப்பாக ஒரு திரவம் வெளி வந்தது. தீக்குச்சி மருந்து என்று சொன்னார்கள். அவள் என்ன சாப்பிட்டாளோ தெரியாது. அவளுடைய அவஸ்தை மட்டும் பல மணி நேரங்களுக்கு நீடித்திருந்தது.

மாலை நான்கு மணிக்கு அன்றாட அலுவல்களுக்கு வீடு தயாராகிக் கொண்டிருந்தது. மேக்-அப்புகள், பரபரப்பாக நடந்து கொண்டிருந்தன. வாடிக்கையாளர்கள் உதிரியாக வரத் தொடங்கி இருந்தார்கள்.

அதுதான் சமயம் என்று யசோ படுத்திருந்த அறைக்குள் நழுவினேன்.

புயல் ஓய்ந்ததுபோல் அவள் கீழே கிடந்தாள். முகம் கறுத்திருந்தது. வயிற்றைப் பிடித்துக் கொண்டு நீண்ட மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

"யசோ! பயப்படாதே!" என்றேன் மெதுவாக.

என்னைப் பார்த்ததும் அவளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. தன் இடுப்பை நெகிழ்த்திப் பாவாடையில் திணித்து வைத்திருந்த ஒரு துண்டுச் சீட்டை எடுத்துக் கொடுத்தாள். பிரித்துப் பார்த்தேன். கன்னடத்தில் எழுதியிருந்தாள்.

''நான் இறந்துவிட்டால் அந்த விவரத்தையாவது பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று எழுதிக் கீழே முகவரியைக் கொடுத்திருந்தாள்.

எனக்கு அழுகை வந்தது.

"யசோ, ஏன் இப்படிச் செய்தாய்? தற்கொலை செய்து கொள்ளலாமா? எங்களை விட்டுவிட்டு நீ மட்டும் இறந்து விடத் துணியலாமா? நாம் எல்லோரும் சேர்ந்து தானே விடுதலை அடையவேண்டும்? காலம் வரும். அது வரை பொறுத்திரு! இது மாதிரிச் செய்கைகளில் ஈடுபடாதே! சத்தியம் செய்! சீக்கிரம்! நான் போக வேண்டும்" என்று கன்னடத்தில் பேசி வற்புறுத்தினேன்.

என் கைகளைப் பிடித்துக் கொண்டாள். முகத்தை மட்டும் 'இனி செய்யமாட்டேன்' என்பது போல் சைகை செய்தாள்.

துண்டுக் கடிதத்தைக் கிழத்துப் போட்டுவிட்டு மேக்-அப் செய்து கொள்ள விரைந்தேன்.

வாடிக்கையாளர்களில் இளம் வயதுக்காரர்கள் பலர் வருவார்கள். மாணவர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். கிருதாக்களும் தாடிகளுமாக வருவார்கள். கண்கள் ஜிவுஜிவு என்று இருக்கும். வரும்போதே சிலர் போதையில் வருவார்கள். சிலர் சதா சிரித்துக் கொண்டே இருப்பார்கள். என்ன அழகாகச் சிரிக்கிறார்கள் என்று ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால் பின்னால்தான் அது போதைப் பொருளால் ஏற்பட்ட சிரிப்பு என்று தெரிந்து கொண்டேன்.

எங்களில் அநேகம் பேர் இவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நேபாளி, பூடானி அல்லது பஞ்சாபிப் பெண்கள்தான் இவர்களை தைரியமாக ஏற்றுக் கொள்வார்கள். தென்னிந்தியப் பெண்கள் இவர்களைக் கண்டால் பயப்படு வார்கள்.

ஆனால் தென்னிந்தியப் பெண்களைத்தான் இவர்கள் பெரிதும் விரும்பினார்கள். அவர்கள்தான் வேண்டும் என்று வீட்டுக்காரிகளிடம் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் வீட்டுக் காரிகள் இணங்கவில்லை. "அதெல்லாம் அவுங்க இஷ்டம்! அவுங்க விருப்பப்பட்டாத்தான் முடியும்பா!" என்று சொல்லி விட்டார்கள்.

ஒரு சமயம், ஒரு மாணவன் நேபாளியிடம் ஏதோ பொடியைக் கொடுத்துத் தண்ணீரோடு சாப்பிடச் சொல்லி விட்டான்.

சிறிது நேரத்தில் நேபாளி ஹாலுக்கு வந்தாள். அப்போது பாட்டு நடந்து கொண்டிருந்தது. திடீரென்று அவள் டான்ஸ் ஆட ஆரம்பித்தாள்!

அதிசயத்தோடு நாங்கள் பார்த்தோம். அது முறையான டான்ஸ் அல்ல. இஷ்டப்படி ஆடினாள். இஷ்டப்படி பாடினாள். எவ்வளவு தடுத்தும் நிறுத்தவில்லை.

பலவந்தமாக அவளைக் கீழே உட்கார்த்திய பிறகும் அவள் வெகு நேரம் சிரித்துக் கொண்டிருந்தாள். பயம் கலந்த சிரிப்பாக இருந்தது.

மறுநாள் முழுவதும் அவள் கட்டைப்போல் கிடந்தாள். கூப்பிட்டாள் கண்ணைத் திறப்பாளே ஒழிய பேச மாட்டாள்.

முழுவதுமாக அவள் தன்னிலைக்கு வர இரண்டு நாட்கள் ஆகிவிட்டன.

அந்த மாணவன் அவளுக்கு எல்.எஸ்.டி கொடுத்து விட்டான் என்று பேசிக் கொண்டார்கள்.

இந்த இளைஞர்களில் ஒருவன் மட்டும் சிறிது வெட்கத்துடன் தென்பட்டான். அவனது சகாக்கள் அவனை வற்புறுத்தி இங்கே ஒருநாள் அழைத்து வந்திருந்தார்கள். ஹாலில் கொண்டு வந்து உட்கார வைத்துக் கலாட்டா செய்தார்கள். அப்போது அவர்கள் பக்கத்தில் அம்சா என்ற தெலுங்குப் பெண் இருந்தாள். அவள் ஒரு குறும்புக்காரி. அவளும் இந்த கலாட்டாவில் கலந்து கொண்டாள். மற்ற இளைஞர்கள் அம்சாவைக் காட்டி, “டேய் கிஷன்! உன் காதலி உன்னை அழைக்கிறாள். நீ அருகில் வரா விட்டால் உயிர் விடுவேன் என்கிறாள்” என்றார்கள்.

அம்சாவும், “பிரிய காதலா! என்னைத் தனியாக விட்டு விட்டுப் போய் விடாதீர்கள்! நான் இறந்துவிடுவேன்” என்று கையைப் பிடித்துக் கெஞ்சினாள். கிஷன் கையை விலக்கிக் கொள்ள, அம்சா அவனைப் பிடித்து இழுக்க, ஒரே கலாட்டா வாக இருந்தது. சிறிது நேரத்தில் இந்த தமாஷ்கள் முடிந்த பிறகு எல்லோரும் போய்விட்டார்கள்.

இது நடந்து ஒரு வாரம் இருக்கும். மாலை வேளையில் தெரு வழியாக ஒரு நாள் கிஷன் நடந்து போனான். அப்போது சன்னல் பக்கம் இருந்த அம்சா அவனைப் பார்த்து ‘ஹாய்’ என்று கையை ஆட்டினாள். அவனும் கையை ஆட்டி விட்டுப் போனான்.

பிறகு சில நாட்களுக்கு ஒரு முறை அவன் அந்தத் தெருவில் போவதும் அம்சா ‘ஹாய்’ என்று கையை ஆட்டுவதும் வழக்கமாக இருந்தது.

பிறகு குறிப்பிட்ட கிழமைகளில் அவன் தெருவழியே போவது வழக்கமாகி விட்டது. அம்சாவும் அவனுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

ஒரு நாள் குறிப்பிட்ட நேரத்தில் கிஷன் வரவில்லை. அம்சா சன்னலில் காத்திருந்துவிட்டு - ஹாலுக்குப் போய் விட்டாள்.

இருட்டிய பிறகு இந்திப் பெண்கள் வாசல் நிலைப்படியில் போய் நிற்பார்கள். தெருவில் போகிற வருகிறவர்களைப் பார்த்துப் புன்னகை புரிவார்கள்.

ஜி. பி. ரோடில் உள்ள மற்றப் பல வீட்டுப் பெண்களும் இப்படித்தான் செய்வார்கள். ஆனால் அவர்களில் பலர் புன்னகையோடு நின்று விடுவதில்லை. "ஹேய்" என்று கையைத் தூக்கி அழைத்துத் தெருவுக்கே ஓடி, ஆட்களின் கையைப் பிடித்து இழுப்பார்கள்.

எங்கள் வீட்டுக்காரிகளுக்கு இது பிடிக்காது. அமரிக்கையாக இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். வாடிக்கையாளரைப் பிடிக்க வேண்டும் என்ற ஆவலில் ஒன்றிரண்டு இந்திப் பெண்கள் படி இறங்கி வீதிக்கு ஓடினால் வீட்டுக் காரிகள் கொம்புடன் வெளியே வந்து அவர்களை உள்ளே துரத்துவார்கள்.

குறிப்பிட்ட அந்தத் தினத்தில் இருட்டிய பிறகுதான் கிஷன் தெருவில் வந்தான். அவன் வந்ததுதான் தாமதம். இந்தக் குறும்புக்காரப் பெண்கள் விடவில்லை.

"கிஷன்ஜி! உங்கள் காதலி உங்களுக்காகக் காத்திருந்து ஏங்குகிறாள். வாருங்கள்! வாருங்கள்!" என்றாள் ஒருத்தி. மற்றொருத்தி தெருவில் குதித்துப் போய் அவன் கையைப் பிடித்து உள்ளே இழுத்து வந்தாள்.

வாசல்படிவரை அவனைக் கொண்டு வந்ததும் மற்ற பெண்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு ஒரு இந்திப் பாட்டுப் பாடி உள்ளே தள்ளினார்கள்.

ஹாலில் அம்சாவின் முன்னால் நிறுத்தி, "இதோ உன் காதலி" என்று சொல்லிவிட்டு இறங்கிப் போய் விட்டார்கள்.

அம்சா அவனை விடவில்லை. அவன் தோளின்மீது கையைப் போட்டுத் தனியாக அழைத்துப் போனாள். "கிஷன்!

உங்களுக்கு அவ்வளவு சிக்கனமா? என்னைப் பிடிக்க வில்லையா? என் மீது சில ரூபாய்களைச் செலவழிப்பது உங்களுக்கு கஷ்டமா? அடிக்கடி பார்த்துவிட்டு உள்ளே வராமல் போகிறீர்களே!" என்றாள்.

அவள் மீது அவனுக்கு விருப்பம் இருக்கிறது என்பதையும், ஆனால் இங்கே வராமல் அவனைத் தடுப்பது அவனது வெட்கமும் பயமுந்தான் என்பதையும் சீக்கிரம் அம்சா அறிந்து கொண்டாள். அவனிடம் நீண்ட நேரம் பேசி, டீயும் தின்பண்டங்களும் வரவழைத்துக் கொடுத்து, அவன் பயங்களை மிதமாக்கி, அவனைப் பத்திரமாக வெளியே அனுப்பி வைத்தாள் அம்சா!

பிறகு கிஷன் தானாகவே பல முறைகள் வந்து பணத்தைச் செலவழித்தான். அம்சாவை அவனுக்கு மிகவும் பிடித்து விட்டது.

இதில் விரைவில் அம்சாவுக்கு ஒரு அதிர்ச்சி காத்துக் கிடந்தது. கிஷன் அவளை உண்மையாகக் காதலிக்கிறான் என்பதை அவள் புரிந்து கொண்டாள். அறைக்குள் வரும் போது அவன் நடத்தை மிகக் கண்ணியமாக இருந்தது. காதல் மொழி பேசுவதிலேயே முக்கால் நேரத்தையும் செலவழித்தான். அடிக்கடி பணம் செலவழிக்க முடியாது. ஆகையால் அநேக நாட்களில் ஹால்வரை மட்டும் வந்து அவளைச் சந்தித்துப் பேசி விட்டுப் போனான். அப்போதெல்லாம் விலை உயர்ந்த பவுடர், பெர்ஃப்யூம், லிப்ஸ்டிக், யு-டி-கொலோன் போன்ற பொருள் களைப் பரிசாகக் கொண்டு வந்து கொடுத்தான்.

போகப் போக அவன் காதலில் ஒரு தீவிரம் ஏற்பட்டு, தினமும் வந்து அம்சாவைச் சந்திப்பது என்பது ஒரு வழக்கமாகி விட்டது.

அப்போதுதான் எனக்கு ஒரு யோசனை உதயமாகியது. அவனோ இளைஞன். அவனை அதிகமாக நம்பலாம். அவன் மூலம் வெளியே தப்பித்து ஓடுவதற்கு ஒரு திட்டம் வகுத்தால் என்ன?

யோசித்தேன்.

கிஷனை எந்த விதத்திலாவது பயன்படுத்தித் தப்புவதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று நினைத்தேன். இது விஷய மாக சீக்கிரம் அம்சாவைச் சந்திக்க விரும்பினேன். இந்த வீட்டில்

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளலாமே ஒழிய எளிதில் பேசிக்கொள்ள முடியாது. இதுபற்றி எற்கெனவே கூறியிருக்கிறேன். இது எவ்வளவு கொடுமையானது என்பதை அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும்.

குறிப்பாக, தென்னிந்தியர்கள் ஒருவருக்கொருவர் தென் னிந்திய மொழியில் பேசிவிட முடியாது. கண்காணிப்பு அதிகம். நாங்கள் ஒன்றாகச் சேருவதுகூட முடியாது. "ஏன் கூட்டம் போடறீங்க? தப்பித்துப்போக ப்ளான் போடறீங்களா?" என்று கேட்டு விரட்டிவிடுவார்கள்.

பாத்ரூம் ஒன்றில் சந்தித்தால்தான் உண்டு. மற்ற இடங்கள் எல்லாம் ஆபத்தானவை.

ஆகவே, நான் ஒருவரிடம் பேசிவிட்டதாகக் கூறும் உரையாடல்களில் பெரும்பாலும் ஒரே நாளில் ஒரே சந்திப்பில் நிகழ்ந்தவை அல்ல. பல நாட்களில் பல சந்திப்புகளில் நடந்தவை!

அம்சாவும் நானும் பேசும்படியான சந்தர்ப்பம் ஏற்படப் பல நாட்கள் ஆயின.

சந்தித்த பிறகு, "அம்சா! கிஷன் எப்படி இருக்கிறான்?" என்றேன்.

"நைஸ் பாய்! ஐ லைக் ஹிம்" என்றாள் அம்சா. ஒன்பது வகுப்புவரை படித்தவள். ஆங்கிலம் கலந்து பேசுவாள்.

"அவன் உன்னைக் காதலிக்கிறானா?" என்றேன்.

"எஸ்."

"நீ?" என்றேன் கேலியாக.

"உன்னிடம் சொல்ல வெட்கமில்லை, கமலா! நானும் அவனைக் காதலிக்கிறேன்" என்றாள்.

எனக்கு முதலில் திக் என்றது. பிறகு அதை இயல்பாகவே எடுத்துக் கொண்டேன். கிஷன் நல்ல தோற்றமுள்ள இளைஞன் கண்ணியமாகவும் நடப்பவன். அவனது வெட்கமே அவனுக்கு அழகு. அவனை அம்சா காதலித்ததில் ஆச்சரியமில்லை.

"ஏன், கமலா! இது தவறா?" என்றாள் அவள்.

"தவறு இல்லை. நாம் இருக்கும் சூழ்நிலையில் இது நடப்பது விசித்திரந்தானே! இந்திப் பெண்களுக்கு நடந்தால் ஆச்சரியமில்லை" என்றேன்.

"கமலா! நாம் இருக்கும் சூழ்நிலை என்று நீ சொன்னது சரி! யாரோ ஒருவன் கிணற்றுக்குள் விழாமலிருப்பதற்காக மரக்கிளை ஒன்றைப் பிடித்துத் தொங்கினானாம். அப்போது மர உச்சியிலிருந்து சொட்டும் தேனைச் சுவைத்துச் சாப்பிட்டானாம். அது போன்றுதான் என் கதியும்! ஆனால் இந்த நரகமான சூழ்நிலையில் என் காதல் எனக்குப் போதைப் பொருளாக இருக்கிறது. அதில் நான் என்னை மறக்கிறேன்" என்றாள்.

மேலும் அவள் தொடர்ந்தாள்:

"கமலா! ஒரு விஷயத்தைக் கவனி! நீ வருவதற்கு ஆறு மாதங்கள் முன்பாக நான் இங்கு வந்தேன். அன்றிலிருந்து இன்றுவரை தினமும் விடுதலை கிடைக்கும் என்று நம்பி வருகிறேன். இதுவரை கிடைக்கவில்லை. விடுதலை கிடைக்கிறது என்றே வைத்துக் கொள்! நான் ஊர் திரும்புகிறேன். என்னை என் தாயும் தந்தையும் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் ஊராரும் உறவினரும் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். 'ஒன்றரை வருடம் வெளியே போய்விட்டு வந்திருக்கிறாள்' என்று அவதூறாகப் பேசுவார்கள். இதனால் எனக்குத் திருமணம் நடக்க வழி ஏற்படாது. தவிர என் பெற்றோருக்கும் நான் சுமை யாகவே இருக்க வேண்டி இருக்கும். இதற்குப் பதிலாக இந்தக் காதல் என் திருமணத்தில் போய் முடிகிறது என்று வைத்துக் கொள். ஒரு பேச்சுக்குத்தான் இதைச் சொல்கிறேன். அப்படி நடக்கும் பட்சத்தில் அதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டியது தானே!" என்றாள்.

அவள் சொன்னது நியாயமாகப் பட்டது! ஆனால் அது நடக்குமா?

"அம்சா! நல்லதையே நினைப்போம். நம்மில் யாராவது ஒருவருக்கு நற்கதி வந்தால் நல்லதுதான்! இப்போது நான் பேச வந்த விஷயம் வேறு. அதைச் சொல்கிறேன். உன் விஷயத்துக்கும் சரி, நம் விஷயத்துக்கும் சரி, நாம் இங்கே யிருந்து விடுதலை அடைந்தால்தான் பிரயோசனம் உண்டு. இது விஷயமாகக் கிஷனைத் தயார் செய்ய முடியுமா?"

"எப்படித் தயார் செய்ய வேண்டும்?"

"உன் விடுதலைக்கு உதவுவானா என்று கேள்! அல்லது போலீசில் தெரிவிப்பானா என்று கேள். அல்லது நீ எழுதிக்

கொடுக்கும் கடிதத்தை வெளியே போய் போஸ்ட் செய்வானா, அல்லது வேறு எப்படியாவது தப்பித்துப் போவதற்கு வழி செய்வானா என்று கேள்!" என்றேன்.

"கமலா, இதையேதான் நானும் கேட்க நினைக்கிறேன். ஆனால் இன்னும் கொஞ்சம் பிடி இறுகட்டும் என்று பார்க்கிறேன். அவன் கட்டாயம் உதவி செய்வான், கமலா!" என்றாள்.

"அதில் கவனம் வை!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

அம்சா-கிஷன் சந்திப்புகள் ஹாலில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. அதை வீட்டுக்காரிகளும் அனுமதித்தார்கள். காரணம் கிஷன் கொடுக்கும் பரிசுப் பொருள்கள் எல்லாம் வீட்டுக்காரிகளுக்கே போய்க் கொண்டிருந்தன.

நானும் தயா முதலியவர்களும் இந்தச் சந்திப்புகள் ஏதாவது நன்மையில் முடிய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தோம்.

## 31. கங்காராம் கம்பெனி

நிசாவைப் பார்ப்பதற்குப் பல நாட்கள் காத்திருந்தேன். அவளைப் பார்ப்பது கூடக் கஷ்டமாக இருந்தது. இதற்காகப் பல நாட்கள், இரண்டு மணிக்கே ஹாலுக்குப் போய் உட்கார்ந்திருந்தேன். அந்த வேளையில்தான் எனக்கு ரொம்ப அசதியாக இருக்கும். அதைப் பொருட்படுத்தாது ஹாலில் உட்கார்ந்து அவளை எதிர்பார்த்திருப்பேன்.

ஒரு நாள் அப்படி உட்கார்திருக்கும்போது அவள் வந்தாள். மடக்கிய சின்ன ஜப்பான் குடையைக் கையில் வைத்திருந்தாள். என்னைப் பார்த்ததும், "ஹாய்!" என்று சொல்லி ஹாலில் உட்கார்ந்துவிட்டாள்.

அவளிடம் ஏதாவது பேச்சுக் கொடுத்து, பிறகு மெதுவாக நான் தப்பித்து போக விரும்பும் ஆசையைக் கூறி, அதற்கான வழியை அவளிடமே கேட்க வேண்டும் என்று நினைத்தேன். அந்த எண்ணத்துடன் பேச்சை ஆரம்பித்தேன்.

"உன்னைப் பல நாள் காணவில்லை நிசா! எங்கே போயிருந்தாய்?" என்று தொடங்கினேன்.

"என் பிசினஸ் பாதியும் வெளியில்தான்!" என்றால் நிசா.

"வெளியிலா" என்றேன் நான்.

''ஆமாம். நான் சில பிரமுகர்களுக்குக் கம்பெனி கொடுக்கிறேன்" என்றாள்.

"அது என்ன கம்பெனி?"

நிசா சிரித்தாள்.

"கமலா! உலகத்தில் பணம் செய்யாத காரியம் இல்லை. பணத்துடன் பெண்ணையும் கலந்து விட்டால் அவ்வளவுதான்!" என்றாள்.

"அன்று ஒரு சேத்ஜியைப் பார்த்தாயே, நினைவு இருக்கிறதா கமலா? அவர்தான் எனக்கு முதலில் பழக்கமானவர். பிளாஸ்டிக், செலுலோஸ் பேப்பர், வர்ணங்கள் இந்த மூன்றிலும் அவர் பிசினஸ் செய்து கொண்டிருக்கிறார். இது தவிர தாமே ஒரு சிறு தொழிற்சாலை நிறுவவேண்டும் என்றும் எண்ணம் கொண்டிருக்கிறார்.

அவர் ஒருநாள் இந்த வீட்டிற்கு வந்தார். ஹாலில் உட்கார்ந்திருந்த பெண்களில் என்னையே தேர்ந்தெடுத்தார். என்னை அவருக்குப் பிடித்திருந்தது. "வாருங்கள் போகலாம்" என்று அறைக்கு இழுத்தபோது, அவர் வரவில்லை. அதற்குப் பதிலாக, "வெளியே போகவேண்டும்" என்றார். "என்னை நம்பு! எதற்கும் பயப்படாதே!" என்றார். எனக்கு எதுவும் தோன்ற வில்லை. "நீங்கள் வீட்டுக்காரியிடம் பேசுங்கள்" என்று சொல்லி விட்டேன்.

அவர் நிர்மலாவிடம் பேசினார். "அதிகப் பணம் தருகிறேன். வெளியில் அழைத்துப் போகிறேன். பத்திரமாக வீடு கொண்டு வந்து சேர்க்கிறேன்" என்றார். அவள் இசையவில்லை.

பிறகு சேத் தமது முகவரியைக் கொடுத்து, தாம் ஒரு சிறு தொழில் அதிபர் என்று நிர்மலாவிடம் கூறினார். அவள் அவரைப்பற்றி விசாரிக்க ஆட்களை அனுப்பினாள். அவர் சொல்வது எல்லாம் உண்மை என்று தெரிந்த பிறகு, ஆயிரம் ரூபாய் டிபாசிட் வாங்கிக்கொண்டு என்னை வெளியே போக அனுமதித்தாள்.

முதல் நாள் போனேன். என்னை ஒரு ஓட்டல் அறைக்குக் கொண்டு போய், புது ஸாரி, துணிமணி எல்லாம் தந்து ஒரு நாகரிக யுவதியாக்கினார் சேத்ஜி. பிறகு வேறொரு ஹோட்டலில் நடக்கும் பார்ட்டிக்கு அழைத்துப் போனார்.

போகிற வழியில், "இன்று உன் பெயர் நிசா இல்லை. மிஸஸ் கங்காராம்" என்றார்.

"நான் நான்தான்! நீ என் மனைவி!" என்றார் சேத்ஜி. பிறகு அவர் மனைவி அழகாக இருக்க மாட்டாள் என்றும், பருமனாகவும் விகாரமாகவும் இருப்பாள் என்றும், அதனால் தான் என்னை அவளுக்குப் பதிலாக அந்தப் பார்ட்டிக்கு அழைத்துப் போவதாகவும் கூறினார். பார்ட்டியில் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எப்படி நாசூக்காகப் பேச வேண்டும் என்றும் கூறினார். வந்திருக்கும் நபர்களிடம் எல்லாம் நான் அதிகம் பேசக் கூடாது என்றும், நாசூக்காக ஒன்று இரண்டு வார்த்தையுடன் நிறுத்திவிட வேண்டும் என்றும் கூறினார். யாரிடமாவது அறிமுகம் ஆகும்போது, அவர் என் காலை அழுத்தினால், அறிமுகமான அந்த ஆசாமியிடம் குழைந்து குழைந்து சிறிது அதிகமாகப் பேசவேண்டும் என்றும், முடிந்தால் நான் கற்ற கலையை எல்லாம் உபயோகித்து அவரை வசீகரித்து விடவேண்டும் என்றும் கூறினார்.

எனக்கு எல்லாம் வேடிக்கையாக இருந்தது.

பார்ட்டிக்குப் போனேன். அநேகம் பேர் தங்கள் மனைவி மார்களை அழைத்து வந்திருந்தார்கள். ஒன்று இரண்டைத் தவிர எல்லாம் அவலட்சணங்கள்.

நான் அந்த டீ பார்ட்டியில் நடுநாயகமாக விளங்கினேன். என்னை எல்லோரும் பார்த்தார்கள். என்னிடம் அறிமுக மாவதற்கு எல்லா ஆண்களும் விழைந்தார்கள்.

அப்படிப் பலர் அறிமுகம் ஆகும்போது, ஒரு குறிப்பிட்ட நபரின் முன்னால் என் காலை அழுத்தினார் சேத். அவ்வளவு தான்! நான் அவரிடம் குழைந்து பேச ஆரம்பித்தேன். என் கவர்ச்சிக் கலையை உபயோகித்தேன். அந்த ஆசாமி பேசிக் கொண்டிருக்கும்போது, சேத்ஜி வேறு யாரிடமோ பேசுவதற்காக மெள்ள நழுவினார்.

நானும் அந்த ஆசாமியும் ஒரு மேஜை முன்னால் அமர்ந்தோம். ஆசாமி என்னிடம் சொக்கிப் போயிருந்தான். சுற்றிப் பார்த்துவிட்டு, என் கையைத் தொடுவதற்கு வந்தான்.

சேத்ஜி அந்த நேரத்தில சரியாக அங்கே வந்து குதித்தார்.

அவர் என்னை எவ்விதம் பயன்படுத்துகிறார் என்பதைப் பற்றிய ஒரு சூசகம் கிடைத்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

கங்காராம் சொல்லப் போவதை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் எங்கள் மேஜை முன்னால் உட்கார்ந்ததும் அந்த ஆசாமியிடம் பேச ஆரம்பித்தார்.

"மதோக்ஜி! சுதஷ்ணா (எனக்கு அவர் வைத்த தற்காலிகப் பெயர்) கெட்டிக்காரி! படித்தவள். அவளோடு பேசுவது என்றால் பொழுது போவதே தெரியாது. இதற்காக எப்போதும் நான் வீட்டில் இருக்க வேண்டும் என்று நினைப்பேன். ஆனால் முடியாது. இவளானால் தொந்தரவு செய்வாள். 'கம்பெனி வேண்டும்' என்பாள். ரொம்ப சோஷியல் டைப்! அதனால் இப்படி அழைத்து வந்தேன். உங்களிடம் நிறைய 'போர்' அடித் திருப்பாளே!" என்றார். மதோக் என்னைச் சிரித்துக் கொண்டே பார்த்தார்.

"ரொம்ப நல்லாப் பேசினாங்க! எனக்கு நல்ல பொழுது போக்காக இருந்தது. உங்கள் மனைவி இவ்வளவு மார்டனாகவும் ஸோஷியலாகவும் இருப்பாள் என்று தெரியாது. தெரிந்தால் விட்டிருக்க மாட்டேன்!" என்று ஓரக் கண்ணால் என்னைப் பார்த்தார்.

'ஹிஹிஹி' என்று கங்காராம் அசடு போல் சிரித்தார்.

நான் பதிலுக்கு மதோக்கை அழுத்தி ஒரு பார்வை பார்த்தேன்.

அன்று அத்துடன் அந்த நிகழ்ச்சி முடிவடைந்தது. மதோக் எங்களிடமிருந்து பிரியா விடை பெற்றார். காரில் ஏறின பிறகு கூடப் பின்புறக் கண்ணாடி வழியாக டாடா கூறினார். எனக்கு ஒரே சிரிப்பாக இருந்தது.

அவர் போன பிறகு கங்காராம் என் முதுகில் 'சபாஷ்' என்று தட்டினார். கையைப் பிடித்து குலுக்கினார். அவருக்கு ஒரே சந்தோஷம்!

"ரொம்பப் பிரமாதமாக நடித்தாய்! நிசா இந்தா!" என்று நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார். எனக்கு அது பெரிய தொகை.

பிறகு அவர், "நிசா! நான் நாணயமாக வியாபாரம் நடத்தினேன். இரண்டு வருடம் சரியாக நடந்தது. மூன்றாவது

வருடத்தில் பெரிய நஷ்டம். கிடைக்கவேண்டிய ஆர்டர்கள் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் மற்ற வியாபாரிகளுக்கு ஆர்டர்கள் குவிந்து கொண்டிருந்தன. எனக்கு ஆச்சரியம்! காரணத்தை விசாரித்ததில் திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. ஆர்டர்கள் பிடித்துக் கொடுக்க சில தொடர்பு ஆசாமிகள் மற்ற வியாபாரிகளிடமிருந்து பணம் வாங்கிக் கொள்கிறார்கள் என்று தெரிந்தது. பணம் மட்டுமல்ல! ஓர் இரவில் சந்தோஷமாக இருப்பதற்கு ஸ்காட்ச் விஸ்கியும், ஒரு பெண்ணையும் கூடப் பெறுகிறார்கள் என்று தெரிந்தது. வியாபாரிகள் இந்த விஷயத் திற்காகவே அழகான, கட்டுமஸ்தான இளமையும் கவர்ச்சியும் நிறைந்த பெண்களைத் தங்கள் செக்ரட்டரிகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இதுபோன்ற விஷயங் களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். செக்ரட்டரி வைத்துக் கொள்ளாதவர்கள் 'கால் கேர்ல்ஸ்'களைப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட போன் நம்பரைச் சுழற்றினால் இந்தப் பெண்கள் இருநூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரை வாடகைக்குக் கிடைப்பார்கள்.

"ஆனால் பல மாதங்களுக்கு முன் ஒரு பிஸினஸ்காரர் இன்னொரு தந்திரம் செய்ததை நான் பார்க்க நேர்ந்தது. ஒரு பார்ட்டிக்கு அவர் தமது மனைவியை அழைத்து வந்திருந்தார். அவ்வளவு அழகான மனைவி அவருக்குக் கிடையாது. இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் நன்றாக ஆங்கிலம் பேசி னாள். பிசினஸ்காரரின் மனைவி அசல் பட்டிக்காட்டைச் சேர்ந் தவள். தாய் மொழியில் கையெழுத்துப் போடக்கூடத் தெரியாது. ஆகவே அந்தப் பெண் அவரது மனைவி அல்ல என்று தெரிந்தது. பார்ட்டிகளில் தமக்கு ஒரு அந்தஸ்தை ஏற்படுத்திக் கொண்டு, அதன் மூலமாக வியாபார அனுகூலங்களைப் பெறுவ தற்காக அப்படி ஒரு நாடகம் நடிக்கிறார் என்பதை அறிந்தேன்.

"கடனில் படிப்படியாக மூழ்கிக் கொண்டிருந்த எனக்கு இந்த நாடகத்தின்மீது அதிகப் புத்தி போயிற்று. அதனால் தான் ஒரு முடிவெடுத்து உன்னை அதற்குப் பயன்படுத்திக் கொள்கிறேன்" என்றார் கங்காராம்.

சில நாட்கள் சென்றன. கங்காராம் மதோக்கை ஏமாற்ற இன்னொரு வேலை செய்தார். அவரை விருந்து சாப்பிடத் தமது வீட்டிற்கு அழைத்தார்.

வீடு என்றால் உண்மை வீடு அல்ல. ஒரு அபார்ட்மெண்டைத் தமது வீடு என்று சொல்லிக் கொண்டார். வீடு என்ற தோற்றத்தை உண்டு பண்ணுவதற்காக நூறு ரூபாய்க்கு அதை வேறு ஒரு கம்பெனி ஊழியரிடம் வாடகைக்கு விட்டிருந்தார். (அபார்ட்மெண்டின் மாத வாடகை எண்ணூற்று இருபது ரூபாய்.) அந்த ஊழியரிடம் ஒரு நிபந்தனை விதித்திருந்தார். ஒரு படுக்கை அறையும் டிராயிங் அறையும் தமக்கு வேண்டும் என்றும், அது தவிர மீதி எல்லா இடங்களிலும் ஊழியரின் குடும்பத்தார் புழங்கிக் கொள்ளலாம் என்றும் நிபந்தனை விதித்தார். குறிப்பிட்ட இரவுகளிலோ பகல்களிலோ ஏதாவது ஒரு பெண்ணுடன் அவரோ, அல்லது அவருக்குத் தெரிந்தவரோ அங்கே வந்து தங்குவார்கள் என்றும், அவர்களுக்கு வேண்டிய தேவைகளை அவர்கள் (ஊழியரின் குடும்பத்தார்) கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்காகத் தனியாகப் பணம் கொடுப்பதாவும் கூறியிருந்தார்.

அப்படிப்பட்ட அபார்ட்மெண்டில்தான் மதோக்கை விருந்துக்கு அழைத்திருந்தார்.

விருந்து நடந்தது. மதோக்கை உபசரித்தேன். கங்காராம் அடிக்கடி எங்களைத் தனியே விட்டுவிட்டு உள்ளே போய்க் கொண்டிருந்தார். அந்த நேரங்களில் மதோக்கிடம் அந்தரங்கமாகப் பேசினேன். அதைவிட மேலே போவதற்கு இன்றும் அனுமதி கொடுக்கவில்லை.

இதுபோல் இரு சந்திப்புகள் நடந்தன. அதற்குள் மதோக் வெகுவாகக் குழைந்துவிட்டார். வியாபாரத்திற்கு வேண்டிய ஆர்டர்கள் தருவதற்கு அவர் ஒப்புக்கொண்ட பிறகு எனக்குக் கங்காராம் அனுமதி கொடுத்தார். நானும் வரம்புகளை மீறினேன். நான் ஒரு விலைமாது என்று தெரிந்தால் மதோக் அவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பாரோ என்னவோ? கிடைக்க முடியாதது கிடைத்து விட்டது என்பதில் அவருக்கு ஒரே மகிழ்ச்சி!

அதற்குப் பிறகு கங்காராம் என்னை பல பார்ட்டிகளுக்கு அழைத்துப் போனார். அங்கெல்லாம் நான் அவரது மிஸஸ் ஸாக நடந்து கொண்டேன்.

என்னால் அவருக்கு அனுகூலங்கள் ஏற்படுவது தெரிந்த பின்னர் என்னை அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினார். ஒரு விஷயம் சொல்ல வேண்டும். அவருடன் நான் தனியே

எத்தனையோ முறை இருக்க வேண்டிய நிலை வந்தது. எப்போ தாவது அவர் என்னிடம் தவறாக நடந்து கொண்டது கிடையாது! மிகவும் கண்ணியமாக இருந்தார்.

இப்படி வெளியே போன சந்தர்ப்பங்களில் கங்காராமுக் காக நான் பல அதிகாரிகளைக்கூடத் திருப்திபடுத்த வேண்டி வந்தது. அவர்களில் அநேகர் தென்னிந்தியர்கள்.

எனக்கு வருமானம் அதிகமாகியது. அதை ஒரு பாங்கில் போட்டு வைத்திருக்கிறேன். சமீபத்தில் ஒரு ஃப்ளாட்டுக்கு அப்ளிகேஷனும் போட்டிருக்கிறேன்.

கங்காராமின் தொடர்பினால் இன்னொரு நன்மையும் ஏற்பட்டிருக்கிறது. வாரம் இரண்டு முறை அவரது வாடகை அபார்ட்மெண்டில் ஒரு பெண்மணி வந்து எனக்கு நடைமுறை ஆங்கிலம் சொல்லித் தருகிறாள். பார்ட்டிகளில் நான் படித்தவள் போல் ஒருவித லிஸ்பிங் இங்கிலீஷில் பேச வேண்டும் என்பது சேத்ஜியின் விருப்பம். அதற்காகப் பாடம் நடக்கிறது.

கங்காராம் என்னை மேலும் இரண்டு பேருக்கு அறிமுகப் படுத்தியிருக்கிறார். அவர்களுக்காகவும் நான் பார்ட்டிகளில் மிஸஸ் வேடம் போட்டு வருகிறேன். சிலருக்கு ஜாலியாகக் கம்பெனி கொடுத்து வருகிறேன்.

இந்த ஏமாற்றுக் கலை டில்லியில் நன்றாகப் பரவி யிருக்கிறது. இதற்கு அனுசரணையாக பல அபார்ட்மெண்டுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன.

நிசா விஷயம் யாவற்றையும் சொல்லி முடித்தபோது, எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நீ சொல்வதெல்லாம் ஏதோ கனவு போல் இருக்கிறது, நிசா!" என்றேன் நான்.

"நான் கூட இப்படி எல்லாம் நடக்கும் என்று நம்பவே இல்லை. பெரிய பதவி வகிப்பவர்களும், கம்பெனி அதிகாரி களும், இன்னும் மேல்மட்டத்தில் உள்ளவர்களும் இவ்வளவு தூரம் கீழே இறங்குவார்கள் என்று நினைக்கவே இல்லை! பல காரியங்கள் நடப்பதற்கு இவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பதோடு மட்டும் நிறுத்துவதில்லை. ஒரு இரவை ஆனந்தமாகக் கழிக்க மதுவையும், பெண்ணையும் கொடுக் கிறார்கள். இது ஒரு மாமூலாகக்கூட மாறிக்கொண்டு வருகிறது. இந்தக் காரியத்திற்காக டில்லியில் நான் பார்க்காத ஓட்டல்

கிடையாது. ஐந்து ஸ்டார் ஓட்டலிலும் தங்கியிருக்கிறேன். அப்படி ஒரு இரவைக் கழிக்கும்போது, என்னோடு இருக்கும் மனிதருக்கு மட்டும் நான் ஒரு ஜி.பி. ரோட்டுப் பெண் என்று தெரிந்து விட்டால் ஐயோ, அவ்வளவு தான்!" என்றாள் நிசா.

"இந்தப் பெரிய மனிதர்கள் உன்னிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள்?" என்றேன்.

"பெரும்பாலும் கண்ணியமாக நடந்து கொள்கிறார்கள். இங்கே நடப்பதற்கும் அங்கே நடப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம். அங்கே வருகிறவர்கள் என் மனம் கோணாமல் நடப்பார்கள். தாங்கள் இரட்டை வாழ்க்கை வாழ்வதை அவர்கள் வெளியே தெரியவே கூடாது என்று நினைப்பவர்கள். ரொம்பக் கண்ணியவான்கள் போல வெளியே நடந்து கொள்பவர்கள்" என்றாள்.

பிறகு ஒவ்வொருவரின் தனியான விருப்பங்களைப் பற்றியும் சிரிக்கச் சிரிக்கப் பேசினாள். ஒவ்வொருவரையும் அவள் நடத்தும் விதங்களைப் பற்றியும் கூறினாள்.

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே எனக்கு என் கேள்விதான் மனத்தில் பிரதானமாக அரித்துக் கொண்டிருந்தது. நிசாவிடம் தப்பித்துப் போக உதவி கேட்கலாமா, கூடாதா என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். கடைசியில் வாய் திறந்து கேட்டேன்.

"நிசா! எனக்கு ஒரு உதவி செய்வாயா?"

அந்தக் கேள்வியைக் கேட்டபோது எனக்கு உள்ளூறப் பயந்தான். நிசா என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலோடு காத்திருந்தேன்.

"உனக்குத் தப்பித்துப் போக ஆசையா?" என்று சாதாரண மாகக் கேட்டாள் நிசா.

"ஆமாம்."

"தப்பித்துப் போய் எப்படிப் பிழைப்பாய்?"

"என் குடும்பத்துடன் சேர்ந்து விடுவேன்."

"சரி, எப்படித் தப்ப விரும்புகிறாய்? நான் என்ன உதவி செய்யவேண்டும்?"

எனக்குச் சங்கடமாக இருந்தது. எப்படித் தப்புவது என்பதை அவளே சொல்வாள் என்று எதிர்பார்த்தேன். என்னிடமே கேட்கிறாள். என்ன செய்ய?

"அதுதான் தெரியவில்லை, நிசா! நீ ஒரு வழி சொல்ல முடியுமா?"

நிசா யோசித்தாள். பிறகு, "கமலா, கீர்த்தி தப்பித்துப் போனதிலிருந்து வாசல் உள் தாழ்ப்பாளுக்குப் பெரிய பூட்டுப் போட்டு விட்டார்கள் தெரியுமா?" என்றாள்.

"தெரியாது."

"இப்போது அதிகாலையில் சிந்து எழுந்திருக்கும் போது வேலைக்காரியும் எழுந்திருக்கிறாள். இரண்டு பேரும் சேர்ந்து வெளியே போகும் வாடிக்கையாளர்களைக் கண்காணிக்கிறார்கள். எனவே கீர்த்தி தப்பி ஓடியது போல் ஓடுவது கஷ்டம்."

"அதனால்தான் என்ன செய்வது என்று தெரியவில்லை."

"இன்னொரு விஷயமும் இருக்கிறது. கீர்த்தி தப்பித்துப் போனதற்கு நான் உடந்தையாயிருந்தேன் என்று உங்களிடம் தெரிவித்திருக்கின்றேன். இதில் எனக்குப் பயமும் உண்டு. யார் மூலமாவது இந்த விஷயம் தெரியவந்தால் வீட்டுக்காரிகள் சும்மாவிடமாட்டார்கள். தவிர எனக்கு இந்த வீட்டிலேயே விரோதி டாலி இருக்கிறாள். என்னிடம் ஏதாவது தப்புக் கண்டு பிடிக்கத் துறுதுறு என்று அலைகிறாள். உன்னிடம் நான் அதிகம் பழகுவது சந்தேகத்தைத் தந்திருக்கிறது! இந்தக் காரணங் களால் நான் உதவி செய்ய நினைத்தாலும் எதையும் துணி கரமாகச் செய்ய முடியாது. தவிர, கமலா எனக்கு இந்த வீட்டை விட்டால் வேறு போக்கிடம் கிடையாது. அதனால் நான் கவனமாக இருக்க வேண்டும். இப்படிச் சொல்வதால் நான் உதவ விரும்பவில்லை என்று நினைத்துவிடாதே! நீ திட்டம் போடு! என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்றாள்.

"சரி நிசா, எனக்கு ஒரு காரியம் செய்ய முடியுமா? நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை நீ வெளியே போஸ்ட் செய்ய முடியுமா?" என்றேன்.

ஒரு கணம் அவள் யோசித்தாள்.

"யாருக்கு எழுதுவாய்?"

"என் வீட்டுக்கு."

"வீட்டுக்கா? உன்னை இந்த இடத்திலிருந்து மீட்டுக் கொள்ளச் சொல்லி கடிதம் எழுதுவாய்! அப்படித்தானே?"

"ஆமாம்."

"அப்படி எழுதுகிறாய் என்று வைத்துக்கொள். உன் வீட்டுக்காரர்கள் இங்கே தக்க துணைகளுடன் வந்து கலாட்டாச் செய்வார்கள். இதனால் இங்குள்ள எல்லோருமே பாதிக்கப் படலாம். நானும் பாதிக்கப் படுவேன். உனக்குத் தெரியும். இங்குள்ள பெரும்பாலான பெண்களுக்கு இது ஒரு பிழைப்பு. இதை விட்டால் வேறு கதி கிடையாது. ஆகவே அவர்கள் பிழைப்பில் மண்ணை வாரிப் போடுவது தவறு! இன்னொரு விஷயமும் இருக்கிறது. அப்படி உன்னைத் தேடி உங்கள் ஆட்கள் வருகிறார்கள் என்று தெரிந்தால், உன்னைக் கண் காணாத இடத்தில் ஒளித்து வைத்துவிடுவார்கள். ஒரு பெண்ணை அதைப் போலத்தான் செய்தார்கள். மாடியிலிருந்து கயிறு கட்டிப் பின்புறத்தில் இறக்கி வேறு ஒரு வீட்டிற்குக் கொண்டு போய் விட்டார்கள். பெண்ணைத் தேடி வந்தவர்கள் உள்ளே வந்து அநாவசியமாகத் தேடியதுதான் மிச்சம். ஆகவே அதுபோல ஏதாவது செய்து விடாதே! ஒன்று செய்! கீர்த்தியைப் போலத் தப்பித்து ஓட வழி தேடிக் கொள்! உன் வரையில் மீட்டுக் கொள்ளப் பிரயாசைப்படு!" என்றாள்.

அவள் சொல்வதில் சில நியாயங்கள் தோன்றின. எனினும் இந்த வீடு அதனால் பாதிக்கப்படும், அவர்கள் பிழைப்புக் கெட்டுப் போகும் என்பதை என்னால் ஒத்துக் கொள்ள முடிய வில்லை. இது போன்ற வீடுகள் இருப்பதால் தானே என்னைப் போன்ற அபலைகளை மனிதர்கள் கடத்தி வருகிறார்கள்? இதனால் எத்தனை குடும்பங்களுக்குக் கஷ்டங்கள்! துயரங்கள்! எங்களுக்கு எவ்வளவு பெரிய நரக வேதனை! இவைகளை யெல்லாம் வெளியே சொல்ல முடியவில்லை. நிசா சொல்வதை ஆமோதிப்பது போல் தலை ஆட்டினேன். இந்த அளவுக்கு எங்கள் மீது இரக்கம் காட்டு கிறாளே என்பதில் ஒரு திருப்தி!

## 32. திட்டத்தின் முடிவு என்ன?

**வெ**கு நாட்களுக்குப் பிறகு இந்திராணியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பாத்ரூம் அருகில் இருக்கும் வாஷ் பேசினில் ஒரு நாள் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள். எனக்குப் பகீர் என்றது.

''இந்திராணி! இது என்ன?'' என்று திடுக்கிட்டுக் கேட்டேன்.

"பயப்படாதே! குருமாவைச் சாப்பிட்டேன். ஜரிக்க வில்லை" என்றாள்.

"நல்ல வேளை, நான் பயந்து விட்டேன்!" என்றேன்.

குமட்டல் முடிந்த பிறகு அவள் திரும்பிப் பார்த்தாள். முன்னைக்கு இப்போது அவள் இளைத்திருந்தாள்.

''கமலா! நாம் எப்போது விடுதலை அடைவோம்? இங்கேயே இருந்துவிட வேண்டி வருமா? நீங்கள் எல்லோரும் ஏதாவது முயற்சி செய்கிறீர்களா?" என்று வழக்கமாகக் கேட்கும் கேள்விகளையே கேட்டாள்.

அவளுக்குச் சாதகமாகச் சில வார்த்தைகளைச் சொன்னேன். ஆனால் சொன்ன வார்த்தைகள் மீது எனக்கே நம்பிக்கையில்லை.

இந்திராணிக்கு இங்கே பல பிரச்சனைகள் தோன்றி யிருந்தன. தோற்றத்தில் அவள் சின்னவளாக இருந்தாள். மெல்லி தான உடம்பு! பார்க்கும்படியான உடற்கட்டு! வீட்டிற்குப் புதிது வேறு! இதனால் அவளுக்கு அதிகக் கிராக்கி! வந்தவர்களில் அநேகர் அவளையே நாடினார்கள். சமயங்களில் அவளுக்காகக் கியூவில்கூடக் காத்திருந்தார்கள். இரவு வந்து விட்டால் அவளுக்கு ஓய்வே கிடையாது. சாப்பிடுவதற்குக்கூட நேரம் கிடையாது.

"இந்து! ஆள் வந்திருக்கு" என்று உயிரை எடுப்பார்கள்.

இரவின் நெரிசலை உணர்ந்த பலர் பகலிலேயே வர ஆரம்பித்தார்கள். பன்னிரண்டு மணி, ஒரு மணி என்றெல்லாம் வந்தவர்கள், பதினொன்றுக்கும் பத்துக்கும் வர ஆரம்பித்தார்கள். ஒருநாள் காலை பத்து மணிக்கு அயர்ந்து தூங்கிக் கொண் டிருக்கும் அவளை (காலை பத்துமணி என்பது நாங்கள் நன்றாகத் தூங்கும் நேரம்) எழுப்பி, வாடிக்கையாளரிடம் அனுப்புவதை நான் நேரில் பார்த்தேன். எனக்கு வேதனையாக இருந்தது. இந்திராணியின் தூக்கமும் ஓய்வும் அதனால் அடிக்கடி கெட்டுக் கொண்டிருந்தன.

ஒருமுறை இரவு ஒன்பது மணிக்கு ஒரு வாடிக்கையாளரை முடித்து அனுப்பிவிட்டு வந்தவள், இன்னும் இரண்டுபேர்

ஹாலில் காத்திருப்பதைப் பார்த்து அசந்து விட்டாள். "நான் முடியாது" என்று மறுத்தாள். டாலி அவளை விரட்டினாள். அவளுக்குப் பயந்து எழுந்த இந்திராணி இரண்டடி எடுத்து வைத்ததும் தொப்பென்று மயங்கி விழுந்தாள். உடனே அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார்கள். சூடாக டீ கொணர்ந்து குடிக்க வைத்தார்கள். பிறகு அவளை எழுப்பி நிற்கவைத்து, தோளைப் பிடித்து கொண்டுபோய் வாடிக்கையாளருடன் வலுக் கட்டாயமாக அனுப்பி வைத்தார்கள்.

இப்படி ஒழிவில்லாத இயந்திர வாழ்க்கை வாழ்ந்ததில் இந்திராணியின் உடம்பு இளைத்ததில் ஆச்சரியமில்லை.

அவளது பிரச்சனைகளை அறிந்த நாங்கள் உபதேசம் செய்ய ஆரம்பித்தோம். வாடிக்கையாளரிடம் நடந்து கொள்ள வேண்டிய வழிகளைப் பற்றிக் கூறினோம். அவர்களை அதிருப்திப்படுத்தும் முறைகளைப் பற்றிக் கூறி, அப்படிச் செய்தால்தான் அவர்கள் அவளைத் தேடி வரமாட்டார்கள் என்று கூறினோம். இந்திராணி நாங்கள் சொன்னபடி நடந்து கொண்டாள். இருப்பினும் அவளுடைய பிரச்சனைகள் கணிச மான அளவுக்குக் குறையவில்லை. அவள் ஒரு சின்னப் பெண் ஆதலால் வருபவர்கள் அவளை மிரட்டி உருட்டித் தங்கள் வழிகளுக்கு இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆகவே, அன்று அவளை நான் சந்தித்து, சமாதானங்கள் கூறி "நாம் சீக்கிரம் விடுதலை அடைவோம்" என்று சொன்ன போது, அவள் என் தோள் மீது சாய்ந்துவிட்டாள். "கமலா! நான் சாப்பிட்ட ஆகாரத்தை ஜீரணிக்கக்கூட விடமாட்டேங்க றாங்க! உடம்பைப் பாழாக்கறாங்க. இதுக்கு ஒரு முடிவே கிடையாதா?" என்று குலுங்கி அழுதாள்.

நான் மேலும் சமாதானம் கூறித் தேற்ற முயன்றேன். ஆனால் எனக்கே அழுகையாக வந்தது. அந்த நேரத்தில் "இந்து, ஆள் வந்திருக்கு!" என்று குரல் கேட்டதும் அவள் பறக்க வேண்டி வந்தது.

அவள் போன பின்னர் நான் வருந்தினேன். அவள் அப்போது நிர்மலாவின் குழுவில் இருந்தாள். எங்களைப் போல் சிந்துவிடம் இருந்தால் அவ்வளவு கஷ்டப்பட வேண்டியிராது. ஏனெனில் இங்குள்ள மூன்று வீட்டுக்காரிகளுக்குள் சிந்து நல்லவள். அல்லது மற்றவர்கள் செய்யும் கொடுமைகளைவிட

அவள் செய்யும் கொடுமைகள் குறைவு என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் விருப்பப்படாவிட்டால் எந்த வாடிக்கையாளரையும் புறக்கணித்து விடலாம். அதற்கெல்லாம் சுதந்திரம் கொடுத்திருந்தாள். வேளை கெட்ட வேளையில் வரும் சிலரிடம், "தம்பி! கமலா தூங்குது. போய்ட்டு அப்புறம் வாயேன்" என்று சொல்லி அனுப்பி விடுவதற்கு மாடி வீட்டுக்காரி சிந்து அல்ல! அவளுக்கு வருமானந்தான் குறி! அவளிடம் அகப்பட்டதால்தான், இந்திராணி அதிகமாகக் கஷ்டப்பட வந்தது.

ஒருநாள் இரவு எங்களுக்குக் கீழே சிந்துவுடன் விருந்து நடந்தது. வழக்கமான எல்லாக் கேலிகளும் நடந்தன. சிந்துவின் கணவர் என் பக்கத்தில் உட்கார்ந்தார். "நான் கம்லாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன். இனிமேல் இந்த வீட்டுக்குத் தீதி அவள்தான். சிந்து அல்ல!" என்று சொல்லி என் முதுகைத் தட்டியபோது, சிந்து உள்பட எல்லோரும் சிரித்தார்கள். அன்று விருந்தில் டாலி கலந்து கொள்ளவில்லை.

சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு அதிசயம் நிகழ்ந்தது. தட்டு களை முற்றத்தில் கொண்டு வைக்கும்போது மேலே உயரத்தில், ஒரு மலையாளத் துண்டின் அகல நீளத்தில் தெரிகிற வானத்தில் முழு நிலா தெரிந்தது. அப்பா! நிலாவைப் பார்த்து எவ்வளவு காலம் ஆயிற்று! உலகத்தில் நிலா என்று ஒன்று உண்டா? அது இப்படித்தான் வெள்ளியாக வட்டவடிவத்தில் மேலே இருந்து நம்மைப் பார்த்துக் கொண்டிருக்குமா?

என் உடம்பு பூரித்தது. மெய் மறந்து நிலாவையே பார்த்துக் கொண்டிருந்தேன். பார்க்கப் பார்க்க உள்ளே மகிழ்ச்சியும் தாங்கவில்லை. துக்கமும் தாங்கவில்லை.

கும்மாள இரவு ஒன்றில் நான் கீழே இறங்கி வாசல் கதவு வரை போனதும், தப்பிப் போகாமல் துரதிருஷ்டவசமாய் உள்ளே திரும்பி வந்ததும் நினைவு இருக்கலாம். அதன் பிறகு அது போன்ற உல்லாச இரவுக்காக வெகு நாட்கள் காத்திருந் தேன். முன்பெல்லாம் அடிக்கடி வரும் அந்த இரவுகள், நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்ததாலோ என்னவோ வெகு நாட்கள் வரை வரவேயில்லை.

ஆனால், ஒருநாள் அந்த இரவு நான் எதிர்பாராமலே திடீரென்று உதயமாயிற்று.

உல்லாச இரவு உதயமானது எப்படி என்று கூறுகிறேன்.

பல்பீரைப் பற்றி பல தடவை கூறி இருக்கிறேன். இந்த வீட்டை விட்டு என்னை அழைத்துப் போக அவன் விரும்பி னதைப் பற்றியும் கூறியிருக்கிறேன். இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து என்னை 'வாங்குவதற்காக' அவன் எடுத்த முயற்சி தோல்வியுற்றதிலிருந்து என்னை வேறு எப்படியாவது வெளியே கொண்டுபோய் விடவேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தான்.

அவனும் நானும் பல வழிகளை யோசித்தோம். எதுவும் சரியாக அமையவில்லை. கடைசியில் நான் இந்த உல்லாச இரவு யோசனையைச் சொன்னேன்.

முதலில் அவனுக்கு அதில் நம்பிக்கையில்லை. பிறகு நான் முந்திய தடவையில் எப்படித் தப்ப முயன்றேன் என்பதைச் சொன்ன பின்புதான் நம்பிக்கை பிறந்தது.

"எவ்வளவு செலவாகும்?" என்றான்.

"ஐநூறு ரூபாய்க்குக் குறையாது" என்றேன்.

ஒத்துக் கொண்டான்.

திட்டம் போட்டோம். பல்பீர் மூன்று சினேகிதர்களுடன் வருவான், எல்லோரும் ஆளுக்கொரு பெண்ணை அழைத்துக் கொண்டு குடிக்க ஆரம்பிப்பார்கள், சிந்துவையும் குடிக்க அழைப்பார்கள். அவளுக்கு மதுவை ஊற்றி ஊற்றிக் கொடுப் பார்கள். அவள் போதையில் கிரங்கி ஆடும்போது நான் இந்த வீட்டை விட்டு வெளியேற முற்படுவேன். இதுதான் திட்டம்.

இந்தத் திட்டத்தில் எத்தனையோ விரிசல்கள் இருந்தன. இருப்பினும் நடத்திப் பார்ப்பது என்று தீர்மானித்தோம்.

தப்பித்தவுடன் நான் தெரு முனையில் மூன்றாவது விளக்குக் கம்பத்தை அடைய வேண்டும் என்றும், அங்கிருந்து என்னை அழைத்துப் போகப் பல்பீரின் சினேகிதன் ஒருவன் தயாராகக் காத்திருப்பான் என்றும் திட்டம் போடப்பட் டிருந்தது.

அது ஒரு புதன்கிழமை என்றுதான் நினைக்கிறேன். அன்றுதான் பல்பீர் இந்த திட்டத்தை அமுல் நடத்தப் போகிறான் என்று தெரியாது. ஏனெனில் நாங்கள் இதைப் பற்றிப் பேசி முடித்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன.

இடையில் பல்பீர் அடிக்கடி வந்து போனாலும், திட்டம் நடத்துவதற்கு வழி இல்லாமல் இருந்தது.

புதன்கிழமை அன்று பல்பீர் திடுதிப்பென்று வந்து நின்றான். "கமலா! இன்று திட்டம் அமலாக்கப்படுகிறது" என்று கூறினான். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒன்றுமே ஓடவில்லை.

ஹாலுக்கு அடுத்த அறையில் பல்பீரும் அவன் சினேகிதர்களும் உட்கார்ந்தார்கள். கீழே உள்ள சைக்கிள் ஷாப் பையன் முதலில் ஆறு பீர் பாட்டில்களை வாங்கி வந்தான். கண்ணாடி டம்ளர்கள் வந்தன. காரமான சுண்டலும் வந்தது.

சகாக்கள் ஹாலுக்குள் வந்து தங்களுக்கு உகந்த பெண்களைத் தேர்ந்து எடுத்தார்கள். அதில்தான் முதல் தவறு நடந்தது.

பல்பீருக்கு என்மீதுள்ள விருப்பம் இந்த வீட்டிலுள்ள எல்லோருக்கும் தெரியும். ஆதலால், அவன் அழைக்காமலேயே நான் அவனை உபசரிக்கப் போனதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் சினேகிதன் ஒருவனிடம் தயாவின் அடையாளங்களைச் சொல்லி, அவளை அவன் தேர்ந்தெடுக்க ஏற்பாடு ஆகியிருந்தது. ஆனால் உல்லாச இரவு நடக்கப் போகும் தேதி முன்னமேயே குறிக்கப்படாததால், தயா அன்றைய தினம் யாருக்கும் காத்திராமல் வேறு ஒரு வாடிக்கையாளருடன் அறைக்குப் போய் விட்டாள். அந்தச் சினேகிதன் தயாவைக் காண முடியாமல் அவளைப் போல் கிட்டத்தட்ட அடையாளமுள்ள வேறு ஒரு பெண்ணைத் தேர்ந்து எடுத்து விட்டான்.

அவள் காதருகில் போய், "நீ தானே தயா?" என்ற போது அந்தப் பெண், "ஆமாம்" என்று தலை அசைத்திருக்கிறாள்.

அதற்கும் காரணம் இருந்தது. அந்தப் பெண்ணின் முழுப் பெயர் சுகன்யா! அவளைச் 'சுயா' என்று அழைப்பார்கள். ஆகவே அவள், காதில் 'தயா' என்பது 'சுயா' என்று விழவே, அவள் "ஆமாம்" என்று தலை அசைத்திருக்கிறாள்.

அறைக்கு வந்த பெண்களில் தயா இல்லாததைக் கண்டதும் நான் திடுக்கிட்டேன். பல்பீரைப் பார்த்து ஜாடையாக விழிக்க, அவனும் என்ன செய்வது என்று அறியாமல் என்னைப் பார்த்து விழித்தான். வந்த பெண்ணை வேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டு, தயாவை மீண்டும் அழைத்து வருவது என்பது முடியாத காரியம். ஆகவே உல்லாச இரவு முதல் அபசகுனத்துடன் ஆரம்பித்தது.

முதலில் நான் வருத்தப்பட்டாலும், பிறகு நான் தானே தப்பித்து ஓடப் போகிறவள்? ஆகவே தயா இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு வந்தேன்.

பெண்கள் அந்தந்த ஆண்கள் அருகில் உட்கார்ந்ததும், கேலிகளும் சீண்டல்களும் வழக்கம் போல ஆரம்பித்தன.

பல்பீரும் அவன் சினேகிதர்கள் ஆஹாஹா என்று ஆரவாரத்துடன் சிரிக்க, ஒருவர் பாட்டுப் பாட, பீர் பாட்டில்கள் டப் பப் என்று உடைய, உல்லாச இரவு ஆரம்பித்தது. பல்பீர் கொண்டுவந்திருந்த மூன்று சினேகிதர்கள் இந்த வீட்டிற்குப் புதியவர்கள். இந்தத் தொழிலுக்கும் புதியவர்கள்! எங்களது திட்டப்படி கேலி, சீண்டல், சேட்டை, முதலியவற்றில் அவர்கள் ஈடுபடுவதுபோல் நடிக்க வேண்டுமே ஒழிய, உண்மையில் ஈடுபடக் கூடாது என்று சொல்லி இருந்தோம்.

ஆனால் நடந்தது வேறு! மூன்று பேர்களும் புதியவர்கள் ஆகையால், பெண்கள் அவர்களிடம் சேட்டை செய்த உடனே அவர்கள் பதிலுக்கு ஆர்வத்துடன் சேட்டை செய்ய ஆரம்பித்தார்கள்.

பல்பீருக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கி வந்தன. குறிப்பாக ஒரு பெண் தன் சீண்டல்களில் ரொம்பவும் முன்னேறி ஒருவனைத் தனி அறைக்கு இழுத்துக் கொண்டிருந்தாள். அவனும் கிளம்புவதற்குத் தயாராக இருந்தான்.

ஆனால் பல்பீர் இடைமறித்து உயர்ந்த குரலில், "சத்யசிங்! என்ன செய்கிறாய்? குடிப்பதற்கும் தமாஷாகப் பேசுவதற்கும் தான் நாம் இங்கு வந்திருக்கிறோம்" என்று கடுமையாகக் கூறிய வுடன் அந்த சினேகிதன் நின்றுவிட்டான்.

மற்றவர்களையும் பல்பீர் கண்ணாலும் ரகசியப் பேச்சாலும் எச்சரிக்கை செய்தான்.

ஒருவாறு எல்லோரும் அடங்கி விட்டார்கள்.

மணி எட்டைத் தாண்டியது.

நான் சிந்து வருவாள் என்று ஆவலுடன் காத்திருந்தேன். பீர் என்றால் அவளுக்கு மூக்கில் வியர்த்து விடும். எப்படியும் சீக்கிரம் மாடிக்கு வருவாள் என்று நினைத்துக் கொண் டிருந்தேன்.

மணி ஒன்பது ஆகியது. பத்து ஆகியது. சிந்து வரவில்லை. அவள் வந்தால்தான் அந்த உல்லாசங்கள் ஆரம்பமாகும். மேலும், மேலும் பீர், விஸ்கி என்று வாங்கத் தூண்டுவாள். விரைவில் அந்த உல்லாசம் மாடி ஹால் முழுதும் பரவி விடும். எல்லோரும் குடிப்பார்க்ள். ஆடுவார்கள். பாடுவார்கள்.

அதற்கெல்லாம் முக்கியமானவள் சிந்துதான்.

அவள் வராமல்போகவே எனக்கு பக் பக் என்றது. ஒரு அருமையான இரவும் பல நூறு ரூபாய்களும் வீணாகி விடுமோ என்று பயந்து போனேன்.

இந்தச் சமயத்தில் இன்னொரு வேண்டத்தகாத விஷயமும் நடந்து கொண்டிருந்தது. யாருடைய பணம் வீணாகியது என்ற நினைவில்லாமல் பல்பீரின் சிநேகிதர்கள் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு சிநேகிதன் அதற்குள்ளாகவே போதையில் உளற ஆரம்பித்து விட்டான்.

பல்பீருக்கு இது ஆத்திரத்தைக் கொடுத்தது. எழுந்து போய், "நீ ஏன் குடிக்கிறாய். முதலில் உன் புல்புல் நிறையக் குடிக்கட்டும்" என்று சொல்லி மது டம்ளர்களைப் பிடுங்கிப் பெண்களுக்குக் கொடுத்துவிட்டு வந்தான்.

மணி பத்தரை ஆகியது. சரி, இன்று திட்டம் எல்லாம் தோல்விதான் என நினைத்துக் கொண்டிருந்தேன்.

படியில் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து சிந்து ஏதோ உளறிக்கொண்டே மாடி நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

அவள் ஏற்கெனவே வெளியே போய்த் தெரிந்தவர் ஒருவர் வீட்டில் குடித்துவிட்டு வந்திருந்தாள்.

"நாலு போட்டேன்! எல்லாம் கிர் ஆகிப் போச்சு!" என்று சொல்லிக்கொண்டே எங்கள் அறைக்குள் வந்தாள்.

பல்பீர் அவளை அழைத்து உல்லாசத்தில் கலந்து கொள்ளச் சொன்னான். பீர் டம்ளரை நீட்டியவுடன் அவள் வேண்டாம் என்றாள்.

"அம்மா! சிந்து, உனக்காகப் பீர் பாட்டில் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். நீ குடிக்காமல் இருந்தால் எப்படி! சீ மொத்தம் நாலுதான் போடுவியா? குடிப்பதில் உனக்கு யாராவது நிகராக முடியுமா? இந்தா குடி" என்று பல்பீர் பல முறை தாஜா செய்தான். எல்லோரும் அவனுடன் சேர்ந்து தாஜா செய்தார்கள்.

“இனிமேல் குடிக்கமாட்டேன்” என்று தீர்மானமாகச் சொல்லிக் கொண்டிருந்த சிந்து, தாஜாக்களையும், புகழ்ச்சி உரைகளையும் தாங்க முடியாமல், “கொண்டா ஒரு கிளாஸ்” என்று உற்சாகத்தில் கத்தினாள்.

அவ்வளவுதான்! ‘ஓ’ என்று எல்லோரும் கத்தினார்கள். பீர் பாட்டில்கள் டப் டப் என்று உடைந்தன. கூச்சல் அதிக மாகியது. சைக்கிள் ஷாப் பையன் மேலேயும் கீழேயும் ஓடிக் கொண்டிருந்தான்.

உல்லாசம் ஒரு தொத்து நோய்போல் ஹாலில் பரவியது. பல்பீர் தனது சிநேகிதர்களிடம் பணம் கொடுத்து வைத்திருந் தான். அவர்கள் பீரையும் விஸ்கியையும் வரவழைத்தார்கள். கேட்டவர்களுக்கும் கேட்காதவர்களுக்கும் வேண்டிய அளவு ஊற்றிக் கொடுத்தார்கள்.

சீக்கிரம் ஹாலே மயங்க ஆரம்பித்தது. சிந்து ‘ஹா ஹா’ என்று சிரித்தாள். ஹாலில் உள்ள பெண்கள் எங்கள் அறைக்குப் படை எடுத்தார்கள். எல்லோருக்கும் நிறைய மது வழங்கப் பட்டது. அவர்கள் பாடவும் ஆடவும் தொடங்கினார்கள். பல்பீரும் அவன் சிநேகிதர்களும் விடவில்லை. “குடி! பாடு! ஆடு!” என்று ஊக்குவித்துக் கொண்டே ஊற்றிக் கொடுத்தார்கள். போகப் போக பீரையும் விஸ்கியையும் கலந்து அள்ளி விட்டார்கள்.

எல்லோரும் மயங்க ஆரம்பித்தார்கள். தீனிகள் வந்து கொண்டே இருந்தன. பீர் பாட்டில்கள் அறையின் பாதி இடத்தை ஆக்ரமித்து விட்டன. ஆடுவதற்கு இடம் இல்லாமல் போகவே நாங்கள் ஹாலுக்குள் வந்தோம்.

பெண்களில் பலர் அதிகம் குடித்தார்கள். போதையில் விழுந்தார்கள். சிந்து என்னை அருகில் இருத்திக் கொண்டு “கமலா, நீ குடி” என்று நாக்குக் குழறப் பேசி என்னைக் குடிக்க வைத்தாள். நானும் “தீதி நிறையக் குடியுங்கள். பல்பீர் மடியில் ஆயிரம் ரூபாய் இருக்கிறது. ராத்திரி பூராவும் குடித்தே அதைக் கரைத்துவிடலாம்” என்றேன்.

உடனே சிந்து, “நீதான் விஷயம் அறிந்த பெண். ஒவ்வொரு ஆணிடமிருந்தும் எப்படிக் கறக்கணும்னு தெரிஞ்சு வச்சிருக்கே! விடாதே போ! வாங்கிக்கிட்டே இரு! நான் குடிச்சுக்கிட்டே இருக்கேன்! அவன் பணம் தீருகிற வரைக்கும் எல்லோரும்

தாக்குப் பிடிக்கணும்! கமலா நீ குடி! சும்மாக் குடி!" என்று என்னைப் பதிலுக்கு வற்புறுத்தினாள்.

ஹாலில் உள்ள ஒருவரையும் பல்பீர் விடவில்லை. குடிக்க வைத்தான். மேலும் மேலும் ஊற்றிக் கொடுத்தான்.

சிந்து சீக்கிரம் குழற ஆரம்பித்தாள். இருந்தாலும் அவள் கை என் தோளிலேயே இருப்பது எனக்குக் கஷ்டமாக இருந்தது. அவள் பிடியிலிருந்து நழுவ வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் முடியவில்லை. மெள்ள எழுந்தால் "கமலா! எங்கே போறே?'' என்று என்னைப் பிடித்து இழுத்து உட்கார்த்தினாள்.

இதற்குள் பல்பீர் கீழே இறங்கிப் போனான், அங்கே உள்ள வேலைக்காரர்கள் தங்களுக்கும் மது கிடைக்குமா என்று ஆவலோடு காத்திருந்தார்கள். அவர்களைப் படி அருகில் நிற்க வைத்து நல்ல ஸ்ட்ராங்க் கலவைகளாகக் கலந்து அவர்களுக்குக் கொண்டு போய்க் கொடுத்தான் பல்பீர்.

அரை மணிக்குப் பிறகு அவர்கள் போதையில் ஆழ்ந்து விட்டார்கள் என்ற செய்தியை பல்பீர் என்னிடம் ஜாடையாய்த் தெரிவித்தான்.

நான் பரபரத்தேன்.

முதலில் ஒரு யோசனை! வாசல் கதவைப் பூட்டி இருப்பார்கள். என்று நிசா சொல்லியிருந்தாள். அப்படியானால் சாவி எங்கே இருக்கும்?

சிந்துவின் இடுப்பில் பல முறை பார்த்தேன். சாவி இருப்ப தாகத் தொயவில்லை. ஆனால் வலது பக்க இடையில் ஒரு தடிமனான பகுதி தெரிந்தது. அதுவாக இருக்குமோ?

பல்பீரிடம் அதைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று துடித்தேன். ஆனால் புதிதாக வந்த மூன்று வாடிக்கையாளர்கள் உல்லாச இரவில் பங்கு கொள்ள விரும்பினார்கள். அவர்களுக்கு விஸ்கி ஊற்றிக் கொடுப்பதில் பல்பீர் முனைந்திருந்தான். வந்தவர்கள் பணம் உள்ளவர்கள். பதில் மரியாதைக்காக அவர்கள் கீழே இருந்து ரம் வாங்கி வர ஆளை அனுப்பினார்கள். அவர்களுடன் பேச்சில் ஈடுபட்டிருந்த பல்பீர் என்னைக் கவனிக்கவில்லை. எனக்குக் கஷ்டமாக இருந்தது.

ஒரு ஆச்சரியம்! சிந்து போதையில் இருந்தாளே ஒழிய, நினைவு அ்டியோடு போகவில்லை. கண்ணைத் திறந்து அடிக்கடி

என்னிடம் பேசினாள். என்னை அருகே அழைத்து என் துடைமீது தலையை வைத்துக் காலை நீட்டிவிட்டிருந்தாள். அலங்கோலமாக அவள் படுத்திருப்பதைப் பார்த்து வந்திருக்கும் ஆண்கள் தங்களுக்குள் கண் ஜாடை காட்டிப் பேசிக் கொண்டார்கள்.

அடிக்கடி சிந்து மற்ற பெண்களுக்கு என்மூலம் உத்தரவு இட்டுக் கொண்டிருந்தாள்.

"விடாதீங்க! ஒவ்வொரு ஆண் பிள்ளையையும் குஷிப் படுத்தி, அறைகளுக்கு அழைத்துப் போங்கள்! அவங்க கையில் இருப்பதை எல்லாம் பிடுங்கி மொட்டை அடியுங்கள்!" என்றாள்.

நான் அடிக்கடி சுற்றி வரப் பார்த்தேன். தயாவைத் தேடிக் கொண்டிருந்தேன். பல மணி நேரம் ஆகியும் அவளைக் காண வில்லை.

ஹாலில் ஒரு ஓரத்தில் ரேணு கையில் பீர் டம்ளரை வைத்துக் கொண்டு தனக்குத் தானே சிரித்தவாறு குடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குக் குடியில் கொஞ்சம் ரசனை உண்டு. அவள் அருகில் டாலி குடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அடுத்தாற்போல் அவளது கைக் குழந்தை அடிக்கடி அழுது கொண்டிருந்தது.

ஹாலில் இரண்டு பேர் மட்டும் குடிக்காமல் இருந் தார்கள். அவர்கள் இந்திராணிக்காக வந்துள்ள வாடிக்கை யாளர்கள். வெகுநேரம் அவளுக்காகக் காத்திருந்தார்கள். இரவு முழுவதும் அவளோடு கழிக்க அவர்கள் வந்திருந்தார்கள்.

தங்கள் இருவரில் இந்திராணி யாரைத் தேர்ந்தெடுக்கப் போகிறாள் என்பதை ஆவலோடும் கவலையோடும் எதிர் நோக்கி இருந்தார்கள். அப்படி எதிர்நோக்கியிருக்கும் ஆவலில் பல்பீர் பல முறை அவர்களைக் குடிக்க அழைத்தும் அவர்கள் இணங்கவில்லை.

நேரம் ஆக ஆக எனக்கு நெஞ்சு அடித்துக் கொண்டது. பல்பீர் என்னைக் கவனியாமல் மற்றவர்களுக்கு மது வழங்கு வதிலேயே ஈடுபட்டிருந்தான். ரேணுகாவாவது என்னைப் புரிந்து கொண்டு அருகில் வரக்கூடாதா என்று நினைத்தேன். அவளும் வரவில்லை.

கடைசியில் அறைக்கு வெளியே இந்திராணி வந்தாள். தன்னோடு வெளியே வந்த வாடிக்கையாளரை வழி அனுப்பி

னாள். (அதையெல்லாம் இங்கே மரியாதைக் குறைவில்லாமல் செய்ய வேண்டும். சிலர் இதற்காக கீழேவரை இறங்கிப் போய் பார்ட்டிங் கிஸ் கொடுத்து விட்டு வருவார்கள்.) அவள் தென் பட்டதும் ஹாலில் காத்திருந்த இரண்டு ஆண்களும் துள்ளி எழுந்து நின்றார்கள். இந்திராணியின் கைகளை ஆளுக்கொன் றாக ஒவ்வொரு பக்கமும் இழுத்தார்கள்.

ஏற்கெனவே இந்திராணி சலித்துப் போயிருந்தாள். இப்போது கோபம் வந்தது. இந்தி அவளுக்குத் தெரியாது. ஆதலால் ஆங்கிலத்தில் சாடினாள்.

சத்தத்தைக் கேட்டு சிந்து தலையைத் தூக்கினாள். அது தான் சமயம் என்று நான் விருட்டென்று எழுந்தேன். தைரியமாக இந்திராணி அருகில் போய் அந்த ஆண்களிட மிருந்து அவளை விடுவித்தேன்.

"நீங்கள் மனிதர்களா, இல்லையா? அவளை ஏன் இப்படி வதைக்கிறீர்கள்? அவள் தேர்ந்தெடுக்கும் வரை பேசாமல் இருங்கள்!" என்று இந்தியில் கத்தினேன்.

உடனே மெதுவான குரலில் "இந்து, யாராவது ஒருவனைத் தேர்ந்தெடு! அவனுக்கு மதுவைக் கொடுத்துப் போதை உண்டாக்கு. இங்கே வேண்டுமென்கிற மது இருக்கிறது! எடுத்துக் கொள்! இரவில் நிம்மதியாகத் தூங்கு!" என்று கன்னடத்தில் சொன்னேன்.

அதே அவசரத்தில் பல்பீர் பக்கமாகச் சென்று, "கீழே பூட்டுக்குச் சாவி எங்கே இருக்கிறது? கவனியுங்கள்" என்று சொன்னேன்.

இதற்குள் சிந்து, "கமலா வாம்மா கண்ணு! உன் மடியில் படுத்துக்கணும்!" என்று என்னை அழைத்தாள்.

"திட்டம் எல்லாம் பாழ்தான் போ! என்று முனகிக் கொண்டே, அவள் அருகில் போய் உட்கார்ந்தேன்.

என் மடியில் சிந்து வளைந்து படுத்தபோது, அவளது இடுப்பின் வலது புற முடிச்சில் சாவியின் தலை தெரிந்து விட்டது. "ஆகா, இங்கேயா இருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டேன். உடனே பல்பீரை என் கண்கள் தேடின.

நல்ல வேளை. அவன் என்னைக் கவனித்துக் கொண்டிருந் தான். சாவி இங்கே இருக்கிறது என்று ஜாடை காட்டினேன்.

அவனுக்கு வேதனைதான் ஏற்பட்டது! அவளிடமிருந்து சாவியைப் எப்படிப் பிடுங்குவது என்று நினைத்திருக்க வேண்டும்.

இதற்குள் இந்திராணிக்காகக் காத்திருந்த வாடிக்கை யாளர்களிடையே பெரிய சண்டை ஏற்பட்டது.

ஒருத்தனை அவள் தேர்ந்தெடுந்தாள். "நான்தானே முதலிலேயே வந்தவன்!" என்று மற்றவன் சண்டை போட, இருவருக்கும் பெரிய கைகலப்பு வந்துவிட்டது.

பல்பீர் அதைத் தீர்த்து வைக்க முயன்றான். சிந்து திடீரென்று எழுந்து அவர்களை விலக்கப் போனாள். இந்திராணி என் அருகில் வந்து உட்கார்ந்தாள்.

நான் அவசரமாக இந்திராணியிடம், "இந்து, இன்று நான் தப்பித்து போகப் போகிறேன். அப்படி எனக்கு விடுதலை கிடைத்தால், உங்கள் எல்லோரையும் விடுதலை செய்வேன். இது சத்தியம்! இப்போது எனக்கு ஒரு விஷயம் தெரிய வேண்டும். தயா எங்கே இருக்கிறாள்? என்றேன்.

"அவளுக்கு இன்று இரவு முழுவதும் வாடிக்கை!" என்றாள் இந்து. அதாவது இரவு முழுவதும் அவளுடன் கழிக்க ஒருவன் வந்திருக்கிறான் என்று அர்த்தம்.

"நீ ஒன்று செய்ய வேண்டும். அவளிடம் எந்த விதத்தி லாவது நான் தப்பித்துப் போவதைத் தெரிவித்துவிட வேண்டும்!" என்றேன்.

"செய்கிறேன்" என்றாள் இந்திராணி.

இதற்குள் சிந்து வாடிக்கையாளர்களிடம் ஒரு மாதிரி பேசிச் சண்டையை முடிவு செய்தாள். பிறகு தள்ளாடிக் கொண்டு என் அருகில் வந்தாள்.

ஏமாந்து போன வாடிக்கையாளர், "உலகத்தில் எங்கேயும் நியாயம் இருப்பதில்லை" என்று பலமாகக் கத்திக் கொண்டு, மாடிப்படி இறங்கி கீழே போனார்.

இந்து என் அருகில் வந்ததும், நான் இந்திராணியிடம் பலமான குரலில், "இந்து! நீ பீர் குடி அம்மா! அப்போது தான் உன் உடம்பு தாங்கும்! ரொம்பக் குடிக்க வேண்டாம்! ஒரே ஒரு டம்ளர் குடித்தால் போதும்" என்று சொன்னேன். ஓயாத வாடிக்கையாளரின் தொந்தரவினால் உடம்வு நலிந்து போகமல் இருக்க ஒரு டம்ளர் பீர் பருக வேண்டும் என்று ரேணு என்னிடம்

அடிக்கடி சொல்லியிருந்தாள். ஆரம்பத்தில் சிந்து என்னைப் பலாத்காரப் படுத்திக் குடிக்க வைத்தாள். பிறகு எப்போதாவது நானே ஒரு டம்ளரை மூக்கை மூடிக்கொண்டு பருகுவது உண்டு. எனக்கு அதன் நெடி பிடிக்காது.

ஆகவே இந்திராணிக்கு அறிவுரை கூறினேன்.

சிந்துவும் என்னுடன் சேர்ந்து இந்திராணியை வற்புறுத்தினாள். ஆனால் அவள் இணங்கவில்லை.

இதற்குள் பல்பீர் ஹாலில் மற்றவர்களுடன் டான்ஸ் ஆட ஆரம்பித்தான். அவனுடன் இதில் மற்றவர்கள் சேர ஆரம்பித்தார்கள்.

ஏற்கெனவே குடித்து விட்டதால் ஆண்களும் பெண்களும் ஒரு வெறியுடன் ஆட ஆரம்பித்தார்கள்.

பல்பீர் இடையில் ஓடி வந்து சிந்துவை எழுப்பினான். "என்னாலே முடியாதப்பா! உடம்பு தள்ளாடுது!" என்றாள்.

அவன் விடவில்லை. இரண்டு இந்திப் பெண்களும் அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். சிந்துவைத் தூக்கி இழுத்தார்கள்.

சிந்துவுக்கு வெறி வந்தது. எல்லோரும் கைகளால் தாளம் போட மற்றவர்களுடன் சுற்றிச் சுற்றி ஆடினாள். பிறகு கண்கள் செருகத் தொம்மென்று என் அருகில் வந்து விழுந்தாள். நல்ல மயக்கம்! அவளைச் சரி செய்துவிடும் முயற்சியில் நான் மெதுவாகச் சாவியை உறுவி விட்டேன். அடுத்த கணம் அதை என் காலுக்கடியில் பதுக்கி வைத்துக் கொண்டேன்.

என் உடம்பு வியர்த்தது. யாராவது கவனித்தார்களோ என்று பயந்தேன். தலையை நிமிர்ந்து பார்க்கக் கூடத் தைரியம் இல்லை.

பல்பீர் மட்டும் நான் செய்ததைக் கவனித்து விட்டான்.

சில கணங்களுக்குப் பிறகு எனக்குப் பீர் கொண்டு வருவது போல் அவன் வந்தான். என் காலுக்கடியிலிருந்த சாவியை எடுத்துத் தனது டம்ளரில் நழுவ விட்டுக் கொண்டு எழுந்து போனான்.

எனக்கு அப்படியும் பதட்டம் தீரவில்லை. என்ன நடக்குமோ என்று பயத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

சிந்து கண்ணை மூடிக்கொண்டு என் மடியில் படுத்து விட்டாள்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு பல்பீர் சாவியை மாடிப்படி ஓரத்தில் ஒளித்து வைத்திருப்பதாக ஜாடையில் அறிவித்தான்.

கூத்தும் பாட்டும் இன்னும் தொடர்ந்தன. பிறகு எல்லோரும் களைத்து விழுந்தார்கள்.

வரவழைக்கப்பட்டிருந்த தீனிகளை உண்டுவிட்டு அவரவர்கள் கீழே சாய ஆரம்பத்தார்கள்.

டாலி எற்கெனவே உறக்கம் போட்டு விட்டாள். ஒரு இந்திப் பெண் விளக்குகளை அணைத்து விட்டு விடி விளக்கை மட்டும் ஏற்றினாள்.

நானும் படுத்திருந்தேன். என் துடைமீது சிந்து படுத் திருந்தாள்.

மெள்ள எழுந்து உட்கார்ந்தேன். சுற்றிவரப் பார்த்தேன். எல்லோரும் உறங்கி விட்டார்கள் என்பதை அறிந்தேன். மெது வாகச் சிந்துவின் தலையைக் கீழே எடுத்து வைக்க நினைத்தேன்.

தலையைக் கையில் ஏந்தி அவள் அறியாமல் என் துடையை உருவிக் கொண்டேன். பிறகு மெதுவாகத் தலையைக் கீழே வைக்க முனைந்தபோது, டக்கென்று அவள் விழித்துக் கொண்டாள்.

"கமலா! சும்மா இங்கேயே இரு" என்று என் துடையைப் பிடித்து இழுத்தாள்.

எனக்குப் பகீர் என்றது. இவளுக்கு எப்படி இன்னும் நினைவு இருக்கிறது என்று நினைத்தேன். மீண்டும் சரியாக உட்கார்ந்தேன்.

அரை மணி ஓடியது. ஒரு யுகம் போல் இருந்தது. அடுத்த அறையின் ஓரத்தில் படுத்திருந்த பல்பீர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். 'எழுந்து போ!' என்பது போலச் சமிக்ஞை செய்தான்.

மீண்டும் ஒரு தடவை எழ முயன்றேன். ஆனால் ஆச்சரியம். சிந்து மீண்டும் கண்ணை விழித்து, "கமலா! இங்கேயே இரு!" என்று சொல்லி இறுத்திக் கொண்டு விட்டாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், இதே செய்கையை மீண்டும் ஒரு முறை செய்தேன். அப்போதும் சிந்து என்னை முன் போலவே என்னை இறுத்தினாள்.

எனக்கு இது ஆச்சரியமாகவே இருந்தது! அவள் விழித்திருப்பதாகவும் தெரியவில்லை. பாதி நினைவில் இருப்பது போலவும் தோன்றியது.

கடைசியாக மீண்டும் ஒருமுறை எழுந்த போது, அவள் கண்களை நன்றாக விழித்து என்னைக் கடுமையாக எச்சரிக்கை செய்தாள். நான் அசந்து போய் உட்கார்ந்து விட்டேன்.

எல்லாம் பாழாகி விட்டதே என்று நினைத்தபோது திடீரென்று அறையிலிருந்து இந்திராணி வெளிப்பட்டு என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

# 33. பிடிபட்ட பறவை

இந்திராணியைப் பார்த்ததும் மனம் துள்ளியது. நான் தப்பித்துப் போய்விட்டேனா என்பதைப் பார்க்கத்தான் அவள் வந்திருந்தாள். ஆனால் நான் அங்கேயே இருப்பதைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டாள்.

அவளை சைகை காட்டி அழைத்தேன். அருகில் உட்காரச் சொன்னேன். சிந்துவின் தலையை அவள் மடியில் வைத்துக் கொள்ளும்படி ஜாடை காட்டினேன்.

அவள் உட்கார்ந்தாள். மெதுவாக நகர்ந்து, தாங்கலாக சிந்துவின் தலையைக் கையில் வைத்துக் கொண்டு, இந்திராணி நெருங்கி வந்ததும் அவள் மடிமீது மெள்ள வைத்தேன்.

எப்படித்தான் சிந்துவின் உணர்வுக்கு எட்டியதோ! விழித்துக் கொண்டாள்! நான் பதறிப் போனேன். ஒரு கணந்தான்! மறுகணம் சமாளித்தேன்.

"இல்லை, தீதி! நான் பாத்ரூம் போகணும். அதனால் தான்..." என்றேன்.

சிந்து என்னை விழித்துப் பார்த்தாள். "ம், போய்ச் சீக்கிரம் வா!" என்றாள்.

போகும்போதே நடுக்கம்! இந்தச் சனியனுக்கு இப்படி விழிப்பு வந்ததே என்று நினைத்தேன்.

பாத்ரூமில் போய் நின்றேன். எதுவும் ஓடவில்லை. எதை யாவது செய்யவேண்டும். மனம் பரபரத்தது. என்ன செய்ய முடியும்?

சிந்து நன்றாகத் தூங்கினால்கூட எனக்குப் பதிலாக இந்திராணியை வைத்துவிட்டுப் போக முடியாது என்று அப்போதுதான் தெரிந்தது. ஏனெனில் சிந்து விழித்த பிறகு இந்திராணியைப் பார்ப்பாள். அடுத்த நாள் காலையில் நான் தப்பி ஓடிவிட்டேன் என்பது தெரியவரும். நானும் இந்திராணியும்தான் இந்தச் சதித்திட்டம் செய்திருக்கிறோம் என்று அப்போது எல்லோரும் இந்திராணியைச் சாடுவார்கள்! அந்தச் சிறு பெண்ணால் அதைச் சமாளிக்க முடியாது.

இந்திராணிக்குப் பதிலாக வேறு எந்தப் பெண்ணை வைத்தாலும் ஆபத்துதான். நான் தப்பித்துப் போன விஷயம் தெரிந்தபின் அந்தப் பெண்ணுக்கு அடியும் உதையும் கிடைக்கும்.

ஆக, யாரையும் எனக்குப் பதிலாக வைத்துவிட்டுப் போக முடியாது.

அப்படிச் செய்வதாயிருந்தால்கூடச் சிந்து நன்றாகத் தூங்கிய பின்தான் செய்ய முடியும். அன்றைய நிலையைப் பார்த்தால், சிறிது அசைவு ஏற்பட்டாலும் சிந்து விழித்துக் கொள்வாள் என்று தோன்றியது.

இப்படி ஒரு இக்கட்டில் மாட்டிக் கொண்டேனே என்று வருந்தினேன். சிறிது நேரம் அழுதேன்.

பிறகு திடீரென்று ஒரு யோசனை! தப்பித்துப் போவதா யிருந்தால் நான்தான் போகவேண்டுமா? எனக்குப் பதிலாக வேறு யாரேனும் போகக் கூடாதா?

இந்திராணியை அனுப்பி விடாலமா? விடலாம்! ஆனால் அவள் ரொம்பச் சின்னவள். வெளியில் போய் எங்கேயாவது மாட்டிக் கொள்ளக் கூடாது. தவிர, வெளியே போனபின், போலீசில், சொல்லி அவர்களை அழைத்துவந்து எங்களை எல்லாம் விடுதலை செய்யும் அளவுக்கு அவ்வளவு தைரியம் போதாது.

அப்படியானால் யாரை அனுப்புவது?

தயாவின் நினைவு வந்தது. துள்ளி எழுந்தேன். அவள் இருக்கும் அறையைக் கவனித்து வைத்திருந்தேன். நேராக அங்கே சென்று கதவைத் தட்டினேன்.

உள்ளே அவர்கள் விழித்திருந்தார்கள். வாடிக்கையாளர், “என்ன தொந்திரவு?” என்று முணுமுணுத்தார்.

தயா எழுந்து வந்து கதவைத் திறந்தாள். “பாத்ரூமுக்கு வா” என்று ஜாடை காட்டினேன். பின்னாலேயே வந்தாள்.

“எல்லா விஷயங்களையும் இந்திராணி சொன்னாள். நீ இன்னும் தப்பித்து போகவில்லையா?” என்றாள் அவள்.

‘‘இல்லை சங்கடம் இருக்கிறது’ என்று நடந்ததை விரைவாகவும் சுருக்கமாகவும் சொன்னேன். முடிவில், “தயா, நீதான் தப்பித்துப் போகவேண்டும். இந்தக் கணமே போக வேண்டும். யோசிப்பதற்கு நேரமில்லை” என்றேன்.

“நானா கமலா!” என்று அவள் பரபரத்தாள். எப்படிப் போவேன்? உள்ளே அவன் விழித்துக் கொண்டிருக்கிறானே! அவனது ஆசைகள் இன்னும் முடியவில்லையே!” என்றாள்.

“அதற்கு ஏதாவது தந்திரம் செய்ய வேண்டும்” என்றேன் நான்.

“என்ன செய்ய?”

“வேறு ஒருத்தியை உனக்குப் பதிலாக உள்ளே கொண்டு விடு.”

‘‘என்மீதுதான் அவனுக்கு விருப்பம்! என்னைத்தான் வேண்டும் என்பான்.”

“உள்ளே போய் வயிற்றுவலி என்று நடித்துப்பார்! அவன் உன்னை விடுவதற்குச் சம்மதித்தாலும், கொடுத்த பணம் பாழகிறதே என்று சொல்லுவான். உனக்குப் பதிலாக வேறு பெண்ணை அனுப்புகிறேன் என்று சொல்லு! எப்படியும் சம்மதிக்க வைத்துவிடு!”

“யாரை அனுப்ப?”

“ரேணுவை அனுப்பலாம்.”

‘‘சரி! காலையில் என்னைக் காணவில்லை என்று தெரிந்தால் ரேணுவை அடிக்க மாட்டார்களா?”

“அதற்கு இருட்டுதான் நமக்குத் துணை செய்ய வேண்டும். வேறு வழி என்ன இருக்கிறது! ரேணுகாவை ஒரு வார்த்தைக்கூட அவனிடம் பேசச் சொல்லாதே. அவன் காலையில் நான்கு மணிக்கே எழுந்து போய்விடப் போகிறான். போகிறவன்

எத்தனை நாள் கழித்துத் திரும்பிவரப் போகிறானோ! அவனாகத் திரும்பிவந்து சொல்லாத வரை, இரவில் நீ அவனை விட்டுப் போனதோ, இன்னொரு பெண் உனக்குப் பதிலாக வந்ததோ யாருக்கும் தெரியப் போவதில்லை" என்றேன்.

தயாவுக்குப் பாதி தயக்கம்! பாதி உற்சாகம்!

அவளைத் தைரியப்படுத்தி அனுப்பிவிட்டு அவசர அவசரமாக ஹாலுக்குள் நுழைந்தேன்.

இந்திராணி மடியில் சிந்து படுத்திருந்தாள். ஹால் ஓரத்தில் தூங்கிக் கொண்டிருந்த ரேணுவை நோக்கிச் சென்றேன். கைகளால் உலுப்பி எழுப்பினேன். அவள் காதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. உடனே போய் மூன்றாவது அறை வாசலில் காத்திரு!" என்று சொல்லிவிட்டு விரைவாக சிந்து பக்கம் வந்தேன்.

இந்திராணி எனக்கு இடம் விட்டாள். நான் வந்து விட்டேன் என்று தெரிந்ததும், திருப்தியுடன் என் மடிமீது சிந்து தலையை வைத்துப் படுத்துக்கொண்டாள். இப்படித் தூங்குவதில் அவளுக்கு ஒரு அலாதியான விருப்பம்!

ரேணு எழுந்து உட்கார்ந்தாள். கண்ணைக் கசக்கினாள். கொட்டாவி விட்டாள். மதுவின் போதை அவளைச் சுழற்றுவது தெரிந்து. மறுகணம் அவள் மீண்டும் படுத்தாள்.

எனக்குப் பகீர் என்றது. ஆத்திரம் பொங்கியது! எழுந்து சென்று அறையலாமா என்று நினைத்தேன். பாவி! திட்டத்தைக் கெடுக்கிறாளே! நேரம் ஓடிக்கொண்டிருக்கிறதே என்று நினைத்தேன்.

இந்திராணி அப்போதுதான் தன் அறைப் பக்கம் போய் கொண்டிருந்தாள். அவள் காது கேட்கும்படி சூள் கொட்டினேன். அதைக் கேட்டுச் சிந்து அரை விழிப்பு விழித்துக் கண்ணை மூடினாள். எனக்கு ஒரே பயம்.

நல்ல வேளை! இந்திராணி திரும்பி வந்தாள். ரேணுவை எழுப்பும்படி ஜாடை காட்டினேன். எழுப்பினாள். ரேணு எழுந்து உட்கார்ந்தாள்.

இந்திராணி அவளை விடவில்லை. கையைப் பிடித்துத் தூக்கினாள். கரகர என்று இழுத்து ஹாலைத் தாண்டிக் கொண்டு போனாள்.

பல நிமிடங்கள் எதுவும் நடக்கவில்லை. எனக்கு இருதயம் நின்று விட்டது. தப்பித்துப் போவதற்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் இருக்கும்போது, அதை உடனடியாகப் பயன் படுத்த முடியவில்லையே என்று நினைத்தேன்.

இதற்குள் என்னவோ காலடிச் சத்தம் கேட்டது. ஹாலுக்குள் யாரோ வருவது தெரிந்து. உற்றுப்பார்த்தேன். அடையாளம் கண்டு கொண்டேன். இந்திராணிக்கு வந்துள்ள வாடிக்கையாளன் அவன். அறைக்குள் அவன் திடீரென்று கண் விழித்திருக்க வேண்டும். பக்கத்தில் இந்திராணியைக் காணாமல் வெளியே வந்திருக்க வேண்டும்.

மார்பு படபடத்தது. இவன் ஏதாவது ரகளை பண்ணித் திட்டத்தைப் பாழாக்கப் போகிறானே என்று நினைத்தேன். நல்ல வேளை! அவன் ஹாலுக்குள் வந்த அடுத்த கணம் அவன் பின்னாலேயே இந்திராணி வந்தாள். வெறுப்புடன் அவன் கையைப் படக்கென்று பிடித்து இழுத்து அழைத்துப் போனாள். போகும்போது, "எல்லாம் சரி!" என்பது போல், எனக்குச் சைகை செய்தாள்.

ஹாலில் நான் பொறுமையில்லாது இருந்ததுபோல், அடுத்த அறையில் மற்றொரு ஜீவனும் பொறுமையில்லாமல் இருந்தது. அது பல்பீர்தான்!

அறையின் வாசல் பக்கத்தில் படுத்துக்கொண்டு அவன் என்னைக் கவனித்துக் கொண்டேயிருந்தான். நான் எழுந்து போகாதது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. நான் செய்வதை எல்லாம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எதுவும் புரிந்திருக்காது. இடையிடையே, 'ஏன் தப்பிக்கவில்லை?' என்பதுபோல் என்னை ஜாடை காட்டி வினவினான். நான் சிந்துவை சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தேன்.

மேலும் ஒன்று இரண்டு நிமிடங்கள் ஓடின. தயா அவசர மாக வெளியே வந்தாள். அவளைப் பார்த்ததும், "போ போ" என்று ஜாடை காட்டினேன். அவளும் அவசரப் பட்டுக் ஹாலைக் கடந்தாள், தன் உடம்பைக் காட்டி, "ஸாரி இல்லை" என்பது போல ஜாடை காட்டினாள். வெறும் ஸ்கர்ட்தான் அவள் அணிந்திருந்தாள்.

மாடிப்படி அருகில் போனதும் தயங்கி நின்றாள். எனக்குத் திடீரென்று சாவியின் நினைவு வந்தது. சாவியைப்பற்றிச் சைகை

காட்டினேன் புரிந்து கொண்டாள். மாடிப்படியில் அது இருக்கிறதென்று சைகை காட்டினேன். அதைப் புரிந்து கொள்ளவில்லை.

இரண்டு மூன்று முறை காட்டினேன். புரிந்துகொள்ள வில்லை. எனக்கு அவசரமும் ஆத்திரமும் வந்தது. அவளை 'வா' வென்று அழைத்தேன். மெள்ள நடந்து வந்தாள்.

என் முகத்தருகில் குனிந்தாள். "நாலாவது படி" என்று தெலுங்கில் ரகசியமாகக் கூறினேன். அடுத்த கணம் அவள் புறப்பட்டாள். படிக்கட்டு அருகில் போய் நின்றதும் அவள் 'டாடா' காட்டினாள்.

கணங்கள் ஓடின. என் மனம் திக்திக் என்று அடித்தது. என்ன நடக்குமோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். கடவுளைப் பிரார்த்தனை செய்தேன்.

அடுத்த அறையில் லேசான சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். பல்பீர்தான் அந்தச் சத்தத்தை எழுப்பினான். என் கவனத்தை இழுத்து, நான் ஏன் தப்பித்துப் போகவில்லை என்று ஜாடையில் விசாரித்துக் கொண்டிருந்தான். நான் சிந்துவைச் சுட்டிக் காட்டுவதைத் தவிர வேறு வழியில்லை.

மேலும் ஐந்து நிமிடம் ஓடியது. நான் பல்பீரைக் கீழே போய்ப் பார்க்கும்படி ஜாடை காட்டினேன். அவன் முதலில் இணங்கவில்லை. பிறகு எழுந்து மெதுவாகப் போனான்.

இரண்டு நிமிடத்தில் திரும்பி வந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அடிமேல் அடி எடுத்துவைத்து வந்தான். என் காது அருகில் குனிந்தான். "கீழே வேலைக்காரர்கள் தூங்குகிறார்கள். கதவைத் திறந்து தயா தப்பித்துப் போவதைக் கண்ணால் பார்த்து விட்டேன்" என்றான்.

"இங்கே நிற்காதே, போ போ, ஆபத்து!" என்று அவனை அப்பால் தள்ளினேன்.

பிறகு நிம்மதியாகப் பெருமூச்சு விட்டேன்.

இரவு தூக்கம் சரியாக வரவில்லை. தூக்கம் வந்தால் கெட்ட கனவுகள் வந்து கொண்டு இருந்தது. சிந்துவும் மற்றவர்களும் என்னைக் கம்பத்தில் கட்டி அடிப்பது போலக் கனவு கண்டேன். அடிக்கடி தூக்கிவாரிப் போட்டுக் கண் விழித்தேன். இவ்வளவு தூரம் நான் திட்டம் போட்டு நடத்தியும்

என்னால் தப்பித்துப் போக முடியவில்லையே என்று சமயத்தில் வருந்தினேன். சில நேரம் கண்ணீர் விட்டேன்.

முதல் களேபரம் நான்கு மணிக்கு ஆரம்பிக்கப் போகிறது என்று நினைத்தேன். அப்போது தான் இரவில் தங்கிய வாடிக்கையாளர்கள் எழுந்து வெளியே போவார்கள். வேலைக்காரியை அவர்கள் எழுப்புவார்கள். அவள் எழுந்து கதவைத் திறக்க வரும்போது கதவு திறந்திருப்பதைப் பார்ப்பாள். கூக்குரல் எழுப்புவாள். வீடு களேபரப்படும்.

ஆனால் நான் நினைத்தது நடக்கவில்லை. முதல் ஆசாமி வேலைக்காரியை எழுப்பி இருக்கிறான். அவள் எழுந்து தாழ்ப்பாளைத் திறக்கப் போயிருக்கிறாள். சிந்து தூங்காததால் கதவு பூட்டப்படவில்லை என்று ஊகம் செய்திருக்கிறாள். ஆனால் தாழ்ப்பாள் திறந்திருந்ததைப் பற்றி ஒரு கணம் யோசித்திருக்கிறாள். பிறகு அதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் கதவைத் திறந்து ஆளை வெளியே விட்டிருக்கிறாள்.

ஆக முதல் கண்டம் தப்பியது.

இங்கே பொதுவாக எல்லோரும் காலை பத்து மணிக்கு மேல்தான் எழுந்திருப்பார்கள்.

எனக்கு ஏழுமணிக்கே தூக்கம் தெளிந்துவிட்டது. விழித்தும் தூங்குவது போல் பாவனை செய்தேன்.

பத்து மணிக்கு சிந்து எழுந்து கீழே போனாள். நான் ஹாலை விட்டு அடுத்த அறையில் போய்ப் படுத்தேன்.

பல்பீரும் அவன் நண்பர்களும் எழுந்து போயிருப்பதை அப்போது கவனித்தேன்.

பத்தரை மணிக்கு டீக்காரப் பையன் மேலே ஏழு டீ கொண்டு வந்தான். எங்களில் ஏழு பேர்களுக்கு அந்த நேரத்தில் டீ கொண்டு கொடுக்க வேண்டும் என்று நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம்.

அவன் வந்தபோதுதான் எனக்கு பகீர் என்றது. இப்படி ஒரு ஏற்பாடு இருப்பதையே மறந்து விட்டேன். ஒரு ஆள் இல்லை என்பதை இதுவே காட்டிவிடும் என்று நினைத்தேன்.

இனிமேல் இந்த வாடிக்கையை விட்டொழிக்க வேண்டும். இல்லாவிட்டால் தப்பித்துச் செல்பவரை இது முதன்முதலாகக் காட்டிக் கொடுத்துவிடும் என்று நினைத்தேன்.

இனிமேல் விட்டொழிக்கலாம்; ஆனால் இப்போது என்ன செய்ய?

ஒவ்வொரு பெண்ணிடமாக அவன் கொடுப்பதற்குள் நானே தயாவுக்கான டீயை வாங்கி வைத்துவிடலாம் என்று நினைத்தேன். உடனே அந்த நினைவை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில் ஹாலில் டாலி ஏற்கெனவே எழுந்து உலாவிக் கொண்டிருந்தாள்.

சரி, இப்போது குட்டு உடைய போகிறதே என்று நினைத்தேன்.

பையன் ஆறு டீக்களைக் கொடுத்துவிட்டு, ஏழாவது டீக்காகத் தயாவைத் தேட ஆரம்பித்தான். டீயைக் குடித்து விட்டு நான் கண்களை மூடிக்கொண்டு, காதுகளை மட்டும் கூர்மையாக வைத்துக் கொண்டு படுத்திருந்தேன்.

பையன் ஹாலில் தயாவைக் காணாமல் அறைக்குள் சென்று பார்த்தான். அங்கேயும் காணாமல், "எங்கே அந்த அம்மா?" என்று கேட்டான்.

உடனே டாலி, "தயா, தயா!" என்று அழைத்துக் கொண்டு பாத்ரூம் பக்கம் போனாள்.

பிறது, "தயா, தயா!" என்று பல இடங்களில் அவள் அழைக்கும் குரல் கேட்டது.

கீழே அவள் குரல் கேட்டபோது, சிந்துவுக்கும் அவளுக்கும் உரையாடல் நடப்பதும் கேட்டது.

அடுத்த ஐந்து நிமிடங்களில் வீட்டில் தயா இல்லை என்று தெரிந்ததும் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. சிந்து மேலே வந்தாள். மாடி வீட்டுக்காரி தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு எழுந்தாள், "எங்கே தயா? எங்கே?" என்று சிந்து எங்கள் ஒவ்வொருவரையும் கேட்டாள்.

"எங்களுக்குத் தெரியாது" என்று நாங்கள் கூறினோம்.

வேலைக்காரர்களை அழைத்து விசாரணை ஆரம்ப மாகியது. அப்போது தான் கதவு திறந்திருந்த விஷயமும் தெரிய வந்தது.

திடீரென்று சிந்து, "முந்திய இரவு வாசல் கதவைப் பூட்டினோமா இல்லையா?" என்று நினைத்துப் பார்த்தாள்.

எவ்வளவு யோசித்துப் பார்த்தும் அவளால் நிச்சயமாக எதுவும் அனுமானிக்க முடியவில்லை.

கீழே போய்ப் பார்த்தாள். கொண்டியில் பூட்டும் சாவியும் தொங்கிக் கொண்டிருந்தன. வெளியே போய்க் குடித்து விட்டு வந்ததால், பூட்டுவதற்கு மறந்து விட்டோம் என்று சிந்து நினைத்தாள்.

மேலே வந்து என்னைப் பார்த்து, "கமலா! இடுப்பிலே ராத்திரி சாவி இருந்ததா? நீ பார்த்தாயா?" என்றாள்.

"நான் பார்க்கவில்லை தீதி!" என்றேன்.

'சரி, நாம்தான் பூட்டவில்லை' என்று சிந்து உறுதியாக நினைத்தாள். எனக்குச் சந்தோஷம்.

அதன்பிறகு மாடி வீட்டுக்காரி நிர்மலா எங்கள் ஒவ்வொரு வரையும் தனியாக அழைத்து மிரட்டினாள். நாங்கள் யாவரும் எங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறி விட்டோம்.

தயா இரவிலேயே தப்பித்திருக்க வேண்டும் என்று சிலர் கூறினார்கள். இனிமேல் கவனமாக இருக்க வேண்டும் என்று எல்லோருக்கும் எச்சரிக்கை விடுத்தார்கள்.

தயா அப்போது நிர்மலா குழுவில் இருந்தாள். அவளால் நிர்மலாவுக்கு நிறைய வரும்படி! தயா ஒரு தங்கச் சுரங்கம் என்று நிர்மலா கூறிக் கொண்டிருந்தாள். தயாவின் அழகுக்கும் வாளிப்புக்கும் நிரந்தர வாடிக்கையாளர்கள் நிறையப்பேர் இருந்தார்கள். அவள் கிடைக்காவிட்டால் வேறு பெண்களிடம் போக மாட்டார்கள். எற்கெனவே ஒரு இளவயது சர்தார் அவளுக்கு அடிமையாயிருந்ததைக் கூறியிருக்கிறேன். அப்படிப் பட்ட அடிமைகள் பலர் அவளுக்கு இருந்தார்கள். ஆகவே அவள் போனதில் நிர்மலாவுக்கு ஆத்திரமும் கோபமும் இருந்தது. நெடுநேரம் அவள் வருத்தத்தோடு உட்கார்ந் திருந்தாள்.

பிறகு வேலைக்காரனை அவள் அழைத்தாள். அவளிடம் மாமூல் வாங்கிப் பிழைத்து வரும் ரௌடிகளை அழைத்து வரச் சொன்னாள்.

சிறிது நேரத்தில் இரண்டு வஸ்தாதுகள் சலாம் போட்டுக் கொண்டு வந்து நின்றார்கள்.

நிர்மலா அவர்கள்மீது சீறி விழுந்தாள். அதிகாலையில் தயா தப்பித்து ஓடி விட்டதாகக் கூறினாள். அவர்களுக்குக்

கொடுக்கும் மாமூல் தண்டம்தான் என்றும் ஒரு பெண் தப்பித்து ஓடுவதைத் தடுத்து நிறுத்தத் துப்பில்லை என்றும் சீறினாள்.

ரௌடிகளுக்கு ரொம்பக் கோபம்! நிர்மலா மீது அல்ல! தயா மீது! "அந்த நாயை எப்படியாவது தேடிப் பிடித்து இழுத்து வருகிறோம் அம்மா!" என்று மார் தட்டி விட்டு வெளியே போனார்கள்.

அன்று பகல் முழுவதும் இதைப் பற்றியேதான் பேச்சு நடந்து கொண்டிருந்தது. நிர்மலா அடிக்கடி ஹாலுக்குள் வந்து எங்களைத் திட்டினாள். எங்களில் யாராவது தப்பிப் போக முயன்றால் சூடு போட்டு இருட்டறையில் தள்ளி விடுவதாகக் கத்தினாள்.

இந்தக் கூச்சல் சலசலப்புகளுக்கு இடையே எனக்கு மனதில் ஒரு நிம்மதி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. தயா ஒவ்வொரு இடத்திலும் ஒதுங்கித் தப்பித்து ஓடுவதாகக் கற்பனை செய்தேன். போலீசாரிடம் நேரில் போய்ச் சொல்வதாகக் கற்பனை செய்தேன். எனக்கு ஒரே சிலிர்ப்பு ஏற்பட்டது.

பகல் நேரம் முழுதும் ஒரே ஆவலில் இருந்தேன். என்ன சத்தம் கேட்டாலும் துள்ளினேன். வழக்கமாகக் கேட்கும் இனம் தெரியாத சத்தங்கள் கூட என்னைத் திடுக்கிட வைத்தன.

நான்கு மணி ஆகியது. மேக்அப் ஆரம்பித்தது. வாடிக்கைக்காரர்கள் வர ஆரம்பித்தார்கள். காலையில் நடந்த நிகழ்ச்சி காரணமாக இன்று யாரும் சலசலத்துப் பேசவில்லை. மௌனமாக, ஜாடையாக ஒருவருக்கொருவர் பேசினோம்.

இந்திராணியின் முகத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டிருப்பதை அறிந்தேன். எங்கே தென்பட்டாலும் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

போகும்போது தயா என்ன சொல்லிவிட்டுப் போனாள், எத்தகைய மனத்தோடு வெளியே போனாள் என்பதை யெல்லாம் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன். ஆனால் ரேணுவுக்கு ரகசியமாகப் பேசத் தெரியாது. ஆரம்பத்தில் ரகசியமாக ஆரம்பிக்கிறவள். பிறகு மெய்மறந்து உரக்கப் பேசத் தொடங்கிவிடுவாள். இதனால் அவளிடம் நான் பேச விரும்பவில்லை.

இரவு வந்தது. என் மனம் மேலும் நிம்மதி அடைந்தது.

எட்டு மணி இருக்கும். திடீரென்று பல்பீர் வந்தான். அவனைப் பார்த்ததும் பரபரத்தேன். அன்று அந்த நேரத்துக்குள் அவன் லாரியை எடுத்துக்கொண்டு சண்டிகர் போயிருக்க வேண்டும். அப்படிப் போகாமல் இங்கே வருவதைப் பார்த்துத் திடுக்கிட்டேன்.

என்னை அழைத்துக்கொண்டு அறைக்குப் போனான். மிகச் சன்னமான குரலில் அவனது கோபத்தைத் தெரிவித்தான். என்னைக் குறுக்கே பேசவிடவில்லை. இரவில் எழுநூற்று ஐம்பது ரூபாய் செலவானது என்றும், இதைத் தவிர அவனது நண்பர்கள் இரண்டு பேர் சொந்தச் செலவு வேறு செய்திருப்ப தாகவும் கூறினான்.

அவன் பேச்சை நிறுத்தியவுடன், நான் குறுக்கிட்டுக் கேட்டேன். “பல்பீர்! தயாவை உன் சிநேகிதன் பார்த்தானா?”

“எந்தச் சிநேகிதன்?” என்றான் அவன்.

“விளக்குக் கம்பத்தின் கீழே நிறுத்தி வைத்திருந்தீர்களே, அவன்?” என்றேன்.

“அவனா? பார்க்கவே இல்லை. கால் கடுக்க இரவு ஒரு மணி வரை நின்றிருக்கிறான். பிறகு, இந்தத் தெருவில் உள்ள ரவுடிகளில் ஒருத்தன் அவனை ‘ஏன் இங்கு நிற்கிறாய்?’ என்று மிரட்டியிருக்கிறான். அதன் பிறகு அவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான்” என்றான்.

நான் உடனே பல்பீருக்கு நடந்ததையெல்லாம் விவரித்தேன். சிந்துவிடன் நான் எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டதைக் கூறினேன். அவனது கஷ்டப்பட்ட சம்பாதிப்பில் அவ்வளவு பெரிய தொகை வீணாகிவிட்டதைக் குறித்து வருத்தப்பட்டேன். ஆனால் அவனிடமும் ஒரு தவறு இருக்கிறது என்று சுட்டிக் காட்டினேன். உல்லாச இரவு எந்த தினத்தில் நடக்கப் போகிறது என்பதைத் தீர்மானித்து அதை முன் கூட்டியே, என்னிடம் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லவில்லை. அதனால் பல தவறுகள் நடந்துவிட்டன. “எனினும் நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். என்னால் உங்களுக்கு இவ்வளவு செலவு நேர்ந்து விட்டது” என்றேன்.

எனக்கு இந்தச் சமயத்தில் அழுகை வந்தது. அழுது விட்டேன்.

பல்பீர் என்னைச் சமாதானம் செய்தான். எனக்காக என்ன தியாகம் செய்ய வேண்டுமானாலும் தயார் என்றும், இந்தப் பணத்திற்காகக் கவலைப்படவில்லை என்றும் கூறினான்.

பிறகு, "உங்கள் முயற்சியால் வேறு ஒரு பெண்ணாவது விடுதலை அடைந்தாளே! அதைக் குறித்து நாம் சந்தோஷப்பட வேண்டும்" என்று கூறினேன்.

"அதனால் உனக்கு என்ன பிரயோசனம்? நீ விடுதலை அடையவில்லையே!" என்றான்.

"ஆமாம்!" என்று தலை அசைத்தேன்.

உண்மையில் தயா விடுதலை அடைவதால் எங்கள் எல்லோருக்குமே நன்மை உண்டு என்பதையும், அவள் போலீசில் சொல்வதன் மூலம் எங்கள் எல்லோருக்குமே விடுதலை கிடைக்கப் போகிறது என்பதையும் பல்பீரிடம் நான் சொல்ல வில்லை.

இரவு ஓடியது. காலையில் எழுந்தவுடனேயே மீண்டும் என் ஆவல் பொங்கியது. வாசலில் கேட்கும் ஒவ்வொரு சத்தத்திலும் துள்ளினேன். எந்த வேளையில் என்ன நடக்குமோ என்று துடித்துக் கொண்டிருந்தேன்.

பகல் நேரம் சென்றது.

மாலை நான்கு மணி ஆகியது.

இன்னொரு நாளும் ஓடிவிட்டது. தயா இப்போது மகிழ்ச்சியாக இருப்பாள் என்று எண்ணினேன். "தயா! தயா! கீர்த்தியைப்போல் பேசாமல் இருந்து விடாதே! உன் விடுதலைக்காக அவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் நான். எப்படியும் முயற்சி செய்து எங்களுக்கு விடுதலை வாங்கிக் கொடு!'' என்று மானசீகமாய் வேண்டிக் கொண்டேன்.

ஐந்தரை மணி இருக்கும். கீழே கதவு சற்று பலமாகத் தட்டப்பட்டது. என் உடம்பு பரபரத்தது. யார் என்று அறிய ஆவலோடு இருந்தேன்.

ஒரு ஆள் தடதடவென்று மாடிப்படி ஏறி வந்தான். அவனைப் பார்த்ததுமே அடையாளம் சொல்லி விடலாம். அந்தப் பேட்டை ரவுடிதான்! ஆனால் இந்த வீட்டிற்கு இதற்கு முன் அவன் வந்ததில்லை.

மாடி ஏறி வந்து, "நிர்மலா அம்மா எங்கே? எங்கே?" என்று அவசரத்துடன் கேட்டான்.

நான் திகிலோடு அவனைப் பார்த்தேன்.

நிர்மலா வந்தாள். அவளிடம் அந்த ரவுடி அவசரமாகப் பேசினான். அவன் சொன்னது காதில் விழவில்லை.

ஆனால், அடுத்த கணம், "அப்படியா சங்கதி?" என்று நிர்மலா கோபத்துடன் கூறுவதும், ரவுடியை அழைத்துக் கொண்டு வேகமாகக் கீழே இறங்குவதும் பரபரப்பைக் கொடுத்தது.

அடுத்த சில நிமிடங்களில், கீழே கூப்பாடுகளும் இரைச்சல்களும் கேட்டன. என்னவோ ஏதோவென்று திடுக் கிட்டோம்.

பேரம் நடக்கும் சத்தங்கள் கேட்டன. சிந்து கூப்பாடு போட்டாள். பிறகு அடங்கிவிட்டாள்.

சிறிது நேரம் சென்றது.

மேலே செய்தி வந்துவிட்டது. டாலி அதைக் கொண்டு வந்தாள். அதைக் கேட்டதும் அப்படியே உறைந்து நின்று விட்டேன்.

பத்து நிமிடம்வரை எதையுமே நினைக்க முடியவில்லை. மூளை மரத்து விட்டது.

தயா பிடிபட்டு விட்டாள் என்பதுதான் அந்தச் செய்தி! எங்கே எப்படிப் பிடிபட்டாள் என்று தெரியாது. ஆனால் சிறிது நேரத்தில் அவளை இங்கே கொண்டுவரப் போகிறார்கள்.

ஒரு ரவுடிக் குழுவிடம் அவள் அகப்பட்டுவிட்டாள் என்றும், பணம் கொடுத்தால்தான் அவளை அந்தக் குழுவினர் நிர்மலாவிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது. "எவ்வளவு பணம்" என்பதில்தான் பேரம் நடக்கிறது.

"அந்தப் பெண் இந்த வீட்டைச் சேர்ந்தவள். ஏற்கெனவே விலைகொடுத்து வாங்கியிருக்கிறோம். இப்போது உங்களிடம் அகப்பட்டிருக்கிறாள். அவளை அப்படியே எங்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுவதுதான் நியாயம். ஆனால் பணம் கேட்கிறீர்கள்!" என்று சிந்து சண்டை போட்டாள்.

கடைசியில் பேரம் பேசி ஐநூறு ரூபாய் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. சிந்து பணத்தைக் கொடுத்து விட்டாள்.

ஒரே மன வேதனையுடனும், துக்கத்துடனும் நான் உட்கார்ந்திருந்தேன். அழுகையாக வந்தது. அதை வெளிக்காட்டி னால் அபாயம். ஆகவே இடையிடையே வயிற்றுப் போக்கு என்று சொல்லி பாத்ரூம் போய் அழுதுவிட்டு வந்தேன்.

பகல் முழுவதும் தயாவை அவர்கள் கொண்டு வரவில்லை. இரவிலும் கொண்டு வரவில்லை. அவளுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று நினைத்து மனம் புழுங்கியது.

நள்ளிரவு இருக்கும். இங்கே வாடிக்கையாளரின் சந்தடி குறையும் நேரம். வாசலில் அரவங்கள் கேட்டன. எனக்கும் பதைபதைப்பு ஏற்பட்டது. காதுகளைக் கூர்மையாக வைத்துக் கொண்டேன்.

டாலி கீழே போய்விட்டு வந்தாள். தயாவை அப்பொழுது தான் கொண்டு வரப்போகிறார்கள் என்று சொன்னாள். அகப் பட்டவர்களின் வீட்டில் அவள் ரகளை செய்திருக்கிறாள். பகல் எல்லாம் அவளது கூப்பாடுகளை அடக்க முடியவில்லை. ஊரைக் கூட்டிவிடுவாளோ என்று பயமாக இருந்தது. அதனால் இரவு வந்ததும் அவளுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து நினைவு இழக்கச் செய்து, டாக்ஸியில் அவளைப் போட்டு, இந்த வீட்டிற்குக் கொண்டு வரப்போகிறார்கள்.

என் உடம்பு தகித்தது. இருப்புக் கொள்ளவில்லை. நிலை புரியாமல் தவித்தேன்.

சிறிது நேரத்தில் மீண்டும் சத்தம் கேட்டு டாலி கீழே ஓடினாள்.

என்னை மீறிய ஒரு வேகம் வந்தது. எழுந்து போய் தயா வைப் பார்க்க நினைத்தேன். மாடிப்படி வரை போனேன். முதல் இரண்டு படிகளில் இறங்கினேன். பதட்டத்துடன் நின்றேன்.

கீழே உள்ள முகப்பு அறையில் வெளிச்சம் போட்டிருந் தார்கள். நிர்மலா, சிந்து வேலைக்காரிகள் யாவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

சில கணங்களில் கதவு திறக்கப்பட்டது. இரண்டு ஆட்கள் நுழைந்தார்கள். அவர்கள் கையில் தயாவின் துவண்டு போன உடல் இருந்தது.

'ஓ' என்று இரைச்சல் என் தொண்டையை விட்டு வெளி வரப் பார்த்தது. வாயை மூடி நிறுத்தினேன். கண்களில் மளமள வென்று நீர் வந்தது.

கண்களைத் துடைத்து விட்டு, தயாவை மீண்டும் ஒருமுறை பார்த்தேன். இரண்டு பகல்களுக்குள் அவள் முகம் எப்படி மாறி இருந்தது! பாதி உயிர் போனது போல் வற்றி இருந்தாள்.

நிற்க முடியாமல் மீண்டும் ஹாலுக்குள் வந்தேன். முகத்தை மறைத்துச் சிறிது நேரம் அழுதேன். கீழே சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன.

இரவைத் தூக்கமில்லாமல் கழித்தேன். காலை ஒரே நிசப்த மாக இருந்தது. எந்த விதச் சத்தமும் இல்லை.

பதினொரு மணிக்கெல்லாம் எல்லோரும் எழுந்து விட்டார்கள். அவரவர் தம்தம் வேலையில் ஈடுபட்டார்கள்.

பகல் பன்னிரண்டு மணி இருக்கும். "ஓ" என்று ஒரு இரைச்சல். தயாவின் குரல்தான் அது. என் நெஞ்சத்தை அது இரு கூறாகக் கிழித்தது.

அதைத் தொடர்ந்து அதைவிட அதிகமான இரைச்சல் என்னை நடுங்க வைத்தது. தொடர்ந்து ஓட்டமும் பிடியும் சத்தங் களாகக் கேட்டன. வீட்டுக்காரிகள் தயாவை அடிக்கத் தொடங்கி விட்டார்கள்.

தயாவின்மீது பெல்ட் அடி விழுவது கேட்டது. தொடர்ந்து அவளது பிரலாபம் வீட்டையே அதிரச் செய்தது. தலையிலிருந்து பாதம் வரை நடுங்கினேன்.

தொடர்ந்து அடிகள் கேட்டன. அடிவயிற்றிலிருந்து கத்தும் தயாவின் ஓலமும் கேட்டது. என்னால் அதைக் கேட்க முடியாமல் காதுகளை மூடிக் கொண்டேன்.

சில விநாடிகளில் மாடிப்படியில் தடதடவென்று சத்தங்கள் கேட்டன. நான் என்ன என்று யோசிப்பதற்குள் "கமலா!" என்று வீரிட்டுக் கொண்டு, கண்ணீர் வழிய மேல் துணி யெல்லாம் கிழிந்து கிடக்க; தயா ஒரே தாவலாகத் தாவி என்னை வந்து அணைத்துக் கொண்டாள்.

தொடர்ந்து குழந்தை கேவுவது போல் கேவி, ஒரு பயப் பிராந்தியில் எதுவும் சொல்லத் தெரியாமல் திக்கித்திக்கி

அழுதாள். அவள் முதுகிலும் கையிலும் கசிந்திருந்த ரத்தம் என் உடம்பைக் கறையாக்கியது. அப்படியே என்னை இறுகத் தழுவிக் கொண்டாள்.

அவளைத் தொடர்ந்து, அடுத்த கணத்தில் சிந்துவும், வேலைக்காரனும், வேலைக்காரியும் வந்தார்கள். சிந்து ஒரே கோபமாக இருந்தாள். அவளும் வேலைக்காரனும் ஆளுக்கொரு பெல்ட் வைத்திருந்தார்கள்.

சிந்து ஒரே வேகமாக வந்தாள். "கமலா, அவளை விடு!" என்று சொல்லிப் பிடித்து இழுத்தாள்.

'ஓ' என்ற அலறலுடன் தயா என்னைக் கட்டிக் கொண்டாள். சிந்து அவளை இழுக்க, தயா என்னை இறுக்க மாகக் கட்டிக்கொள்ள, சிறிது நேரம் இழுபறிகள் நடந்தன.

தயா வீறிட்டு, "கமலா! என்னைக் காப்பாற்று! என்னாலே அடி தாங்க முடியலை. காப்பாற்று!" என்று கதறித் தேம்பினாள். அவள் உடம்பு உதறியது. கை படபடவென்று ஒரே நிலையில் இல்லாமல் அடித்தது.

எனக்கு அழுகை பொலபொல என்று உதிர்த்தது. "தீதி! தீதி! அவளை அடிக்காதீங்க" என்று கெஞ்சினேன்.

அதற்கும் சிந்து விடவில்லை. என் பின்புறம் சென்று தயாவை ஓங்கி வீறினாள். படார் என்று பெல்ட்டின் சத்தம் அவள் முதுகைக் கிழித்தது.

"அம்மா! போம்மா! அடிக்காதீங்க! போதும்!" என்று தயா கத்தினாள்.

சிந்து விடவில்லை. எங்களைச் சுற்றிச்சுற்றி வந்த தயாவை மாத்திரம் அடித்தாள். ஒவ்வொரு அடியிலும் தயா சுருண்டு என்னைக் கட்டிக் கொண்டாள். அவள் சிந்திய ரத்தம் என் உடம்பில் அங்கங்கே படிந்துவிட்டதால், அவள் பிடி அடிக்கடி வழுக்கிக் கொண்டிருந்தது.

அவளது தீனமான குரலும், வேதனையும் என் நெஞ்சைக் கரைத்தன. நியாயமாக நான் படவேண்டிய அடிகளை அவள் படுகிறாள் என்று நினைத்தேன். என் மனத்தின் துக்கம் அதனால் பெருகியது.

சிந்து வீசிய பெல்ட்டின் நுனி பல தடவை என்மீது பட்டது. ஒரு முறை அது முழுதாக என்மீது விழுந்தது. அந்தக்

கணமே எனக்கு ஒரு ஆத்திரம் பீறியது! "தீதி, என்னை அடியுங்கள்! என்னை அடியுங்கள்!" என்று கோபத்துடன் கத்தினேன்.

"கமலா! நீ தூரப் போ! தயாவைக் கீழே தள்ளு! இல்லா விட்டால் அடி உன்மேலே படும்" என்றாள் சிந்து.

"படட்டும் தீதி! நான் தாங்கிக் கொள்கிறேன். அடியுங்கள்! அடியுங்கள்!" என்று ஒரே வெறியில் கத்திவிட்டு, தயாவைக் கீழே தள்ளி, அவளைப் பூராவுமாக என் உடம்பால் மூடிக் கொண்டேன்.

சிந்து அடிகளை நிறுத்தினாள். என் அருகே வந்தாள். என் சோளியைப் பிடித்து மேலே இழுத்தாள். "கமலா எழுந்திரு உடனே!" என்றாள் கோபமாக.

"தீதி! என் உயிர் போனாலும் பரவாயில்லை. நான் விட மாட்டேன்" என்றேன்.

இதற்குள் வேலைக்காரன் குறுக்கே வந்து, "ஏ சனி, எழுந்திரு!" என்றான்.

நான் பதில் பேசவில்லை. அவன் கோபத்தில் என் முதுகில் இரண்டு வீறு வீறினான்.

அடியின் உஷ்ணம் சதைவழியாக உள்ளே பாய்ந்து என் உயிரையே தகித்தது.

பல்லை இறுகக் கடித்தேன். உள்ளே என் மனம் வலி தாங்காமல் சுருண்டது.

மேலும் இரண்டு அடிகள் விழுந்தன. அது வீசும் தீயில் எனக்கு நினைவு போய்விடும் போலிருந்தது. என் உத்தரவு இல்லாமலே என் கைகள் நழுவ ஆரம்பித்தன.

மேலும் இரண்டு அடிகள்! அவ்வளவுதான்! இதற்கு மேல் நான் சுருண்டு நினைவிழந்திருப்பேன்.

சிந்து 'நிறுத்து' என்றாள். வேலைக்காரன் நிறுத்தினான்.

என் அருகில் சிந்து வந்து நின்றாள். "கமலா!" என்றாள். பழைய ஆத்திரம் இல்லை. ஆனால் வெறுப்புதான் இருந்தது.

"இது என்ன கமலா! நீ ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று வெறுப்புடன் கேட்டாள்.

எனக்குப் பதில் சொல்ல முடியவில்லை. மூச்சு இழைத்தது. எனக்கு அவகாசம் கொடுத்தாள்.

"தீதி! என் உயிர் போனாலும் சரி! தயாவை நீங்கள் இனிமேல் அடிக்க விட மாட்டேன், இது சத்தியம்!" என்றேன்.

"ஓகோ! அவ்வளவுக்குத் துணிந்து விட்டாயா?" என்றாள் அவள்.

"ஆமாம்."

சிறிது நேரம் அவளிடமிருந்து பேச்சு வரவில்லை. பிறகு, "கமலா! எழுந்திரு" என்று அவள் கர்ஜித்தாள்.

"முடியாது தீதி! என்னை என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளுங்கள்" என்று கத்தினேன். அப்படி ஒரு வெறி என்னை ஆட்கொண்டுவிட்டது.

# 34. இதயம் இரும்பாயிற்று

சிந்து என்னிடமிருந்து அந்த வார்த்தைகளை எதிர் பார்க்கவில்லை. என் அருகே வந்தாள். என்னை இழுக்க முயன்றாள். முடியவில்லை.

அவளுக்கு ஆத்திரம் வந்தது. என்ன செய்வதென்று தெரிய வில்லை. "கமலா! நான் கடைசித் தரமாக எச்சரிக்கிறேன். அப்புறம் என்ன நடக்குமோ தெரியாது" என்று கர்ஜித்தாள்.

"பரவாயில்லை தீதி! நான் சாவதற்குக்கூடத் தயார்" என்றேன்.

என் சத்தியாக்கிரகத்தை நினைத்ததும் எனக்கே ஆச்சரியம்! சிந்து என்ன செய்யப் போகிறாள் என்று ஆவலோடு இருந்தேன்.

ஓங்கி என் முதுகில் ஒரு அடி விழுந்தது. 'ஆ!' என்று அலறினேன். பழுக்கக் காய்ச்சிய கம்பியை முதுகில் இழுத்தது போல் அவ்வளவு எரிச்சல்.

இரண்டாவது அடி பிடரியில். அது ஜ்வாலையாக எரிந்தது. மூன்றாவது பின் பக்கத்திலும் தொடையிலும் விழுந்தது.

அதைத் தொடர்ந்து அடிகள் மாறி மாறி விழுந்தன.

'ஆ' என்று அலற வாயைத் திறப்பேன். அதற்குள் அடுத்த அடி விழுந்து என் அலறலை வெளியே வராமல் செய்து விடும்.

கண்களில் நரம்புகள் புடைத்து எழும். தலையில் தீக் குழம்புகள் கொந்தளிப்பது போல் சூடு பறக்கும்! காதுகளில் 'ஙொய்' என்று இரைச்சல் கேட்கும்!

அந்த நேரத்தில் நம்மை மீறி எழும் இயற்கை உபாதைகளை அடக்கிக் கொள்வது கூட வெகு கஷ்டம்.

ஆனால் அடிகள் படப்பட நாம் சிறிது சிறிதாக உடலி லிருந்து கழன்று எங்கேயோ போவதுபோல் பிரமை தோன்றும்.

அந்தப் பிரமையில்தான் நான் படிப்படியாக அழுந்திக் கொண்டிருந்தேன். என்னையறியாமல் என் அவயவங்கள் இயங்குவதை உணர்ந்தேன்.

இப்போது சிந்து, "நிறுத்து" என்று கத்துவது கேட்டது. இடைவெளியில்லாமல் அடுக்கடுக்காக விழும் அடிகள் நின்ற வுடன் முதுகில் திடீரென்று குளிர்ச்சி பரவுவது போலிருந்தது. சில விநாடிகள்தான். அதன் பிறகு, இதுவரை பட்ட அடிகளின் காந்தல் தாமாக எழுந்து என்னைத் தீய்க்கத் தொடங்கின.

என் முகத்தை யாரோ கையில் ஏந்துவதைப் பார்த்தேன். சிந்துவின் முகம் தெரிந்தது. அவள் கண்களில் இரக்கம் பிரதி பலிப்பதும் தெரிந்தது.

கண்களை மூடினேன்.

என் மூளைக்குள் பெரிய சண்டைகளும் குழப்பங்களும் நடந்து கொண்டிருந்தன.

"அம்மா, கமலா!" என்றாள் சிந்து. என் தலையை வருடினாள்.

"தீதி! என்னை அடியுங்கள், கொன்று விடுங்கள்" என்று முனகினேன்.

"எதுக்கம்மா நீ சாகணும்! அந்த பாதகி வீட்டைவிட்டு வெளியே போனாள். அவளை அல்லவா சாகடிக்கணும். நீ ஏம்மா அவளுக்காக இப்படிக் கஷ்டப்படறே?"

"அவள் என் சினேகிதி!"

"அதனால் என்ன?"

"நீங்கள் அவளை அடிக்கக் கூடாது!"

"அவள் ஏன் தப்பித்துப் போனாள்?"

"அது அவள் செய்த தப்பு!"

"நீ உடந்தையாக இருந்தாயா?"

"இல்லை."

"அப்படியானால் அவள்மேல் ஏன் இரக்கப்படுகிறாய்?"

"அவள் அடிபடுவது எனக்குப் பிடிக்கவில்லை."

"அவளால் ஐந்நூரு ரூபாய் நஷ்டம் தெரியுமா?"

"தெரியும்! உங்களுக்கு இதுவரை அவள் எவ்வளவு ஆயிரம் ரூபாய் சம்பாதித்துக் கொடுத்திருப்பாள் தெரியுமா?"

"அதைப் பற்றிக் கவலை இல்லை! நாங்கள் இழந்த ஐந்நூறு ரூபாய்தான் எங்களுக்குப் பெரிது!"

மெள்ளத் திரும்பினேன். "உங்களுக்கு ஐந்நூறு ரூபாய் தானே நஷ்டம்! அதை நான் சம்பாதித்து ஈடு கட்டுகிறேன். போதுமா!" என்றேன் கோபத்துடன்.

"எப்படி ஈடு கட்டுவாய்?"

"காலை பத்து மணி வரை இனி தூங்க மாட்டேன். ரெஸ்ட் எடுக்க மாட்டேன். கிடைக்கும் நேரம் முழுதும் என் உடம்பை வருத்தி உங்களுக்குச் சம்பாதித்துப் போடுவேன். போதுமா?"

"சொல்லுகிறாயே தவிர உன்னால் முடியாது."

"முடியும் தீதி! இது சத்தியம்" என்று கத்தினேன்.

சிறிது நேரம் யாரும் பேசவில்லை. நான் கண்ணை மூடியிருந்தேன். எல்லோரும் என்னைவிட்டுப் போவதை உணர்ந்தேன். சிந்து எல்லோருக்கும் சைகை செய்திருக்க வேண்டும்.

கால் மணி சென்றது. அப்படியே கிடந்தேன்.

பிறகு சிறிது சிறிதாகத் தளர்ந்து தயாவின் உடம்பிலிருந்து கீழே சரிந்தேன். அவளைப் பார்த்தேன். பாதி மயக்கத்தில் அவள் இருந்தாள்.

மெதுவாக எழ முயன்றேன். முடியவில்லை. முதுகில் ரணத்தோடு ஒட்டியிருக்கும் புடவையை உருவினேன்.

ரணங்களில் இயற்கைக் காற்றுப்படும்படி செய்தேன். வலிகளைப் பொறுத்துக்கொண்டு மெதுவாக எழுந்து கோணிய வாறு உட்கார்ந்தேன்.

"இந்தா! குடி!" என்று, எரிச்சலுடன் டாலி ஒரு டீயைக் கொணர்ந்து 'டக்' என்று வெறுப்புடன் என் முன் வைத்தாள்.

எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. கோப்பையைத் தூக்கினேன். வீசி அவள் மீது எறிந்தேன்.

அவள் விலகினாள். கோப்பை கீழே விழுந்து நொறுங்கியது.

"ஏ, கமலா!" என்று கத்தினாள் அவள்.

"என்னடி?" என்று பதிலுக்குக் கத்தினேன் நான்.

"என்ன செய்வேன் தெரியுமா?" என்று கறுவினாள்.

"செய்யறதைச் செய்! நான் சாகிறதுக்குத் துணிந்தவள். ஜாக்கிரதை! இனி உன் ஜம்பம் பலிக்காது!" என்று கத்தி, அடுத்தாற்போல் ஸாஸரையும் தூக்கி எறிந்தேன்.

என்ன நினைத்தாளோ தெரியாது! கீழே டாலி ஓடி விட்டாள்.

சிறிது நேரம் சென்றது. நிழல் தட்டியது. நிமிர்ந்து பார்த்தேன். கையில் டீயுடன் நிசா என் அருகில் நின்றாள். என்னை இரக்கத்துடன் பார்த்தாள். அவளைப் பார்த்ததும் எனக்கு அழுகை வந்தது.

அவள் உட்கார்ந்தாள்! "கமலா! உன்னுடைய உடம்பு வெறும் சதையா அல்லது இரும்பா? அடியின் சத்தத்தையே என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை! அடிகளை நீ எப்படிப் பொறுத்துக் கொண்டிருந்தாய்?" என்றாள்.

நான் மேலும் அழுதேன். அதற்குள் நேபாளியும் அவளது தங்கையும் அங்கே வந்தார்கள். அவர்கள் என்மேலே தடவுவ தற்கு மருந்து கொண்டு வந்திருந்தார்கள். பார்வையால் அனுமதி யைப் பெற்றுக்கொண்டு என் முதுகில் தடவ ஆரம்பித்தார்கள்.

"கமலா! உன்னுடைய தியாகம் பெரியது! தயாவுக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறாய்?" என்று கூறி நிசா எனக்கு டீயைத் தந்தாள். நான் அதைத் தயாவுக்குக் கொடுக்கும்படி சொன்னேன்.

தயாவை மெள்ள எழுப்பினோம். இன்னும் பிரமையி லிருந்து அவள் மீளவில்லை. அவளைத் தூக்கி நேப்பாளி தன் மார்பில் சாய்த்துக் கொள்ள நிசா மெதுவாக அவள் வாயில் டீயை ஊற்றினாள்.

எனக்கு டீ வரவழைக்கப்பட்டது. அதைச் சாப்பிட்டதும் சிறிது தெம்பு ஏற்பட்டது. ஆனால் உடம்பில் ஒரு வெட வெடப்பு தோன்ற ஆரம்பித்தது ஜுரம் வந்துவிடும் என்று நினைத்தேன்.

நான்கு மணிவரை அங்கேயே படுத்திருந்தோம்.

சாப்பாடு வந்தபோது வேண்டாம் என்று கூறி விட்டேன். வாய் ஒரே கசப்பாக இருந்தது.

நான்கு மணிக்குமேல் எங்களைத் தூக்கி அடுத்த அறையில் படுக்க விட்டார்கள். எனக்கு அதற்குள் ஜுரம் வந்து விட்டது.

இரவு ஏழுக்கு ரேணு என்னை எழுப்பிப் பேசினாள். மாத்திரை வாங்க ஆள் அனுப்புவதாகக் கூறினாள். மாத்திரை வந்ததும் என்னை விழுங்கச் செய்தாள்.

தயாவுக்கு இன்னும் நினைவு வரவில்லை. சோர்ந்து படுத்திருந்தாள். குரல் வளையில் மூச்சு நீண்டு நீண்டு போவது தெரிந்தது.

மூன்று நாட்கள் எனக்கு ஜுரம் அடித்தது. உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது. ஒரே குளிர்!

என்னை மாடி அறையிலும், தயாவைக் கீழே உள்ள அறையிலும் தனித்தனியாகப் படுக்க விட்டார்கள்.

தயாவுக்கு டாலியும், எனக்கு நிசாவும் உதவி செய்தார்கள்.

நான்காம் நாள் உடம்பு சரியாகியது. ஆனால் பலவீன மாக இருந்தேன். நிசா என்னை மிகவும் ஆதரவுடன் கவனித்தாள். ஹார்லிக்ஸும் பழங்களும் அவள் செலவிலேயே வாங்கிக் கொடுத்தாள்.

அன்று இரவு ரேணு என்னைப் பார்க்க வந்தாள். "தயா எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டேன். அவள் உடம்பு தேறி விட்டது என்றும், ஆனால் ஒரே பயப்பிராந்தியில் இருக்கிறாள் என்றும் கூறினாள்.

"அவள் எப்படி ரவுடிகளிடம் சிக்கிக் கொண்டாள்?" என்று கேட்டேன்.

"அதைக் கேட்க முடியவில்லை. டாலி அவளை விட்டு இந்தண்டை அந்தண்டை போனால்தானே" என்றாள்.

எவ்வளவோ திட்டம் போட்டு நடத்தியும் எல்லாம் இப்படிப் பாழாகி விட்டதே என்று நினைத்தோம். ஒரு பெண் தப்பித்து ஓடிய பிறகுகூட இப்படி அகப்பட்டுக் கொண்டாளே என்று வருத்தப்பட்டோம்.

மேலும் நான்கு நாட்கள் சென்றன. நான் அன்றாட வாழ்க்கையில் இறங்கினேன். முதுகின் ரணங்கள் முழுதுமாக

ஆறவில்லை. ஆதலால், படுப்பது சிறிது கஷ்டமாக இருந்தது. எனக்கு வரும் வாடிக்கையாளர்களில் பெரும்பாலோர் எனக்கு நன்றாகப் பரிச்சயமானவர்கள். ஆகவே என் உணர்ச்சிகளை மதித்து அவர்கள் அனுசரித்துப் போனார்கள்.

ஒரு வாரம் போயிருக்கும். பல்பீர் வந்தான். என் நிலையைக் கண்டதும் பரிதாபப்பட்டான். ஆனால், தயாவுக்கு நான் செய்த உதவியை அவன் ஆமோதிக்கவில்லை. நான் அநாவசியமாக மற்றவர்களுக்காக உதவி செய்து மாட்டிக் கொள்கிறேன் என்று கூறினான். என் முதுகில் இன்னும் வலி இருக்கிறது என்று தெரிந்ததும், எனக்காக இரண்டு ரப்பர் நுரை மெத்தைகளை மறுநாள் வாங்கிக் கொண்டு வந்தான்.

அடுத்த சில தினங்களில் எனக்குத் தெம்பு வந்தது. தொழிலில் இறங்கினேன். அப்படிச் செய்வதன் மூலம் சிந்துவுக்கு ஐந்நூறு ரூபாய் சம்பாதித்துக் கொடுத்த பிறகே, இளைப் பாறுவது என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

தயாவும் உடம்பு சரியாகி, அன்றாட வாழ்க்கைக்கு வந்து விட்டாள் என்று கேள்விப்பட்டேன். அவளை நேரில் பார்த்துப் பேசவேண்டும் என்று எத்தனையோ முறை முயன்றேன். முடிய வில்லை. இரவு வேளைகளில் ஹாலில் அவளது சோகமயமான முகத்தை ஒன்றிரண்டு தடவை பார்க்க முடிந்தது. அவள் எங்கள் யாரையும் ஏறிட்டுப் பார்க்கவே இல்லை.

ஒரு நாள் அம்சா என்னைச் சந்தித்தாள். அவள் தப்பித்துப் போவதற்கு அவளது காதலன் உபாயம் கூறுவதாகக் கூறினாள். ஆனால் தயாவுக்கு நேர்ந்ததைப் பார்த்தால் அவளுக்குப் பயமாக இருக்கிறது என்றும் கூறினாள். காதலனோ அவன் சொற்படி செய்யும்படி அவளை வற்புறுத்துவதாகக் கூறினாள்.

நான் அவளை எச்சரித்தேன். அவள் தனது காதலனை என்னிடம் ஒரு நாள் இரவு அழைத்து வருவதாகக் கூறினாள். "அதற்கு அவன் இரட்டைச் செலவு செய்வானா?" என்றேன். "செய்வார்" என்றாள்.

இங்கே சில வாடிக்கையாளர்கள் அறைக்குச் செல்லும் போது இரண்டு பெண்களை அழைத்துச் செல்வார்கள். மூன்று பெண்களை அழைத்துச் செல்பவர்களையும் பார்த்திருக்கிறேன். ஒருவர் நான்கு பேரை அழைத்துச் செல்வதையும் பார்த்திருக் கிறேன். இதற்கு இரட்டிப்புச் செலவுகளை அவர்கள் செய்ய வேண்டும்.

இந்த முறையில் செய்து, அம்சாவின் காதலன் என்னையும் அம்சாவையும் ஒரு நாள் அழைத்துக் கொண்டு அறைக்குப் போனான்.

கதவு மூடியதும் நாங்கள் பேச ஆரம்பித்தோம். அம்சாவை எப்படியும் அவன் அடையவேண்டும் என்றும், அதற்காக என்ன தியாகம் வேண்டுமானாலும் செய்யத் தயார் என்றும் கூறினான்.

## 35. துன்ப நிகழ்ச்சிகள்

"அம்சாவை எப்படித் தப்ப வைக்க முடியும்?" என்றேன்.

"அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் அம்சாவின் காதலன்; எனக்குச் சிரிப்பு வந்தது.

ஆனால் அவள் தப்பித்து விட்டால் அவளுக்காக ஒரு வீடு தயாராக இருக்கிறது என்றும், அவனும் அவனது மாணவ சிநேகிதர்களும், எந்தவித ஆபத்திலிருந்தும் அவளைக் காப்பாற்ற முடியும் என்றும் கூறினான்.

எப்படித் தப்புவது என்பதில் எங்களுக்கு இடையே சர்ச்சை நடந்தது. அப்போது அவன் ஒரு யோசனை சொன்னான். அதுவும் எனக்கு வேடிக்கையாக இருந்தது. இருட்டும்போது சில பெண்கள் வாசலில் நின்று வாடிக்கை யாளரை அழைப்பார்கள். சிலபேர் வீதியிலும் இறங்கி விடுவார்கள். அது போன்ற சந்தர்ப்பத்தில் அம்சா தெருவில் இறங்கி நடந்துவிட வேண்டும். சாதாரணமாக அவள் நடந்து போகலாம். யாரும் சந்தேகப்பட மாட்டார்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் அவளை மற்றவர் வீட்டுப் பெண் என்று நினைத்துக் கொள்வார்கள். அவள் உரிமையோடு நடந்து செல்வதால் தெரு ரவுடிகளும் அவள்மீது சந்தேகப்படமாட்டார்கள். அவள் ஏதோ கடைக்குப் போகிறாள் என்று நினைப்பார்கள். எந்தவித ஏற்பாடுகளும் இல்லாமல் எளிதாக அவள் விடுதலையாகி விடலாம். இதுதான் அவனது திட்டம்.

அதைக் கேட்டபோது சிரிப்பு வந்தது. இதெல்லாம் அவ்வளவு எளிதாக நடக்கக்கூடிய காரியமா? எவ்வளவோ திட்டமிட்டு நடத்திக்கூடத் தயா மீண்டும் பிடிபட்டு விட்டாள். அப்படியிருக்கும்போது அம்சா பிடிபட மாட்டாளா என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் இருவரும் அது மிகச் சுலபம்

போல் பேசிக் கொண்டார்கள். எனினும் அறையைவிட்டு வெளி வந்தபோது அம்சாவை எச்சரிக்கை செய்து விட்டு வந்தேன்.

நாட்கள் சென்றன. தயா பிடிபட்டதிலிருந்து எனக்கும் மற்றப் பெண்களுக்கும் எதிலும் உற்சாகம் இல்லை. ஆயுள் காலம் வரை இங்கேயே சிறைப்பட்டுக் கிடப்போமோ என்று நினைத்தோம். எங்கள் மனங்களில் வேதனையும் பயமும் நிறைந்து விட்டன.

தயா மிகவும் பாதிக்கப்பட்டிருந்தாள். எப்போதும் சோகத்திலேயே முகத்தைக் கவிழ்த்திருந்தாள். யாரிடமும் அவள் சரியாகப் பேசவில்லை.

தனியாக அவளைச் சந்தித்துச் சமாதானம் கூறவேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால், அதற்குச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.

ஒருநாள் இரவு பதினொரு மணிக்குமேல் ஹாலில் லேசான விசிப்புச் சத்தம் கேட்டது. அப்போது ஒரு அறைக்குள் நான் இருந்தேன். அந்த வேளையில் பாத்ரூமிலிருந்து யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. காலை இழுத்து வைப்பதி லிருந்து ரேணு என்று கண்டு பிடித்தேன்.

"ரேணு! ஹாலில் விசிக்கும் சத்தம் கேட்கிறது. தயாவா!" என்று அறைக்குள்ளிருந்தவாறு கேட்டேன்.

"அவளாகத்தான் இருக்கும்!" என்றாள் அவள்.

"ரேணு! அவளைக் கவனி!" என்றேன்.

அன்று அதிர்ஷ்டவசமாக டாலிக்கு ஜுரம். ஒரு அறையில் படுத்துக் கிடந்தாள். எனவே ரேணுவுக்கு தயாவை அணுகுவது எளிதாக இருந்தது.

ரேணு அன்று இரவு முழுவதும் தயாவின் அருகிலேயே படுத்திருந்தாள். மறுநான் காலை மூன்று மணிக்கு என்னைச் சந்தித்தாள்.

தயாவிடம் மெதுவாகப் பேசி அவள் பிடிபட்ட விவரங் களை எல்லாம் அவள் கேட்டு வந்திருந்தாள்.

தப்பித்துப் போன இரவில் தயா வெளியே சென்றதும் விடுவிடென்று நடந்திருக்கிறாள். ஓடினால் சத்தம் கேட்குமோ என்று பயம். எனவே அவசர நடையாகப் போயிருக்கிறாள்.

வீட்டை விட்டு வெளியே வந்ததும் வலதுபுறம் திரும்பி அவள் போய் விட்டதால் பல்பீரின் சினேகிதனை அவள் சந்திக்க முடியவில்லை. அவன் இடதுபக்கக் கம்பத்தின் அடியில் நின்று கொண்டிருந்தான். அவன் நிற்கும் விஷயத்தையும் நாங்கள் அவளிடம் சொல்ல மறந்து விட்டோம்.

தயா ஸ்கர்ட்டும், சட்டையும் போட்டிருந்தாள். வெளியே போவதற்குமுன் அவசர அவசரமாக ஒரு ஸாரியைத் தேடியிருக் கிறாள். அது கிடைக்கவில்லை. அதற்குள் இந்திராணியும் ரேணு வும் அவளை வெளியே போகும்படி நெரித்து விட்டார்கள். தயா பரபரப்பில் வெளியேறி விட்டாள்.

ஸ்கர்ட்டும் சட்டையுடனும் தெருவில் நடந்து செல்ல அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால் ஓரமாகப் பதுங்கியவாறு போனாள்.

இரண்டு தெருக்களைக் கடந்திருப்பாள். தப்பி விட்டோம் என்ற பெருமிதம் ஏற்பட்டது. ஆனால் எங்கே போவது?

தொலைவில் ஏதாவது ஒரு வீட்டில் அண்ட வேண்டும் என்று நினைத்தாள். பதைக்கும் நெஞ்சத்துடன் ஒவ்வொரு பத்தடிக்கும் பின்புறம் திரும்பிப் பார்த்தவாறு நடந்தாள்.

ஒரு தெருவில் திரும்பும்போது திடீரென்று ஆட்டோ ஒன்று புறப்படும் சத்தம் கேட்டது. அது வேறு எங்கோ போகிறது என்று நினைத்தாள். ஆனால், அவளை நோக்கியே அது வந்தது.

ஓடவா அல்லது நிற்கவா என்று யோசிப்பதற்கு நேரம் இல்லை. அதற்குள் ஆட்டோ அருகில் வந்துவிட்டது.

"ஏம்மா! ராத்திரியிலே எங்கே போறே?" என்று கேட்டான் ஆட்டோக்காரன்.

"போறேன்" என்று ஒருகணம் குழறிய தயா, தொடர்ந்து "அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. மாமாவிடம் தெரிவிக்கப் போகிறேன்" என்றாள்.

"வா வண்டியிலே ஏறிக்க! கொண்டு விடுகிறேன்" என்றான் அவன்.

''வேண்டாம்!'' என்று சொல்லி மேலே போக ஆரம்பித்தாள்.

வண்டியும் புறப்பட்டது. ஆனால் சிறிது நேரம் போனதும் டக்கென்று நின்றது.

ஆட்டோக்காரன் அவசரமாக இறங்கி அவளை நோக்கி வருவது தெரிந்தது.

அதைப் புரிந்துகொண்ட தயா சட்டென்று மறுபுறம் நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

சற்றுத் தொலையில் சென்று திரும்பிப் பார்த்ததும், ஆட்டோக்காரன் அவளைப் பின் தொடர்வது தெரிந்தது. பயந்து ஓட ஆரம்பித்தாள்.

ரொம்ப தூரம் ஓடமுடியாது என்று தெரியும். எனவே சட்டென்று ஒரு நிழலில் ஒதுங்கி ஒரு வீட்டின் படிமீது ஏறிக் கதவைத் தடதடவென்று தட்ட ஆரம்பித்தாள்.

அந்தக் கணங்கள் மிகப் பயங்கரமாக இருந்தன.

சில விநாடிகளுக்குப் பிறகு கிளிக்கென்று சத்தத்துடன் கதவு திறந்தது. உள்ளே விளக்கு எரிந்தது.

ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி கதவைத் திறந்தாள். தயா விருட்டென்று பாய்வதைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டு நின்றாள்.

"அம்மா! தாயே! தயவுசெய்து என்னைக் காப்பாற்று! கதவை உடனே சாத்து!" என்று சொல்லிவிட்டு வீட்டுக்காரியின் பதிலுக்குக் காத்திராமல் தயாவே கதவைச் சாத்தினாள். பிறகு அதே அவசரத்தில் அவளது காலைப் பிடித்துக் கொண்டு, "என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினாள்.

சிறிது நேரத்தில் கதவு லேசாகத் தட்டப்பட்டது. வீட்டுக்காரி யோசித்தாள். மீண்டும் ஓசை கேட்கும் என்று நினைத்தாள். கேட்கவில்லை. தயாவை வீட்டுக்காரி உள்ளே அழைத்துப் போனாள். தயா சுருக்கமாகத் தன் நிலைமையைச் சொன்னாள். பதட்டத்தில் அதிகம் பேச முடியவில்லை. தன்னை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். வீட்டுக்காரி அவள் படுத்துக் கொள்வதற்குப் படுக்கை கொடுத்தாள்.

இரவு ஒருவாறு சென்றது.

காலையில் கதவு தட்டப்பட்டது. வீட்டுக்காரர் அதைத் திறந்தபோது வாசலில் ஆட்டோக்காரனும் ஒரு ரவுடியும் நின்று கொண்டிருந்தார்கள்.

"நம்ப பொண்ணுங்க! ராவு சண்டையிலே வீட்டைவிட்டு ஓடிடுச்சு. இங்கேதான் இருக்குதுன்னு தெரியும்!" என்றான் ரவுடி.

வீட்டுக்காரருக்கு அன்று காலையில்தான் விஷயம் தெரிய வந்திருந்தது. அவரது மனைவி அவரிடம் கூறியிருந்தாள். "அந்தப் பெண் உன் பெண் இல்லை என்று சொல்கிறாளே!" என்றார் அவர்.

"என் பொண்ணு இல்லையா? யார் சொன்னாங்க? கூப்பிடுங்க அவளை!" என்று கோபத்துடன் கூறிய ரவுடி. கண்டபடி கூச்சல் போட ஆரம்பித்தான். ஆட்டோக்காரனும் அவனுடன் சேர்ந்து கொண்டான். அவர்களது ரவுடித்தனத்தைக் கண்டு வீட்டுக்காரர் நடுங்கினார்.

"வீட்டிலே ஒரு பொண்ணு புகுந்துதுன்னா அதை உன்னோடு வெச்சுப்பியா! இங்கே ஊரைக் கூட்டியாந்துடுவேன். ஜாக்கிரதை!" என்று ரவுடி மிரட்டினான்.

அவர்களது கூப்பாடு அதிகமாகியது. வீட்டுக்காரர் உள்ளே வந்தார். "நமக்கு ஏன் இந்த வீண் வம்பு?" என்று மனைவியிடம் கோபத்துடன் கேட்டார். இரண்டு பேருக்கும் வாக்கு வாதம் நடந்தது.

இதற்குள் அந்த ரவுடி வீட்டிற்குள் நுழைந்து, அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்துவிட்டான். விட்டுக் காரர் ஒரு அப்பாவி! பயந்து விட்டார்.

உடன் உள்ளே போனார். தயாவை அழைத்தார். அவள் வரவில்லை. "நீ இங்கே இருக்கக் கூடாது. இது உன் வீடா? போ வெளியே! எங்களுக்கு அநாவசியத் தொல்லை கொடுக்காதே! என்று சொல்லிச் சீறி, உள்ளே போய் அவளைக் கரகரவென்று இழுத்து வந்தார்.

"அம்மா! என்னைக் காப்பாற்றுங்க! காப்பாற்றுங்க! போக விடாதீங்க!" என்று தயா அலற, வீட்டுக்காரி வெலவெலத்து நிற்க, வீட்டுக்காரர் தயாவை இழுத்து ரவுடியின் முன் தள்ளினார்.

ரவுடி அவளைப் பிடித்துக் கொண்டான். "வா கண்ணு! கோபப் படாதே! வீட்டிலே எல்லாம் சரியாப் போயிட்டுது! உனக்குக் கவலை வேண்டாம்" என்று இழுத்தான்.

அப்போது தயா எதிர்பாராத ஒரு காரியத்தைச் செய்தாள். ஊரே அலறும்படியாகப் பெரும் கூச்சல் போட்டாள். வீடு அதிர்ந்தது. ரவுடியும் திடுக்கிட்டான்.

உடனே அவன், அவளது வாயைப் பொத்த முயன்றான். அவள் திமிறி இன்னும் பலமாகக் கூச்சல் போட ரவுடி முடிவில் திணறிவிட்டான்.

“இங்கே வாங்க!” என்று வீட்டுக்காரரை வெளியே கூட்டிக்கொண்டு போனான். தயாவை இரவில் அழைத்துப் போவதாக அவரிடம் கூறினாள். வீட்டுக்காரரும் அதற்கு ஒத்துக் கொண்டார்.

இந்த விஷயம் தயாவுக்குத் தெரியாது. அவள் பகலில் எங்கேயாவது தப்பித்துப் போய்விடக்கூடாது என்பதற்காக, ஆட்டோக்காரன் வாசலிலேயே உட்கார்ந்து விட்டான்.

இரவு சந்தடிகள் அடங்கியதும், ரவுடி இன்னும் இரண்டு பேர்களுடன் வந்தான். வீட்டுக்காரரை வெளியே அழைத்துப் பேசி அவரது உதவியுடன் தயாவுக்கு அவளை அறியாமல் டீயில் மயக்க மருந்து கலந்து கொடுத்தான். அவள் மயக்கம் அடைந்ததும் அவளைத் தூக்கி வெளியே நின்றிருந்த டாக்ஸியில் ஏற்றினான். நேரே சிந்துவின் வீட்டுக்குக் கொண்டு போனான்.

இந்தச் செய்தி முழுவதையும் ரேணுவிடமிருந்து கேட்டதும் நான் வருத்தப்பட்டேன். திட்டம் போட்டதில் எவ்வளவோ விஷயங்கள் முன்கூட்டி யோசனை செய்யவில்லையே என்று வருத்தப்பட்டேன்.

ரேணு மேலும் தயாவைப் பற்றிய விவரங்களைக் கூறினாள். அவள் பழைய தயாவாக இல்லை என்றும், அவளை ஒரு பெரிய சோகம் கவ்வியிருக்கிறது என்றும் கூறினாள்.

ஒரு வாரம் சென்றது. ஒரு இரவு ஒன்பது மணி! இந்திராணி எனக்கு ஜாடை செய்தாள். பாத்ரூமுக்கு ஓடினேன். ஆச்சரியம்! அங்கே தயா நின்று கொண்டிருந்தாள்.

அவளைக் கட்டிக்கொண்டு அழுதேன். பிறகு சமாதானம் கூறினேன்.

அவள் முற்றிலும் மாறியிருந்தாள். பழைய ஊக்கத்தையும் தைரியத்தையும் அவளிடம் காணவில்லை. என்னைத் துக்கமாகப் பார்த்தாள். “கமலா! நாம் இங்கிருந்து தப்ப வேண்டுமானால் யாராவது ஒருத்தி பெரிய தியாகம் செய்ய வேண்டும்!” என்றாள்.

"என்ன தியாகம்?" என்றேன்.

"யாராவது இறக்க வேண்டும்" என்றாள். நான் திடுக்கிட்டேன்.

"தயா! உனக்கு ஏன் இந்த விபரீத எண்ணம்?" என்று கேட்டேன்.

"அப்படிச் செய்தால்தான் வெளியாட்களுடைய கவனத்தைக் கவர முடியும்!" என்றாள்.

'அது முடியுமா? நாம் இறந்து விட்டால் நமது உடலை ஓசைப்படாமல் அப்புறப்படுத்தி விடுவார்கள்" என்றேன்.

"நான் சொல்லுகிற வழியே வேறு! நாலு பேர் தெரியும்படி நம்மில் யாராவது உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும்" என்றாள்.

நான் விழித்தேன். பிறகு, "தயா, இதெல்லாம் வீண் எண்ணங்கள். யாரையாவது பலி கொடுத்துத்தான் இந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டுமா? அதெல்லாம் வேண்டாம்! பொறுத்திரு! நாம் எல்லோரும் ஒன்றாக வெளியேறி விடலாம்" என்றேன்.

"அதில் எனக்கு நம்பிக்கை இல்லை!" என்றாள்.

"நம்பிக்கை வை, தயா! மனம் தளராதே! உன் பக்கம் நான் எப்போதும் இருப்பேன். நானே ஒரு புதிய திட்டம் போடுகிறேன்" என்றேன்.

"கமலா! பொது மக்களுக்கு முதுகெலும்பு இல்லை! என்னைப் பாதுகாக்கச் சந்தர்ப்பம் இருந்தும், அவர்களால் முடியவில்லை. ரவுடித்தனத்தின் முன் அவர்கள் பயப்படுகிறார்கள். இந்தப் பயம் இருக்கும் வரை, நாம் தப்பித்து வெளியே ஓடினால் கூட, நமக்கு விமோசனம் கிடையாது" என்றாள்.

நம்பிக்கையை அவள் இழந்து விட்டாள் என்பதை அறிந்தேன். பழைய தயாவாக இல்லை. எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவளுக்கு ஏற்பட்ட அனுபவம் அவளை அவ்விதம் கோழையாக்கி விட்டது.

சில நாட்களுக்குப் பிறகு தயாவை மேல் மாடிக்குக் கொண்டு போய் விட்டார்கள். அவளை அதிகமாகக் கண்காணிக்க விரும்பியதுதான் அதன் காரணம்.

அங்கே போனதிலிருந்து, அவளது நிலைமை மேலும் மோசமாகியது என்று சொன்னார்கள்.

ஒரு நாள் மாலை ஐந்து மணிக்குச் சிந்து என்னை அழைத்து வரும்படி ஆள் அனுப்பியிருந்தாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் தயா பிடிபட்ட நாளிலிருந்து நாங்கள் பேசுவதே இல்லை. நான் அவள் கண்ணில் படுவதுகூட இல்லை.

நான் எடுத்துக் கொண்ட சபதத்தின்படி என் அன்றாட வாழ்க்கையின் நேரங்களை அதிகரித்துக் கொண்டு அதன் மூலம் கூடுதலாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தேன். சிந்துவுக்கு அதன் மூலம் ஒரு ஐநூறு அல்ல, மூன்று ஐநூறுகள் கிடைத்திருக்கும். இது நானாக என்மீது ஏற்படுத்திக் கொண்ட வேதனை.

கீழே இறங்கிப் போய் சிந்துவின் முன்னால் நின்றேன். என் அருகில் அவள் வந்தாள். ஒரு டம்ளர் பீரை நீட்டி, “சாப்பிடு” என்றாள்.

“வேண்டாம்” என்றேன்.

“உடம்பு இளைத்துவிட்டாய், சாப்பிடு கமலா!” என்றாள். என் தலையை வருடினாள்.

“கமலா! நீ தினம் காலையிலே எழுந்திருப்பது எல்லாம் போதும்! பழையபடி நல்லாத் தூங்கு! உடம்பைப் கெடுத்துக் கொள்ளாதே! இதோடு நிறுத்திக்கோ! நான் உன்னை அடித்த தெல்லாம் அநியாயம்! என்னை மன்னித்து விடு!” என்றாள்.

எனக்கு அழுகை கொதித்து வந்தது. தேம்பினேன். அவள் என்னை அணைத்துக்கொண்டாள்.

“அழாதே கமலா! என்னை மன்னித்துவிட்டேன் என்று சொல்! சொல்லு!” என்று முகவாயைப் பிடித்துக் கெஞ்சினாள்.

நான் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

சிந்து விடவில்லை. என் முகத்தை விடாப்பிடியாக நிமிர்த்தினாள். “என்னை மன்னித்து விடு கமலா!” என்று குழைந்தவாறு கெஞ்சினாள்.

“தீதி!” என்றேன். “நான் யாரையும் மன்னிக்க வேண்டாம். நான் இந்த வீட்டில் ஒரு அடிமை! நீங்கள் இட்ட கட்டளை களை நான் செய்ய வேண்டும். யாரையும் இந்த அடிமை மன்னிக்க முடியுமா? அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது?” என்றேன்.

"நீ அடிமையல்ல! என் சகோதரி!" என்று சொல்லி என்னை மீண்டும் அணைத்துக் கொண்டாள் சிந்து. என்னை அடித்ததை நினைத்துச் சிறிது நேரம் அழுதாள். பிறகு அடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்தாள்.

"நீ உழைத்ததெல்லாம் போதும். அப்படி உழைத்தும் எனக்குப் பிரயோசனமில்லை. நீ தந்த பணத்தை எல்லாம் அந்தக் கடன்காரர் (அவளது கணவன்) சூதாட்டத்தில் தொலைத்து விட்டு வந்து விடுகிறார். என்னிடம் பணம் இருந்தால் தானே அவர் பிடுங்கிக் கொள்ள முடிகிறது! இல்லாதிருந்து விட்டால் எதுவும் செய்ய முடியாதே!" என்றாள்.

பிறகு அவள் கணவன் செய்யும் அட்டூழியங்களை என்னிடம் கூறினாள். சூதாட்டத்திலும் குடியிலும் நிறையச் செலவழிக்கிறான் என்றும் ஒரு பிரபல ஓட்டலில் உள்ள ஒரு பெண்ணிடம் அடிக்கடி போகிறான் என்றும் கூறினாள்.

"அவரை வற்புறுத்தி வீட்டில் நிறுத்தி வைத்தால் இங்குள்ள பெண்களை இழுக்கப் பார்க்கிறார். டாலிக்கும் இவருக்கும் ரொம்பப் பிடித்தம். டாலியின் குழந்தை அவரது குழந்தைதான்! இந்த அநியாயத்தை யாரிடம் சொல்வேன்!" என்று அழுதாள்.

கடைசியில், "கமலா! என் கணவர் உன்னை எந்தவிதத்தில் நெருங்கினாலும் இடம் கொடுக்காதே! எனக்குத் துரோகம் செய்யாதே!" என்று சொல்லி உறுதிமொழி வாங்கிக் கொண்டாள்.

என்னை வற்புறுத்திப் பீர் குடிக்க வைத்த பிறகுதான் அவள் விடுவித்தாள்.

ஒரு வாரம் போயிருக்கும். திடீரென்று ஒரு நாள் காலையில் அம்சாவைக் காணவில்லை. எல்லோரும் தேடினார்கள்.

எனக்கு ஒரே அதிசயம்! அவள் எப்படித் தப்பியிருக்க முடியும் என்று பலவிதங்களில் யோசித்துப் பார்த்தேன். புரியவில்லை.

ஆனால் சீக்கிரமே விவரங்கள் தெரியவந்தன. முந்தியநாள் அந்தி வேளையில் எல்லாப் பெண்களுடன் அவளும் வெளியே வாசற்படியில் நின்றிருக்கிறாள். அவளது காதலனின் வரவை

எதிர்பார்த்து அவ்விதம் நிற்கும் பழக்கம் அவளுக்கு உண்டு. ஆதலால் அவளை மற்ற பெண்கள் பொருட்படுத்தவில்லை.

அவள் படியில் நின்று கொண்டிருக்கும் போது, கவுர் என்ற ஒரு துணிச்சல்காரப் பெண் தெருவில் இறங்கி ஒரு ஆசாமியை வழி மறித்திருக்கிறாள். அவன் கையையும் பிடித் திருக்கிறாள்.

ஆனால் அந்த ஆசாமி ஒரு பாதிப் பைத்தியம்! கவுர் அவன் கைகளைப் பிடிக்கவே அவன் தெருவிலேயே டான்ஸ் ஆட ஆரம்பித்தான்! மற்றப் பெண்களும் அதற்கு ஏற்பக் கைதட்டித் தாளம் போட்டார்கள்.

சிறிது நேரத்துக்குள் அவன் ஒரு பைத்தியம் என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது. கவுர் தன் கையை விடுவிக்க முயன்றபோது அவன் விடவில்லை. உடனே மற்றப் பெண்கள் அவளை விடுவிக்க ஓடினார்கள். அந்தக் குழப்பத்தில் அம்சா வீட்டை விட்டு வெளியே இறங்கி இருக்கிறாள். எதைப் பற்றியும் கவலைப்படாமல் சாதாரணமாகப் போவதுபோல் தெருவில் நடந்து போய் விட்டாள்.

அவளது சாமர்த்தியத்தை எண்ணி வியந்தேன். அவளது திட்டத்தைக் கேலி செய்தோமே என்று வருத்தப் பட்டேன்.

இரண்டு நாட்கள் தேடியும் அம்சாவைக் காணவில்லை. அவளது காதலனையும் காணவில்லை.

அவள் தப்பித்து விட்டாள் என்ற செய்தி எங்களுக்கு ஒரே மகிழ்ச்சியைக் கொடுத்தது. பலர் தேடியும் அவள் பிடிபட வில்லை என்பது எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. சோர்ந்து போயிருந்த எங்கள் உள்ளங்கள் துள்ளி எழுந்தன.

இந்தச் செய்தியை மேலே தயா தெரிந்து கொள்வாள் அதன் மூலம் உற்சாகம் அடைவாள் என்று நம்பினேன். அவளை என்னால் சந்திக்க முடியவில்லை.

ஒரு நாள் காலை. அந்த தினத்தை இன்று நினைத்தாலும் உடல் பதறுகிறது.

காலையில் நிச்சிந்தையாக உறங்கிக் கொண்டிருந்தேன். தட தட வென்று சத்தங்கள் கேட்டுக் கண் விழித்தேன். மணி ஆறு இருக்கும்.

கீழே ஒரே கூச்சல்கள்! ஒரு வேலைக்காரி மேலே மாடிக்கு வந்து நிர்மலாவை எழுப்பினாள். நிர்மலா அலறிப் புடைத்துக் கொண்டு கீழே ஓடினாள்.

பிறகு வேலைக்காரி மேல் மாடிக்கு ஓடினாள். அங்கிருந்து பலர் கீழே தடதடவென்று இறங்கினார்கள்.

கீழே கலாட்டாவும் குழப்பம் ஏற்பட்டிருப்பது தெரிந்தது. எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

என்னைப் போல் ரேணு, இந்திராணி, லட்சுமி ஆகியோரும் எழுந்து, "என்ன?" என்று விசாரித்தார்கள். எதுவும் புரியவில்லை. மற்ற இந்திப்பெண்கள் எழுந்து கீழே தைரியமாக ஓடினார்கள்.

நாங்கள் மாடி சன்னலுக்கு ஓடித் தெருவை நோக்கி னோம். அங்கே சில பெண்களும் ஆண்களும் கூடியிருப்பது தெரிந்தது.

எல்லோரும் நாங்கள் இருந்த வீட்டையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில பயமும் கலவரமும் தெரிந்தன.

இரண்டு வேலைக்காரர்கள் மீண்டும் மாடிக்கு ஓடி விட்டுப் பிறகு கீழே இறங்கி ஓடினார்கள்.

"என்ன?" என்று நாங்கள் கேட்ட கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லாமல் ஓடினார்கள்.

வீடு தீப்பற்றி விட்டது என்று எண்ணினோம். உடனே, "ஐயோ! ஐயோ!" என்று அலற ஆரம்பித்தோம்.

எங்கள் கூச்சலைக் கேட்டு வேலைக்காரி மாடிக்கு ஓடி வந்தாள். "சனியன்களா! ஏன் கூச்சல் போடுகிறீர்கள்?" என்று கத்தினாள்.

"வீடு தீப்பற்றி விட்டதா?" என்று கேட்டோம்.

"இல்லை" என்று சொன்னாள்.

''அப்படியானால் ஏன் இந்தக் கலவரம்?'' என்று கேட்டோம்.

"உங்களுக்குத் தெரிய வேண்டாம். பேசாமல் இருங்கள்" என்று சொல்லிவிட்டுக் கீழே போய் விட்டாள்.

அடுத்த சில கணங்களில் மிகவும் தவித்து விட்டோம். நிசா வந்திராவிட்டால் என்ன செய்திருப்போம் என்று தெரியாது. அவள் வந்ததும் அவளைச் சூழ்ந்து கொண்டோம்.

அவள் முகம் கல்லைப் போல் கனத்திருந்தது. கண்கள் இரண்டும் கலங்கியிருந்தன. ஒரு பெரிய அதிர்ச்சியில் இருந்தாள்.

“கமலா! உங்களுக்கு ஒரு துக்கமான செய்தியைச் சொல்லப் போகிறேன்” என்றாள். பிறகு என் கைகளைப் பிடித்துக் கொண்டு, “தயா இறந்து விட்டாள்” என்றாள்.

இடி விழுந்தது போல் திடுக்கிட்டேன். கண்கள் அந்தக் கணமே இருண்டன. என்னால் நிற்க முடியவில்லை. “உண்மையா?” என்று புலம்பினேன்.

நிசா என்னை மெதுவாக உட்கார்த்தினாள். முகத்தில் விசிறினாள்.

ரேணு, இந்திராணி, லட்சுமி மூவரும் அழ ஆரம்பித் தார்கள்.

எனக்கு நினைவு வரப் பல நிமிடங்கள் பிடித்தன. என்னை ஒரு பெரிய கனம் அழுத்தியது. உணர்ச்சிகள் அழிந்து விட்டனபோல் பிரமை.

மெதுவாக ஒரு நிலைக்கு வந்து, “நிசா! அவள் எப்படி இறந்தாள்? என்றேன்.

“தற்கொலை” என்றாள்.

“விஷமா?” என்றேன்.

“இல்லை; இரண்டாவது மாடியின் வெண்டிலேட்டர் வழியாகக் கீழே குதித்து இறந்து விட்டாள். தலையின் பின்புறம் சிதறி விட்டது” என்றாள்.

அந்த அதிர்ச்சியைக் கூட என்னால் தாங்க முடியவில்லை. அழுகை திடீரென்று பொத்துக் கொண்டு வந்தது. முகத்தை மூடிக்கொண்டு ‘ஓ’வென்று அழுதேன். “தயா! தயா!” என்று புலம்பினேன்.

நிசா என்னைத் தேற்றினாள். பிறகு, “வா, அவள் உடலைப் பார்த்துவிட்டுச் சீக்கிரம் வரலாம்” என்றாள்.

நாங்கள் கிளம்பினோம். படிகளில் இறங்கினோம். கீழே கதவு திறந்திருந்தது. நிசா எங்களை அழைத்துப் போனதால், தைரியமாக வெளியே போனோம்.

வீட்டின் பின்புறத்தில் ஒரு கூட்டம் கூடி இருந்தது. அந்த இடத்தில்தான் தயா விழுந்திருந்தாள்.

அருகில் போகப் போக கால் நடுங்கியது. இந்திராணி பயந்து கொண்டு பின்னால் நின்றுவிட்டாள்.

நானும் ரேணுவும் சற்றுத் தூரத்தில் நின்றோம். நிற்பவர்களுக்கு இடையே தயாவின் உடல் தெரிந்தது. ஒரு துணியால் அதை மூடி இருந்தார்கள். முகம் மட்டும் திறந்திருந்தது. உதடுகள் பிரிந்திருந்தன. கண்கள் சிறிது திறந்திருந்தன. அவள் விழுந்த இடத்தில் ரத்தம் பெரிதாகப் பரவி உறைந்து கிடந்தது.

எனக்குத் துக்கம் தாங்கவில்லை. அவள் காலைக் கட்டிக் கொண்டு அழவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அருகில் போகத் துணிவு இல்லை.

"தயா! ஏன் இப்படிப் பொறுமை இழந்தாய்? இவ்வளவு பெரிய தியாகத்தை ஏன் செய்தாய்? இதை எங்களுக்காகத்தானே செய்திருக்கிறாய்? உனக்காக அதற்கு எங்கள் உயிர் கலந்த நன்றி. இந்தத் தியாகத்தை நாங்கள் என்றும் மறக்கப்போவதில்லை. ஆனால் தயா! இதனால் எங்களுக்கு என்ன லாபம்? நீ போனதால் எங்களுக்கு நஷ்டந்தான்! பெரிய நஷ்டம்!

"துக்கம் தாளாமல் மரணத்தை வரவழைத்துக் கொண்டிருக்கிறாய் தயா! இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருந்திருக்கக் கூடாதா? அம்சா தப்பித்துப் போன செய்தி உன் காதில் விழவில்லையா! அவளை வீட்டுக்காரிகளால் இதுவரை பிடிக்க முடியவில்லை என்பது உனக்குத் தெரியாதா? அதற்குள் பொறுமை இழந்து விட்டாயே!"

இந்த நினைவுகள் மீண்டும் மீண்டும் என் மனத்தில் தோன்றின. துக்கம் தாளாது விம்மி அழுதேன்.

சிறிது நேரத்தில், நிர்மலாவும் வேலைக்காரிகளும் எங்களைப் பார்த்து விட்டார்கள். "போங்கள்! போங்கள்!" என்று எங்களை வீட்டுக்குள் அனுப்பினார்கள்.

வீட்டுக்கு வெளியே சிறிது நேரம் சுதந்திரக் காற்றை சுவாசித்து விட்டு வந்தது எங்களுக்கு அதிசய அனுபவமாக இருந்தது.

உள்ளே வந்ததும் அழுகை எங்களைக் கவ்விக் கொண்டது. ஹாலில் போனதும் தரையில் படுத்து விம்மி அழுதோம்.

அரைமணி ஆகியிருக்கும். வெளியில் போனவர்கள் அடித்துப் புரண்டு உள்ளே ஓடி வந்தார்கள். ஒரே பரபரப்பு.

"சீக்கிரம், சீக்கிரம் அறைக்குள்ளே ஓடுங்கள்!" என்று கூச்சல் கேட்டது. நாங்கள் அவசரமாக ஓடினோம்.

பின்னர் நான் விசாரித்துத் தெரிந்து கொண்டவைகளை வரிசையாகக் கூறுகிறேன்.

தயா வெளியில் குதித்துத் தற்கொலை செய்து கொண்ட செய்தி காலை ஆறு மணிக்கு வீட்டுக்காரிகளுக்குக் கிடைத்திருக்கிறது. செய்தியைக் கொண்டு வந்தவர்கள் அக்கம் பக்கத்து ரவுடிகள்தான்.

உடனே எல்லோரும் யோசனை நடத்தினார்கள். தயாவின் உடலை யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் கொண்டு வருவது என்று தீர்மானித்தார்கள். ஆனால் அதற்குள் உடலைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டதால் அது ஆபத்து என்று நினைத்தார்கள்.

அந்த உடலைப் போலீசார் கைப்பற்றி விட்டாலும் ஆபத்துத்தான் என்று அடுத்த கவலை தோன்றியிருக்கிறது. தயா தற்கொலை செய்து கொண்டிருப்பதால், உடம்பில் ஏதாவது கடிதம் எழுதி வைத்திருப்பாள் என்று நிர்மலா சொல்லியிருக்கிறாள். அந்தக் கடிதம் போலீஸ் கையில் போய்ச் சேர்ந்தால் அதுவும் பேராபத்து! அதனால் உடனடியாக ரவுடிகளை அனுப்பி ஏதாவது கடிதம் இருக்கிறதா என்று பார்த்து வரச் சொன்னார்கள்.

ரவுடிகள் தயாவின் உடலின் அருகில் உட்கார்ந்து வருத்தப்படுவதுபோல் பட்டு, அவள் உடம்பைத் துணியால் மூடும் பாவனையில் அவளுடைய இடுப்பைத் துழாவி இரு கடிதங்களை எடுத்து வந்து விட்டார்கள். அந்தக் கடிதங்கள் யாருக்கு எழுதப்பட்டனவோ தெரியாது. அவைகளைக் கிழித்துத் தீயில் எரித்துப் பொடியாக்கிச் சாம்பலைக் கக்கூசின் ஃப்ளஷ்ஷில் போட்டு விட்டார்கள்.

தற்கொலை பற்றிப் போலீசுக்கு விஷயம் தெரிந்ததும் அவர்கள் உடனே அந்த இடத்திற்கு வந்தார்கள். ஆரம்ப விசாரணையில் தயா சிந்துவின் வீட்டைச் சேர்ந்தவள் என்பது தெளிவாகி விட்டது. தயாவின் உடலை போஸ்ட் மார்ட்டத் திற்கு அனுப்பி விட்டு, போலீஸ் அதிகாரி நாங்கள் தங்கியிருந்த வீட்டில் விசாரணை நடத்த வந்து விட்டார்.

அதிகாரி கீழே வந்ததுதான் தாமதம்; உடனே எங்களை வேலைக்காரிகள் அழைத்து மேல்மாடிக்குக் கொண்டு

போனார்கள். (நாங்கள் என்றால் பலவந்தப்படுத்தப்பட்டு அந்த வீட்டுக்குக் கொண்டு வரப்பட்ட பெண்கள் மட்டும்) அங்கே சில படிகளுக்கு மேலே பிளைவுட் தட்டினால் அடைக்கப்பட்ட ஒரு சின்ன ரகசிய அறை இருந்தது. வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு அது ஒரு அறை என்றே தெரியாது? அவ்வளவு கவனமாக அதை நிர்மானித்திருந்தார்கள். அந்த அறைக்குள் எங்களில் எட்டு பேரைத் திணித்தார்கள். உள்ளே காற்று கிடையாது. வெளிச்சம் கிடையாது. "ஜாக்கிரதை, மூச்சு விடக்கூடாது!" என்று சொல்லிவிட்டு வேலைக்காரிகள் போய் விட்டார்கள்.

உள்ளே வெந்து புழுங்கினோம். மிக ரகசியமான குரலில் ஒருவர்க்கொருவர் பேசினோம். போலீஸ் வந்து பிடித்துக் கொண்டால் நல்லது என்று சிலர் சொன்னார்கள். ஆனால் வேறு சிலர் நம்மை இந்தத் தொழில் நடத்தியதற்காகச் சிறையில் பல ஆண்டுகள் போட்டு விடுவார்கள் என்று கூறினார்கள். எங்களுக்கே எதுவும் புரியவில்லை. ஒரு பயத்துடன் உள்ளே உட்கார்ந்து கொண்டிருந்தோம்.

எவ்வளவு நாழிகை இருந்தோம் என்பது தெரியாது. மணிக் கணக்கில் இருந்தோம். பசி வயிற்றைக் கிள்ளியது. எனினும் தயாவின் நினைவுக்காகப் பட்டினி கிடக்கத் தீர்மானித் தோம். மத்தியானம் வேலைக்காரி சப்பாத்திகளை மேலே கொணர்ந்தபோது வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். வாடிக்கையாளர் யாரும் அன்று வரவில்லை. யாரையும் அனுமதிக்கவும் இல்லை.

மாலை நான்கு மணி இருக்கும். பாத்ரூம் வசதிக்காக நாங்கள் கீழேதான் இறங்க வேண்டும். நான் ஒரு முறை இறங்கி வந்தபோது, நிசா எதிரே தென்பட்டாள். விஷயங்களை அவளிடம் விசாரித்தேன்.

மத்தியானம் இரண்டு போலீஸ் அதிகாரிகள் வந்து விட்டுப் போனதாகவும், நிலைமை பயங்கரமாக இருப்பதாகவும் கூறினாள். இந்த வீட்டில் 'நாட்டியப் பெண்கள்' தான் வசிக்கிறார்கள் என்று போலீசிடம் சிந்து வாக்குமூலம் கொடுத் திருக்கிறாள். தயா ஒரு நாட்டியப் பெண் என்றும், சிந்துவுக்கு அவள் தூரத்து உறவு என்றும் அதிகாரியிடம் தெரிவித்திருக் கிறாள். மேலும் தயாவுக்குத் தீராத வயிற்று வலி என்றும் வேதனை பொறுக்காமல்தான் தற்கொலை செய்து கொண்டு

விட்டதாகவும் கூறியிருக்கிறாள். அவள் கொடுத்த வாக்கு மூலத்தை அதிகாரிகள் நம்பினதாகத் தெரியவில்லை என்று கூறிய நிசா, "இன்னிக்கு எந்த நேரத்திலும் இந்த வீட்டில் போலீஸ் ரெய்ட் நடத்தலாம்" என்று சொல்லி முடித்தாள்.

கேட்பதற்கு அந்தச் செய்திகள் மகிழ்ச்சியாகவும் இருந்தன. ஆனால் பயத்தைத் தருவதாகவும் இருந்தன.

இரவு வந்தது. அப்போதும் நாங்கள் அந்த அறைக்குள் தான் இருந்தோம். தயாவை நினைத்து அடிக்கடி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தோம்.

பத்து மணிக்குமேல் எங்களைத் திறந்து விட்டார்கள். நாங்கள் பெருமூச்சுடன் வெளியே வந்தோம். எங்கள் எதிரே நிர்மலா நின்று கொண்டிருந்தாள்.

"இந்தா, எல்லோரும் கேட்டுக் கொள்ளுங்கள்! போலீஸ் அதிகாரிகள் மூன்று தடவை இந்த வீட்டில் சோதனை செய்து விட்டுப் போய்விட்டார்கள். எல்லோரும் இனிக் கவனமாக இருக்கவேண்டும். உங்களில் யாரையாவது போலீஸ் பிடித்து விட்டால், 'நாட்டியப் பெண்கள் நாங்கள்' என்றுதான் சொல்ல வேண்டும். வேறு எதுவும் சொல்லக்கூடாது! சொன்னால், உங்களை என்ன செய்ய வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அதற்கான சிபாரிசுகளும் வழிகளும் எங்களுக்குத் தெரியும். அதனால் இப்போதே சொல்லிவிட்டேன். ஜாக்கிரதை. ஏதாவது போலீசில் சொல்லலாம் என்று நினைத்து ஏமாந்து விடாதீர்கள்!" என்றாள் நிர்மலா.

நாங்கள் கீழே குளிக்கப் போனோம். அவ்வளவு வியர்வை எங்களுக்கு!

இரவும் நாங்கள் சாப்பிட விரும்பவில்லை. சிந்து எங்களிடம் கேட்டுக் கொண்டாள். நாங்கள் "துக்கம் கொண் டாடுகிறோம்" என்று சொல்லிவிட்டோம். அவள் எங்களை வற்புறுத்தவில்லை.

இரவில் நாங்கள் இருந்த வீடு எவ்வளவு ஜேஜே என்று இருக்கும்! ஆனால் அன்று அழுது வடிந்து கொண்டிருந்தது.

இரவில் நான் படுத்த பிறகு தயாவுக்காக அழுது பிரார்த் தனை செய்தேன். "தயா! உன் தியாகத்திற்கு சக்தி இருக்கிறது. இந்த வீடே இப்போது ஆடிவிட்டது. நாங்கள் விடுதலை ஆனாலும் ஆவோம். ஆனால் நீ இல்லாத விடுதலை இனிக்குமா?

நீ ஏன் எங்களை விட்டு மறைந்து விட்டாய்?" என்று சொல்லி அழுதேன். இல்லத்தில் இருந்தபோது சோபாவை இழந்தது என் நினைவுக்கு வந்தது.

மறுநாள் காலை. முதல் தடவையாக நாங்கள் டீ அருந்தினோம்.

பத்து மணி இருக்கும். திடீரெனப் பரபரப்பு ஏற்பட்டது. "போலீஸ்! போலீஸ்! ஓடிவிடுங்கள்!" என்று கூக்குரல்கள். எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

## 36. விடிவே இல்லையா?

**எ**ல்லோரும் மேல் மாடிக்கு ஓடினோம். போகும்போது வீட்டுக்காரிகள் இந்திராணியையும் லட்சுமியையும் நிறுத்தினார்கள். நிர்மலாவின் அறையில் ஒரு பீரோவும், அதற்கு அடுத்த அறையில் மற்றொரு பீரோவும் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவரையும் உள்ளே அடைத்துக் கதவைச் சாத்திப் பூட்டினார்கள். மீதி இருப்பவர்களை மேல் மாடியில் உள்ள ரகசிய அறையில் ஒளியச் சொன்னார்கள். இந்திராணியும் லட்சுமியும் சமீபத்தில் வந்திருப்பவர்கள். இளமையானவர்கள். அவர்களுக்கு வாடிக்கைகள் அதிகம். ஆகவே, போலீசார் மற்றவர்கள் யாரைப் பிடித்துக் கொண்டு போனாலும் அவர்களைப் பிடிக்கக் கூடாது என்ற நினைவிலேயே வீட்டுக்காரிகள் அவ்விதம் செய்தார்கள்.

மாடி ரகசிய அறையில் நாங்கள் வெகுநேரம் இருந்தோம். காலை நேரம் ஆனதால் வெயில் எழுந்து உள்ளே ஒரே புழுக்கத்தைக் கொடுத்தது. அந்த அறையில் நாங்கள் உட்கார்ந்திருக்க முடியுமே தவிர, காலை நீட்ட முடியாது. அவ்வளவு சிறியது! இது ஒரு நரகவேதனை என்று எண்ணி உட்கார்ந்திருந்தோம்.

கீழே சத்தங்கள் கேட்டன. பூட்ஸ் ஓசை கேட்பதிலிருந்து போலீஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்று நினைத்தோம். கூச்சல்களும் மிரட்டல்களும் இடையே கேட்டன. அப்போதெல்லாம் எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி! எப்படியாவது போலீசார் நாங்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்று நினைத்தோம்.

சிறிது நேரத்திற்குப் பிறகு பூட்ஸ் ஓசைகள் எங்களுக்குச் சற்று அப்பால் உள்ள படிகள் வழியே மேலே போவது கேட்டது. நாங்கள் கோழைகள்தான். கூச்சல் போட்டுப் போலீசின் கவனத்தைக் கவரும் அளவுக்கு யாருக்கும் துணிவு இல்லை. ஒரு வேளை அவர்கள் போலீசாக இல்லாவிட்டால் வீட்டுக்காரி களிடம் அகப்பட்டுக் கொள்வோமே என்ற பயம்தான் அது.

மத்தியானம் ஒரு மணிக்கு எங்களைத் திறந்து விட்டார்கள். பீரோக்களைத் திறந்து இந்திராணியையும் லட்சுமியையும் விடுவித்தார்கள். பீரோக்களுக்குள் உடம்பை மடித்தவாறு உட்கார்ந்திருந்ததால் அவர்களால் அரைமணி நேரம்வரை நிமிரவும் நிற்கவும் முடியவில்லை. கீழே அப்படியே படுத்து விட்டார்கள்.

மாலை நேரம் ஆகியது. வாடிக்கையாளர்கள் வரவில்லை. அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை என்று தெரிந்தது.

எல்லோரும் அங்கங்கே மௌனமாக உட்கார்ந்தோம். யாரும் பேசவில்லை.

இருட்டும் வேளையில்தான் எங்களுக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது. வீட்டிலிருந்து நான்கு இந்திப் பெண்களைப் போலீசார் பிடித்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள் என்று டாலி சொன்னாள். இதற்குமேல் எதுவும் சொல்லவில்லை. எங்களுக்கு இதுவே பெரிய பரபரப்பைக் கொடுத்தது.

இரவில் எல்லோரும் சீக்கிரமாகச் சாப்பிட்டு விட்டோம். வழக்கமாக நடக்கும் பாட்டும் கூத்தும் நடக்கவில்லை. சீக்கிர மாகவே படுத்துவிட்டோம்.

என்னால் தூங்க முடியவில்லை. கண் முன்னால் தயாவின் உருவம் அடிக்கடி வந்துகொண்டிருந்தது. சமயத்தில் அவள் சிரித்தாள். சமயத்தில் அழுதாள். "தயா நீ எங்கே இருந்தாலும் எங்களைக் கண்காணித்துக் கொண்டிரு! உன் தியாகம் பலித்து வருகிறது உன்னை உயிருள்ளவரை மறக்க மாட்டேன்" என்றேன்.

அவள் எழுதி வைத்த இரு கடிதங்களும் போலீசுக்குக் கிடைக்காமல் போனதே என்று வருத்தப்பட்டேன். அவைகளில் என்ன எழுதியிருந்தாளோ! கட்டாயம் அவளது கணவருக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பாள். 'அன்புள்ளவரே! எவ்வளவோ முயன்றும் உங்களை மீண்டும் அடையமுடியவில்லை. உங்களுக் காகப் படைக்கப்பட்ட நான் மற்றவர்களுக்குப் பயன்படுவதை

விரும்பவில்லை. என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்' என்று எழுதியிருப்பாள். வேறு என்ன எழுதியிருக்க முடியும்?

மறுநாள் காலையில் சீக்கிரம் எழுந்து விட்டோம். அன்று என்ன நடக்கப் போகிறது என்பதில் ஒரே ஆர்வம்.

இரு நாட்களும் வாடிக்கையாளர் வராததால் எங்களுக்குப் பெரிய நிம்மதி! உடம்பின் அசதிகள் எங்களை விட்டுச் கழன்று கொண்டிருந்தன. ஆனால் இதில் பலருக்கு இடைஞ்சலும் இருந்தது. டிபனுக்கும் அன்றாட வேறு செலவுகளுக்கும் அவர் களுக்குப் பணம் கிடைக்கவில்லை.

அன்றும் நிம்மதியாக இருக்கப் போகிறோம் என்று நினைத்தேன். ஆனால் மத்தியானம் ஒரு மணி அடித்ததும் வாடிக்கையாளர் ஒருவர் உள்ளே வந்தார். எப்படி அவரை உள்ளே அனுமதித்தார்கள் என்று நினைத்தேன். ஒரு வேளை அது தவறாக இருக்குமோ என்று நினைத்தேன். ஆனால், வாடிக்கையாளரின் விருப்பத்தைத் தெரிந்து கொண்ட டாலி இந்திராணியை அழைத்து, "அவனுடன் போ!" என்று சொன்னதும் எனக்கு எதுவுமே புரியவில்லை. இது என்ன? போலீசார் வந்து போன பிறகும் இங்கு பழைய வாழ்க்கை முறை நீடிக்கிறதே என்று நினைத்தேன்.

அதன் பின் வாடிக்கையாளர் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தார்கள். மாலை நான்கு மணிக்கு எல்லோரும் மேக்-அப் போட்டுக் கொள்ளும்படி உத்தரவு வந்தது. அந்தி நேரத்தில் தெரு வாசலில் நிற்பதற்காகச் சிலபேர் சென்றார்கள். இரவில் மாடியில் பாட்டும் கூத்தும் ஆரம்பமாயின. எனக்கு எல்லாம் புதிராக இருந்தது. இவ்வளவு விரைவில் அன்றாட வாழ்க்கை ஆரம்பித்து விட்டதே என்று நினைத்தேன். என்னால் எதையுமே நம்பமுடியவில்லை.

இரவு பத்து மணி இருக்கும். அன்றாட இயக்கங்களுக்குப் பிறகு எனக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது. அன்று வாடிக்கை யாளர்கள் குறைவாக வந்தார்கள். ஹால் வெறிச்சென்று இருந்தது.

அடுத்துள்ள அறையில் நான் படுக்கப்போனேன். அங்கே ஏற்கெனவே நிசா படுத்திருந்தாள். என்னைக் கண்டதும் அவள் கண்ணை விழித்துப் பார்த்தாள். அங்கேயே படுத்துக் கொள்ளச் சொன்னாள்.

படுத்தேன். என் அருகில் அவள் நெருங்கி வந்து தயா இறந்து போனதைப் பற்றி வருத்தம் தெரிவித்தாள். எனக்கு அழுகை வந்தது. நிசா என்னைத் தேற்றினாள்.

பிறகு நான், "நிசா! இது என்ன? போலீசுக்கு இங்கே நடக்கும் விஷயம் தெரிந்து விட்டதே! அப்படி இருந்தும் மீண்டும் இங்கே வழக்கமான வாழ்க்கை ஆரம்பித்து விட்டதே?" என்றேன்.

"போலீசாருக்கு இங்கே நடக்கும் விஷயம் இப்போதுதான் தெரியும் என்று நினைத்தாயா? எப்போதுமே தெரியும்!" என்றாள்.

எனக்கு அந்தச் செய்தி தூக்கிவாரிப் போட்டது.

"அப்படியானால் போலீசார் நான்கு பெண்களைப் பிடித்துக் கொண்டு போனார்களே!" என்றேன்.

நிசா சிரித்தாள்.

"இப்போது மட்டுமல்ல. சில மாதங்களுக்கு ஒருமுறை, இந்த வீட்டிலிருந்து சில பெண்களைப் பிடித்துக்கொண்டு போகிறார்களே, அது உனக்குத் தெரியாதா?" என்றாள்.

"தெரியாது!" என்றேன்.

"இந்திப் பெண்கள் காணாமல் போவதுகூட உனக்குத் தெரியாதா?"

"தெரியும். அவர்கள் தங்கள் சொந்த ஊருக்குப் போய் விட்டு வருகிறார்கள் என்று நினைத்தேன்."

"அது அல்ல! அவர்களைப் போலீசார் அழைத்துச் செல்கிறார்கள்!"

"அப்படியா? போலீசார் வருவதும் போவதும் தெரிவதில்லையே!"

"அதெல்லாம் காதும் காதும் வைத்தாற்போல் நடந்துவிடுகின்றன. பெண்களை அழைத்துச் செல்கிறார்கள். கோர்ட்டில் குற்றம் சாட்டுகிறார்கள். கோர்ட் அவர்களுக்கு அபராதம் விதிக்கிறது. அந்தப் பணத்தைச் செலுத்தி விட்டு அவர்கள் மீண்டும் இங்கே தொழிலுக்கு வந்துவிடுகிறார்கள். இது வழக்கமாக நடந்து வருகிறது."

எல்லாவற்றையும் கேட்க ஆச்சரியமாக இருந்தது.

"அப்படியானால் போலீசார் எங்களை ஏன் பிடித்துச் செல்வதில்லை?"

"வீட்டுக்காரிகள் உங்களை அவர்கள் கண்ணில் காட்டினால்தானே?"

"ஏன் அவர்கள் உள்ளே புகுந்து எங்களைப் பார்க்க மாட்டார்களா?"

"ஏன் பார்க்க மாட்டார்கள்?" என்று அதே கேள்வியைத் திருப்பிச் சொல்லிச் சிரித்தாள் நிசா! பிறகு எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் நேர்மை செயல்படுவதில்லை என்றும், பல இடங்களில் நேர்மை நைந்து போய்ச் செயலற்றுப் போய் விடுகிறது என்றும் கூறினாள்.

பிறகு 'நாட்டியப் பெண்கள்' என்ற பெயரில் இங்கே உள்ள பெண்களில் வாழ்க்கை போலீசாரால் அனுமதிக்கப்படுகிறது என்று கூறினாள். ஆனால் நாட்டியம் என்ற போர்வையின் கீழ் நிறைய இடங்களில் கீழ்த்தர வாழ்க்கைதான் நடைபெறுகிறது. பெண்கள் தாங்களாகவே இந்த வாழ்க்கையில் ஈடுபட்டால் தவறில்லை. ஆனால் இந்த வாழ்க்கை அவர்கள் மீது திணிக்கப் பட்டால் அதுதான் தவறு என்று நிசா கூறினாள்.

அவளிடமிருந்து வரும் விஷயங்களைக் கேட்கக் கேட்க எனக்கு அதிசயமாக இருந்தது. வெளி உலகம் இயங்கும் விதத்தைப் பளிச்சென்று காட்டுவது போலிருந்தது. அப்படியே யோசனையில் ஆழ்ந்தேன்.

பிறகு, "நிசா! அப்படியானால் கடந்த இரண்டு தினங் களாகப் போலீசைக் கண்டு வீட்டுக்காரிகள் ஏன் அவ்வளவு பயப்பட்டார்கள்?" என்றேன்.

"தயா தற்கொலை செய்து கொண்டு விட்டாள். அந்த விஷயம் மேலதிகாரிகள் வரை போய்விட்டது. அவர்கள் இந்த வீட்டைச் சோதனை செய்ய ஏற்பாடு செய்து விட்டார்கள். அவர்களே இதை நடத்தும் போது அதிகத் தில்லுமுல்லுகளுக்கு வழியில்லை. அதனால்தான் உங்களையெல்லாம் பத்திரமாகப் பதுக்கியும் வைத்தார்கள்" என்றாள்.

விஷயங்களைக் கேட்ககேட்க என் மனதில் இருந்த ஒரு பெரிய ஆர்வம் அமிழ்ந்துவிட்டது. தயா இறந்து விட்டதால், எங்களுக்கு விடுதலை கிடைக்கப் போகிறது என்று கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன். கடந்த இரண்டு நாட்களில் அந்தக் கோட்டைப் பெரிதாக வளர்ந்தது. ஆனால் நிசா சொல்வதைக் கேட்டதும், எல்லாமே இடிந்து தவிடு பொடியாகி விட்டது.

ஒரு வாரத்தில் வீடு பழைய நிலைமைக்கு வந்து கொண்டிருந்தது. தயா இறந்தது தற்கொலைதான் என்று போலீஸ் விசாரணைகளில் தெரிந்து விட்டது. இதனால் வீட்டுக்காரிகளுக்குப் பெரிய நிம்மதி!

போகப் போக எல்லோரும் தயாவையே மறந்து விட்டார்கள். எங்களில் சிலர்தான் அவளைப் பசுமையாக நினைவு வைத்துக் கொண்டிருந்தோம். அவளது சாந்திக்காக அடிக்கடி பிரார்த்தனை செய்தோம்.

அம்சா வாசலில் இறங்கித் தப்பித்துப் போய் விட்டாள் என்று ஏற்கெனவே கூறியிருந்தேன். அவளும் எங்கே மீண்டும் அகப்பட்டுக் கொள்வாளோ என்ற பயம் எங்களுக்கு இருந்து கொண்டே இருந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அது மறைய ஆரம்பித்தது. அம்சா போனவள் போனவள்தான்.

அவள் தப்பித்துப்போன விதந்தான் எங்களைப் பெரிய ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டது. எவ்வளவு எளிதாக காரியத்தை முடித்து விட்டாள்! மற்றவர்கள் எல்லோரும் தப்புவதற்காக எவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அம்சா தப்பித்துப் போனதை இந்திராணிதான் அடிக்கடி சொல்லிக் காட்டுவாள். அவளைப் போல் ஏதாவது செய்ய வேண்டும் என்றும் கூறுவாள்.

ஒருநாள் அவள் என்னிடம் வந்து, ''கமலா, ஒரு சந்தோஷமான செய்தி" என்றாள்.

"என்ன?" என்றேன்.

"என் பெற்றோர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பி விட்டேன்" என்றாள்.

''அப்படியா? எப்படி அதைச் செய்தாய்'' என்றேன் அதிசயத்துடன்.

## 37. பார்க்காத உலகம்

இந்திராணி என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்க ஆவலோடு இருந்தேன்.

"என்னிடம் வருபவர்களில் மலையாளி ஒருவர். ராணுவத்தில் வேலை பார்க்கிறார். அவரிடம் மெதுவாக என்னைப் பற்றிய

விஷயத்தைக் கூறினேன். என் பெற்றோருக்கு ஒரு கடிதம் எழுதி அதை அவரிடம் கொடுத்தால், வெளியே போய்ப் போஸ்ட் செய்வதாகக் கூறினார். அதற்காக ஒரு காகிதத்தையும் கொண்டு வந்து கொடுத்தார். நான் எழுதி முடித்து விட்டேன். இன்று அவரிடமும் கொடுத்துவிட்டேன்" என்றாள்.

இந்திராணி ஒரே மகிழ்ச்சியுடன் அதைச் சொன்னாள். ஆனால், எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி இல்லை.

"இந்து! ஆசாமியைக் கவனித்துக் காரியத்தில் இறங்கி னாயா? எங்கேயாவது வீட்டுக்காரியிடம் மாட்டிவிடப் போகிறான்!" என்றேன்.

அந்த விஷயத்தில் அவள் கவனமாக இருப்பதாகக் கூறிப் போனாள்.

நாட்கள் சென்றன.

என் மனம் ஒரு நிலையில் இல்லை. சமயங்களில் தப்பித்து விடலாம் என்று நம்பிக்கை தோன்றியது. சமயங்களில் எதுவும் நடவாது; இங்கேயேதான் வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது. நிம்மதி இல்லாது நாட்களை ஓட்டினேன்.

ஒருநாள் இரவு பல்பீர் வந்தான். வெகு நாட்களுக்குப் பிறகு அவன் அன்று வந்திருந்தான். அவனிடம் பேசும் போது, என் மன நிலையைச் சொன்னேன். வாழ்க்கை வெறுத்துவிட்டது என்று சொன்னேன்.

அவன் என்னைத் தேற்றினான். என்னை விடுதலை செய்ய வேறு வழி கண்டுபிடிப்பதாகக் கூறினான். இரவு வெகு நாழிகை யோசனை செய்தான். முடிவில் என்னைப் பார்த்து, "கமலா! வேறு வழியில்லை! நாங்கள் இரவு இங்கே தங்கிவிட்டு மறுநாள் காலை நான்கு மணிக்கு எழுந்து போகிறோமே, அப்போது எங்களோடு நீயும் வந்து விடவேண்டும். அதுதான் ஒரே வழி!" என்றான்.

"அது முடியுமா? என் உருவம் காட்டிக் கொடுத்து விடுமே!" என்றேன்.

"அதற்கு ஒரு வேலை செய்யலாம்! ஒரு சர்தாரைப்போல உனக்கு வேஷம் போடலாம். நீ அந்த இருட்டு வேளையில் எங்களோடு வரும்போது யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள்!" என்றான்.

"எப்படி வேஷம் போடுவது?" என்றேன்.

"உனக்குப் பைஜாமாகவும் சட்டையும் போடலாம். தலையில் தலைப்பாகை கட்டலாம். பார்ப்பவர்களுக்கு முகத்தை மட்டும் காட்டாமல் நைஸாக எங்களுடன் வந்துவிடு! தப்பித்து விடலாம்" என்றான்.

அந்தத் திட்டம் எனக்குச் சரியாகப்பட்டது. பைஜாமாவும் சட்டையும் தைப்பதற்காக என் உடம்பின் அளவுகளை எடுத்தோம். வெகு சீக்கிரமே துணிகளைத் தைத்துக் கொண்டு வருவதாக பல்பீர் வாக்குறுதி அளித்தான்.

இடையில் ஒரு நாள் இரண்டாவது மாடியில் ஒரு கலாட்டா நடந்தது.

திருமணமாகியும் பிரம்மசாரி என்கிற ரீதியில் மாடியில் ஒரு இளைஞன் இருந்தான். அவன் பெயர் மோகன்லால். மாடி வீட்டுக்காரிக்கு அவன் தூரத்து உறவு. திடீர் திடீர் என்று அவன் காணாமல் போய்விடுவான். பிறகு வருவான்.

காணாமல் போகும்போது அவன் தனது இரண்டு உறவினர்களை அழைத்துக் கொண்டு வடக்கே தொலைவில் உள்ள ஏதாவது ஒரு கிராமத்திற்குப் போவான். அங்கே கண்ணுக்குப் பிடித்தமான ஒரு பெண்ணைக் குறிவைத்துக் கொள்ளுவான். அந்தப் பெண்ணின் வீட்டில் போய் அவனது உறவினர்கள் பெண் கேட்பார்கள். அந்தக் கிராமத்துக் குடும்பங்களில் அநேகமாகப் படிப்பு அறிவில்லாதவர்கள்தான் இருப்பார்கள். எதைச் சொன்னாலும் நம்பி விடுவார்கள். அவர்களிடம் அந்த உறவினர்கள் போய், "பையன் டில்லியில் வேலை செய்கிறான்?" என்று சொல்லுவார்கள். பெண்ணின் பெற்றோர்கள் திருமணத்திற்குச் சம்மதிப்பார்கள். மோகன்லாலுக்கும் அந்தக் கிராமத்துப் பெண்ணுக்கும் திருமணம் விரைவில் நடைபெறும். (இதற்காக மோகன்லாலும் அவன் உறவினர்களும் கிராமத்தில் இரண்டு மூன்று வாரங்கள் தங்குவார்கள்.)

திருமணமான பெண்ணைப் பிறகு மோகன்லால் டில்லிக்குக் கொண்டு வருவான். இந்த வீட்டில் கொண்டு வந்து இந்த வாழ்க்கையில் ஈடுபடுத்தி விடுவான். அந்த அப்பாவிப் பெண்களின் வாழ்க்கை அவ்வளவுதான்! அதன் பிறகு அவர்கள் ஊர் திரும்பவே முடியாது. அவர்களது பெற்றோர்களும் டில்லிக்கு வந்து அவர்களைப் பார்க்க முடியாது.

ஏனெனில் தப்பிதமான முகவரியை அவர்களுக்கு மோகன் லால் கொடுத்திருப்பான். தவிர டில்லி வந்து பெண்ணைத் தேடும் அளவுக்குக் கிராமப் பெற்றோர்களுக்குப் பணவசதி இருக்காது.

ஆனால் ஒரு குறிப்பிட்ட பெண்ணின் தகப்பனாரும் அவரது தம்பியும் டில்லிக்கு வந்து விட்டார்கள். ஒரு வருடத் திற்கு முன் திருமணம் செய்து கொண்டு போன பெண்ணும் மாப்பிள்ளையும் அதுவரையில் கிராமத்திற்குத் திரும்பவே யில்லை. எனவே டில்லிக்கு வந்து அவர்களைப் பல இடங்களில் வலை போட்டுத் தேட ஆரம்பித்தார்கள். கிடைக்கவில்லை.

இவர்களது நிலையைப் பார்த்த டில்லிவாசி ஒருவன், "ஒரு வேளை உங்கள் பெண் ஜி.பி. ரோடில் அகப்பட்டாலும் அகப் படுவாள்" என்று எந்தவிதக் குறிக்கோளும் இல்லாமல் ஒரு ஆறுதலுக்காகச் சொல்லி இருக்கிறான். பெண்ணின் தகப்பனார் தமது தம்பியுடன் இந்தத் தெருவுக்கு வந்து விட்டார்.

இருவரும் கிழவர்கள். தெருவில் குறுக்கும் நெடுக்குமாக அவர்கள் நடக்கும்போது, நாங்கள் தங்கியிருந்த வீட்டின் முன்பாக வந்திருக்கிறார்கள். எதேச்சையாக இந்த வீட்டுக்குள் 'அவர்களது மாப்பிள்ளை' நுழைவதைப் பார்த்து விட்டார்கள்.

அவ்வளவுதான்; அவனை விடவில்லை. வாசலிலேயே முகாம் போட்டார்கள். வேலைக்காரிகள் அவர்களை உள்ளே விடவில்லை. வீட்டை விட்டுப் போகும்படி அதட்டியும், மிரட்டியும் இருக்கிறார்கள். ஆனால் கிழவர்கள் மசியவே இல்லை. வீட்டை விட்டுப் போகமாட்டேன் என்று சத்தியாக் கிரகம் செய்தார்கள். அவர்கள் வயதானவர்கள் ஆதலால், அவர்கள்மீது பலாத்காரத்தைப் பிரயோகிக்கவும் முடியவில்லை.

நிலைமை எங்கேயாவது விபரீதத்தில் கொண்டுபோய் விடப் போகிறது என்று நினைத்த வீட்டுக்காரி அவர்களை உள்ளே அனுமதித்தாள். அவர்களை அழைத்து, மாடிக்குக் கொண்டு போனார்கள்.

மாடிக்குப் போகும்போதே, இந்த வீடு எப்படிப்பட்ட வீடு என்பதை இளைய கிழவர் உணர்ந்துவிட்டார். இருபது வருடங் களுக்கு முன் டில்லியில் சவுக்காராக இருந்து, பிறகு கிராமத் திற்குப் போனவர் அவர். தமது சகோதரக் கிழவரிடம் விஷயத் தைக் கூறிவிட்டார். இரு கிழவர்களுக்கும் ஒரே ஆத்திரம்.

மாடிக்குப் போனதும், மாப்பிள்ளை எதிரே வந்தான். கிழவர்கள் அவன்மீது சாடினார்கள். சிறிது நேரம் ஒரே கலாட்டாவாக இருந்தது.

பிறகு மாடி வீட்டுக்காரி உள்ளே போய் கிழவரின் பெண்ணை அழைத்து வந்தாள். கிழவர் அவளை அணைத்துக் கொண்டு , "அசல்! வா ஊருக்குப் போகலாம்!" என்றார். "ஊருக்கா! நான் வரவில்லை" என்றாள்.

தந்தைக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. உடனே அவரது சகோதரர், "அசல்! யாருக்கும் பயப்படாதே! வா! வீட்டுக்குப் போகலாம்!" என்றார்.

உடனே, "சித்தப்பா! ஊருக்கு வந்து பிரயோசனம் என்ன? இங்கே எனக்குக் கிடைக்கும் சாப்பாடும் வசதிகளும் ஊரில் கிடைக்குமா? ஒருவேளை சாப்பாட்டுக்குச் சிரமப்படும் குடும்பந் தானே நம்முடைய குடும்பம்! எனக்கு இந்த இடம் ரொம்பப் பிடித்துவிட்டது. இஷ்டப்பட்டுத்தான் நான் இங்கே இருக்கி றேன். தவிர ஊருக்கு வந்தால், எனக்கு என்ன வாழ்வு கிடைக்கப் போகிறது? எல்லோரும் என்னை ஒதுக்கி வைப்பீர்கள். அல்லது ஒரு கிழவருக்கு இரண்டாவது மணம் செய்து கொடுப்பீர்கள். எந்த விதத்திலும் எனக்குத் துன்பந்தான். இங்கே சாப்பாட்டுக் கவலையில்லாமல் நிம்மதியாக இருக்கிறேன். ஆகையால் நீங்கள் போகலாம்!" என்று சொன்னாள்.

கிழவர்கள் எவ்வளவோ வாதாடியும் அசல் அவர்களோடு போக மறுத்துவிட்டாள். அவள் யாருக்காகவும் பயந்து அப்படிப் பேசவில்லை. தான் நினைப்பதையேதான் அவ்விதம் கூறினாள். இங்கே வந்த புதிதில் இந்த வாழ்க்கை அவளுக்கு பெரிய அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் கொடுத்திருந்தது. ஆனால் ஒரு வருட காலத்தில் அவள் முற்றிலும் மாறி இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு விட்டாள். இங்கே வருகிற அநேக பெண்கள் இப்படித்தான் மாறி விடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

கிழவர்கள் ஏமாற்றத்துடன் வெளியேறினார்கள்.

இரு வாரத்திற்குப் பிறகு பல்பீர் தனது நண்பர்கள் சிலருடன் இரவில் தங்குவதற்காக இங்கே வந்தான். அறையில் வந்த பிறகு தனது பாண்ட் பாக்கெட்டிலிருந்தும், பனியன் இடைவெளியிலிருந்தும் துணிகளை உருவினான். ஒரு சட்டை, பைஜாமா, பனியன், ஆகியவை வெளியே வந்தன. பிறகு தலைப்

பாகையைக் கழற்றி அதற்குள்ளிருந்து மற்றொரு தலைப்பாகைத் துணியை எடுத்தான்.

எல்லாம் நான் வேஷம் போட்டுக் கொள்வதற்காக வந்தவை.

துணிகளைத் தைத்த பிறகு வேண்டுமென்றே அழுக்காக்கி, பின்னர் சலவை செய்து கொண்டு வர அவ்வளவு நாட்களாகி விட்டது என்றான். அவன் சொன்னதும் எனக்குச் சரியாகத் தோன்றியது. ஏனெனில் புதியவையாக இருந்தால் யார் கண்ணிலும் பளிச் என்று பட்டு விடும்.

துணிகளைப் போட்டுப் பார்த்தேன். பைஜாமா சரியாக இருந்தது. சட்டையின் கைகள் மட்டும். சற்று நீளமாயிருந்தன. அவற்றை மடித்துவிட்டால் போகிறது என்று நினைத்தேன். பல்பீர் எனக்குத் தலைப்பாகை கட்டிவிட்டுப் பார்த்தான். பிறகு நடக்க வேண்டிய முறையைச் சொல்லி நடக்க விட்டுப் பழகினான்.

கையில் ஒரு வெள்ளி வளையத்தையும் எடுத்து மாட்டினான். நான் அசல் சர்தார்ஜி ஆகிவிட்டேன். ஆனால் யாராவது முகத்தைப் பார்த்தால்தான் ஆபத்து!

இரவு முழுவதும் தாங்காத ஆவலுடன் காத்திருந்தோம். சரியாக உறக்கம் வரவில்லை.

மூன்று மணிக்கு எழுந்து டிரஸ் செய்து கொண்டேன். பல்பீர் எழுந்து விட்டான். வெவ்வேறு அறைகளில் இருந்த மற்ற மனிதர்களும் எழுந்து விட்டார்கள்.

நான்கு மணிக்கு பல்பீர் அறையின் வெளியே எட்டிப் பார்த்தான். மற்றவர்களுக்கு ஜாடை காட்டி விட்டு எனக்கும் ஜாடை காட்டினான். நான் பதட்டத்துடன் வெளியே வந்தேன்.

இரண்டு பேர்களைத் தவிர மற்ற சர்தார்ஜிகளுக்குக் கொழுத்த தாடியும் மீசையும் உண்டு. இரண்டு பேர் இள வயதினர். ஆகையால் அவர்களுக்கு லேசான மீசை மட்டும் வளர்ந்திருந்தது. அவர்களுடன் என்னைச் சேர்த்து வைத்து மற்றவர்கள் முன்னும் பின்னும் புடை சூழ ஹாலுக்கு வந்தோம். நைட் விளக்கின் வெளிச்சத்தில் அதைக் கடந்தோம். பிறகு மாடிப்படிகள் வழியே இறங்க ஆரம்பித்தோம்.

எனக்குப் படபட வென்று நெஞ்சு அடித்தது. நான் முதல் படியில் கால் வைக்கும்போது கீழே ஒரு சர்தார் இறங்கி

வேலைக்காரியை எழுப்பி விட்டான். அவள் விளக்கைப் போட்டாள். வெளிச்சம் போட்டவுடனேயே என் உடம்பு சிலிர்த்தது. சிந்துவின் கட்டில் வாசல் கதவோடு ஒட்டி குறுக் காகப் போடப்பட்டிருந்தது. அதில் அவள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

வேலைக்காரி சிந்துவை எழுப்பாமல் கட்டிலை ஒரு பக்கத்தில் மட்டும் அப்படியே தூக்கி நகர்த்தினாள். (அப்படி அவள் தினம் செய்வது வழக்கமாகிவிட்டது. சிந்துவை எழுப்புவ தில்லை.) சிந்துவின் தலைகாணிக்கு அடியில் இருந்த சாவியை மெதுவாக எடுத்தாள். பிறகு பூட்டைத் திறந்து கதவைத் திறந்தாள்.

இவ்வளவும் நடைபெறும் வரையில் மற்ற சர்தார்களும் நானும் அந்தப் படிக்கட்டில் நின்று விட்டோம். நான் பல்பீரின் பின்னால் என் முகத்தை மறைத்துக் கொண்டேன்.

கதவு ஒரு கால்வாசிதான் திறந்தது. அதற்குமேல் சிந்துவின் கட்டில் அதைத் தடுத்து நிறுத்தி விட்டது. அந்த இடைவெளியில் ஒருவர்தான் தாராளமாகப் போக முடியும். இருவர் சற்று சிரமத்துடன் செல்லலாம். நான் தப்பிக்க வேண்டி யிருப்பதால் சர்தார்கள். இரண்டு இரண்டு பேராக நெருங்கிப் போக ஆரம்பித்தார்கள்.

திக் திக் என்று மனம் அடிக்க, முகத்தைக் குனிந்து கொண்டு சுவர் ஓரமாக ஒதுங்கி இறங்கினேன். ஒவ்வொரு படியாகக் கால் வைக்கும் போது ஒரே பதட்டமாக இருந்தது. நல்லவேளை, பல்பீரின் நிழல் முகத்தில் விழுந்து மறைத்துக் கொண்டே இருந்தது.

கடைசி மூன்றாவது படியில் இறங்கும் போது, இந்தச் சீரான அமைப்பில் சற்று மாறுதல் ஏற்பட்டது. அதைத் தவிர்க்க வழியில்லை. வரிசை கலைந்ததும் என் முகத்தில் பளீர் என்று வெளிச்சம் விழுந்தது. அதையும் பொருட்படுத்தாது நான் அடுத்த படியில் கால் வைத்தேன். ''ஹா'' என்று சத்தம்! நான் திடுக்கிட்டேன்.

அந்தக் கணத்தில் என் கண் வேலைக்காரியைப் பார்த்து விட்டது. அவளும் என்னைப் பார்த்து விட்டாள்.

சில விநாடிகள் வரை அவளுக்கு என்னை யார் என்று பிடிபடவில்லை. பிறகு வாய்விட்டு 'கமலா' என்று அழைத்தாள்.

அவள் என்னைக் கண்டுபிடித்த விதத்தைக் கூறிவிடு கிறேன்.

மாடியிலிருந்து இறங்கியபோது நான் செருப்புப் போட்டுக் கொள்ளவில்லை. எனது செருப்பைப் போட்டுக் கொண்டால் கண்டுபிடித்து விடுவார்கள் என்ற காரணத்தால் போட்டுக் கொள்ளவில்லை. வெறுங் காலோடு நான் வருவதை வேலைக்காரி எதேச்சையாகப் பார்த்துவிட்டாள். ஆச்சரியத் துடன் அவள் நிமிர்ந்து பார்க்கவே நான் அகப்பட்டுக்கொண்டு விட்டேன்.

'கமலா' என்று அவள் அழைத்ததுதான் தாமதம்; பல்பீர் சட்டென்று அவள் முன்னால் பாய்ந்தான். "தயவு செய்து கத்தாதே! அவளை மேலே அனுப்பி விடுகிறேன்" என்று கூறி ஒரு நூறு ரூபாய் நோட்டைத் தன் பையிலிருந்து விருட்டென்று உருவி அவள் கையில் திணித்தான். அது அவள் வாயை அடைத்துவிட்டது. உடனே பல்பீர் என்னை மாடியை நோக்கிப் போகும்படி ஜாடை செய்தான்.

படபடவென்று நெஞ்சு அடிக்க மாடி ஏறினேன். உடம்பு நடுங்கியது. ஆடைகளைக் களைந்து ஸாரி உடுத்திக் கொண்டேன். களைந்த ஆடைகளைப் பழைய மெத்தைகளுக்கு அடியில் ஒளித்து வைத்தேன். என்ன நடக்கப் போகிறதோ ஒரே பயம்! வேலைக்காரி சிந்துவிடம் சொல்லி விடக்கூடாதே என்ற நடுக்கம்! உதறலுடன் படுத்தேன்.

மறுநாள் முழுதும் கவலை! எங்கேயாவது சத்தம் சிறிது எழுந்தாலும் பயப்பட்டேன். முக்கியமாக வேலைக்காரியின் குரலைக் கேட்டால் நடுங்கிப் போவேன்.

மூன்று தினங்கள் போன பின்புதான் பய்ம் தெளிந்தது. நல்ல வேளை! வேலைக்காரி என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருந்து விட்டாள்.

இருப்பினும் மனத்தில் சஞ்சலம் எழுந்தது. எதிலும் வெறுப்பும் ஆத்திரமும் தோன்றியது. தயா இறந்ததிலிருந்து எனக்கு நிம்மதியே இல்லை. அடிக்கடி அழுது கொண்டிருந் தேன். அவளுக்காகவும் அழுதேன். எனக்காகவும் அழுதேன்.

இந்த வீட்டிலிருந்து எப்படித்தான் வெளியேறுவது என்பது என் ஒரே கவலையாக இருந்தது. எனக்குத் தெரிந்த வழிகள் யாவும் அடைபட்டுப் போகவே, என் எதிர்காலம் முழுதும் இருட்டாகி விட்டது என்று நினைத்தேன்.

வீட்டைப் பற்றி அடிக்கடி நினைப்பேன். அம்மா, சகோதரிகளுடன் வட்டமாக உட்கார்ந்து சாப்பிடுவதாகக் கற்பனை செய்வேன். அந்தக் கற்பனையை முடிக்கவே மனம் இருக்காது. அவ்வளவு இன்பமாக இருக்கும். என்னைப் போன்று ஒரே இடத்தில் இரண்டு வருடங்கள் அடைபட்டுக் கிடப்பவர் கள்தான், இந்தக் கற்பனையின் இனிமையை அனுபவிக்க முடியும்.

ஆனால் வரவர இந்தக் கற்பனை செய்யும் சக்தியைக் கூட என் மனம் இழப்பதை உணர்ந்தேன். அது எனக்கு விசித்திரமாக இருந்தது. சிரமப்பட்டு இந்தக் கற்பனையை வரவழைத்துப் பார்ப்பேன். உருவங்களே மனத்தில் சரியாக வராது. அழிந்து போன அல்லது சிதிலமான தோற்றங்கள்தான் மனத்தில் வரும். இந்த விதத்தில் கற்பனையில் வருகிற இன்பத்தைக்கூட நான் இழந்தது என் துர்ப்பாக்கியம்!

நாட்கள் சென்றன. பல்பீர் ஒரு மாதமாக வரவில்லை! அவனுக்கு என்ன பயமோ! அவன் வந்து போனாலாவது எனக்கு ஆறுதலாக இருந்திருக்கும்.

இந்திராணி ஒரு மலையாளி ராணுவக்காரரிடம் கடிதம் கொடுத்தாள் என்று சொல்லி இருந்தேன். அந்த ராணுவ ஆசாமி மீண்டும் ஒரு நாள் வந்தாராம். இந்திராணியின் தந்தை அவருக்குப் பதில் கடிதம் எழுதி இருப்பதாகக் கூறினாராம். அதைக் காட்டும்படி இந்திராணி கேட்டதற்கு 'இப்போ அப்போ' என்று ஏதோ சால்ஜாப்பு சொன்னாராம். கடைசியில் அது ஏமாற்று என்று தெரிந்தது. இந்திராணிக்கு ஒரே அதிர்ச்சி.

எனக்கும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு மிலிட்டரிக்காரர் வேளை கெட்ட வேளைக்கு என்னிடம் வருவார். எனக்குத் தொந்தரவாக இருக்கும்.

ஒரு நாள் பகல் ஒரு மணிக்கே வந்தார். எனக்கு ஒரே அசதியாக இருந்த நேரம் அது! வெறுப்புடன் எழுந்து போனேன். அறைக்குள் போனதும் அவர் உடைகளைக் கழற்ற ஆரம்பித்தார். எனக்கு வேறே வேதனையாக இருந்தது. "இப்படிப் பெண்களை அநியாயம் பண்ணுகிறார்களே பாவிகள்! இவர்கள் அக்கா தங்கைகளோடு பிறக்கவில்லையா?" என்று வாய்விட்டுத் தமிழில் கூறினேன்.

அந்த ஆசாமி திடுக்கிட்டு, என்னைப் பார்த்துத் திரும்பினார். "நீ தமிழ்ப் பெண்ணா?" என்று கேட்டார்.

அவர் தமிழில் பேசுவதைப் பார்த்து எனக்கு ஆச்சரியம்! "நீங்கள் தமிழரா?" என்றேன். அவரை இத்தனை நாட்களும் இந்திக்காரர் என்று நினைத்து இந்தியிலேயே பேசி வந்தேன். அவரும் என்னை இந்திக்காரி என்று நினைத்திருக்கிறார்.

அவர் பெயர் சிதம்பரம் என்றும், சென்னையைச் சேர்ந் தவர் என்றும் கூறினார். ராணுவ அலுவலகம் ஒன்றில் டைப் பிஸ்டாக வேலை பார்ப்பதாகக் கூறினார். தங்கச் சங்கிலியுடன் அவர் கடிகாரம் கட்டியிருந்தது நினைவு இருக்கிறது.

அவரிடம் என் கதையைச் சுருக்கமாகக் கூறினேன். "என்னைக் காப்பாற்ற வழி செய்யுங்கள், அல்லது அடுத்த முறை வரும்போது ஒரு புட்டி விஷமாவது வாங்கிக் கொடுங்கள். எனக்கு இங்கே வாழ முடியவில்லை" என்றேன்.

எனக்கு உதவி செய்வதாக அவர் வாக்களித்தார். என்னிடம் நல்ல வார்த்தைகள் பேசிவிட்டு அன்று போனவர் தான்! பிறகு திரும்பி வரவேயில்லை! அவருக்கு என்ன பிரச்சனைகளோ?

ஒருநாள் ரேணு என்னைச் சந்தித்தாள். இங்கே நடந்த சம்பவங்கள் யாவும் அவளையும் பாதித்திருந்தாலும் என்னைப் போல் அவள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. சமயங்களில் அவள் எந்தவிதத் துக்கமும் இல்லாமல் இருப்பதைப் பார்த்து எனக்குக் கோபமே வருவதுண்டு.

ரேணு என்னைச் சந்தித்ததுடன் ஒரு யோசனையும் சொன்னாள். சிந்துவிடம் நானும் அவளும் அத்தியந்த அன்பு காட்ட வேண்டும் என்றும், அப்படிச் செய்து சிந்துவிடம் ஒரு நம்பிக்கையை வளர்த்துவிட்டால், மற்ற இந்திப் பெண்களைப் போல் நம்மையும் அவள் வெளியே சினிமா, மார்க்கெட் ஆகிய இடங்களுக்கு அழைத்துப் போவாள் என்றும் கூறினாள். அப்படிப் போகும் சமயத்தில் எப்போதாவது மெல்ல நழுவிவிட வேண்டும் என்றும் கூறினாள்.

ரேணு கூறியதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை வரவில்லை. எனினும் முயற்சி செய்து பார்ப்பது என்று முடிவுக்கு வந்தேன்.

மறு நாள் முதல் நானும் ரேணுவும் சமயம் கிடைத்த போதெல்லாம் சிந்துவிடம் போய்ப் பேச ஆரம்பித்தோம். அவள் குழந்தையை (இப்போது அதற்கு மூன்று வயதாகி விட்டது) தூக்கி வைத்துக் கொஞ்ச ஆரம்பித்தோம்.

சிந்து ஒரு விதத்தில் அசடு என்று சொல்லவேண்டும். அவளைப் புகழ்ந்து பேசிவிட்டால் அப்படியே குளிர்ந்து விடுவாள். சொல்வதை யெல்லாம் நம்பி நம்மிடம் அதிக நேசம் காட்ட ஆரம்பித்து விடுவாள்.

அவளது நேசத்தை அதிகமாக வளர்த்துக்கொள்ளும்படி ஒரு சம்பவம் விரைவில் நிகழ்ந்தது.

ஒரு நாள் காலையில் சிந்து தனது உறவினர்கள் வீட்டுக்கு ஒரு சுப காரியத்திற்காகச் செல்ல வேண்டி வந்தது.

மறுநாள் காலையில் வருவதாகவும் அதுவரை ஜாக்கிரதை யாக இருக்கும்படியாகவும் வேலைக்காரிகளிடமும் எங்க ளிடமும் கூறிவிட்டுச் சென்றாள்.

அன்று மத்தியானம் மூன்று மணி இருக்கும். சிந்துவின் கணவன் நன்றாகக் குடித்துவிட்டு வந்தான். மாடி ஏறி ஹாலுக்குள் வந்தான். ஓரத்தில் உட்கார்ந்திருந்த என் கையை லபக்கென்று பிடித்தான். நான் கத்தினேன். பிறகு ஒரு உதறலில் கையை விடுவித்துக் கொண்டு எழுந்து ஓடினேன்.

அவன் விடவில்லை. என்னைத் துரத்தி வந்தான்.

சில ரவுண்டுகள் அடித்ததும் அவன் களைத்து நின்றான். "கமலா! மரியாதையாக நின்றுவிடு! நான் உன்னோடு பேசத்தான் விரும்புகிறேன். பயப்படாதே!" என்றேன்.

"நான் பேசத் தயாராயில்லை!" என்றேன்.

"என்ன?" என்று கோபத்துடன் விழித்தான். "நான் சொல் கிறேன். நீ கேட்க மாட்டாயா?" என்று பல்லைக் கடித்துக் கொண்டு என்னைப் பார்த்தான்.

நான் பதில் பேசவில்லை. மறுகணம் அவன் என்மீது பாய்ந்தான். நான் அடுத்த அறைக்குள் ஓடினேன். அவனுக்கு எப்படி அந்த வேகம் வந்ததோ தெரியாது; இரண்டு எட்டில் பாய்ந்து என்னைப் பிடித்துவிட்டான். பிறகு முகத்தில் மாறி மாறி ஓங்கி அடித்தான். நான் வலி தாங்காமல் அழுதேன். அவன் விடாமல் என்னை முதுகிலும் உடம்பிலும் உதைத்தான்.

சுருண்டு விழுந்தேன். சிவ்வென்று என் காதுகள் இரைந்தன.

சத்தங்கள் கேட்டுப் பெண்கள் ஓடிவந்தார்கள். சிந்துவின் கணவன் என்று தெரிந்ததும் சற்று தள்ளி நின்றார்கள். யாரும் அவனைத் தடுக்க முயலவில்லை!

"நீங்களே நியாயம் சொல்லுங்கள். என்னோடு பேசிக் கொஞ்ச நேரம் பொழுதுபோக்கும்படி இவளை அழைத்தேன். அது ஒரு தப்பா? இந்த ராங்கிக்காரி மறுக்கிறாள்! இந்த வீட்டு உப்பைத் தின்றுவிட்டு அவள் அப்படிச் செய்யலாமா?" என்றான்.

மற்றவர்கள் எதுவும் பேசவில்லை. ரேணு மட்டும் ஒரு அடி முன்னால் வந்து "பேச வேண்டுமானால் பேசேன்! யார் வேண்டாம் என்றார்கள்? அதற்காக அந்தப் பெண்ணை இப்படி அடிப்பாயா?" என்றாள்.

அடிபட்டு என் முகம் வீங்கிவிட்டது. கண் ஓரத்தில் சதை கன்றிவிட்டது! அவன் அவளை விறைத்துப் பார்த்தானே ஒழிய எதுவும் பேசவில்லை. ஒரு அநியாயத்தை எதிர்க்கத் தைரியம் இல்லாமல் எல்லோரும் திரும்பிப் போக வேண்டி வந்தது. குடித்துவிட்டால் அவன் முரடன் என்று எல்லோருக்கும் தெரிந்தது.

அவர்கள் போனதுதான் தாமதம்; அவன் போய்க் கதவைச் சாத்தினான். தாழ்ப்பாள் போட்டான். சற்றுத் தள்ளிப் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரம் என்னென்னவோ பேசினான். பிறகு நெருங்கி வந்து என் அருகில் படுத்துக் கொண்டான்.

இரவு முழுவதும் அவன் ஆசைகளுக்கு நான் ஆளாக வேண்டி வந்தது.

காலையில் அவன் எழுந்து வெளியே போய்விட்டான்.

மற்றப் பெண்கள் எல்லோரும் நடந்ததைச் சிந்துவிடம் கூறினார்கள். உடனே அவள் என்னைப் பார்க்க வந்தாள். என் வீங்கிய முகத்தையும் சிராய்ப்புகளையும் பார்த்ததும் அவளுக்கு அழுகை வந்தது. என்னை அணைத்துக் கொண்டாள். "என் கண்ணு! அவர் உன்னை இவ்வளவு பாடுபடுத்தினாரா?" என்று அழுதாள்.

"தீதி" என்று புலம்பினேன். "உங்களுக்குத் துரோகம் செய்ய நான் விரும்பவில்லை. செய்யவும் மாட்டேன். ஏற்கெனவே உங்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். ஆனமட்டும் அவரைத் தவிர்த்துப் பார்த்தேன். முடியவில்லை. அடி அடி என்று அடித்து என்னைப் பணிய வைத்தார்! மற்றபடி உங்களுக்கு மனதால்கூடத் துரோகம் நினைக்கவில்லை!" என்றேன்.

என் பேச்சு அவளை மிகவும் கவர்ந்தது. என்னைச் சமாதானப்படுத்தினாள். கீழே அழைத்துப் போய் ஸ்பெஷல் டிபன் வரவழைக்கச் சொன்னாள். மத்தியானம் பீர் வாங்கி வந்து பருகச் சொன்னாள்.

சிந்துவின் கணவன் மூன்று நாட்களுக்குப் பிறகுதான் வீடு திரும்பினான். வந்ததும் அவனைச் சிந்து கண்டபடி திட்டினாள். சாப்பாடு போட முடியாது என்று ஒரே ரகளை செய்தாள்!

ஒரு வாரத்திற்குப் பிறகு சிந்துவின் பெண்ணுக்குக் காய்ச்சல் வந்தது. சிந்துவின் அருகிலேயே இருந்து நான் வேண்டிய உதவிகளைச் செய்தேன். அவளுக்கு அது மிகவும் திருப்தியாக இருந்தது.

பெண்ணின் சிகிச்சைக்குப் பணம் இல்லாமல் அவள் திண்டாடினாள். அது எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. என் சொந்தப் பணம் ஐம்பது ரூபாய் சேர்த்து வைத்திருந்தேன். அதை எடுத்து வந்து கொடுத்தேன். சிந்துவுக்கு ஒரே சந்தோஷம். என் பணத்தைப் பின்னர் திருப்பித் தருகிறேன் என்று அதை வாங்கிக் கொண்டாள்.

"தரவேண்டாம்" என்று நான் சொல்லிவிட்டு, "தீதி! உங்கள் குடும்பத்துக்காக நான் என்ன வேண்டுமானாலும் தியாகம் செய்வேன். என் உடலால் உழைத்து உங்கள் குழந்தைகளைக் காப்பாற்றுவேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றேன்.

என் பேச்சு சிந்துவின் மனதைத் தொட்டு விட்டது. என்னை அணைத்துக் கொண்டாள்.

எனது இந்தச் செய்கைகள் சீக்கிரமே பலனைக் கொடுக்க ஆரம்பித்தன.

ஒருநாள் சிந்து என்னை வெளியே அழைத்துப் போனாள். வெளி உலகத்தில் நான் மகிழ்ச்சியுடன் கால் வைத்தேன்.

நாங்கள் வெளியே போனபோது காலை பத்து மணி இருக்கும். காய்கறி வாங்குவதற்காகச் சிந்து என்னை அழைத்துப் போனாள்.

நான் ஸாரி உடுத்திக் கொண்டு இருந்தேன். படியை விட்டு இறங்கியதும் என்னைப் பர்தா போட்டுக் கொள்ளச் சொன்னாள். போட்டுக் கொண்டேன்.

புதுக் காற்று மேலே படும்போது ஜில் என்று இருந்தது. வெய்யிலையும் ஜனங்களையும் வீடுகளையும் பார்க்கும்போது புதிதாக வாழ்க்கையில் பிறந்து விட்டது போலிருந்தது.

காய்கறி விற்பவர்கள் எங்களை எப்படி அடையாளம் கண்டு கொண்டார்களோ தெரியாது. "டேய், ஜி. பி. ரோட்டுச் சரக்குகள்டா!" என்று ஜாடைமாடையாகக் கண்ணடித்துப் பேசினார்கள்.

காய்கறி வாங்கினோம். வீட்டுக்குத் திரும்பினோம். சிந்துவுக்கு ஒரே திருப்தி!

அதற்கு அடுத்த டிரிப் ஒரு வாரத்திற்குப் பிறகு நிகழ்ந்தது. அப்போதும் காய்கறி வாங்கத்தான் போய் வந்தோம்!

மூன்றாவது டிரிப் டாக்டர் வீட்டுக்கு! இந்திப் பெண் ஒருத்திக்கு ஏதோ கோளாறு. கர்ப்பம் சம்பந்தப்பட்டது. அவளை அழைத்துப் போகும் பொழுது சிந்து என்னையும் கூப்பிட்டாள். போனேன்.

டாக்டர் எங்களுக்குப் பழக்கமானவர்தான். ஒரு சந்தின் அழுக்கடைந்த பகுதியில் அவர் 'கிளினிக்' வைத்து நடத்திக் கொண்டிருந்தார்.

இந்திக்காரிக்குச் சிகிச்சை நடக்கும்போது, நானும் சிந்துவும் வெளியில் உட்கார்ந்து இருந்தோம். சன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன்.

இந்தத் தடவை வெளியே வந்தபோது எனக்குத் தைரியம் வந்திருந்தது. வரும் வழியைக் கவனத்துடன் பார்த்துக் கொண்டே வந்தேன். இப்போது சன்னல் வழியாகவும் அந்தக் குறுகலான சந்துகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எப்போ தாவது தப்பி ஓடநேர்ந்தால் எந்த வழிகளைப் பின்பற்றுவது என்று யோசனைகள் செய்தேன்.

நாட்கள் செல்லச் செல்ல சிந்துவுடன் எனது இழைவு அதிகமாகியது. அதற்கு அனுசரணையாக எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டேன்.

ஆரம்ப காலத்தில் இந்த வீட்டுக்கு வந்தபோது என் பணத்தை ஒளித்து வைத்ததையும், பின்னர் அதை இழந்து தவித்ததையும் கூறி இருந்தேன். அதன் பிறகு அவ்விதத் தப்பிதங்கள் செய்வதில்லை. கையில் மீறுகிற பணத்தைக் கொண்டு எனக்குத் தேவையான துணிமணிகள், அழகான

பெட்டிகள், டிரான்சிஸ்டர் என்று பல உபயோகமான பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தேன். அவற்றை யாரும் திருட மாட்டார்கள். திருடினால் ஒளித்து வைக்கவும் முடியாது.

அவ்விதம் நான் கடைசியாக வாங்கியது ஒரு ரிஸ்ட் வாட்ச்! நூற்று இருபது ரூபாய்க்கு அதை வாங்கியிருந்தேன்.

அதை ஒரு வாரம்தான் அணிந்திருப்பேன். ஒரு நாள் சிந்து என்னிடம் வந்து உறவினர்கள் வீட்டு நிச்சயதார்த்தம் ஒன்றுக்குப் போகப் போவதாகவும் அதற்காக என் வாட்ச் வேண்டும் என்றும் கூறினாள். உடனே வாட்சைக் கழற்றிக் கொடுத்தேன்.

உறவினர் வீட்டுக்குப் போய்விட்டு மாலையிலேயே சிந்து வீட்டுக்குத் திரும்பினாள். உடனே வாட்சைக் கழற்றி என்னிடம் கொடுத்தாள். நான் வாங்க மறுத்தேன். "நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் தீதி!" என்றேன்.

நான் சொன்னதை அவள் நம்பவில்லை.

"கமலா! இது நீ சம்பாதித்த பொருள்! நீயே வைத்துக் கொள்!" என்றாள்.

"அதனாலென்ன தீதி! உங்கள் புண்ணியத்தில் நான் சம்பாதிக்கிறேன். நீங்கள் நன்றாய் இருந்தால்தானே நான் நன்றாக இருக்க முடியும்? உங்கள் கையில் வாட்ச் இல்லாமல் இருப்பதைப் பார்க்க என்னால் சகித்துக் கொள்ள முடிய வில்லை. மாடி வீட்டுக்காரி நிர்மலா எப்படித் தாம் தூம் என்று இருக்கிறாள்? நீங்களும் அதுமாதிரி இருக்க வேண்டாமா? அது என் ஆசை! நிர்மலாவைப் போல் உங்களை ஆக்குவதற்கு நான் என் உடலால் எவ்வளவு வேண்டுமானாலும் உழைப்பேன். இந்த வாட்ச் உங்களதுதான்." என்றேன்.

சிந்துவின் கண்களில் அழுகையே வந்துவிட்டது. என் வார்த்தைகளில் மயங்கி விட்டாள்.

## 38. ஓயாத சிந்தனை

ஒரு நாள் நிசாவைச் சந்தித்தேன். அவளைப் பார்த்து பல வாரங்கள் ஆகியிருந்தன.

இப்போது பார்த்தபோது அவளிடம் சோர்வு காணப் பட்டது.

“என்ன விஷயம்?” என்று கேட்டேன்.

‘‘உனக்கு ஒரு விதத்தில் கஷ்டம் என்றால் எனக்கு இன்னொரு விதத்தில் கஷ்டம்!” என்றாள்.

“என்ன கஷ்டம்?” என்றேன்.

அவள் விளக்கினாள் :

நேபாளி ஒருத்தி இந்த வீட்டில் இருக்கிறாள் என்றும், அவள் தன் பருவமடையாத தங்கையை அழைத்து வந்திருக் கிறாள் என்றும் முன்பே கூறியிருந்தேன். அந்தத் தங்கை இங்கே உபயோகப்படுத்தப்பட்ட வழிகளை நான் விளக்க விரும்ப வில்லை. இப்போது அந்தப் பெண் பருவமடைந்து தள தள என்று வளர்ந்திருந்தாள். ஒரு நாள் நிசாவை அழைத்துப் போக வந்திருந்த சேத்ஜி ஹாலில் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டார். அவருக்கு அவள் அழகும், இளமையும் கவர்ச்சியும் மிகவும் பிடித்துவிட்டன. அவளை உபயோகித்து வியாபார விஷயங்களுக்கு மேலும் சிலரை கவர்ந்து விடலாமே என்று நினைத்தார். அவளை அணுகி விசாரித்தார். அவளது சம்மதத்தையும் பெற்றுக் கொண்டார்.

அன்று முதல் அந்தப் பெண்ணும் சேத்ஜியுடன் போக ஆரம்பித்தாள். ஆனால் சேத்ஜி நிசாவையும் விடவில்லை. அவளையும் உபயோகப்படுத்திக் கொண்டார். ஆனால் நேபாளிப் பெண் வந்ததால் நிசாவின் வருமானம் பாதியாகக் குறைந்து விட்டது.

இந்தக் காரணங்கள்தான் நிசாவை வருத்தப்படவைத்தன. தனது எதிர்காலம் இதனால் பாதிக்கப்படுமோ என்று பயந்தாள். நான் அவளுக்குச் சமாதானம் சொன்னேன். அவளும் என்னைத் தைரியப்படுத்தினாள்.

இதை அடுத்து ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தது. மாடிக்கு ஒரு ரவுடி வந்துவிட்டான். அடுத்த பேட்டை ரவுடி அவன். எந்தப் பெண்ணும் அவனுடன் வர மறுத்ததால் ஹாலில் ரகளை பண்ணினான். வீட்டுக்காரிகள் யாரும் வீட்டில் இல்லை. கூச்சல் போட்டு எல்லோரும் ஹாலில் கூடினோம். ஒரு இந்திப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். நாங்கள் ஒன்று கூடி அவன் கையை விடுவித்தோம்.

பெண்களாகிய எங்களுக்கு அவ்வளவு பலம் எப்படி வந்ததோ தெரியாது. கிடைத்ததைக் கையில் எடுத்துக் கொண்டு அவனைத் தாக்கினோம். பிறகு ஒரு மூச்சாக மாடிப்படி அருகில் அவனைக் கொண்டு வந்து கீழ் நோக்கி ஒரு தள்ளு தள்ளினோம். உருண்டு விழுந்தான்.

எங்களில் பலருக்குக் காயம்பட்டு நெற்றியிலிருந்து ரத்தம் வந்தது. அவர்கள் மருந்து போட்டுக் கொள்ள அறைக்குள் ஓடிப் போனார்கள்.

மாடிப் படிகளின் வழியே உருண்டு விழுந்த ரவுடி எழுந்திருக்கவில்லை. பத்து நிமிடங்கள் ஆகியும் எழுந்திருக்க வில்லை. எங்களுக்குத் திகில்!

ரேணு மெல்லக் கீழே இறங்கிப் போனாள். அவன் கையை எடுத்துப் பார்த்தாள். அவள் முகம் பேய் அறைந்தது போல் ஆகிவிட்டது. 'செத்து விட்டான்' என்று சைகை செய்தாள்.

நாங்கள் திடுக்கிட்டோம். பயத்துடன் கீழே இறங்கினோம். எதிர்பாரமல் இப்படிக் கொலை நடந்து விட்டதே என்று எண்ணினோம்.

கீழே தரையில் அந்த ரவுடி கட்டையாகக் கிடந்தான். அவன் தலையில் காயம்பட்டு ரத்தம் வெளி வந்திருந்தது.

எங்கள் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. வீட்டுக் காரிகள் வந்தால் என்ன சொல்வார்களோ என்று பயந்தோம்.

நான்கு மணிக்கு வீட்டுக்காரிகள் வந்தார்கள். நடந்ததைச் சொன்னோம். அவர்களும் பதறிப் போனார்கள். "ஐயோ! இப்போதுதான் ஒரு தற்கொலைக் கேசிலிருந்து தப்பினோம். இப்போது ஒரு கொலைக் கேசில் மாட்டிக் கொண்டோமே!" என்று அவர்கள் புலம்பினார்கள்.

அடுத்த நிமிடத்தில் வாசல் கதவை இழுத்துச் சாத்தி னார்கள். வேலைக்காரிகளை அழைத்து ரவுடியின் உடலை ஒரு அறைக்குள் அப்புறப்படுத்தினார்கள்.

சிந்துவும் நிர்மலாவும் ஆடிப்போய் விட்டார்கள். உடலை மறைப்பது எப்படி என்பது அவர்களுக்குப் பெரிய பிரச்சனை யாக இருந்தது.

இதற்குள் யாரோ டாக்டரை அழைத்து யோசனை கேட்கலாம் என்று கூறினார்கள். வீட்டுக்காரிகளுக்கு அது சரி

என்று தோன்றியது. டாக்டருக்கு ஆளை அனுப்பினார்கள். இரவு ஏழு மணிக்குத்தான் அவர் வந்தார். காதோடு விஷயத்தைக் கூறி அறைக்கு அழைத்துப் போனார்கள்.

அறையுள் விளக்கைப் போட்டதுதான் தாமதம்! எல்லோரும் அசந்து விட்டார்கள்! உடனே அந்த ரவுடி எழுந்து உட்கார்ந்து திரு திரு என்று விழித்துக் கொண்டிருந்தான்!

உண்மையில் அவன் இறக்கவில்லை. மயக்கம் அடைந் திருந்தான்.

விஷயம் விறுவிறு என்று பரவியது. எங்கள் எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி!

ரவுடியைச் சமாதானப்படுத்தி, அவன் கையில் இருபது ரூபாய் பணத்தைக் கொடுத்தார்கள். நல்ல வார்த்தை சொல்லி வெளியே அனுப்பினார்கள். எல்லோரையும் கலவரப்படுத்திய தற்காக ரேணுவைக் கேலி செய்தார்கள். "நான் சொன்னதை நீங்கள் நம்பீனீர்களே!" என்று அவள் கேலி செய்தாள்.

ஒரு வெள்ளிக்கிழமை அன்று சிந்து என்னை உறவினர் வீட்டுக்கு அழைத்துப் போனாள்.

பல தெருக்களைத் தாண்டிப் போனோம். வழியைக் கவனமாக மனத்தில் பதிய வைத்துக் கொண்டே போனேன்.

ஒரு வீட்டு வாசலில் சிந்து நின்றுகொண்டு கதவைத் தட்டினாள். அது ஒரு பெரிய மாடி வீடு!

கதவு திறந்தது. உள்ளே போனோம். ஒரே வாசனை! என் மூக்கைத் துளைத்தது. மாடிப்படிகளில் ஏறினோம். மேலே ஒரு ஹாலை அணுகினோம்.

உள்ளே நுழைந்ததும் திடுக்கிட்டேன். அப்சரஸ்கள் போல் பெண்கள், வாளிப்பான உடம்புகளுடன், அழகுடனும் உள்ளே உலாவினார்கள். இவ்வளவு அழகான பெண்களை ஒரே இடத்தில் சந்திப்பது அபூர்வம்.

பெண்களைக் கூர்ந்து கவனித்தேன். பெரும்பாலோர் ஆந்திரப் பெண்களாக இருக்கவேண்டும் என்பதை அறிந்து கொண்டேன். மேல் மட்டத்திலுள்ள வாடிக்கையாளருக்காக இந்த இடம் உபயோகப்படுகிறது என்பதை ஊகித்துக் கொண்டேன்.

ஒரு பருமனான பெண்மணி எங்கள் எதிரே வந்தாள். சிந்துவை வரவேற்றுப் பேசினாள்.

அந்தப் பெண்மணிக்கு சிந்து என்னை அறிமுகப்படுத்தி வைத்தாள். ‘‘கமலா என்மேல் உயிரை வைத்திருக்கிறாள். எனக்காகவும் என் குடும்பத்திற்காகவும் ஆயுள்வரை உழைப்பேன் என்று சொல்லிவிட்டாள். ரொம்ப நல்ல பெண்!” என்றாள்.

அந்தப் பெண்மணி என்னைப் பார்த்தாள். அவளுக்கும் என்னைப் பிடித்து விட்டது. “இந்தப் பெண்ணை எனக்குக் கொடுத்துவிடேன். நான் வைத்துக் கொள்கிறேன்” என்றாள்.

‘‘அது மட்டும் கேட்காதே. எத்தனையோ பேரைக் கொடுத்திருக்கிறேன். இவள் என்னுடைய பொக்கிஷம்! கொடுக்க மாட்டேன்!” என்றாள் சிந்து.

அந்தப் பெண்மணி பலமுறை வற்புறுத்தினாள். சிந்து இணங்கவில்லை. பிறகு என்னை அந்தப் பெண்மணி “எங்கள் வீட்டுக் கல்யாணத்திற்கு அவசியம் வர வேண்டும்” என்றாள்.

“ஆகட்டும்” என்றேன்.

திருமண நாள் விரைவில் வந்தது. எனக்கு ஒரே மகிழ்ச்சி! தப்பி விடுவதற்கு எப்படியும் வழி பார்க்கலாம் என்று நினைத்தேன்.

## 39. எத்தனை முயற்சிகள்

**மா**லையில் நாங்கள் புறப்பட்டோம். என்னையும் ரேணு வையும் அழைத்துக்கொண்டு சிந்து புறப்பட்டாள். நிர்மலா இந்திப் பெண்களை அழைத்து வந்தாள்.

என்னைப்போல் ரேணுவும் கொஞ்ச நாட்களாக சிந்துவைக் குழையடித்து வந்தாள். ஆனால் அவள் என்னைவிட ஒரு படிமேல்! அவளுக்கு நல்ல திடமான உடம்பு. அதனால் சிந்துவுக்குக் கைகால் பிடித்துவிடுவாள். துணி இஸ்திரி போட்டுக் கொடுப்பாள். தவிர ரேணுவுக்கு மதுவில் விருப்பம் உண்டு. அதனால் இரண்டு பாட்டில் பீர் வாங்கிக் கொண்டு அவளும் சிந்துவும் ஹாயாக அமர்ந்து பேசிக் கொண்டே குடிப்பார்கள். இதனால் அவளுக்கும் சிந்துவுக்கும் அதிகமான நட்பு ஏற்பட்டு விட்டது.

திருமண வீட்டை அடைந்தோம். போகும்போது சாலை களைக் கவனத்தில் வைத்துக் கொண்டே போனேன். ஆனால் முடிவில் எல்லாவற்றையும் மறந்து விட்டேன். அத்தனை திருப்பங்கள்!

திருமண வீடு கோலாகலமாயிருந்தது. துணிப் படுதாவில் பந்தல் போட்டு மின்சார விளக்குகளை வரிசையாகத் தொங்க விட்டிருந்தார்கள்.

அங்கே வந்திருந்த உறவினர்களுடன் கலந்து கொண்டோம். சின்னச் சின்ன வேலைகளைச் செய்தோம். சந்தோஷமாக எல்லோரிடமும் பேசினோம்.

அந்தக் கூட்டத்தை நான் பெரிதும் ரசித்தேன். எவ்வளவு காலம் கழித்த பிறகு இப்படி ஒரு சுபகாரியத்தில் கலந்து கொள்கிறேன்! நானே கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் என் உயிர் பறப்பதுபோல் இருந்தது.

மாப்பிள்ளை அழைப்பு நடந்தது. பாண்டு இசை காதைத் துளைத்தது. ரேணு என் கையை அடிக்கடி கிள்ளிக் கொண்டிருந்தாள். நானும் பதிலுக்குக் கிள்ளிக் கொண் டிருந்தேன். “தப்பி ஓடத் தயாராயிரு!” என்பது அதன் அர்த்தம்.

பிறகு இனிப்புகள் வழங்கப்பட்டன. சிந்துவும் அவள் உறவினர்களும் எங்களை மனமார உபசரித்தார்கள். அவர்களது சொந்தக்காரர்களைப் போல் நடத்தினார்கள். எங்களுக்குப் பெருமை தாங்கவில்லை.

சிந்து எங்களைவிட்டு அகன்றதும், ரேணு என் காதைக் கடித்தாள். “கமலா! வேடிக்கை பார்க்காதே! நழுவுவதற்கும் சந்தர்ப்பம் பார்!” என்றாள்.

நான் அதிக சிரத்தையுடன் சூழ்நிலையைக் கவனித்தேன். எங்கள் அருகில் அந்த இந்திப் பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒரே ஆரவாரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். நிர்மலா ஒரு இளம் வாலிபனோடு அளவளாவிக் கொண்டிருந்தாள்.

சுற்றிவர ஒவ்வொரு இடமாகக் கண்ணைச் சுழற்றிப் பார்த்தேன். சட்டென்று திடுக்கிட்டேன். ஒரு மூலையில் டாலி நின்று கொண்டு என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். “இந்தச் சனியன் இங்கே வந்து தொலைந்தாளே!” என்று நினைத்தேன்.

மெதுவாகக் கூட்டத்திற்குள் ரேணுவை இழுத்துக் கொண்டே சென்றேன். "ஏன்?" என்று ரேணு எரிச்சலுடன் கேட்டாள்.

"விஷயம் இருக்கிறது!" என்றேன்.

உள்ளே நுழைந்து தலைகளுக்கு இடையில் மறைந்து உட்கார்ந்து கொண்டோம். "இந்த டாலி சனியன் நம்மைப் பார்த்துவிட்டது" என்றேன்.

மற்றப் பெண்களின் தோள் இடுக்குகள் வழியே நாங்கள் டாலியைப் பார்த்தோம். அவளால் எங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சடங்குகள் நடந்தன. நாங்கள் எங்கள் இடத்தைவிட்டு எழவில்லை. நாங்கள் இருந்த இடம் மற்றவர்களைப் பார்க்க செளகரியமாக இருந்தது.

நானும் ரேணுவும் அன்று இரவு எப்படியும் தப்பித்துவிட வேண்டும் என்று திட்டம் போட்டோம்.

சிறிது நேரத்துக்குப் பிறகு ரேணு என் தோளை அவசர மாகத் தொட்டு இழுத்து டாலியைப் பார்க்கச் சொன்னாள். பார்த்தேன். டாலியும் சிந்துவின் கணவரும் இழைந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இருவருக்கும் உள்ள உறவுகளைப் பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறேன்.

அதைப் பார்த்துவிட்டு நானும் ரேணுவும், 'அமரக் காதல்' என்று கேலியாகப் பேசிக்கொண்டோம்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் இருவரையும் காணவில்லை. பிறகு ஒரு பக்கமாக நான் திரும்பியபோது; எனது பார்வை மூன்றாவது தடவையாக ஒரு இளைஞனைச் சந்தித்தது.

மாலையில் திருமண வீட்டை அடைந்த சிறிது நேரத்தில் அந்த இளைஞன் ஒரு காரை ஓட்டிக்கொண்டு வந்தான். அவனைக் கல்யாண வீட்டார் சிரத்தையுடன் வரவேற்றார்கள். அவனுக்கு இருபத்திரண்டு வயசு இருக்கும். நல்ல சிகப்பு நிறம். இளசான முகம்.

நாங்கள் பூத்தட்டுகளை எடுத்து வந்தபோது முதல் தடவையாக அவன் என்னைப் பார்த்தான். பிறகு உள்ளே நான் இனிப்புகள் சாப்பிட ஆரம்பித்தபோது ஹாலின் மறு ஓரத்தில்

ஒரு கணம் நின்று என்னை மட்டும் மீண்டும் பார்த்தான். இப்போது மூன்றாவது தடவையாக நெடு நேரம் பார்த்தான்.

அவன் சிந்துவின் தூரத்து உறவினனாக இருக்க வேண்டும். உடையையும் தோற்றத்தையும் பார்த்தாலே ஒரு உயர் குடும்பத்துப் பையன் என்பது தெரிந்தது.

நான் சிந்துவுடன் வந்திருப்பதை அவன் அறிந்து இருக்க வேண்டும். அதனால் நான் இழிவான பெண் என்பதையும் அறிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படி இருந்தும் அவன் என்னைப் பார்த்தது என் மனத்தை நெகிழ்த்தியது. மற்றவர்களது பார்வையைப்போல் அவன் பார்வையில் நான் விகாரத்தைக் காணவில்லை. அதன் கண்ணியம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

விருந்து முடிந்தது. நாங்கள் ஒவ்வொரு இடமாகச் சிதறி னோம். அது ஒரு பெரிய பங்களா. அவரவர் கும்பல் கும்பலாக ஒதுங்குவதற்கு வசதியாக இருந்தது. நாங்கள் எங்கே போனாலும் டாலியைக் காணவில்லை. அவளும் அவள் காதலனும் ஏதாவது மாடி அறைக்குள் போயிருப்பார்கள் என்று ஊகித்துக் கொண்டோம்.

சிந்து அவளது உறவினர்களுடன் பெரிய உரையாடலில் இறங்கினாள். நாங்கள் ஒரு மூலையில் ஒதுங்கி உட்கார்ந்தோம். ரேணு அவ்வப்போது எனக்கு ஜாடை காட்டிக் கொண்டிருந் தாள். தப்புவதற்கு என்ன வழி என்று நான் யோசித்துக் கொண் டிருந்தேன். வெளியே ஆரவாரங்கள் அடங்கி, மெதுவான உரையாடல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. எங்களுக்குச் சற்றுத் தள்ளி இந்திப் பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களது கவனத்தைக் கவரத்தக்க வகையில் நான் ஏதும் செய்ய விரும்ப வில்லை.

இரவு பதினொருமணி இருக்கும். வெளியிலுள்ள அலங்கார விளக்குகளை அணைத்து விட்டார்கள். ஒரே கும்மிருட்டாகி விட்டது. ரேணு என் கையைக் கிள்ளினாள். நான் அவளருகில் மெதுவாக நகர்ந்தேன்.

"ரேணு! தப்பித்து விட்டால் போவதற்கு வழி தெரியுமா?" என்றேன்.

"அதுதான் கஷ்டம்! இந்த பங்களா நகரத்துக்கு வெளிப் புறத்தில் இருக்கிறது! வெளியிலே தெருவிளக்கு இல்லை. வேறு எந்த விளக்கும் தெரியவில்லை" என்றாள்.

"அப்படியானால், எப்படித் தப்ப முடியும்?" என்றேன்.

"முயன்று பார்க்க வேண்டியதுதான்! இதைப்போல் வேறு சந்தர்ப்பம் கிடையாது" என்றாள்.

படுத்தோம்.

உள்ளே விளக்குகளை அணைத்துவிட்டு விடிவிளக்கைப் போட்டார்கள். ரேணு என்னருகில் நெருங்கிப் படுத்தாள். "கமலா! இதுதான் சந்தர்ப்பம்! புறப்படலாம்."

"பொறுமையாயிரு!" என்றேன்.

அரைமணி நேரம் பேசாமல் இருந்தோம். பிறகு ரேணு எழுந்து நிற்பதை உணர்ந்தேன். என்னையும் அவள் எழுப்பினாள்.

சுற்றிவர இந்திப் பெண்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொருத்தியையும் தாண்டி அடிமேல் அடி வைத்துக் கதவுவரை வந்தோம்.

கதவு தாளிடப்படவில்லை. ஆகவே ஒருதரம் உள்ளே கண்ணோட்டம் விட்டு விட்டு அதைத் திறந்தோம். வெளியே வந்தோம்.

வராந்தாக்களில் ஆண்கள் படுத்திருந்தார்கள். அவர் களையும் தாண்டினோம். வெளியே வந்ததும் ஒரே திகைப்பு!

சுற்றி வர அவ்வளவு இருட்டு! அதுபோல் இருட்டைப் பார்த்ததில்லை. கன்னங்கரேல் என்று இருள்! எதிரே ஆள் நிற்பதுகூடத் தெரியாது. பார்த்தால் பயமாக இருந்தது. ஆகாயத்தில் நட்சத்திரமே இல்லை!

நடந்தோம். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் யோசனை! நாம் போவது பாதைதானா?

பங்களாவின் வெளிப்புறத்தில் வெகு தூரத்தில் வெட்ட வெளியாக இருந்த நினைவு. நாங்கள் போக வேண்டிய பாதை இடது புறமா? வலது புறமா? எங்களுக்குத் தெரியவில்லை.

பங்களா பக்கம் திரும்பிப் பார்த்தோம். அதன் இடது வாட்டத்தில் அவுட் ஹவுஸ் போன்று இருந்த பகுதிகளில் லேசாக வெளிச்சம் தெரிந்தது.

குருடர்கள் போல் நடந்து கொண்டே போனோம். வழி எதுவும் பிடிமானமாகத் தெரியவில்லை. பல நிமிடங்கள்

நடந்திருப்போம். ஒரு பள்ளத்தில் கால் வைத்து நான் விழுந்து விட்டேன். ரேணு எழுப்பி விட்டாள். அதற்குச் சில அடி தூரத்தில் மீண்டும் ஒரு புதர்மீது மோதிக் கொண்டேன். கையில் முள் கிழித்து விட்டது. அவ்வளவு பெரிய புதர் எங்கள் கண்ணில் அதுவரை படாதது ஆச்சரியமாயிருந்தது.

சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தோம்.

"ரேணு! எதுவும் தெரியவில்லையே! தப்பித்து வந்துகூடப் போவதற்கு வழி தெரியவில்லையே!" என்றேன்.

களைத்துப்போய் உட்கார்ந்தேன். ரேணு சுற்றிவரப் பார்த்தாள். பிறகு, "கமலா! இங்கேயே இரு! வழி ஏதாவது தெரிகிறதா என்று பார்க்கிறேன்" என்றாள்.

"ரொம்ப தூரம் போய்விடாதே" என்றேன்.

அவள் இடது பக்கமாகத் திரும்பிச் சிறிது தூரம் போனாள். அவள் இருக்கும் இடத்தை எனக்கு அறிவிப்பதற் காக சீட்டி அடித்துக் கொண்டே போனாள்.

நிமிடங்கள் ஓடியிருக்கும். அவள் சீட்டி சற்றுத் தொலைவில் போய் விட்டதைக் கேட்டுத் திடுக்கிட்டேன். பிறகு சீட்டி சப்தம் நின்று விட்டது.

அதை நினைத்துத் திகைக்கும் போது ஒரு சீட்டி சப்தம் கேட்டது. திடுக்கிட்டு யோசித்தேன்.

சட்டென்று எழுந்தேன். அந்தச் சீட்டி மீண்டும் கேட்டது. அது ரேணு எழுப்பிய சீட்டி அல்ல. வேறு யாரோ உண்டாக்கியது என்று தெரிந்தது.

உடனே ஓட ஆரம்பித்தேன். ஓடும்போதே எங்கு போவது என்று யோசித்தேன்.

பக்கங்களில் கண்ணை ஓடவிட்டேன். பங்களா இருந்த இடத்தைத் தேடினேன். கண்டுபிடிக்க முடியவில்லை. இருட்டில் புதைந்து விட்டது.

ரேணுவைக் கத்தி அழைக்கலாமா என்று நினைத்தேன். அது ஆபத்து என்று மறுகணம் உணர்ந்தேன்.

வந்த வழி இதுதான். ஒரு நிதானத்தை வைத்துக் கொண்டு ஓடினேன். ஒரே பரபரப்பு! பின்னால் என்னை யாரோ துரத்தி வருவது நன்றாகத் தெரிந்தது. காலடி ஓசை விழும் தடும் தடும் என்ற சப்தத்திலிருந்து அது ஒரு ஆண் என்று தெரிந்தது.

தலை தெறிக்க ஓடினேன். பங்களா எங்கே, எங்கே என்று என் கண் தேடியது.

சட்டென்று அப்போது பார்வையில் மினுக்கென்ற வெளிச்சம் விழுந்தது. அடுத்த கணம் அதுதான் பங்களாப் பகுதியின் வெளிச்சம் என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனால் அதுவே எவ்வளவு தூரம்!

மனத்துள் கிலி புகுந்து வேலை செய்யவே, தலை தெறிக்க ஓடினேன். காற்று வந்து மோதும் வேகத்தில் கண்ணில் நீர் வந்தது. ஏற்கெனவே இருட்டு! பார்வை வேறு அவ்வப்போது கண்ணீரால் மறைபடவே கஷ்டமாக இருந்தது. எனது லட்சியம் எல்லாம் அந்த பங்களாதான். அதன் வெளிச்சத்தைக் குறி வைத்துக் கொண்டே ஓடினேன்.

தொப் என்று ஒரு சத்தம். என்னைத் துரத்துபவன் இடறி விழுந்து விட்டான். அது எனக்கு மேலும் சிறிது நேரத்தை அளித்தது. பல்லை இறுகக் கடித்துக் கொண்டு ஓடினேன்! ஓட ஓட வெளிச்சம் பெரிதாகிக் கொண்டிருந்தது. பங்களாவிலிருந்து இவ்வளவு தூரமா வந்திருக்கிறோம் என்று ஆச்சரியப்பட்டேன். போன வேகத்தில் மூச்சுவிட முடியாமல் இதயம் சட்டென்று நின்று விடுமோ என்று பயந்தேன். மனசுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டே ஓடினேன்.

பங்களாவை நெருங்கி விட்டேன். கூச்சல் போடுவோமா என்று நினைத்தேன். ஆனால் முடியாது என்று தோன்றியது. அவ்வளவு இளைப்பு இளைத்தது.

வேகத்தைக் குறைத்து, முகத்தை லேசாகத் திருப்பினேன். அதுவரை காதில் குர்ரென்று காற்று அடித்துக்கொண்டிருந்த தால் வேறு சத்தம் கேட்கவில்லை. இப்போது முகத்தைத் திருப்பிக் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டபோது ஒரே நிசப்தத்தைத்தான் உணர்ந்தேன்.

எனினும் பயம் தணியவில்லை. பங்களாவின் எல்லைக்குள் நுழைந்தேன். தவறான பகுதியில் நுழைந்திருப்பது கட்டடத்தை நெருங்கியதும் தெரிந்தது.

பங்களாவைச் சுற்றிச் சின்ன சின்னக் கட்டடங்கள் பல இருந்தன. அவற்றில் ஒன்றிலிருந்துதான் அந்த வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

வெளிச்சம் வந்த கட்டிடத்திற்கு வந்ததும் ஒரு கணம் நின்றேன். ஒரே நடுக்கந்தான். பங்களா எந்தப் பகுதியில் இருக்கிறது. அதன் முகப்பு எந்த இடத்தில் இருக்கிறது என்று யோசித்தேன். அடுத்த கணம் காலடி ஓசை கேட்கவே, இதற்கு மேல் தாமதிக்கக் கூடாது என்று உணர்ந்து, அந்தக் கட்டடத்தின் கதவைத் தேடி ஓடினேன். அதைக் கண்டு பிடித்து 'டக் டக்' என்று அவசரத்துடன் தட்டினேன்.

அடுத்த கணமே உள்ளே யாரோ எழுந்திருக்கும் சப்தம் கேட்டது. ஆனால் கதவு திறக்கப்படும்வரை என் உயிர் என் கையில் இல்லை.

கதவு திறந்ததும் உள்ளே ஓடினேன். வெளிச்சத்தில் சுற்றிலும் பார்வையை ஓட்டினேன்.

முதலில் ஒரு அதிர்ச்சி! மாலை திருமண வீட்டிற்கு வந்து இறங்கிய வாலிபன் அந்த அறையில் இருந்தான். அவனைச் சுற்றி வரத் திருமணத்திற்கு வேண்டிய சரிகை மாலைகள், வாசனைத் திரவியங்கள், பழங்கள் யாவும் குவிந்து கிடந்தன. மூலையில் கூடைகூடையாக இனிப்புகள் வைக்கப்பட்டிருந்தன.

சன்னல் ஓரம் கட்டிலும் அதன் அருகில் அந்த விளக்கும் தெரிந்தன. (அந்த விளக்கின் வெளிச்சம்தான் என்னைக் காப்பாற்றி இருக்கிறது.) விளக்கின் அடியில் அவன் படித்துக் கொண்டிருந்த புத்தகம் அப்படியே திறந்து கிடந்தது. நான் ஆச்சரியப்பட்டதுபோல் அந்த இளைஞனும் ஆச்சரியப் பட்டான்.

அவன் என்னை விசாரிப்பது காதில் பட்டது. என்னுடைய மூச்சுகள் இரைந்ததால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

நேராகக் கட்டிலில் போய் உட்கார்ந்து மார்பைப் பிடித்துக் கொண்டேன். சரியாக மூச்சுவிட முடியாமல் ஒரு வலி ஏற்பட்டிருந்தது.

ஐந்து நிமிஷம் ஆசுவாசம் அடையும் வரை அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தலையை லேசாகத் தடவிவிட்டான். அப்படிச் செய்வதற்காக அவன் தனது இரண்டு விரல்களை மட்டும் உபயோகித்ததையும், அவன் அப்போது நடுங்கிக் கொண்டிருந்ததையும் நான் உணர்ந்து கொண்டேன்.

கடைசியில் வியர்வை எல்லாவற்றையும் துடைத்துக் கொண்டு ஒரு வழியாக நிதானமாகி அவனை நிமிர்ந்து பார்த்தேன்.

“நீ வருவாய் என்று தெரியும்” என்றான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

“ஏன் இவ்வளவு பதட்டப்படுகிறாய்! உனக்கு அவ்வளவு பயமா?” என்று கேட்டான்.

நான் பதில் சொல்லவில்லை. எனக்கு ஒரே தாகம்! நாக்கு வறண்டுவிட்டது. சுவர் ஓரமாக இரண்டு கிரேட் கொக்கா கோலா இருப்பதைக் காட்டிச் சைகை காட்டினேன். அவன் எடுத்து வந்து உடைத்தான்.

ஒன்று மாற்றி ஒன்றாக மூன்று பாட்டில் கோலாவை அருந்தினேன். அதிசயமாக அவன் என்னைப் பார்த்தான்.

“ஏன், இவ்வளவு பதட்டம்?” என்றான். நான் பதில் சொல்லவில்லை. அவன் என்னைப் பார்த்துப் புன்னகையுடன், “நீ எப்படியும் வருவாய் என்று தெரியும்! கடைசி முறை நீ என்னைப் பார்த்ததிலிருந்தே புரிந்து கொண்டேன்” என்றான்.

சற்று யோசித்ததில், அவன் சொல்வது எனக்குப் புரிந்து விட்டது. அதாவது திருமண வீட்டில் எங்கள் பார்வைகள் மூன்று முறை சந்தித்ததில் நான் அவன்மீது காதல் கொண்டு விட்டேன் என்றும், அதன் காரணமாக அவனைத் தனியாகச் சந்திக்க நினைத்து அங்கே வந்திருக்கிறேன் என்றும் அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்.

‘ஓகோ! இவன் மனத்தில் இப்படி ஒரு அர்த்தம் தோன்றி விட்டதா?” என்று நினைத்தேன். இந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய முடியும் என்று யோசித்தேன். கட்டடத்தைவிட்டு வெளியே போனால் ஆபத்து! அதே நேரத்தில் நான் அந்த அவுட் ஹவுசுக்குள் வந்த காரணத்தையும் அவனிடம் சொல்ல முடியாது. சிந்துவுக்கு இந்த இளைஞன் என்ன உறவோ? நான் தப்பிக்க முனைந்ததை சிந்து இவன் மூலம் அறிந்தால் அதுவும் ஆபத்து! ஆகவே பேசாமல் இருந்துவிடுவது என்று நினைத்தேன்.

என் மௌனம் அவனது எண்ணத்தை மேலும் உறுதிப் படுத்தியது.

"கமலா" என்றான்.

நான் திடுக்கிட்டேன்.

"என் பெயர் எப்படித் தெரியும்?" என்று கேட்டேன்.

"தெரியும் கமலா! உன்னை இன்றுதான் பார்த்தேன் என்று நினைத்தாயா! முன்பே பார்த்து விட்டேன்."

"எங்கே பார்த்தீர்கள்?"

"அன்று எங்கள் உறவினர் வீட்டுக்கு நீ சிந்துவுடன் வந்தாய்! நான் உன்னைப் பார்த்தேன். ஆனால் நீ என்னைப் பார்க்கவில்லை" என்றான்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"உன்னிடம் சொல்ல நான் வெட்கப்படவில்லை. அன்று பார்த்ததிலிருந்து உன் பெயரை ஒவ்வொரு நிமிடமும் சொல்லு கிறேன். இதுவரை எத்தனையோ லட்சம் முறை சொல்லி யிருப்பேன்!" என்றான்.

நான் இன்னும் மௌனமாக இருந்தேன்.

"கமலா! ஏன் பேசமாட்டேன் என்கிறாய்! இன்று மூன்று முறை நாம் பார்த்துக் கொண்டதிலிருந்து உன் மனத்தைப் புரிந்து கொண்டேன். உன்னை எப்படிச் சந்திக்கலாம் என்று நினைத்தபோது நீயே வந்து விட்டாய்!" என்றான்.

அதன் பிறகு அவன் என்னைப் பற்றிப் புகழ்ந்ததையும் வர்ணித்ததையும் அளவிட முடியாது. அவன் சொல்வதில் ஒரு விஷயம் கண்டு கொண்டேன். ஒரு இள வயதுப் பையனுடைய உண்மையான அந்தரங்கத்திலிருந்து வந்த சொற்கள் எவ்வளவு அழகாயிருக்கும் என்பதுதான் அது!

பம்பாயில் நான் தங்கியபோது ஒரு பையனைச் சந்தித்தது பற்றியும், அப்போது என் மனம் நெகிழ்ந்தது பற்றியும் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அந்தச் சம்பத்திற்குப் பிறகு இப்போதுதான் என் மனம் மீண்டும் நெகிழ்ந்தது.

அன்று இரவு அந்த இளைஞனைச் சந்தித்த வேளையில் நான் ஒரு பெரிய மனவருத்தத்தில் இருந்தேன். தப்பிக்க முயன்ற எனது முயற்சிகள் எல்லாம் பாழாகிக் கொண்டிருந்தன. எனக்கு வேறு உதவி கிடைக்க வழியில்லை என்ற நினைவு என்னை மேலும் வெகுவாக வருத்தியது. இதனால் எல்லாம் என் தைரிய மெல்லாம் நசித்துப் போயிருந்தது. என் நம்பிக்கை எல்லாம்

தீய்ந்து போன அந்த நிலையில் - துக்கமான நிலையில் - ஒரு இளைஞனின் விகாரமற்ற, கண்ணியமான விழைவுகள் என் மனத்தைக் கவர்ந்ததும் அல்லாமல், என் வேதனை நிறைந்த இதயத்திற்கு ஒரு இதத்தைத் தருவது போலிருந்தது. என் இடையறாத துயரங்கள் இடையே சில கணங்களாவது ஒரு இனிமையான நிம்மதியை அனுபவிக்க விரும்பினேன்.

அவன் என்னை நெருங்கினான். என்னைத் தொடுவதற் காக முதல் முயற்சிகள் செய்தான். நான் மௌனமாக அவைகளை ரசித்தேன். ஒரு இளைஞனின் முதல் காதலைப் பெறுவதில் ஒரு ஆனந்தத்தை அனுபவித்தேன். ஆனால் ஒரு விசேஷத்தையும் கூற விரும்புகிறேன். அவன் தொட்ட போதோ அல்லது அணைக்க முயன்றபோதோ நான் வெட்கப்பட்டேன்! பலரிடம் பழகிய எனக்கே இந்த வெட்கம் அதிசயமாக இருந்தது! மனத்தத்துவக்காரர்கள் இதற்கு என்ன காரணம் கூறுவார்களோ தெரியாது.

வெட்கமும் ஆசையும் ஒன்றை ஒன்று அமுத்திவிடப் பார்க்க என்னைப் பலமுறை அணைத்துக் கொண்டான். அதற்கு மேல் செல்ல விவரம் தெரியாமலும், அல்லது விருப்பம் இல்லாமலும், அவஸ்தைப் படுவதைக் கண்டு வெகுவாக ரசித்தேன். அவன் எல்லா விஷயங்களிலும் அதிசயிப்பதைக் கண்டு மேலும் ரசித்தேன்.

வெகு நேரத்திற்குப் பிறகு களைப்பு மேலிட இருவரும் உறங்க ஆரம்பித்தோம். என் கையின் விரல்களை மட்டும் பிடித்துக் கொண்டு அவன் மெய்ம்மறந்து உறங்கியதை என்னால் மறக்க முடியாது.

மறுநாள் காலையில் எழுந்து பங்களாவுக்குப் போனேன். அதற்குள் மற்றவர்கள் எழுந்து வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ரேணுவைத் தேடினேன். அதுதான் எனது முதல் கவலை!

மாடிப் படிகளின் கீழே ஓரமாகப் படுத்துக்கொண்டு இன்னும் அவள் உறங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் எனக்கு ஒரே மகிழ்ச்சி! சட்டென்று அவள் அருகில் போய் மெதுவாக அவளை எழுப்பி அணைத்துக் கொண்டேன்.

அவளுக்கும் என்னைக் கண்டதில் ஒரே மகிழ்ச்சி! இரவில் நடந்த விஷயத்தைப்பற்றி கேட்டேன். அவள் விவரமாகக் கூறினாள்.

என்னை விட்டு அவள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த ஆளைப் பார்த்து விட்டாளாம். உடனே சீட்டி அடிப்பதை நிறுத்திவிட்டு ஓட ஆரம்பித்தாளாம். வசமாக ஒரு பள்ளம் கிடைக்கவே அதில் பதுங்கி ஒளிந்து கொண்டாளாம். அவளைத் தொடர்ந்து வந்த ஆள் இருட்டில் அவளைக் காணாமல் திரும்பி விட்டானாம். அவனிடம் நான் அகப்பட்டுக் கொள்ளக்கூடாதே என எச்சரிக்கை செய்ய அவள் விரும்பினாளாம். ஆனால் அதனால் விபரீதம் ஏற்படும் என்று நினைத்ததால் பேசாமல் இருந்துவிட்டாளாம். பள்ளத்திலேயே அவள் ஒரு மணி நேரம் இருந்திருக்கிறாள். பிறகு மெள்ள வெளியே வந்து வழி தடுமாறி பங்களாவின் வெளிச்சத்தைக் கண்டுபிடித்து இங்கே வந்து சேர்ந்திருக்கிறாள்.

நான் தப்பிய விதத்தை அவளுக்குத் தெரிவித்தேன்.

"நல்லவேளை, கடவுள் காப்பாற்றினார்" என்று இருவரும் கூறிக் கொண்டோம்.

மறுநாள் மாலைவரை அந்த பங்களாவில் இருந்தோம். பிறகு புறப்பட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்.

ஒருவாரம் சென்றது. ஒருநாள் பகல் ஒரு மணி இருக்கும். சிந்து என்னை அழைத்தாள்.

"சினிமாவுக்குப் போகலாம் வருகிறாயா?" என்றாள்.

எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே கிளம்பினேன். "கடவுளே! இங்கேயாவது ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதா?" என்று வேண்டிக் கொண்டேன்.

என் மகிழ்ச்சியைக் கண்டு சிந்து அருகில் வந்தாள்.

"கமலா! டிக்கெட்டுக்குப் பணம் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"இருக்கிறது" என்றேன்.

"புறப்படு" என்றாள்.

ஸாரி உடுத்திக் கொண்டேன். உடுக்கும்போது ஒரு யோசனை. தப்பி ஓட நேர்ந்தால் ஸாரி ஒரு தடையாக இருந்தது. அடிக்கடி வேகத்தைக் கட்டுப்படுத்தியது. அதன் விளிம்புகளை வாரிச் சுருட்டிக்கொண்டு ஓடுவது கடினமாக இருந்தது. இதெல்லாம் நான் திருமண வீட்டிலிருந்து ஓடியபோது ஏற்பட்ட அனுபவங்கள்!

இருந்தாலும் அதில் ஒரு நன்மை உண்டு. பெரும்பாலான பெண்கள் ஸாரியே கட்டுவதால் ஒரு கூட்டத்திற்குள் எளிதில் கலந்து மறைந்து விடலாம்.

ஸாரி உடுத்திக் கொண்டேன். சிந்துவும் நன்றாக டிரஸ் செய்து கொண்டாள்.

நான் நிற்பதைப் பார்த்து, "என்ன தயக்கம்?" என்றாள்.

"இல்லை தீதி! ரேணுவையும் இந்திராணியையும் அழைத்துப் போகலாமா?" என்றேன்.

"இத்தனை பேர் எதற்கு? செலவுதான் அதிகமாகும்" என்றாள்.

"அவர்களும் ஆசைப்படுகிறார்கள்" என்றேன்.

"ரேணுவை மட்டும் அழைத்துக்கொள். இந்திராணி வேண்டாம். அவள் நிர்மலாவின் குரூப்பைச் சேர்ந்தவள். அவளை அழைத்துப் போனால், 'என் வரும்படி போச்சே' என்று நிர்மலா அலறுவாள்" என்றாள்.

அவள் கூறியது உண்மைதான். இந்திராணியின் வாடிக்கை களுக்கு நேரம், காலம் என்று எதுவும் கிடையாது. எந்த நேரத்திலும் வருவார்கள்.

ரேணுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டோம். தியேட்டரை அடைந்தோம்.

எனக்கு உற்சாகமாக இருந்தது. கொட்டகையின் கூட்டமும் இரைச்சலும் என்னைப் பரவசப்படுத்தின. நாங்கள் போயிருந்தது பகல் காட்சி!

கியூவில் நின்று டிக்கெட் வாங்கினோம். உள்ளே போனோம் எல்லாம் என் செலவுதான்.

ஒரு இந்திப்படம் ஓடியது. பெயர் மறந்து விட்டது. படத்தில் ஒரு முறையான குடும்பத்தையும் அதில் அண்ணா, தங்கைகளையும் பார்த்தபோது அழுகையாக வந்தது. ஒரு குடும்ப வாழ்க்கையைப் பார்த்து வெகு காலம் ஆகி விட்டதே என்று கலங்கினேன்.

ரேணு என்னைச் சீண்டிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தால் எனக்கு ஆச்சர்யம் தோன்றியது. என்னைப் போல் உணர்ச்சிப் பெருக்கில் அவள் மூழ்கவில்லை. பார்க்கும் போதெல்லாம் புன்னகை புரிந்து கொண்டிருந்தாள்.

இடைவேளை வந்தது. சிந்து என்ன செய்யப் போகிறாள் என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தோம்.

சிறிது நேரம் அவள் உட்கார்ந்திருந்தாள். பிறகு, “வாங்க! பாத்ரூம் போயிட்டு வரலாம்!” என்று சொல்லி எழுந்தாள். எழுந்தோம்.

சிந்து ஒரு கெட்டிக்காரி! பாத்ரூமுக்குள் போகும்போது எல்லோரையும் சேர்த்துக்கொண்டே நுழைந்தாள்.

உள்ளே சலசல என்று பெண்கள் கூட்டம்! ரேணு என்னை உரசிக் கொண்டு முன்னால் போனாள். அந்தச்சைகை யைப் புரிந்து கொண்டு சுற்றி வரப் பார்த்தேன். கூட்டத்தைத் தவிர எதுவும் என் கண்ணில் தென்படவில்லை. பாத்ரூம் நெரிசலில் உடனே இடம் கிடைக்கவில்லை. தாமதமாகியது. அந்த நேரத்தில் என் மனம் மட்டும், ‘கமலா! ஓட வழியைப் பாரு! சுற்றி வரக் கவனி!’ என்று சொல்லிக் கொண்டே இருந்தது. ஓரக் கண்ணால் பார்த்தபோது சிந்து வந்த காரணத்தைக் கவனியாமல் அப்படியே நிற்பது தெரிந்தது. எதற்கு நிற்கிறாள் என்று யோசித்தேன். சிறிது நேரத்தில் அது புரிந்துவிட்டது. எங்களுக்கு இடம் கிடைக்கும் வரை அவளும் காத்திருக்கிறாள்.

“புத்திசாலியாக இருக்கிறாளே” என்று நினைத்தேன்.

எல்லோரும் சேர்ந்தே வெளிவந்தோம்.

ஒரு கணநேர இடைவெளியில் ரேணு என்னை மீண்டும் சீண்டி விட்டுப் பிறகு பேசாமலிருந்தாள். நான் என் மூளையைக் குடைந்து கொண்டேன். அவள் செய்த ஜாடையைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஸ்டால் பக்கம் போனேன், பிஸ்கட்டும் டீயும் எல்லோருக்கும் வாங்கிக் கொடுத்தேன்.

டீ அருந்தும்போது ஒரு விஷயத்தைக் கவனித்துக் கொண்டேன்.

நம் பக்கத்து தியேட்டர்களைப் போல், இந்தத் தியேட்டரில் இடை வேளையின் போது வெளிக் கதவை இழுத்து மூடுவதில்லை. ஆட்கள் வெளியே போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள். அது எனக்கு நல்ல வாய்ப்பாகத் தோன்றியது.

அந்த வாசலைப் பார்க்கும்போது எனக்குப் பெருமூச்சும் வந்தது. விடுதலைக்கு எவ்வளவு அருகில் இருக்கிறேன்! இருந்தாலும் அதற்கு எவ்வளவு தூரத்திலும் இருக்கிறேன்! மீண்டும் தியேட்டருக்குள் நுழைந்தோம். படம் ஆரம்பமாகியது. கண்ணில் என்னை அறியாமல் பொல பொலவென்று நீர் வந்தது. சிந்து ஒரு முறை என்னைப் பார்த்து, "என்ன?" என்று கேட்டாள்.

"படம் உருக்கமாக இருக்கிறது?" என்றேன்.

அந்தி வேளையில் வீட்டுக்கு வந்தோம். வெளியே போய் வந்தது இனிமையாக இருந்தாலும் மனத்தில் அந்த அளவு துன்பமும் உண்டாகியிருந்தது.

வீட்டுக்குள் எங்களுக்காக வாடிக்கைக்காரர்கள் காத்திருந் தார்கள். அதைப் பார்த்ததும் எரிச்சல் வேறு ஏற்பட்டது.

மாடிக்குப் போனோம். மேக்-அப் போட்டுக் கொள்ளும் போது ரேணு கோபத்துடன் பேசினாள்.

"ஏ மக்கு! நான் காண்பித்த இடத்தை ஏன் பார்க்க வில்லை?" என்றாள்.

"எந்த இடத்தை காண்பித்தாய்?" என்றேன்.

"பாத்ரூமுக்கு வெளிப்புறத்தில் பெரிய பெரிய விளம்பர போர்டுகளை வைத்திருந்தார்களே, பார்க்கவில்லையா?" என்றாள்.

"பார்த்தேனே! அதில் என்ன புதுமை இருக்கிறது?" என்றேன்.

"சுவரின்மீது அவைகளைச் சாய்வாக வைத்திருப்பதால் இடைவெளி இருக்கிறது, பார்த்தாயா?"

"பார்த்தேன்!"

"மற்றொரு முறை போனால் அதற்குள் ஒளிந்து கொள்ள வேண்டும்."

"சிந்துவுக்குத் தெரியாமல் அது முடியுமா?"

"முயற்சி பண்ண வேண்டும். அதற்கு ஒரு வழியும் இருக்கிறது!"

"என்ன வழி?"

"புது சினிமாப் படம் வந்தால் இரண்டு நாட்களுக்குள் நாம் தியேட்டருக்குப் போக வேண்டும். அப்போது பெண்கள்

கூட்டம் எக்கச்சக்கமாக இருக்கும். அந்த வேளையில், சிந்துவுக்கு எளிதாக டிமிக்கி கொடுத்து விடலாம்."

"சரி, போர்டுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாலும் எப்படித் தப்பிக்க முடியும்?"

"அதை விட்டு வெளியே வரவேகூடாது! சிந்து நம்மைத் தேடி அலுத்துவிட்டுப் போன பிறகுதான் நாம் வெளியே வர வேண்டும்."

"இதெல்லாம் ஒழுங்காக நடக்குமா, ரேணு?"

"ஏன் நடக்காது? நீ இல்லத்திலிருந்து விடுதலை ஆனது கூட இதைப் போலத்தானே!"

இல்லத்தில் கண்காணிப்பவள் கண்ணில் படாமல் கார் ஷெட்டில் நின்றது எனக்கு நினைவு வந்தது.

"சரி, அடுத்த தடவை முயற்சிக்கலாம்" என்றேன்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு மீண்டும் சினிமா போக சந்தர்ப்பம் வந்தது. ஆனால் அது ஒரு பழைய படம். கூட்டம் அதிகம் இல்லை. எனவே எந்த முயற்சியிலும் நாங்கள் ஈடுபட வில்லை.

"புதுப்படம் எப்போது வரும் என்று நாங்கள் ஏங்க ஆரம்பித்தோம். தினமும் வாடிக்கையாளரிடம், "இன்று என்ன படம்?" என்று கேட்டுக் கொண்டே இருந்தோம்.

முடிவில் புதுப் படம் வருவதாகச் செய்தி கிடைத்தது. நாங்கள் ஒரே மகிழ்ச்சியுடன் இருந்தோம். படம் வந்தவுடன் சிந்துவை அழைத்துப் போகத் தயாராக இருந்தோம்.

ஆனால் ஏமாற்றம். படம் வெளியாவதற்கு இரண்டு நாட்கள் முன்பு சிந்து திடீரென்று பம்பாய்க்குப் புறப்பட்டாள். அவள் புறப்படுவதன் காரணம் சீக்கிரம் தெரிய வந்தது. வீட்டிலுள்ள பெண்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. அம்சா ஓடிவிட்டாள். தயா இறந்து விட்டாள். ஒரு வயதான இந்திக்காரி 'இனிமேல் இந்த வாழ்க்கை போதும்' என்று சொந்த ஊருக்குப் போய்விட்டாள். (அவளுடைய வரும்படி குறைந்து விட்டது.) எனவே, பம்பாய்க்குப் போய்ப் புதுப் பெண்களைப் பிடித்து வருவதற்காகச் சிந்து புறப்பட்டாள்.

பம்பாய்தான் அவள் பெண் வாங்கும் பதிவான மார்க்கெட்!

சிந்து புறப்பட்ட போது பெரிய ரகளை ஒன்று நடந்தது. அவளது கணவனை அவள் இங்கே விட்டு விட்டுப் போக விரும்பவில்லை. தன்னோடு வர வேண்டும் என்று அவனிடம் சொன்னாள். அவன் கேட்கவில்லை. அவளும் விடவில்லை. இதனால் இருவருக்கும் பெரிய லடாய் நடந்தது! கடைசியில் நிர்மலா குறுக்கிட்டு சிந்துவின் கணவனைக் கடிந்து பேசி அவனை அவளுடன் பம்பாய்க்கு அனுப்பி வைத்தாள்.

அவள் திரும்பி வருவதற்கு இரண்டு வாரங்களாவது ஆகும் என்று தெரிய வந்தது எங்களுக்கு. ஒரே வருத்தம்! காரணம் உண்டு. அவள் போய்விட்டால் நாங்கள் நிர்மலாவின் பாதுகாப்புக்கு மாற்றப்படுவோம். அப்படி மாற்றப்பட்டால் எங்களுக்கு வழக்கமாகக் கிடைக்கும் சாதாரண சுதந்திரம்கூடக் கிடைக்காமல் போய் விடும்.

இதை நினைத்தவுடன் எங்கள் துக்கம் அதிகமாகியது.

ஆனால், சிந்துவின் அந்த பம்பாய்ப் பயணம்தான் பின்னால் என் விடிவுக்கு வழி வகுக்கப் போகிறது என்பது எனக்கு அப்போது தெரியாது.

சிந்து பம்பாய்க்குப் போய் சில நாட்கள் சென்றன. மாடியில் ஒருநாள் காலையில் உறங்கிக் கொண்டிருந்தேன். ஒன்பது மணி இருக்கும்.

யாரோ என்னை எழுப்புவதை உணர்ந்து எழுந்திருந்தேன். எழுப்பியவள் வேலைக்காரி.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"யாரோ உன்னைத் தேடி வந்திருக்கிறார்கள்!" என்றாள்.

"இந்த வேளையில் ஒரு வாடிக்கையா?" என்று வெறுப்புடன் எழுந்து போனேன்.

மாடிப்படியில் இறங்கும்போது கீழே பார்த்தேன். திடீர் என்று உள்ளம் துள்ளியது. என்னை அறியாமலேதான் துள்ளியது. முன்பு திருமண வீட்டில் சந்தித்த இளைஞன் கீழே நின்று கொண்டிருந்தான்.

என்னை முறையாகக் குசலம் விசாரித்தான். நான் புன்னகையுடன் பதில் சொன்னேன். பிறகு, "கொஞ்சம் இருங்கள்!" என்று சொல்லிவிட்டு மேலே வந்தேன்.

என் மனம் படபடத்தது. எனக்காகவே அவன் வந்திருக்கிறான் என்று அறிந்தேன். அதுவும் சிந்து இல்லாத நேரத்தை அறிந்து கொண்டு வந்திருக்கிறான்.

முகத்தைக் கழுவாமலும் சரியாக மேக்-அப் செய்து கொள்ளாமலும் அவனைச் சந்திக்க விரும்பவில்லை. ஆகவே, முகம் கழுவப் போனேன்.

பிறகு ரேணுவைப் போய் எழுப்பினேன். உபேந்தர் வந்திருக்கும் விஷயத்தைச் சொன்னேன்.

"நீ ஒரு அதிர்ஷ்டக்காரிடி! இப்படி ஒரு காதலன் கிடைத்து விட்டானே!" என்றாள்.

"ஆமாம், இவனது காதலால்தான் நமக்கு விடிவு வரப் போகிறதாக்கும்" என்றேன்.

"ஏன் வந்தால் ஏற்றுக் கொள்ள மாட்டாயா!" என்றாள்.

"மாட்டேன்" என்றேன்.

"நான் ஏற்றுக் கொள்வேன். அவனைத் திருமணம் செய்து கொண்டு எங்கேயாவது நிம்மதியாக வாழ்வேன்" என்றாள். நான் திடுக்கிட்டேன். ஏனெனில் ரேணு இந்த வீட்டுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன் திருமணம் ஆனவள்.

"ஏன் இப்படிச் சொல்கிறாய் ரேணு? இங்கிருந்து தப்பி உன் கணவனிடம் போய்ச் சேர வழி பார்க்காமல் வேறு எங்கேயோ போக வேண்டும் என்கிறாயே!" என்றேன்.

அதற்கு அவள் பதில் சொல்லவில்லை. பிறகு நான் அவளிடம் "ரேணு! நீ என்னுடன் கீழே வரவேண்டும். நான் அந்த இளைஞனிடம் சற்றுப் பேசிக் கொண்டிருக்கப் போகிறேன். நீ யாரும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றேன்.

"அவன் மீது விருப்பம் இல்லாவிட்டால் என்ன பேச்சு?" என்றாள் ரேணு.

''நாம் தப்பிப்பதற்கு அவன் மூலம் ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்கத்தான் அப்படிச் செய்யப் போகிறேன்" என்றேன்.

லேசாகப் பவுடர் போட்டுக் கொண்டேன். கீழே போனேன். அவனை அழைத்துக் கொண்டு ஸ்டோர் அறைக்குள் சென்றேன்.

உள்ளே போனதும் அவன் என்னை அணைத்துக் கொண்டான். பிறகு, "உன்னைப் பார்ப்பதற்கு எவ்வளவு கஷ்டப் பட்டேன்!" என்றான்.

"கஷ்டம் எதற்கு?" என்றேன்.

"சிந்து இருந்தால் உன்னைப் பார்க்க வரமுடியாது. அவள் என் சொந்தக்காரி!" என்றான்.

"சொந்தக்காரியானால் என்ன?" என்றேன்.

"உன்னை நான் பார்ப்பதை அவள் விரும்பமாட்டாள். அப்படிச் செய்தால் என்னை கௌரவக் குறைவாக நினைப்பாள்" என்றான்.

"ஏன் நினைக்க வேண்டும்?" என்று கேட்டுத் தூண்டினேன்.

"எங்களில் பல குடும்பங்கள் இதைப் போன்ற தொழில் செய்துதான் வாழ்கின்றன. என் பெற்றோர்கள் மட்டும் இதற்கு விதி விலக்கு. என் அப்பா பிஸினஸ் செய்கிறார். எங்கள் குடும்ப ஆண்கள் எவரும் உங்களைப் போன்றவர்களிடம் பழக்கம் வைக்கக் கூடாது என்று கண்டிப்பான கட்டுப்பாடு!"

"ஓகோ! அப்படியானால் என்னை ஏன் பார்க்க வந்தீர்கள்?" என்றேன்.

"நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்றான் அவன்.

அவனிடம் பேசும்போது என் மனம் வேலை செய்து கொண்டே இருந்தது. நான் தப்பிப்பதற்கு இவனை எப்படி உபயோகிக்கலாம் என்று எண்ணிக்கொண்டே இருந்தேன்.

சில நிமிடங்களில் வெளியே குரல்கள் கேட்டன.

உடனே நான், "நீங்கள் என்னைச் சீக்கிரம் எப்படியாவது சந்தியுங்கள்" என்று சொல்லிவிட்டு, அவசரமாக அறையை விட்டு வெளியே வந்து விட்டேன்.

நாங்கள் வெளியே வருவதற்கும் மாடிப்படிகளிலிருந்து டாலி இறங்கி வருவதற்கும் சரியாக இருந்தது. அவசரமாக அறையை விட்டு வெளியே வந்து விட்டேன்.

"ஏன் இவ்வளவு காலையில் கீழே இறங்கினீர்கள்?" என்றாள்.

"யாரோ வாடிக்கையாளர்கள் என்று வேலைக்காரி சொன்னாள். வாடிக்கை என்று நினைத்து வந்தோம். இல்லை

என்று இப்போது தெரிந்து விட்டது. மேலே போகிறோம்” என்றேன்.

அவள் எங்களை முறைத்துப் பார்த்தாள்.

நான் மாடி ஏறி ஒரு அறையில் சென்று மீண்டும் படுக்க முனைந்தபோது என் சோளிக்குள் ஏதோ சலசலப்பது தெரிந்தது. எடுத்துப் பார்த்தேன். நூறு ரூபாய் நோட்டு. உபேந்தர் என்னை அணைத்தபோது உள்ளே போட்டிருக்க வேண்டும்.

அது நடந்த இரண்டாவது நாள் மாலை. ஒரு வெள்ளைக் காரன் - ஹிப்பியாக இருக்க வேண்டும் - மாடி ஹாலுக்கு வந்தான். அங்கே உட்கார்ந்திருந்தவர்களில் இந்திராணியைத் தேர்ந்தெடுத்தான். அவள் சம்மதிக்கவில்லை. வேறு ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தான். அவளும் சம்மதிக்கவில்லை. யாருமே சம்மதிக்கவில்லை.

ஒரு இந்திக்காரன்தான் அந்த வெள்ளைக்காரனை அழைத்து வந்திருந்தான். அவர்கள் இருவரும் உடனே நிர்மலாவின் அறைக்குள் சென்றார்கள். முறையிட்டார்கள்.

சிறிது நேரத்தில் நிர்மலா வெளியே வந்தாள். இந்திராணி யைக் கூப்பிட்டாள். வெள்ளைக்காரன் அழைத்துப் போகச் சொன்னாள். அவள் தயங்கவும் நிர்மலா ஒரு கூப்பாடு போட்டாள். இந்திராணி அறைக்குள் போனாள்.

எனக்கு விஷயங்கள் எல்லாம் பின்னால்தான் தெரிய வந்தது. இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும் அறைக்குள் இருந்து இந்திராணி திடீர் என்று அலறுவது கேட்டது. நாங்கள் அடித்துப் புடைத்துக்கொண்டு வெளியே வந்தோம்.

இந்திராணி வீறிட்டுக் கொண்டிருந்தாள். நாங்கள் அவளது அறைக் கதவைப் படபட என்று தட்டினோம். வெள்ளைக்காரன் திட்டிக் கொண்டிருந்தான்.

நாங்கள் கத்தினோம். கதவு திறந்தது. உள்ளே போனோம். இந்திராணி மூலையில் நடுங்கியவாறு நின்றாள். அவள் நிற்கும் நிலையைப் பார்த்ததுமே அவளது உடல் இரக்கமற்ற நிலையில் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறது என்று அறிந்தோம். அவள் அப்படியே வலியில் உதறிக் கொண்டிருந்தாள்.

இந்திராணியை வெளியே அழைத்துப் போக முயன்றோம். வெள்ளைக்காரன் கத்தினான். நாங்கள் பயப்படவில்லை.

அவனைக் கடக்கும்போது அவன் எங்களை மறித்தான். நாங்கள் அவனைத் தள்ளினோம்.

அவன் விடவில்லை. "என் பணத்தைக் கொடு! நான் திருப்திப்படவில்லை" என்று கத்தினான்.

நாங்கள் அவன் சொன்னதைப் பொருட்படுத்தாமல் அவனை மீறிக்கொண்டு போகப் பார்த்தோம். அவன் வாட்ட சாட்டமானவன். இரண்டு சர்தார்களை அவன் உடம்பில் வைக்கலாம். எங்களை அவன் இடது கையாலேயே ஒரு தள்ளு தள்ளினான்.

பலகைச் சுவரில் என் தலை அடிப்பட்டது. நான் கோபத்துடன் எழுந்தேன். "உன் பணந்தானே உனக்கு வேண்டும்? இந்தா?" என்று கூறி உபேந்தர் எனக்குக் கொடுத்திருந்த நூறு ரூபாயை எடுத்து அவன்மீது வீசினேன். அவன் அதை எடுத்துக் கொண்டு வெளியே போனான்.

நாங்கள் இந்திராணியின் பக்கம் போனோம். அவள் வலியில் துடித்துக் கொண்டிருந்தாள். கால்களை முன்னால் எடுத்து வைக்க முடியவில்லை. அப்படியே அவளை நாங்கள் தூக்க வேண்டி வந்தது. படுக்கையில் அவளை மெதுவாகப் படுக்க வைத்தோம்.

அவள் தனது இரு கால்களையும் ஒரு நிலையிலேயே வைக்க வேண்டி வந்தது.

எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பது எங்களுக்கு மறுநாள் தெரிய வந்தது.

காலையில் எழுந்து அவள் சரியாக நடக்க முடியவில்லை. அதைக் கண்டபோது எங்களுக்கு வேதனை தாங்க முடியவில்லை. இரவு அவள் எத்தகைய பலாத்காரத்திற்கு உள்ளாயிருப்பாள் என்று எண்ணி வருத்தப்பட்டோம்.

இரண்டு நாட்கள்வரை இந்திராணியால் சரியாக நடக்க முடியவில்லை. அவளுக்கு ஏற்பட்டிருந்த உபாதைகளால் தனக்கு வரும்படி போகிறது என்று நினைத்த நிர்மலா அவளை டாக்டரிடம் அழைத்துப் போக ஏற்பாடு செய்தாள். வீட்டில் இந்திராணி ரெஸ்ட் எடுத்துப் படுத்திருந்தபோது, நான்தான் அவளுக்குப் பணிவிடை செய்தேன். இந்திராணி மிகவும் நொந்து போயிருந்தாள். வாழ்க்கை வெறுத்துவிட்டது என்று கூறினாள்.

நான் அவளைச் சமாதானப்படுத்தினேன். எப்படியும் எல்லோரது விடுதலைக்கும் பாடுபடுவதாகக் கூறினேன். நாம் எதிர்பாராமல் விடுதலை நமக்கு வந்து சேரும் என்று கூறினேன்.

அன்று இரவு ஹாலில் உட்கார்ந்திருந்தபோது அவளை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். லட்சுமியும் (இந்திராணியுடன் வந்தவள்) மிகவும் துக்கப்பட்டாள். இந்த வீட்டை விட்டு எப்படியாவது வெளியேற வழி ஏற்படுத்துமாறு என்னை வேண்டிக் கொண்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஹாலில் வந்திருந்த வாடிக்கை யாளரில் ஒருவன் என்னைக் கையாட்டி அழைத்தான். விதியே என்று எழுந்து போனேன். என் நிலையில் நானே உயிரை மாய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது.

அறைக்குள் போனதும் அந்த ஆள் திடீரென்று என் கையை உரிமையோடு பிடித்து, "கமலா!" என்று அழைத்தான்.

அவனைப் பார்த்ததும் ஓர் ஆச்சரியம்!

# 40. தளராத நெஞ்சம்!

**எ**ன் முன்னால் நின்றவன் உபேந்திரன். தலையில் தொப்பியும், கறுப்புக் கண்ணாடியும், பொய் மீசையுமாக வந்திருந்தான். கூர்ந்து கவனித்தால்தான் உபேந்திரன் என்று தெரியும்.

எனக்குக் கலக்கம் ஏற்பட்டது. யாராவது அவனைக் கண்டுபிடித்துவிட்டால் ஆபத்தாயிற்றே என்று நினைத்தேன். அப்போது நான்தான் அவனை மயக்கிவிட்டேன் என்று என்மீது பழி போடுவார்கள்.

இன்னொரு எண்ணமும் என் மனதில் எழுந்தது. இவனுடன் இப்படித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டே போவதால் என்ன நன்மை ஏற்படப்போகிறது? ஒரு வேளை இதுவே ஏதாவது சிக்கலில் கொண்டுபோய் விட்டு விடுமோ?

பலவித யோசனைகள் வந்தாலும் அவனைப் புன்னகை யோடு வரவேற்றுக் கட்டிலில் அமர்த்தினேன்.

"கமலா, உன்னைப் பாராமல் இருக்க முடியவில்லை. நீயோ வெளியே வருவதில்லை. அதனால் இங்கே வந்து உன்னைப்

பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. சிந்து பம்பாய்க்குப் போயிருப்பதால், இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டேன்” என்றான்.

அவனை அவன் இஷ்டப்படி பேச விட்டேன். அவன் பேச்சிலிருந்து அவனுக்கு என்மீது ஒரே காதல் ஏற்பட்டிருக் கிறது என்பதை உணர்ந்தேன்.

அவனுடைய அந்தஸ்தையும் இளமையையும் நினைக்கும் போது எனக்கு ஒரு விதத்தில் பெருமையாக இருந்தது. ஆனால் எனது எதிர்கால வாழ்க்கை இவனோடும் அல்ல, இந்த டில்லி நகரத்திலும் அல்ல என்பதைத் தீர்மானமாக மனதில் நினைத்துக் கொண்டேன். எனது எண்ணம் எல்லாம் இவனைக் கருவியாக வைத்துக் கொண்டு எப்படி வெளியேற முயல்வது என்பதுதான்.

ஆனால் அந்த வஞ்சகத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அவனிடம் பேசுவது கஷ்டமாக இருந்தது. அவன் அவ்வளவு தூரத்திற்குக் கபடமில்லாத இளைஞனாக இருந்தான்.

அந்த அறையில் இருக்கும்போது அவனை ஒரு அளவுக்கு மேல் போகவிடக் கூடாது என்று நினைத்தேன். அப்படிப் போக விட்டால் அவனுக்கு என் மீதுள்ள மோகம் சீக்கிரமே அழிந்து விடும் என்று நம்பினேன். ஆகவே ஓரளவு பிணக்கிலேயே உறவுகளை நிறுத்திக் கொள்ள விரும்பினேன்.

இதற்கு நான் எதுவும் செய்யத் தேவை இல்லாமல் இருந்தது. ஏனெனில் அவனிடமே இயற்கையான ஒரு வெட்கமும் மருட்சியும் இருந்தன. ஒரு கண்டிப்பான சூழ்நிலை யில் அவன் வளர்ந்திருக்க வேண்டும். அதனால் எல்லா விஷயங் களையும் புதிதாக அறிந்து கொள்ளவேண்டிய விதத்தில் அறியாமையே அவனிடம் இருந்தது. டில்லி வாழ்க்கையில் எத்தனையோ இளைஞர்களைச் சந்தித்து இருக்கிறேன். இவனைப் போன்ற அறியாமை உள்ளவனை நான் கண்டதே இல்லை.

அவன் என்னை அணைத்துக் கொண்டிருந்தபோது, அவனது சல்லாபங்களுக்கு நான் சிறிது இடம் கொடுத்தேன். ஆனால் என் மனம் முழுதும் அவனை எவ்விதம் என் சுயநலத் திற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நினைப்பிலேயே ஈடுபட்டிருந்தது.

கடைசியில் அவனிடம் நான் கேட்டேன்.

"உபேந்தர்! நீ என்மீது காதல் கொண்டிருக்கிறேன் என்கிறாய்! இதன் முடிவு என்ன?" என்றேன்.

"திருமணம் செய்து கொள்வது" என்றான்.

"உன்னால் முடியுமா?"

"ஏன் முடியாது? இன்னும் இரண்டு வருடங்கள் செல்ல வேண்டும். நான் என் டிகிரிப் படிப்பை முடித்து விடுவேன். அதன் பிறகு என் விருப்பத்தை என் பெற்றோர்களுக்குச் சொல்வதில் எனக்குத் தயக்கம் இருக்காது" என்றான்.

"என்னைப் போன்ற இழிவான பெண்ணை மணந்து கொள்ள உங்கள் வீட்டில் சம்மதிப்பார்களா?" என்றேன்.

"மாட்டார்கள். இருந்தாலும் நான் விடமாட்டேன். எங்களில் பல குடும்பங்கள் இந்தத் தொழிலின் மூலந்தான் சம்பாதித்து முன்னேறியிருக்கின்றன. இப்போதுகூட எங்களில் யாருக்காவது வியாபார முடை ஏற்பட்டால் அவர்கள் உடனே இந்தத் தொழிலில் இறங்கிவிடுவார்கள். அவ்விதம் எங்கள் குடும்பங்கள் பலவற்றுக்கு வாழ்வு அளித்தது இந்தத் தொழில் தான். ஆகவே இதிலிருந்து வரும் ஒரு பெண்ணை நான் மணந்து கொள்வது நியாயம்தான் என்று எனக்குப் படுகிறது. அதன்மூலம் இந்தத் தொழிலுள்ள பெண்களுக்கு எங்கள் நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்வதாக எனக்குத் தோன்றுகிறது" என்றான்.

மேலும் பல விஷயங்களைப்பற்றி வெகு நேரம் பேசினோம். அவன் பேசி முடிப்பதற்குள் நான் அவனிடம் கேட்க வேண்டிய விஷயத்தை மனதில் உருவாக்கி விட்டேன். எனது திட்டத்தின் முதல் அம்சம் இது!

சல்லாபங்கள் முடிந்து, அவன் புறப்பட்டபோது, "உபேந்தர்" என்றேன். "நான் உங்களிடம் ஒரு உதவி கேட்கலாமா?" என்றேன்.

"ஓ, தாராளமாகக் கேள். அதற்காகக் காத்திருக்கிறேன்!" என்றான்.

"இந்த வீட்டில் எப்போதும் அடைந்து கிடப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. சமயங்களில் வெளியே போய் வர விரும்புகிறேன். அதற்கு நீங்கள் உதவ முடியுமா?" என்றேன்.

"எப்படி உதவ முடியும்? சொல்! உதவுகிறேன்" என்றான்.

"இங்கே உள்ள சூழ்நிலையில் நான் மட்டும் வெளியே போய் வரமுடியாது. சிந்துவும் என்னுடன் வந்தால்தான் வெளியே போக முடியும். அவளை அழைத்துக்கொண்டு போக வேண்டுமானால் ஒரே வழிதான் இருக்கிறது. நாங்கள் எல்லோருமே சினிமாவுக்குப் போக வேண்டும். அதுதான் எங்களது ஒரே பொழுதுபோக்கு. ஆனால் எங்கள் பண வசதி அதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. பலமுறை நான் என் பணத்தைச் செலவழித்துத்தான் சிந்துவைச் சினிமாவுக்கு அழைத்துப் போகிறேன். இதையும் அடிக்கடி செய்ய முடியவில்லை. எனக்குக் கிடைக்கும் உபரிப் பணத்தை சிந்து அடிக்கடி வாங்கிக் கொண்டுவிடுகிறாள். ஆரம்பத்தில் நானாக விருப்பப்பட்டுக் கொடுத்து வந்தேன். இப்போது அவளாகவே கேட்டு வாங்கிக் கொண்டுவிடுகிறாள். அவளைச் சொல்லிக் குற்றமில்லை! அவளுக்கு அவ்வளவு பணமுடை! இந்தக் காரணங்களால் நான் அவளை சினிமாவுக்கு அழைத்துப் போக பணவசதி இல்லாமல் இருக்கிறேன்" என்றேன்.

"பூ! இவ்வளவுதானா? சினிமாவுக்குப் போகப் பணம் வேண்டும். அவ்வளவுதானே! இப்போது ஒரு ஐம்பது ரூபாய் தருகிறேன். பிறகு ஒவ்வொரு வாரமும் பணம் தருகிறேன்" என்று சொல்லி அவன் உடனே தன் பர்ஸிலிருந்து பணத்தை எடுத்தான்.

நான் அவனை வழி மறித்தேன்.

"உபேந்தர்! பணம் வேண்டாம்! நான் அதைக் கேட்க வில்லை. பணம் என்னிடம் இருக்கிறது என்று தெரிந்தால் சிந்து அதை எப்படியாவது என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டு விடுவாள். ஆகையால் பணம் தேவையே இல்லை. நான் கேட்கும் உதவி வேறுவிதம்!" என்றேன்.

"என்ன? சொல்லு!" என்றான்.

"நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். பக்கத்துத் தியேட்டரில் அடிக்கடி புதுப்படங்கள் வருகின்றன. அவை வரும்போது முதல் மூன்று தினங்களுக்குள் நாங்கள் அவற்றைப் பார்க்கும்படி ஐந்து உயர் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கிக் கொடுக்க வேண்டும்" என்றேன்.

"ஓ வாங்கி விடுகிறேன்."

"நீங்கள் அந்த டிக்கெட்டுகளை சிந்துவிடம் கொடுத்து, இவை எனக்கு இலவசமாகக் கிடைத்தன. நீங்கள் சினிமா

பாருங்கள் என்று சொல்லவேண்டும். இப்படிச் செய்ய முடியுமா?" என்றேன்.

"ரொம்ப ஸிம்பிள். படம் ரிலீஸான முதல் நாளிலேயே ஐந்து டிக்கெட் ரிசர்வ் பண்ணி சிந்துவிடம் கொடுத்து விடுகிறேன். இது உன்னைத் திருப்திப்படுத்துமா? வேறு ஏதாவது செய்ய வேண்டுமா?" என்றேன்.

"அதுவே போதும்! அதுவே பெரிய திருப்தி. இதற்காக உங்களை வாழ்நாள் முழுவதும் நினைத்திருப்பேன்" என்றேன்.

உபேந்தருக்கு மகிழ்ச்சி. என்னை அணைத்துக் கொண் டான். அவன் கொடுக்க வந்த பணத்தை நான் கடைசி வரையில் வாங்கிக் கொள்ளவில்லை. அதன் மூலம் அவன் மதிப்பில் நான் உயர்ந்திருப்பேன் என்று நினைத்தேன். தவிர, நான் ஒரு பெரிய வலை விரித்து விட்டேன் என்றும் நினைத்தேன். எனக்கு அதில் பெரிய மகிழ்ச்சி!

இரண்டு வாரங்கள் சென்றன. பம்பாயிலிருந்து சிந்து திரும்பி வந்தாள். வரும்போது இரண்டு இளம் பெண்களை அழைத்து வந்தாள்.

இங்கே வந்ததும், அவளுக்கும் அவள் கணவனுக்கும் பெரிய லடாய் நடந்தது. பெண்களை வாங்குவதற்காக வைத் திருந்த பணத்தில் ஐந்நூறு ரூபாயைக் கணவன் செலவழித்து விட்டதாகச் சிந்து குற்றம் சாட்டினாள். அதனால் அவள் பம்பாயில் கடன் வாங்க வேண்டி வந்ததாம்.

வீட்டுக்குள் எங்களைச் சந்தித்தவுடன் சிந்து, "எல்லாம் விலை ஏறிப் போச்சு கமலா! இந்த இரண்டு பேருக்கும் ஆளுக்கு இரண்டாயிரம் ரூபாய் கீழே வைன்னு சொல்லி விட்டாங்க! என்ன செய்ய? கடன் வாங்கி, இவங்களை வாங்கினேன். இதுங்க என்ன சம்பாதிக்கப் போகிறதோ?" என்று கூறினாள்.

பெண்களை ஏதோ விலைப் பொருள் போல் அவள் பேசியது முதலில் சிரிப்பையும், பிறகு வேதனையையும் அளித்தது.

பெண்களின் பெயர்கள் அஞ்சனா, தாரிணி என்பவை. அவர்களுக்கு பதினெட்டு, பத்தொன்பது வயதுதான் இருக்கும்.

பல நாட்களுக்கு அந்தப் பெண்களை நான் பார்க்க வில்லை. பார்க்க விரும்பவும் இல்லை. ஏனெனில் அவர்கள் ஒரே வேதனையில் இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். இரு

வாரங்களாகப் பெண்களை ஹாலுக்குக் கொண்டு வரவில்லை. அதிலிருந்து அந்தப் பெண்கள் இந்த வாழ்க்கைக்கு இணங்கவில்லை என்று ஊகித்தேன்.

அதே நேரத்தில் அவர்கள் அடிபடும் சத்தங்களோ வேறு சத்தங்களோ என் காதில் விழவில்லை.

எல்லா விவரங்களும் தானாகத் தெரிய வரும் என்று காத்திருந்தேன்.

அவர்களைப் பற்றிய செய்திகளை முதலில் டாலி கொண்டு வந்தாள். தாரிணி என்பவளை அவளது பெற்றோர்களே சிந்துவுக்கு விற்றுவிட்டார்களாம். அந்தப் பெற்றோர்களுக்கு மொத்தம் ஒன்பது பெண்களாம். தந்தை ஒரு குடிகாரராம். தாய் பொறுப்பில்லாதவளாம். இருவருமாகச் சேர்ந்து தாரிணியை விற்று விட்டார்களாம்.

கேட்பதற்கு வருத்தமாக இருந்தது. தாரிணியைப் பார்க்க வேண்டும் என்று ஆசை எழுந்தது.

மூன்றாவது வாரத் தொடக்கத்தில் இரண்டு பெண்களையும் மாடி ஹாலில் கொண்டு வந்து விட்டார்கள். எனக்கு அவர்களில் யார் அஞ்சனா, யார் தாரிணி என்று தெரியவில்லை. இரண்டு பேருமே சோகமாக இருந்தார்கள்.

இருவருக்கும் டாலி வியாபார முறைகளைச் சொல்லிக் கொடுத்தாள்.

அவர்கள் புதிதாக வந்திருந்ததால் மாடிக்கு வந்த உடனேயே வாடிக்கை கிடைத்து விட்டது! எந்தவிதச் சலனமும் இல்லாமல் அவர்கள் மௌனமாகத் தங்கள் ஆட்களைத் தொடர்ந்து சென்றது எனக்கு வியப்பை அளித்தது. அவர்களிடம் அன்று என்னால் பேசமுடியவில்லை. மேலும் இரண்டு தினங்கள் ஓடின. நான் ஆவலுடன் எதிர் பார்த்த புதுப்படம் பக்கத்துத் தியேட்டருக்கு வந்தது.

அது வெளியான அன்றைக்கே நான் உபேந்தர் வருகைக்காக காத்திருந்தேன். அன்று முழுவதும் அவன் வரவில்லை. எனக்கு ஒரே அதிர்ச்சி.

ஆனால் மறுநாள் அவன் வந்து சிந்துவிடம் ஐந்து டிக்கெட்டுகளைக் கொடுத்து விட்டுப் போனான். சிந்து உடனே என்னை அழைத்து மத்தியானம் சினிமாவுக்குப் போகத் தயாரா

யிருக்கும்படி கூறினாள். நான் உடனே ரேணுவை எச்சரித்தேன். இருவருக்கும் ஒரே பரபரப்பு! 'கடவுளே! இந்த முறையாவது தப்பிக்க உதவி செய்!' என்று வேண்டிக் கொண்டேன்.

சிந்து, ரேணு, நான், அஞ்சனா, தாரிணி ஐவரும் சினிமாவுக்குப் புறப்பட்டோம்.

தாரிணியை நான் பார்த்தபோது இரக்கம் பொங்கி வந்தது. எந்தப் பெண்ணுக்கும் துன்பமான நேரத்தில் அவளது பெற்றோர்கள்தான் அடைக்கலமாக இருப்பார்கள். ஆனால் இந்தப் பெண்ணுக்கு அவர்கள்கூடச் சாதகமாக இல்லை என்று நினைத்தேன்.

அவளிடம் பேசவேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஆனால் பேசச் துணிவு இல்லை. அவளும் அஞ்சனாவும் மௌனமாகவே வந்தார்கள்.

நான் நினைத்தபடி தியேட்டரில் கூட்டமாக இருந்தது.

இரண்டு புதுப் பெண்களை நடுவில் விட்டு சிந்து, ஒருபுறமாகவும், நாங்கள் ஒருபுறமாகவும் உட்கார்ந்து கொண்டோம். இதனால் நானும் ரேணுவும் பேசிக் கொள்ள முடிந்தது.

படத்தில் எங்கள் கவனம் ஓடவே இல்லை. எப்படித் தப்பிப்பது என்று ஒரே சிந்தனையில் இருந்தோம்.

ரேணு அந்தத் தியேட்டரின் உட்புற அமைப்பைக் கண்ணோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள். கதவுகள் எங்கிருக்கின்றன. உள்ளே நடந்து செல்லும் இடைவெளிகள் எங்கெங்கு இருக்கின்றன என்பதை யெல்லாம் கூர்ந்து கவனித்தாள்.

அவள் வெவ்வேறு உபாயங்களைச் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

எதுவுமே எனக்குச் சரியாகவே தோன்றவில்லை.

இடைவேளை வந்தது. சிந்துவின் உத்தரவு வேண்டி எல்லோரும் உட்கார்ந்திருந்தோம்.

"வாங்க!" என்று சொன்ன பிறகு எழுந்தோம். வெளி நோக்கி நடந்தோம்.

பாத்ரூமில் சரியான கூட்டம். வெளியில் நின்றோம். ரேணு குறிப்பிட்டிருந்த விளம்பர பானர் சுவர்மீது இன்னும் அப்படியே சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

ரேணு துறுதுறு என்று அங்குமிங்கும் பார்ப்பது எனக்குப் பயமாக இருந்து.

எல்லோரும் உள்ளே சென்றோம். முன் தடவை போலவே எல்லோருக்கும் இடம் கிடைக்கும் வரை சிந்து காத்திருந்தாள். பிறகு எல்லோரையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

வெளியில் சிறிது நேரம் நின்று விட்டுத் திரும்பும்போது ரேணுவைக் காணவில்லை. எனக்குப் பகீர் என்றது.

நான் கவனித்த அடுத்த விநாடியில் சிந்துவும் கவனித்து விட்டாள். பதறிப் போய், "எங்கே ரேணு?" என்று கேட்டு விட்டுச் சுற்றி வரப் பார்த்தாள்.

சுவரில் உள்ள பானர் அருகில் ரேணு நிற்பது தெரிந்தது. நாங்கள் பார்த்ததும் சிரித்துக் கொண்டே அவள் வந்தாள். "என்ன விஷயம்?" என்று சிந்து அவளிடம் நீட்டி முழக்கிக் கேட்டாள்.

"இல்லை தீதி! புதுப்படம் என்ன வரப் போகிறது என்று பார்த்தேன்" என்றாள் சமாளித்துக் கொண்டு.

சிந்து சமாதானம் அடைந்தது போலவும் இருந்தது; அடையாதது போலவும் இருந்தது.

வீட்டுக்கு வந்தோம். உடனே மேக்-அப் போட்டுக் கொள்ளச் சென்றோம்.

நான் ரேணுவிடம் ஓடிப் போய் பேசினேன். "ரேணு! நீ செய்தது தவறு! எந்த வேளையில் எதைச் செய்யலாம் என்று யோசிக்க மாட்டேன் என்கிறாய்! சிந்து சந்தேகப் பட்டு விட்டாள்" என்றேன்.

அவளும் ரொம்ப வருத்தப்பட்டாள்.

பிறகு இருவரும் பேசி ஒரு தீர்மானத்திற்கு வந்தோம். இனி சினிமாவுக்குப் போனால், சிந்துவுக்கு எந்தவிதச் சலனமும் ஏற்படாதபடி நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித் தோம்.

அப்படிச் செய்வதன் மூலம் சிந்துவின் பூரண நம்பிக்கை யைப் பெறவேண்டுமென்று தீர்மானித்தோம்.

அதன் பிறகு ஒவ்வொரு படமாகப் போய் வந்தோம். ரேணுவும் நானும் நல்லவர்களாக நடந்து கொண்டோம். சிந்துவின் முன்னாலேயே எப்போதும் இருந்தோம். இந்தப்

பக்கம் அந்தப் பக்கம் போவது கூடக் கிடையாது. ஏழு, எட்டு தடவை அவ்விதம் போய் வந்திருப்போம்.

உபேந்தரை நன்றியுடன் நினைக்க வேண்டியிருக்கிறது. சளைக்காமல் அவர் டிக்கெட்டுகள் வாங்கிக் கொண்டிருந்தார்.

சிந்துவின் நம்பிக்கை எங்கள்மீது நன்றாக விழுந்து விட்டது தெரிந்ததும், மேலே என்ன செய்வது என்று யோசித்தோம்.

எனக்கு ஒரு வழி தோன்றியது. ரேணுவை அழைத்துக் கூறினேன்.

"ரேணு! இடைவேளையில் நாம் பாத்ரூம் போவதை நிறுத்த வேண்டும். படம் முடிந்து வீட்டுக்கு வந்த பிறகுதான் போக வேண்டும்" என்றேன்.

"ஐயோ! கஷ்டமாக இருக்குமே! அதனால் என்ன லாபம்!" என்றாள்.

"இடைவேளையில் சிந்துவுடன் வெளியே போகாமல் தியேட்டருக்குள்ளேயே தங்கியிருந்தால்தான் நாம் ஓட முடியும்."

"நல்ல யோசனை! ஆனால் நாம் உள்ளே இருப்பதை சிந்து விரும்ப மாட்டாள்!"

"அதற்குத்தான் ஒரு வழி செய்ய வேண்டும். நாம் இருப்பதை அவள் அனுமதிக்கும்படி நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்."

"முடியுமா?"

"முடியும்! ஆரம்பத்தில் இரண்டு பேருமே பாத்ரூமுக்கு வரவில்லை என்று உட்கார்ந்துவிடக் கூடாது. யாராவது ஒருவர் மட்டும் 'வரவில்லை' என்று உட்காரவேண்டும். ஒவ்வொரு வாரமும் ஒருவர் மாற்றி ஒருவர் போய் வர வேண்டும். பிறகு இரண்டு பேருமே ஒருநாள் போகாமல் உள்ளே தங்கிவிட வேண்டும். இந்த விதமாக ஒரு நம்பிக்கையை சிந்துவிடம் வளர்த்து விட்டால் அதன் பிறகு தப்பித்து விடலாம்" என்றேன்.

"சரியான யோசனை" என்று ரேணு ஒத்துக் கொண்டாள்.

இதன்படி முதல் தடவையாக சினிமா இடைவேளையின் போது ரேணு "பாத்ரூம் வரவில்லை" என்றாள்.

சிந்து ஒரு கணம் தயங்கினாள்... "உன் மீது நம்பிக்கை இல்லை; நீயும் வர வேண்டும்" என்று வெளிப்படையாகச் சொல்வதற்கு அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. எனவே, என்னையும் மற்றவர்களையும் அவள் அன்று தயக்கத்தோடு அழைத்துக் கொண்டு போனாள்.

அப்போது அவள் செய்த காரியந்தான் எங்களைத் திணற அடித்தது. எங்களைப் பாத்ரூமிற்கு அனுப்பி விட்டு, தியேட்டர் வராந்தாவில் நாங்கள் உட்கார்ந்திருந்த வகுப்பின் வாசலில், நின்று கொண்டு உள்ளே உட்காந்திருக்கும் ரேணுவைப் பார்க்கும்படி நின்று கொண்டாள். நாங்கள் பாத்ரூம் போய்த் திரும்பியதும், எங்களை உள்ளே அனுப்பி விட்டு அவள் அங்கே போய் வந்தாள்.

அப்போது கூட இரண்டு மூன்று முறை எங்களைத் தொங்கலில் வைத்தாள். அதாவது போவது போல் போய் விட்டுத் திடீர் என்று திரும்பி வருவாள். அப்படிச் செய்வதை உலாத்துவதுபோல் செய்து காட்டுவாள்.

இப்படி இரண்டு மூன்று முறை செய்வதன்மூலம் எந்த முறை அவள் பாத்ரூம் போகிறாள் என்பதை நாங்கள் அறியாத வண்ணம் செய்து கொண்டிருந்தாள்.

'அடேயப்பா! பெரிய கில்லாடி இவள்! இவளை ஏமாற்ற முடியுமா?' என்று நினைத்தேன் நான்.

இதில் ஒரு சங்கடமும் இருந்தது. அஞ்சனா, தாரிணி இவர்களுடன் நாங்கள் நன்கு பழகாதவர்கள். அவர்கள் எங்களைப் போலப் பலாத்காரமாகக் கொண்டுவரப் பட்டவர்கள் அல்ல என்பது நிரூபணமாகிவிட்டது. எனவே, சிந்துவின் கட்சியில்தான் அவர்கள் இருப்பார்கள். அந்த நிலையில் அந்தப் பெண்களின் முன்னிலையில் நாங்கள் தப்பிக்க முயற்சி செய்வதுகூடக் கடினமான காரியந்தான்.

வீட்டுக்கு வந்ததும் ரேணு சீறிக்கொண்டு என் முன்னால் வந்தாள்.

"அந்தக் கடன்காரி செய்கிற வேலையைப் பார்த்தாயா? நாம் ஒன்று செய்தால் அவள் வேறு ஒன்று செய்கிறாள். நம்ம திட்டமெல்லாம் வீண்தான்!" என்றாள்.

"ரேணு! அதைரியப்படாதே! சிந்து கெட்டிக்காரிதான். ஆனால் அவளது கெட்டிக்காரத்தனம் வெகு நாள் நீடிக்க

முடியாது. இப்போது அவள் வராந்தாவில் நின்று நம்மைக் கவனிக்கிறாள். அப்படிக் கவனிப்பதையே அலுத்துப் போகும் படி நாம் செய்து விடவேண்டும்! ஆகையால் எந்தவிதச் சந்தேகத்தையும் அவளுக்கு உண்டாக்காதே! நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்!" என்றேன். ரேணுவுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை.

அதற்கு அடுத்தமுறை போனபோது நான் உள்ளே உட்கார்ந்தேன். அவள் பாத்ரூம் போனாள்.

அதற்கு அடுத்த முறை அவள் உட்கார்ந்தாள். நான் பாத்ரூம் போனேன். இப்படி ஒருவர் மாறி ஒருவர் செய்ய ஆரம்பித்தோம்.

கடைசியில் ஒரு நாள் இருவருமே உள்ளே உட்கார்ந்தோம்.

பிறகு, ஒருவர் மட்டும் உட்காருவதை மீண்டும் ஆரம்பித்தோம். இப்படி மாறி மாறிச் செய்து சிந்துவைத் திணற அடித்தோம். நாங்கள் திட்டம் போட்டு எதுவும் செய்யவில்லை என்பதுபோல் ஒரு பிரமையை அவளுக்கு உண்டாக்கி விட்டோம்.

முடிவில் நான் நினைத்தது போல் சிந்துவும் ஒரு நாள் அலுத்துவிட்டாள். வராந்தாவில் நிற்பதைத் தவிர்த்து, மற்ற எல்லோருடனும் சேர்ந்து பாத்ரூம் போக ஆரம்பித்தாள்.

"ஆகா! வெற்றி!" என்று மகிழ்ச்சி அடைந்தேன் நான்! எங்கள் மீதுள்ள கண்காணிப்பைச் சிந்து நிறுத்தியபிறகு கூட நாங்கள் உடனே காரியத்தில் இறங்கவில்லை.

அவள் எங்களைக் கவனிப்பதை அறவே நிறுத்திவிட்டாள் என்பதைத் தெரிந்து கொள்ள மேலும் பல வாரங்கள் எங்கள் திட்டத்தைத் தள்ளிப் போட்டோம்.

முடிவில் ஒரு நாள் தீர்மானித்தோம்.

இந்த முறை சினிமாவுக்குப் போகும்போது இடைவேளையில் எப்படியும் தப்பித்துவிட வேண்டும் என்று உறுதி பூண்டோம்.

தீர்மானித்த பிறகு, எங்கள் நெஞ்சங்கள் படபடவென்று அடித்துக் கொண்டன. ஒருவிதக் கோழைத்தனம்கூட எங்களை ஆக்கிரமித்துக் கொண்டன.

ஆனால் அதை இருவருமே வெளிக்காட்டிக் கொள் ளாமல் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக் கொண்டோம்.

நாங்கள் தீர்மானித்து வைத்திருந்த அந்த நாள் வந்தது. அந்த நாளை இன்று நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது.

சினிமாவுக்கு வேண்டிய டிக்கெட்டுகளை உபேந்தர் காலையில் கொடுத்து விட்டுப் போனான். என் மனம் மகிழ்ச்சியில் அடித்துக் கொண்டது.

அதே நேரம் உடம்பில் ஒரே படபடப்பும், நடுக்கமும் ஏற்பட்டன.

வயிறு கலங்கியதில், இரண்டு முறை பாத்ரூம் போய் வந்தேன்.

மத்தியானம் இரண்டு மணி அடித்தது. சிந்து அழைத் ததும் புறப்பட்டேன்.

## 41. நம்ப முடியாதது நடந்தது

**வெ**ளியில் நடந்து போகும்போது மனத்தில் பெரிய போராட்டம் நிகழ்ந்தது. ஒரு பக்கத்தில் 'கமலா! இந்தத் தடவை விடாதே! தப்பி ஓடிவிடு' என்று மனம் கூறினாலும், மறுபக்கம், 'போகாதே, அகப்படுவாய்! அல்லல் படுவாய்' என்று கூறிக் கொண்டிருந்தது.

பலமுறை சினிமா சென்றதில் தாரிணி, அஞ்சனா இவர் களிடம் பழக்கம் ஏற்பட்டிருந்தது. என் கலவரம் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக அவளிடம் பேசிக்கொண்டே போனேன். அப்படிச் செய்தும் என் கொந்தளிப்பு அடங்க வில்லை.

தியேட்டருக்குள் போய் உட்கார்ந்தோம். சிறிது நேரம் வரை பேசாமல் இருந்தேன். வழக்கம்போல் இருந்தால், இதற்குள் ரேணு என்னை பலமுறை சீண்டியிருப்பாள். ஆனால் இன்று பேசாமலிருந்தாள். அவளும் உள்ளூரத் தத்தளிக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

டில்லியில் பார்த்த அந்தக் கடைசிப் படம் என் நினைவில் இருக்கிறது.

சிவாஜி கணேசன் நடித்த 'நவராத்திரி' படத்தின் இந்தி ஆக்கந்தான் அந்தப் படம். அதில் சஞ்சீவ்குமார் நடித்தார்.

படத்தின்மீது நான் சிறிது நேரம் லயித்தேன். இடைவேளை நெருங்க நெருங்க இதயம் அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

அப்போது நானாக ரேணுவைச் சீண்டி விட்டேன். அவள் பதிலுக்கு என்னைச் சீண்டவில்லை. எனக்கு வியப்பாக இருந்தது!

நான் பலவிதத்தில் தவித்துக் கொண்டிருக்கும் போதே எங்கும் பளிச்சென்று வெளிச்சம் பரவியது. இடைவேளை வந்து விட்டது.

கசமுச என்று ஜனங்களின் ஆரவாரம் எழுந்தது. என் காலால் ரேணுவை அமுக்கினேன். அதற்கும் அவளிடம் இருந்து பதில் வரவில்லை!

தியேட்டருக்குள் வந்தபோதே சிந்து தலைவலி என்று சொல்லிக் கொண்டிருந்தாள். இடைவேளை வந்ததும் அவள் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

வெகு நேரம் அவள் எழுந்திருக்காதது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. "அடேடே, இன்று இவள் பாத்ரூம் போகமாட்டாள் போல் இருக்கிறதே!" என்று நினைத்தேன்.

பல நிமிடங்கள் ஓடி இருக்கும். அஞ்சனா அப்போது எழுந்திருந்தாள். பாத்ரூம் போக வேண்டும் என்றாள். எனக்கு மகிழ்ச்சி.

சிந்து எழுந்திருப்பாள் என்று நினைத்தேன். ஆனால் அவள் எழுந்திருக்கவில்லை. "நீ போய் வா!" என்று அஞ்சனாவிடம் சொல்லி விட்டாள். என் ஆர்வம் பக்கென்று அணைந்து விட்டது.

சிறிது நேரத்தில் தாரிணி எழுந்தாள். பாத்ரூம் போக வேண்டும் என்றாள். 'சரி' என்ற சிந்து, "பத்திரமாய்ப் போய் வாருங்க!" என்றாள். ஆனால் அவள் போகவில்லை! அவ்வளவு தான்; அசந்து விட்டேன்.

சிந்து அன்று பாத்ரூம் போகாதது பெரிய சோதனை என்று நினைத்தேன். இவ்வளவுக்கும் இடைவேளை வந்தவுடன் அவள்தான் முதலில் எழுந்திருப்பது வழக்கம். அன்று எழுந்திருக்கவில்லை.

அதை நினைத்து நான் வருத்தப்படும்போது, சில கணங் களில் சிந்து 'டக்'கென்று எழுந்தாள். "அதுங்க தனியாய்ப் போயிருக்கு! பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, சீட்டுகளுக்கிடையே தடுமாறியவாறு போனாள்.

வாசல் பக்கம் அவள் போனபோது, எனக்கு எப்படித்தான் அந்தத் தைரியம் வந்ததோ - தெரியாது. " ரேணு ரெடி!" என்றேன். தயக்கத்துடன் அவள் என்னைப் பார்த்தாள். எனக்கு எரிச்சலாக வந்தது. எனக்கு அவள் உற்சாகம் ஊட்டாததைக் கண்டு வருத்தப்பட்டேன்.

ஆனால் நான் தளரவில்லை. எழுந்தேன் விறுவிறுவென்று நடந்து வாசலுக்குச் சென்று பாத்ரூம் பக்கம் எட்டிப் பார்த்தேன்.

பாத்ரூம் வாசலில் சிந்து நின்று கொண்டிருந்தாள். உள்ளே போகவில்லை.

"உள்ளே போவாளா?" என்று சில கணங்கள் காத்திருந் தேன். எனக்குப் பெரிய அதிர்ஷ்டம் அது! அடுத்த கணத்தில் அவள் பாத்ரூமுக்குள் போனாள்.

ஒரே வேகத்துடன் தியேட்டருக்குள் வந்தேன். "ரேணு! எழுந்திரு! எழுந்திரு!" என்று அவசரப்படுத்தினேன்.

அவள் எழுந்திருக்கவில்லை. என்னை தயக்கமாகப் பார்த்தாள்.

ஆத்திரம் வெடிக்க நான், "ம், எழுந்திரு ரேணு!" என்றேன்.

"கமலா!" என்று மென்று விழுங்கினாள். நான் கோபத் துடன் அவளைப் பார்த்தேன்.

"நாம் அடுத்த முறை தப்பிப் போகலாம் கமலா! இந்த முறை வேண்டாம். என்னவோ போலிருக்கிறது" என்றாள் அவள்.

எனக்கு ஆத்திரம் தலைக்கு ஏறியது. அவள் கையைப் பிடித்துத் தூக்கினேன். "நீ வரப் போகிறாயா இல்லையா?" என்றேன்.

அவள் தயங்கினாள். பேசவில்லை.

நான் பரபரத்தேன். நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

"ரேணு, நீ வந்தால் வா! வராவிட்டால் நான் போகிறேன்" என்று சொல்லி எதிர்ப்பக்கத்தில் உள்ள வாசலை நோக்கி விரைந்து சென்றேன்.

எனக்கு வந்த ஆத்திரத்தில் திரும்பக்கூட இல்லை. விடுவிடு என்று நடந்தேன்.

வாசல் பக்கம் போவதற்குள் ரேணு எழுந்து விட்டாள். “கமலா!” என்று அழைத்து விரைவாக வந்தாள்.

எனக்குத் திருப்தி ஏற்பட்டது! எனினும், என் ஆத்திரம் தணியவில்லை.

வாசல் படுதாவைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தேன். ரேணு தொடர்ந்தாள்.

“வா, வா, சீக்கிரம்” என்றேன்.

ஆண்கள் கூட்டத்தினிடையே புகுந்து வெளிப்பக்கம் வந்தோம். பிறகு வெளியே எட்டி நடந்து தியேட்டர் கேட்டைத் தாண்டி வெளியே வந்தோம்.

அப்போது என் மனத்திற்குள் எழுந்த ஆர்ப்பரிப்பை வர்ணிக்க முடியாது. ரத்தம் குபீர் என்று எங்கும் பாய்ந்தது. கண் இருண்டு திடீரென்று மூளை மரத்துப் போவது போல் தோன்றியது.

என்னை நிதானப்படுத்திக் கொள்ளச் சிறிது பிரயாசை ஏற்பட்டது.

வெளியில் வந்ததுதான் தாமதம். சாலையில் ஓட ஆரம்பித்தோம். பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. பார்த்தால் என்ன நேருமோ என்ற கிலி.

“ஓடு ஓடு” என்று ஒருவரை ஒருவர் அவசரப்படுத்திக் கொண்டு ஓடினோம்.

அதிகம் ஓடுவதற்கும் எனக்கு விருப்பமில்லை. ஏனெனில் ஓடும் எங்களை ஏற்கனவே சாலையில் போவோர் பலர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சட்டென்று ஒரு குதிரைவண்டி எங்கள் முன்னால் தட்டுப் பட்டது. “ரேணு, ஏறு, ஏறு” என்றேன்.

பாய்ந்து அவள் ஏறினாள். நானும் உடனே தாவினேன். பீடி பிடித்துக் கொண்டிருந்த வண்டிக்காரன் திடுக்கிட்டு எங்களைப் பார்த்தான்.

“வண்டிக்காரரே! பணத்தை அப்புறம் பேசிக்கொள்ளலாம். எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன். ஸ்டேஷனுக்கு உடனே விடு. ஜல்தி! ஒரே அவசரம்!” என்று கத்தினேன்.

"இதோ போறேம்மா!" என்று அவன் சாட்டையைச் சொடக்கிக் குதிரையை விரட்டினான்.

வேகமாக அது புறப்பட்டாலும், எங்களுக்கு என்னவோ மிக மெதுவாகப் போவது போல் தோன்றியது.

"வேகம்! வேகம்!" என்றேன் நான். வண்டிக்காரன் குதிரையை விரட்டினான்.

நான் மீண்டும் மீண்டும் அதே வார்த்தையைச் சொல்லிக் கொண்டு வந்தபோது அவன் ஒரு விசை திரும்பி, "ஏம்மா! என்ன விஷயம்?" என்றான்.

"ரயிலுக்கு நேரமாகிவிட்டது" என்று சொல்லிச் சமாளித்தேன்.

வெகு தூரம் வரையில் எங்களுக்குத் திரும்பிப் பார்ப்பதற்கே பயம். முன்னால் பார்த்துக் கொண்டே சென்றோம். தலையில் துணியால் முக்காடு போட்டு மூடிக்கொண்டோம். ஒரேயடியாக வியர்வையும் இழைப்பும் தோன்றியதால் நாங்கள் எங்களுக்குள் பேசிக்கொள்ளக்கூட முடியவில்லை.

ரயில் நிலையம் வந்தது. வண்டி நின்றது. அதை விட்டு இறங்காமலேயே நான் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். என்னிடம் இருந்த பணம் அவ்வளவுதான். ஏதாவது அவசரத்திற்கு வேண்டுமே என்று அந்தப் பணத்தை மட்டும் சிரமப்பட்டு மிச்சப்படுத்தி இடுப்பில் செருகியிருந்தேன்.

"உனக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு மிச்சத்தை கொடு" என்றேன்.

ஐந்து ரூபாயை எடுத்துக் கொண்டான் அவன்.

மீதி ஐந்தை வாங்கிக் கொண்டு வண்டியிலிருந்து கீழே குதித்தோம். தலை முக்காட்டைக் கலைக்காமல் ஸ்டேஷன் பிளாட்பாரத்திற்குள் ஓடினோம்.

தூரத்திற்குச் சென்று ஒரு சில பெரிய பார்சல்களுக்கு அருகில் யாருக்கும் தெரியாமல் உட்கார்ந்து கொண்டோம். அப்படியே வியர்த்து வழிந்தோம்.

வெகுநேரம் பேசவில்லை. எந்தச் சத்தம் கேட்டாலும் தூக்கி வாரிப் போட்டது. இந்த நேரத்திற்கு சிந்து தியேட்டருக்குள் வந்து பார்த்திருப்பாள். எங்களை அடையாளம் சொல்லி "அந்தப் பெண்களைப் பார்த்தீர்களா?" என்று கேட்டிருப்பாள்.

இங்கே அங்கே சென்று தேடியிருப்பாள் என்று கற்பனை செய்தோம்.

ஒரு விஷயம் எங்களுக்கு நிம்மதி அளித்தது. வீட்டுக்கு அவள் போன பிறகுதான் ரவுடிகளை அழைத்து எங்களைத் தேடிப் பிடித்து வர அனுப்பலாம். அப்படி அவர்கள் வருவதற்கு நேரம் ஆகும் என்று நினைத்தோம்.

மெதுவாக ரேணு பேசினாள்.

"கமலா! ஒரு ரயிலையும் காணவில்லையே!" என்றாள்.

"பயப்படாதே! ஏதாவது வரும்" என்றேன்.

"டிக்கெட்?" என்றாள் அவள்.

"ஐந்து ரூபாய்க்கு எந்த ஊருக்கு டிக்கெட் வாங்க முடியும்?" என்றேன் நான்.

ரயில் வராதா என்று காத்திருக்கத் தொடங்கினோம். நேரம் ஆக ஆக எங்களுக்குப் பயம் தோன்ற ஆரம்பித்தது. சிந்துவின் ஆட்கள் எங்கே எங்களைத் தேடி வந்து விடுவார்களோ என்று நினைத்தோம்.

வெகு நேரம் கழித்து சலசலப்பு ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து ஒரு ரயில் வந்து சேர்ந்தது.

"வா! போகலாம்!" என்றேன் நான்.

பார்சல்கள் இடுக்கு வழியாகச் சுற்றி வரப் பார்த்தோம். சந்தேகப்படத் தகுந்தவர்கள் யாரும் இல்லை என்று தெரிந்த பிறகு விருட்டென்று பாய்ந்து ரயில் பக்கம் ஓடினோம். பதட்டத் துடன் ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்துப் பெண்கள் பெட்டியில் ஏறிக் கொண்டோம். நான் ஒரு லாவட்டரியிலும் அவள் ஒரு லாவட்டரியிலும் புகுந்து கதவை அடைத்துத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டோம்.

சிறிது நேரத்தில் ரயில் புறப்பட்டது. எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. நான் காண்பது கனவு இல்லையே என்று பலமுறை கேட்டுக் கொண்டேன்.

ரயில் வேகம் எடுத்து வெகுதூரத்திற்குப் போய் விட்டது என்று தெரிந்ததும், மெள்ளக் கதவைத் திறந்து வெளியே பார்த்தேன்.

உடனே எதிர் லாவட்டரியில் கதவைத் தட்டினேன். என்னவோ யாரோ என்று நினைத்துக் கொண்டு ரேணு மெதுவாகக் கதவைத் திறந்தாள். என்னைக் கண்டதும் ஒரே மகிழ்ச்சி. துள்ளி வெளியே வந்து அணைத்துக் கொண்டாள். இருவர் கண்களிலும் நீர் திரளாக வழிந்தது. “மெய்யாக நாம் தப்பி விட்டோமா?” என்றாள் அவள்.

“ஆமாம்!” என்றேன் நான்.

“என்னால் நம்ப முடியவில்லை கமலா! இப்போதுகூட சிந்து என்னைப் பார்ப்பதாகத் தோன்றுகிறது” என்றாள்.

“பயப்படாதே! அவளால் இனிமேல் நம்மைத் தொடர முடியாது” என்றேன்.

“அதெப்படிச் சொல்ல முடியும் கமலா! நம்மைத் தேடிக் கொண்டு வருகிறவர்கள் யாராவது இந்த ரயிலிலேயே ஏறி இருக்கலாம். இல்லையா?” என்றாள் அவள்.

“சீ! அதெல்லாம் இருக்காது” என்றேன் நான்.

அப்படிச் சொன்னேனே தவிர உள்ளூற எனக்கே உதறல் எடுத்தது.

“ரேணு! முதலில் போய் இந்தப் பெட்டியில் உள்ளவர் களைப் பார்த்து விடுவோம். அப்போதுதான் நமக்கு மன நிம்மதி ஏற்படும்!” என்றேன்.

மெள்ள ஒவ்வொரு பகுதியாகப் போய் அங்கே உட்கார்ந் திருக்கும் பெண்களைப் பார்த்தோம். கூட்டம் நிறைய இருந்தது. போகிற வழியெல்லாம் சாமான்களைப் போட்டிருந்தார்கள்.

எல்லோரையும் பார்த்து விட்டோம். எனக்கே மனதில் பெரிய அமைதி ஏற்பட்டது. அந்தக் கணத்தில் நான் அடைந்த உணர்ச்சிகளை வர்ணிக்க முடியவில்லை.

மகிழ்ச்சியுடன் நானும் ரேணுவும் சன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தோம். ரயில் ஒரே வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

முதல் தடவையாகச் சுதந்திரத்துடன் திறந்த வெளி களையும் மரங்களையும் பார்க்கிறேன் என்று நினைத்தபோது ஒரே ஆனந்தமாக இருந்தது.

‘ஆகா! நான் விடுதலை! நான் விடுதலை!’ என்று மனத்துக்குள் கூவினேன்.

ரேணு ஒரு சன்னலிலும், நான் ஒரு சன்னலிலும் குனிந்து நின்று கொண்டு, சுதந்திரமான காற்றையும், திறந்தவெளியையும் அனுபவித்தோம்.

எனக்கு அது பெரிய அனுபவமாக இருந்தது. உள்ளே என்னை அமுக்கி இருந்த எத்தனையோ இறுக்கங்கள் டப்டப் என்று அறுந்து, நான் ஆகாயத்தில் மிதப்பதுபோல் நினைத்தேன்.

வெகு நேரம் ஆனந்தமாக வெளி உலகை அனுபவித்த பிறகு, உள்ளே பெட்டியின் நடை பாதையில் ஒதுக்குப் புறமாக உட்கார்ந்தோம்.

இரண்டு ஆண்டுகளுக்குமேல் அடிமையாக இருந்ததால் இன்னும் கூட மனம் அதற்குக் கிடைத்த பூரண சுதந்திரத்தை அனுபவிக்கத் தயங்கிக் கொண்டிருந்தது.

உள்ளே ஏற்பட்டிருந்த பயங்களும், பீதிகளும் இன்னும் முழுவதுமாகக் கரைந்து விடவில்லை.

கீழே அமர்ந்த சிலகணங்களில் அழுகை குமுறிக்கொண்டு வந்தது. கைக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டு குலுங்கி அழுதேன். என்னைப் பார்த்து ரேணுவும் அழுதாள்.

வெகு நேரம் அழுதோம். அதுநாள்வரை தேங்கி இருந்த ஆற்றாமையைக் கண்ணீராகக் கொட்டிக் கொண்டோம்.

அழுகை ஓய்ந்த பிறகு மீண்டும் மனத்தில் அமைதி பிறந்தது.

முகத்தைக் கழுவிக் கொண்டு உட்கார்ந்தபோது, நேரம் எங்கள்மீது அழுத்திக் கொண்டிருப்பதுபோல் இருந்தது. எதையுமே செய்ய வேண்டாத ஒரு நிலையில் நாங்கள் இருந்ததே அதிசயமாகி இருந்தது.

ஒருவாறு மனம் தெளிந்த பிறகு என் நினைவு இந்திராணி, லட்சுமிமீது சென்றது.

அவர்களிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ள வில்லையே என்று மனம் அரித்தது.

"ஏன் இன்னும் வருத்தம்?" என்று கேட்டாள் ரேணு. விஷயத்தைக் கூறினேன்.

"கமலா! நீ நினைத்திருந்தால்கூட அவர்களை விடுவித் திருக்க முடியுமா?" என்றாள் அவள்.

"முடியாதுதான்! நிர்மலாவின் பராமரிப்பில் அவள் இருக்கிறாள். அவளை அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போவது கஷ்டம். நிர்மலா அதற்குச் சம்மதித்திருக்க மாட்டாள்" என்றேன்.

"அது மட்டுமல்ல கமலா! ஒரு குறிப்பிட்ட தினத்தில்தான் நாம் தப்பிக்கப் போகிறோம் என்று நமக்கே தெரியாது. எத்தனையோ திட்டம் போட்டு அத்தனையும் தோல்வி அடைந் திருக்கிறது. இன்றுகூட, நாம் தப்பித்தது பெரிய அதிசயந்தான்" என்றாள் ரேணு.

"ஆமாம்; அதை உணர்கிறேன். இன்றைய தினம் பார்த்து சிந்து பாத்ரூம் போகாமல் இருந்தது என்னை உலுக்கி விட்டது. நல்ல வேளை, அந்தப் பம்பாய்ப் பெண்கள் காப்பாற்றினார்கள். அவர்கள் இல்லாவிட்டால் இன்று தப்பித்திருக்க முடியாது. இன்று விட்டிருந்தால், இதற்குப் பிறகு தப்பிக்கக் கூடிய சந்தர்ப்பம் நமக்கு ஒரு வேளை ஏற்படாமலேயே போயிருக்குமோ என்னவோ!" என்றேன். இப்படி ஒருவரை யொருவர் சமாதானம் செய்து கொண்டோம். இருந்தாலும் என் மனம் ஏனோ சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது.

எனது ஒரு பெரிய மனக்குறை, நான் அவர்களது வீட்டு முகவரியை வாங்கிக் கொள்ளவில்லையே என்பதுதான்.

எங்களுக்கு இருந்த அவசரங்களில் அப்படி ஒரு நினைவு தோன்றவே இல்லை. இதை இப்போது நினைக்கும்போதுதான் வேதனையாக இருக்கிறது. இதற்கு ஒரு அடிப்படையான காரணம் உண்டு.

தப்பிப்பதற்காக எவ்வளவோ முயற்சிகள் செய்தாலும், நிச்சயம் தப்பித்து விடுவோம் என்று ஒரு உறுதி எப்போதுமே இல்லாமலிருந்தது.

அதனால்தான் ஒவ்வொரு முறையும் அந்தப் பெண் களைச் சந்திக்கும்போது, "நாங்கள் சீக்கிரம் தப்பித்துவிடுவோம்!" என்று கூறிக்கொண்டிருந்தோமே ஒழிய, உறுதியாக எதுவும் சொல்ல முடியவில்லை. அவர்களும் ஏதாவது நடந்துவிடும் என்று உறுதியாக நம்பவும் இல்லை.

தவிர, டில்லியில் இதுபோன்ற இழிதொழில் நடத்தும் வீடுகள் எந்தப் போர்வைக்குள் மறைந்து இயங்குகின்றன என்பதை இப்போது நன்றாக அறிந்த பிறகு, நாங்கள் நினைத்

திருந்தாலும் வேறு எதுவும் செய்திருக்க முடியாது. எங்களைப் போன்ற அபலைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு முயற்சி அது! ஒரு சமூகமே எதிர்த்து நின்றால்தான் அவைகளை வேருடன் களைய முடியும் என்று இப்போது உறுதியாக நம்புகிறேன்.

ரயிலில் நாங்கள் யோசனைகளிலும் பேச்சுக்களிலும் ஈடுபட்டிருந்தபோது, ஒரு விஷயத்தை முழுவதுமாக மறந்து விட்டோம்.

நாங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம், இந்த ரயில் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்ற விஷயம்தான் அது! ஒரு வட இந்தியப் பெண்மணி வாஷ்பேஸின் பக்கம் தனது குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தபோதுதான் அந்த நினைவே எங்களுக்கு வந்தது!

திடீரென்று ரேணு தூக்கத்திலிருந்து விழித்தவள்போல் என்னைப் பார்த்துத் தெலுங்கில், “கமலா! இந்த வண்டி எங்கே போகிறது?” என்று கேட்டாள்.

நான் உடனே அந்த வடஇந்தியப் பெண்மணியிடம் கேட்க நினைத்தேன். ஆனால் அப்படிக் கேட்டால் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்கிறோம் என்பதை அவள் அறிந்து விடுவாள் என்பதை உணர்ந்து கேட்காமல் இருந்தேன். ஆனால் அவளது குழந்தையைப் பற்றிப் புகழ்ந்து இரண்டு வார்த்தை சொல்லிவிட்டு, மெதுவாக, “நீங்கள் எதுவரை போகிறீர்கள் அம்மா?” என்று கேட்டேன்.

“பம்பாய் வரை” என்றாள் அவள்.

எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதைக் வெளியில் காண்பித்துக் கொள்ளவில்லை.

அவள் போன பிறகு, “ஐயோ! கமலா! இப்படி கஷ்டம் வந்து விட்டதே!” என்று கலவரத்துடன் என் கையைப் பிடித்தாள் ரேணு.

எனக்கும் தவிப்பாக இருந்தது. பம்பாய்க்குப் போய் எங்கேயாவது மாட்டிக் கொள்வோமோ என்று பயந்தேன்.

சமாளித்துக் கொண்டு, “பரவாயில்லை; ரேணு! பம்பாய்க் குப்போன பிறகு சென்னை ரயிலைப் பிடித்து விடலாம்” என்றேன்.

ரேணு அப்படியே அசந்து போய் உட்கார்ந்தாள்.

அடுத்த சந்திப்பு வந்தது. கீழே இறங்கிப் போய்ப் பெட்டியின்மீது செருகப்பட்டிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தேன். "பம்பாய்" என்று அறிந்தபிறகு மனம் மேலும் வருத்தப்பட்டது.

அப்போது பசி வயிற்றைக் கிள்ளியது. ஏதாவது சாப்பிட வேண்டும் என்று நினைத்தோம்.

"ரேணு! நம்மிடம் இருப்பதே ஐந்து ரூபாய்தான். சென்னை போகும் வரை இந்தப் பணத்தில்தான் சாப்பிட வேண்டும்!" என்றேன்.

"சென்னை போக எத்தனை நாள் ஆகும்!" என்றாள்.

"மூன்று நாட்கள்!" என்றேன்.

அவளுக்குக் கஷ்டமாகத் தோன்றியது.

சப்பாத்தியும், டீயும் வாங்கிச் சாப்பிட்டோம். அளவாகச் சாப்பிட வேண்டும் என்பதை மறந்து சப்பாத்தியைப் பார்த்ததும் புகுந்து விளையாடி விட்டோம்.

இரண்டு ரூபாய் இருபது பைசா காலியானவுடன்தான் அதிர்ச்சி அடைந்தோம்.

மீதி இருப்பது இரண்டு எண்பது? இதற்குள் மீதிப் பயணத்தை முடிக்க வேண்டும் என்று கவலைப் பட்டோம்.

அப்போதுதான் கையில் வாட்சோ, கழுத்தில் நகையோ இல்லாதது குறித்து வருத்தப்பட்டோம். எல்லாவற்றையும் சிந்துவிடம் பறிகொடுத்து விட்டோமே என்று வேதனைப் பட்டோம்.

ஒரு மாற்றுத் துணிக்குக்கூட எங்களுக்கு வழியில்லாமல் போய் விட்டதே என்று நினைத்தபோது எங்கள் வருத்தம் அதிகமாகியது.

இரவில் உட்கார்ந்து கொண்டே தூங்கினோம்.

மறுநாள் விடிந்தது. பல்லை விளக்கி விட்டு வெறும் டீ மட்டும் சாப்பிட்டோம். சிறிது நேரத்திலேயே வயிறு கடிக்க ஆரம்பித்தது. பல்லைக் கடித்துக் கொண்டு மத்தியானம் வரை சும்மா இருந்துவிட நினைத்தோம்.

முந்திய நாள் பரிச்சயம் ஆன பெண்ணுடன் பேச்சுக் கொடுத்தேன்.

அவளது குழந்தையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு விளையாடினேன்.

அந்த அம்மாள் இடையில், "நீ சாப்பிடவில்லையா?" என்று கேட்டாள். "சாப்பிட்டு விட்டேன்" என்று சொன்னேன்.

பெட்டியில் யார் எதைச் சாப்பிட்டாலும் எங்களுக்குக் கஷ்டமாக இருந்தது.

வெயில் ஏறஏறப் பசி அப்படியே கிள்ளத் தொடங்கியது.

அடுத்த சந்திப்பு வந்தது. கீழே இறங்கினோம். "ரேணு! விலையைக் கேட்டு வாங்கிச் சாப்பிடுவோம். கவனம்" என்றேன்.

மனத்துக்குள் கணக்குப் போட்டுச் சப்பாத்திகளை வாங்கினோம். எங்களது பசிக்குப் போதாது.

## 42. கலக்கம் தொடர்ந்தது

ஒரு மாதிரி சமாளித்து விட்டுத் தண்ணீரைக் குடித்து விட்டு வண்டி ஏறினோம்.

படிக்கட்டில் காலை வைத்திருப்போம்.

"டிக்கெட் ப்ளீஸ்" என்ற குரல் கேட்டது. அப்படியே எங்கள் குடல் கலங்கிவிட்டது.

சட்டென்று இறங்கினோம். சிறிது நேரம் விழித்தோம்.

"டிக்கெட் இல்லையா?" என்றார் அதிகாரி.

"இல்லை ஐயா! எங்களை மன்னிக்க வேண்டும். நாங்கள் சென்னையைச் சேர்ந்தவர்கள். அனாதைகள். டில்லியிலிருந்து ஊருக்குப் போகிறோம். தவறுதலாக இந்த வண்டியில் ஏறி விட்டோம்" என்றேன்.

ரயில் அப்போது கூவியது.

"ம்! ஜல்தி! உங்கள் சாமான்களைக் கீழே இறக்குங்கள்!" என்றார் அதிகாரி.

"சாமான்கள் கிடையாது" என்றேன் நான்.

"அப்போ, நீங்க வாங்க!" என்றார் அவர். எங்கள் கண்கள் கலங்கின.

ரயில் மற்றொரு முறை கூவிவிட்டுப் புறப்பட்டது.

ரயில் புறப்பட்ட அந்த நேரத்தில் "சரி போங்கள்!" என்று சொல்லி அந்த அதிகாரி எங்களை விட்டு விடுவார் என்று நினைத்தோம். அவர் செய்யவில்லை.

“எங்களைப் போக விடுங்கள், சார்! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு” என்று கெஞ்சினாள் ரேணு.

“உங்களிடம் பணம் இருக்கிறதா? அபராதம் போட்டு இப்போதே வண்டியில் ஏற்றி விடுகிறேன்” என்றார் அதிகாரி.

“பணம் இருந்தால் உங்ககிட்டே ஏன் கெஞ்சப் போகிறோம்? நாங்கள் வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டப் பட்டவங்க சார்” என்றாள் ரேணு.

“எல்லோருந்தான் கஷ்டப்படறாங்க!” என்று சொல்லி எங்களை நேராக நிலையத்திலுள்ள அறைக்கு அழைத்துச் சென்றார்.

“மணிப்பர்ஸை எடுங்கள்!” என்றார்.

“பர்ஸ் ஏது சார்! எங்களிடம் இருப்பதே இவ்வளவுதான்!” என்று சில்லறைகளைக் காண்பித்தோம்.

“பணம் ஏதுமில்லாமல் ரயில் ஏறினீங்களா? உங்க அப்பா வீட்டு ரயிலோ? இருங்க! உங்களைப் போலீசிலே ஒப்படைக் கிறேன்!” என்றார் அவர்.

போலீஸ் என்றதும் எங்களுக்குக் கிலி புகுந்தது. எங்கே யாவது ஜெயிலில் போய் மாட்டிக் கொள்ளப் போகிறோம் என்று நினைத்தோம். எங்களை மீறி அழுகை வந்தது.

விக்கி விக்கி அழ ஆரம்பித்தோம்.

அப்போது அந்த அறைக்குள் மற்றொரு பரிசோதகர் வந்தார். அவர் தன் தொப்பியைக் கழற்றிவிட்டு எங்களைப் பார்த்து, “யார் இவர்கள்?” என்று கேட்டார்.

“நாங்க மதராஸ் சார்! அனாதைங்க!” என்றாள் ரேணு.

“மதராஸா? எந்த ஊர்?” என்று தமிழில் கேட்டார் அவர்.

அவர் தமிழர் என்று தெரிந்ததும் எங்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஊர்களைச் சொன்னோம்.

“எவனோ ஒருத்தன் எங்க இரண்டு பேரையும் ஏமாற்றி டில்லியில் கொண்டு போய் ஒரு வீட்டில் அடைத்து வைத்து வியாபாரம் நடத்தினான். நாங்கள் இரண்டு வருஷமா அங்கே மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட்டோம். நேற்று பகல்லே தப்பி

ஓடி வந்து இந்த ரயிலில் ஏறினோம்" என்று கூறிய ரேணு, சுருக்கமாக எங்கள் கதையைச் சொன்னாள்.

அதைக் கேட்ட தமிழ் அதிகாரிக்கு இரக்கம் வந்தது. எங்களுக்கு நிறையப் புத்திமதிகள் சொன்னார்.

"அப்படி பிளாட்பாரத்தில் போய் ஒதுக்கமாய் நில்லுங்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் பம்பாய் வண்டி வரும். அதில் ஏறிப் போய் விடுங்கள்! அங்கிருந்து சென்னைக்குப் போங்கள்! எல்லாம் உங்கள் சாமர்த்தியம்!" என்றார். பம்பாயில் எந்த இடத்தில் இறங்கவேண்டும் என்று சொல்லிச் சென்னை ரயிலில் எப்போது, எங்கே ஏறலாம் என்பதையும் விவரமாகக் கூறினார். அவருக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்தோம்.

பிளாட்பாரத்திற்கு மீண்டும் வந்தோம். பெரிய நிம்மதி ஏற்பட்டது. 'கடவுளே! தப்பித்தோம்! இன்னும் மீதிப் பிரயாணத் தையும் நிம்மதியாக முடிக்க வேண்டுமே!' என்று பிரார்த்தனை செய்தோம்.

அடுத்த ரயில் சிறிது தாமதமாக வந்தது. பெண்கள் கம்பார்ட்மெண்டைத் தேடி ஏறினோம்.

இந்த வண்டியிலும் நிறையக் கூட்டம் இருந்தது. ஆகவே கதவோரத்து நடைபாதையிலேயே உட்கார்ந்து கொண்டோம்.

மாலையில் பம்பாய் போய்ச் சேர்ந்தோம். பிளாட் பாரத்தில் இறங்கிய போது கசகசவென்று ஒரே கூட்டம்!

"ரேணு! தாமதியாதே! கூட்டத்தோடு கூட்டமாக வெளியில் போய் விட வேண்டும். சீக்கிரம்!" என்றேன்.

வெளியே போகும் பெரிய கும்பல்களுக்கு இடையே சேர்ந்து கொண்டோம். கேட்டைத் தாண்டி வெளியே வந்தோம்.

வெளியே வந்து முகப்பில் ஒரே ஒரு நிமிடம் நின்றிருப் போம். அதற்குள் ரவுடிகளுக்கு மூக்கில் எப்படி வியர்த்ததோ தெரியவில்லை!

"வாங்கம்மா! எங்கே போகணும்? ஸ்டூடியோ போக லாமா? வேலை வாங்கித் தரட்டுங்களா?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே வந்தார்கள்.

அங்கே அரைக்கணம் நின்றால் கூட அப்படியே தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள். என்று தோன்றியது.

சென்னை ரயில் நிற்குமிடத்தை விசாரித்து வெகு சீக்கிரம் அங்கே போய்ச் சேர்ந்தோம்.

ரயிலுக்காக வெகு நாழிகை காத்துக் கிடக்க வேண்டி வந்தது. நிம்மதியாகப் பிளாட்பாரத்தில் உட்கார்ந்து கொண்டோம்.

அதற்குள் எங்களுக்கு மீண்டும் பசிக்க ஆரம்பித்தது. ஆனால் இந்த தடவை நான் கண்டிப்பாக ரேணுவிடம் பேசினேன்.

"ரேணு, சென்னை போகிறவரை இதுதான் பணம்! கவனமாகச் சாப்பிட வேண்டும்!" என்றேன்.

நானும் அவளும் ஒப்பந்தம் பேசிக் கொண்டோம். ஒரே ஒரு செட் சப்பாத்தி சாப்பிட்டுவிட்டுத் தண்ணீரும் குடித்து விட்டுப் பேசாமல் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தோம்.

அதேபோல் ஒரு செட் சாப்பிட்டோம். தண்ணீர் குடித்தோம். பிளாட்பாரத்தில் உட்கார்ந்தோம்.

நாழிகை ஓடிக் கொண்டே யிருந்தது. வண்டி வரக் காணோம்! பிளாட்பாரத்தில் கூட்டம் நிறைந்து விட்டது. "புறப்பட வேண்டிய நேரமெல்லாம் தாண்டி விட்டது. இன்னும் வண்டி வரவில்லையே!" என்று ஜனங்கள் பேசிக் கொண் டார்கள்.

புறப்படும் நேரத்திற்கு மேல் ஒரு மணி நேரம் சென்று விட்டது. இன்னும் வண்டியைப் பிளாட்பாரத்தில் கொண்டு விடவில்லை.

அதற்குள் மீண்டும் எங்களுக்குப் பசித்துவிட்டது. பசி யானால் கடும்பசி! நாங்கள் ஏதாவது சாப்பிடாது இருந்திருந் தால் கூட அந்தப் பசி தோன்றியிராது. கொஞ்சம் சாப்பிட்டு விட்டதால் பசி காந்தத் தொடங்கியது. பல்லைக் கடித்துக் கொண்டிருந்தோம்.

ரேணு மெதுவாக, "கமலா, பசிக்கிறது. ஏதாவது சாப்பிட லாமா?" என்றாள்.

நான் பசியை அடக்கிக் கொண்டு மௌனமாக இருந்தேன்.

"கமலா! தயவு செய் கமலா! நான் செலவழிக்க வேண்டிய பணத்தில் இப்போதே சாப்பிட்டு விடுகிறேன். நாளை முழுதும்

*பட்டினி கிடப்பேன்! இப்போது என்னால் தாங்க முடியவில்லை” என்றாள்.*

*“சரி, வா! கையிலிருக்கும் பணத்தில் சரியாகப் பாதிக்குச் சாப்பிடு” என்றேன்.*

*சப்பாத்தியின் விலையைக் கேட்டுவிட்டு, மனத்துள் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு, அவள் சாப்பிட ஆரம் பித்தாள்.*

*சப்ஜியின் வாசனையும் சப்பாத்தியின் வாசனையும் என் மூக்கைத் துளைத்தன. என் பசி அப்படியே குமுறிக் கொண்டு வந்தது. ரேணு சாப்பிடுவதையே கூர்ந்து கவனித்தேன்.*

*“நீயும் சாப்பிடு கமலா! நாளைக்குப் பட்டினி கிடந்து விடலாம்!” என்றாள் அவள்.*

*“உம், உம்” என்று சொல்லிச் சிறிது நேரம் பிகு பண்ணி விட்டுப் பிறகு “சாப்பிடுகிறேன்” என்று சொன்னேன். என்னாலும் பசி தாளவில்லை.*

*மீதிப் பணத்திற்குக் கணக்குப்போட்டு முழுதுமாகச் சாப்பிட்டோம். அப்படியும் முக்கால் வயிறுதான் நிரம்பியது. ரயிலை பிளாட்பாரத்தில் கொண்டுவிட மேலும் ஒரு மணி நேர மாகியது. வண்டி வந்ததும் ஏறிக் கொண்டோம்.*

*அதன் பிறகும், அரை மணி கழித்த பிறகுதான் வண்டி புறப்பட்டது.*

*பெண்கள் பெட்டியில் நிறையக் கூட்டம் ஏறியிருந்தது. வண்டி புறப்பட்டு இரண்டு மணி நேரம்வரை விழித்திருந்தோம். பிறகு நடைபாதையில் ஒண்டி ஒடுங்கியவாறு உறங்க ஆரம்பித்தோம்.*

*காலையில் எங்கேயோ வெகுநேரம் வண்டி நின்றது. நாங்கள் கண் விழித்து எழுந்தோம். வண்டி மிகத் தாமதமாகப் போய்க் கொண்டிருப்பதாகக் கூறினார்கள்.*

*அது ஒரு சந்திப்பு. பெட்டியை விட்டு இறங்கிப் பாதிப் பேர் வெளியே நின்றார்கள். இஞ்சின் டிரைவர்கள் பல இடங் களில் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அதனால்தான் வண்டிகள் தாமதமாகப் போகின்றன என்றார்கள். ‘அட கஷ்ட காலமே!’ என்று நினைத்தோம்.*

எல்லோரும் பல்லைத் தேய்த்து விட்டுக் காலை உணவு சாப்பிடத் தொடங்கினார்கள். நாங்களும் முகங்களைக் கழுவிக் கொண்டோம்.

வெளியே இட்டிலியும் வடையும் விற்றார்கள். அதைப் பார்த்ததும் நாக்கில் நீர் ஊற ஆரம்பித்தது. கையிலோ பணம் இல்லை. என்ன செய்வது?

ரேணு அப்போது, "கீழே இறங்குவோம், கமலா!" என்றாள்.

"ஐயோ, வேண்டாம்! டி. டி. ஆர். பிடித்துவிடப் போகிறார்" என்றேன்.

"பரவாயில்லை. வாயேன்" என்றாள்.

இறங்கினோம். மெள்ள நடந்து வி. எல். ஆர். வரை போனோம். அங்கே தண்ணீர் மட்டும் குடித்து விட்டு, சாப்பிடு கிறவர்களை ஏக்கத்துடன் பார்த்தோம்.

ரேணுவுக்குப் பசி வந்தால் தாங்கமாட்டாள். ஆகவே மற்ற வர்கள் சாப்பிடுவதை வெகு உன்னிப்பாகக் கவனித்ததும் அன்றி, என்ன காரணத்திற்காகவோ, கவுண்டர் பக்கத்தில் போய் நின்றாள்.

நாங்கள் உள்ளே நிற்பதை ஒரு வாலிபன் கவனிப்பதை அப்போதே கவனித்து விட்டேன். கிராப்பும் பேண்டுமாக அவன் நின்றான். கையில் ஒரு ப்ரீஃப் கேஸ் வைத்திருந்தான்.

கவுண்டருக்கு அருகில் போன ரேணு அவனைப் பார்க்க, அவனும் அவளை விரைத்துப் பார்த்தான்.

பிறகு நாங்கள் எங்கள் பெட்டிக்குத் திரும்பும் போது பின்னாலே நடந்து வந்தான்.

நான் விடுவிடென்று போனபோது ரேணு சற்றுப் பின் தங்கி வந்தாள். எனக்கு அது எரிச்சலாக இருந்தது.

தூரத்தில் போய் நான் திரும்பிப் பார்த்தபோது ரேணுவும் அந்த வாலிபனும் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

எனக்கு ஆத்திரம் பொங்கியது. சிறிது நேரத்தில் ரேணு ஓடிவந்தாள். பெட்டியில் ஏறினோம்.

"ஏன் ரேணு; இந்தக் குழப்பம் எல்லாம் பண்ணுகிறாய்?" என்று கேட்டேன்.

"அவன்தான் கூப்பிட்டான், பேசினான். நான் பணம் கேட்டேன். 'என்னுடன் முதல் வகுப்பில் ஏறுகிறாயா?' என்று கேட்டான். மாட்டேன் என்று வந்துவிட்டேன் என்றாள் அவள்.

"சீ! இங்கே வந்துமா அந்தப் பழக்கம்?" என்றேன் நான்.

"அவன் தான் கேட்டான். நீ என்னைக் கோபித்துப் பிரயோசனம் என்ன?" என்றாள் ரேணு.

"யார் அவன்?" என்றேன் நான்.

"ஒரு டிராக்டர் விற்கும் கம்பெனியைச் சேர்ந்தவன். சென்னைக்குப் போய்க் கொண்டிருக்கிறான். பின்னால் குட்ஸ் வண்டியில் புது டிராக்டர்கள் ஏற்றப்பட்டு இந்த ரயிலைத் தொடர்ந்தாற் போலவே வந்து கொண்டு இருக்கிறதாம்!" என்றாள் ரேணு.

ஒரு வழியாக வண்டி புறப்பட்டது. ஒரு மணி நேரம் ஓடியது. அடுத்த சந்திப்பில் நின்றது. அவ்வளவுதான் மீண்டும் உட்கார்ந்து விட்டது!

எங்களுக்குப் பசி! போன சந்திப்பில் சாப்பிடாத பிரயாணிகள் இந்தச் சந்திப்பில் சாப்பிட்டார்கள். நாங்கள் கீழே இறங்கினோம்.

மீண்டும் ரேணு என்னை வி.எல்.ஆர். இருந்த இடத்திற்கு அழைத்துப் போனாள். அங்கே போய் நின்று நீர் குடித்து விட்டுச் சாப்பிடுகிறவர்களைச் சிறிது நேரம் கவனித்தோம். அதற்குள் அந்த வாலிபன் மீண்டும் எங்கள் கண்களில் பட்டு விட்டான்.

"வா, ரேணு போகலாம்" என்று அவசரப்படுத்தினேன். இருவரும் புறப்பட்டோம்.

விடு விடென்று நடந்தேன். பிறகு திரும்பிப் பார்த்தபோது ரேணு என்னுடன் வரவில்லை என்ற தெரிந்தது. அவனுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

பிறகு அவள் ஓடிவந்தாள். நான் அவளை திட்டுவதற்குத் தயாராக இருந்தேன்.

அப்போது 'டிக்கெட் ப்ளீஸ்' என்று குரல் கேட்டது. அருகில் பரிசோதகரைப் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டது.

என்னால் பேச முடியவில்லை. வெட வெடத்து நின்றேன். அவர் மீண்டும் கேட்டார்.

"டிக்கெட் இல்லை" என்று சொன்னேன்.

"பணத்தை எடு" என்று சொன்னார்.

"பணமும் இல்லை' என்றேன்.

இதற்குள் ரேணு பதட்டத்தில் அழ ஆரம்பித்தாள். முந்திய பரிசோதகரிடம் கூறியதைப் போலவே தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

ஆனால் இங்கே அது பலிக்கவில்லை. இந்தப் பரிசோதகர் எங்களை விடவில்லை.

அந்தக் கணத்தில் நாங்கள் பார்த்த அந்த வாலிபன் சற்று ஒதுக்குப்புறமாக அங்கே நிற்பதைக் கவனித்தோம். ரேணு உடனே அவனிடம் ஓடிப் போய்ப் பேச ஆரம்பித்தாள்.

# 43. ஒரு வேண்டுகோள்

அந்த வாலிபன் நேராக எங்கள் அருகில் வந்து டி.டி.ஆரை அழைத்துச் சென்றான். பிறகு அவர்கள் இரண்டு பேரும் பேச ஆரம்பித்தார்கள்.

சிறிது தூரம் நான் நின்று பார்த்தேன். ரேணு திரும்ப வில்லை. பெட்டிக்குள் போய் உட்கார்ந்தேன்.

என்ன நடக்குமோ என்று கவலைப்பட்டேன். ரயில் புறப்படத் தொடங்கியது.

நான் அவசரத்துடன் கதவு அருகில் வந்து வெளியே எட்டிப் பார்த்தேன். அவர்கள் மூவரையும் காணவில்லை. சரி வந்தது வரட்டும் என்று பெட்டியிலேயே உட்கார்ந்திருந்தேன்.

ரயில் ஒரு மணி நேரம் ஓடியது. அடுத்த சந்திப்பில் நின்றது. பெட்டியின் உள்ளேயே உட்கார்ந்திருந்தேன். ரேணு வரவில்லை.

பிறகு வண்டி புறப்பட்டு, அடுத்த பெரிய ஊரில் போய் நின்றது. இப்போதாவது ரேணு வருகிறாளா என்று பார்த்தேன்; வரவில்லை.

மனம் சங்கடப்பட்டது. என்ன செய்வது என்று புரியாமல் இருந்தேன்.

ரயில் புறப்படும் நேரம். கையில் பொட்டலங்களுடன் ரேணு ஓடிவந்தாள்! பெட்டியில் ஏறிச் சிரித்துக்கொண்டே என் அருகில் வந்து உட்கார்ந்து, "கமலா! உனக்காகத்தான் வாங்கி வந்தேன். சாப்பிடு!" என்றாள்.

என் மனம் கஷ்டப்பட்டது. ஏனெனில் அவள் வெகுநேரம் காணமல் போனதற்கும் இப்போது எனக்குப் பொட்டலம் கொண்டு வந்து கொடுப்பதற்கும் பின்னணியாக ஏதோ நடந்திருக் கிறது என்று என்னால் ஊகிக்க முடிந்தது.

டில்லித் தொழிலை அவள் இந்த ரயிலிலேயே நடத்தி யிருக்கிறாள் என்று நினைத்தேன். அது என் மனத்தைப் பெரிதும் வருத்தியது.

"ரேணு! இது எனக்கு வேண்டாம்!" என்றேன்.

"ஏன் வேண்டாம், கமலா! சாப்பிட்டு விட்டாயா?" என்றாள் அவள்.

"நீ இதைச் சம்பாதித்த விதம் எனக்குத் தெரியும், அதை என் மனம் ஒப்பவில்லை. அதனால் இது வேண்டாம்" என்றேன்.

என் கோபத்தை அவள் புரிந்து கொண்டாள். பேசாம லிருந்தாள்.

ரயில் புறப்பட்டது. நான் மௌனமாகவே இருந்தேன். திடீரென்று ரேணு விசிக்கும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். முகத்தை மூடி அழுது கொண்டிருந்தாள்.

அவள் கையைப் பிடித்து, காரணத்தைக் கேட்டேன். அவள் பதில் சொல்லவில்லை. இன்னும் அதிகமாக விசித்தாள்.

"ரேணு! இதென்ன? யாராவது வரப் போகிறார்கள். அழாதே!" என்றேன்.

அவள் அடங்கவில்லை. மேலும் விம்மிக்கொண்டே யிருந்தாள். இதற்கு முன்னால் இப்படி அழுதது இல்லை.

அவளது அந்த துக்கத்தை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவள் கைகளைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்து, "ரேணு! ஏன் அழுகிறாய்? என்மீது கோபமா? என்ன விஷயம் சொல்லு!" என்றேன்.

அவள் சிரித்துக் கொண்டே கூறினாள்.

“கமலா, என்னால் பசி தாங்க முடியாது. ஒரு வேளை கூடச் சாப்பிடாமல் இருக்க முடியாது. அப்படிச் செய்தால் எனக்குத் தலை சுற்றும். டில்லியில் எனக்குக் கருச்சிதைவு நடப்பதற்கு முன்னாலே இதுமாதிரி இருந்ததில்லை. கருசிதைவுக்குப் பிறகு என் உடம்பிலே எத்தனையோ கோளாறுகள் வந்துவிட்டன.

இன்றைக்கும் என்னால் பசி தாங்க முடியவில்லை. இதற்காக நான் என் உடம்பைப் பயன்படுத்திக் கொண்டதும் உண்மை.

நீ எப்படியோ எனக்குத் தெரியாது. நான் டில்லியிலிருந்து தப்பித்து வந்ததாலே, அங்கு நடத்திய அந்த வாழ்க்கையின் ருசியை அடியோடு மறந்துவிட்டேன் என்று நினைக்கர்தே. என்னால் அதை உடனே மறக்க முடியாது. இன்னும் கொஞ்சம் நாளாகும். உண்மையைச் சொல்லப் போனால், என்னால் அதை மறக்க முடியுமோ என்னவோ? ஏனென்றால் நான் திருமணமாவ தற்கு முன் அந்த இன்பத்தை நினைத்து வேட்கைப்பட்டவள்; அதைச் சீக்கிரம் பெறவேண்டும் என்று துடித்தவள். ஆனால், எனக்கு நடந்தது என்ன? எனது திருமணம் நடந்தபிறகு, நான் எதை எதிர்பார்த்தேனோ அது கிடைக்காமல் போய் விட்டது. எனக்குக் கிடைத்த கணவர் ஆண்மை இல்லாதவர். அது தெரிவ தற்கே ஆறு மாதம் ஆகியது. அந்த விஷயத்தை நான் பிறகு என் உறவினர்களிடம் கூறிய போதுகூட அவர்கள் நம்பவில்லை. என்மீதுதான் அநாவசியமான குறைகளைக் கூறினார்கள்.

விஷயம் தெரிந்தபிறகு கணவரிடம் சண்டை போட்டேன். “என் வாழ்க்கையைப் பாழடித்து விட்டீர்களே?” என்று கூச்சல் போட்டேன். ‘இனி உங்களோடு வாழ முடியாது’ என்று சொல்லி வெளியே வந்துவிட்டேன். என் அக்கா வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

அக்காள் வீட்டிலும் என் துரதிருஷ்டம் என்னைத் தொடர்ந்தது. அக்காளின் கணவர் என்னிடம் நன்றாகப் பேசுவார், பழகுவார். இது அக்காளுக்குப் பிடிக்காது.

சத்தியமாகச் சொல்கிறேன். எனக்கு அவளது கணவர்மீது எந்தவித விபரீத எண்ணமும் கிடையாது. ஆனால் ஒரு நல்ல படிப்பாளியிடம் பேசுவது எனக்கு ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. அது என் அக்காளுக்குப் பொறுக்கவில்லை.

வீட்டில் என்னைக் கண்காணித்தாள். கணவன்மீது சீறி விழுந்தாள். என்னை எவ்வளவு கொடுமை செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்தாள்.

அவள் சொல்கிறதைப் பார்க்கும்போது எனக்குக்கூட ஆத்திரம் தோன்றும், அவள் புருஷனை வேண்டுமென்றே வசீகரம் பண்ணவேண்டும் என்று.

ஆனால் அப்படி நான் செய்யவில்லை. வெளியிலே இரண்டு, மூன்று சிநேகிதிகளை ஏற்படுத்திக் கொண்டுவிட்டு, அவர்களோடு பாதி நேரமும் பொழுதைப் போக்க ஆரம் பித்தேன்.

அந்த சிநேகிதிகள் வழியாக ஒன்றிரண்டு ஆண்களிடம் பழகப் போக, அது எங்கேயோ கொண்டு போய்விட, கடைசியில் அகப்பட்டு டில்லி வந்து சேர்ந்தேன்.

டில்லியிலுள்ள வாழ்க்கை என்ன என்று அறிந்த பிறகு மற்றப் பெண்களைப் போல் நான் சிந்துவை எதிர்க்கவில்லை. அந்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்டேன்.

அப்படி ஏற்றுக்கொண்டதன் மூலமாக நான் யாரை யெல்லாமோ பழி வாங்கியதாக நினைத்தேன்.

பிரயோசனம் என்ன? நான் நினைத்ததனாலே அவர்களைப் பழி வாங்கிவிட்டிருந்தேனா? பழி வாங்கினேன் என்று மனத்திலே நினைத்ததோடு சரி.

இவ்வளவு தூரம் வாழ்க்கையில் கஷ்டங்களைப் பட்டு விட்டேன். இப்போது தப்பித்து வந்த பிறகு ஒரு புதிய வாழ்க்கையை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்திருக் கிறேன். ஆனால் கமலா! யோசித்துப் பார்! எனக்கு முறையான வாழ்க்கை கிடைக்குமா? உனக்குக் கிடைக்கும். ஏனெனில் உனக்குத் தயார் இருக்கிறாள். நடந்ததையெல்லாம் மூடி மறைத்துத் திருமணம் செய்து வைத்தாலும் யாரும் எதுவும் சொல்லப் போவதில்லை.

ஆனால், என்னைப் பார்! எனக்குப் பெற்றோர் கிடையாது. எனக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பது எல்லாருக்கும் தெரியும். ஆகவே மறுமணம் செய்துகொள்ள முடியாது. மீண்டும் ஒரு ஏமாற்று வாழ்க்கை நடத்துவதற்காக நான் கணவன் வீடு போக விரும்புகிறேன் என்று வைத்துக் கொள். அவர்கள் வீட்டில் என்னை இனிச் சேர்க்க மாட்டார்கள். இத்தனை வருடம் எங்கே

போய்க் கெட்டு அலைந்து விட்டு வந்திருக்கிறாய் என்று சொல்லி விரட்டி விடுவார்கள்.

அக்காள் வீட்டுக்குப் போகிறேன் என்று வைத்துக்கொள். அங்கேயும் இதே பிரச்சனைதான்.

இதனால், கமலா! எனக்கு எங்கே போனாலும் ஒரு முறையான வாழ்க்கை கிடைக்கப் போகிறதா என்பது சந்தேகந் தான். சொல்லப்போனால், வெளியிலே நான் படப்போகிற நரக வாழ்க்கையைவிட டில்லியில் நான் அனுபவித்த நரக வாழ்க்கையே மேலாகத் தோன்றப் போகிறதோ என்னவோ!

இப்படிப் பலவிதங்களில் அல்லல்படும் என் மனத்திற்கு, இப்போது நான் செய்யும் காரியம் பெரிய தவறாகவே தோன்ற வில்லை. புதியதாக நான் எதுவும் கெட்டுப் போய் விடவில்லையே! எப்போதோ கெட்டுவிட்ட என் நிழல்தானே இப்போதும் என்மீது படிந்திருக்கிறது?

ஆகையால் கமலா! தயவு செய்து நான் சொல்வதைக் கேள். அப்போதுதான் என் மனம் திருப்தி அடையும். இந்தப் பொட்டலங்களைப் பிரித்துச் சாப்பிடு! பட்டினி கிடக்காதே! இந்தா, இந்த மீதிப் பணத்தையும் வைத்துக் கொள்! என்று கூறிய ரேணு என் முன்னால் இருபத்து மூன்று ரூபாய் நோட்டு களையும் எடுத்து வைத்தாள்.

அவளுடைய துக்கமும், கதையும் என்னைக் கலக்கி விட்டன. என்னால் எதுவும் பதில் சொல்ல முடியவில்லை. "மன்னித்து விடு, ரேணு!" என்று சொல்லிவிட்டுப் பொட்டலங் களைப் பிரித்துச் சாப்பிட ஆரம்பித்தேன்.

"பணத்தை என்னிடம் கொடுக்காதே!" என்றேன்.

"எப்போதும் நீ தான் வைத்துக் கொள்வது வழக்கம். அதனால் நீயே வைத்துக் கொள்!" என்றாள் அவள்.

எங்கள் வண்டி ஒவ்வொரு சந்திப்பிலும் நின்று நின்று போய்க் கொண்டிருந்தது. இதனால், தாமதம் அதிகமாகியது.

மத்தியானமும் இரவும் இரு வேளைகளிலும் நாங்கள் முழுச் சாப்பாடு சாப்பிட்டோம். நிம்மதியாகத் தூங்கினோம்.

பொழுது விடிந்து எட்டு மணிக்கு ரயில், ரேணி குண்டாவை நெருங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அந்த நிலையத்தில் வண்டி நின்றபோது குழந்தைகளுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்த பிரயாணி ஒருத்தி டிபன் பாக்ஸ் நிறைய இட்டிலிகளை எங்களிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னாள். செலவில்லாமல் சாப்பிட்டோம்.

வண்டி புறப்பட்டது. ரேணு மௌனத்திலேயே இருந்தாள். எனக்குக் கஷ்டமாக இருந்தது.

"ஏன் ரேணு, இப்படி இருக்கிறாய்?" என்றேன்.

"எதுவுமே பிடிக்கவில்லை. ஊர் நெருங்க நெருங்கப் பயமாக இருக்கிறது" என்றாள்.

"என்ன பயம்?"

"இனி வாழ்க்கையை எப்படிக் கழிக்கப் போகிறோம் என்று தெரியவில்லை. எங்கே கழிக்கப் போகிறோம் என்றும் தெரியவில்லை" என்றாள்.

"உனக்கு அக்காள் இருக்கிறாள் என்று சொன்னாயே. அவளது வீட்டுக்குப் போய்விடேன்" என்றேன்.

"ஐயோ அவளா?" என்று யோசனையில் ஆழ்ந்தாள் ரேணு. "அவள் ஒரு கொடுமைக்காரி! சிந்துவாவது சோறு போட்டு நம்மைக் கொடுமைப்படுத்தினாள். அவள் சோறு போடாமலேயே கொடுமை செய்வாள். ஆனால், அவளை விட்டால் எனக்குப் போக இடமும் இல்லை" என்றாள் வருத்தத்துடன்.

மனத்துக்குள் அவள் தவிப்பதை உணர முடிந்தது.

அவளைச் சமாதானப்படுத்த முயன்றேன்.

"ஏன் ரேணு? உனக்கு வேறு உறவினர் கிடையாதா?" என்று கேட்டேன்.

யோசித்தாள். பிறகு திடீரென முக மலர்ச்சியுடன், "சித்தூரில் ஒரு உறவுப்பெண் இருக்கிறாள். முதலில் அங்கே போகலாம்" என்றாள்.

"அங்கே போ. அதுதான் சரி!" என்றேன்.

"எனக்கு ஒரு உதவி செய்வாயா கமலா?" என்று கேட்டாள் அவள்.

"சொல்லு" என்றேன்.

"என்னோடு தயவுசெய்து சித்தூருக்கு வா. எங்கள் உறவினர் வீட்டுக்குப் போவோம். நாம் இருவரும் பம்பாயில் ஒரு வீட்டில்

வேலை பார்த்ததாகச் சொல்லுவோம். நீ வந்து நேராகச் சொன்னால் நம்புவார்கள்" என்றாள்.

யோசித்தேன். "தயவு செய்! கமலா! உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு" என்று என் கையைப் பிடித்து ரேணு கெஞ்சினாள்.

"சரி" என்றேன்.

அரக்கோணத்தில் இறங்கினோம். நழுவி வெளியே வந்து பஸ் நிலையத்தை அடைந்தோம். சித்தூர் பஸ்ஸில் ஏறினோம்.

சித்தூரை அடைந்தபோது மணி பன்னிரண்டு. அங்கே இறங்கியவுடன் ரேணு என் கையைப் பிடித்தாள்.

"கமலா! என்னை விற்பதற்குக் காரணமாக இருந்த ஒரு ஆசாமி இந்த ஊரில்தான் இருக்கிறாள்" என்றாள்.

தூக்கிவாரிப் போட்டது.

"இந்த ஊரிலா?" என்றேன்.

"ஆமாம், எனக்கு அவனைத் தெரியும்! இங்கேயும் இருப்பான். வேலூருக்கும் வருவான். அவனைப் போய் மிரட்டலாம் வருகிறாயா?" என்றாள்.

"அவன் இருக்கும் இடம் தெரியுமா?" என்றேன்.

"தெரியும்! நினைவு இருக்கிறது! போய் அவனிடம் சண்டை போட்டால்தான் மனம் சமாதானம் ஆகும்!" என்றாள் அவள்.

எனக்கும்கூட அந்த நேரத்தில் ஆத்திரம் பொங்கி வந்தது. அவனைப் பார்த்து மனதாரத் திட்டவேண்டும் என்று நினைத்தேன். "வா போகலாம்" என்றேன்.

ஊரின் பல தெருக்களில் அவள் தட்டுத் தடுமாறி நடந்தாள். வழி சரியாகத் தெரியவில்லை. கடைசியில் ஒருவித மாக விசாரித்துப் போய் ஊருக்கு வெளிப்புறமாக இருக்கும் அவனது வீட்டைக் கண்டுபிடித்து விட்டாள்.

வீட்டின் கதவு சாத்தியிருந்தது. "பத்ரையா! பத்ரையா!" என்று கதவைத் தட்டினாள்.

சிறிதுநேரத்திற்குப் பிறகு கதவு திறந்தது. கறுக்கு மீசை யுடன் நடுத்தர வயதுடைய ஆசாமி எங்கள் எதிரே வந்தான். ரேணுவைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றான்.

"ஏம்பா! எப்படி இந்தப் பெண் திரும்பி வந்தாள்? இவளை விலைக்கு விற்று டில்லிக்கு அனுப்பி விட்டோமே என்று பார்க்கிறாயா?" என்று தெலுங்கில் ஆரம்பித்தாள் ரேணு.

"ரேணுகாம்மாவா! என்னம்மா எப்படி வந்தே?" என்று சற்றுத் தடுமாறியவாறு பேசினான் அவன்.

"உயிரோடு வந்துட்டேன்னு பார்க்கிறாயா, பாவி! என்னை ஏன் இந்தக் கதிக்கு ஆளாக்கினாய்? துரோகி! உன்னை நம்பித் தானே வீட்டைவிட்டு வெளியே வந்தேன்? என்னை ஏமாற்றி விட்டாயே! உன் குடும்பம் விளங்குமா? உன் பிள்ளை குட்டிகள் விளங்குமா?" என்று அவள் சரமாரியாகக் கேட்டுக் கொண்டே போனாள்.

நானும் சேர்ந்து அவனைத் திட்ட ஆரம்பித்தேன்.

அவன் அசந்து போய் விட்டான்.

"நான் சொல்றதைக் கேளம்மா!" என்று அடிக்கடி இடை மறித்தான்.

கடைசியில் அவனைப் பேச அனுமதித்தோம்.

"ரேணுகாம்மா! என்னை மன்னிக்கணும் அம்மா! என்னைச் செருப்பாலே அடித்தாலும் பட்டுக்கொள்வேன்! என் பாவத்துக்கு அது தாங்கும். நான் உனக்குத் துரோகம் செய்ய இஷ்டப்படலை அம்மா! சத்தியமா, திருப்பதி சுவாமி பேரிலே ஆணையாச் சொல்றேன். இஷ்டப்படவில்லை. என்கூட இருந்த சகா அப்படிச் செய்யப்போறான் என்கிறதும் தெரியாது. அவன் தான் இந்த அநியாயத்தைச் செய்தான். எனக்கு இது தெரியவே தெரியாது. அவனை நம்பி நானும் மோசம் போனேன். இப்போ அவன் ஜெயில்லே இருக்கிறான். உனக்குக் கஷ்டம் கொடுத்த தற்கு அனுபவிக்கிறான்! நீ என்னை மன்னிச்சிடும்மா! மன்னிச்சிடு!" என்று கெஞ்சினான்.

ரேணு மேலும் திட்டிக் கொண்டே போனாள். அவன் அழாக் குறையாகப் பேசினான்.

முடிவில் அவன் பேச்சில் எங்களுக்குக் கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.

"வாங்கம்மா! உள்ளே வாங்க. சாப்பிட்டு விட்டுப் போங்க! அப்போதான் என் மனம் சமாதானம் ஆகும்!" என்றான் அவன்.

ரேணு என்னை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். நாங்கள் டில்லியில் பட்ட கஷ்டங்களை எல்லாம் கூறினோம். எங்களுக்கு அவன் சாப்பாடு போட்டான். அவன் மனைவியும் எங்களைக் கண்டு மிகவும் வருத்தப்பட்டாள்.

எங்களை அவனது வீட்டில் இரண்டுநாள் தங்கும்படி கேட்டுக் கொண்டான். நான் சென்னைக்கு உடனே போக வேண்டும் என்று சொன்னேன். அன்று ஒரு நாளாவது தங்க வேண்டும் என்று வற்புறுத்தவே சம்மதித்தோம்.

இருவரும் நன்றாகக் குளித்தோம். மாடியில் எங்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்தான்.

மாலையில் ரேணு கீழே இறங்கி அவனிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

பிறகு மேலே வந்து என்னுடன் பேசினாள். "இன்னும் இரண்டுநாள் தங்கவேண்டும் என்கிறான்"என்று சொன்னாள். "ஊஹூம், நாளைக்கே நான் சென்னை போகவேண்டும்" என்று சொன்னேன்.

பிறகு இரண்டு, மூன்றுமுறை கீழே போய்விட்டு வந்தாள். எனக்கு அது ஆச்சரியமாக இருந்து!

இருட்டும் நேரத்தில் அவள் கீழே போய்விட்டு வந்த போது, "ஏன் ரேணு, அடிக்கடி அங்கே பேசப் போகிறாயே என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

அவள் சட்டென்று பதில் சொல்ல முடியாமல் திருதிரு வென்று விழிப்பது எனக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. "சும்மா எங்கள் குடும்ப விஷயத்தைப் பற்றிப் பேசிவிட்டு வந்தேன்" என்றாள் அவள்.

எனக்கு ஏனோ அவள் பேச்சில் நம்பிக்கை விழவில்லை. என்னவெல்லாமோ யோசித்து மூளையைக் குழப்பினேன். இருட்டி மணி ஏழு இருக்கும். ரேணு "கீழே போய்விட்டு வருகிறேன்" என்று கீழே இறங்கினாள். என் மனம் குறுகுறுத்தது.

அவள் போனதும் படியில் மெதுவாக இறங்கி நின்றேன்.

கீழே ரேணுவும் பத்ரையாவும் அவன் மனைவியும் ஏதோ பேசினார்கள். என் காதில் அது விழவில்லை.

ஆவல் அதிகமாகவும் இன்னும் பல படிகள் இறங்கிக் கைப்பிடிச் சுவரின் கீழே மறைந்து கொண்டேன்.

பத்ரையாவும் ரேணுவும் ஏதோ பேரம் பேசிக் கொண் டிருந்தார்கள். ஐநூறு, ஆயிரம், இரண்டாயிரம் என்ற வார்த்தைகள் என் காதில் பட்டன. ரேணு இப்படிப் பேசுவதற்கு என்ன விஷயம் இருக்கிறது என்று யோசித்தேன்.

அடுத்தாற்பேல் என் பெயர் அடிக்கடி அடிபட்டது. ஒரு சமயம் பத்ரையா, "கமலா என்ன பழைய சரக்குதானே? அவ்வளவு விலைக்குத் தாளாது. எழுநூறு ரூபாய்தான்" என்றான்.

பளீர் என்று ஒரு எண்ணம் உதயமாகியது. ஒருவேளை அவர்கள் இருவரும் மீண்டும் என்னை விற்பனை செய்வதற்கு நினைக்கிறார்களோ!

என் வயிறு அப்படியே குமட்டியது. ரத்தம் கொதித்து உடம்பில் சூடு ஏறியது. திக்பிரமையுடன் உட்கார்ந்து விட்டேன்.

பிறகு அவர்கள் வெளியே வருவது கண்டு மாடிக்கு விறு விறுவென்று ஏறினேன். அங்கே போய் ஒரு ஓரத்தில் நின்றேன்.

படி ஏறிவந்த ரேணுவிடம் பத்தையா, "நீ நம்ப வியாபா ரத்தில் சேர்ந்துக்க! சுகமா வாழலாம்" என்று சொல்வது என் காதில் பட்டது.

ரேணு மேலே வந்தாள். நான் அவளை விழித்துப் பார்த்தேன். பேசவில்லை.

சிறிது நேரம் அவள் தடுமாறினாள். பிறகு, "என்ன கமலா? என்ன விஷயம்?" என்றாள்.

"நீதான் சொல்ல வேண்டும்! நீதானே கீழே பேசிவிட்டு வருகிறாய்!" என்றேன்.

"ஒன்றுமில்லை. சும்மா குடும்ப விஷயம்!" என்றாள்.

என் இதயம் தடதடவென்று அடித்தது.

என்ன செய்யலாம் என்று யோசித்தேன்.

சில கணங்களுக்குப் பிறகு, "ரேணு! கொஞ்சம் கடைத் தெரு வரைக்கும் போக வேண்டுமே!" என்றேன்.

"இப்போது எதற்கு?" என்றாள் அவள்.

"இல்லை. வெளியிலே போய்விட்டு வந்தால்தான் நன்றாக இருக்கும்!" என்றேன்.

தயக்கத்துடன் அவள் ஒப்புக்கொண்டாள். கீழே இறங்கி னோம். பத்ரையாவிடம் அவள் பேசினாள். "சீக்கிரம் வந்திடுங்க

சீக்கிரம், சீக்கிரம்" என்று இரண்டு, மூணு தடவை அவன் சொல்லவே, நான் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்த போது, அவன் ரேணுவைப் பார்த்துக் கண்ணடிப்பது தெரிந்தது.

"சீக்கிரம் வந்துவிடுகிறோம்" என்றாள் அவள்.

மௌனமாக நடந்தோம்.

ஜன நடமாட்டமுள்ள கடைத்தெருப் பக்கம் வந்தோம்.

அது ஒரு பாதுகாப்பான இடம் என்று தெரிந்ததும், உடனே திரும்பி "ரேணு! நீ ஒரு துரோகி! என்னை விற்கப் பார்க்கிறாய்!" என்று ஆவேசத்துடன் கத்தினேன்.

அவள் வெலவெலத்து நின்றாள். பிறகு சமாளித்து "இல்லை இல்லை" என்று ஏதோ சொல்ல முயன்றாள்.

"சீ சிநேகிதத் துரோகி! உனக்காக நான் எவ்வளவு பாடு பட்டேன்! உன் சொந்த வாழ்க்கையில் சுகமாக வாழ்வதற்காக நீயும் அவனுடன் சேருகிறாயே" என்றேன்.

"கமலா! கமலா!" என்றாள் அவள்.

"பேசாதே, எனக்கு எல்லா விஷயமும் தெரியும்! இனி என் பின்னால் வராதே! வந்தால் இங்கே கூப்பாடு போட்டு உன்னைப் போலீசில் பிடித்துக் கொடுத்து விடுவேன்" என்றேன்.

பிறகு வெகு விரைவாக நடந்தேன். அவள் அழைப்ப தையும் பொருட்படுத்தவில்லை.

நேராக பஸ் நிலையத்தை அடைந்தேன். ஒரு பஸ் அரக்கோணம் புறப்பட்டுக் கொண்டிருந்தது. சட்டென்று அதைப் பிடித்து ஏறினேன்.

பஸ் விரைவாக ஓட ஆரம்பித்த பிறகுதான், எனக்கு உயிர் வந்தது. அப்பா! எவ்வளவு பெரிய கண்டத்திலிருந்து தப்பி விட்டேன்!

என் உடம்பு பதறியது. ஒரே வியர்வை வியர்த்துவிட்டது.

ரேணு எவ்வளவு பெரிய பாதகி என்று நினைத்தேன். அவள் ஒரு நிலையான புத்தி இல்லாதவள் என்று டில்லியி லிருந்தபோதே தீர்மானித்திருந்தேன். அது இப்போது நிச்சயமாகி விட்டது. அவள் வாழ்வு பாழாகப் போவதைத் தடுப்பதற்காக இவ்வளவு கேவல வழியில் இறங்குகிறாள் என்று நினைத்தேன். இப்படிக் கூடப் பெண்கள் இருக்கிறார்களே என்று

நினைத்தபோது எனக்கு அழுகை வந்தது. அரக்கோணம் வந்தது. ரயில் நிலையத்திற்குச் சென்றேன். ஒன்பது மணிக்கு மேல் ஒரு வண்டி வந்தது. ஏறினேன். மனத்தில் பெரிய நிம்மதி ஏற்பட்டது.

சென்னை வரும் வரை எனக்கு அழுகைதான்! எவ்வளவோ கவனமாக இருந்தும் கடைசியில் ஏமாறப் பார்த்தேனே என்று நினைத்தேன்.

ஒரு மணி நேரம் ஆகியது. சென்னை சென்டிரலை முதன் முதலாகக் கண்ணால் பார்த்தேன். மீண்டும் அழுகை வந்தது. துடைத்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக வெளியே வந்தேன்.

வெளியே வந்து கார்களின் கூட்டத்தையும், ஜனக் கூட்டத்தையும், எதிரே ஜெனரல் ஆஸ்பத்திரியையும் பார்த்தேன். அப்படியே மெய்மறந்து நின்றேன். மனத்தில் புதுக் காற்று சிலு சிலுவென்று வீசியது! என்ன சுகம்! என்ன சுகம்!

**இதை வாசித்த பெண்களுக்கு ஒரு வார்த்தை:** வாழ்க்கையில் ஒரு பெண் எத்தனை விதங்களில் ஏமாறலாம் என்பதை என்கதை நன்கு காட்டியிருக்கும். என் வேண்டுகோள் ஒன்று: யாரையும் உடனே நம்பிவிடாதீர்கள்! நீங்கள் எவ்வளவு கவனமாக இருந்தாலும், ஏமாறுவதற்குச் சந்தர்ப்பம் நிறைய இருக்கிறது.

**ஆண்களுக்கு ஒரு வார்த்தை:** பஸ்ஸிலோ, ரயிலிலோ வேறு எந்தப் பிரயாணத்திலோ, ஒரு இளம் பெண்ணை ஒரு சந்தேகத்திற்குரிய நபர் அழைத்துப் போகிறார் என்று தெரிந்தால், நமக்கென்ன என்று சும்மா இருந்து விடாதீர்கள். கூடிய மட்டிலும் அவளை விடுவிக்க முயற்சி செய்யுங்கள். பொது மக்கள் இதில் ஒத்துழைத்தால்தான் பலாத்காரக் கடத்தல்களைத் தடுத்து நிறுத்த முடியும். என்னுடைய ஒரே குறை ஆண்களில் பெரும்பாலோர் கோழைகளாக இருக்கிறார்கள் என்பதுதான்! ஆகவே ஒரு வேண்டுகோள்! ஆண்களே! தைரியமாக இருங்கள்.

**முற்றும்**



மின்நூலாக்கம்

சுபாஷ் சண்முகா


என்
பெயர்
கமலா
புஷ்பா தங்கதுரை